பரஞ்சோதி முனிவர் அருளிய

திருவிளையாடற் புராணம்

மூலமும் தெளிவுரையும்



1

வர்த்தமானன் பதிப்பகம்

வ. ஜோதி M.A.

உ

திருச்சிற்றம்பலம்

பரஞ்சோதி முனிவர்

அருளிய

திருவிளையாடற் புராணம்

(மூலமும் உரையும்)

முதல் தொகுதி

உரையாசிரியர்

வ. ஜோதி, எம்.ஏ.

வர்த்தமானன் பதிப்பகம்
ஏ.ஆர்.ஆர். காம்ப்ளக்ஸ், 141, உஸ்மான் சாலை,
தியாகராய நகர், சென்னை - 600 017.,
தொலைபேசி: 8257995.

இரண்டாம் பதிப்பு : 1998

ஐந்து தொகுதிகள்
விலை ரூ.500/-

Laser by : **SRI SATHYA SAI GRAPHICS**
29/1, Sarojini Street, T.Nagar, Chennai - 600 017. ✆ : 433 25 04

2-3

பதிப்புரை

கந்தபுராணம், பெரியபுராணத்தைத் தொடர்ந்து திருவிளையாடற் புராணத்தை வெளியிடுவதில் பெரிதும் மகிழ்ச்சியடைகிறோம். ‘தவமும் தவமுடையார்க்கு ஆகும்’ என்பது போல இவற்றை எல்லாம் எங்களால் வெளியிட முடிந்ததுகூட ஒரு தவம்தான்.

இந்தத் தெய்வப் பனுவலுக்கு மிகத் தெளிவாக உரை வகுத்துத் தந்துள்ளார் வ.ஜோதி அவர்கள். உற்சாகமும், ஊக்கமும், உழைப்பும் உள்ளஆசிரியரின் உரை வளம் கண்டு இன்புறுக. இனிய உரை கண்ட இனிய நண்பருக்கு எங்கள் நன்றி.

- பதிப்பகத்தார்

பொருளடக்கம்

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

பரஞ்சோதி முனிவரின் திருவிளையாடற் புராணம்

ஆராய்ச்சி முன்னுரை

வேதியா வேதா கீதா விண்ணவர் அண்ணா என்றென்று
ஓதியே மலர்கள் தூவி ஒருங்குநின் கழல்கள் காணப்
பாதியோர் பெண்ணை வைத்தாய்; படர்சடை மதியம் சூடும்
ஆதியே ஆல வாயில் அப்பனே அருள்செய் யாயே!

- *தேவாரம்-4-ஆம் திருமுறை-திருஆல-1.*

பாண்டித் திருநாடு

பாண்டிய நாடே 'பழம் பெரும்பதி' என்ற பாராட்டைப் பெற்றதாகும். இப்பாண்டித் திருநாட்டில் பதினான்கு திருப்பதிகள் முதன்மை வாய்ந்தவை. அவை தேவாரப் பாடல் பெற்ற தலங்கள் ஆகும்.

கூடல் புனவாயில்; குற்றாலம்; ஆப்பனூர்;
ஏடகம்; நெல்வேலி; இராமேசம்; - ஆடனை
தென்பரங்குன் றம்; சுழியல்; தென்திருப்புத் தூர்; காளை
வன்கொடுங்குன் றம்; பூ வணம்.

என்று பதினான்கு திருத்தலங்களின் பெயர்களை வரிசையிட்டு ஒரு பாடல் காட்டுகின்றது. இச்சிறப்புப் பொருந்திய பாண்டிய நாட்டின் பெருமைகள் மிகப்பல. இத்திருநாட்டில் சோம சுந்தரக் கடவுள் சுந்தர பாண்டியராய் இருந்து ஆட்சி புரிந்தமையை நினைவுகூர்ந்து இந்நூலின் நாட்டுச் சிறப்பினைத் தொடங்குகின்றார். 'மறை நிறுத்திய வழியினால் வழுதியாய்ச் செங்கோன் முறை நிறுத்திய பாண்டிய நாடு' என்பது இந்நூலாசிரியர் வாக்கு. இங்குப் பொருநை என்னும் தாமிரபரணி ஆறு ஓடுகின்றது. மிகுந்த வளப்பம் மிக்கது. பண்டைப் பெருமை வாய்ந்தது. இப்பாண்டிய நாட்டில் எக்காலத்தும் சிவபக்தியும், மெய்யன்பும் குன்றாமல் மேன்மையுற்று விளங்கியது.

மதுரையம் பதி

பாண்டிய நாட்டின் பழம் பெருமைக்குச் சான்றாக விளங்குவது மதுரை இப்பாண்டித் திருநாட்டின் எழிலாரும் முகமெனப் புகழ்பெற்று விளங்குவது, இம்மதுரையே ஆகும். திருநகரச் சிறப்பினைப் பாட வந்த பரஞ்சோதியார் இக்கருத்தினை உள்ளடக்கி,

மங்கலம் புனை பாண்டி நாடாகிய மகட்குச்
சங்கலம் புகை தோளிணை தடமுலை ஆதி
அங்கமாம் புறம் தழுவிய நகரெலாம் அனைய
நங்கை மாமுகம் ஆகிய நகர்வளம் பகர்வாம்.

(திருவி - திருநகர - 1)

என்று பாடுகின்றார். அது மட்டுமின்றிப் பாண்டித் திருநாட்டிற்கு மற்ற உறுப்புகள் எவை எவை என்றும் அதன் அடுத்த பாடல் தெரிவிக்கின்றது. அப் பாண்டிய நாட்டிற்குத் திருப்பரங்குன்றமும், திருக்கொடுங்குன்றமும் கொங்கைகள். திருச்சுழியலே உந்தியாகிய உறுப்பாகும். அழகிய வயிறு குற்றாலமாகும். திருவேடகம் என்னும் தலமே சிவந்த கையாகும். திருப்பூவணம் உடலாகும். திரண்ட தோள்களோ

வேணுவனம் என்னும் தலமாகும். மதுரையே அழகிய முகமாகும் என்றார்.

கொங்கையே பரங்குன்றமும் கொடுங்குன்றும்: கொப்பூழ்
அங்கமே திருச்சுழியல்; அவ்வயிறு குற்றாலம்;
செங்கை ஏடகம்; மேனியே பூ வணம்; திரள்தோள்
பொங்கர் வெய்வனம்; திருமுகம் மதுரையாம் புரமே.

சோமசுந்தரக் கடவுள் கோயில் கொண்டுள்ள பெருந்தலம் இம்மதுரையே! இத்தல சம்மந்தமாய் வடமொழி நூல்களும் வடமொழித் துதிகளும், தமிழ் நூல்களும், தனிப் பாடல்களும் அளவிறந்ததாய்க் காணப்படுகின்றன. திருஞான சம்பந்தரால் பத்துப் பதிகங்களும், திருநாவுக்கரசரால் இரண்டு பதிகங்களும் பாடப் பெற்ற சிறப்பு வாய்ந்தது.

கருணைக் கடலாகிய சோமசுந்தரப் பெருமான் 64 திருவிளையாடல்களை நடத்திய இடம்; அரசராயும் புலவராயும் வீற்றிருந்த மேன்மை மிக்கது; செந்தமிழ் வளர்க்க நல்லிசைப் புலவர் ஒருங்கிருந்து சங்கம் நடத்திய சிறப்புடையது; படைப்புக் காலம் தொடங்கிப் பல பாண்டிய மன்னர்கள் ஆட்சி செய்த இடம்; முருகப் பெருமானும் இங்கிருந்து தமிழ் ஆய்ந்தார் எனின் இதன் சிறப்பிற்கு வேறெதனைக் கூறமுடியும்?

மதுரையின் பெருமை

மதுரையின் பெருமைகளை எடுத்துரைக்கின் விரியும். இத்தலத்திற்கு மதுரை, நான் மாடக் கூடல், திருஆலவாய், கடம்பவனம், துவாதசாந்தபுரம், பூலோக கைலாயம், சிவராஜதானி, கன்னி புரீசம், ஜீவன் முக்திபுரம், சிவநகரம் எனப்பல பெயர்கள் உண்டு. இதனை,

அத்திருமா நகரின்பேர் சிவநகரம் கடம்பவனம் அமர்ந்த சிவன்
முத்திபுரம் கன்னிபுரம் திருவாலவாய் மதுரை முடியா ஞானம்

புத்திதரும் பூவுலகிற் சிவலோகம் சமட்டிவிச்சா புரம்
தென்கூடல்
பத்திதரு துவாதசாந் தத்தலம் என்று ஏதுவினாற் பகர்வர்
நல்லோர்
(திருவி - தலவி - 21)

என்று இப்புராணம் குறிப்பிட்டுக் காட்டுகின்றது. ஞான சம்பந்தரும், மங்கையற்கரசியாரும், குலச்சிறையாரும் நெடுமாற நாயனாரும் எழுந்தருளிய இடம். மாணிக்க வாசகர் பொருட்டுப் பல திருவிளையாடல்களை இங்கு இறைவன் நிகழ்த்தினார். குமரகுருபரர் பிள்ளைத் தமிழ் பாடியதும் இங்குதான். இந்திரன், வருணன், முருகன், விநாயகர் போன்றோர் வழிபட்டுப் பேரின்பம் எய்திய இடம். இங்கு இராசசேகர பாண்டியன் பொருட்டுப் பெருமான் வெள்ளி மன்றுள் கால்மாறி ஆடினார். இங்குள்ள விமானம் இந்திரனால் கொண்டு வந்து வைக்கப்பட்டுப் பூசிக்கப்பெற்ற சிறப்புடையது. எட்டு யானைகளால் தாங்கப் பெறுவது.

இங்குள்ள இறைவனுக்கு அட்டாலைச் சேவகன், அடியார்க்கு நல்லான், அதிரவீசி ஆடுவான், அபிடேகச் சொக்கன், பன்னிசைச் சொக்கன், முதலான பெயர்களும் உண்டு. இறைவிக்கு, அபிஷேகவல்லி, அங்கயற்கண்ணி, தமிழ் அறியும் பெருமாட்டி, என்ற பெயர்கள் உண்டு. இன்னும் பல பெயர்களாலும் இவ்விருவர் வழங்கப் பெறுவர்.

இங்குப் பல மண்டபங்கள் உண்டு. இம்மண்டபங்கள் பல்லோரால் பல காலங்களில் கட்டப்பட்டவை. அத்துடன் ஏராளமான கல்வெட்டுகள் உள்ளன.

புராணங்கள்

வேதங்களிலும் உபநிடதங்களிலும் புராணத்தின் சிறப்புச் சொல்லப்பட்டுள்ளது. புராணங்கள் வேதங்களோடு தோன்றிய

காரணத்தால் புராணத்தை வேதம் என்றே பல வடமொழி நூல்கள் தெரிவிக்கின்றன. இப்புராணக் கதைகளைக் கேட்போர் நீண்ட ஆயுளைப் பெறுவர் என்ற எண்ணம் பண்டை மக்களிடம் இருந்தது. சாதிச் சண்டை, மொழிச் சண்டை, சுயநலம் முதலியன நீங்க, இப்புராணக் கதைகள் பெரிதும் பயன்பட்டன. மகாபுராணங்கள் பதினெட்டு என்ற வரையறையும் எற்பட்டது.

ஆரம்ப காலத்தில் ஆழ்வார்களும் நாயன்மார்களும் இறைவன் மீது பக்திப் பாடல்களைப் பாடினர். அதன் வளர்ச்சியாகப் பிற்காலத்தில் தலபுராணங்கள் பாடப் பட்டன. இத்தல புராணங்களின் தோற்றத்திற்கு அரசாட்சியும் ஒரு காரணமாக அமைந்தது, பதினெண் புராணங்களின் ஓர் அங்கமாக மட்டுமே இருந்த தலமகிமைச் செய்திகள் பிற்காலத்தில் காப்பிய அமைதி பெற்று முழுமையான இலக்கியங்களாக மலரத் தொடங்கின.

தொல்காப்பியம் முதலிய பல இலக்கண நூல்களில் புராணம் என்பதற்குரிய குறிப்பு உண்டு. பிரபந்த மரபியல் என்ற நூல் "பிள்ளைக்கவி முதல் புராணம் ஈறாகத் தொண்ணூற்றாறெனும் தொகைய தான" என்று புராணங்களை பிரபந்த வகையில் அடக்கிக் காட்டியது. கி. பி. பத்தாம் நூற்றாண்டில்தான் தனியாகப் புராணங்கள் தோன்றத் தொடங்கின. சாந்திபுராணமும், அட்டாதச புராணமும், கன்னிவனப் புராணமும் ஆரம்ப காலப் புராணங்கள் எனலாம். மிக அதிகமான தலபுராணங்கள் பாடிய பெருமை பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களையே சாரும். கி. பி. பத்தொன்பதாம் நூற்றாண்டு தலபுராணங்களுக்குரிய காலம்.

புராண இலக்கியங்களுள் பெருங்காப்பிய இலக்கணம் பொருந்தியிருக்கும். நாட்டு, நகர, ஆறு, மலை வர்ணனைகள் இடம் பெற்றிருக்கும். மூர்த்தி, தலம், தீர்த்தம் போன்றவற்றின்

பெருமையோடு விழா, வேள்வி, வழிபட்டோர் வரலாறு, அவர் அடைந்த நற்பயன்கள் ஆகியவை இடம் பெற்றிருக்கும். இவை அனைத்தையும் இத்திருவிளையாடல் உள்ளடக்கி உள்ளது.

திருவிளையாடற் புராணம்

திருஆலவாய் மான்மியம் என்றழைக்கப்படும் திருவிளையாடற் புராணத்தைப் பரஞ்சோதி முனிவர் இயற்றினார். இந்நூல் இறைவனின் அறுபத்து நான்கு திருவிளையாடல்களை விரிவாகப் பேசுவது. பெரும் பெற்றப் புலியூர் நம்பி என்பவர் இயற்றிய வேறு ஒரு திருவிளையாடற்புராணத்தில் இருந்து வேறுபடுத்தி அறியவே இதற்கு ஆலவாய் மான்மியம் என்ற பெயர் ஏற்பட்டதெனலாம். இருப்பினும் தற்காலத்து அறிஞர் இதனைப் பரஞ்சோதி முனிவர் திருவிளையாடற் புராணம் என்றே அழைக்கின்றனர். மதுரைப் புராணம் என்ற வேறுபெயரும் உண்டு.

"காத்தும், படைத்தும், கரந்தும், விளையாடி" என்ற மாணிக்கவாசகப் பெருமானின் கூற்றிற்கு இணங்க முழுமுதற் கடவுளாகிய சோமசுந்தரப் பெருமான் செய்தருளிய செயற்கரும் செயல்களை 'விளையாட்டு' என்று கூறி வருவது பண்டைக்காலம் தொட்டு வழங்கி வரும் ஒரு மரபாகும். இதே கருத்தை உமாபதி சிவாசாரியரும் "ஏற்ற இவை அரன் அருளின் திருவிளையாட்டாக இயம்புவார்கள்" என்று கூறுகின்றார். எளிதிற் செய்தருளும் ஆற்றலுடைய இறைவன் செயலாதல் பற்றி இச்செயல்களை எல்லாம் 'திருவிளையாடல்' என்றே வழங்கப்பட்டு வருகின்றன.

'புராணம்' என்பது பழைய வரலாறு என்றும் பொருள்படும். விளையாட்டு என்ற சொல் 'விருப்பம்' என்ற பொருளில் 'வில்' என்ற வேர்ச்சொல்லில் இருந்து பிறந்தது. இறைவனின் தெய்வத் தன்மை வாய்ந்த பழமையான அருள்

விளையாட்டினை விளக்குவதால் இது திருவிளையாடற் புராணம் என்ற பெயரினைப் பெற்றது.

தமிழில் வழங்கும் புராணங்களைச் சிலர் மூன்றாகவும் சிலர் நான்காகவும் பகுப்பர். நான்காகப் பகுப்போரின் வகைகளை இவண் காண்போம்.

1. சான்றோர் வரலாற்றினை எடுத்துரைப்பது.
2. தெய்வங்களின் அருட்செயலினைக் கூறுவது.
3. இறைவனின் செயலை ஒரு தலத்துடன் இணைத்து விளக்குவது.
4. சாதிகள், மதங்கள், நதிகள், மரங்கள் போன்றவற்றைச் சிறப்பித்துச் சொல்வது.

இவற்றின் இடை இரண்டையும் கொண்டு இத்திருவிளையாடற் புராணம் சிறந்தோங்குகிறது எனலாம்.

இத்திருவிளையாடற் புராணத்தில் சோமசுந்தரப் பெருமானின் செயற்கரும் செயல்கள், வியத்தகு நிகழ்ச்சிகள், மதுரைப் பெருமானோடு தொடர்புடைய அரசர்கள், அடியார்கள், பறவைகள், விலங்குகள் உள்ளிட்ட அருட் செயல்களை உட்படுத்திப் பழம் கதையோடு புதுமெருகேற்றி இப்புராணத்தைப் பாடியுள்ளார். பரஞ்சோதி முனிவர். நூலின் முடிவில் அமைந்துள்ள அருச்சனைச் சிறப்பு என்ற பகுதி, இறைவனின் பெருமையோடு பல தலங்களின் பெருமையையும் பேசுகின்றது.

பரஞ்சோதி

திருஆலவாய் மான்மியம் என்றழைக்கப்படும் இத் திருவிளையாடற் புராணத்தைப் பரஞ்சோதி முனிவர் இயற்றினார். தமிழ் இலக்கியத்தில் 'பரஞ்சோதி' என்ற பெயருடையவர் பலர். தமிழ் இலக்கிய வரலாறு எழுதிய மு. அருணாசலம் அவர்கள் தம் இலக்கிய வரலாறு பதினாறாம்

நூற்றாண்டு - பாகம் இரண்டில் நான்கு பரஞ்சோதிகளைக் குறிப்பிட்டுக் காட்டுகின்றார்.

1. பரஞ்சோதியார் - இவர் அறுபத்து மூன்று நாயன்மார்களுள் ஒருவர். கி. பி. ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். பல்லவர் காலத்தில் வாதாபிக்குப் படை நடத்திச் சென்று வெற்றிவாகை சூடியவர். பின்னாளில் சிறுத்தொண்டர் என்ற பெயரில் நாயன்மாராக வாழ்ந்தவர்.

2. பரஞ்சோதி மாமுனிவர் - இவர் அகச்சந்தானக் குரவர்களுள் ஒருவர். இவர் காலம் கி. பி. பதின்மூன்றாம் நூற்றாண்டென்பர். அருள்நந்தி சிவாசாரியருக்கும் உமாபதி சிவாசாரியருக்கும் உபதேசம் செய்தவர். இவர் கைலாயத்திலிருந்து திருவெண் காட்டிற்கு ஆகாய வழியில் செல்லும் போது வீதியில் விளையாடிக்கொண்டிருந்த அச்சுத களப்பாளரின் குழந்தையைக் கண்டு அக்குழந்தைக்கு ஞான உபதேசம் செய்து 'மெய்கண்டார்' என்ற திருநாமம் சூட்டிச் சென்ற யோகியார்.

3. பரஞ்சோதி - சிதம்பர புராணம் பாடிய புராணத் திருமலை நாதரின் புதல்வர்; கி. பி. பதினாறாம் நூற்றாண்டினர்; சிதம்பரப் பாட்டியல் என்ற நூலை இயற்றியவர்; இலக்கண இலக்கியங்களில் வல்லவர்; தத்துவஞானப் பிரகாசரின் மாணாக்கர்.

4. பரஞ்சோதி முனிவர் - திருவிளையாடற் புராணத்தின் ஆசிரியர்; மற்ற மூவருக்கும் பிற்பட்டவர். இவரைப் பற்றிய செய்திகள் நூலாசிரியர் என்ற தலைப்பில் காண்போம்.

நூலாசிரியர்

திருவிளையாடற் புராணத்தின் ஆசிரியர் பரஞ்சோதி முனிவர் ஆவார். இவர் வாழ்ந்த காலம் பற்றிய கருத்துகளைப் பின்னர் காண்போம். இவர் வேதாரண்யம் என்று

அழைக்கப்படும் திருமறைக்காட்டில் தோன்றியவர். இது சோழ மண்டலத்தில் உள்ளது. வழி வழிச் சைவர்களாகிய அபிடேகத்தார் மரபில் வந்தவர் வேளாள மரபினர் என்றும் கூறுவர். தந்தையார் பெயர் மீனாட்சி சுந்தரதேசிகர்.

அபிதான சிந்தாமணி என்ற நூல் இப்பரஞ்சோதி முனிவரைச் சத்தியஞான தரிசகரின் மாணக்கர் என்றும், மெய்கண்ட தேவருக்கு ஆசிரியர் என்றும் பிழைபடக் கூறுகின்றது. பரஞ்சோதி என்ற பெயர் மயக்கமே காரணமாகலாம். நான்கு பரஞ்சோதிகட்கு உள்ள வித்தியாசம் நோக்காமல் பலர் இவ்வாறு பிழைபட எழுதுவதும் வழக்கமாயிற்று.

திருவிளையாடற் புராண ஆசிரியரான பரஞ்சோதி முனிவர் தென்மொழி வடமொழி, திருமுறைகள், சித்தாந்த சாஸ்திரங்கள் இவற்றை ஐயம் திரிபுஅறக் கற்றவர். தம் தந்தையிடம் முறையாகத் தீட்சை பெற்றவர். சிவபக்தியும் அடியார் பக்தியும் மிக்கவர். அங்கயற்கண்ணம்மை திருவடியில் மிக்க அன்பு பூண்டவர். அதனால்தான் 'சத்தியாய்' என்று தொடங்கும் காப்புச் செய்யுளுடன் நூலைத் தொடங்குகின்றார்.

இவர் சிவபெருமான் திருக்கோயில் கொண்டிருக்கும் பல தலங்களுக்குச் சென்று, தரிசித்து மதுரையை அடைந்து, அங்கயற்கண்ணம்மையுடன் எழுந்தருளியிருக்கும் சோமசுந்தரப் பெருமானைத் தரிசித்து அங்குத் தங்கி இருந்தார். அப்போது மீனாட்சியம்மை தன் கனவில் தோன்றி 'எம் பெருமானின் திருவிளையாடல்களைப் பாடுவாய்' என்று பணித்தார். அப்பணியைத் தலைமேற்கொண்டு இந்நூலைப் பாடி முடித்தார். சொக்கேசர் சந்நிதியில் அறுகாற் பீடத்திருந்து (பாடல் எண் 21). இதனை அடியார்களும் புலவர்களும் கூடி இருப்ப அரங்கேற்றினார் என்பர்.

இவர் இயற்றிய வேறு நூல்கள்

இத்திருவிளையாடற் புராணம் தவிர வேறு சில நூல்களையும் இவர் இயற்றியுள்ளார். வேதாரணியப் புராணம் திருவிளையாடற் போற்றிக் கலிவெண்பா மதுரை பதிற்றுப் பத்தந்தாதி போன்றவைகளும் இவர் இயற்றினார்.

இவரின் காலம்

பரஞ்சோதி முனிவரின் காலம் பற்றிப் பல்வேறு விதமான கருத்துகள் நாட்டில் வழங்கி வருகின்றன. அக்கருத்துகளை ஆய்ந்து அவற்றின் உண்மைகளை ஈண்டுக் காண்போம்.

1. இவரின் காலம் சுமார் 400 ஆண்டுகட்கு முற்பட்டதென்றும் 850 ஆண்டுகட்கு முற்பட்டதென்றும் பலர் கூறி வந்துள்ளனர். நான்கு பரஞ்சோதிகட்கு உள்ள வித்தியாசம் அறியாதவர் கூற்றென்று இதனைத் தள்ளிவிட வேண்டும்.

2. சுமார் அறுபத்தைந்து ஆண்டுகட்கு முன்னர் இந் நூலிற்கு உரையெழுதிய பேரறிஞர் ந. மு. வேங்கடசாமி நாட்டார் அவர்கள் தம் முன்னுரையில் இவரின் காலம் சுமார் 350 ஆண்டுகட்கு முற்பட்டதென்று எழுதியுள்ளார். அதாவது பதினாறாம் நூற்றாண்டின் பிற்பகுதி அல்லது 17-ம் நூற்றாண்டின் முற்பகுதி என்பது அவர் தம் முடிவு. ஆயினும் அதற்குரிய ஆதாரம் ஒன்றையும் அவர் காட்டிச் செல்லவில்லை.

3. தெ. பொ. மீனாட்சி சுந்தரனார் தாம் இயற்றிய தமிழ் இலக்கிய வரலாறு என்ற நூலில் 17-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவர் இவர் என்றே எழுதியுள்ளார்.

4. பாலூர் கண்ணப்ப முதலியார் தம் தமிழ் நூல் வரலாறு என்ற நூலிலும் 17-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர் என்றே கூறுகின்றார்.

5. தமிழ் இலக்கியம் பற்றி எழுதிய 'கமில் சுவலபின்' என்பவர் பரஞ்சோதி முனிவரின் காலம் கி. பி. 1603 என்று ஆண்டைக் குறிப்பிட்டே கூறுகின்றார்.

6. 'சேது புராணம்' பாடிய நிரம்ப வழகிய தேசிகர் பரஞ்சோதி முனிவருடன் பயின்ற ஒரு சாலை மாணாக்கர் என்று ஒரு வரலாறு தெரிவிக்கின்றது. அக் கூற்றுப்படி நோக்கின் நிரம்ப வழகிய தேசிகரின் காலமான 16-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியே பரஞ்சோதி முனிவரின் காலம் என்றாகும்.

7. பி. சுப்ரமணிய ஐயர் என்பவர் பரஞ்சோதி முனிவரின் காலத்தைத் தம் நூல் ஒன்றில் பரஞ்சோதியாரின் காலத்தைப் பதினெட்டாம் நூற்றாண்டென்பார்.

8. சில ஆய்வாளர்கள் நைடதம் இயற்றிய அதிவீரராம பாண்டியர் வேண்டுகோளிற் கிணங்கவே - இப் பரஞ்ோதி முனிவரின் திருவிளையாடற் புராணம் இயற்றப்பட்டது என்றும் அப்பாண்டியரின் காலமான பதினாறாம் நூற்றாண்டின் பிற்பகுதியே இவ்வாசிரியரின் காலமே என்றும் கூறுவர். அதிவீரராம பாண்டியரின் காலமே இன்னும் உறுதியாய்க் கூறமுடியவில்லை. இவ்விருவரும் சமகாலத்தவர்ா என்பதும் சந்தேகத்திற்குரியதே.

9. இவை தவிர திருமலை நாயக்கர் அவையில் இருந்த சரஸ்வதி பண்டாரம் என்பவரின் தலைமையில் ஸ்ரீசொக்கேசர் முன் இப்புராணம் அரங்கேற்றப்பட்டதென்று ஒரு கர்ண பரம்பரைச் செய்தி நாட்டில் வழங்கி வருகின்றது. இதனை நோக்கின் பரஞ்சோதி முனிவரின் காலம் பதினேழாம் நூற்றாண்டின் முற்பகுதி என்றாகும்.

10. இராமேசுர உலா, அழகர் கிள்ளைவிடு தூது முதலிய நூல்களை இயற்றியவர் பலபட்டடைச் சொக்க நாதப்புலவர். வீரமாமுனிவருக்கு ஆசிரியராய் இருந்தவர் சுப்ரதீபக் கவிராயர். இவ்விருவருக்கும் புலமைக் காய்ச்சல் இருந்தது

என்று இலக்கியங்கள் மூலம் தெரியவருகின்றது, பலபட்டடைச் சொக்கநாதப் புலவர் இத்திருவிளையாடற் புராணம் அரங்கேறிய காலத்தில் உடன் இருந்து கேட்டு இன்புற்று இரண்டு சிறப்புப் பாயிரப்பாடல்கள் பாடினார் என்பார் உ.வே.சா. இப்பலபட்டடைச் சொக்கநாதர் பாடல்கள் அரங்கேறும்போது உடன் இருந்தவர் இராமநாதபுரம் விஜயரகுநாத சேதுபதி ஆவார். இவரின் காலம் திட்டவட்டமாகக் கி. பி. 1711-முதல் 1725-வரை என்று தெரிகிறது. இச்சேதுபதி படிக்காசுப் புலவர் பாடல்களைப் புகழ்ந்து பாடியுள்ளார். இச்சேதுபதியின் காலம் 17-ம் நூற்றாண்டின் பிற்பகுதியும் 18-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியும் ஆகும். இச் சேதுபதியின் காலத்தை இலக்கிய வரலாறு என்ற நூலில் கா. சுப்ரமணியம் பிள்ளையவர்கள் திட்டவட்டமாக 18-ம் நூற்றாண்டின் முன்பகுதி என்று வரையறுத்துக் கூறுகின்றார். எனவே சுப்ரதீபக் கவிராயர். பலபட்டடைச் சொக்கநாதப் புலவர், பரஞ்சோதி முனிவர், படிக்காசுப் புலவர் போன்றோர் சற்றேறக்குறைய சமகாலத்தவர் என்றாகிறது. சேதுபதியும் இக்காலத்தவரே!

எனவே மேற்கண்ட சான்றுகளை நோக்கின் பரஞ்சோதி முனிவரின் காலம் 17-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியும் 18-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியும் ஆகும். எனவே சற்றேறக்குறைய 250 ஆண்டுகட்கு முன்னர், அதாவது வீரமாமுனிவரின் காலத்திற்கு சற்று முற்பட்டு பரஞ்சோதி முனிவர் வாழ்ந்தவர் எனலாம்.

டாக்டர் கோவிந்தசாமிப்பிள்ளை என்பவரும் இக்கருத்தை உடையவரே! முனிவரின் காலம் பதினெட்டாம் நூற்றாண்டின் முற்பகுதி என்றே அவர் குறிப்பிடுகின்றார்.

பரஞ்சோதியாரின் திருவிளையாடற் புராணம்

சைவத் திருமுறைகள் சைவ சித்தாந்தத்தின் உண்மை நெறியினை உலகிற்கு எடுத்துக்காட்டு முகத்தான் எழுந்தவை,

புராணங்களும் அத்தன்மையவே, அப்புராணங்களில் இறைவனின் முச்சுடர் போன்று பிரகாசிப்பது பெரிய புராணம், கந்தபுராணம், திருவிளையாடற் புராணம் என்ற மூன்றுமே எனலாம்.

இத்திருவிளையாடற் புராணம் முருகப் பெருமானால் அகத்தியருக்கு அருளப்பெற்றுப் பின்னர் அகத்தியரால் பிற முனிவர்கள் அறிந்தனர். அவர்கள் சொக்கலிங்கப் பெருமானை வழிபட்டுப் பூசித்தனர் என்று இப்புராணம் கூறுகின்றது. இந்நூலில் காப்பு, கடவுள் வாழ்த்து, பாயிரம் (சிறப்புப் பாயிரம், அவையடக்கம் உட்பட) நாட்டுச் சிறப்பு, நகரச் சிறப்பு, கைலாயச் சிறப்பு, புராண வரலாறு, தலச்சிறப்பு, தீர்த்தச் சிறப்பு, மூர்த்திச் சிறப்பு, பதிகம் இவற்றுடன் அறுபத்து நான்கு திருவிளையாடல்களையும் தனித்தனிப் படலங்களாக விளக்குகின்றது. அத்துடன் நூல் முடிவில் அருச்சனை சிறப்பும் இடம் பெற்றுள்ளது. ஆக (11+64+1) 76 படலங்கள் எனப் பொதுவாக இந்நூலினைப் பகுக்கலாம்.

மதுரைக் காண்டம், கூடற் காண்டம், திரு ஆலவாய்க் காண்டம் என்னும் மூன்று காண்டங்களையும் 3363 பாடல்களையும் உடையது. இதில் சைவத் திருமுறைகள், சைவ சித்தாந்த சாஸ்திரங்கள், சங்க இலக்கியங்கள் ஆகியவற்றின் கருத்துகள் இடை இடையே இடம் பெற்றுள்ளன. இது பக்திச் சுவை நன் சொட்டச் சொட்டப் பாடிப் பரவசப்படுத்தும் தன்மையுடையது. சொல்லழகும் கவிநயமும், பொருள் ஆழமும் உடையது. இனிய சந்தங்கள் பல இதில் இடம் பெற்றுள்ளன. சைவப் பெருமக்களால் தினம் பாராயணம் செய்யப்பட்டு வந்த உயர்ந்த தன்மையுடையது, இது. இந்நூல் கயிறு சாத்தி உண்மை காணும் வழக்கத்தையும் கொண்டிருக்கும் சிறப்புடையது; சைவ விரதங்களின் பெருமையை எடுத்துரைப்பது.

இந்நூல் மூலம் பண்டைக்கால பழக்கவழக்கங்கள் பல உணர முடிகின்றது. நூல் ஆசிரியர் பல்கலைச் சான்றோர் என்று அறிய முடிகிறது. நாட்டியம், இசை, பரி இலக்கணம் போன்ற நூல்களில் பயிற்சி உடையவர். ஒன்பான் மணிகளின் தன்மை அறிந்தவர். இவை போன்ற பலவற்றில் தம் நுண்மான் நுழைபுலத்தைச் செலுத்தி இந்நூலை யாத்துள்ளார்.

பாடல் எண்ணிக்கை

தற்போது நமக்குக் கிடைத்திருக்கின்ற பாடல்களின் எண்ணிக்கை பாயிரம் உட்பட 3363 இருப்பினும் பரஞ்சோதி முனிவர் 3367 பாடல்கள் இயற்றி இருக்க வேண்டும் என்று திட்டவட்டமாகத் தெரிகின்றது. இந் நூலிற்கு இரண்டு சிறப்புப் பாயிரங்கள் செய்த பலபட்டடைச் சொக்கநாதப் புலவர், இந்நூலின் பாடல் எண்ணிக்கையை, "அருச்சனை ஈறாய் யாப்பின் விரி மூவாயிரத்து முந்நூற்றறுபஃதேழின் மதுரைப் புராணம்" என்று பாடியுள்ளார். எனவே பாடல் எண்ணிக்கை 3367 என்று தெரிகின்றது. நான்கு பாடல்கள் இடையில் மறைந்திருத்தல் கூடும்.

திருவிளையாடற் புராணத்தின் மூலநூல்

இறைவனின் அருள் விளையாடல்கள் அறுபத்து நான்கு என்பது பண்டைக்காலம் தொட்டு வந்த ஒரு மரபு. பரஞ்சோதி முனிவர் திருவிளையாடல் படைத்தற்கு முன்னரே அப்புராணக் கதைகள் பல நாட்டில் வழங்கி வந்தன. இன்னும் சொல்லப் போனால் இந்திய இலக்கியங்கள் சிலவற்றில் இப்புராணக் கதைகள் சில இடம் பெற்றன.

வடமொழியில் உள்ள ஸ்கந்தபுராணத்தின் ஒரு பகுதி 'ஆலாசிய மான்மியம்' என்பதாகும். இவ்வாலாசியமான் மியத்தைத் தழுவியே. இத்திருவிளையாடற் புராணத்தை இயற்றினார் என்பர். எனினும் இக்கருத்து உடன்பாடான

கருத்தல்ல. இப்புராணக் கதைகள் பல தமிழ் நூல்களில் முன்னரே இடம் பெற்றுவிட்டன. கதை நிகழுமிடமோ சங்கத் தமிழ் வளர்த்த மதுரையாகும். இதில் உள்ள மாந்தரோ தமிழ் மண்ணினர். அத்துடன் பேச்சு, எழுத்து ஆகிய இரு வழக்கிலும் இடம் பெற்ற ஒன்றை ஆரியத்தினின்றும் மொழி பெயர்த்தார் என்று கூறுதல் தகாது. எனவே இவ்வரலாறுகள் ஆரியத்தினின்று எழுதப்படும் முன்னரே தமிழில் இருநதிருக்க வேண்டும்.

ஒருவேளை இதன் ஆசிரியர் வடமொழி மான்மியத்தில் இருந்து இக்கதையை எடுத்துக் கொண்டு பழந்தமிழ் நூல் கருத்துகளையும் சொற்களையும் கொண்டு இனிய தமிழ் நடையில் இயற்றினார் என்று கருத இடம் உண்டு. இருப்பினும் ‘ஆலாசிய மான்மியம்’ என்ற நூலோ, தமிழ் மொழியிலேயே உள்ள கதைகளைத் தழுவித்தான் முதலில் எழுதப்பட்டிருக்க வேண்டும். அதாவது தமிழிலிருந்து வட மொழிக்குச்சென்று மீண்டும் தமிழிற்கு வந்திருக்கவேண்டும். இந்நூலிற்குப் பல நூற்றாண்டு முன்னர் இயற்றப்பட்ட நம்பி திருவிளையாடற் கதைகள் பல இதில் மாறுபாடுகளுடன் காணப்படுவதால் தான், இதனை வடமொழியில் இருந்து எடுத்தார் என்று பல ஆசிரியர்கள் கருதுகின்றனர்.

இறைவனின் அருள் விளையாடல்களைக் கூறும் வேறு நூல்கள்

இறைவனின் அருள் விளையாடல்களை விரிவாகச் சொல்லுகின்ற நூல்கள் மூன்று எனலாம்.

(அ) திருவால வாயுடையார் திருவிளையாடற் புராணம்

இந்நூல் நம்பித் திருவிளையாடல் என்று அழைக்கப்படும் செல்லி நகர் பெரும் பெற்றப் புலியூர் நம்பி என்பவரால்

செய்யுள் நடையாக இயற்றப்பட்டது. இதனுடைய செய்யுள் எண்ணிக்கை 1753. வேம்பத்தூரார் திருவிளையாடல் என்றும், பழைய திருவிளையாடல் என்றும் வேறு பெயரால் வழங்கும். உத்தர மகா புராணம் வடநூலின் ஒரு பகுதியாகிய 'சாரச முச்சய' என்பதிலிருந்து மொழிபெயர்த்து இதனை இயற்றினார். செல்லி நகர் என்பது தற்போது கரிவலம் வந்த நல்லூர் தாலுக்காவில் உள்ள பனையூராகும். இத்திருவிளையாடலுக்கும் பரஞ்சோதி முனிவரின் திருவிளையாடலுக்கும் கதைப் போக்கில் பல மாறுதல்கள் உண்டு. உ. வே. சா. அவர்கள் இதனைப் பதிப்பித்துள்ளார். இவரின் காலம் கி. பி. 13-ஆம் நூற்றாண்டு. இந்நூலே 'திருவிளையாடல்' என்று முற்காலத்தில் பாராட்டப் பெற்று வந்தது. இந்நூலில் இறைவனை 'சொக்கன்' என்று இனிய தமிழ் சொல்லால் அழைக்கும் வழக்கத்தை அறிய முடிகின்றது.

ஆ) சுந்தர பாண்டியம்

வடநூலில் இருந்து எடுத்து மொழி பெயர்க்கப்பட்டது. தமிழில் அமைந்த இனிய செய்யுள் நடை நூல். இதனை இயற்றியவர் தொண்டை நாட்டில் உள்ள வாயற் பதியிலிருந்த 'அனதாரி' என்னும் புலவர். இந்நூல் முழுமையும் கிடைக்கவில்லை. மற்ற இரண்டு திருவிளையாடல்களைவிட மிக விரிவாக எழுதப்பட்ட நூல். இதில் மலயத்துவசப் பாண்டியனின் முன்னோர்கள் பெயர்கள் சிலவும் குறிப்பிடப்பட்டுள்ளன. நூலின் முகப்பில் காப்புச் செய்யுட்கள் இரண்டு காணப்படுகின்றன. உற்பத்தி காண்டம் முதல் லீலா காண்டத்தின் சிவராத்திரிச் சருக்கம் வரை மட்டுமே கிடைத்துள்ளது. கிடைத்துள்ள பாடல் எண்ணிக்கை 2015 பாடப்பட்ட காலம் கி. பி. 1563 சென்னைக் கீழ்த்திசை நூல் நிலையச் சுவடி நூலகத்தாரால் 1955ஆம் ஆண்டு அச்சிட்டு வெளிவந்துள்ளது.

(இ) பரஞ்சோதி முனிவரின் திருவிளையாடற் புராணம்

எல்லாராலும் படித்துப் பயிலப் பட்டு வருகின்ற நூல். 3363 செய்யுட்களையுடையது. 18ஆம் நூற்றாண்டினது. திருவாலவாய் மான்மியம் என்றழைக்கப்படுவது. பரஞ்சோதி முனிவரால் இயற்றப்பட்டது. பிறசெய்திகளை இம் முன்னுரையில் ஆங்காங்கே கண்டு கொள்க.

திருவிளையாடல் கதைகளைக் கூறும் நூல்கள்

(அ) கடம்பவன புராணம்: இது நீபாரண்ய மகாத்மியம் அல்லது கதம்பவன புராணமென்னும் வடமொழி நூலில் இருந்து தமிழில் மொழி பெயர்த்து இயற்றப்பட்டது. தொண்டை நாட்டு இலம்பூரிலிருந்த வீமநாதபண்டிதர் என்பவர் இதனைச் செய்தார். செய்யுள் நடையில் அமைந்தது. இதன் செய்யுட் தொகை 1090. இதில் லீலா சங்கிரக அத்தியாயத்தின் முதலில் உள்ள 64 செய்யுட்கள் திருவிளையாடற் கதையைக் கூறுவனவாய் அமைந்துள்ளன. நம்பித் திருவிளையாடல் கதையையே கூறுவது அச்சிடப்பட்டுள்ளது.

(ஆ) திருவிளையாடற் பயகர மாலை: இந்நூலாசிரியர் வீரபத்திரக் கம்பர், பாயிரம் 2 பாடல்கள், திருவிளையாடல்கள் 64 பாடல்கள். ஆக மொத்தம் 66 பாடல்களை மட்டும் உடைய நூல். உ. வே. சா. அவர்கள் நம்பித் திருவிளையாடலுடன் இதனைப் பிற்சேர்க்கையாகச் சேர்த்துள்ளார். நம்பித் திருவிளையாடல் கதையையே கூறுகிறது. 'பரதேசி பயகரனே' என்னும் முடிவுடன் அமைந்துள்ளது. இந்நூல் தனியாகச் சென்னை புஷ்பரத செட்டியரால் கலா ரத்னாகர அச்சுக் கூடத்தில் 1887ஆம் ஆண்டிலேயே அச்சிடப்பட்டது

(இ) திருவிளையாடற் போற்றிக் கலி வெண்பா: பரஞ்சோதி முனிவராலேயே இயற்றப்பட்டது. பெரிதும் திருவிளையாடற்

புராணத்தின் முகப்பில் இந்நூல் இடம் பெறும். திருவிளையாடல்களோடு இறைவனைப் போற்றிக் கூறுவது. 1906ஆம் ஆண்டில் தனியாக அச்சிடப்பட்டது.

(ஈ) திருவிளையாடல் வெண்பா: பிச்சை இபுறாகிம் என்னும் புலவரால் வெண்பா யாப்பில் பாடப் பெற்றது. 1909ஆம் ஆண்டில் திரிசிரபுரம் கலியாண சுந்தரம் முத்திர சாலையில் அச்சிடப்பட்டது. பரஞ்சோதி முனிவரின் திருவிளையாடல் கதைகளைத் தழுவியது. மதுரைக் காண்டம் மட்டும் வெளிவந்தது. 22 திருவிளையாடல்கள் மட்டும் இதில் இடம் பெற்றுள்ளன.

(உ) திருவிளையாடல் நாமாவளி: அறுபத்து நான்கு திருவிளையாடல்களைக் கூறி இறைவனைப் புகழ்வது. பாளையங்கோட்டையில் உள்ள சிந்தாமணி அச்சு இயந்திர சாலையில் இராமலிங்க சுவாமிகள் அச்சிட்டு வெளிப்படுத்தினார்.

(ஊ) திருவிளையாடல் கீர்த்தனை: இறைவனின் அருள் விளையாட்டினைக் கிர்த்தனை வடிவில் பாடப்பெற்ற நூல். இதன் ஆசிரியர் சுப்பிரமணி பாரதி என்பவராவார். இவர் மழவாபுரியைச் சார்ந்தவர். சென்ற நூற்றாண்டிலேயே அச்சிடப்பட்டுள்ளது.

(எ) திருவு சாத்தான நான்மணி மாலை: இந்நூலின் 28ஆம் செய்யுள் திருவிளையாடற் புராணக் கதையை வரிசைப் படுத்திக் கூறுகின்றது. நம்பித் திருவிளையாடலின் பிற்சேர்க்கையாக உ. வே. சா. அவர்கள் சேர்த்துள்ளார். அகவற்பாவால் அமைந்தது. 60 வரிகளையுடையது.

இப்புராணம் பற்றிய வேறு நூல்கள்

இத்திருவிளையாடற் புராணம் சம்மந்தமாய் இன்னும் சில நூல்கள் வெளி வந்துள்ளன. இவை பெரிதும் அச்சிடப் பட்டவை அவற்றை இவண் காண்போம்.

(அ) அட்டமிப் பிரதக்ஷின மான்மியம்: வடநூலில் இருந்து அறுபத்து நான்கு திருவிளையாடல்களை மொழிபெயர்த்துத் தமிழ் வசன நடையில் எழுதப்பட்டது. இதனை மொழி பெயர்த்தவர் இராமசாமி பிள்ளையவர்கள்.

(ஆ) திருவிளையாடற் புராண சங்கிரகம்: வசன நடையில் அமைந்த நூல். இடை இடையே பாடல்கள் உண்டு; சுமார் 240 பாடல்கள் இதில் இடம் பெற்றுள்ளன; 1990ஆம் ஆண்டு வெளிவந்தது. வெ. சண்முகம் பிள்ளை இதன் ஆசிரியர்.

(இ) மதுரை சொக்கேசர் வந்தி - பிட்டுக்கு மண் சுமந்த காதற் கண்ணிகள்: மதுரையில் நடைபெறும் பிட்டுத் திருவிழாவில் யாக மண்டபத்தில் பாடப்படும் சிங்காரக் கும்மிகள், மண் சுமந்த படலம் கண்ணிகளாய் விரிவாய் பாடப்பட்டுள்ளது. 1896ஆம் ஆண்டு அச்சிடப்பட்டது. காசிம் யந்திரசாலை மதுரையில் அச்சிடப்பட்டது. பிட்டுத் திருவிழா யாக மண்டப சிங்காரக் கும்மி என்ற பெயரும் உண்டு. மண்டபத்தின் சிறப்பும் இதில் உண்டு.

(ஈ) திருவிளையாடல் நாடகம்: பரஞ்சோதி முனிவரின் திருவிளையாடலைக் கீர்த்தனைகளாகப் பாடி நாடகமாக இயற்றப்பட்டது. இதன் பதிப்பு ஆசிரியர் முத்துவையர் ஆசிரியர் கிருஷ்ண பாரதியார்.

(உ) இந்திரன் பழிதீர்த்த சரித்திரம்: இச்சரித்திரத்தை சை. ரா. நமச்சிவாயம் என்பவர் விரிவாக உரைநடையில் எழுதியுள்ளார். மதராஸ் ரிப்பன் பிரஸ் வெளியீடு!

(ஊ) திருவிளையாடல் அட்டோத்தர சதநாமாவளி அருச்சனையகவல்: 108 நாமங்கள் இவ்வகவலில் இடம் பெற்றுள்ளன. திருவிளையாடல் நிகழ்ச்சிகளைக் கூறி இறைவனைத் துதிப்பது.

(எ) வணிக வஞ்சி விலாசம்: திருவிளையாடல் புராணத்தில் வரும் வன்னியும் கிணறும் இலிங்கமும் அழைத்த படலக்

கதையை நாடகமாகத் தருவது இந்நூல். 1910இல் ஞானசம்பந்தர் அச்சுக் கூடத்தில் அச்சிடப்பட்டது. இதன் ஆசிரியர் நாராயண முதலியார்.

(ஏ) சிவ பராக்கிரம போற்றிக் கலிவெண்பா: திருவிளையாடல்களைக் கூறுவது. திருவிளையாடற் போற்றிக் கலிவெண்பா என்ற வேறு பெயரும் உண்டு. 1889-ஆம் ஆண்டு வி. சுந்தரம் முதலியாரால் அச்சிடப்பட்டது.

இப்புராணக் கதைகளைக் கூறும் பழைய நூல்கள்

சங்க இலக்கியங்களில் சிவபெருமான் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றனவே தவிர இக்கதைக் குறிப்புகள் இல்லை. நமக்குக் கிடைத்திருக்கும் பழைய நூல்களில் சிலப்பதிகாரத்தில் இக்கதை நிகழ்ச்சிகள் முதன் முதலில் உள்ளன. ஆயினும் தற்காலத்தில் உள்ள சைவ புராணங்களில் இக்கதைக் குறிப்புகள் மிகப் பலவாய்க் காணப்படுகின்றன.

(அ) சிலப்பதிகாரம்: இதில் மூன்று படலக் கதைகள் மட்டும் குறிப்புகளாய் உள்ளன.

(1) கடல் சுவறவிட்ட கதை (13) சிலம்பு காடுகாண் காதை 11:18-22 வரிகளில் உள்ளது.

(2) இந்திரன் முடி மேல் வளையெறிந்த கதை (14) சிலம்பு காடுகாண்காதை 11:23-29 வரிகளில் உள்ளது.

(3) வன்னியும் கிணறும் இலிங்கமும் அழைத்த கதை (64) சிலம்பு வஞ்சினமாலை 21:5-6 வரிகளில் உள்ளது.

(ஆ) தேவார திருவாசகம்: தேவாரத்தில் 17 கதைகளும், திருவாசகத்தில் 20 கதைகளும் இடம் பெற்றுள்ளன.

(1) தேவாரம் 5, 6, 10, 16, 17, 19, 20, 23, 32, 41, 42, 45, 51, 52, 57, 62, 63 படலக் கதைகள் இடம் பெற்றுள்ளன.

(2) திருவாசகம் 2, 5, 6, 10, 12, 22, 23, 29, 30, 33, 35, 36, 37, 45, 47, 55, 58, 59, 61 படலக் கதைகள் இடம் பெற்றுள்ளன.

(இ) கல்லாடம்: இந்நூலில்தான் இறைவனின் திருவிளையாடல்கள் அறுபத்து நான்கென்ற வரையறை காணப்படுகின்றது. கல்லாடர் என்பவரால் செய்யப் பெற்றது. இந்நூலில் 31, திருவிளையாடற் கதைக் குறிப்புகள் காணப்படுகின்றன. 1, 2, 5, 6, 7, 8, 9, 11, 13, 14, 17, 21, 24, 27, 32, 37, 39, 41, 42, 43, 45, 46, 47, 49, 51, 52, 53, 56, 57, 59, 61 படலக் கதைகள் குறிப்புகளாய் உள்ளன.

3, 4, 15, 18, 25, 26, 28, 31, 34, 38, 40, 44, 48, 50, 54, 60 ஆகிய பதினாறு படலக் கதைக் குறிப்புகள் இம்மூன்று நூல்களிலும் இல்லை.

திருவிளையாடற் புராணம் மூலம் அச்சுப் பதிப்புகள்

இந்நூல் சென்ற நூற்றாண்டிலேயே அச்சிடப்பட்டது. இருப்பினும் இன்று தெரிந்தவரை அப்பதிப்புகளைக் காண்போம்.

(1) ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்கள் பதிப்பு.

(2) விசாகப் பெருமாள் ஐயர் பதிப்பு (1879)

(3) சரவணப் பெருமாள் ஐயர் பதிப்பு.

(4) வீரப்ப செட்டியார் பதிப்பு (1882)

(5) இராமலிங்கசுவாமிகள் மற்றும் முருகேசமுதலியார் பதிப்பு (1882)

(6) இராஜு முதலியார் பதிப்பு

(7) சதாசிவப் பிள்ளையவர்கள் பதிப்பு (1907)

(8) இராமலிங்க சுவாமிகள் பதிப்பு (1896)

(9) சண்முக முதலியார் பதிப்பு (1906)

(10) சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகப்பதிப்பு

(11) காசிமடத்துப் பதிப்பு.

திருவிளையாடற் புராணம் உரையுடன் கூடிய பதிப்புகள்

(1) சோடசாவதானம் சுப்ராயச் செட்டிமார் உரை நூல் முழுவதும் உள்ளது. 1887 ஆம் ஆண்டு வெளிவந்தது. இவர் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களின் மாணாக்கர். ஆதிகலாநிதி அச்சுக்கூடம் சென்னை.

(2) ஈக்காடு இரத்தினவேலு முதலியார் உரை. முன்கண்ட உரையைத் தழுவி எழுதினார். 1894ஆம் ஆண்டு வெளிவந்தது.

(3) இராமசுவாமிப் பிள்ளை என்னும் ஞானசம்பந்தப் பிள்ளை பொழிப்புரை மதுரைக் காண்டத்திற்கு மட்டும் எழுதி 1894ஆம் ஆண்டு வெளியிட்டார்.

(4) ந. மு. வேங்கடசாமி நாட்டார் உரை நூல் முழுமைக்கும் உள்ளது. சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழக வெளியீடாக 1927 முதல் பதிப்பு வெளிவந்தது. மிக அருமையான உரை.

(5) தில்லைவன நாதபிள்ளையுரை வேதத்திற்குப் பொருள் அருளிச் செய்தபடலம் மட்டும் உரை எழுதி வெளி வந்தது. வெளிவந்த ஆண்டு 1894.

திருவிளையாடற் புராண வசன நடை நூல்கள்

(1) யாழ்ப்பாணத்து நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களால் எழுதப் பெற்றது. 1895-இல் வெளிவந்தது. (மறுபதிப்பு).

(2) சுந்தர முதலியார் சென்னை இந்துஜனபூஷணி என்னும் பத்திரிகையில் வாரம்தோறும் எழுதி வந்து பின்னர் புத்தகமாக மாறியது. 1984-இல் வெளி வந்தது.

(3) சுவாமிநாத பண்டிதர் வசனம், *1910*-இல் வெளி வந்தது.

(4) க. நமச்சிவாய முதலியார் வசனம், புராண மஞ்சரி என்ற சஞ்சிகையில் மாதந்தோறும் எழுதி வந்து நூலாக வெளியிடப்பட்டது.

(5) புலவர்-அரசு கழக வெளியீடாக வந்த வசனம் பல பதிப்புகள் கண்டது.

(6) பட்டுசாமி ஓதுவார். மிகச் சிறந்த உரைநடை நூல். திருப்பனந்தாள் காசி மடத்து வெளியீடு. *1955*-இல் வெளிவந்தது. *610*-பக்கங்களையுடைய செம்மையான நூல்.

(7) லிப்கோ வெளியீடு *70* பக்கங்களில் கதைச்சுருக்கம் மட்டும் அமைந்துள்ளது. சிறிய வடிவானது.

(8) புலவர்மணி, தாம் எழுதிய திருவிளையாடற் புராணம் தசாவதாரம் என்ற நூலில் *1* முதல் *170* பக்கங்கள் வரை இக்கதை இடம் பெற்றுள்ளது.

(9) எஸ். வி. வெங்கட்ராமன் - சிறுவர்களுக்கான நூல்.

(10) பேரூரான் - வானதி பதிப்பக வெளியீடு *366* பக்கங்களையுடையது. *1966*-இல் வெளிவந்து *6* பதிப்புகள் கண்டுள்ளது.

திருவிளையாடல் சம்மந்தமான பல கட்டுரைகள்

1. சிவபராக்கிரமம் - *1895*-இல் இரத்தினவேலு என்பவரால் எழுதி வெளியிடப்ப்ட்டது.

2. தெ. பொ. மீனாட்சி சுந்தரம் - நீங்களும் சுவையுங்கள் என்ற நூலில் கட்டுரை ஒன்று எழுதியுள்ளார்.

3. க. மீனாட்சி சுந்தரம் - தட்டெழுத்துப் பிரதியொன்றைக் கேரளப் பல்கலைக் கழகத்திற்கு 1973-ஆம் ஆண்டில் ஆய்விற்கு வழங்கியுள்ளார்.

4. சிவ. பார்வதியம்மையார், ந. மு. வேங்கடசாமி நாட்டார் அவர்களின் மகள் இவர். 'பாண் பெரியார் மூவர்' என்ற தம் நூலில் பாணபத்திரர் என்ற தலைப்பில் கட்டுரை எழுதியுள்ளார். 70 முதல் 103 - பக்கங்கள் வரை இடம் பெற்றுள்ளது.

5. சிவலீலா - ஏ. எஸ். வைத்தியநாத பாகவதர் இந் நாடக நூலைத் திருவிளையாடற் கதைகளைக் கொண்டு எழுதியுள்ளார். இந்நூல் 1942-இல் வெளிவந்தது. T.K.S. சகோதரர் நடித்துள்ளனர்.

6. நக்கிரன் குற்றவாளியா? என்ற தலைப்பில் இலக்கியச் சிந்தனைகள் என்ற நூலில் நா. இராமலிங்கம், அவர்கள் எழுதி வெளியிட்டுள்ளார். அண்ணாமலைப் பல்கலைக் கழக வெளியீடு.

7. மீனாட்சி கல்யாணம் தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான் கலைஞன் கண்ட கடவுள் என்ற நூலில் இத்தலைப்பில் கட்டுரை ஒன்று எழுதியுள்ளார்.

8. ப. லீலா அவர்கள் 'கோழிதமிழ்க் கூடலில் கொன்றை வேணியான்' என்ற தலைப்பில் சில கட்டுரைகள் எழுதியுள்ளார்.

9. பரஞ்சோதி திருவிளையாடற்புராணம் இலக்கிய மதிப்பீடு - என்ற நூல் டாக்டர் ப. கோபாலன் அவர்கள் எழுதியுள்ளார். மிக அருமையான சிறந்த ஆய்வு நூல். கோவை இலட்சுமி பதிப்பகம் மூலம் வெளிவந்தது.

இவை தவிர இப்புராணக் கதைகள் பல நாடகமாக நடிக்கப்பட்டுள்ளன. A.P. நாகராஜன் என்பவர் - திருவிளையாடல் என்று ஒரு திரைப்படத்தைத் தயாரித்து வெளியிட்டார். மீனாட்சி திருமணம் போன்ற படங்களும் இத்திருவிளையாடற் புராணத்தைத் தழுவி வெளி வந்தவையே. அநேக சொற்பொழிவுகளும் கூத்துகளும் நடைபெற்றுள்ளன.

இப்புராணத்தில் இடம் பெற்ற பாண்டியர்கள்

இப் புராணத்தில் 22 பாண்டியர்கள் இடம் பெற்றுள்ளனர். *1.* குலசேகர பாண்டியன் *(3)* 2. மலயத்துவசன் *(4)*, *3.* சுந்தர பாண்டியன் *(5-10)*, *4.* உக்கிர பாண்டியன் *(11-15)*, *5.* வீரபாண்டியன் *(17)*, *6.* அபிடேக பாண்டியன் *(18-21)*, *7.* விக்கிரம பாண்டியன் *(22-23)*, *8.* இராச சேகரன் *(24)*, *9.* குலோத்துங்கன் *(25-27)*, *10.* அனந்த குணபாண்டியன் *(28-29)*, *11.* குலபூடணன் *(30-34)*, *12.* இராசேந்திரபாண்டியன் *(35)*, *13.* இராசசிங்கன் *(35)*, *14.* சுந்தரேசபாத சேகரன் *(37-39)*, *15.* வரகுணபாண்டியன் *(40-43)*, *16.* இராச சேகரன் *(44-46)*, *17.* சுகுண பாண்டியன் *(47)*, *18.* வங்கிய சேகரபாண்டியன் *(49-51)*, *19.* வங்கிய சூடாமணி *(52)*, (சண்பகமாறன் வேறு பெயர்) *20.* குலேச பாண்டியன் *(56)*, அரிமர்த்தன பாண்டியன் *(58-61)*, *22.* கூன்பாண்டியன் *(62-64)*.

இப்புராணத்தில் இடம் பெற்ற ஆடவர்கள்

1. தனஞ்செயன் *(3)*, *2.* விருபாக்கன் *(23)*, *3.* வைணவ பிரம்மச்சாரி *(23)*, *4.* அந்தணன் *(26)*, *5.* அந்தணனின் புதல்வன் *(26)*, *6.* வாளாசிரியன் *(27)*, *7.* சித்தன் *(27)*, *8.* அடியார்க்கு நல்லான் *(31) (55)*, *9.* தனபதி *(39)*, *10.* தனபதியின் மருமகன் *(39)*, *11.* பாணபத்திரன் *(41)*, *12.* ஏமநாதன் *(41)*, *13.* நக்கீரன் *(52)*, *14.* தருமி *(52)*, *15.* சிவபக்தர் *(47)*, *16.* உருத்திர சன்மன் *(55)*, *17.* கபிலர் *(55)*, *18.* வாதவூரர் *(58-61)*, *19.* பரதவர் தலைவன் *(57)*, *20.* குலச் சிறையார் *(62)*, *21.* சிதம்பர அந்தணன் *(62)*, *22.* திருஞானசம்பந்தர் *(62-64)*, *23.* மதுரை

வணிகன் (64), 24. பரணன் (55), 25. சேதிராயன் (55-30), 26. சவுந்தர சாமந்தன் (30), 27. சூரசேனன் (4), 28. விச்சுவாவசு (4), 29. சுமதி (5), 30. சுகலன் (45).

இப்புராணத்தில் இடம் பெற்ற பெண்கள்

1. தடாதகைப் பிராட்டியார் (5-11), 2. காஞ்சன மாலை (4), 3. காந்திமதி (12), 4. சுபவிரதை (23), 5. கௌரி (23), 6. பொன்னனையாள் (36), 7. தரும சீலை (38), 8. சுசீலை (39), 9. தனபதி வணிகரின் தங்கை (39), 10. சரஸ்வதி (51), 11. சாவித்திரி (51), 12. காயத்திரி (51), 13. உமா தேவியார் (57), 14. வந்தி (61), 15. மங்கயற்கரசி (62-63), 16. உலோப முத்திரை (65), 17. வணிகரின் மனைவியர் (64), 18. ஈழப் பாடினி (44), 19. பாணபத்திரன் மனைவி (27), 20. அந்தணர் மனைவி (26), 21. வாளாசிரியன் மனைவி (27), 22. முனிவரின் மனைவியர் (32), 23. இயக்க மாதர் (33), 24. குணசாலினி (55), 25. விச்சாவதி (4), 26. சுகலை (46).

பிற அரசர்கள்

1. சேரப் பெருமான் (42), 2. காடு வெட்டிய சோழன் (35), 3. விக்கிரம சோழன் (50), 4. சோம சேகரன் (12), 5. நகுடன் (1), 6. கரிகாற் பெருவளத்தான் (24).

முனிவர்கள்

1. ததீசி, 2. துருவாசர், 3. பதஞ்சலி, 4. வியாக்கிர பாதர், 5. கௌதமர், 6. அரபத்தர், 7. கண்ணுவர், 8. அகத்தியர், 9. வசிட்டன், 10. அங்கிரசன், 11. காசிபன், 12. புலத்தியன், 13. மார்க்கண்டன், 14. சனகாதி, 15. நாரதர், 16. வியாசர், 17. சுகன்.

சங்கப் புலவர்கள்

1. இறையனார், 2. இடைக்காடர், 3. உருத்திர சன்மர் (ஊமை), நக்கீரர், கபிலர், பாணர் பிற புலவர்கள்.

தேவர்கள்

1. இந்திரன், *2.* பிரமன், *3.* விநாயகர், *4.* முருகர், *5.* திருமால், *6.* திருநந்திதேவர், *7.* இடபதேவர், *8.* குண்டோதரன், *9.* குபேரன், *10.* ஐயனார், *11.* சத்தமாதர், *12.* பத்திரகாளி, *13.* வாயுதேவன், *14.* அக்னிதேவன், *15.* வருணன், *16.* இயமன், *17.* சங்குகண்ணன்.

விலங்கு போன்றவை

1. யானை, *2.* பன்றி, *3.* பசு, *4.* கரிக்குருவி, *5.* நாரை, *6.* காளை *(இடபதேவர்)*, *7.* சுறாமீன் *(திருநந்திதேவர்)*, *8.* வெள்ளையானை *(காட்டுயானை)*.

அசுரர்

1. வாலசூரன், *2.* வலன், *3.* விருத்திராசூரன், *4.* விச்சுவஉருவன், *5.* துவட்டா.

இறைவர் தாங்கிய திருவேடர்கள்

1. சித்தர் *(3, 15, 20, 21, 34, 36, 49)*

2. புலவர் *(44, 51, 52, 55)*

3. அரசர் *(4, 11)*

4. வணிகர் *(17, 32)*

5. வேடர் *(22, 26, 37)*

6. ஆசிரியர் *(27, 33, 58)*

7. அந்தணர் *(16)*

8. முதியவர் *(23)*

9. பிட்சாடணர்

10. தவசி (35)

11. சேனைத் தலைவர் (30)

12. குதிரைப்பாகர் (59)

13. வலைஞர் (57)

14. பன்றி (45)

15. மாமன் (39)

16. தொழிலாளி (41, 61)

இத்துடன் கனவில் தோன்றியும், அசரீரியாகக் கூறியும், இருந்தபடியே அருள் செய்தும், அடியார்க்குக் காட்சியளித்தும் பல கோணங்களில் காப்பிய நாயகரான இறைவர் திருவிளையாடல்கள் புரிகின்றார். பல சமயங்களில் இலிங்கத்திலிருந்து வெளிப்பட்டு மறைகிறார்.

இந்நூலில் இடம் பெற்ற யாகங்கள்

அசுவமேதம், வாசபேயம், சோடசாகம், அக்கினிட் டோமம், இராசசூயம்.

அபிசார வேள்வி.

இதில் சொல்லப்பட்ட விரதங்கள்

சாந்திராயண விரதம், சோமவாரவிரதம், பௌர்ணமி விரதம்.

அட்டமா சித்திகள்

1. அணிமா, 2. மகிமா, 3. இலகிமா, 4. கரிமா, 5. பிராந்தி, 6. பிராகாமியம், 7. ஈசத்துவம், 8. வசித்துவம்.

மலைகள்

கைலை, இடபமலை, பொதியமலை, பன்றிமலை, விந்தமலை.

பறவைகள்

அன்னங்கள், கழுகுகள், பருந்துகள், கருடன், காடை, ஊர்க்குருவி, சிச்சிலி, கிளி, நாகணவாய்ப்புள், காகம்.

குரு

பிரகஸ்பதி, வியாழபகவான்

மலர்கள்

கொன்றை, குருக்கத்தி, பாதிரி, ஆத்தி, வில்வம், மந்தாரம், மல்லிகை, முல்லை, மகிழம்பூ, கோங்கு, கரந்தை, அலரி, நந்தியாவட்டம், செருந்தி, குருந்தகம், புன்னாகம், தாமரை, நீலம், சண்பகம்.

பாடல்களின் யாப்பு

1. அறுசீர் விருத்தம் 1776 2. எழுசீர் விருத்தம் 266 3. எண்சீர்விருத்தம் 13 4. கலிவிருத்தம் 353 5. கல்வி நிலைத்துறை என்னும் கலித்துறை 782 6. கொச்சகக் கலிப்பா 140 7. தாழிசை ஒரு போகு கொச்சகம் 22 8. வஞ்சி விருத்தம் 11. ஆக மொத்தம் 3363 பாடல்கள் இடம் பெற்றுள்ளன.

இப்புராணத்தில் பெயர் மட்டும் சுட்டப்படும் பாண்டியர்கள்

1. இராசேசபாண்டியன், 2. இராசகம்பீரன், 3. பாண்டிவங்கிய தீபன், 4. புரந்தரசித்தன், 5. பாண்டிய வங்கியபாதகன், 6. சித்திரவிரதன், 7. சித்திரபூடணன், 8. சித்திரதுவசன், 9. சித்திரவருமன், 10. சித்திரசேனன்,

11. சித்திரவிக்கிரமன், 12. இராசமார்த்தாண்டன், 13. இராசசூடாமணி, 14. இராசசார்த்தூலன், 15. துவிசராசகுலோத்தமன், 16. அயோதனப் பிரவீணன், 17. இராசகுஞ்சரன், 18. பரவிராசபயங்கரன், 19. உக்கிரசேனன், 20. சத்துருஞ்சயன், 21. வீமரதன், 22. வீமபராக்கிரமன், 23. பிரதாபமார்த்தாண்டன், 24. விக்கிரமகஞ்சுகன், 25. சமரகோலாகலன், 26. அதுலவிக்கிரமன், 27. அதுலகீர்த்தி, 28. கீர்த்தி பூடண பாண்டியன் (ஊழிக்காலம் வந்தது), 29. பிரதாப சூரியன், 30. வங்கிசத்துவசனன், 31. இரிபுமருத்தனன், 32. சோழவங்கி சாந்தகன், 33. சேரவங்கி சாந்தகன், 34. பாண்டிவங்கி சேசன், 35. வங்கிசசிரோன்மணி, 36. பாண்டீச்சுரன், 37. குலத்துவசன், 38. வங்கிசபூடணன், 39. சோமசூடாமணி, 40. குலசூடாமணி, 41. இராசசூடாமணி, 42. பூபசூடாமணி, 43. சகநாதன், 44. வீரவாகு, 45. விக்கிரமவாகு, 46. பராக்கிரமவாகு, 47. சுரபிமாறன், 48. குங்குமவழுதி, 49. கருப்பூரபாண்டியன், 50. காருணியவழுதி, 51. புருடோத்தமபாண்டியன், 52. சத்துருசாதனபாண்டியன்.

பரஞ்சோதி-நம்பி; திருவிளையாடல் வேறுபாடுகள்

இப்பரஞ்சோதி முனிவரின் புராணத்தில் இடம்பெற்ற,

1. வருணன் கடலை வற்றச் செய்தது, நான் மாடக் கூடலான வரலாற்றிலும்,

2. நாகமெய்த வரலாறு, மற்றும் மாயப்பசுவை வதைத்த வரலாறு-மதுரையான வரலாற்றிலும்,

3. திருநகரம் கண்ட வரலாறு-புலிமுலை புல்வாய்க்கருளிய வரலாற்றிலும், இடம் பெற்றுள்ளன.

பரஞ்சோதியில் காணப்படாதவை

1. மூர்த்தியார்க்கு அரசளித்தது. 2. காரியார் நாரியார் பாப்பகுத்தது. 3. புலிமுலை புள்வாய்க்கருளியது என்ற மூன்றும்

பரஞ்சோதி முனிவரின் திருவிளையாடற்புராணத்தில் காணப்படாதவை. நம்பித் திருவிளையாடலில் மட்டுமே உள்ளது. இரண்டிலும் படலங்கள் முன்பின் மாறியுள்ளன. இன்ன பாண்டியன் காலத்தில் இன்ன வரலாறு நிகழ்ந்தது என்று கூறும் பரஞ்சோதியின் பாண்டியர் வரிசை முறை நம்பித் திருவிளையாடலில் இல்லை. இரண்டிற்கும் கதைப்போக்கில் பல மாறுதல்களும் உண்டு.

இந்நூலில் அமைந்துள்ள இன்றியமையாத தொடர்கள்

1. நாள்தோறும், அறவினை இல்லாதவர் பாவம் வளர்வது போல *(1)*

2. அறநெறியைக் கைவிட்டு தேடுவோரின் செல்வம் போல *(1)*

3. இருவினைக்கு ஈடாக வரும் பயனைப் போல *(5)*

4. பொய்யுடையார் செய்தவம் அழிவது போல *(5)*

5. ஆடலாசிரியன் தான் முன்னர் ஆடிக்காட்டுவது போல *(5)*

6. வான் செய்யும் நன்றிக்கு வையத்தார் செய்யும் கைம்மாறு உண்டோ *(17)*

7. நாமொன்று நினைக்க தெய்வம் ஒன்று நினைத்தது *(26)*

8. வேழமுண்ட விளாங்கனி போல் *(26)*

9. மன்னவனெப்படி? மன்னுயிர் அப்படி *(28)*

10. பாலிற்பிரைபோல *(28)*

11. யாரும் இல்லாதவர்க்கு தெய்வம் துணை *(39)*

12. பருந்தும் அதன் நிழலும் போல *(41)*

13. துறந்தவர்கள் ஆயினும் மன்னவன் சொன்னவாறே சொல்வது வழக்காறு அல்லவா? *(44)*

14. பூதஉடல் அழியும்! புகழுடல் அழியாது *(46)*

15. உலகத்தில் தக்கான்ஒருவன் வாழத் தன் கிளை வாழும் *(47)*

16. குழந்தையைப் பெற்றதாய் கசக்கும் மருந்தினை ஊட்டி அக்குழந்தையின் தீயபணியினைத் தீர்த்தல் போல *(54)*

ஆசிரியரின் பல்கலை அறிவுக்குச் சான்று

1. திருமண மண்டப அலங்காரம் *(5)*
2. பிறநாட்டவர், தேவர்கள் *(5)*
3. ஆற்று வர்ணனை *(8, 60)*
4. ஆண்களின் முப்பத்திரண்டு இலட்சணம் *(11)*
5. பெண்களின் இலக்கணம் *(12)*
6. சோமவார விரதம் *(14)*
7. வேதம் *(16)*
8. ஒன்பான் மணிகள் *(17)*
9. அட்டமாசித்திகள் *(33)*
10. போர் வர்ணனை *(35)*
11. சிவலோகத்தின் வர்ணனை *(40)*
12. இசை நுணுக்கம் *(41)*
13. நந்தவனம் - மலர் - வர்ணனை *(52)*
14. பரி இலக்கணம் *(59)*

தலங்களின் பெருமை (இந்நூலில் இடம் பெற்றவை)

1. திருக்கைலாயம்
2. காசி
3. விருபாக்கம் (ஏமகூடம்)
4. திருப்பருப்பதம் (ஸ்ரீ சைலம்)
5. திருக்கோகரணம்
6. திருவிஞ்சைக்களம்
7. திருக்காளத்தி
8. திருவாலங்காடு
9. காஞ்சிபுரம்
10. திருமாற்பேறு
11. திருக்கழுகுன்றம்
12. திருவோத்தூர்
13. திருவண்ணாமலை
14. திருக்கோவலூர்
15. பழமலை (விருத்தாசலம்)
16. திருவதிகை
17. சிதம்பரம்
18. திருத்தோணிபுரம்
19. புள்ளிருக்கு வேளூர் (வைத்தீஸ்வரன் கோயில்)
20. திருக்குறுக்கை
21. திருவெண்காடு
22. திருமயிலாடுதுறை (மயூரம்)
23. திருப்பறியலூர் (பறசலூர்)
24. திருக்கடவூர்
25. திருவிற்குடி
26. திருசெங்காட்டங்குடி
27. திருக்கோடிக்கா
28. திருவாரூர்
29. திருமறைக்காடு (வேதாரண்யம்)
30. திருவிடை மருதூர்
31. திருப்பனந்தாள்
32. திருச்செய் ஞாலூர்
33. திருக்குடந்தை (கும்பகோணம்)
34. சுவாமி மலை
35. திருப்புறம்பயம்
36. திருவையாறு
37. திருக்கண்டியூர்
38. திருவானைக்கா
39. திருசிராமலை
40. திருநெடுங்குன்றம்
41. திருத்தளிப்புத்தூர் (திருப்பத்தூர்)
42. திருவாடனை
43. திருப்புனவாயில்
44. திருப்பூவணம்
45. திருக்கானப் பேர்
46. திருச்சுழியில்
47. திரு இராமேச்சுரம்
48. திருநெல்வேலி
49. திருக்குற்றாலம்
50. திருப்பரங்குன்றம்
51. திருவேடகம்
52. திரு ஆப்பனார்.

காப்பிய நலன்கள்

இப்புராணத்தில் காப்பிய நலன்கள் பல இடம் பெற்றுள்ளன. தண்டியலங்காரம் காட்டும் காப்பிய இலக்கணம் முழுவதும் இந்நூலில் இடம் பெற்றுள்ளது. வேனிற்கால வர்ணனை, மாலை வர்ணனை, சூரியன் தோற்றம், மறைவு சந்திரன் உதயம், தென்றல் வர்ணனை, மலை வர்ணனை, ஆற்று வர்ணனை, இயற்கைப் புனைவு, பொழில் நுகர்வு, புனல் விளையாட்டு, மதுகளிப்புப் போன்றவை இடம் பெற்றுள்ளன. மேலும் காப்பியத்திற்குத் தேவையான புலவியல் புலத்தல், கலவியல் கலத்தல் போன்றவையும் இடம் பெற்றுள்ளன. அகத்துறைச் செய்திகளாக ஆசிரியர் ஏராளமான செய்திகளைத் தருகின்றார்.

இந்நூலில் பலவித அணிகள் நிறைந்து கிடக்கின்றன. தண்டியலங்காரம் காட்டும் அணிகள் முழுவதையும் ஆசிரியர் கையாண்டுள்ளார். வளையல் விற்ற படலத்தில் இறைவருக்கும் மகளிருக்கும் நடைபெறும் உரையாடலில் சிலேடையை ஆசிரியர் அற்புதமாகக் கையாள்கின்றார்.

நோன்புகள், விரதங்கள் அவற்றின் பயன்கள் போன்றவற்றை ஆசிரியர் ஆங்காங்கே கையாள்கின்றார். கைலாயத்தின் மேன்மை, சிவலோகக் காட்சி, நரகத்தின் கொடுமை போன்றவையும் வர்ணிக்கப்படுகிறது. சைவ சித்தாந்தக் கருத்துகள் ஆங்காங்கே இடம் பெற்றுள்ளன. முழு முதற் கடவுள் சிவபெருமானே என்று பல இடங்களில் நிறுவுகின்றார்.

தமிழின் மேன்மையை வாய்ப்புக் கிட்டும் போதெல்லாம் இவர் பாடத் தயங்கவில்லை. நெற்றிக் கண்ணையுடைய சிவபெருமான் சங்கத்தில் வீற்றிருந்து ஆராய்ந்த இத் தமிழின் மேன்மையை மற்றைய நிலங்களில் உள்ள இலக்கண வரம்பில்லாப் பிற மொழிகளைப் போன்று எண்ணி விட முடியுமா? தமிழின் உயர்வினைச் சொல்லத் தான் முடியுமா?

என்கிறார் (திரு நாட்டு-57). இந் நகரத்தினைச் சூழ்ந்துள்ள அகழியின் பெருமையைச் சொல்லும்போது ஏழு கடல்களும் வந்து அறவடிவமான தீர்த்தமாகி இவ்வகழியில் உள்ளது என்பார் (திருநகரம்-14). மேரு மலையைப் போன்றன இந் நகர மதில்கள் என்பார் (திருநக-20). மதிற் பொறிகளின் பெருமையை ஆறு பாடல்களில் அழகு படப் பாடுகின்றார். (திரு நகரம்-24-29)

ஊடிய மகளிர் எறிந்த அணிகலன்களும் அம்மானை, பந்து போன்றவை ஆடிய மகளிர் சுமக்க முடியாமல் தூக்கி எறிந்த கலன்களும், தம் சிற்றில் சிதைத்த இளைஞரைக் கோபித்த சிறுமிகள் அறுத்து எறிந்த அணிகலன்களும் அந் நகரத்தின் குப்பைகளாகும். (திருநகரம்-41) நெற்பயிர்கள், பெரியோர்கள் இயற்றிய நூலின்கண் பொதிந்து கிடக்கும் உண்மைப் பொருள்போல் காட்சி அளிக்கும். (திருநா-24) திணை மயக்கம் ஆங்காங்கே பேசப்படுகின்றது. இக் காவியத்தில் மிக இனிமையாய் அமைந்தவை இறைவருக்கும் இரு பத்தினியர்க்கும் நடந்த உரையாடல். அதனை சிலேடையில் அமைத்துப் பாடுகின்றார். அதனை இந்நூல் வளையல் விற்ற படலம் 6ஆம் பாடல் முதல் 14ஆம் பாடல் வரை படித்துக் கண்டு கொள்க.

தென்றலின் வருகை இதில் மிக இனிமையாகப் பேசப் படுகின்றது. தென்றலானது பல இடங்களில் சென்று நூல்களை ஆராய்ந்து அறியும் அறிவுடைய மாணவன் போலப் பூஞ்சோலையில் நுழைந்து பொய்கையில் தாவி, தாமரை மலரைத் துழாவி, நறுமணமுள்ள மலர்களைத் தழுவி, அவற்றின் மணம் கவர்ந்து குளிர்ந்து மெதுவாய் வந்து உலாவும் (தருமிக்கு-19). மகளிரது கூந்தலைக் கருமுகில் என்று கருதி ஆடுகின்ற மயில்கள், அவர் கண்களைக் கண்டு அம்பு என்று பயந்து ஓடும் (தருமிக்கு-28). மதுவுண்டு களித்த பெண்களின் செய்கை நகைச் சுவைக்கு எடுத்துக் காட்டாய் இப் படலத்திலேயே அமைத்துள்ளார் ஆசிரியர். ஒப்பற்ற ஒரு பெண் புனலாடும்போது தன் வாயில் உள்ள நீரைத் தன்

காதலன் மேல் கொப்பளித்தாள். அதனை அவன் தேன் என்று எண்ணிக் குடித்தான் (தருமி-59). இவ்வாறு புனல் விளையாட்டு இந் நூலில் மிக அழகுபட அமைந்துள்ளது. இந் நூலில் அமைந்துள்ள சுவைமிக்க பகுதிகளை எடுத்துக் காட்டின் அது பல்கிப் பெருகும்.

இத் திருவிளையாடல் புராணத்திற்கு உரை ஒன்று எழுத வேண்டும் என்று என்னை வர்த்தமானன் பதிப்பக உரிமையாளர் உயர்திரு பேராசிரியர் ஸ்ரீபுராணச் செம்மல் J. ஸ்ரீசந்திரன் M.A. அவர்கள் பணித்தார். அவருக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வுரை எழுத எனக்குத் துணை நின்ற அண்ணன் ச. கலியமூர்த்தி M.A. அவர்களுக்கும் சில இன்றியமையாத நூல்களைக் காலத்தில் வழங்கிய சென்னை ஸ்ரீமான் தி. பக்தவத்சல ராமானுஜதாச சுவாமிகளுக்கும், என் குருநாதர் பூண்டி-பெரி. கிருஷ்ணசாமி அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அன்பன்,

சிவ. ஜோதி

உ

சிவமயம்

பரஞ்சோதி முனிவர் அருளிச் செய்த

திருவாலவாய் மான்மியம் என்னும்

திருவிளையாடற் புராணம்

முதலாவது - மதுரைக் காண்டம்

பாயிரப் பகுதி - சுருக்கம்

காப்பு

சக்தி யாய்ச்சிவ மாகித் தனிப்பர
முக்தி யான முதலைத் துதிசெயச்
சுத்தி யாகிய சொற்பொருள் நல்குவ
சித்தி யானைதன் செய்யபொற் பாதமே!

கடவுள் வாழ்த்து

பரமசிவம்

பூவண்ணம் பூவின் மணம்போலமெய் போத மின்பம்
ஆவண்ணம் மெய்கொண் டவன்றன் வலிஆணை தாங்கி
மூவண்ணல் தன்சந் நிதிமுத்தொழில் செய்ய வாளா
மேவண்ணல் அன்னான் விளையாட்டின் வினையை வெல்வாம்.

பாயிரம்

சிவபெருமானிடம் பதினெண் புராணங்களையும் கேட்டுத் தெரிந்து கொண்ட திருநந்தி தேவர் அதனைச் சனற்குமார முனிவர்க்கு அறிவித்தார். சனற்குமாரர் அதனை வியாச முனிவருக்குத் தெரிவித்தார். வியாசர் சூத முனிவருக்குத் தெரிவித்தார். அப் பதினெண் புராணங்களுள் ஒன்று ஸ்கந்த புராணம். அதன் ஒரு பகுதியாகிய சங்கர சங்கிதையில் திருவாலவாய் என்னும் மதுரையின் பெருமை கூறப்பட்டுள்ளது. வடமொழியில் கூறப்பட்டுள்ள அம் மதுரையின் சிறப்பினையெல்லாம் தமிழில் கூற வேண்டும் என்று பெரியோர்கள் வேண்டிக் கொள்ள, அதனை விரிவான முறையில் கூறத் தொடங்குகின்றோம்.

திருநாட்டுச் சிறப்பு

சோமசுந்தரக் கடவுளே அரசராக இருந்து ஆண்டு அருளிய பாண்டிய நாட்டின் பெருமை சொல்லுதற்கு மிகவும் அரியதாகும். அங்கு மேகங்கள் நல்ல மழையைப் பொழியும். பொருநை என்னும் தாமிரபரணி ஆறு ஓடுகின்றது. அந் நதியானது சைவநெறியால் அறிவு விளக்கம் பெற்ற பெரியோர்களின் உள்ளத் தெளிவு போலத் தெளிவடைந்து ஓடும். அங்குள்ள மருதநிலத்து உழவர்கள் மருதப் பண்ணைப் பாடியவாறு உழுவார்கள். நீரினைக் கட்டிச் சேறாக்குவார்கள். நல்ல விதைகளை விதைத்து அதிக செந்நெல்லை விளைவிப்பார்கள். நெல்லோடு பல்வேறு தானியங்களையும் விளைவித்து அவற்றை வண்டியில் ஏற்றிக் கொண்டு செல்வார்கள். அப்பாண்டிய நாட்டில் எக்காலத்திலும் சிவ பக்தியும் மெய்யன்பும் சைவ விளக்கமும் குன்றாமல் இருக்கும்.

திருநகரச் சிறப்பு

பாண்டிய நாடாகிய மங்கைக்கு மதுரை மாநகரம் அழகிய முகம்போல் விளங்கும். அங்கு மரங்கள் வானளாவி

நிற்கும். அம்மதுரை நகரைச் சுற்றி ஏழுகடல் போன்ற பெரிய அகழி உள்ளது. அந் நகருக்குக் காவலாய் உள்ள மதில் மேகத்தை மறைத்து நிற்கும். அம்மதில்களில் உள்ள 'மதிற் பொறிகள்' மிகுந்த சக்தி வாய்ந்தவை.

அந்நகரத்தின் வீதிகள் மிக்க சிறப்புப் பொருந்தியவை. தவ முனிவர்கள் பலர் அங்கு வாழ்கின்றனர். அங்குள்ள திருக்கோயிலில் எப்போதும் நான்கு மறைகளின் ஒலியும் திருவிழாவின் ஒலியும், முழவின் ஒலியும் கேட்டுக்கொண்டே இருக்கும். அந்நகரில் சிவபெருமான் அரசராய் இருந்து ஆட்சி செய்ததால் அது எல்லாவிதச் செல்வங்களையும் பெற்று விளங்கியது.

திருக்கைலாயச் சிறப்பு

சிவபெருமான் எழுந்தருளியிருப்பது கைலாயமாகும். அஃது தேவலோகம், சத்திய லோகம், பரமபதம் போன்ற யாவும் அழிய வருகின்ற ஊழிக்காலத்திலும் அழியாது நிலைபெற்று வளரும் தன்மை வாய்ந்தது. அங்கு முனிவர்கள் திருவெண்ணீறு அணிந்து, சிவபெருமானைத் தன் அகத்தே பெற்று அசைவற்றிருந்து ஆனந்தக் கண்ணீர் சொரிவர். நால்வகைப் பூக்களைக் கொண்டு அர்ச்சித்து இனிய பாடல்களைப் பாடி, அடியார் கூட்டம் அன்போடு பணி செய்து நிற்கும்.

புராண வரலாறு

திருக்கைலாய மலையில் சிவபெருமான் வீற்றிருக்கும் திருக்கோயிலின் முன்னர் உள்ள சிவ தீர்த்தத்தின் எதிரே ஆயிரம்கால் மண்டபம் ஒன்றுள்ளது. அங்குத் தவமே உருவெடுத்து வந்ததுபோன்று ஒரு புலித்தோல் ஆசனத்தின் மீது 'சூத முனிவர்' என்ற முனிவர் வீற்றிருந்தார். அப்போது சம்பபுத்தர் முதலான முனிவர்கள் அவரிடம் வந்து, "மூர்த்தி தலம் தீர்த்தம் இவைகளால் மேம்பட்டதும், அடியார்களுக்கு எல்லா நலங்களும் வழங்கக் கூடியதுமான ஒரு சிறந்த

தலத்தைக் கூறியருள வேண்டும்." என்று வேண்டினர். உடனே சூத முனிவர், "அத்தகைய சிறந்த தலம் திருவர்லவாய் ஆகும். அதனை வியாசர் போன்ற முனிவர்களுக்கு அகத்தியர் கூறியருளியுள்ளார். அதனைக் கூறுகின்றேன், கேளுங்கள்," என்று கூறத் தொடங்கினார். (அகத்தியர் மற்ற முனிவர்களுக்குக் கூறுவதாகவே சூத முனிவர் கதையைக் கூறி வருகின்றார்)

தல விசேடச் சிறப்பு

மதுரைத் தலத்தில் சிறப்புமிக்க பொற்றாமரைத் தடாகமும் சோமசுந்தரக் கடவுள் என்ற பெயர்கொண்ட சிவலிங்கமும் உள்ளது. எல்லா உலகங்களிலும் புண்ணிய தலங்களே சிறந்தவை. அப் புண்ணியத் தலங்களுள் சிவத் தலங்களே மேன்மையானவை. அவற்றுள் அறுபத்தெட்டு சிவத்தலங்கள் சிறந்தவை. அவ்வறுபத்தெட்டில் பதினாறு மிக்க சிறப்புடையவை. அப்பதினாறில் சிதம்பரம், காசி, திருக்காளத்தி, திருவாலவாய் என்ற நான்கும் மிகமிகச் சிறப்புடையவை. இந் நான்கினுள்ளும் திருவாலவாயே மிகச் சிறப்பும் .மேன்மையும் உடையது. இத் திருவாலவாயின் பெயரைக் கேட்டவுடனே, கேட்டவர்க்கு போகத்தையும், பேரின்ப வீட்டையும் அருளும், சோமசுந்தரப் பெருமான் மற்றெல்லாத் தலங்களையும் படைக்கும் முன்னரே இத் தலத்தைப் படைத்தார். இத் திருவாலவாயில் வசித்தவரே வீடு பேற்றை அடைவர். பலவித நதிகளில் நீராடியதால் உண்டாகும் பயன் இங்கு வசித்தலாலேயே உண்டாகும். இத் திருவாலவாய்க்கு நான்மாடக் கூடல், கன்னிபுரம், பூலோக சிவலோகம், சமட்டிவிச்சாபுரம், துவாத சாந்தத் தலம் என்னும் பலபெயர்கள் உண்டு.

தீர்த்த விசேடச் சிறப்பு

நதிகளுக்கு அரசிபோல் விளங்கும் கங்கை, காவிரி முதலிய நதிகளும், கடல்களும் மேகங்களும் பிற நீர்நிலைகளும்

தோன்றுவதற்கு முன்னேயே தமக்குத் திருமஞ்சனம் செய்தற் பொருட்டுச் சோமசுந்தரக் கடவுள் பொற்றாமரைத் தீர்த்தத்தைத் தோற்றுவித்தார்.

முன்னொரு காலத்தில் திருநந்தி தேவர் முதலிய தேவ கணங்கள் சிவபெருமானை வணங்கி, "இச்சிவலிங்கப் பெருமானுக்குத் திருமஞ்சனம் செய்ய நீர்நிலைகள் இல்லை. அதனால் இங்கு ஒரு தீர்த்தம் உண்டாக்கியருள வேண்டும்" என்று வேண்டினார்.

உடனே சிவபெருமான் அச் சிவலிங்கத்திற்குத் தென் கீழ்த் திசையில் தமது சூலத்தை எடுத்துப் பூமியில் ஊன்றினார். அச்சூலம் பூமியின் பாதாளத்தையும் அண்ட கடாகத்தையும் கிழித்தது. அக் கடாகத்தில் இருந்த கடலானது பெருக்கெடுத்து மேலே எழுந்து வந்தது. சிவபெருமான் தன் சடாமுடியில் உள்ள கங்கை நீரை அதில் தெளித்துக் கலந்து புண்ணிய தீர்த்தமாகச் செய்தார். பிறகு நந்தித் தேவர் முதலிய கணத் தேவர்களை அழைத்து, "இத்தீர்த்தம் ஆதி தீர்த்தம், பரம தீர்த்தம், சிவ தீர்த்தம், ஞான தீர்த்தம், முக்தி தீர்த்தம் என்னும் பெயர்களைப் பெறும்" என்றார்.

பின், சிவபெருமான் அத் தீர்த்தத்தில் மூழ்கி, மற்ற கணத் தலைவர்களையும் மூழ்கச் செய்தார். அன்று முதல் சோமசுந்தரக் கடவுளின் திருமுடியின்மேல் அத்தீர்த்தத்தை அபிடேகம் செய்து பூசித்து வழிபட்டுத் தாங்கள் விரும்பிய வற்றையெல்லாம் பெற்று உய்ந்தனர். இத்தீர்த்தம் பாவம் என்னும் விறகுக்குத் தீயாக விளங்குவதாகும்.

மூர்த்திச் சிறப்பு

மேருமலை, திருக்கைலாயமலை, மந்தரமலை, திருக் கேதாரம், காசி முதலான இடங்களில் உள்ள சிவமூர்த்திகள் தோன்றுவதற்கு முன்னரே இத்தலத்தின் கடம்ப மரத்தின்

அடியில் இச்சிவலிங்கம் தோன்றியுள்ளது. அதனால் இது மூலலிங்கம் என்னும் பெயரைப் பெறும்.

இச் சொக்கலிங்கத்தைத் தரிசித்தவர்களின் பாவங்கள் நெருப்பிற் பட்ட பஞ்சு போல அழியும். இப்பெருமானை விடியற் காலையில் தரிசித்தால் பெரிய பூமியைத் தானம் கொடுத்தலால் உண்டாகும் பலன் வந்து எய்தும். உச்சிக் காலத்தில் வணங்கினால் ஆயிரம் பசுக்களைத் தானம் கொடுத்தலால் உண்டாகும் பலன் கிடைக்கும். மாலையில் வணங்கினால் கோடிப் பசுக்களைத் தானம் கொடுத்தலால் உண்டாகும் பலன் வந்து எய்தும். நடு இரவில் வணங்கப் பெற்றால் பரி வேள்வி (அசுவ மேதயாகம்) செய்தலால் உண்டாகும் பலன் எய்தும். நான்கு யாமங்களிலும் முறையாக வணங்கியோர் எல்லா செல்வ நலன்களும் பெற்று முடிவில் வீடுபேற்றையும் அடைவர்.

இப்பெருமானுக்கு கற்பூர சுந்தரர், கடம்பவன சுந்தரர், கலியாண சுந்தரர், அபிராம சுந்தரர், சண்பக சுந்தரர், கத்தூரி சுந்தரர், பழி அஞ்சிய சுந்தரர், மகுட சுந்தரர், ஆலவாய் சுந்தரர், நான் மாடக்கூடல் நாயகர், மதுரபதி வேந்தர், சமட்டி விச்சாபுர வேந்தர், சீவன் முக்தி புரநாதர், பூலோக சிவலோகதிபர், கன்னி புரேசர், மூலலிங்க நாதர், மூர்த்தி என்னும் திருநாமங்கள் உண்டு.

பதிகம், அறுபத்து நான்கு திருவிளையாடல் பெயர்களைக் கூறுகிறது.

-பாயிரப் பகுதி முற்றும்-

1. இந்திரன் பழி தீர்த்த படலம்

கிராதாயுகத்தில் தேவேந்திரன் அணிகள் ஒளிவீச அரியணை மேல் அமர்ந்திருந்தான். தேவமகளிரின் ஆடலைக்

கண்டும் அவர்களின் இனிய பாடலைக் கேட்டும் மகிழ்ந்து தன்னை மறந்திருந்தான். அப்பொழுது அவனுடைய குருவாகிய வியாழ பகவான் அங்கு வந்தார்.

தன்னை மறந்திருந்த இந்திரன் அவர் வருகையைக் கண்டு எழுந்திராமலும் அவருக்கு வழிபாடு செய்யாமலும் வாளா இருந்தான். அதனால் கோபமடைந்த வியாழ பகவான் அங்கிருந்து போய்விட்டார். உடனே தேவேந்திரனின் செல்வம் பொலிவிழந்து சிறிது சிறிதாகக் குறைய ஆரம்பித்தது. வியாழ பகவானை வணங்காததால் ஏற்பட்ட துன்பம் இது என்பதை உணர்ந்த தேவேந்திரன் அவரைத் தேடத் தொடங்கினான்.

அவருடைய உலகத்திலும், முனிவர்கள் உலகத்திலும் தேடி முடிவில் சத்திய லோகத்தை அடைந்தான். அங்கிருந்த நான்முகன் திருமுன் விழுந்து வணங்கி நடந்தவற்றை யெல்லாம் எடுத்துக் கூறினான். "உன்னுடைய குருவான வியாழ பகவானைத் தேடிக் காணும்வரை, அறிவு ஒழுக்கங் களில் சிறந்த மூன்று தலைகளையுடைய விச்சுவ உருவன் என்பவனைக் குருவாகக் கொள்க," என்று பிரம்ம தேவன் பதில் கூறினான். தேவேந்திரனும் அவ்வாறே விச்சுவ உருவனைத் தன் குருவாகக் கொண்டான்.

தேவேந்திரனைத் தண்டிக்க வேண்டும் என்ற வஞ்சக எண்ணத்தோடு 'விச்சுவ உருவனைக் குருவாகக் கொள்க' என்று பிரம தேவன் அவனை அனுப்பி வைத்திருந்தான். அதனை உணராத தேவேந்திரன் விச்சுவ உருவனிடம், "ஒரு வேள்வி செய்ய வேண்டும்" என்று வேண்டினான். விச்சுவ உருவன், "தேவர்களுக்கு ஆக்கம் பெருகுக" என்று வெளியில் கூறி, ஆயின் உள்ளத்தில் தீய வஞ்சனையுடன், "அவுணர்களுக் கெல்லாம் உய்யும் திறம் உண்டாகுக" என்று நினைத்து ஒரு வேள்வியைச் செய்யத் தொடங்கினான்.

விச்சுவ உருவனின் தவறான செய்கையை, அவன் தீய உள்ளத்தை இந்திரன் தன் ஞான திருஷ்டியால் உணர்ந்தான். தன் வச்சிரப் படையால் விச்சுவ உருவனின் மூன்று தலைகளையும் துணித்தான். உடனே தேவேந்திரனை பிரம்ம கொலைப் பாவம் வந்து பற்றியது. இந்திரன் பெரும் துன்பம் அடைந்தான்.

இந்திரனின் கொலைப் பாவத்தைத் தேவர்கள் தீர்க்க எண்ணினர். அப்பாவத்தை மரங்களுக்கும், மண்ணிற்கும், பெண்களுக்கும், நீரிற்கும் பங்கிட்டுக் கொடுத்தனர். மரங்களில் பிசினாகியும், மண்ணில் உவராகியும், பெண்களிடம் பூப்பாகியும், நீரில் நுரையாகியும் இப்பாவம் கழியும் என்றனர். இவ்வாறு பிரித்துக் கொடுத்ததால் இந்திரன் பிரம பாவம் நீங்கி மாணிக்கம் போல ஒளிபெற்று விளங்கினான்.

விச்சுவ உருவனின் தந்தையின் பெயர் துவட்டா என்பதாகும். அத்துவட்டா, தன் மகன் விச்சுவ உருவனை, இந்திரன் கொலை செய்து விட்ட செய்தியை அறிந்து மிகுந்த துன்பம் அடைந்தான். அத்துவட்டா இந்திரனைப் பழிவாங்க எண்ணினான். உடனே அவன் ஒரு வேள்வியைச் செய்து 'விருத்திராசூரன்' என்னும் ஓர் அரக்கனைத் தோற்றுவித்தான். "தேவேந்திரனைக் கொண்டு வருக" என்று அவ்விருத்திரா சூரனைத் துவட்டா அனுப்பி வைத்தான்.

தேவேந்திரனைத் தேடிவந்து விருத்திராசூரன் போர் புரியத் தொடங்கினான். இருவருக்கும் கடுமையான போர் நடைபெற்றது. விருத்திராசூரனிடம் இந்திரன் தோற்று ஓடினான். தப்பிப் பிழைத்து ஓடி பிரமலோகம் சென்று பிரமதேவனை அடைந்தான். நடந்தவற்றைப் பிரமனிடம் கூறினான். உடனே பிரமன் அவனைத் திருமாலிடம் அழைத்துச் சென்றான். திருமால், "திருப்பாற்கடலைக் கடையும் பொழுது தேவர்களிடமும் அசுரர்களிடமும் இருந்த ஆயுதங்களை, 'ததீசி' முனிவன் என்ற முனிவனிடம்

ஒப்படைத்தோம். அம்முனிவர் மீண்டும் அவ்வாயுதங்களை யாரும் திரும்ப வந்து கேட்காததால், தானே அனைத்தையும் விழுங்கி விட்டார். அவர் விழுங்கிய அவ்வாயுதங்கள் ஒன்றாகத் திரண்டு அவர் முதுகெலும்பில் பொருந்தியுள்ளன. அதுவே 'வச்சிரப்படை' யாகும். கருணையே வடிவான அம்முனிவரை அடைந்து நீ அதனைக் கேட்டால் அவர் உனக்கு அதனைத் தருவார். அவ்வாயுதத்தைக் கொண்டு விருத்திராசூரனை அழிக்க முடியும். அதனை அவரிடம் சென்று பெறுவாயாக" என்று கூறினார். திருமாலையும் பிரமனையும் வழிபட்டு இந்திரன் விடைபெற்றுச் சென்றான்.

தேவேந்திரன் ததீசி முனிவரின் இருப்பிடம் சென்று அவரை வழிபட்டான். அவன் ததீசி முனிவரிடம், "கொடிய அவுணர்களை அழித்து எம் தேவர்களை உய்விக்கத் தகுந்த வலிமை வாய்ந்த பொருள் தங்களிடம் உள்ளது. அதனைப் பெற வந்தேன்" என்று கூறினான். ததீசி முனிவர் அதனைக் கேட்டு, "நான் பிறவி எடுத்த பயனை அடைந்தேன்" என்று கூறினார். பின்னர் சிவயோக சமாதியில் நிலைத்து தேவ விமானத்தில் ஏறிச் சிவலோகத்தை அடைந்து அங்கு இனிது வீற்றிருந்தார்.

அவருடைய முதுகுத் தண்டை எடுத்துத் தேவதச்சன் ஒரு புதிய வச்சிரப்படையாகச் செய்து அதைத் தேவேந்திரன் கையில் கொடுத்தான். அதனைப் பெற்ற இந்திரன் விருத்திரா சூரனையடைந்து அவனை எதிர்த்துப் போரிட்டான். இருவருக்கும் கடுமையான போர் நடந்தது. இந்திரன் வச்சிராயுதத்தை எடுத்தான். அதை வீசத் தொடங்குமுன் அஞ்சிய விருத்திராசூரன் கடலில் சென்று மறைந்து கொண்டான். இந்திரனும் கடலில் மூழ்கி அங்குத் தேடினான். எங்கும் காணக் கிடைக்காமையால் நான்முகனை அடைந்து நடந்த செய்தியைக் கூறினான். நான்முகன், "இச் செய்தியை அகத்திய முனிவனிடம் கூறுவாயாக" என்றான்.

இந்திரன் உடனே அங்கிருந்து புறப்பட்டு அகத்திய முனிவர் வாழும் பொதிய மலையை அடைந்தான். நடந்த விஷயத்தை அகத்தியரிடம் கூறினான். அகத்தியர் அக்கடல் முழுவதையும் உளுந்தளவாகக் குறுக்கி அதனைக் குடித்து விட்டார். கடலில் உள்ள எல்லாப் பொருள்களும் வெளித் தோன்றின. நீர் வாழ் இனங்கள் யாவும் துன்புற்றன.

விருத்திராசூரன் ஒரு மலையின் உச்சியில் தவம் செய்து கொண்டிருந்தான். கடல் நீரை அகத்தியர் குடித்து விட்டதால் வெளிப்பட்ட அவ்விருத்திராசூரனை இந்திரன் தன் வச்சிரப் படையால் துண்டித்துத் தலையை அறுத்து வீழ்த்தினான். தேவேந்திரனை மீண்டும் பிரமகத்தி தோஷம் பிடித்துக் கொண்டது. அத்தோஷம் அவனை மிகவும் துன்பப் படுத்தியது. இந்திரன் ஒரு தடாகத்தில் உள்ள தாமரைத் தண்டின் நூலினுள்ளே ஒளிந்து கொண்டான். சுவர்க்கலோகம் தன் பொலிவு குன்றியது.

அப்போது நிலவுலகில் ‘நகுடன்’ என்ற ஓரரசன் பரி வேள்வி (அசுவமேதயாகம்) செய்து வந்தான். தங்களுக்கு அரசன் இல்லாத குறையை அறிந்த தேவர்கள் அந்த ‘நகுடனை’ தங்கள் அரசனாக நியமித்துக் கொண்டார்கள். அந்நகுடன் அரசனானவுடன் இந்திராணியைச் சந்திக்க வேண்டும் என்று விரும்பினான். ஏழு முனிவர்கள் சுமந்து செல்ல விரைந்து பல்லக்கில் சென்று கொண்டிருந்த நகுடன் “இன்னும் விரைந்து செல்லுங்கள்” என்று முனிவர்களை அதட்டினான். அதனால் கோபமடைந்த அகத்திய முனிவர் அவனை “பாம்பாகக் கடவாய்” என்று சபித்தார். அந்நகுடன் பாம்பாக மாறினான்.

அதன் பின்னர் தங்களுக்கு மீண்டும் அரசனில்லாத குறையை எண்ணிய தேவர்கள் வியாழ பகவானை அடைந்து வேண்டித் துதித்தனர். வியாழ பகவான், தடாகத்தில் மறைந்திருந்த இந்திரனைக் கூவியழைத்தார். இந்திரன் வெளியே வந்து தன் குருவை வணங்கினான். வியாழ

பகவான், இந்திரன் பழியைத் தீர்க்க எண்ணி அவனைப் பூவுலகிற்கு அழைத்து வந்தான். வியாழ பகவானின் உத்தரவால் கங்கை முதலான தீர்த்தங்களில் நீராடினான். பின்னர் கடம்பவனத்தின் அருகில் சென்றபோது இந்திரனைப் பீடித்திருந்த பிரமகத்தி தோஷம் அவனை விட்டு நீங்கியது.

அதனைக் கண்டு அளவில்லாத மகிழ்வடைந்த வியாழ பகவான் இந்திரனை நோக்கி, "இங்கே புண்ணிய தலமும் தீர்த்தமும் உள்ளது. அது நமக்குக் கிடைக்க வேண்டும். நீ அவற்றை அறிய ஆவன செய்க." என்றான். அதனை அறிய வேண்டி இந்திரன் நாலாப் பக்கங்களிலும் தன் தூதரை அனுப்பினான். அதனைத் தேடிச்சென்ற தூதர்கள் திரும்பி வந்து இந்திரனிடம், "அரசே! தெய்வத் தன்மை வாய்ந்த அதிசயம் மிக்க சிவலிங்கம் ஒன்று தூய தீர்த்தக்கரையில் உள்ள கடம்ப மரத்தின் நிழலில் உள்ளது" என்றனர். அதனைக்கேட்டு மகிழ்வடைந்த இந்திரன் அத் தூதர்கள் காட்டிய வழியில் சென்று அச் சிவலிங்கத்தைத் தன் ஆயிரம் கண்களால் கண்டு மகிழ்ந்து வணங்கினான்.

பிறகு தேவ தச்சனை அழைத்து ஒரு விமானம் அமைக்குமாறு ஏவினான். சிவபெருமானைப் பூசிக்க மலர்களைத் தேடினான். அத் தீர்த்தத்தில் மலர் இல்லாமை கண்டு மிகவும் வருந்தினான். அப்போது இறைவன் அருளால் அங்குப் பொற்றாமரை மலர்கள் மலர்ந்தன. அதனைக் கண்ட இந்திரன் மகிழ்ந்து அத் தீர்த்தத்திற்குப் பொற்றாமரைத் தீர்த்தம் என்று பெயரிட்டான். அதில் உள்ள மலர்களைப் பறித்துத் கொண்டு சிவலிங்கப் பெருமான் சந்நிதியை அடைந்தான். சுற்றியுள்ள காடுகளை வெட்டித் தூய்மை செய்தான்.

கதிரவன் ஒளி அச்சிவலிங்கத்தின் மேல் படுவதைக் கண்டு தன் வெண் கொற்றக் குடையால் நிழல் செய்ய எண்ணினான். அப்போது விண்ணினின்று ஒரு மாணிக்க விமானம் இறங்கி வந்தது. தேவ தச்சனால் உண்டாக்கப்பட்ட

அவ்விமானம் எட்டு யானைகளும், முப்பத்து இரண்டு சிங்கங்களும் அறுபத்து நான்கு சிவகணங்களும் தாங்கி இருந்தன. அவ்விமானத்தைப் பெருமானுக்குச் சாத்திய இந்திரன், வானுலகத்தில் இருந்து வழிபாட்டிற்குரிய பொருள்களைக் கொண்டு வந்து, பொற்றாமரைத் தீர்த்தத்தில் நீராடி வழிபாடு செய்தான்.

அவன் போற்றுதலுக்கு மகிழ்வடைந்த இறைவன் லிங்கத்துள் இருந்து வெளிப்பட்டு, "உன்னுடைய விருப்பம் யாது?" என்று கேட்டார். அதற்கு இந்திரன், "அடியேன், தேவரீரின் திருவருளால் என் கொலைப் பாவம் நீங்கப் பெற்றேன். தங்களைப் பூசிக்கும் பாக்கியமும் பெற்றேன். இது போன்றே தினமும் பூசை செய்து நினது தொண்டருள்ளே அடியேனும் ஒரு தாழ்ந்த தொண்டனாவேன். அதுவே நான் வேண்டுவது" என்றான்.

உடனே இறைவன், "அன்பனே! நீ சித்திரை மாதத்தில் பௌர்ணமி அன்று வந்து வழிபட்டுச் செல்வாயாக! இதனால் ஆண்டு முழுவதும் பூசை செய்த பலன் கிடைக்கும். நீ சுவர்க்கலோகம் அடைந்து தற்போது இன்பம் துய்த்து வரக்கடவை. முடிவில் உனக்கு வீடு பேற்றை அருளுவோம்" என்று கூறி லிங்கத்துள் சென்று மறைந்தார்.

இதனைக் கேட்டு இந்திரன் பெருமகிழ்ச்சி அடைந்தான். கீழே விழுந்து வணங்கி எழுந்து ஆனந்தக் கண்ணீர் பெருக நின்றான். பின்னர் தேவர்களும் தன் குருவான வியாழ பகவானும் சூழப் பொன்னுலகை அடைந்தான். அவ்வுலகில் இந்திராணியுடன் அரசு வீற்றிருந்து நாளும் சோம சுந்தரக் கடவுளை மனத்தில் தியானித்து வாழ்ந்து வந்தான்.

2. வெள்ளை யானை சாபம் தீர்த்த படலம்

துருவாச முனிவர் என்பவர் காசியில் தம் பெயரினால் ஒரு சிவலிங்கம் ஸ்தாபித்து வணங்கி வந்தார். அப்போது சிவபெருமான் தனது திருவருளால் தன் முடியிலிருந்து பொன்னிறம் வாய்ந்த தாமரை மலர் ஒன்றை கீழே விழச் செய்தார். அதைத் துருவாச முனிவர் தம் இருகரங்களால் ஏந்தி எடுத்துக் கொண்டு சுவர்க்க லோகத்திற்குச் சென்றார்.

அப்போது இந்திரன் அசுரர்களை அழித்து வெற்றி மாலை சூடி வெள்ளை யானையின் மீது பவனிவந்து கொண்டிருந்தான். அதைக் கண்டு மகிழ்ந்த துருவாச முனிவர் அவனுக்கு ஆசிமொழிக் கூறித் தன் கையில் உள்ள தாமரை மலரைக் கொடுத்தார். தேவேந்திரன் செல்வச் செருக்கால் அதனை மதியாது தம் ஒரு கையால் நீட்டி அம்மலரை வாங்கி யானையின் மேல் வைத்தான். அவ்வெள்ளை யானை அம்மலரைக் கீழே தள்ளித் தன் காலால் மிதித்தது. இதனைக் கண்ட துருவாசர் மிக்க கோபம் கொண்டார்.

“அற்ப செல்வத்தினால் செருக்குக் கொண்ட இந்திரனே! உன்னுடைய முடி, பாண்டியருள் ஒரு வீரனுடைய திகிரியினால் சிதறக் கடவது” என்று சபித்தார். இதனைக் கேட்ட தேவர்கள் நடுநடுங்கினர். துர்வாச முனிவரின் காலில் விழுந்து “ஐயனே! எம் அரசனும் வெள்ளை யானையும் குற்றம் செய்தலால் சாபமிட்டீர்! இச்சாபத்தை நீக்கியருள வேண்டும்” என்று வேண்டினர்.

துருவாச முனிவர் தேவர்கள் பொருட்டு மனம் இறங்கி, “சிவபெருமான் அருளிய மலரை நிந்தித்ததனால் உண்டான சாபம் பரிகாரத்தால் நீங்காது. ஆயின், இந்திரனுடைய தலை அளவாக வந்த குற்றம் முடி அளவாகப் போகக் கடவது. வெள்ளை யானை காட்டானையாக மாறி நூறு ஆண்டு

திரிந்து பின்பு பழைய நிலையை அடைவதாக" என்று வேறு சாபம் அருளினார்.

வெள்ளை யானை சாபத்தின் காரணமாக மண்ணுலகம் வந்து காட்டானையாக மாறிக் கரிய நிறம் அடைந்து திரியலாயிற்று. பல இடங்களில் சுற்றித் தெய்வத் தன்மை மிக்க கடம்பவனத்தில் புகுந்தது. பொற்றாமரைத் தடாகத்தைக் கண்டது. அதற்குள் நூறாண்டுகள் கழியவே, முன்னை அறிவு தோன்றத் தடாகத்தில் நீராடியது. உடனே காட்டானை வடிவு நீங்கத் தன் பழைய வடிவம் பெற்றது.

துதிக்கையால் பொற்றாமரை நீரை முகந்து வந்து இறைவனை அபிடேகம் செய்தது. உடனே மகிழ்வடைந்த இறைவன் சிவலிங்கத்தினின்றும் வெளிப்பட்டு "உனக்கு வேண்டியது யாது?" என்று கேட்டார். வெள்ளை யானை, "எந்தையே! உம்மை அடையப் பெற்ற எனக்கு ஒரு குறையுமில்லை. இந்த விமானத்தைத் தாங்கும் எட்டு யானைகளோடு நானும் ஒன்பதாவது யானையாகி இவ்விமானத்தை முதுகில் தாங்க வேண்டும் என்று என்மனம் விரும்புகின்றது. ஆகையால் அதனை அருள வேண்டும்" என்று வேண்டியது.

சோம சுந்தரக் கடவுள், "தேவேந்திரன் என்னிடம் மிகுந்த அன்பு பூண்டவன். ஆதலால் நீ அவனைச் சுமந்து செல்வதே எனக்கு மகிழ்வு அளிப்பதாகும்." என்று கூறிப் பல வரங்கள் நல்கி விடை கொடுத்தனுப்பினார். பின்னர் வெள்ளை யானை வணங்கி விடை பெற்றுச் சென்று அம்மூர்த்திக்கு மேற்குத் திசையில் தன் பெயரால் ஐராவதத் தீர்த்தம் என்ற தீர்த்தத்தையும், ஒரு மூர்த்தியையும் விநாயகப் பெருமானையும் பிரதிட்டை செய்து அன்போடு பூசை செய்து வந்தது.

இதனை அறிந்த இந்திரன் தன் ஏவலர்களை அனுப்பி வெள்ளை யானையை வரச் சொன்னான். ஆயின் வெள்ளை

யானை "வருவேன்" என்று சொல்லி ஏவலர்களை அனுப்பிவிட்டு அம்மூர்த்திக்குக் கீழ்த்திசை வந்து 'ஐராவதபுரம்' என்னும் ஒரு நகரைத் தம் பெயரால் உண்டாக்கி, தன் தலைவன் இந்திரன் பெயரால் 'இந்திரேச்சுரர்' என்று சிவலிங்கத்தை ஸ்தாபிதம் செய்து பூசை செய்து கொண்டிருந்தது.

நீண்ட நாட்களாகியும் தன் யானை வராமையைக் கண்ட இந்திரன் மீண்டும் தன் ஏவலர்களை அனுப்பி விரைந்து வரச் சொன்னான். உடனே வெள்ளை யானையும் சுவர்க்க லோகத்தை அடைந்தது. இந்திரனைக் கண்டு வணங்கியது. மண்ணுலகில் நடந்த நிகழ்ச்சிகள் எல்லாவற்றையும் கூறியது.

அவ்வெள்ளையானை உண்டாக்கிய இந்திரேச்சுரரை வணங்குவோர் இம்மையில் எல்லாப் பொருள்களையும் பெறுவர். மறுமையில் பதினான்கு தேவேந்திரப் பட்டம் பெற்றுச் சொர்க்க போகத்தில் திளைப்பர். பின்னர் வீடுபேற்றை அடைவர்.

3. திரு நகரங் கண்ட படலம்

கடம்ப வனத்தின் கீழ்த்திசையில் 'மணவூர்' என்னும் நகரைக் குலசேகரன் என்ற பாண்டிய மன்னன் ஆண்டு வந்தான். அவ்வூரில் சிவபெருமானிடம் மிகுந்த அன்புபூண்ட 'தனஞ்செயன்' என்னும் வணிகன் ஒருவன் இருந்தான். அவ்வணிகன் மேற்குத் திசையில் உள்ள பல ஊர்களில் வணிகம் செய்து விட்டுக் கடம்ப வனத்தின் வழியாகத் தன் ஊருக்குத் திரும்பி வந்து கொண்டிருந்தான். இரவு நேரம் ஆகி விட்டதால் அவன் மிகவும் வருந்திக் கொண்டிருந்தான். அப்போது எட்டு யானைகளால் தாங்கப்படும், சூரியன்

போல் ஒளிவீசும் விமானத்தை நேரில் கண்டான். அதில் எழுந்தருளியுள்ள சொக்க நாதப் பெருமானைக் கண்டு மகிழ்ந்தான். வணங்கி இரவுப் பொழுதை அங்கேயே கழித்தான்.

அன்று இரவு சோமவாரம் ஆதலால் அங்கே தேவர்கள் வந்து இரவு முழுவதும் சொக்கலிங்க மூர்த்திக்கு நான்கு யாமங்களிலும் விசேட பூசை செய்தனர். அதனை வணிகன் கண்டான். இரவு விடிந்தது. தனஞ்செயன் இறைவனை வணங்கி விடைபெற்றுத் தன் ஊர் வந்து சேர்ந்தான். அவன் நேரே அரசனின் மாளிகையை அடைந்து அரசனிடம் இரவு நடந்ததைத் தெரிவித்தான். அதைக்கேட்ட குலசேகர பாண்டியன் மிக்க அதிசயம் அடைந்தான். இறைவன் திருவருளை எண்ணி மகிழ்ந்தான்.

அன்று பகல் கழிந்து இரவு வந்தது. அன்று இரவில் பாண்டியன் கனவில் இறைவன் ஒரு சித்தராய்த் தோன்றினார். சித்தர், "பாண்டியனே! கடம்பவனத்தில் உள்ள காட்டை அழித்து அழகிய நகரமாகச் செய்வாயாக!" என்று கூறி மறைந்தருளினார். குலசேகர பாண்டியன் திடுக்கிட்டு விழித்தெழுந்து விடியும் வரை காத்திருந்தான். மறுநாள் அமைச்சர்களையும் தவத்தில் சிறந்த முனிவர்களையும் அழைத்துத் தான் கனவில் கண்டவற்றை அவர்களிடம் கூறினான். பின்னர் அவர்களுடன் ஆராய்ந்து மேற்கு நோக்கிப் புறப்பட்டான்.

பாண்டியன் தன் அமைச்சர்களோடு பெரிய கடம்ப வனத்தை அடைந்தான். பொற்றாமரைத் தடாகத்தில் நீராடினான். பொன் விமானத்தில் எழுந்தருளியுள்ள சோம சுந்தரக் கடவுளைத் தரிசித்தான். பாண்டியன் ஏவலால் அமைச்சர்கள் பல பணியாளர்களை நாலாப்பக்கமும் இருந்து அழைத்து வரச் செய்தனர். காடுகளை வெட்டித் திருத்தினர். பெரிய நிலங்களைச் செப்பஞ் செய்தனர். நகரம்

உண்டாக்குவது எப்படி என்று பாண்டிய மன்னன் ஆராய்ந்து கொண்டிருந்தான்.

அப்போது இறைவர் ஒரு சித்தராய் அங்கு எழுந்தருளி வந்தார். பாண்டியன் எழுந்து சென்று வணங்கி வரவேற்று அச்சித்தர் அமர ஆசனம் கொடுத்தான். உடனே சித்த மூர்த்திகள் நாம் முன்னே கூறியருளிய சிவாகமத்தின் வழியே தோன்றிய சிற்ப நூல் முறைப்படி ஆலயமும் மண்டபமும் கோபுரமும் நகரமும் இன்னவாறு செய்தல் வேண்டும் என வகுத்துரைத்து மறைந்தருளினார்.

சித்த மூர்த்திகள் கூறிய வண்ணமே திருக்கோயில், திருநகரம் போன்றவற்றைப் பாண்டியன் உண்டாக்கினான். இவ்வாறு பாண்டியன் அந்நகரை உண்டாக்கிய பின்னர் அந்நகருக்குச் சாந்தி செய்யக் கருதினான். அப்போது சோம சுந்தரக் கடவுள் தமது சடையில் உள்ள சந்திரக் கலையின் புத்தமுதத்தைச் சிந்தினார். அது அந்நகர் முழுவதையும் அமிர்தமயமாக்கித் தூய்மை செய்தது. அவ்வமுதம் நல்ல மதுரமாகிய தன்மையினாலே அந்நகருக்கு மதுரா நகர் எனப் பெயர் கூறினர்.

பின்னர் குலசேகரபாண்டியன் மதுரை மாநகரின் கிழக்குத் திசையில் ஐயனாரையும், தென் திசையில் சுத்த மாதரையும் மேற்கில் திருமாலையும், வடக்கில் பத்ரகாளியையும் காவலாக நிறுவினான். சிவாகம முறைப்படி பூசை செய்யக் காசிப்பதியில் இருந்து முனிவர்களையும், பிராமணரையும் அழைத்து வந்தான். இவ்வாறு குலசேகரபாண்டியன் பாண்டிய நாட்டிற்கு ஒரு திலகம் பதித்தாற் போன்று நாட்டை வளப்படுத்தி சிறப்புடன் ஆண்டான். அவனுக்கு மலயத்துவசன் என்னும் மகன் பிறந்தான். அவனிடம் நாட்டை ஒப்படைத்து விட்டு, சிவபூசையில் ஈடுபட்டுக் குலசேகரபாண்டியன் சிவத்துடன் இரண்டறக் கலந்தான்.

4. தடாதகைப் பிராட்டியார் திருவவதாரப் படலம்

மலயத்துவசபாண்டியன் மனுநூலில் கூறியபடி சிறப்புடன் ஆட்சி புரிந்து வந்தான். சூரிய குலத்தில் தோன்றிய சூரசேனன் என்ற சோழனுடைய மகளான "காஞ்சன மாலை" என்பவளை மணம் செய்து கொண்டான். மலயத்துவச பாண்டியன் மகப் பேறின்றிப் பல நாள் வருந்தினான். பின்னர் அசுவ மேத யாகம் செய்யத் தொடங்கித் தொண்ணூற்றொன்பது யாகங்களைச் செய்தான்.

அப்போது இந்திரன், "இப்பாண்டியன் நூறாவது யாகத்தைச் செய்து முடிப்பானாயின், நொடிப் பொழுதிலே எனது பட்டம் மாறிவிடுமே" என்று கருதிப் பாண்டியனிடம் சென்று, "நீ மகப்பேற்றை விரும்பினாய். அதனால் புத்திர காமேஷ்டி யாகம் செய்வாய்" என்று கூறிவிட்டுத் தன்னுலகம் அடைந்தான். மலையத்துவசப் பாண்டியன் இந்திரனின் வேண்டுகோளின்படி புத்திர காமேஷ்டி யாகம் செய்யத் தொடங்கினான்.

யாகத் தீயினை வளர்த்து ஆகுதி செய்தான். அப்போது வேள்விக் குண்டத்தில் இருந்து, எல்லா உலகங்களையும், உயிர்களையும் பெற்றவளாகிய உமையம்மையார் மூன்று தனங்களையுடைய ஒரு பெண் மகவாக மூன்று வயது தோற்றத்துடன் தோன்றி எழுந்து வந்து நின்றார். தன் தாயாகிய காஞ்சனமாலையின் மடியில் போய் அமர்ந்தார்.

இதனைக் கண்டு மலயத்துவச பாண்டியன் துன்பம் அடைந்தான். தான் விரும்பியபடி ஆண் மகவாக இல்லாமலும் தோன்றிய பெண் மகவும் மூன்று தனங்களுடன் இருந்ததால் அவன் பெரிதும் வருந்தினான். அப்போது வானின்று ஒரு திருவாக்கு, "மன்னனே உன் பெண் மகவுக்கு புதல்வருக்குச் செய்வது போல் சடங்குகள் யாவும் செய்து 'தடாதகை'

என்று பெயரிட்டு முடி சூட்டக் கடவாய். இப் பெண்ணுக்கு ஏற்ற கணவன் வரும் போது ஒரு தனம் தானே மறைந்து விடும். ஆதலால் மனம் கலங்காதே" என்று எழுந்தது.

அந்த வானொலிச் செய்தியைக் கேட்ட மலயத்துவசப் பாண்டியன் பெரிதும் மகிழ்ந்தான். மகள் பிறந்த மகிழ்வை அரச முறைப்படி கொண்டாடி மகிழ்ந்தான். தடாதகைப் பிராட்டியார் மழலைமொழி பேசும் சிறுமியரோடு விளையாடினார். சிற்றில் கட்டினார். சிறு சோறு சமைத்தார். வேதம் முதலிய அறுபத்து நான்கு கலைகளையும் நன் முறையில் கற்றுத் தெளிந்தார். படைக்கலப் பயிற்சியில் வல்லவரானார். உரிய பருவம் வந்தடைந்தார்.

அதைக் கண்ட பாண்டியன் மகிழ்வடைந்து தன்னுடைய 'சுமதி' என்னும் அமைச்சரோடு கலந்தாலோசித்து பிராட்டியாருக்குத் திருமுடிசூட்டி மகிழ்ந்தான். சில நாட்களில் மலையத்துவச பாண்டியன் விண்ணுலகை அடைந்தான். தந்தைக்குச் செய்ய வேண்டிய இறுதிக் கடன்களைச் செய்து முடித்த பிராட்டியார். உலகமெல்லாம் ஒரு குடைக்கிழ்ச் சிறப்புற ஆட்சி செய்தார்.

அவருடைய ஆட்சிக்காலத்தில் அறுபத்து நான்கு கலைகளும் சிறப்புற ஓங்கின. பூசைகள் நியமப்படி நடைபெற்றன. தேவ உலகில் உள்ளவர்களும், மண்ணுலகில் உள்ளவர்களும் பிராட்டியாருக்குப் பணிவிடை புரிந்தனர். தடாதகைப் பிராட்டியார் கன்னிப் பருவத்தில் முடிசூடி நாட்டை ஆண்டமையால் பாண்டி நாடு 'கன்னி நாடு' என்னும் பெயர் பெற்றது.

இச் செய்தியை அகத்திய முனிவர் பிற முனிவர்கட்குக் கூறி வந்தபோது, அம்முனிவர்கள், "பிராட்டியார், இறைவனின்றும் தனித்து வந்து பூமியில் தோன்றக் காரணம் யாது?" என்று கேட்டனர். அதைக் கேட்ட அகத்திய முனிவர் அதற்குரிய காரணத்தைக் கூறத் தொடங்கினார்.

விச்சுவாவசு என்னும் பெயருடைய வித்தியாதரனுக்கு 'விச்சாவதி' என்னும் பெண் ஒருத்தி இருந்தனள். அவள் அம்பிகையிடம் மிக்க ஈடுபாடு கொண்டு அவளைத் துதிக்க எண்ணி, 'அவ்வுமையை வழிபடுதற்கேற்ற சிறந்த தலம் யாது?' என்று தன் தந்தையிடம் கேட்டாள். அதற்கு விச்சுவாவசு "மதுரை என்னும் சிறப்பான பதியே அதற்கு ஏற்ற இடம்" என்று கூறினான். இதனைக் கேட்ட விச்சாவதி தந்தையிடம் விடை பெற்றுக் கொண்டு மதுரை நகரை அடைந்தாள்.

ஆண்டு முழுவதும் பலவிதமான நோன்பியற்றித் தவம் புரிந்தாள். தை மாதத்தில் அங்கயற் கண்ணம்மையின் சந்நிதியை அடைந்து வணங்கினாள். யாழைக் கையில் எடுத்து இனிய இசையைப் பாடினாள். அப்போது மீனாட்சி அம்மையார் மூன்று வயதுடைய ஒரு பெண் குழந்தையாய் நேரே தோன்றி, "விச்சாவதி! நீ யாது விரும்பினாய்?" என்று கேட்டார். விச்சாவதி, "தாயே! நினது திருவடித் தாமரையில் என்றும் நீங்காத அன்பு வேண்டும்" என்றாள்.

உடனே அம்மையார், "இன்னும் வேண்டுவது யாது? சொல்" என்றாள். உடனே விச்சாவதி, "அம்மையே! இப்போது காட்சி தருகின்ற குழந்தை திருவுருவத்திலேயே அடியேளிடத்தில் தோன்றிக் கருணை கூர்ந்திருக்கும்படி திருவருள் புரிய வேண்டும்" என்று வேண்டினாள். உடனே மீனாட்சியம்மையார் அதற்கிசைந்து, "பாண்டியர் மரபிலே மலயத்துவசன் என்பவன் தோன்றுவான். நீ அவனுடைய மனைவியாய் வருவாய். அப்போது நாம் உம் தவப்புதல்வியாய் வருவோம்" என்று அருள்புரிந்தார். இதுவே மலயத்துவசனின் மகளாய்த் தோன்றிய வரலாறு என்று அகத்தியர் முனிவர்களுக்குக் கூறினார்.

5. திருமணப் படலம்

உமாதேவியார் இளம் கன்னியாக இருந்து மனு நூல் முறைப்படி அரசாட்சி செய்து வந்தார். அவருக்குத் திருமணம் செய்யும் காலம் வந்து எய்தியது. அவர் தாயாகிய காஞ்சனமாலை தன் மகளுக்குத் திருமணப் பேறு இன்னும் கூடவில்லையே என்று வருந்தத் தொடங்கினாள். அதை அறிந்த உமாதேவியார், "தாயே! நீ வருந்தற்க, நான் சென்று எட்டுத் திக்குகளிலும் இப்பூ மண்டலத்திலும் என்னுடைய வெற்றியை நாட்டி வருகிறேன். அப்போது நீ எண்ணிய எண்ணம் நிறைவேறும் நீ இங்கேயே இருப்பாயாக" என்று கூறி விரைந்து எழுந்து சென்றார்.

தடாதகைப் பிராட்டியார் தேரில் ஏறினார். அரசர்களும் அமைச்சர்களும் அவரைத் தொடர்ந்தனர். வெற்றி முரசு கொட்ட பிராட்டியார் புறப்பட்டுச் சென்றார். நால்வகைப் படைகளும் அவரைப் பின் தொடர்ந்து சென்றன. வடநாட்டில் உள்ள கயபதி, துரகபதி, நரபதி முதலான அரசர்களை அம்மையார் வென்று அவர்களின் செல்வங்களை எல்லாம் கவர்ந்தார். அம்மையார் இந்திர உலகம் அடைந்தார். இதை அறிந்த இந்திரன் தன் ஆற்றல் அழிந்து போர்க்களம் வராமலே நீங்கினான். இந்திரனின் செல்வங்களைக் கவர்ந்து கொண்ட அம்மையார் கயிலாயமலையை அடைந்தார்.

அம்மையார் கயிலைமலையை அடைந்தவுடன் அங்குள்ள காவலர்கள் ஓடிச்சென்று திருநந்தி தேவரை அடைந்து வணங்கி இச் செய்தியைத் தெரிவித்தனர். அவர் பூதகணங்களை ஏவினார். பூதகணங்களும் பிராட்டியாருடைய சேனையும் ஒன்றோடொன்று எதிர்த்து போரிட்டன. இருதிறத்துப் படைகளும் கடுமையாகப் போரிட்டன. முடிவில் பூதகணங்கள் வலிமை இழந்து புறங்காட்டி ஓடின.

இதை அறிந்த திருநந்தி தேவர் கைலாசபதியாகிய சிவபெருமானை அடைந்து நடந்தவற்றை அவரிடம் அறிவித்தார். சிவபெருமான் புன்னகை புரிந்து 'பினாக' வில்லையும் படைக்கலங்களையும் திருக்கரத்தில் கொண்டு இடபவாகனத்தில் ஏறிப் போர்க்களத்தை அடைந்தார். அங்குப் பெண் சிங்கத்தைப் போல் நின்ற அம்மையாரை நேரில் கண்டார். அம்மையாரும் பெருமானை நேரில் கண்டார். கண்ட அளவில் அவருடைய ஒரு தனம் மறைந்தது. உடனே உள்ளத்தில் நாணம், மடம், அச்சம் வந்து எய்த முன்னை அன்பு குடிகொண்டது. தலைகுனிந்து வெட்கத்துடன் நின்றருளினார்.

அக்காட்சியைக் கண்ட பேரறிவுடைய மந்திரியாகிய 'சுமதி' என்பவன் தான் முன்னாளில் கேட்ட அசரீரியை மனதில் கொண்டு அம்மையாரை வணங்கி, "தாயே, சிவபெருமானாகிய இப்பேரழகனே தங்கள் மணவாளன்" என்று கூறினான். அதைக் கேட்ட பிராட்டியார் பேரன்பு பெருக நின்றார்.

அப்போது கருணை வடிவாகிய சிவபெருமான், "நீ திக்கு விசயத்தின் பொருட்டு என்று புறப்பட்டாயோ அன்று முதல் யாமும் நம்முடைய மதுரைப் பதியைவிட்டுப் புறப்பட்டு உன்னைச் சற்றும் பிரியாது தொடர்ந்து வந்தோம். உன்னை வருகின்ற சோமவாரத்தன்று நல்ல முகூர்த்தம் கூடிய பொழுதிலே திருமணம் புரிய வருவோம். நீ தற்போது மதுரைக்குச் செல்வாயாக" என்றார்.

இவ்வாறு கூறிய பெருமானிடம் தம் அன்பையும் உயிரையும் ஒருங்கு வைத்த பிராட்டியார், தம் தோழியரும் படைகளும் சூழ மதுரைக்குத் திரும்பினார். பிறகு அமைச்சர்கள் திருமண ஓலை எழுதி அனுப்பி எல்லா நாட்டினர்க்கும் தெரிவித்தனர். மணமுரசினை யானையின் மேல் ஏற்றி மதுரை நகரமெங்கும் இச்செய்தியைச் சாற்றுவித்தனர் இதை அறிந்த நகர மக்கள் தங்கள்

இல்லங்களையும், வீடுகளையும் அலங்காரம் செய்தனர். மகிழ்வோடு ஒருவரை ஒருவர் விசாரித்துத் தெரிந்து கொண்டனர்.

பொன்னாலும் நவமணிகளாலும் அழகிய மண மண்டபத்தை அமைத்தார்கள். திருமண வேள்வி புரியும் இடத்தையும் உண்டாக்கி அலங்கரித்தனர். தேவர்களும் சிவனடியார்களும் அமர்வதற்குரிய இடங்களை அமைத்து அதனையும் அலங்கரித்தனர். திருமண மண்டபத்தில் பொற்பீடம் ஒன்று அமைத்தனர். திருமணத்தைக் காணப் பல நாட்டு அரசர்களும், திருமால் முதலிய தேவர்களும் உத்திரராதியோரும், வந்து சேர்ந்தனர்.

தேவர்கள் அனைவரும் கைலைமலையை அடைந்து 'அர அர' என்று துதித்தனர். நந்திதேவரின் அனுமதியுடன் சிவபெருமானைக் கண்டு தரிசித்து ஆசி பெற்றனர். அனைவருக்கும் திருவருள் பாலித்த பெருமான் பின்னர் அழகான மணக்கோலம் கொண்டார். குபேரன் இறைவருக்குத் திருமணக் கோலம் செய்துவிட்டான். பின்னர் குண்டோதரன் சந்திர வட்டக் குடைதாங்க இடபவாகனத்தின் மேலேறி மதுரை மாநகரின் புறத்தே வந்தருளினார். திருமால் நான்முகன் முதலான தேவர்கள் அனைவரும் அவரைத் தொடர்ந்து மதுரையை அடைந்தனர்.

பெருமான் எழுந்தருளி இருப்பதை அறிந்த சுமதி முதலிய அமைச்சர்கள் சென்று பெருமானை வணங்கி அவரை வீதியில் வலமாக அழைத்து வந்தனர். பல நாட்டுப் பெண்கள் அவரைக் கண்டு தரிசித்தனர். பின்னர் அந்தணர்கள் மங்கல வாழ்த்துக் கூற அரண்மனையினுள்ளே எழுந்தருளினார்.

அப்போது காஞ்சனமாலை பெருமானை அடைந்து, "தடாதகைப் பிராட்டியாரைத் திருமணம் செய்து பாண்டிய நாட்டையும் ஆள வேண்டும்" என்று விண்ணப்பம் செய்தாள். அதற்குச் சிவபெருமான் திருவுளம் இசைந்து இசைக்கருவிகள்

முழங்கத் திருக்கல்யாண மண்டபத்தை அடைந்தார். நான்மறைகள் முழங்க சிங்காதனத்தில் ஏறி வீற்றிருந்தருளினார்.

பின்னர் அங்குள்ள பெண்கள் பிராட்டியாரை அழைத்து வந்து திருமணக் கோலம் செய்தனர். உடன் அன்பு நிறைந்த சிவபெருமான் பக்கத்தில் சென்று அமர்ந்தருளினார். திருமால் சிவபெருமானுடைய சிவந்த திருக்கரத்திலே தடாதகைப் பிராட்டியாரின் திருக்கரத்தினை வைத்து வேதமந்திரங்களைச் சொல்லித் தாரா தத்தம் செய்தார். தேவர்கள் பூமாரி பொழிந்தனர். முனிவர்கள் 'அர அர' என்று தோத்திரம் செய்தனர். தேவர்களும் முனிவர்களும் குங்கும நீரில் கலந்த முத்துப் போன்ற அரிசியை வீசி இன்ப வெள்ளத்தில் அழுந்தினர்.

நான்முகன் நெய்யைக் கொண்டு தீயை வளர்த்தனன். செந்தீ தன் நாக்கை உயர்த்தி ஓங்கி வளர்ந்தது. நான்கு வேதங்களும் நின்று முழங்கின. சங்கங்கள் ஆர்த்தன. முரசங்கள் ஒலித்தன. பிரம்மதேவன் திருமணச் சடங்குகளை வேதமுறைப்படி செய்து முடித்தான். சிவபெருமான் தடாதகைப் பிராட்டியாருக்குத் திருமங்கலநாணைப் பூட்டித் திருக்கரம் பற்றியருளினார். அதைக் கண்டு உலகம் உய்யும் வண்ணம் மறைகள் முழங்கின. மகளிர் வாழ்த்துக் கூற திருமணம் இனிது நிறைவேறியது. பின்னர் இறைவர் பிராட்டியாரோடு திருமண அறையில் புகுந்தருளினார்.

திருமண அறையில் இருந்து வெளிவந்த இறைவர் நான்முகன், திருமால் முதலிய தேவர்களுக்குப் பல வரிசைகளைக் கொடுத்து அவர்களுக்கு விடை கொடுத்து அனுப்பி வைத்தார். பின்னர் பாண்டிய மன்னனாய்த் திருக்கோலம் கொண்டு அரசு வீற்றிருந்தருளினார். சங்குகன்னன் முதலிய சிவகணத் தலைவர்கள் அரசர் பணி செய்வதற்கு ஏற்ற மானுட வடிவம் கொண்டு அரச ஏவலில் நின்றார்கள்.

பின்னர் 'நடுவூர்' என்னும் திருநகரம் ஒன்றை உண்டாக்கினார். அதிலே சிவாகம முறைப்படி கோயில் எடுத்தார். அருள்வடிவாகிய சிவலிங்கத்தை நிலை பொறுத்தி 'இம்மையே நன்மை நல்கும் இறை' என்னும் திருப்பெயர் இட்டு முறைப்படி பூசித்தார். கடம்பவனத்தில் உள்ள சோமசுந்தரக் கடவுளை மூன்று காலங்களிலும் பூசித்தார். உலகம் முற்றும் தன் சிறப்பான செங்கோலைச் செலுத்தி அரசாண்டார். பாண்டியர் கோலம் பூண்டு அரசாண்ட எம்பெருமானின் கருணைத் திறத்தை எடுத்தியம்ப வல்லார் யார்?

6. வெள்ளியம்பலத் திருக்கூத்தாடிய படலம்

சந்திரன் மரபின் மாணிக்க விளக்காகிய தடாதகைப் பிராட்டியாரை, சுந்தரபாண்டியராய் இறைவர் வந்து திருமணம் செய்து கொண்ட பின்பு திருமணத்திற்கு வந்திருந்த அரசர்களையும் தேவர்களையும் முனிவர்களையும் "அமுதுண்ண வாருங்கள்' என்று திருவாய் மலர்ந்தருளினார். அவர்கள் விரைந்து சென்று பொற்றாமரைத் தீர்த்தத்தில் நீராடித் தங்கள் தங்கள் நியமங்களை முடித்து வந்தனர்.

அப்பொழுது, பதஞ்சலி முனிவரும் வியாக்கிர பாதரும் இறைவனை விழுந்து வணங்கி நின்று, "இறைவனே! பொன்னம்பலத்திலே ஆடியருளும் தேவரீரது திருநடனத்தைத் தரிசித்த பின்னரே உண்பது எங்களுக்கு நியமம்" என்று கூறினார்.

உடனே சிவபெருமான் அவர்களை நோக்கி "அந் நடனத்தினை இம் மதுரைப் பதியிலே யாம் செய்து காட்டுவோம்" என்றார். உடனே இந்திர விமானத்தின் கீழ்ப்புறம் வெள்ளியம்பலம் ஒன்று தோன்றியது. அதனிடத்தே

ஒரு மாணிக்க பீடமும் தோன்றியது. அம்மாணிக்க பீடத்தின் மேல் இறைவர் திருநடனம் செய்தருளினார். திருமால் இசைக் கருவியை வாசித்தார். நந்திதேவர் மத்தளம் அடித்தார். தும்புரு நாரதர் இருவரும் இசைபாடினர். நான்முகன் யாழ் கொண்டு சாமகீதம் பாடினார். இவ்வாறு இவர் வெள்ளியம்பலத்துள் திருக்கூத்தாடிய காட்சியை முனிவர் இருவரும் கண்டு ஆனந்தப் பெருக்கில் மூழ்கினர்.

பின்னர் வெள்ளியம்பலத்துள் நின்று கூத்தாடும் இறைவர், முனிவர்களை நோக்கி, 'நன்று, நீங்கள் விரும்பியது யாது' என்று கேட்டார். உடனே முனிவர்கள் வணங்கி, "எந்தையே! இத் திருக்கூத்துடன் எப்பொழுதும் வெள்ளியம்பலத்துளே நின்று அருள் புரிய வேண்டும்" என்று வேண்டினர். சிவபெருமான் அவர்களை நோக்கி, "இப் பாண்டிய நாடு செய்த தவம் காரணமாக நீங்கள் விரும்பிய வரத்தை அளித்தோம்" என்று அருள் செய்தார்.

உடனே பதஞ்சலி முனிவர் சிவபெருமானை நோக்கி, "இத் திருக்கூத்தை நேரே தரிசித்தவர் அனைவரும் இப் பூமியில் மீண்டும் பிறவாத சிவகதியை அடைதல் வேண்டும்" என்று கூறி வணங்கினார். சிவபெருமான் அதற்கு இணங்கி அவ்வாறே அருள்புரிந்தார். அதனைக் கேட்டுச் சிவகணத்தவர் ஆரவாரம் செய்து குரவைக் கூத்தாடினர். தேவர்கள் பூமாரி பொழிந்தனர். முனிவர்கள் ஆனந்தம் அடைந்தனர்.

7. குண்டோதரனுக்கு அன்னமிட்ட படலம்

தடாதகைப் பிராட்டியாரின் திருமணத்தின் பொருட்டு வந்திருந்த அரசர், வேதியர், முனிவர் ஆகிய அனைவரும் அறுசுவையுடன் கூடிய உணவை உண்டனர். பின்னர்

அவர்கள் விடை பெற்றுச் சென்றனர். பின்னர் மடைத் தொழிலாளர்கள் பிராட்டியாரிடம் சென்று வணங்கி, "நாங்கள் சமைத்த உணவில் ஆயிரத்தில் ஒரு பங்கேனும் செலவழியவில்லை. இனி செய்யத்தக்கது யாது" என்று கேட்டனர்.

உடனே தடாதகைப் பிராட்டியார் தம் கணவராகிய சுந்தரபாண்டியரைச் சென்று வணங்கி, "தேவரீர்! தேவர்கள் பொருட்டு அளவின்றிச் சமைக்கப்பட்ட உணவு வீணாக மலைபோல் உலர்கின்றது" என்றார். உடனே சோமசுந்தரப் பெருமான் ஒரு விளையாடலைச் செய்யக் கருதி, புன்னகை புரிந்து, "நீ மலயத்துவச பாண்டியனின் திருமகள் அன்றோ? நின் செல்வப் பெருக்கை நான் அறியும் வண்ணம் அளவின்றி மலைபோல் அன்னத்தைச் சமைத்தாய் போலும்! எம் கணங்களுள் பசிமிக்கவர் யாரும் இல்லை. எம்மால் செய்யத்தக்கது யாது?" என்றார்.

அதே நேரத்தில் அருகில் நின்ற குண்டோதரன் என்னும் பூதகணத்தின் வயிற்றில் வடவைத் தீ வந்து புகுமாறு திருவுளம் கொண்டார். உடனே வடவைத் தீ குண்டோதரன் வயிற்றில் வந்து புகுந்து பசியாய் மூண்டெழுந்தது. அவன் உடல் தளர்ந்து வருந்தி உயிர் ஒடுங்கிச் சிவபெருமானை நோக்கி, "எம்பெருமானே! பசியால் வருந்துகின்றேன்" என்று கூறினான். உடனே சிவபெருமான், "எம் குடையைத் தாங்கி வரும் இக் குறுங்கால் பூதத்திற்கும் ஒருபிடி சோறு அளிப்பாயாக! பின்னர்க் கூறுவோம்" என்று கூறியருளினார்.

தடாதகைப் பிராட்டியார் பெருமானை வணங்கிச் சென்றார். குண்டோதரன் பிராட்டியாரைத் தொடர்ந்து சென்றான். பிராட்டியாரின் ஏவலினால் அவனை அழைத்துக் கொண்டுபோய்ச் சோற்றின் முன் விட்டனர். அவ்வாறு அழைத்துச் சென்ற பெண்கள் குண்டோதரன் அன்னத்தின் முன் இருந்ததை மட்டுமே கண்டனர். அவன் சோற்றை

எடுத்த உண்டதையும், அங்கிருந்த சோற்றையும் கண்டிலர். ஒரு நொடியில் அனைத்தையும் விழுங்கி விட்டான். அதைக் கண்ட பெண்கள் பயந்து கை நெரித்துக் கண்களை மூடிக்கொண்டு ஓடிவிட்டனர்.

சமைக்காத அரிசி, கறி, துவையல், பால், தயிர், நெய், தேன், பிற பண்டங்கள், பழங்கள், சர்க்கரை, தேங்காய், பணியாரம், பச்சைக் காய்கறிகள் யாவற்றையும் உண்டு தீர்த்தான். அவன். உண்ண உண்ண அவனது பசித் தீயானது மேலும் அதிகமானது. தடாதகைப் பிராட்டியார் அதனைக் கண்டு வியப்படைந்தார். சிவபெருமான் திருமுன்னர் சென்று வெட்கத்துடன் நின்றார். சிவபெருமான் அந்நிலையை ஒன்றும் அறியாதவர் போலப் பிராட்டியாரை நோக்கி, "அக் குண்டோதரன் உண்ட உணவு எஞ்சி இருக்குமாயின் இன்னும் பிற பூதகணங்களை அனுப்பி உண்ணச் செய்து உன்னை மகிழ்விக்கிறேன்" என்றார்.

அதுகேட்ட பிராட்டியார், "ஐயனே! இன்னும் குண்டோதரன் பசி அடங்கவில்லை. வேறு பூத கணவீரரை அனுப்புவீராயின் அவர் சென்று உலகம் முழுவதையும் எடுத்து உண்டு விடுவர். அதனால் உமக்குக் கால உருத்திரர் என்னும் திருநாமம் உறுதியாகும். குண்டோதரன் தன் செயலைத் தானே இங்கு வந்து விண்ணப்பம் செய்ய நீர் அறிந்து கொள்வீர்" என்று பணிவுடன் கூறினார்.

அப்போது பசித்தீ சுட குண்டோதரன் அங்கு வந்து, "சுந்தர பாண்டியரே! எம்பிராட்டியார் சமைத்த மலைபோன்ற உணவை உண்ட பின்னும் என் கடும் பசி தணியவில்லை" என்று கூறினான். அத்துடன் பசித் தீ தாங்காமல் வெடிபடக் கதறுவான்; "ஐயகோ" என்பான்; பெருமூச்செறிவான்; ஆவி சோர்ந்து அயருவான்.

8. அன்னக் குழியும் வைகையும் அழைத்த படலம்

சோமசுந்தரக் கடவுள் குண்டோதரன் பொருட்டுத் தன் சக்தியாகிய அன்னபூரணியை நினைத்தார். உடனே நான்கு குழிகளில் தயிர் கலந்த அன்னம் பொங்கி எழுந்தது. உடனே சுந்தர பாண்டியர் குண்டோதரனைப் பார்த்து, "உன் பசி நீங்குமாறு உண்பாய்" என்று கட்டளை இட்டார். குண்டோதரன் அத் தயிர்க் குழியில் தன் கையை வைதது வாரி வாரி உண்டான். உடனே பசி நீங்கியது. பசி நீங்க உண்ட குண்டோதரன் வயிறு பருத்து மலைபோலக் கீழே விழுந்து மூச்சுவிட முடியாமல் புரண்டான். பின்னர் குண்டோதரனுக்கு நீர் வேட்கை மிகுந்தது. உடனே அங்குள்ள நீர் நிலைகளைத் தேடலானான். நடை கிணறு, ஓடைகள், குளங்கள் இவற்றில் உள்ள நீர் முழுவதையும் குடித்துத் தீர்த்தான். அவ்வாறு குடித்தும் நீர் வேட்கை தணியாமல் சோமசுந்தரக் கடவுளை அடைந்து அவர் திருவடிகளில் விழுந்து வணங்கி முறையிட்டான்.

இறைவன் உடனே தம் தலையில் உள்ள கங்கையை நோக்கி, "பெண்ணே! நீ இம் மதுரை மாநகரின் பக்கத்தில் ஒரு பெரிய நதியாக விரைந்து ஓடி வருவாயாக" என்று கட்டளை இட்டார். கங்கை சிவபெருமானை நோக்கி, "பெருமானே! முன்னர் பகிரதன் பொருட்டு ஒரு முறை தீர்த்தமாக என்னை ஓடிவரச் செய்தாய். இப்போதும் அவ்வாறே அருளுகின்றீர். என்னுள் மூழ்கியவருக்கு, பக்தியும் அன்பும் மெய்ஞ்ஞானமும் வீடுபேறும் நான் பெறுமாறு தாங்கள் எனக்குத் திருவருள் புரியவேண்டும்" என்று வரம் வேண்டினாள். இறைவனும் அவ்வாறே அருள் புரிந்தார். உடனே கங்கை அளவற்ற வேகத்துடன் பெரிய நதிவடிவாய் வரத் தொடங்கினாள். பெரிய ஆரவாரத்துடன் பெரிய மரங்களைப் பெயர்த்துக்கொண்டு அந்நதியானது வந்தது.

சிவபெருமான் குண்டோதரனை அருகே அழைத்தார். அந்நதி நீரைப் பருகக் கட்டளை இட்டருளினார். குண்டோதரன் ஆற்றின் அருகே சென்று இரு கை நீட்டி நீரை வாரித் தனது வாயைத் திறந்து அந் நீரைப் பருகினான். உடனே அவனது நீர் வேட்கை தணிந்தது. பின்னர் அவன் மகிழ்ந்து சென்று இறைவன் திருவடிகளில் விழுந்து வணங்கி ஆனந்தக் கூத்தாடினான். பல இனிய கீதங்களைப் பாடினான். அவனது இசை கேட்டு மகிழ்ந்த இறைவர் பூதகணங்களுக்குத் தலைமை வகிக்கும் பதவியை அவனுக்குக் கொடுத்தார்.

குண்டோதரன் நீர் வேட்கையைத் தணிக்க வந்த கங்கை, வையை என்று அழைக்கப் பெறும். இவ் வையை நதிக்குச் சிவகங்கை, சிவஞான தீர்த்தம், வேகவதி ஆறு, கிருதமாலை என்னும் வேறு பெயர்கள் உண்டு.

9. ஏழுகடல் அழைத்த படலம்

சோமசுந்தரப் பெருமான், பாண்டியனின் உருவம் தாங்கி ஆண்டு வருகின்ற காலத்தில் கௌதம முனிவர் என்பவர் காஞ்சன மாலையின் அரண்மனையை அடைந்தார். உடனே காஞ்சன மாலை கௌதம முனிவரின் எதிர் சென்று வணங்கி அழைத்து வந்து உபசரித்து ஆசனத்தில் அமர்த்தினாள். பின்னர், "அடிகளே! பிறப்பின் தொடர்பை நீக்க வல்ல தவத்தினைக் கூறி அருள்க" என்று விண்ணப்பம் செய்தாள். உடனே முனிவர் முகமலர்ந்து, "காஞ்சன மாலையே! சிவபெருமானே உனக்கு மருகன் ஆகும் தகுதியையும் உமாதேவியே மகளாகும் தகுதியினையும் உடைய சிறப்பினைப் பெற்றாய். உன்னைப் போன்ற சிறந்த தவம் செய்யப் பெற்றவர் உலகில் வேறு யாருளர்; புண்ணியங்களுள் 'காயிகம்' சிறந்தது. அதிலும் கடலில் நீராடுதல் மிகவும் சிறந்தது என்று கூறினார்.

அதனைக் கேட்ட காஞ்சன மாலை தன் மகளிடம் சென்று கடலில் நீராட மிக்க விருப்பம் கொண்டமையைக் கூறினாள். இதனைக் கேட்ட தடாதகைப் பிராட்டியார், "இதனை எம் தலைவர்க்குத் தெரிவிப்பேன்" என்றாள். உடனே பெருமானிடம் சென்று, "கருணைக் கடலே! இன்று எம் தாய் கடலில் சென்று நீராட விரும்புகின்றாள்" என்று கூறிக் குறையிரந்தார்.

தேவியின் திருமொழியைக் கேட்ட இறைவர், "கடல் ஒன்றோ? நாம் ஏழு கடலையும் கூவி அழைப்போம்" என்று கூவி அவ்வேழு கடல்களும் வருமாறு திருவுள்ளம் கொண்டார். உடனே ஏழு கடல்களும் மதுரையின் கீழ்த்திசையில் உள்ள ஒரு வாவியிடத்தே ஏழுவகைப்பட்ட நிறங்களோடு வந்து நின்றன. அவ்வேழு கடல்களும் அண்டத்தின் முகட்டினைத் தடவும் அளவிற்கு ஆரவாரித்து எழுந்தன.

10. மலையத்துவசனை அழைத்த படலம்

இறைவர் தடாதகைப் பிராட்டியாரோடு ஏழுகடலும் நிறைந்த குளத்தின் அருகில் உள்ள நந்தவனத்தின் கண் ஒரு சிங்காதனத்தின் மேல் எழுந்தருளினார். உடனே இறைவராகிய சுந்தரபாண்டியர் தம் தேவியைப் பார்த்து, "நாம் நின் பொருட்டு ஏழுகடலையும் இந் நகரத்தில் அழைப்பித்தோம். இங்க வந்து கடலாடுவதற்கு உன் தாயை அழைப்பிப்பாயாக" என்றார். உடனே தடாதகைப் பிராட்டியாரும் தன் தாயை அழைத்துக் கொண்டு ஏழு கடல் வாவிக் கரையின் அருகில் வந்தார்.

அப்போது காஞ்சன மாலை முனிவர்களை நோக்கி, "கடல் நீரில் ஆடுதற்குரிய விதி யாது?" என்று வினவினாள். அதற்கு அம் முனிவர்கள், "காஞ்சன மாலையே! கணவனுடைய கை, மகனுடைய கை, பசுவினது கன்றின் வால் என்ற இம் மூன்றினுள் ஒன்றைக் கையினால் பற்றிக் கொண்டு நீராடுதலே முறை" என்று கூறினர். உடனே காஞ்சனமாலை "கொடிய பாவியாகிய எனக்குக் கணவனும் மகனும் இல்லையே, இனி யான் நீராடப் பெறுவது கன்றின் வால் அல்லாமல் வேறுளதோ? ஆதலால் கன்றின் வாலைப் பற்றிக் கொண்டு நீராடுவேன்" என்றாள்.

இதனைக் கேட்ட பிராட்டியார் தன் உயிர்த் துணைவராகிய இறைவர் திருமுன் சென்று தன் தாயின் குறையை எடுத்து விண்ணப்பித்தாள். உடனே சுந்தரபாண்டியர், சுவர்க்கத்திலே இந்திரனோடு ஒருசேர வீற்றிருந்த மலயத்துவசப் பாண்டியன் மேல் திருவுளம் செலுத்தினார். உடனே மலையத்துவசப் பாண்டியன் தெய்வ விமானத்தில் இனிய வாவியினிடத்தில் வந்து இறங்கினான்.

இறங்கிய மலயத்துவசப் பாண்டியன், இறைவரை எதிர்கண்டு திருவடிகளை வணங்க முற்பட்டான். அதைக் கண்ட சுந்தர பாண்டியர், தன் மாமன் என்ற முறையினால் தனது திருக்கரத்தினால் தடுத்து மலயத்துவசப் பாண்டியனை எதிர்த்துத் தழுவினார். பின்னர் மலயத்துவசனை அருளோடு நோக்கி, "நின் அன்பு நிறைந்த மனைவியோடும் சென்று தீர்த்தம் ஆடுவாயாக" என்றார்.

பின்னர் மலயத்துவசப் பாண்டியனை நோக்கி, பிராட்டியார் வர, அவரை அன்போடு தழுவினான். கணவனைக் கண்ட காஞ்சனமாலை மங்கலநாண் முதலிய அணிகளை அணிந்து தன் கணவன் எதிரே சென்று நாணத்துடன் வணங்கினார். பிறகு காஞ்சனமாலை தன் கையில் பவித்திரம் அணிந்து திருவைந்தெழுத்தை உச்சரித்து

அந்தணர் கூறிய சங்கற்ப முறைப்படி தன் கணவன் கையைப் பிடித்துக் கொண்டு பேருவகையோடு கடல் நீரில் ஆடினாள்.

கடலில் இருவரும் மூழ்கி எழுந்தவுடன் பாசம் நீங்கி உமையொருபாகரது அருள் வடிவத்தைப் பெற்றனர். சிவலோகத்தில் இருந்து அப்போது ஒரு தெய்வ விமானம் மண் மீது வந்து இறங்கியது. மலயத்துவசப் பாண்டியன், தன் மனைவியான காஞ்சனமாலையுடன் விமானத்தில் ஏறினார். உடனே அந்தத் தெய்வ விமானம் மேலே எழும்பியது. முனிவர்கள் வாழ்த்தவும், தேவர்கள் துதிக்கவும் 'அர அர' என்னும் முழக்கம் எங்கும் பரவியது. அவர்கள் சிவலோகத்தை நோக்கிச் சென்றார்கள்.

அதன்பின் பிராட்டியார் இறைவனிடம் சென்று, "என்னுடைய தாய் நீராட விரும்பிய கடல் ஒன்றே. என்பொருட்டு ஏழு கடலையும் அழைத்து அருளினீர். பாண்டியன் மரபு மேலோங்கச் செய்தீர். இனி எந் நிலைக்கு இடையூறு உண்டோ?" என்று கூறினார். இறைவர் இக் கருத்தினைக் கேட்டு மகிழ்ந்தார்.

11. உக்கிரபாண்டியன் திருவவதாரப் படலம்

சுந்தர பாண்டியர் அளவற்ற காலம் சிறப்பான ஆட்சி புரிந்து வந்தார். பின்னர் தம் நெற்றிக் கண்ணில் தோன்றிய முருகப் பெருமானைத் தடாதகைப் பிராட்டியாரின் வயிற்றில் கருவாகும்படி திருவுள்ளம் கொண்டார். அம்மையார் கருப்பவதியானார். அக்கரு திங்கள் தோறும் நன் முறையில் வளர்ந்துவரலாயிற்று. திருவாதிரை நாளில் திங்கட்கிழமை வியாழன் வந்து கேந்திரத்தில் ஒளியுடன் ஏறி விளங்கப் பெற்ற நல்ல முகூர்த்தத்தில் ஒரு திருக்குமரன் அவதரித்தருளினார். தேவர்கள் மலர்மாரி பொழிந்தனர்.

திருமால், பிரம்மன் போன்ற தேவர்களும் புண்ணிய முனிவர்களும் தங்கள் தங்கள் மனைவியரோடு சுந்தரபாண்டியரின் திருமாளிகையை அடைந்து புதல்வனை வாழ்த்திச் சென்றனர். மதுரை மாநகரத்து மக்கள் அனைவரும் வீடுகள், தெருக்கள் போன்றவற்றை அலங்காரம் செய்தனர். விழாக்கள் கொண்டாடினர். சுந்தர பாண்டியர் தன் திருக் குமாரருக்குச் சாதகன்மம் முதலியவற்றை அரசர்க்குரிய வேத முறைப்படி நடத்தினார். அக் குழந்தைக்கு உக்கிர வருமன்" என்று பெயரிட்டனர். நான்காம் மாதத்தில் கோவிலுக்குக் கொண்டு சென்றனர். ஆறாம் மாதத்தில் அன்னம் ஊட்டினர். பதின்மூன்றாம் மாதத்தில் மயிர்வினை முடித்தனர். ஐந்தாம் ஆண்டிலே வேதமுறைப்படி பூணூலை அணிவித்தனர்.

தேவ குருவாகிய வியாழ பகவான் வேதம் முதலிய கலைகளையும், விற்கலையையும், வாட் பயிற்சியையும், யானை ஏற்றத்தையும், குதிரை, தேர் ஏற்றத்தையும் கற்பித்தார். பாசுபதப் படைப் பயிற்சியை மட்டும் சிவபெருமானிடம் கற்றுத் தெரிந்தார். பலவிதப் படைப் பயிற்சியையும் வீர விளையாட்டையும் செய்த உக்கிர வருமர் காளைப் பருவம் அடைந்தார். அப்பருவத்தில் அவர் முப்பத்திரண்டு இலட்சணங்களும் பொருந்தியவராக இருந்தார். சிறந்த நற்குணம் உடையவராயும் திகழ்ந்தார்.

இவருடைய படைப் பயிற்சியையும் குணங்களையும் கண்டு மகிழ்ந்த சுந்தர பாண்டியர், "இவன் பூமண்டலம் முழுவதும் அரசியற்ற வல்லவன்" என்று எண்ணினார். "இவனுக்குத் திருமுடி சூட்டிய பின்னர் திருமணம் செய்ய வேண்டும்" என்று கருத்தில் கொண்டு சுமதி முதலிய மந்திரிகளைக் கொண்டு ஆராய்ந்து அறிந்தார்.

12. உக்கிரப் பாண்டியனுக்கு வேல் வளை செண்டு கொடுத்த படலம்

சுந்தர பாண்டியரின் திருக்குமாரருக்குப் பெண் தேடத் தொடங்கினர். வடநாட்டில் உள்ள மணவூர் என்னும் நாட்டின் அரசனும், சூரிய குலத் தோன்றலுமான சோமசேகரன் என்பவனின் மகளான காந்திமதி என்னும் கன்னியைத் திருமணம் பேசக் கருதினர். அன்று இரவு சோமசுந்தரக் கடவுள், சோமசுந்தரக் கடவுள் சோம சேகரனின் கனவில் தோன்றி, "அரசனே! நம் மதுரைப் பதியில் எழுந்தருளி இருக்கும் சிவபெருமான், நீ பெற்ற காந்திமதியை மதுரை நகருக்கு அழைத்துக் கொண்டு போய்ச் சுந்தர பாண்டியனுடைய திருக் குமாரனுக்குத் திருமணம் செய்து கொடுப்பாயாக" என்று கூறியருளினார்.

அம்மொழிகளைக் கேட்ட சோமசேகரன் விழித்து எழுந்தான். பெரிதும் மகிழ்ந்தான். சிவபெருமானைத் தொழுதான். வைகறைப் பொழுதிலே நித்திய கருமங்களை முடித்தான். அமைச்சர்களோடு கலந்து ஆலோசித்தான். தன் மகளைத் தேரில் ஏற்றிக் கொண்டு அமைச்சர்களோடும் மற்றப் பரிவாரங்களோடும் மதுரையை நோக்கிச் செல்லத் தொடங்கினான்.

முன்னை நாளில் மணவினை பேசுவதற்கு நினைத்தபடியே அமைச்சர்கள் சுந்தர பாண்டியரின் சுற்றத்தாரோடு மதுரையிலிருந்து புறப்பட்டு மணவூரை நோக்கிச் செல்லத் தொடங்கினர். வழியில் எதிர்ப்பட்ட சோம சேகர மன்னனைக் கண்டு, "முருகக் கடவுளைப் போன்ற உக்கிரகுமாரனுக்கு உம்முடைய புதல்வியைத் திருமணம் செய்து தருவாயாக" என்றார்கள். சோம சேகரப் பாண்டியன் உடன்பட்டான். அதைக் கேட்ட அமைச்சர்கள் தூதர்களை அனுப்பிச் சுந்தர பாண்டியருக்கு அச்செய்தியைத் தெரிவித்தனர்.

பின்னர் அமைச்சர்கள் சோம சேகர மன்னனை அழைத்துக் கொண்டு மதுரையை அடைந்தார்கள். சோம சேகரனைச் சுந்தர பாண்டியர் எதிர்கொண்டு தழுவி முகமன் கூறி அழகிய அரண்மனை ஒன்றில் தங்க வைத்தார். பின்னர் அமைச்சர்கள் அனைவரும் திருமண நாளை நிச்சயித்தனர். மற்ற அரசர்களுக்குத் திருமண ஓலை அனுப்பினர். மதுரை நகர மக்களுக்கு முரசு மூலம் அறிவித்தனர்.

செய்தியை அறிந்த நகர மக்கள் பெருமகிழ்வு கொண்டனர். வீதிகளையும் வீடுகளையும் அலங்காரம் செய்தனர். ஓலை கிடைக்கப் பெற்ற மன்னர்கள் தம் பரிவாரங்களோடும் சுற்றத்தாரோடும் மதுரைக்கு வந்தனர். முனிவர்களும் தவசிகளும் வந்து குழுமினர். அனைவரும் சுந்தர பாண்டியரையும் தடாதகைப் பிராட்டியாரையும் வணங்கி ஆசி பெற்றனர்.

சுந்தர பாண்டியர் சோம சேகர பாண்டியனின் மகளாகிய காந்திமதியின் அழகு கண்டு மகிழ்வடைந்தார். வியாழ பகவான் உறுப்பியல் நூலின் வழியே ஆராய்ந்து அனைவருக்கும் காந்திமதியின் அவயவ இலட்சணங்களைத் தெரிவித்தார். அத்துடன் அப்பெண்ணிற்கு ஒப்பாக மண்ணுலகிலும் விண்ணுலகிலும் ஒருவரும் இல்லை என்று கூறினார்.

பின்பு உக்கிரகுமாரர் அங்கிருந்து எழுந்து அட்டமங்கல வரிசை சிறக்க யானையின் மேல் கொண்டு வரப்பட்ட வையை ஆற்றின் நீரில் நீராடினார். திருமணக் கோலம் பூண்டார். திருமண மண்டபத்தினில் ஏறி அமர்ந்தார். சங்கங்கள் ஒலித்தன. அப்போது காந்திமதியினை நீராட்டி அரிய ஆபரணங்களைப் பூட்டி மணமகளின் வலது புறத்தில் அமரச் செய்தனர். சோமசேகரன் தம் மனைவியுடன் எழுந்து

வந்து காந்திமதியின் கையினை உக்கிர குமாரர் கையில் வைத்து, "சூரிய குலத்தைச் சேர்ந்த நான், சந்திர குலத்தைச் சேர்ந்த சுந்தரபாண்டியரின் திருக்குமாரரான உக்கிர குமாரருக்கு என்னுடைய புதல்வியாகிய காந்திமதியை இப்பொழுது மணமுவந்து கொடுத்தேன்" என்று தாரை வார்த்துக் கொடுத்தான். பலவித வரிசைகளை வழங்கினான்.

இசைக்கருவிகள் முழங்கின. தேவர்கள் கற்பக மலரைப் பொழிந்தனர். அந்தணர்கள் தீ வளர்த்தனர். இன்னிசை முழங்க உக்கிரகுமாரர், காந்திமதிக்கு மங்கல நாண் பூட்டி வளையல் அணிந்த சிவந்த கையினைப் பற்றினார். மணி வினை அனைத்தும் வேத முறைப்படி சிறப்புற நடந்தேறியது. மதுரைத் திருநகர் வீதியினை மணமக்கள் வலம் வந்தனர். திருமணத்திற்கு வந்திருந்த அனைவரும் அறுசுவை உணவு உண்டு விடைபெற்றுச் சென்றனர்.

ஒருநாள் சுந்தர பாண்டியர் தன் மகன் உக்கிரகுமாரரை அழைத்து "மைந்தனே! இந்திரனும் கடலரசனும் உனக்குப் பெரும் பகைவராவார். இந்திரனுடைய முடி சிதறும் வண்ணம் இந்த வளையினைக் கொண்டு எறிவாயாக, கடல் சுவறும் வண்ணம் இந்த வேலை விடுக. மேருவின் செருக்கழிய இந்தச் செண்டினால் அடிப்பாயாக" என்று கூறி அந்த மூன்று படைகளையும் எடுத்துக் கொடுத்தருளினார். அப்போது உக்கிரகுமாரர் அம்மூன்று படைகளையும் தம் தந்தையை வணங்கிப் பெற்றுக் கொண்டார். பின்னர் தம் புதல்வனுக்கு முடிசூட்டி, "வாய்மை வழியே ஒழுகி சிறப்பான முறையில் ஆட்சி செலுத்துவாயாக" என்று கூறி ஆட்சியை அவரிடம் ஒப்புவித்தார். சிவ கணங்கள் முன்னைய வடிவம் அடைய சுந்தர பாண்டியராகிய இறைவர் தடாதகைப் பிராட்டியாரோடு திருக் கோயிலினுள் சென்று எழுந்தருளினார். உக்கிரகுமாரர் சிறப்புடன் ஆட்சிபுரிந்தார்.

13. கடல் சுவற வேல்விட்ட படலம்

உக்கிரகுமாரர் சிறப்புடன் ஆட்சி புரிந்து வந்தார். பின்னர் அசுவமேதயாகம் தொண்ணூற்றாறு செய்து முடித்தார். இதனால் இந்திரன் உக்கிரகுமாரன் மேல் பொறாமை கொண்டான். "பாண்டிய நாட்டின் மழைவளம் குறைந்தால் நாட்டின் வளம் குறைந்து யாகங்களைச் செய்ய முடியாது" என்று எண்ணினான். எனவே கடல் வேந்தனாகிய வருணனை அழைத்து, "நீ சினத்துடன் சென்று மதுரையை வளைத்து அழிப்பாயாக" என்று கூறினான். உடனே வருணன் நள்ளிரவில் மதுரையை விரைந்து சூழ்ந்து அழிக்கக் கருதினான். கடலானது பொங்கி எழுந்து கரிய மலை தோற்றத்துடன் மதுரைப் பதியைச் சென்று வளைத்தது. கடலானது மதுரையின் கிழக்கு திக்கில் வந்து நெருங்கும் நள்ளிரவு. அப்போது உக்கிர பாண்டியன் உறங்கிக் கொண்டிருந்தான்.

அப்போது அவன் கனவில் வெள்ளியம்பல வாணராகிய சோமசுந்தரக் கடவுள், சித்த மூர்த்தியாய்த் தோன்றி, "பாண்டியனே! உன் நகரை அழிக்கும் பொருட்டுக் கடல் பெருகி வருகின்றது. நீ உடனே விரைந்து சென்று வேற்படையை எறிந்து வெற்றி பெறுவாயாக" என்று கூறியருளினார். திடுக்கிட்டு எழுந்த உக்கிரகுமார பாண்டியன் அமைச்சர்களோடு விரைந்து சென்று பேரொளியோடு வருகின்ற கடலினைக் கண்டு வியப்படைந்து நின்றான்.

அப்போது கனவில் தோன்றியருளிய சித்த மூர்த்தி நனவிலும் எழுந்தருளி வந்து, "அப்பனே! நீ காலம் தாழ்த்தாதே. உடனே கூரிய வேற் படையை எறிந்து உலகிற்கு வரும் அழிவை நீக்குவாயாக" என்று கூறியருளினார். உடனே உக்கிரபாண்டியன் வேற்படையை எடுத்து வலமாகச் சுழற்றிக் கடலின்மேல் எறிந்தான். அவ் வேலின் நுனி கடலைத் தொட்டவுடன் கடல் 'சுஃறெ' என்னும் ஒலியுண்டாக நீர்

வற்றி மிக்க வலி இழந்தது. உக்கிரவழுதியின் கணைக்கால் அளவில் குறைந்து நின்றது.

அப்போது உக்கிர வழுதியின் அருகில் நின்ற சித்த மூர்த்தி மறைந்தருளினார். அவர் சிவபெருமானாக ஆகாயத்தில் உமாதேவியோடும் வெளிப்பட்டுத் தோன்றினார். உக்கிர குமார பாண்டியன் அவரைத் துதித்து எழுந்தான். உடனே இறைவர் தமது திருக் கோயிலுட் புகுந்தருளினார். உக்கிரகுமார பாண்டியனும் திருக் கோயிலை அடைந்து அவரை வழிபட்டு விடைபெற்றுத் திரும்பினான். பல விளை நிலங்களை இறைவர் திருக்கோயிலுக்கு உக்கிர குமாரபாண்டியன் சொந்தமாக்கி இனிது ஆட்சி புரிந்து வந்தான்.

14. இந்திரன் முடிமேல் வளையெறிந்த படலம்

உக்கிர பாண்டியன் செங்கோல் தவறாமல் ஆட்சி செய்து வருகையில் கோள் நிலை பிறழ்ந்தமையால் மழை பெய்யவில்லை. சேர, சோழ, பாண்டிய நாடுகள் வறுமையில் வாடின. அது கண்ட மூவேந்தரும் தம் வறுமையை நீக்கக் கருதி அகத்தியர் வாழும் பொதிய மலையை அடைந்தனர். மூவரும் அகத்தியரிடம் மழையின்மையால் தங்கள் நாட்டிற்கு ஏற்பட்ட வறுமை நிலையை எடுத்துக் கூறினர். அகத்தியர் கிரகங்கள் நிற்கும் நிலையை ஆராய்ந்தார். பின்னர் மூவேந்தரை நோக்கி, "இனியும் மழை பெய்யாது. நீங்கள் மழையைப் பொழிவிக்கும் இந்திரனிடம் சென்று இதனைக் கேளுங்கள்" என்றார்.

தமிழ் வேந்தர் மூவரும் அகத்தியரை நோக்கி, "யாம் இந்திரனைக் கான விண்ணுலகிற்கு எவ்வாறு செல்வது?" என்று கேட்டனர். அதற்கு அகத்தியர், "நீர் சோம வார விரதம் அனுஷ்டித்து சிவபெருமானின் திருவருளைப் பெற்று விண் வழியாகச் செல்வீராக" என்றார். அத்துடன் சோம வார விரதம் நோற்கும் முறையையும் கூறினார். அத்துடன் அவ்விரதத்தின் வகைகளையும், அதனை முடிக்கும் முறைகளையும் பயனையும் கூறினார்.

இதனைக் கேட்டுத் தெரிந்து கொண்ட வேந்தர் மூவரும் அவரிடம் விடை பெற்று மதுரையை அடைந்தனர். அவ்வாறே விரதம் நோற்று இந்திரன் உலகம் அடைந்தனர். மூவேந்தரும் வருவதை அறிந்த இந்திரன் அம்மூவருக்கும் தன்னைவிடத் தாழ்ந்த நிலையில் அமரத்தக்க மூன்று சிங்காதனங்களை இடுவித்தான். சேரனும் சோழனும் இந்திரன் காட்டிய அச்சிங்காதனங்களில் அமர்ந்தனர். உக்கிர வழுதி மட்டும் இந்திரனுடைய சிங்காதனத்தில் ஏறி அவனோடு சமமாக அமர்ந்தான். அதனால் இந்திரன் உக்கிர வழுதி மீது பொறாமை கொண்டான்.

அருகில் இருந்த சேரனையும் சோழனையும் நோக்கி முகமன் கூறி, "நீங்கள் வந்த காரியம் யாது?" என்று கேட்டான். அவர்கள் இந்திரனை நோக்கி, "மகபதியே! எங்கள் நாட்டில் மழை இல்லை. அதைப் பெறவேண்டி இங்கு வந்தோம்" என்றனர். இந்திரன் மனமகிழ்ந்து இரத்தினா பரணங்களையும் பொன்னாடைகளையும் கொடுத்து, அவ்விருவர் நாடுகளில் மட்டும் மழை பெய்யும்படி அருளினான். பின்னர், "நீவிர் செல்லுங்கள்" என்று விடை கொடுத்து அனுப்பி வைத்தான்.

அவ்விருவரும் சென்ற பின்னர் இந்திரன், தனக்குச் சமமாகச் சிங்காதனத்தில் வீற்றிருக்கும் உக்கிர பாண்டியன் பொருட்டு ஒரு சூழ்ச்சி செய்ய எண்ணினான். அவன் மழை வேண்டாமல் இருக்கும் பெருமிதத்தை எண்ணி அளவில்லாத கிங்கரர்களால் தாங்கி வரப் பெற்ற ஒரு பெரிய முத்து

மாலையை அவனுக்குப் பரிசாகக் கொடுத்தான். உக்கிரப் பாண்டியனோ அதனை வாங்கி மலர் மாலை போலத் தன் கழுத்தில் அணிந்து கொண்டான். அதனைக் கண்டு இந்திரன் பெருவியப்படைந்தான். அவன் பாண்டியனை நோக்கி, "பாண்டியனே! இன்று முதல் ஆரம் தாங்கிய பாண்டியன்" என்று உலகமெல்லாம் நன்கு மதிப்பதாக என்று புகழ்ந்து கூறினான். உக்கிரப் பாண்டியன் அப்புகழ்ச்சியை சிறிதும் பொருட்படுத்தாது அவ்வரியணையிலிருந்து இறங்கி தனது மதுரை நகரை அடைந்தான்.

இந்திரன் ஆணையால் சேர சோழ நாடுகளில் மழை பெய்தது. பாண்டிய நாடு மட்டும் முன் போலவே மழையின்றி வறுமையில் இருந்தது. ஒருநாள் உக்கிரப் பாண்டியன் பொதிய மலையை அடுத்த சந்தன மரங்கள் அடர்ந்த சாரலை அடைந்து அங்குள்ள மிருகங்களை வேட்டையாடிக் கொண்டிருந்தான். அப்பொழுது புட்கலா வருத்தம், சங்காரித்தம், துரோணம், காளமுகி என்னும் நான்கு மேகங்கள் அப் பொதிய மலையின் மேல் விழுந்து மேய்ந்து கொண்டிருந்தன. அதனைக் கண்ட பாண்டியன் உடனே அவற்றைப் பிடித்து யானைகளைத் தளையிடுவதைப் போல, அம் மேகங்களை விலங்கிட்டுப் பிடித்துச் சிறைச் சாலையில் கொண்டுபோய் அடைத்தான். இதனை அறிந்த இந்திரன் கடும் கோபம் கொண்டு போரிடக் கருதிப் புறப்பட்டு வந்தான்.

பாண்டியனின் வீரர்களும், இந்திரன் கட்டளையால் தேவர்களும் ஒன்று கலந்து போரிட்டனர். இந்திரனும் பாண்டியனும் நேர் நின்று போரிட்டனர். மாறி மாறி இருவரும் கணைகளை விட்டனர். முடிவில் பாண்டியன் விட்ட திகிரிப் படை இந்திரனுடைய முடியைக் கீழே தள்ளிச் சிதைத்தது. இந்திரன் புறங்கொண்டோடினான். "உக்கிரப் பாண்டியன் வீசிய வளையானது (திகிரிப்படை) என் தலையினைச் சிதையாமல் என் முடியினை மட்டும்

சிதைத்தது. அதற்குக் காரணம் நான் முன்னர் சோம சுந்தரக் கடவுளைப் பூசை செய்ததே ஆகும் என்று எண்ணி சிவபெருமான் திருவருளைப் பாராட்டினான்.

போருக்கு ஆற்றாது புறம் கொடுத்தோடிய இந்திரன் பொன்னுலகம் அடைந்தான். பின்பு, "நினது நாட்டில் மழை பெய்விக்கின்றேன். தளையினை நீக்கி என்னுடைய மேகங்களைத் தருவாயாக" என்று உக்கிர வழுதிக்குத் திருமுகம் ஒன்றை எழுதி அனுப்பினான். திருமுகம் கொண்டு வந்த தேவதூதன் பாண்டியனை வணங்கி நின்று ஓலைகள் நீட்டினான். அதனை அருகில் உள்ள ஒருவன் வாசித்துக் காட்ட உக்கிர பாண்டியன் இந்திரனை நம்பாததால் மேகங்களின் சிறை நீக்க மறுத்து விட்டான்.

அப்போது இந்திரனுக்கு எக்காலத்தும் நண்பனாய் உள்ள ஒரு வேளாளன் பாண்டியனை நோக்கி, "அரசே! நான் பிணை" என்று சொல்லி வணங்கினான். உக்கிர பாண்டியன் அவ் வேளாளனை நம்பி, சிறையில் இட்டிருந்த மேகங்களை விடுவித்தான். மேகங்கள் நான்கும் தளை நீங்கி சென்றன. அதன்பின் இந்திரன் கட்டளையால் மழை நன்கு பெய்தது. ஆறு, குளம், ஏரி, வாவி, மடு போன்றவை நிரம்பி வழிந்தன. செந்நெல்லும் கரும்பும் செழித்து ஓங்கியது. பூஞ்சோலைகள் பொலிவுடன் விளங்கின. பாண்டியநாடும் பொலிவு பெற்றது.

15. மேருவைச் செண்டால் அடித்த படலம்

உக்கிர பாண்டியன், அகத்திய முனிவர் தனக்கு முன்பு சொன்ன சோம வார விரதத்தை அன்று முதல் அனுட்டித்து வந்தான். அதன் பயன் போலக் காந்திமதியின் வயிற்றில் புத்திரன் தோன்றினான். அப்பாலகன் மிக்க

அழகுடையவனாய் இருந்தான். அப்புதல்வனுக்கு வீரபாண்டியன் என்று உக்கிர பாண்டியன் பெயரிட்டான். வீரபாண்டியன் பல கலைகளையும் கற்றுத் தேர்ந்தான்.

அக்காலத்தில், கிரகங்கள் தத்தம் நிலை திரிந்தன. அதனால் பாண்டிய நாட்டில் மீண்டும் மழை வளம் குறைந்து பஞ்சம் ஏற்பட்டது. பாண்டியன் சோதிடர்களை அழைத்து, "மழை வளம் குறைந்ததற்குக் காரணம் யாது?" என்று வினவினான். அதற்குச் சோதிடர்கள், "அரசே! மற்ற கிரகங்கள் சூரியனை நோக்கி நிற்றலால் ஒரு வருடம் வரை மழை பெய்யாது" என்று கூறினர். அதனைக் கேட்டு வருந்திய உக்கிர பாண்டியன், சோம சுந்தரக் கடவுளை அடைந்து, "ஐயனே! உயிர்களெல்லாம் பசியால் துன்பம் அடைகின்றதே" என்று கூறி வருந்தி அழுது நின்றான். இறைவர் ஒன்றும் மொழியவில்லை. பாண்டியன் தன் அரண்மனை அடைந்தான்.

உக்கிர பாண்டியன் நித்திரை செய்து கொண்டிருந்த போது இறைவர் அவன் கனவில் சித்த மூர்த்தியாய்த் தோன்றினார். "அரசனே! தற்போது மழை பெய்யாது. அதனால் நீ வருத்தம் அடையாதே. மேருமலையின் பக்கத்தில் ஒரு குகையில் அளவற்ற செல்வம் உள்ளது. நீ அங்கே சென்று அம்மேருமலையைச் செண்டால் அடித்து அதன் செருக்கை அழிப்பாய். பின்னர் உன் ஆணையால் பொன் வைத்துள்ள அறைமேல் மூடியுள்ள பாறையை நீக்கி வேண்டுமளவு பொன்னை எடுத்துக் கொண்டு அதனை மூடி உன் இலச்சினையை இட்டு வரக் கடவாய்" என்று அருளிச் செய்தார்.

உக்கிரவழுதி விழித்து எழுந்தான். கதிரவன் தோன்று முன் நித்திய கருமங்களை முடித்துக் கொண்டு திருக் கோயிலை அடைந்தான். சோமசுந்தரக் கடவுளை வணங்கித் தன் பெரிய சேனையுடன் வட நாட்டினை நோக்கிச்

செல்லத் தொடங்கினான். அவன் செல்லும் பொழுது சோழன் முதலிய பலநாட்டு மன்னர்கள் வந்து வணங்கி உபசரித்துச் சிறப்புச் செய்தனர். அவன் மேருமலையை அடைந்தான்.

மேருமலையை அடைந்த உக்கிர பாண்டியன் மேருமலையை உடனே வரும்படி அழைத்தான். மேருமலை உடன் வராமல் காலம் தாழ்த்தலாயிற்று. அதனால் கோபம் கொண்ட பாண்டியன் அம்மலையின் செருக்கு நீங்குமாறு அம்மலையின் சிகரத்தில் செண்டினால் அடித்தான். அவ்வடி பட்டதனால் மேருமலை அசைந்து துடித்தது. அம்மலையைச் சுற்றியுள்ளவை அனைத்தும் நடுநடுங்கின.

இவ்வாறு அடிபட்ட பின்பு மேருமலை எட்டுத் தோள்களும் நான்கு தலைகளும், ஒரு வெண் குடையும் கொண்ட உருவத்துடன் பாண்டியன் முன்பு வந்து நின்றது. உடனே பாண்டியன் கோபம் தணிந்து, "நீ காலம் தாழ்த்தி வந்தமைக்கு என்ன காரணம்?" என்று கேட்டான். உடனே அம்மலை, "நம்பியே! நான் தினந்தோறும் இவ்வுருவத்துடன் அங்கயற் கண்ணம்மையையும் சோமசுந்தரக் கடவுளையும் வழிபடும் நியமம் பூண்டேன். இன்று ஒரு பெண்ணின் காம இன்பத்தில் ஈடுபட்டேன். அதனால் இறைவனின் திருவடிகளை மறந்தேன். அப்பாவத்தின் காரணமாகக் காலம் தாழ்ந்து வந்து தங்களிடம் அடியும் பட்டேன். அது இருக்கட்டும். தாங்கள் வந்த காரணம் யாது? அதனைச் சொல்லும்" என்றது.

உடனே பாண்டியன், "நான் பொருளை விரும்பி வந்தேன்" என்றான். மேருமலை, "ஐயனே நீ விரும்பிய செம்பொன், அதோ அந்த மாமரத்தின் அடியில் ஓர் அறையில் பாறையால் மூடிவைக்கப்பட்டுள்ளது" என்று கூறி அப்பொன் இருக்குமிடத்தையும் தன் கையால் சுட்டிக் காட்டியது. உக்கிர பாண்டியன் உடனே அப்பொன்னறையின் அருகே சென்றான். மூடிய பாறையை நீக்கி வேண்டிய அளவு

பொன் எடுத்துக் கொண்டான். முன்போலவே மூடி அதன் மேல் தன் இலச்சினையை இட்டான். பின்னர் தன் சேனையோடு புறப்பட்டு மதுரையை அடைந்தான்.

மதுரையை அடைந்தவன் சோமசுந்தரக் கடவுளை வணங்கினான். பின்னர் அரண்மனையை அடைந்தான். தான் கொண்டு வந்த பொன்னைக் கொண்டு தன் குடிகளின் பசித் துன்பத்தைப் போக்கினான். நாட்டில் அனைவரும் மீண்டும் மகிழ்வுடன் வாழத் தொடங்கினர். சிவபெருமானின் ஆணையால் மீண்டும் கிரகங்கள் தத்தம் பழைய நிலையை அடைந்தன. பாண்டிய நாட்டில் மீண்டும் மழை பெய்தது. அதனால் உயிர்கள் பசித்துன்பம் நீங்கி இன்பமாய் வாழ்ந்தன.

இவ்வாறு சிறப்புடன் ஆண்ட உக்கிரவழுதி காளைப் பருவத்தினனான தன் மகன் வீரபாண்டியனுக்கு முடிசூட்டித் தன் அரசுரிமையைத் தந்தான். முடிவில் உக்கிர பாண்டியன் சோமசுந்தரக் கடவுளின் திருவடி நிழலில் இரண்டறக் கலந்தான்.

16. வேதத்துக்குப் பொருள் அருளிச் செய்த படலம்

ஒரு காலத்தில் பதினான்கு உலகங்களும் அடங்கின. ஊழிக்காலம் வர, மறைகளும் ஒடுங்கின. பின்னர் சிவபெருமான் திருமுன்னர் யாவும் தோன்றின. அப்போது இறைவன் திருவாக்கில் இருந்து பிரணவம் தோன்றியது. அதிலிருந்து வேதங்கள் தோன்றின. கண்ணுவர், கருக்கர் முதலிய முனிவர்கள் அவ்வேதங்களை ஓதி அவற்றின் உட்பொருளை அறிய முடியாமல் மயங்கி இருந்தனர். அப்போது அரபத்தர் என்ற முனிவர் அங்கு வந்தார். அம்முனிவனிடம், கண்ணுவரும் கருக்கரும், "ஐயனே! சிவபெருமான் அருளிச் செய்த வேதங்களைப் பயின்றோம்.

ஆனால், அதன் உட்பொருள் உணர முடியவில்லை. அதை உணர்த்தும் குருவும் கிடைக்கப் பெற்றிலோம். ஆதலால் இதற்குத் தக்க யோசனை யாது?" என்று கேட்டனர்.

அதுகேட்ட அரபத்தர் "முனிவர்களே! வேதத்தை அருளிச் செய்த சிவபெருமானே குருவாக வந்து அவ்வேதத்தின் பொருளை உணர்த்த வேண்டும். அஃதன்றி வேறு ஆலோசனை யாதுளது?" என்றார். அத்துடன் "மதுரை நகரில் எழுந்தருளி இருக்கும் தட்சணாமூர்த்தியே உங்களுக்கு வேதத்தின் பொருளை உணர்த்தியருளுவார். நீங்கள் அங்குச் சென்று தவம் செய்யுங்கள்" என்றும் கூறியருளினார்.

கண்ணுவர் முதலிய முனிவர்கள் அரபத்தரை வணங்கி விடைபெற்று மதுரையை அடைந்தனர். பொற்றாமரைத் தீர்த்தத்தில் நீராடி, இறைவனை அடைந்து வணங்கி, "இறைவா! வேதத்தின் பொருளை உணராது உள்ளம் மயங்கி வாடிய எங்களுக்கு நீரே வேதங்கட்குப் பொருளாய் நின்றருளினீர். அவ்வேதங்கட்கு உம்மையன்றி வேறு பொருள் யாது?" என்று கூறினர். உமையம்மையையும் அவ்வாறே சென்று வணங்கினர். இவ்வாறு அம்முனிவர்கள் கார்த்திகை பௌர்ணமி முதல் அடுத்த ஆண்டு கார்த்திகை பௌர்ணமி வரை ஓராண்டு பூசை செய்து வந்தார்கள்.

பின்னர் முனிவர்கள் அதிசயிக்க இறைவர் ஒரு பிராமணக் குருவடிவாய், பதினாறு வயதுடையவராய், முப்பத்திரண்டு இலட்சணமும் பொருந்தியவராய் வந்தார். அக் குருவின் கையில் சிவஞான போதம் எழுதிய நூல் இருந்தது. அக்குருவைக் கண்ட முனிவர்கள் அவரை அடைந்து வணங்கி, "அளவற்ற கலைகட்கு இருப்பிடமானவரே! நாங்கள் உய்யும் பொருட்டு வேதங்களின் பொருளை இப்பொழுது உபதேசித்தருள வேண்டும்" என்று விண்ணப்பம் செய்தனர்.

உடனே குருவானவர், அம்முனிவர்கட்கு வேதங்களின் உட்பொருளை அருளிச் செய்யத் தொடங்கினார்.

சிவலிங்கமும் வேதமும் வேறல்ல என்பதையும், பிரணவத் தோற்றம் வேதாகமங்களின் உற்பத்தி, சிவபெருமான் வீடளித்தல் ஞான காண்டம், கரும காண்டம், வைதிகமும் சைவமும் ஆகிய இவற்றை அவர்கட்கு உபதேசித்தருளினார். இவ்வாறு உபதேசித்த பின்னர் கண்ணுவர் முதலிய முனிவர்களின் முதுகில் தமது திருக்கரத்தால் தடவிக் கொடுத்து விட்டுச் சிவலிங்கத்துட்சென்று மறைந்தார்.

17. மாணிக்கம் விற்ற படலம்

வீரபாண்டிய மன்னனுக்குப் பல காமக்கிழத்தியர் இருந்தனர். அவர்களுக்குப் பல பிள்ளைகள் பிறந்து தீய ஒழுக்கம் உடையவராய் வளர்ந்து வந்தனர். இருப்பினும் மன்னனுக்குத் தன் குல மனைவியின் மூலம் ஒரு குழந்தை யேனும் பிறக்கவில்லை. அதனால் துன்பமடைந்த வீரபாண்டியனும் அவன் குல மனைவியும் சோமசுந்தரப் பெருமானை அடைந்து அட்டம், சதுர்த்தி சோமவாரம் முதலிய விரதங்களை அனுஷ்டித்து வந்தனர். அதன் பலனால் அவர்கட்கு ஒரு சற்புத்திரன் தோன்றினான்.

அச்செல்வன் அழகுற வளர்ந்து வரும் காலத்தில் வீரபாண்டியன் ஒரு நாள் வேட்டைக்குச் சென்றான். அங்குப் புலியினால் கொல்லப்பட்டுத் தேவர்கட்கு நல்விருந்தினன் ஆனான். நகர மக்கள் அச்செய்தியால் துன்பமடைந்தனர். இந்தச் சமயத்தைப் பயன்படுத்திக்கொண்டு அவன் காமக் கிழத்தியரின் புதல்வர்கள் அரசனின் கிரீடத்தையும், பலவகை ஆபரணங்களையும் செல்வங்களையும், யானை, குதிரை போன்றவற்றையும் கவர்ந்து கொண்டு ஓடி விட்டனர். அமைச்சரின் இளம் குமரனைக் கொண்டு வீரபாண்டியனுக்கு இறுதிச் சடங்குகளைச் செய்து முடித்தனர்.

பின்னர் அமைச்சர்கள், வீரபாண்டியனின் குமாரனுக்கு முடிசூட்ட எண்ணி கருவூலத்தைத் திறந்து பார்த்தனர். அங்கு நவமணிகள் இழைத்த முடியும் வேறு பொருள்களும் காணாது திகைத்தனர். மனம் வருந்தினர். அவையாவற்றையும் காமக்கிழத்தியரின் புதல்வர்களே கொண்டு போயினர் என்று உணர்ந்தனர். "வேறு மணி முடி ஒன்று செய்யலாம் என்றாலோ உயர்ந்த பெரிய மணிகள் இல்லை. முடி இல்லையாயின் அரசும் இல்லை. அரசு இல்லையாயின் மக்கள் துன்பம் அடைவர். இப்போது நாம் செய்வது யாது?" என்று எண்ணித் திகைத்திருந்தனர்.

பின்னர் அரச குமாரனை அழைத்துக் கொண்டு இறைவனை வணங்க எண்ணிச் சொக்கலிங்கப் பெருமானின் திருமுன்னர் சென்று கொண்டிருந்தனர். அப்போது இறைவர் ஒரு மணி வணிகராய் வேடம் கொண்டு அவர்கள் எதிரே வந்து தோன்றினார். அங்ஙனம் வந்த வணிகர் அமைச்சர் முதலானவர்களை நோக்கி, "நீங்கள் கவலை கொண்ட மனத்தினராய் வரும் செய்தி யாது?" என்று வினவினார். மந்திரிகள் முன் நிகழ்ந்தவற்றையெல்லாம் முறைப்படி கூறினர். அதைக்கேட்ட இறைவராகிய வணிகர், "நீங்கள் கவலை கொள்ள வேண்டாம். என்னிடம் நவரத்தினங்கள் உள்ளன. அவற்றைக் காட்டுகின்றேன். பாருங்கள் அவை பலகோடி பொன் விலையுள்ளன." என்று கூறிக் கிழ்த்திசையினை நோக்கி அமர்ந்து, ஒரு கரிய கம்பளத்தை விரித்தார்.

அக்கம்பளத்தின் எட்டுத் திசைகளிலும் முறையே முத்து முதலிய எட்டு மணிகளை எடுத்து வைத்து, "இம்மணிகள் வலன் என்னும் அரசனின் உடற்கூறுகள்" என்று கூறினார். உடனே அமைச்சர்கள், "அவ் வலன் என்பவன் யார்? அவன் உடல் மணிகள் ஆயினமை எப்படி?" என்று கேட்டனர்.

அவ்வணிகர் அமைச்சர்களிடம் அவ் 'வலன்' என்பவனின் வரலாற்றினைச் சொல்லத் தொடங்கினார். "வலன் என்பவன் ஓர் அரசன். அவன் சிவபெருமானை வேண்டி, 'போரின்கண் யாராலும் பிளவுபடாத வரம் வேண்டும். அங்ஙனம் இன்றி ஊழ்வினையால் இறந்தால் உடல் உறுப்புகள் நவரத்தினங்களாக வேண்டும்' என்று வரம் பெற்றான். உடனே வலன் இந்திர உலகம் சென்றான். இந்திரனை வென்றான். இந்திரன், 'ஒரு சூழ்ச்சி செய்து வலனைக் கொல்ல வேண்டும்' என்று கருதினான். எனவே இந்திரன் தேவர்களை அழைத்துக் கொண்டு வலனை அடைந்தான். அவன் வலனிடம், "இறவாத புகழ் பெற்றவனே? வெற்றி மிக்கவனே! உன் தோள் வலியும் புகழும் எட்டுத் திசைகளிலும் பரவியுள்ளது. அப் புகழ்ச்சியைக் கண்டு நான் மகிழ்வடைகிறேன். அதனால் உனக்கு வேண்டிய வரம் யாது? அதனைக் கேள்" என்றான்.

இந்திரன் கூறியதைக் கேட்ட வலன், இருகை தட்டி ஆரவாரம் செய்து நகைத்தான். "சிவபெருமான் எனக்கு அருளிய வரங்கள் இருக்கவும், வேறு வரம் எனக்கு எதற்கு? என்னிடம் உனக்கு வேண்டிய வரம் யாது? கேள் தருகிறேன்" என்று கூறினான்.

அப்போது இந்திரன் மகிழ்வடைந்து, "நன்று, வலனே! நான் சிவபெருமான் எழுந்தருளியுள்ள வெள்ளி மலைச் சாரலில் ஒரு வேள்வியினைச் செய்வேன். அப்போது தேவர்களுக்கு அவியூட்ட ஒரு பசுவாகி வரவேண்டும்" என்றான். அதைக் கேட்ட வலாசுரன், "அங்ஙனம் வருவேன்" என்று கூறினான். அதன்படியே இந்திரன் வேள்வி செய்ய, வலன் வேள்விப் பசுவாகி இந்திரனை அடைந்தான். வேள்விப் பசுவாகி வந்து நின்ற அவனை மூச்சடக்கித் தேவர்கள் கொன்றனர். இறந்துபோன வலன் சத்தியலோகம்

அடைந்தான். இந்திரன் வலனின் உடலை தீயில் இட்டுத் தேவர்களுக்கு உண்பித்து வேள்வியைச் செய்து முடித்தான்.

வேள்விப் பசுவாய் வந்த வலனின் இரத்தம் மாணிக்கம், பற்கள் முத்து, மயிர் வயிடூரியம், எலும்பு வயிரம், பித்தம் மரகதம், நிணம் கோமேதகம், தசை பவளம், கண்கள் நீலம். கோழை புருடராகம் என நவமணிகள் தோன்றிற்று" என்று இறைவர் வலன் வரலாற்றைக் கூற நவமணிகள் தோன்றிய இடங்களையும், அவற்றின் நிறங்களையும், சாதிகளையும், குணங்களையும் குற்றங்களையும் உடலில் அணிபவர் அடையும் பயன்களையும் கூறி முடித்தார்.

பின்னர் அவர் வடக்குத் திசையினை நோக்கி இருந்து மணிகளைக் கையில் எடுத்து, "இவ்வரசிளங் குமரனுக்கு நிறைந்த செல்வமும், நீண்ட வாழ்நாளும் அமைக" என்று வாழ்த்தி வழங்கினார். அரசகுமாரனும் சொக்கலிங்கப் பெருமானைப் பணிந்து அம்மணிகளைக் கையில் வாங்கினான். அப்போது வணிகராக வந்த சோமசுந்தரக் கடவுள் "இவ்வொன்பான் மணிகளைக் கொண்டு மணிமகுடம் செய்து சூட்டி, இக்குமாரனுக்கு "அபிடேக பாண்டியன்" என்று பெயரிட்டு அழைப்பீராக" என்றார். இவ்வாறு கூறியவுடன் அவ்வணிகேசராகிய இறைவர் மறைந்தருளினார்.

இப்பூமியில் வணிகராய் வந்தவர் இறைவரே என்று அமைச்சர்கள் உணர்ந்தனர். உடனே சோமசுந்தரக் கடவுள் திருமுன்னர் சென்று அரசகுமாரன் விழுந்து வணங்கினான். சான்றோர் அவனை வாழ்த்தினர். மக்கள் ஆசி கூற அரசிளங் குமரன் அரண்மனை அடைந்தான்.

பின்னர் நவமணிகளைக் கொடுத்து மணிமகுடம் செய்தனர். நல்ல நாளில் அரசிளங் குமரனுக்கு முடிசூட்டி, "அபிடேக பாண்டியன்" எனப் பெயரிட்டனர். அபிடேக

பாண்டியன் நகர் வலம் வந்து இறைவனை வணங்கி அரண்மனை அடைந்தான். அவன் பகைவர்களை வென்று நீண்ட நாள் உலகாண்டான். முன்னர் மகுடம் பொன் பொருள் முதலியவற்றைக் கவர்ந்து சென்ற காமக்கிழத்தியரின் பிள்ளைகள் வேற்றூரில் ஒளிந்திருந்தனர். அவர்களைச் சிலர் பிடித்து வந்து அரசன் முன் ஒப்புவித்தனர். அவர் கவர்ந்து சென்ற பொருள் முழுவதையும் பெற்றுக் கொண்டு சிறப்புடன் ஆட்சி புரிந்தான்.

18. வருணன் விட்ட கடலை வற்றச் செய்த படலம்

சித்திரை மாதத்தின் சித்திரை நட்சத்திரத்தில் வெள்ளியம்பலத்துள் ஆடும் பெருமானாகிய சொக்கலிங்கப் பெருமானிடம் எல்லையற்ற அன்பின் காரணமாக விசேட பூசை செய்யத் தொடங்கினான் பாண்டியன். இவ்வாறு பூசை செய்யும்போது, ஆண்டாண்டு தோறும் அதே நாளில் பூசை செய்யும் இந்திரனின் பூசை சிறிது காலம் தாழ்ந்தது. அதனால் சிறிது கால தாமதமாக இந்திரன் தேவலோகம் அடைந்தான்.

அப்போது வருணதேவன் வயிற்று வலியினால் துன்பப்பட்டுக் கொண்டிருந்தான். தன் நோய் நீங்க வேண்டி இந்திரனை அடைந்து சொக்கலிங்கப் பெருமானை வணங்கி உடல் நோயைப் போக்கிக் கொள்ளலாம் என்று உணர்ந்தான்.

உடனே வருணதேவன் மதுரையம்பதியை அடைந்தான். கடலினை விரைந்து அழைத்து, “நீ மதுரை நகரம் முழுவதையும் அழிப்பாயாக” என்று கட்டளை இட்டான். உடன் கடல் பொங்கி மேலெழுந்தது. மரங்களையும் மாட வரிசைகளையும்

பெயர்த்து வீசியது. அது கண்ட தேவர்கள் "இம்மதுரைக்கு அழிவு வந்து விட்டது" என்று கலங்கிச் சோமசுந்தரக் கடவுளைச் சென்று வணங்கினர். நகர மக்களும் மனம் கலங்கி நடுங்கினர்.

இதனைக் கண்ட அபிடேக பாண்டியன், "சிவபெருமானுடைய திருவடிகளே சரணம்" என்று துணிந்து சோமசுந்தரக் கடவுளை அடைந்து 'ஓலம், ஓலம்,' (அடைக்கலம் அடைக்கலம்) என்று முறையிட்டான். உடனே இறைவர் அபிடேக பாண்டியன் முன் தோன்றி, "அஞ்ச வேண்டாம்" என்று அருளிச் செய்தார். தன் சடையில் உள்ள நான்கு மேகங்களை அழைத்து, "இம் மதுரை மாநகரை அழிக்க வரும் கடலை, அது வற்றும் வண்ணம் நீங்கள் விரைந்து சென்று பருகுங்கள்" என்று பணித்தார்.

உடனே அந்த நான்கு மேகங்களும் அக்கடல் நீரை உறிஞ்சின. மேகங்கள் நீரை உறிஞ்சியவுடன் அக்கடல் வற்றியது. அப்போது நகரமக்களும் தேவர்களும் அபிடேக பாண்டியனும் சோமசுந்தரப் பெருமானின் திருவிளையாடலை எண்ணி மகிழ்ந்து புகழ்ந்து, இன்பத்தில் மூழ்கினர்.

- மதுரைக் காண்டம் முற்றிற்று -

இரண்டாவது கூடற் காண்டம்

19. நான்மாடக் கூடலான படலம்

கடலின் தலைவனான வருணன் தன் செயல் தவறினமையால் வெட்கமடைந்தான். பின் அளவில்லாத கோபம் கொண்டான். இது சோமசுந்தரக் கடவுளின்

திருவிளையாடல் என்று உணராமல் ஏழு மேகங்களை அழைத்து, "இடித்து மதுரையில் மழையினைப் பெய்து நீங்கள் மதுரை மாநகர் முழுவதையும் அழிக்கக் கடவீர்," என்றான். உடனே கரிய ஏழு மேகங்களும் சென்று இடித்துத் திசைகள் எல்லாம் நடுங்கும்படி மழையைப் பொழிந்தன. கொடிய பெருங்காற்றும் மதுரை மாநகரைத் தாக்கியதால், பாண்டியனும் நகர மக்களும், "உலகம் அழியும் நாள் இதுவே" என்று எண்ணி மனம் மயங்கி வாடினார்கள். பாண்டியன், சிவபெருமான் "இன்னமும் காத்தருள்வார்" என்று எண்ணித் திருக்கோயிலை அடைந்து வணங்கினான்.

உடனே சோமசுந்தரக் கடவுள் நான்கு வேதங்களை நோக்கி, "நீங்கள் இம்மதுரையின் நான்கு எல்லைகளையும் சூழ்ந்து நான்கு மாடங்களாகி ஏழு மேகங்களையும் விலக்குங்கள்" என்று விடுத்தருளினார். உடனே அவ்வேதங்கள் நான்கும் நான்கு மாடங்களாகி வளைந்து நான்கு திசைகளிலும் சூழ்ந்து கொண்டன. அம்மேகங்கள் தாம் ஒரு குடிசையாகி மாடங்களும் கோபுரங்களும் செய் குன்றுகளும் ஆகிய இவை தூண்போல நின்று தாங்க மதுரை நகர் முழுவதும் மூடிக்கொண்டன. எனவே, அந்நகரின் உள்ளே இருந்த அரசன் முதல் அனைவரும் மகிழ்வுடன் இருந்தனர். வருணன் விட்ட மேகங்களின் மழைநீர் மதுரையில் புகாவண்ணம் இறைவனின் நான்கு மேகங்கள் தடுத்து நின்றன. இதனால் நாணமுற்று வருணதேவனும் அவன் மேகங்களும் நின்றன.

வெட்கமடைந்த வருணன், அச்சம் கொண்டு பொற்றாமரை தீர்த்தத்தை அடைந்தான். அதனை நெருங்கியவுடன் அவன் வயிற்றுவலி நீங்கிற்று. பேரன்புடன் வருணன் பொற்றாமரைத் தீர்த்தத்தில் நீராடிச் சோமசுந்தரக் கடவுளைப் பூசித்தான். சோமசுந்தரக் கடவுள் வருணன் செய்த வழிபாட்டிற்கு மகிழ்ந்து, "வருணனே! நீ வேண்டுவது யாது?" என்று கேட்டார்.

உடனே வருணன், "எந்தையே! தமியேன் இந்திரன் கூறிய முறைப்படி பொற்றாமரையில் நீராடி வயிற்றுவலி நீங்கப் பெற்றேன். அதனை நெருங்கியவுடனே அவ்வலி நீங்கிற்றென்றால் இப் பொற்றாமரைத் தீர்த்தமே பிணியனைத்தையும் தீர்ப்பதன்றோ? அடியேன் செய்த பிழையினைப் பொறுத்தருள வேண்டும்" என்று கூறித் துதித்தான். பின் இறைவரிடம் வரங்களைப் பெற்றுத் தன் நகரம் அடைந்தான்.

வருணன் விட்ட மேகங்களைத் தடுக்க இறைவன் தன் சடையினின்று விடுத்த நான்கு மேகங்கள் ஒன்று கூடித் தடுத்தமையாலே மதுரைக்கு அன்று முதல் 'நான்மாடக் கூடல்' என்ற பெயர் ஏற்பட்டது.

20. எல்லாம் வல்ல சித்தரான படலம்

நவமணிகள் பதித்த திருமுடியினைச் சூடிய அபிடேக பாண்டியனும் மற்றவர்களும் இம்மை மறுமைக்குரிய பயன்களை அடைய வேண்டி சோமசுந்தரக் கடவுள் ஒரு சித்தவேடம் தாங்கி வந்தார். அவ்வாறு சித்த வேடம் தாங்கி வந்த இறைவர் தெருக்கள், நாற்சந்தி போன்ற எல்லா இடங்களிலும் காட்சியளித்தார். இச் சித்த மூர்த்தி பலவிதமான திருவிளையாடல்களைச் செய்த வண்ணம் இருந்தார். அதனால் அங்குள்ள மக்கள் அனைவரும் திகைப்புற்றுத் தத்தம் செய் தொழில்களை மறந்திருந்தனர். இந்நிகழ்ச்சிகளை எல்லாம் அபிடேக பாண்டியன் அறிந்து, "அந்த வித்தக சித்த மூர்த்தியை இங்கே அழைத்து வாருங்கள்" என்று கூறிச் சிலரை அனுப்பினான்.

அவர்கள் சித்தமூர்த்தியை அடைந்து, "அரசன் முன் தாங்கள் எழுந்தருள வேண்டும்" என்று பிரார்த்தித்தனர். ஆனால் சித்தமூர்த்தி மன்னன் திருமுன்னர் வர மறுத்துவிட்டார். இதனை அவர்கள் அரசனுக்குத் தெரிவித்தனர். அது கேட்ட பாண்டியன், "இறைவன் திருவருளைப் பெற்றவர்கள் பிரமன் திருமால் முதலிய தேவர்களையே மதியார்கள், மன்னரையா மதிப்பர்" என்று சொல்லி வாளா இருந்தான்.

21. கல்லானைக்குக் கரும்பருத்திய படலம்

உடனே பாண்டியன், "பெரியோரை மதிப்பதே இயல்பு, நானே சென்று அவரைக் காண்கிறேன்" என்று கூறி அவரை காணச் சென்றான். அபிடேக பாண்டியனின் உள்ளக் குறிப்பை உணர்ந்த சித்த மூர்த்தி தமது இந்திர விமானத்தின் வடமேற்குத் திசையில் எழுந்தருளியிருந்தார். அன்று தைமாத முதல் நாள். பாண்டியன் திருக்கோயிலுக்கு சென்று வணங்கி வலம் வரும்போது அவனுடன் வந்திருந்த மெய்காப்பாளர்கள் சித்தமூர்த்தியைக் கண்டு பிரம்பினை நீட்டி "இவ்விடத்தை விட்டு எழுந்து போகக் கடவீர்" என்று கூறினர்.

அம்மெய்காப்பாளருக்குப் பின்னால் வந்து கொண்டிருந்த பாண்டியன், சித்தமூர்த்தியை அணுகி, "உமது பெயர் என்ன? உமது நாடும் ஊரும் யாது? என்று வினவினான். உடனே சித்த மூர்த்தி, "அப்பா! நாம் எந்த நாட்டிலும் எந்த நகரிலும் திரிவோம். ஆயினும் இப்போது நாம் தங்கி இருக்கும் ஸ்தலம் காசி ஆகும். அடியார்களே எம் உறவினர். தில்லைவனம் முதல் எல்லாச் சிவத் தலங்களையும்

வணங்க வந்தோம். எந்நாளும் வித்தை செய்து கொண்டு திரியும் சித்தர் யாம். பாண்டியனே! உம்மிடத்தில் நாம் பெறத் தக்கது ஒன்றும் இல்லை" என்று கூறிப் புன்னகை புரிந்தருளினார்.

இவ்வாறு சித்தமூர்த்தியார் கூறியவற்றைக் கேட்ட பாண்டியன், "இவரை எதனால் அளந்தறிவேன்?" என்று எண்ணினான். அப்போது வேளாளன் ஒருவன் செழித்தோங்கிய கரும்பொன்றினைக் கையில் கொண்டுவந்து அரசனை வணங்கி நின்றான். அரசன் அக்கரும்பினைக் கையில் வாங்கிக் கொண்டு சித்தமூர்த்திகளை நோக்கி, "வல்லவரே! இதோ நிற்கும் இக் கல்லானைக்கு இக் கரும்பினை உண்பிக்க வேண்டும். அவ்வாறு செய்தால் எல்லாம் வல்ல சித்தர் நீரே! மதுரையில் எழுந்தருளி இருக்கும் சோமசுந்தரக் கடவுளும் நீரே! நீர் விரும்பியதை அளிப்பேன்" என்றான்.

பாண்டியன் கூறியதைக் கேட்ட சித்தமூர்த்தி "பாண்டியனே! எமக்கு உம்மால் வரும் பயன் ஒன்றும் இல்லை. இருப்பினும் இந்தக் கல்லானை இதோ கரும்பினைக் கடிக்கின்றதைப் பார்" என்று கூறினார். பின் கல்லானை மீது சித்த மூர்த்தி சிறிது கடைக்கண் சார்த்தியருளினார் என்ன வியப்பு! உடனே அக்கல்லானை கண்ணைத் திறந்தது. வாய் திறந்து பிளிறியது. பாண்டியன் கையில் உள்ள கரும்பை வாங்கிக் கடித்துத் தின்றது.

சித்தமூர்த்தி மீண்டும் யானையின் மீது கடைக்கண் சார்த்தியருளினார். உடனே கல்லானை பாண்டியனுடைய கழுத்தில் உள்ள முத்தாலாகிய கண்ட மாலையை எட்டிப் பிடுங்கியது. உடனே மெய்காவலர் கோபம் கொண்டு யானையை அடிக்கக் கோலினை ஓங்கி நெருங்கினர். சித்த மூர்த்தி கோபம் கொண்டு அவர்களைப் பார்த்தார். அதற்குள்

யானை மாலையை விழுங்கி விட்டது. பாண்டியன் மிக்க கோபம் கொண்டான். அதனைக் கண்ட மெய்காவலர் சித்தமூர்த்தியை அடிக்க நெருங்கினர்.

உடனே சித்தமூர்த்தி புன்னகையுடன் 'நில்லுங்கள்' என்றார். உடனே அவ்வீரர்கள் வைத்த அடியைப் பெயர்க்க முடியாமல் நடுங்கி ஓவியம் போல் அப்படியே அசைவற்று நின்றனர். அதனைக் கண்ட பாண்டியன் கோபம் மாறி, அச்சம் கொண்டு சித்தமூர்த்தியின் பாதங்களில் விழுந்து வணங்கி, "எளியேன் பிழையைப் பொறுத்தருள்க" என்று வேண்டினான்.

உடனே சித்த மூர்த்தி மனம் மகிழ்ந்து "வேண்டும் வரம் கேள்" என்று அருளினார். உடனே பாண்டியன், "நற்புத்திரப் பேறு அருள்க" என்று வேண்டினான். உடனே சித்தமூர்த்தி அங்ஙனமே அருள் புரிந்தார்: பின்னர் சித்தமூர்த்தி யானையின் மீது அருள் நோக்கம் வைத்தார். உடனே யானை தனது துதிக்கையினை நீட்டி முத்துமாலையைப் பாண்டியனிடம் கொடுத்தது. பாண்டியன் அதனை வாங்கி அணிந்து கொண்டான். அப்போது சித்த மூர்த்தி மறைந்தருளினார். யானையும் பழையபடி கல்லானையாக மாறிற்று.

இது இறைவனின் திருவிளையாடலே என்று உணர்ந்த அபிடேக பாண்டியன் இறைவனை வணங்கித் துதித்து அபராதக் காணிக்கையும் செலுத்தி நின்றான். பின்னர் அரண்மனை அடைந்து ஆட்சி புரிந்து வந்தான். சித்த மூர்த்தியின் திருவருளால் 'விக்கிரமன்' என்னும் புதல்வனைப் பெற்றான். விக்கிரமனுக்கு முடி சூட்டி அவனிடம் நாட்டை ஒப்புவித்தான். இறுதியில் அபிடேக பாண்டியன் சிவலோகம் சேர்ந்தான்.

22. யானை எய்த படலம்

எட்டுத் திக்குகளும் புகழ் பரவும்படி 'விக்கிரம பாண்டியன்' ஆட்சி புரிந்து வந்தான். விண்ணினின்று இறங்கிய விமானத்தின் அருகில் திருக்கோயில் ஒன்று எடுத்தான். அதில் சித்தமூர்த்தியின் திருவுருவம் அமைத்துத் தினமும் வழிபட்டு வந்தான். அப்போது சோழன் ஒருவன் காஞ்சியில் இருந்து ஆட்சி செய்து வந்தான். அவன் சூரிய மரபில் தோன்றியவன். அவன் சமண மதமாகிய புறநெறியில் நின்று பாண்டியனோடு பகைமை கொண்டிருந்தான். விக்கிரம பாண்டியனை நேரில் வந்து எதிர்த்துப் போரிட ஆற்றாது ஓடி, ஒரு சூழ்ச்சியில் கொல்லக் கருதினான்.

அதனால் எட்டு மலைகளில் அருகில் வாழும் சமணக் குரவர் எண்ணாயிரவர்க்கும் தனித்தனியே ஓலை எழுதி அனுப்பினான். ஓலையைக் கண்ட சமணர்கள் காஞ்சி மாநகரில் ஒன்று கூடினர். சோழன் முடியின்மேல் மயில் தோகையை எடுத்து வீசி ஆசி கூறினர். உடனே சோழ மன்னன் சமணர்களை நோக்கி, "நீங்கள் அபிராச வேள்வி செய்து விக்கிரம பாண்டியனைக் கொல்வீரேல் எனது நாட்டின் பாதியை உங்களுக்குத் தருவேன்" என்றான்.

சமணர்கள் அதற்கு உடன்பட்டுச் சென்றனர். பாலியாற்றங்கரையில் யாகசாலை ஒன்று அமைத்தனர். ஒரு ஓம குண்டத்தைச் செய்தனர். அதில் எட்டி முதலிய தீய விறகுகளை இட்டு வேம்பின் நெய்யை வார்த்தனர். நச்சுப் பிராணிகளின் ஊனையும், மிளகுப் பொடி கலந்த எண்ணெயையும் நிறையப் பெய்து அபிசார வேள்வியைச் செய்தார்கள். அவ்வேள்வித் தீயினால் அருகில் உள்ள நந்தவனம், சோலை, காடுகள் முதலியன கருகின.

அப்போது அவ்வேள்வித் தீயினின்று ஒரு பெரிய கொடிய யானை ஒன்று எழுந்தது. அவ்யானையை நோக்கிச்

சமணர்கள், "நீ விரைந்து சென்ற விக்கிரம பாண்டியனை மதுரை நகரத்தோடு அழித்து விட்டு வா" என்று கூறித் தென் திசைக்கண் அதனைச் செலுத்தி விடுத்தனர். இடிபோல் பிளிறிக் கொண்டு யானை புறப்பட்டுச் சென்றது. சோழனுடைய சேனையும், சமணர்களும் அந்த யானையை பின்பற்றிச் சென்றனர். வடவைத்தீ நடந்து வருவது போன்று விரைந்து யானை மதுரையை நோக்கி நடந்து சென்றது.

யானையினைக் கண்டவர்கள் விரைந்து சென்று பாண்டியனிடம் இதனைக் கூறினர். அதைக் கேட்ட விக்கிரம பாண்டியன் சோமசுந்தரக் கடவுளின் திருமுன்னர் சென்று பலமுறை வணங்கி, "எம்பெருமானே! இந்த யானையைக் கொன்று அடியேனைக் காத்தருள வேண்டும்" என்று குறையிரந்து வேண்டினான்.

அப்போது விண்ணிலிருந்து, "பாண்டியனே! நாம் ஒரு வில் ஏந்திய சேவகனாய் வந்து அக்கொடிய யானையின் உயிரைக் கவருவோம். அதற்கு முன் இந்நகரின் கீழ்த் திசையில் ஓர் அட்டாலை மண்டபம் செய்விப்பாய்" என்று ஒரு திருவாக்கு எழுந்தது.

பாண்டியன் அது கேட்டு மனம் மகிழ்ந்து, இறைவனை வணங்கிச் சென்று கிழ்த்திசையில் பதினாறு தூண்கள் அமைந்த ஓர் அட்டாலை மண்டபத்தை உண்டாக்கினான். உடனே இறைவர் காளைப் பருவம் உடைய வேட்டுவச் சிறுவனாகத் தோன்றி வந்தார். அட்டாலை மண்டபத்தில் ஏறி அந்த யானையின் வரவை எதிர்நோக்கிக் காத்திருந்தார்.

சற்று நேரத்தில் ஐந்து கூப்பிடு தூரத்தில் அவ்யானை வருதலை விற்சேவகராய் வந்த இறைவர் கண்டார். தமது வில்லை எடுத்து நாணினைப் பூட்டி வளைத்தார். கொடிய நரசிங்கக் கணையை வைத்து நாணினை இழுத்துவிட்டார். அக்கணை விரைந்து சென்று அவ்யானையின் மத்தகத்தைக் கிழித்தது. கொடிய யானை அலறி நிலத்தில் விழுந்து இறந்தது.

யானை இறந்ததைக் கண்ட சமணர்கள் மிக்க மன வருத்தம் அடைந்தனர். இறந்து கிடந்த யானையைக் கழுகுகளும் பருந்துகளும் வட்டமிட்டன. விக்கிரமபாண்டியர் இதனைக் கண்டு பெருமகிழ்வடைந்தார்.

யானையைப் பின் தொடர்ந்து வந்த சோழனின் படைகளையும் சமணர்களையும் பாண்டியமன்னன் கண்டான்; வெகுண்டான். அவன் குறிப்பினை உணர்ந்த வேற்படை ஏந்திய வீரர்கள் விரைந்தோடிச் சென்று சமணர்களைத் துரத்தினர். படைகளோடு போரிட்டனர். பாண்டியனின் படைக்கு ஆற்றமாட்டாமல் சோழனின் படைகளும் சமணர்களும் பெரும் துன்பம் அடைந்தனர். பல படைவீரர்கள் ஒளிந்து பதுங்கி ஓடினர்.

அதன் பின்னர் விக்கிரமபாண்டியன் வீரராக வந்த இறைவனின் திருவடிகளில் விழுந்து வணங்கி, "இறைவரே! நீர் இங்கே இக்கோலத்துடன் எக்காலத்தும் வீற்றிருக்க வேண்டும்" என்று பிரார்த்தித்தான். சிவபெருமான் அவன் வேண்டுகோளுக்கு இணங்கினார். பாண்டியன் இறைவனை வணங்கி அரண்மனை அடைந்தான். பின்னர் இராசசேகரன் என்னும் புதல்வனைப் பெற்றுப் புவியைப் பாதுகாத்து வந்தான். சிவபெருமான் யானையின்மீது எய்த கணையானது அங்கே உக்கிரம நரசிங்கமாக எழுந்தருளி இருந்தது. அந்நரசிங்க மூர்த்தியை 'உரோமசமுனிவர்' என்பவர் வந்து வணங்கி பெரும் பேற்றினை அடைந்தார். பிரகலாதனும் அங்கே வந்து தவம் செய்து அழியாவரம் பெற்றான்.

23. விருத்த குமார பாலரான படலம்

விக்கிரம பாண்டியன் ஆட்சிக் காலத்தில் மதுரையில் 'விருபாக்கன்' என்னும் அந்தணன் ஒருவன் வாழ்ந்து வந்தான். அவன் மனைவியின் பெயர் சுபவிரதை. அவர்கள்

நெடுங்காலம் மகப்பேறின்றிச் சிவவிரதம் மேற்கொண்டு 'கௌரி' என்னும் பெண் குழந்தையைப் பெற்றனர். கௌரிக்கு ஐந்தாண்டு நிரம்பப் பெற்றது. அவள் தந்தையை வணங்கி, "ஐயா! இப்பிறவியை ஒழிக்கும் தெய்வத் தன்மை பொருந்திய மந்திரம் யாது?" என்று கேட்டாள். விருபாக்கன் அதிசயித்து பராசக்தியின் திருமந்திரத்தைக் கௌரிக்கு உபதேசித்தான். தந்தையிடம் அம்மந்திரத்தைக் கேட்டுத் தெளிந்த கௌரி தினமும் அதனைச் சிரத்தையோடு செபித்து வந்தாள்.

விருபாக்கன் தன் மகளுக்குத் திருமணம் செய்ய வேண்டும் என்ற எண்ணமுடையவனாய் இருந்தான். கௌரிக்கு உரிய மனப்பருவம் வந்தெய்தியது. அப்போது அயலூரரைச் சேர்ந்த வைணவப் பிரமசாரி ஒருவன் கௌரியின் வீட்டிற்குப் பிச்சைவேண்டி நின்றான். அவ்வாறு வந்துநின்ற அந்த வைணவப் பிச்சைக்காரனுக்குத் தன் மகளை மணம் செய்து கொடுக்க வேண்டும் என்று விருபாக்கன் விரும்பினான். மனைவியையும் சுற்றத்தையும் ஆராயாமல் விருபாக்கன் மந்திரத்துடன் பிரமசாரியின் கையில் தாரை வார்த்துக் கொடுத்தான். அதனை அறிந்த அவன் மனைவியும் சுற்றத்தினரும், "குலம் கோத்திரம் ஆராயாமல் இவ்வாறு செய்துவிட்டாரே? பெயர் ஊர் கூடச் சரியாகத் தெரியவில்லையே! இஃது என்னே! விதியின் வழியே மதி செல்லும் என்பது இவர் விஷயத்தில் உண்மையாயிற்றே" என்று எண்ணிக் கலங்கினர்.

பின்னர் அவன் குடி குலம் முதலியவற்றை ஆராய்ந்து அனைத்தும் ஒத்திருப்பதை அறிந்தனர். ஆயினும் 'வைணவ மதக் கட்டுண்டு ஒழுகும் குற்றம் ஒன்று மட்டுமே உள்ளது' என்று எண்ணி, 'இனி எங்ஙனம் மறுப்பது?' என்று தீர்மானித்து அவனுக்கே கௌரியைத் திருமணம் செய்து கொடுத்தனர். வைணவப் பிராமணன் தன் மனைவி கௌரியோடு தன் இல்லம் வந்தடைந்தான். வைணவ மதம் மேற்கொண்டு ஒழுகும் அவன் தாய் தந்தையர் அதனைக் கண்டு மனம்

பொறாமல் வாடினர். கௌரியின் சிவவேடத்தையும் சிவசிந்தனையையும் கண்டு, அவளை நிந்திக்கத் தொடங்கினர். அவளைப் பெரிதும் துன்பப்படுத்தினர்.

ஒருநாள் அயலூரில் நடைபெறும் திருமணத்திற்குச் செல்ல எண்ணிய அவர்கள், கௌரியைத் தனியே வைத்து விட்டு வீட்டைப் பூட்டிக் கொண்டு சென்றனர். அவர்கள் சென்ற பின்னர், குற்றம் நீங்குமாறு ஒரு சிவனடியாரையும் காணப் பெறாமல், "இன்று என் கண் மாசடைகின்றது" என்று கவலைப்படத் தொடங்கினாள். அப்போது சோமசுந்தரக் கடவுள் கௌரியின் கவலைப் போக்கத் திருவுள்ளம் கொண்டு முதிர்ந்த வேதியர் வடிவம் கொண்டு கௌரியை அடைந்தார். பலநாள் உணவின்றி வருந்துபவர் போல மிக வாட்டமுடன் காணப்பட்டார்.

அவரைக் கண்ட கௌரி மிக்க அன்புடன் எழுந்து வேதியரை எதிர் கொண்டு அழைத்து ஆசனத்தில் அமர்த்திக் கைகூப்பி வணங்கி நின்றாள். வேதியர் தாம் பசியோடு வந்துள்ள செய்தியைக் கூறினார். கௌரி, "அய்யோ! வீட்டைப் பூட்டிக் கொண்டு சென்றுவிட்டார்களே என்ன செய்வேன்-" என்று சொல்லிக் கலங்கினாள். உடனே கிழவேதியர், "நீ உன் கையால் பூட்டைத் தொடு. பூட்டுத் திறந்து கொள்ளும். நீ உள்ளே சென்று சமைப்பாய்" என்று கூறினார்.

கௌரியும் அவ்வாறே செய்து உள்ளே சென்று சமையல் செய்தாள். பின் வேதியரிடம் வந்து கமண்டல நீரை, "ஏந்தி ஐயனே! திருவமுது செய்ய எழுந்தருள்க" என்று வேண்டினாள். அவ்வாறு எழுந்த முதியவரின் பாதங்களைத் தன் கைக் கமண்டலநீரால் தூய்மை செய்தாள். உள்ளே அழைத்துச் சென்று அமுது படைத்தாள். அதனை உண்ட முதியவர் தேவாமிர்தம் உண்டவர் போன்று மகிழ்ந்தார். முதுமையான

பருவம் நீங்கப் பெற்று இளமையான மன்மதனைப் போன்ற தோற்றத்துடன் காளைப் பருவத்தினராக நின்றார்.

அவரைக் கண்ட கற்பிற்சிறந்த கௌரி நடுநடுங்கி விட்டாள்; திகைத்து உடல் வியர்த்தாள்; வளைக்கரங்களை நெரித்தாள்; ஒருபுறம் ஒதுங்கி நின்றாள். அப்போது திருமணத்தின் பொருட்டு வெளியூர் சென்றிருந்த மாமனும் மாமியும் வீட்டின் உள்ளே வந்து புகுந்தனர். உடனே பதினாறு வயதுடைய தோற்றத்துடன் நின்ற இறையவர் கௌரியின் பொருட்டுப் பசும் குழந்தையின் வடிவத்தை மேற்கொண்டார். தரையில் விரிக்கப்பட்ட ஒரு துணியில் அழுது கொண்டு கிடந்தார்.

அழுகின்ற குழந்தையைக் கௌரியின் மாமி கண்டாள். "இக்குழந்தை ஏது?" என்று கேட்டாள். சிவபெருமானிடம் அன்பு பூண்ட கௌரி, "தேவதத்தன் என்பவன் தன் மனைவியுடன் இங்கு வந்து இக் குழந்தையைச் சற்று நேரம் பார்த்துக் கொள்வாயாக என்று கூறி இங்கு வைத்து விட்டுச் சென்றான்" என்றாள். இதனைக் கேட்டவுடன் அவள் மாமனும் மாமியும் மிகவும் கோபம் கொண்டனர். "சிவபெருமானிடம் அன்பு பூண்டவனின் குழந்தையிடம் அன்பு பூண்டவளே! நீயும் எங்களுக்கு ஆகாதவளாயினை" என்று கூறி அக்குழந்தையையும் கௌரியையும் வீட்டை விட்டுத் துரத்தி விட்டனர்.

வீட்டிலிருந்து வெளியேறிய கௌரி ஒன்றுமறியாமல் திகைத்தாள்; தாயில்லாப் பிள்ளையின் திருமுகத்தை நோக்கி உள்ளம் தளர்ந்தாள்; கூடல் நாயகனாகிய சோமசுந்தரக் கடவுளை மனத்தில் தியானித்துக் கொண்டு உமா தேவியாரின் திருமந்திரத்தை உச்சரித்தாள், "என்ன ஆச்சரியம்?" குழந்தை மறைந்தது. சிவபெருமான் உமாதேவியாருடன் இடபவாகனத்தில் ஏறி ஆகாயத்தில் காட்சி கொடுத்தார்.

அக்காட்சியைக் கண்டு கௌரி சிவானந்தக் கடலில் ஆழ்ந்தாள். உடனே கௌரிக்கு இறைவர் உமாதேவியின் சாரூபப் பதவியை அளித்து அவளை இடபவூர்தியில் ஏற்றிக்கொண்டு ஆகாய மார்க்கமாக எழுந்தருளினார். பூமியில் உள்ளோர் அதனைக் கண்டு வியப்படைந்தார்கள்.

24. கால்மாறி ஆடின படலம்

விக்கிரமபாண்டியன் தன் ஆட்சியை அவன் மகனான இராசசேகரனிடம் ஒப்படைத்து விட்டுச் சிவலோகம் அடைந்தான். அந்த இராசசேகரன் இறைவன் ஆடும் நடனத்தின்மீது பேரன்பு கொண்டதனால் அந்த நடனத்தை நீக்கி மற்ற அறுபத்து மூன்று கலைகளையும் கற்றுத் தெளிந்தான். அக்காலத்தில் சோழ நாட்டைக் கரிகாற் பெருவளத்தான் என்னும் சோழமன்னன் ஒருவன் ஆண்டு வந்தான். அவன் அறுபத்து நான்கு கலைகளையும் கற்று அறிவில் மேம்பட்டு விளங்குபவன். அவன் திருவானைக்கா இறைவரிடம் பேரன்பு பூண்டவன்.

அச்சோழ மன்னனின் அரண்மனைப் புலவன் ஒருவன் பாண்டிய நாட்டிற்கு வந்தான். அவன் பாண்டிய அரசனான இராசசேகரனிடம், "பெருமானே! எம்முடைய கரிகால் பெருவளத்தானுக்கு அறுபத்து நான்கு கலைகளும் தெரியும். ஆயின் தங்களுக்கோ அறுபத்து மூன்று கலைகள் மட்டுமே தெரியும். பரதநூல் வராது" என்று சொன்னான். அதைக் கேட்ட பாண்டியன் பெரிதும் துன்பத்தில் ஆழ்ந்தான். உடனே பரதநூலை அறிந்த புலவரைத் தேடி அவர்க்கு வேண்டிய பரிசு நல்கி அக்கலையை நன்முறையில் கற்றுத் தெளியலானான்.

இராசசேகர பாண்டியன் பரதநூலிற் கூறிய கூத்தினைப் பயிலும்போது தனது உடலில் 'அயர்வுநோய்' உண்டாவதை அறிந்தான். "இத்தகைய அயர்வு நோய் வெள்ளியம்பலத்துள் ஆடும் சிவபெருமானுக்கும் உண்டே! பல நாட்களாய் ஒரு திருவடி ஆடிநின்றதே! அந்தோ! இறைவருக்கு உண்டாகும் இத் துன்பத்தை நான் பார்த்துக் கொண்டிருப்பதோ? வருத்தத்தை உண்டாக்கும். இறைவன் ஆடும் இத் திருக்கூத்தினை நான் போய் எவ்வாறு தடுப்பேன்? அவ்வாறு தடுக்காவிடில் அவர் திருவடி வருந்துமே" என்று பலவாறு தித்தித்து வருத்தமடைந்தான்.

பிறகு பாண்டியன் சிவராத்திரியன்று திருக்கோயிலை அடைந்தான். சோமசுந்தரப் பெருமானுக்கு விசேட பூசை செய்தான். வெள்ளியம் பலத்தில் திருநடனம் புரியும் இறைவரை இருகைகூப்பி வணங்கி, "எம்பெருமானே! ஊன்றிய திருவடியை மேலே எடுத்து, தூக்கிய திருவடியை நிலத்தில் ஊன்றி இன்று அடியேன் காணுமாறு கால் மாறியாடுதலை செய்யவேண்டும். அப்போதுதான் என் வருத்தம் தீரும். அவ்வாறு செய்யாவிடில் நான் இறந்து விடுவேன்" என்று விண்ணப்பம் செய்தான். அதே போன்று தன் உடைவாளை நட்டு அதன் மேல் குப்புற விழப்புகுந்தான். உடனே இறைவர் இடதுகாலை கீழே ஊன்றி, வலது காலை மேலே தூக்கிக் கால் மாறியாடியருளினார். பாண்டியன் இதனைக் கண்டு கவலையொழிந்து, மும்மலம் நீங்கி மகிழ்வடைந்தான்.

இராசசேகரபாண்டியன் இறைவனைப் பலவாறு துதித்தான். பின் "பெருமானே! இவ்வாறு மாறியாடிய திருக்கூத்தினை யாவரும் தரிசிக்கும்படி இவ்வாறே நின்று தேவரீர் அருள் செய்ய வேண்டும்" என்று வேண்டி, துதித்து நின்றான். அன்று முதல் இன்று வரை சோமசுந்தரக் கடவுள் கால்மாறி ஆடிய திருக்கோலத்திலேயே நின்று அருள்புரிந்து வருகின்றார்.

25. பழியஞ்சின படலம்

சில காலம் சென்ற பின் இராசசேகர பாண்டியன், தன் மகனான குலோத்துங்க பாண்டியனுக்கு முடிசூட்டிவிட்டுத் தான் சோமசுந்தரக் கடவுளின் திருவடி நிழல் அடைந்தான். குலோத்துங்கன் மிகுந்த அன்புடன் சோமசுந்தரக் கடவுளை வழிபட்டு வந்தான். அவனுக்குப் பல மனைவியர் இருந்தனர். பல புதல்வர்கள் பிறந்தனர். அப்புதல்வர்களுள் முதலில் தோன்றியவன் 'அனந்தகுணன்' என்னும் பெயரையுடையவன். அவன் பல கலைகளில் சிறந்து விளங்கினான்.

இக் குலோத்துங்க பாண்டியன் ஆட்சிக் காலத்தில் மதுரையை அடுத்திருந்த திருப்பத்தூரில் மறையவன் ஒருவன் வாழ்ந்து வந்தான். ஒரு நாள் அவன் தன் மனைவியோடும் பசுமையான இளம் குழந்தையோடும் மாமன் வீட்டிற்கு மதுரையை நோக்கிக் காட்டு வழியாக வந்து கொண்டிருந்தான். அவ்வாறு வருகின்ற வழியில் அவன் மனைவிக்குத் தாகம் எடுத்தது எனவே அவளை ஒரு ஆலமரத்தின் நிழலில் குழந்தையோடும் இருக்கச் செய்து விட்டுத் தான் மட்டும் நீர் நிலையினைத் தேடிச் சென்றான். அவள் தன் குழந்தையை அருகில் இட்டு அயர்வுடன் படுத்தாள்.

இலைகள் நிறைந்த அந்த ஆலமரத்தில் முன்னொரு நாளில் யாரோ ஒரு வேடனால் எய்யப்பட்ட அம்பு கோப்புண்டு கிடந்தது. காற்றினால் அசைபட்டு மரம் ஆடுதலால் அக்கூரிய அம்பு கீழே விழுந்தது. அங்குப் படுத்திருந்த பார்ப்பினியின் வயிற்றில் ஊடுருவித் தைத்தது. முன்னை வினைப் பயன் காரணமாகப் பார்ப்பினி மாண்டாள். அப்பொழுது வேடனொருவன் ஆலமர நிழலில் ஒதுங்கும் பொருட்டு மறுபுறம் வந்து இளைப்பாறி இருந்தான்.

தண்ணீரைக் கொண்டு வருவதற்காகச் சென்ற அந்தணன் அவ்வாறே நீர்கொண்டு திரும்பி வந்தான். அங்கு இரத்த

வெள்ளத்தில் அழுத்தி உயிர்துறந்திருந்த தன் மனைவியைக் கண்டு திடுக்கிட்டான். அவள் அருகே சென்று அழுது புலம்பினான். புரண்டான். அயர்ந்தான். பின்னர்த் தெளிவடைந்து, “இவளைக் கொன்றவர் யார்?” என்று தேடத் தொடங்கினான். அப்போது ஆலமரத்தடியில் ஒரு பக்கத்தில் அம்போடும் வில்லோடும் நிற்கும் வேடனைக் கண்டான். “இவனே என் மனைவியைக் கொன்று பழி பூண்டவன்” என்று எண்ணி வேடனை நெருங்கினான். “ஏடா, வேடா! நீயே என் மனைவியைக் கொன்றவன். மன்னவன் மேல் ஆணை” என்று கூறி வலிந்து அவனை இழுத்துக் கொண்டு இறந்துபோன தன் மனைவியை முதுகில் இட்டுக் கையில் குழந்தையைத் தூக்கிக் கொண்டு மதுரையை அடைந்து அரசனின் அரண்மனை வாயிலை அடைந்தான்.

அரண்மனை வாயிலில் தன் மனைவியின் உடலைக் கிடத்திவிட்டு, வேடனை முன்னே விட்டு அமைச்சர் முதலானோர் கேட்ப அவர்கட்கு எதிரே கையை மேலே தூக்கி, கண்ணீர் பெருக முறையிட்டு அழுதான். “அரசன் ஆணை உலகம் முற்றும் தருமநெறி வழுவாமல் காக்கும் என்பார்கள். அவ்வாணை இவ்வேடன் செய்த கொலையைக் காக்கவிலைலை” என்றான்.

உடனே வாயில் காப்போர் பாண்டியனிடம் சென்று “அரசே! நம் அரண்மனை வாயிலில் ஓர் அந்தணன் வந்து முறையிடுகின்றான். அவன் மனைவியின் உயிரற்ற உடலைக் கீழே கிடத்தி ‘அவளைக் கொன்றான்’ என்று வேடன் ஒருவனை முன்னிருத்தியுள்ளான்” என்றனர். அதனைக் கேட்ட பாண்டியன் அஞ்சி வெளியே வந்தான். அந்தணன் நிலை. கண்ட மன்னன் மெலிந்து, “ஐயா! நீ ஏன் வருந்துகின்றனை? உனக்கு நேர்ந்த துன்பம் யாது? சொல்வாய்!” என்றான்.

அம்மறையோன் மன்னனை நோக்கி, “புகழ்மிக்க நீதியுள்ளவனே! நான் இன்று மதுரையை நோக்கி என்

மனைவியோடும் குழந்தையோடும் வந்து கொண்டிருந்தேன். வழியில் நீர் வேட்கை மிகவே இவளை ஓர் ஆலமர நிழலில் இருக்க விட்டுத் தண்ணீர் கொண்டு வரச் சென்றேன். நான் தண்ணீர் கொண்டு வருவதற்குள் இச்சிலை வேடன் இவளைக் கொன்று விட்டு அருகில் நின்று கொண்டிருந்தான்" என்றான். இச்சொற்களைக் கேட்டுப் பாண்டியன் மிக்க துன்பமடைந்தான்.

பாண்டியன் அந்தணன் சொல்லைக் கேட்டு வேடனை நோக்கினான். அதனைக் கேட்ட வேடன் அரசனை வணங்கி, "எந்தையே! நாயினும் கடைப்பட்டவனாகிய நான் இளைப்பாறும் பொருட்டு ஆலமர நிழலை அடைந்து ஒருபுறம் ஒதுங்கி நின்றேன். இவளைக் கொலை செய்தவன் அல்லேன்; கொன்றவரைக் கண்டவனும் அல்லேன்" என்றான். அங்குள்ள அமைச்சர்கள், "ஆயின் இவள் உடம்பில் அம்பு தைத்து உருவியது எங்ஙனம்?" என்றனர். உடனே வேடன் "நான் அறியேன்" என்றான்.

வேடன் கூறியவற்றை நம்பாமல் அமைச்சர்களும் மன்னனும் வேடனைத் தண்டித்தனர்; மிக்க துன்பப்படுத்தினர். இருப்பினும் வேடன் முன்பு சொன்ன சொல்லில் இருந்து சிறிதும் பிறழாமல் 'நான் அறியேன்' என்று அதையே சொல்லிக் கொண்டிருந்தான். இதனை அறிந்த பாண்டியன் சற்று ஆராயத் தொடங்கினான். "இவன் கூறுகின்ற மொழியோ மாறுபாடு இன்றி ஒன்றாகவே உள்ளது. இவன் முகத்தில் சிறிதும் கொலைக் குறிப்பில்லை. இவளை இவன் கொல்வதற்கும் காரணம் இல்லை. இவளைக் கொன்றவர் இவனோ? அன்றி வேறு யாரோ? ஒன்றும் அறிதற்கு இல்லையே?" என்று எண்ணி மறையவனிடம், "நான் இதனை ஆராய்ந்து உன் மனக் கவலையை ஒழிப்பேன். நீ அஞ்சற்க!' என்று கூறினான். அத்துடன் "இப்போது உன் மனைவியின் ஈமக் கடன்களை முடித்து வருக" என்று போக்கி வேடனைச் சிறையிட்டான்.

உடனே பாண்டியன் சிவபெருமான் எழுந்தருளியுள்ள திருக்கோயிலை அடைந்தான். அப்பெருமானை வணங்கி "பெருமானே! இவ்வேடன்தான் அப்பார்ப்பனியைக் கொன்றானோ? அன்றிப் பிறர் வேறு காரணத்தால் கொன்றனரோ? உனது திருவருளால் அதனைத் தெரிவித்தல் வேண்டும்" என்று பிரார்த்தனை செய்தான்.

அப்போது ஆகாயத்திநின்று, "பாண்டியனே! இத் திருநகரத்தின் புறத்தே உள்ள செட்டித் தெருவில் இன்று திருமணம் நடைபெற உள்ளது. அம்மறையவனோடு அங்கு நீ வருவாயாக. அங்கு நாம் இதனைத் தெளிவிப்போம்" என்று ஓர் அசரீரி வாக்கு எழுந்தது. இதனைக் கேட்ட பாண்டியன் அன்றைய பகல் பொழுதைக் கழித்து மாலை மங்கியவுடன் மறையவனுடன் தான் வேறு வேடம் பூண்டு அக்கலியாண வீட்டிற்குச் சென்று ஒருவரும் அறியாமல் ஓர ஒதுங்கி இருந்தான்.

அப்போது சோமசுந்தரக் கடவுளின் திருவருளால் பாண்டியனும் மறையவனும் கேட்குமாறு கூற்றுவனால் அனுப்பப்பட்ட எமதூதர் இருவர் உரையாடிக் கொண்டிருந்தனர். "இன்று இங்கு இம்மணமகன் உயிரைக் கவர்ந்து வரும்படி தம் தலைவர் ஆணையிட்டுள்ளார். இவனுயிரைக் கவர்வது எங்ஙனம்? இவன் உடலில் பிணியும் இல்லையே! ஒரு காரணமும் இன்றி இவனுயிரைக் கவர்வது இயலுவதன்றே!" என்று ஒருவன் வினவினான். அதற்கு மற்றவன், "அன்று ஆலமரத்தின் கண் முன்னரே சிக்கி இருந்த அம்பினைக் காற்றினால் அசையச் செய்து கீழே விழ வைத்து பார்ப்பினியின் உயிரைக் கவர்ந்தோம் அல்லவா? அவ்வாறே இப்பொழுது புறத்தே உள்ள இக்கன்றினை ஈன்ற பசுவினை இம்மணவிழாவின் ஆரவாரத்தினால் வெகுண்டு கயிற்றை அறுத்துக் கொண்டு ஓடச் செய்து இவனுயிரைக் கவர்வோமாக" என்றான். இதனைக் கேட்ட பாண்டியன் உண்மை அறிந்த மறையவனை நோக்கினான். உடனே

மறையவன், "இங்குக் கூறியபடியே இம்மணமகன் இறந்தால் என் மனைவியும் இறந்தது அப்படியேதான். ஆகையால் இந்நிகழ்ச்சியைக் காண்பேன்" என்றான். பாண்டியனும் ஒரு சேர அவனுடன் இருந்தனர்.

மணமகன் இல்லத்தில் அவனுடைய சுற்றத்தார் ஒன்று கூடினர். மணவினையைத் தொடங்கினர். பல இசைக் கருவிகள் ஒன்று சேர்ந்து பேரொலி கொண்டு முழங்கின. இங்ஙனம் முழங்கிய ஓசையால் அங்குக் கட்டி இருந்த பசு வெருண்டு அலறிக் கயிற்றை அறுத்துக் கொண்டோடி மணமகனை முட்டித் தள்ளியது. அவன் இறந்தான். மணமகன் பிணமகன் ஆனான். மணப்பறை பிணப்பறை ஆயிற்று. மங்கல மகளிர் வாழ்த்தொலி அழுகையொலியாயிற்று.

மறையவன் அதனைக் கண்டு, "என்ன காரியம் செய்து விட்டேன்" என்று இரங்கிப் பெரிதும் துன்பம் கொண்டான். அரசனோடு அவன் மாளிகை அடைந்து அமைச்சர்கட்கும் மற்றவர்க்கும் இதனைக் கூறினான் பாண்டியன். அந்தணனை நோக்கி "இன்னும் ஒரு கலியாணம் செய்து கொள்வாயாக" என்று கூறி அரிய பொருள் நிறையக் கொடுத்தான். பின்னர் அவனை அனுப்பி வைத்தான். சிறையில் உள்ள வேடனை விடுவித்து "உண்மை அறியாமல் யாம் செய்த தண்டத்தைப் பொறுத்துக் கொள்வாயாக" என்று கூறி அவன் மேல் அளவற்ற அன்பு கொண்டு அவன் வேண்டும் பொருள் அளித்து அவனை அனுப்பி வைத்தான்.

அதன் பின்பு குலோத்துங்க பாண்டியன் திருக்கோயில் அடைந்து சோமசுந்தரக் கடவுளை வணங்கி, "எம்பெருமானே! என் பொருட்டுத் தேவரீர் பழியஞ்சிய நாதராய் இருந்தீர்" என்று கூறிப் பூசித்து நன்முறையில் அரச செய்த வந்தான்.

26. மாபாதகம் தீர்த்த படலம்

குலோத்துங்க பாண்டியன் ஆட்சிக் காலத்தில் அவந்தி நகரத்தில் ஓர் அந்தணன் வாழ்ந்து வந்தான். அவனுக்கு அழகிய மனைவி ஒருத்தி இருந்தாள். அவள் பெண்ணிற்குரிய குணம் எதுவும் இல்லாதவள். அவளுக்கு ஒரு கொடிய மகன் பிறந்தான். அவன் இளமை செழிக்க வளர்ந்து வந்தான். வலிய இளமைப் பருவம் உடைய உடலைப் பெற்றிருந்த அவன் கட்டுக்கடங்காத காமம் கொண்டவனாய் இருந்தான். அத்துடன் வலிய தீவினையும் இழுத்தலால் தன்னைப் பெற்று வளர்த்த தாயினையே விரும்பினான். தாயாகிய அக்கொடிய பாவியும் அவன் விருப்பத்திற்கு இணங்கினாள்.

இந்தக் கீழ்மகன் தாயினைக் கூடி ஒழுகும் தவறான ஒழுக்கத்தினை அவன் தந்தை குறிப்பால் அறிந்து பெரிதும் வருந்தினான். இச் செய்தியைப் பிறர் அறியா வண்ணம் மறைத்து வைத்தான். மற்றொரு நாளில் இது வெளிப்படக் கண்டும் யாதும் கூறானாயினான். அப்பொழுதும் அவன் மகன் கோபம் கொண்டு “எனது தந்தையைக் கொல்வேன்” என்று புறப்பட்டான். அப்போது தாயாகிய கொடிய பாவி, “நீ தாயிடம் காம இன்பம் அனுபவித்தாய். தந்தையைக் கொன்றனை யாயின் என்ன பயன் அடைவாய்?” என்று கூறித் தடுத்தாள். இருப்பினும் அக்கொடிய பாவி மண்வெட்டி ஒன்றால் தந்தையை வெட்டிக் கொன்றான்.

உடனே அக் கொடிய பாவி இரவில் தன் தந்தையை தகனம் செய்தான். தன்னால் சுமக்கத்தக்க பொருளை எடுத்துக் கொண்டு தாயையும் அழைத்துக் கொண்டு கற்கள் நிறைந்த காட்டின் வழியே நெடுந்தூரம் சென்றான். அப்போது ஆறலைக்கும் வேடர்கள் அக் கொடிய பாவியின் கையில் உள்ள பொருளைப் பறித்துக் கொண்டும், அப்பார்ப்பினியைக் கவர்ந்து கொண்டும் சென்றனர்.

வெட்டுண்டு இறந்த தந்தையானவன் பிரமகத்தி என்னும் மாபாதக வடிவாய் வந்து அந்தத் தனையனைப் பின் தொடர்ந்தான். அவனைப் பற்றிக் கொண்டான்! அவ்வாறு பற்றிய கொலை பாதகம் அவனைப் பெரிதும் துன்பப்படுத்தியது. அம்மாபாதகத்தினால் அல்லலுற்ற அவன் பன்னெடுங்காலம் அலைந்து திரிந்து வருந்தினான். கடைசியில் மதுரையம்பதியை அடைந்தான். அப்போது இறைவனும், இறைவியும் வேடுவனும் வேடுவச்சியுமாக வடிவம் கொண்டு வழியில் சூதாடிக் கொண்டிருந்தனர். அப்போது அங்கு வந்து கொண்டிருந்த மாபாதகனை, இறைவன் இறைவிக்குக் காட்டி காமத்தினால் வரும் கேடு முழுவதையும் எடுத்துக் கூறினார்.

கொலைப் பாவத்தால் வருந்திவரும் கொடியவனை நோக்கி, வேடன், "ஏ, பார்ப்பனனே! நீ துன்பத்தால் வருந்தி வருவது என்ன?" என்று கேட்டார். உடனே அம்மாபாதகன் தான் இதுவரை செய்த பாவங்களைக் கூறித் தான் பட்ட துன்பத்தையும் சொல்லி அழுதான். இதைக் கேட்ட வேடுவராய் இருந்த இறைவர், "இப்பாவம் எங்குச் சென்றாலும் நீங்காது. உம்மீது திருவருள் நோக்கம் கொண்டமையால் இதனைக் கூறுகின்றோம். கையினில் பிச்சை ஏற்று ஒரு பகல் மட்டும் உண்பாய். சிவனடியார்களுக்குக் குற்றேவல் செய்வாய். அறுகம்புல்லைக் கொய்து பசுக்களுக்குக் கொடுப்பாய். நாள்தோறும் முக்காலமும் புறத்தொட்டித் தீர்த்தத்திலே நீராடி நூற்றெட்டுமுறை அங்கப் பிரதட்சணம் செய்வாய். இத்தவ நெறியில் நின்றால் இக் கொலைப் பழி நீங்கும்" என்று கூறியருளினார்.

உடனே உமாதேவியார் இறைவன் விளையாட்டினை எண்ணி மனக்களிப்படைந்தார். பின்னர் இருவரும் மறைந்தருளினர். வேடுவர் கூறிய வண்ணமே அவன் நாள் தோறும் செய்து வந்தான். முடிவில் அவனுடைய பாவங்கள் நீங்கப் பெற்று இறைவனின் திருவடிகளில் இரண்டறக்

கலந்தனன். மாபாதகத்தையே புறத்தொட்டித் தீர்த்தம் நீக்கியது எனில் அதன் பெருமையை அளவிட்டுச் சொல்ல முடியுமா? எல்லோரும் சோமசுந்தரக் கடவுளை வணங்கி, அவன் திருவருளை எண்ணிப் பேரானந்தக் கடலில் மூழ்கினார்கள்.

27. அங்கம் வெட்டின படலம்

குலோத்துங்க பாண்டியன் நாட்டைச் சிறப்புற ஆண்டு வந்த காலத்தில், முதிர்ந்த வயதுடைய ஒருவன் மதுரையில் வந்து குடியேறினான். அவன் வாட்போர் வித்தையைக் கற்பித்து வாழ்ந்து வந்தான். சோமசுந்தரக் கடவுளிடம் இடைவிடாத அன்பு பூண்டவன். அம்முதியவனை அடைந்து பல இளைஞர்கள் வாள் பயிற்சி பெற்றுக் கொண்டு சென்றனர். அவ்வாறு வாள் பயிற்சி பெறும் இளைஞர்களுள் பாவியாகிய 'சித்தன்' என்ற ஒருவன் இருந்தான்.

அவன் வாள் வித்தையை நன்கு பயின்று சிறந்து விளங்கினான். அதனால் தன் ஆசிரியனுக்கு மாறாய்த் தானும் ஒரு வித்தைக் கூடம் அமைத்துப் பலருக்கு வாள் வித்தை பயிற்றுவித்து வந்தான். அப்போது, அவன் தன் ஆசிரியனை விட அதிகமாக ஊதியம் பெற்று வந்தான். சில நாட்கள் சென்ற பின் 'சித்தன்' தான் ஒருவனே வாள்வித்தை பயிற்றலால் வரும் வருவாய் முழுவதையும் பெற விரும்பினான். அதனால் அவ்வாசிரியனை அவ்வூரினின்று வெளியேற்றிவிடத் திட்டமிட்டான். அவ்வாசிரியனிடம் பயிலும் மாணவர்கள் பலரை தன்னிடம் வந்து பயிலும்படி தொல்லை கொடுத்து வந்தான்.

அத்துடன் அவ்வாசிரியன் இல்லாதபோது சித்தன் ஆசிரியனின் மனைவியிடத்தே சென்று, "இடன் உண்டோ? இடன் உண்டோ? என்று சிறிதும் அஞ்சாது நின்று கேட்டான்.

அக்கற்பினையுடைய மாது ஒன்றும் பேசாமல் வாளா இருந்தாள். மற்றொரு நாள் சென்று அவள் கையினைப் பிடித்து இழுத்தனன். அப்பெண் அவனை வெளியே தள்ளிக் கதவினைத் தாழிட்டுக் கொண்டு தன் கற்பினைக் காத்துக் கொண்டாள். சித்தன் செய்த இழி செயலைத் தன் கணவனிடம் தெரிவிக்காமல் நான் மாடக் கூடலில் எழுந்தருளியுள்ள சோம சுந்தரக் கடவுளிடம் முறையிட்டாள்.

நீசனாகிய சித்தன் செய்த அடாத செயலை எண்ணிய சோமசுந்தரக் கடவுள் அவனைத் தண்டிக்க திருவுள்ளம் கொண்டு, வாள் வித்தை பயிற்றுவிக்கும் அவ்வாசிரியனைப் போன்றே திருவுருவம் தாங்கி சித்தனிடம் சென்றார். "சித்தா! காளையாகிய நீயும், வயது முதிர்ந்த நானும் வாட்போர் புரிந்து நாம் வலிமைகளை அளந்தறிவோம். நாளை நீ நகரின் புறத்தே வருக. நானும் வருகிறேன்" என்று இறைவர் கூறினார். அதற்குச் சித்தன் மகிழ்ந்து, "நல்லது வருகிறேன்" என்றான்.

அதுபோன்றே மறுநாள் நகரின் புறத்தே வாளாசிரியன் தோற்றம் கொண்ட இறையவரும், சித்தனும் போர்புரியத் தொடங்கினர். நீண்ட நேரம் மாறி மாறி இருவரும் போர் புரிந்து வந்தனர். இருபது நாழிகை போருக்குப் பின், இறைவர் போரினைக் காணவந்தோர் அனைவரும் கேட்கும்படி "உன் குரு பத்தினியை விரும்பிய உள்ளத்தையும், தகாதமொழி பேசிய நாவினையும், தொட்ட கையையும் காமக்குறிப்போடு நோக்கிய கண்களையும் காத்துக் கொள்வாய்! காத்துக் கொள்வாய்!" என்று சொல்லிச் சொல்லி ஒவ்வோர் அங்கமாக வெட்டி வெட்டி எறிந்தார். இறுதியில் தலையினையும் வெட்டிவிட்டு மறைந்தருளினார்.

அக்காட்சியைக் கண்ட மாணவர்களுள் தம் முதிய வாளாசிரியரைக் காணாது அவரை வீட்டிற்குத் தேடிச் சென்றனர். ஆசிரியரின் மனைவியை நோக்கி, "ஆசிரியர் எங்குச் சென்றுள்ளார்?" என்று கேட்டனர். அவள், "அவர்

திருக்கோயிலுக்குச் சென்றுள்ளார்" என்றாள். அப்போது கோயிலில் இருந்து வாளாசிரியன் திரும்பி வந்தான். உடனே மாணவர்கள். "போர்க்களத்தில் சித்தனை வெட்டிய பின் எங்குச் சென்றீர்? தங்களை எங்கும் காணாமையால் இங்குத் தேடி வந்தாம்" என்றனர். அதனைக் கேட்ட ஆசிரியன் வியப்படைந்தான். ''நான் சித்தனுடைய உடலை வெட்டவில்லை. நீங்கள் கூறுவது விளங்கவில்லை. என்னைப் போல் வந்து சித்தனோடு போர்புரிந்தவர் யாவர்? இது மதுரையில் எழுந்தருளியுள்ள சோமசுந்தரக் கடவுளின் செயலே!' என்று கூறினான்.

அப்போது ஆசிரியனின் மனைவியும் தன்னிடம் சித்தன் நெருங்கி வந்து நடந்து கொண்ட முறையினையும் கையைப் பற்றி இழுத்தமையையும், தான் அவனைப் பிடித்து வெளியே தள்ளியதையும் கூறினாள். உடனே மாணவர்கள், "சித்தனை வாள்வீரர் கொன்றபோது இவ்வம்மையார் கூறியபடி கூறிக் கொன்றார்" என்றனர்.

அதைக் கேட்ட ஆசிரியன், "இத எம்மை ஆண்டருளும் சோமசுந்தரக் கடவுளின் திருவிளையாடலே" என்று கூறித் தன் மனைவியோடும் மாணவர்களோடும் திருக்கோயிலுக்குச் சென்று இறைவர் திருமுன்னர் விழுந்து வணங்கித் துதித்தார். இதனை அறிந்த குலோத்துங்க பாண்டியன் இறைவனை அடைந்து வணங்கி, அவரைப் 'பரதேசிக் காவலர்' என்று சொல்லிப் பலமுறை துதித்தான். வாளாசிரியனையும் அவன் மனைவியான கற்பிற் சிறந்த மாணிக்க மாலையையும் யானையின் மேலேற்றி நகர்வலம் செய்வித்துச் சிறப்புச் செய்தான். பிறகு குலோத்துங்கன் தன் புதல்வனான அனந்தகுண பாண்டியனுக்கு முடிசூட்டிவிட்டு இறைவன் திருவடி நிழல் அடைந்தான்.

28. நாக மெய்த படலம்

அனந்தகுண பாண்டியன் முழுமுதற் கடவுளான சோமசுந்தரக் கடவுளின் திருவைந்தெழுத்தை ஓதி, சைவ நெறியில் ஒழுகி ஆட்சி செய்து வந்தான். அவன் நாட்டு மக்களும் அவ்வாறே வாழ்ந்து வந்தனர். இவ்வாறு பாண்டிய நாடு சைவ நெறியில் ஒழுகி வந்ததை அறிந்து சமணக் குரவர் எண்ணாயிரவரும் சினந்தனர். அப்பாண்டியனைக் கொல்ல வழி தேடினர்.

அவர்கள் வேள்விச் சாலை ஒன்றை அமைத்தனர். வேள்விக் குண்டம் வளர்த்தனர். அதிலிருந்து எழுந்த தீ எட்டுத் திக்கும் பரவியது. அத்தீயில் இருந்து ஓர் அவுணன் மலை போன்ற தோற்றத்துடன் எழுந்து வெளியே வந்தான். அவனை நோக்கிச் சமணர்கள், "நீ விரைந்து சென்று பாண்டியனையும், மதுரையையும் எடுத்து விழுங்கி விட்டு வா" என்றனர். அவுணன் உடனே ஒரு பெரிய பாம்பின் வடிவம் கொண்டான். அப்பாம்பின் தோற்றம் கண்டு நிலம்கூட நடுங்கியது.

அந்த அவுணன் பாம்பின் வடிவோடு மதுரையை நோக்கி வந்து கொண்டிருந்தான். அதனைக் கண்ட மக்கள் ஓடிச் சென்று மன்னனிடம் அச் செய்தியைத் தெரிவித்தனர். உடனே அனந்தகுண பாண்டியன் சோமசுந்தரக் கடவுளை அடைந்து, "எம் பெருமானே சமணர்கள் இந்நகரை விழுங்க விடுத்த பாம்பானது வருகின்றது. அதனைக் கொன்று அழிக்கும் ஆற்றலைத் தந்து எங்களைக் காத்தருள்க" என்று வேண்டினான்.

பின்னர் சிவபெருமானிடம் அனுமதி பெற்று, "அம்பும் வில்லும் எடுத்து மேற்றிசை வாயிலை அடைந்தான். அங்கு அவன் எதிரே அப் பாம்பு வரக் கண்டான். அப் பாம்பாகிய

அவுணன் பாண்டியனையும் மதுரையையும் விழுங்கச் சீறிச் சினந்தான். உடனே பாண்டியன் பிறை போன்ற ஒரு கணையை விடுத்து அப் பாம்பைத் துண்டு துண்டாக்கினான். இரத்தம் கொட்ட, பேரொலி செய்து நஞ்சைக் கக்கி அப் பாம்பு கீழே விழுந்து இறந்தது. அப் பாம்பின் நஞ்சு மதுரை நகர் முழுவதும் பரவியதால் நகரமக்கள் நஞ்சால் வருந்தி மயங்கிக் கீழே விழுந்து கிடந்தனர். இதனைக் கண்ட பாண்டியன் சோமசுந்தரக் கடவுளைப் பலவாறு துதித்தான். பாம்பின் விஷத்தை நீக்க வேண்டி நின்றான். இறைவன் தன் தலையில் இருந்த இளம்பிறையில் இருந்த அமுதத்தைச் சிறிது சிந்த மக்கள் உயிர்த்து எழுந்தனர். மதுரை தூய்மை அடைந்தது. அனந்தகுண பாண்டியன் இறைவனை வணங்கி அன்பே வடிவாகி அரசு புரிந்து வந்தான்.

29. மாயப் பசுவை வதைத்த படலம்

அனந்தகுண பாண்டியன் பாம்பினைக் கொன்ற பின் சமணர்கள் ஒன்று கூடினர். "இனி நாம் என்ன சூழ்ச்சி செய்வது?" என்று ஆலோசித்தனர். பின் "பசுவிற்குத் துன்பம் செய்ய மாட்டார்கள். எனவே நாம் இனிப் பசுவினை விடுப்போம்" என்று கருதி மீண்டும் கொடிய யாகம் ஒன்றினைச் செய்தார்கள். அப்போது ஓமகுண்டத்தில் இருந்து பசுவின் வடிவம் கொண்ட அவுணன் ஒருவன் வந்து தோன்றினான். அப் பசு வடிவம் கொண்ட அவுணனை முன் போல் மதுரை நகரின்மேல் ஏவி விடுத்தனர்.

அம் மாயப்பசு கூற்றுவன்போல மதுரையை நோக்கிப் பாய வந்து கொண்டிருந்தது. அதனைப் பாண்டியன் அறிந்தான். உடனே பாண்டியனும் மதுரை நகர மக்களும் சோமசுந்தரக் கடவுளை அடைந்து, "நாதனே! இது முறையோ!" என்று கூறி முறையிட்டனர். உடனே இடபநந்தியை அழைத்து நோக்கிய சோமசுந்தரக் கடவுள், "நீ

சென்று சமணர்கள் விடுத்த கொடிய பசுவை வென்று வருவாயாக" என்று கூறி விடுத்தருளினார்.

இறைவனின் ஆணையைப் பெற்ற இடப நந்தி கூற்றுவனும் அஞ்சும் வண்ணம் சினந்து எழுந்தது. கண்கள் தீயினைச் சிந்த விரைந்து நடந்தது இடபநந்தி. சமணர்கள் அனுப்பிய மாயப் பசுவைக் கண்டதும், இரண்டும் போரிடத் துவங்கின. இடப நந்தியானது பலவிதத் திருவிளையாடல்களைப் புரிந்தது. முடிவில் மாயப் பசுவைக் கொல்லாது அதனிடம் தன் பேரழகைக் காட்டிற்று. அதன் அழகைக் கண்டு மாயப்பசு இச்சை கொண்டது. காமம் மிகுந்ததால் இடபநந்தியைக் கண்டு மோகித்த மாயப்பசு தன் விரியத்துடன் உயிரையும் விட்டுக் கீழே சாய்ந்தது. உடனே அதன் உடல் மலை வடிவமாயிற்று. மன்னனும் மக்களும் பெரிதும் மகிழ்வடைந்தனர். சமணர்கள் யாவரும் நாணத்துடன் ஓடினர்.

இடபநந்தி தன் தூல சரீரத்தை இடபமலையாக அங்கே நிறுத்திவிட்டுச் சூக்கும சரீரத்தோடு மதுரை நாயகனை அடைந்து வணங்கி முன்னை வடிவம் பெற்றது. இராமபிரான் இலங்கைப் போருக்குச் செல்லுமுன் இங்குத் தன் பரிவாரத்தோடு வந்து தங்கி அருள்பெற்றுச் சென்று, இலங்கையை வெற்றி கொண்டு திரும்பினார். இராமேசுவரத்தில் சிவலிங்கப் பிரதிட்டை செய்து வணங்கினார். பின்னர் அனந்தகுண பாண்டியன் தன் மகனான குலபூடணனிடம் அரசாட்சியை ஒப்புவித்து இறைவன் திருவடி நிழல் அடைந்தான்.

30. மெய் காட்டிட்ட படலம்

குலபூடண பாண்டியன் சிறப்புடன் உலகினைப் பாதுகாத்து வந்தான். அவனுக்குச் சவுந்தர சாமந்தன் என்னும் பெயர் கொண்ட சேனைத் தலைவன் ஒருவன் இருந்தான்.

அவன் சிவநெறியில் ஒழுகும் சிறப்புடையவன். அக்காலத்தில் வேடர்களுக்குத் தலைவனாக "சேதிராயன்" என்பவன் விளங்கினான். அவன் பல வெற்றிகளைப் பெற்ற செருக்கால் பாண்டியன் மீது பகைமை கொண்டிருந்தான். அவன் பாண்டியன் மீது படையெடுக்க எண்ணி இருந்தான். அதனைப் பாண்டியன் அறிந்தான்.

உடனே பாண்டியன் சவுந்தர சாமந்தனை நோக்கி, "நீ நமது நிதி அறையினைத் திறந்து வேண்டும் பொருளை எடுத்துச் சென்று புதிதாகச் சேனைகளைச் சேர்த்துப் பதிவு செய்து கொள்வாயாக" என்றான். உடனே சவுந்தர சாமந்தன் பொன்னறையினைத் திறந்து பெரிய அளவு திரவியங்களை எடுத்து வந்தான். அத்திரவியங்கள் அனைத்தையும் சிவபுண்ணிய வழியிலே செலவழித்தான். சிவபெருமானுக்குத் திருக்கோயிலும் ஆயிரம்கால் மண்டபமும் எடுத்தான். அடியார்களுக்குத் திருவமுது செய்து உண்பித்து எஞ்சியவற்றைத் தான் உண்டு வந்தான். இதனைக் குல பூடணன் தன் ஒற்றர் மூலம் அறிந்தான்.

சுந்தர சாமந்தன் தன்மேல் அரசன் ஐயுறாவண்ணம் அரச சபையை அடைந்து அரச காரியம் பார்ப்பவர்களோடு கலந்து வீரர்களை வரவழைக்கப் பொய்யோலை எழுதுவித்து அனுப்பினான். ஆறு மாதங்கள் வரை வீரர்கள் வராததைக் கண்ட பாண்டியன். "நாளை சூரியன் மறையுமுன்னே, ஓலை விடுத்த படை வீரர்கள் அனைவரையும் அழைக்கக் கடவாய்" என்றான்.

அதற்குச் சுந்தர சாமந்தன் உடன்பட்டுத் திருக்கோயிலை அடைந்து இறைவனிடம், "எம்பெருமானே! அரசன் அளித்த பெரும் பொருள் யாவற்றையும் சிவகாரியம் செய்து விட்டேன். இனி சேனை திரட்டும் வகை யாது?" என்று விண்ணப்பம் செய்தான். உடனே இறைவர் அசரீரியாக, "நாளைக்குச் சேனை வீரர்களோடு நாமும் வருவோம். நீ பாண்டியன்

அவைக்குச் சென்று வீரர் வரவை எதிர்ப் பார்த்திருப்பாயாக" என்று கூறினார். அதனைக் கேட்ட சுந்தர சாமந்தன் மகிழ்ச்சி வெள்ளத்தில் ஆழ்ந்தான். மறுநாள் பொழுது புலர்ந்தது.

மறுநாள் சோமசுந்தரக் கடவுள் சிவ கணங்களை வேலேந்திய வீரர்களாகச் செய்து தாமும் ஒரு குதிரை வீரனாகக் கோலம் பூண்டார். தனது இடப ஊர்தியை குதிரை ஆக்கி அதன் மேல் ஏறிக் கொண்டு தன் பரிவாரம் சூழ ஒற்றைச் சேவகராய் எழுந்தருளி வந்தார். சேனையின் வரவு கண்ட சுந்தர சாமந்தன் குலபூடண பாண்டியனின் முன் சென்று வணங்கி விண்ணப்பம் செய்தான். உடனே பாண்டியன் மனம் நெகிழ்ந்து கடைவாயில் வந்து அங்குள்ள மண்டப அரியணையின் மீது வீற்றிருந்து சேனைப் பெருக்கத்தின் சிறப்பினை நோக்கினான்.

உடனே சுந்தர சாமந்தன் அணிவகுத்து நின்ற ஒவ்வொரு பகுதியினரையும் காட்டி அவர்கள் எந்த நாட்டினைச் சார்ந்தவர்கள் என்று வரிசைப்பட மெய்காட்டிக் கூறினான். முடிவில் பாண்டியன் ஒற்றைச் சேவகராய் நின்ற சோமசுந்தரக் கடவுளை நோக்கி, "அவர் யார்?" என்றான். சுந்தர சாமந்தன் "இச்சேனைப் பெருக்கத்துள் அவரை யார் என்று எவ்வாறு அறிந்து கூறுவேன்?" என்றான். உடனே பாண்டியன், "அவரை இங்கே அழைத்து வருக" என்றான். சேவகரும் அப்பாண்டியன் எதிரே வந்தார். பாண்டியன் மகிழ்ந்து நவமணிகளையும், பொன்னாடைகளையும் அளித்தான். அதனைப் பெற்ற இறைவர் தம் சேனை வெள்ளத்தில் புகுந்து மறைந்தார்.

அப்போது அரசன் முன்னே ஒற்றன் ஒருவன் ஓடி வந்தான். அவன் பாண்டியனை வணங்கி, "சேதிராயன் வேட்டைக்குச் சென்றான். அங்குப் புலியினால் கொல்லப்பட்டு இறந்து போனான்" என்று கூறினான். அதனைக் கேட்ட பாண்டியன் சுந்தர சாமந்தனுக்கு நிறைய

வரிசைகளைக் கொடுத்தான். "இந்தச் சேனைகளை அந்த அந்த நாட்டிற்குச் செல்ல விடுக" என்று கூறி அனுப்பி வைத்தான். சோமசுந்தரக் கடவுள் அங்கு நின்றபடியே மனித வேடம் கொண்ட வீரர்களாகிய சிவ கணங்களோடும் மறைந்தருளினார்.

இது, சோமசுந்தரக் கடவுளின் திருவிளையாடல் என்று குணபூடண பாண்டியன் உணர்ந்தான். உடனே சுந்தர சாமந்தனை நோக்கி, "உமக்குச் சோமசுந்தரக் கடவுள் எளிவந்தார் என்றால், எனக்கு அக்கடவுள் நீயே" என்று கூறி அவனுக்குப் பல பரிசுகள் கொடுத்துச் சிறப்புடன் ஆண்டு வந்தான்.

31. உலவாக்கிழியருளிய படலம்

குணபூடண பாண்டியன் சோமவாரம் முதலிய எல்லா விரதங்களையும் அனுஷ்டித்து வந்தான். அந்தச் செருக்கால் தன்னாட்டில் உள்ள மறையோர்களை அவமதித்தான். அதனால் மழை வளம் குன்றியது. அந்தணர்கள் வறுமையில் வாடினர். வயிற்றை ஓம்ப வேறு ஊர்களுக்குச் சென்றனர். குடிமக்களும் மழையின்மையால் வறுமையில் வாடினர். இதைக் கண்ட குணபூடண பாண்டியன் மனம் வருந்தினான்.

சோமவாரத்தன்று பொற்றாமரையில் நீராடிச் சித்தி விநாயகரை வணங்கி, சோமசுந்தரக் கடவுளின் திருமுன் சென்று விழுந்து வணங்கினான். "எம்பெருமானே! மழையில்லாமையால் மக்கள் அடைகின்ற வருத்தமெல்லாம் தேவரீரையே சாரும். தேவரீர் திருவுள்ளம் கொண்டு அவர்கள் துன்பத்தை நீக்க வேண்டும்" என்று பணிந்து வேண்டினான். அப்போது சோமசுந்தரக் கடவுள் அவன் மொழியினைச்

செவியில் கேளாதவர் போல் சும்மா இருந்தார். பாண்டியன் தன் அரண்மனை சென்றான். தரையில் படுத்து உறங்கத் தொடங்கினான்.

அப்போது பாண்டியன் கனவில் சோமசுந்தரக் கடவுள் ஒருசித்த மூர்த்தியாய்த் தோன்றினார். "பாண்டியனே! நம்மிடம் மிக்க அன்புடைய உம்மிடம் ஒரு குறையுள்ளது. நீ மறையவர்களைப் போற்ற மறந்தாய், அதனால் உம் நாட்டில் வேள்வித்தீ குறைந்தது. வேள்வியே மழைக்குக் காரணமாகும். எனவே அந்தணர்களை ஓம்பி வேள்வி செய்தால் மழை வளம் பெருகும். நாம் இன்று உமக்கு உலவாக்கிழி (பொற்கிழி) தருகின்றோம். இவ் உலவாக்கிழியிலிருந்து எவ்வளவு பொன்னை எடுத்துச் செலவழிக்கினும் அது நாம் கொடுத்த அளவினின்று சிறிதும் குறையாது. இதனை வைத்துக் கொண்டு உன் நாட்டின் வறுமையைப் போக்கிக் கொள்வாயாக" என்று திருவாய் மலர்ந்து உலவாக்கிழியினை அவன் கையில் கொடுத்து மறைந்தார்.

குணபூடண பாண்டியன் விழித்தெழுந்தான். தான் கண்ட கனவு நனவாக விளங்கியதைக் கண்டான். உலவாக்கிழி கிடைத்த மகிழ்ச்சியை அனைவருக்கும் அறிவித்தான். அவ் வுலவாக்கிழியைக் கட்டவிழ்த்துப் பொன்னை எடுத்து அந்தணர்களுக்கும், வேள்விக்கும், பிற நற்செயல்களுக்கும் வழங்கினான். இருப்பினும் பொற்கிழி சிறிதும் குறைவுபடாமல் இருந்தது. அறுகாற் பீடத்தையும்; திருக்கோபுர வாயிலையும் அழகுபெறச் செய்தான்; மழை வளம் பெருகியது; பாண்டிய நாடு முன் போலவே செல்வச் செழிப்பில் மேலோங்கியது; நாட்டில் வேதம், உபநிடதம், வியாகரணம் போன்றவற்றில் வல்லவர்கள் பெருகினர்; அந்தணர்களும், சந்நியாசிகளும், மக்களும் மகிழ்வுடன் வாழ்ந்தனர்.

32. வளையல் விற்ற படலம்

முன்னொரு காலத்தில் தாருக வனத்தில் உள்ள இருடி பத்தினிகளின் கற்பு நிலையினைப் புலப்படுத்த வேண்டும் என்று திருவுள்ளம் கொண்டார். அதனால் பிட்சாடனர் உருவம் தாங்கிப் பேரழகனாய்த் தாருக வனத்துக்கு எழுந்தருளினார். அவருடைய பேரழகு இருடிப் பத்தினிகளைப் பரவசப்படுத்தின. உடனே உள்ளே இருந்து பிட்சையினை எடுத்துக் கொண்டு வீட்டின் புறத்தே வந்தனர். அவருடைய பேரழகைக் கண்டு காம மயக்கத்துடன் அவரது பிட்சை ஏற்கும் கலத்தில் பிட்சை இட்டனர். காம மயக்கத்தால் உடல் இளைத்தனர். கைவளை, மேகலை போன்றவை கழன்று விழுந்தன.

காம மயக்கத்துடன் பிட்சாடனருடன் அப்பெண்கள் பலவாறான சல்லாப வார்த்தைகளைப் பேசினர். அவர்களின் ஆடை கலைந்து விழுந்தது. இந்நிலையில் பிட்சாடன மூர்த்திகள் மறைந்தார். அப்பெண்கள் தங்கள் நிலை சோர்ந்து நின்றனர். அந்நிலையை அவர்கள் கணவராகிய தாருகவன இருடிகள் கண்டனர். தவ வலிமையால் முக் காலத்தையும் உணரும் அவர்கள் இப்பெண்களின் இந்நிலைக்குரிய காரணத்தை உணர்ந்தனர். உடனே கோபம் கொண்ட அவர்கள், “கூடல் நகரில் வணிகப் பெண்களாக அழகுடன் பிறப்பீர்கள்” என்று அப்பெண்களைப் பார்த்துச் சாபம் இட்டனர்.

உடனே அப்பெண்கள், “எங்களுக்கு இச்சாபம் நீங்குவது எப்போது?” என்று கேட்டனர். அதற்கு இருடிகள் “சோமசுந்தரக் கடவுள் உங்களைத் தீண்டும் போது நீங்கும்” என்றனர். அவர் கூறிய வண்ணமே அம்மகளிர் அனைவரும் வணிக மகளிராய் மதுரையில் வந்து தோன்றினர். அவர்கள் வளர்ந்து பருவம் அடைந்தனர். அப்போது சோமசுந்தரக் கடவுள் வளையல் வியாபாரியாய் கோலம் கொண்டு தோளில்

வளையல் சுமந்து விலை கூறிக் கொண்டு வணிக வீதியில் நடந்து வந்தார்.

"வளையல் வாங்குமின்! வளையல் வாங்குமின்!!" என்று கூறிக் கொண்டே வணிக வீதியில் வந்துகொண்டிருந்த சோமசுந்தரக் கடவுளைக் கண்டவுடன் அப்பெண்கள் அவரை வந்து சூழ்ந்து மொய்த்தார்கள். அவர் அழகைக் கண்டவுடன் அவருடன் இன்பம் நுகர்வதற்குப் பேராவல் கொண்டனர். "செல்வம் மிக்க வளையல் வணிகரே! எங்களுடைய சிவந்த கைகளுக்கு ஏற்ற வளையலைத் தேர்ந்தெடுத்து அணிவீராக" என்று கூறி ஒவ்வொருவரும் கையை நீட்டினர்.

ஒவ்வொரு பெண்ணும் ஓடி வந்து வளையல் அணிந்தனர். அவரிடம் வளையல் அணிய வேண்டும் என்னும் ஆசையால் உள்ள சென்று வளையலை உடைத்துவிட்டு மீண்டும் மீண்டும் வந்து வளையல் அணிந்தனர். அவரைக் காமத்துடன் பார்த்ததால் அவர்களுடைய உடல் மெலிந்து வளையல்கள் கழன்றன. எனவே மீண்டும் சிறிய வளையல்களை அணிவிக்கும்படி வளையல் வியாபாரியை வற்புறுத்தினர். கடைசியில் அப்பெண்கள், "நாங்கள் அணிந்து கொண்ட வளையலுக்கு உரிய விலையைப் பெற்றுக் கொண்டு போங்கள்" என்றனர்.

உடனே வணிகேசர் அம்மகளிரைப் பார்த்து, "வான் விழியீர்! நாளை வாங்குவோம்" என்று கூறி மறைந்தருளினார். உடனே மதுரை நாயகர் மற்றவர் கண்டு வியக்கும் வண்ணம் சிவலிங்கத் திருவுருவில் கலந்து தோன்றியருளினார். மதுரை நாயகரே வளையல் வியாபாரியாய் வந்தவர் என்று அனைவரும் உணர்ந்தனர். மகிழ்ச்சியில் திளைத்தனர். சோமசுந்தரக் கடவுள் தம் திருக்கையில் தொட்டு வளையல் இட்ட தன்மையினால் வணிக மங்கையர் கருவுற்றனர். அளவற்ற புதல்வர்களைப் பெற்றனர். சில நாட்களுக்குப் பின்னர் அப் பெண்கள் சிவபெருமான் திருவருள் பெற்றுச் சிவலோகத்தை அடைந்தனர்.

33. அட்டமா சித்தி உபதேசித்த படலம்

ஊழிக்காலம் தோறும் வளருகின்ற திருக்கைலாய மலையில் கல்லால மர நிழலின் கீழ் முன்னொரு காலத்தில் சிவபெருமான் வீற்றிருந்தார். அப்போது அவர் பக்கத்திலே உமா தேவியார். எழுந்தருளி இருந்தார். தம் மலர்க் கைகளால் வெற்றிலைச் சுருளை மடித்துக் கொடுத்தார். அப்போது சிவகணத் தலைவர்களும் பெருந்தவ முனிவர்களும் கேட்கும்படி சிவபெருமான் போக குரு மூர்த்தியாய் இருந்து சிவக்கதையினைத் திருவாய் மலர்ந்தருளிக் கொண்டிருந்தார். அப்போது கார்த்திகைப் பெண்களாகிய இயக்க மாதர் அனைவரும் சிவபெருமான் திருமுன் வந்து, "எம்பெருமானே! அடியேங்களுக்கு அட்டமா சித்தியை உபதேசித்தருளும்" என்று பணிந்து விண்ணப்பம் செய்தனர்.

உடனே சிவபெருமான் தன் அருகில் உள்ள உமா தேவியைச் சுட்டிக்காட்டி, "இவள் தன் பூரணத் தன்மையினால் எங்கும் நிறைந்த பராசக்தியாகியும் மகேஸ்வரியாகியும் உள்ளவள். அட்டமா சித்திகள் இவளைப் பணிந்து குற்றேவல் செய்யும். இவளை நீங்கள் சிந்திப்பீர்களானால் இவள் அட்டமா சித்திகளையும் தந்தருள்வாள்" என்றார். ஆயின் அவ்வியக்கியர் அனைவரும் சிவபெருமான் கூறிய வண்ணம் ஊழ்வினை வலியால் உமாதேவியைச் சிந்தியாது சிவபெருமான் அருளிய அட்டமா சித்திகளை மறந்து விட்டனர்.

உடனே அப்பெண்களின் குற்றத்தை எண்ணி, "நீங்கள் பட்ட மங்கை என்னும் தலத்தில் உள்ள ஆலமரத்தின் அடியில் கற்பாறைகளாய்க் கிடக்கக் கடவீர்" என்று சபித்தருளினார். இயக்கியர்கள் மனம் தளர்ந்து வருந்தினர். பெருமானை வணங்கி, "இச்சாபம் நீங்குவது எப்போது?"

என்று வினவினர். உடனே பெருமான் "ஆயிரம் வருடங்கள் கற்பாறைகளாய்க் கிடவுங்கள். பின்னர் நான் மதுரையிலிருந்து வந்து அச்சாபம் நீக்கி அட்டமா சித்திகளை உபதேசிக்கிறேன், போங்கள்" என்று கூறியருளினார்.

அவ்வாறே இயக்கியர்கள் அனைவரும் பட்ட மங்கை என்னும் தலத்தில் கருங்கற் பாறையாய் மாறி ஆயிரம் வருடம் கிடந்தனர். பின்னர் மதுரை நாயகரான சோமசுந்தரக் கடவுள் ஞானாசிரியராகத் தோற்றம் கொண்டு அக் கற்பாறைகளின் முன்னர் வந்தார். அப்பெண்களின் வினை கெடத் திருநோக்கம் செய்தருளினார். அவ்வியக்கியர் அனைவரும் கற்பாறை வடிவம் நீங்கி முன்னைய வடிவம் பெற்று எழுந்தனர். சிவபெருமான் அப்பெண்களின் தலை மீது தம் கையினை வைத்து? அட்டமா சித்திகளையும் உபதேசித்தருளினார்.

சித்திகள், அணிமா, மகிமா, இலகிமா, கரிமா, பிராத்தி பிராகாமியம், ஈசத்துவம், வசித்துவம் என எட்டு வகைப்படும். இதனை இறைவர் அவர்கட்குத் தெளிவுபட உபதேசித்து அருளினார். இதனை இயக்கியர் உமாதேவியாரின் தியான வலிமையினால் நன்கு பயின்று பயிற்சி பெற்றனர். பிறகு விண் வழியே சென்று கயிலாய மலையை அடைந்தனர்.

34. விடையிலச்சினையிட்ட படலம்

காஞ்சிநகரில் காடு வெட்டிய சோழன் என்னும் மன்னன் ஒருவன் இருந்தான். அவன் அக்காஞ்சியிலுள்ள காடுகளை எல்லாம் வெட்டி நகராகத் திருத்திய காரணத்தால் 'காடு வெட்டிய சோழன்' என்ற பெயரைப் பெற்றான். அவன் உத்தம சிவபக்தன். அவனுக்கு மதுரையில் அங்கயற் கண்ணம்மையுடன் எழுந்தருளியுள்ள சிவபெருமானைத் தரிசிக்க வேண்டும் என்ற எண்ணம் இருந்தது. அவ்விருப்பம்

நாள்தோறும் பெருகி வந்தது. இந்த எண்ணத்துடன் ஒரு நாள் நன்கு உறங்கிக் கொண்டிருந்தான். அப்போது சோமசுந்தரக் கடவுள் சித்தமூர்த்தியின் உருவம் தாங்கி "சோழனே! நீ சிறிதும் அஞ்ச வேண்டாம். நீ மாறு வேடம் பூண்டு துணையின்றி மதுரை வந்து தரிசித்துச் செல்வாயாக" என்றார்.

உடனே காடு வெட்டிய சோழன் விழித்தெழுந்தான். வேற்று நாட்டு எல்லையுள் இருக்கும் மதுரைக்கு எவ்வாறு செல்வது என்று பலகாலம் அவன் சிந்தித்து வந்தமைக்கு விடையாகச் சித்தமூர்த்தி தோன்றி 'மாறு வேடத்துடன் வருக' என்று அருளியதை எண்ணி மகிழ்ந்தான். அன்று இரவே வேற்றுருவுடன் மதுரை நோக்கிப் புறப்பட்டுச் சென்றான். மலை, ஆறு, பாலை நிலம், நல்ல வயல்கள் போன்றவற்றைக் கடந்து வைகை யாற்றின் கரையை அடைந்தான்.

வைகை யாற்றில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடிக் கொண்டிருந்தது. "பாண்டியன்தான் நம் பகைவன் என்று கருதினால், இவ்வையையும் நாம் போக முடியாமல் தடுத்து நம் பகையாயிற்றே" என்று கருதினான். பெரிதும் வருந்தி இருந்தான். உடனே சோழனுடைய மெலிவை எண்ணிய சிவபெருமான் சித்தர் வடிவத்துடன் அவன் அருகில் எழுந்தருளினார். ஓடி வருகின்ற வெள்ள நீரை நோக்கி வற்றும்படி திருநோக்கம் செய்தருளினார். உடனே வெள்ளம் வற்றியது. சித்தமூர்த்தி அச்சோழனை அழைத்துக் கொண்டு அவ்வையை ஆற்றினைக் கடந்து சென்றார்.

வடக்கு மதில் வாயிலைத் திறந்து கொண்டு உள்ளே அழைத்துச் சென்றார். பல வீதிகளைத் தாண்டிப் பொற்றாமரைத் தீர்த்தத்தை அடைந்தனர். அதில் சோழனை நீராடச் செய்வித்தார். திருக்கோயிலினுள் புகச் செய்து அங்கயற் கண்ணம்மையையும், சிவபெருமானையும் வணங்கச் செய்து உள்ளத் தூய்மை பெறச் செய்தார். சோழன் பேரின்பத்தில் ஆழ்ந்தான்.

பேரின்பத்தில் ஆழ்ந்து நின்று, பலவாறு துதித்த சோழனைப் பார்த்துச் சித்த மூர்த்தி “சோழனே! நீ இங்கு வந்த செய்தியைப் பாண்டியன் அறிந்தால் அவன் உனக்குத் துன்பம் செய்வான்” என்று கூறி அவனை வடக்கு வாசல் வழியாக அழைத்துக் கொண்டு சென்று வையை ஆற்றின் வடகரையை அடைந்தார். அவன் நெற்றியில் விபூதியைத் திரிபுண்டமாகச் சாத்தி, உனக்கு நல்ல துணை கிடைக்கப் பெற்றுச் செல்லக் கடவாய்” என்று சொல்லி அவனை வழி அனுப்பி வைத்தார்.

பின்னர் திரும்பி வந்து முன்னர் தாம் திறந்த வடக்கு வாயிற் கதவினை மூடி அதன்கண் இடப முத்திரையை இட்டுத் தனது விமானத்தின்கண் எழுந்தருளியிருந்தார். மறுநாள் பொழுது விடிந்தது. அப்போது வாயில் திறப்பவர்கள் கதவில் இடபக்குறி பொறிக்கப்பட்டிருப்பதைக் கண்டு ஐயுற்றனர். மற்ற மூன்று வாயிற் கதவுகளிடமும் சென்று உற்று நோக்கினர். அவ்விடங்களில் ‘கயல் முத்திரை’ பிறழாமல் இருப்பதைக் கண்டனர்.

உடனே அவர்கள் பாண்டியன் முன்னே சென்று, “அரசே! நமது வடக்கு வாயிற் கதவின்கண் இட்டிருந்த கயல் முத்திரையை மாற்றி இடபக் குறியினை இட்டுள்ளனர். அவ்வாறு இட்டவர் யார் என்று அறிந்திலோம்” என்றனர். உடனே பாண்டியன், “இது ஓர் அற்புதம். இதனைச் செய்தவர் யார்?’ ஒன்றும் அறிகிலேன்” என்றான். அன்று பகல் உணவை நீக்கி இரவு உறங்கினான். அவன் கனவில் சிவபெருமான் தோன்றினார். “பாண்டியனே! சோழன் தன் உள்ளத்தில் கொண்ட அன்பினால் நம்மை இங்கு வந்து வணங்க விரும்பினான். நாம் உள்ளே அழைத்துக் கொண்டு வந்து தரிசனம் செய்வித்தோம். பிறகு அவனை அனுப்பி விட்டு உள்ளே தாழிட்டு இடபக் குறியை இட்டோம்” என்று திருவாய் மலர்ந்தருளினார்.

உடனே குணபூடண பாண்டியன் விழித்தெழுந்தான். இது சோமசுந்தரக் கடவுளின் திருவிளையாடல் என்று அனைவர்க்கும் தெரிவித்தான். அனைவரும் இறைவனின் திருவிளையாடலை எண்ணிப் பேரின்ப வெள்ளத்தில் மூழ்கினர். பின்னர், குணபூடணன் தன் மகன் இராசேந்திர பாண்டியனிடம் நாட்டை ஒப்படைத்து விட்டு விண்ணுலகை அடைந்தான்.

35. தண்ணீர்ப் பந்தல் வைத்த படலம்

இராசேந்திர பாண்டியன் ஆட்சி புரியும் காலத்தில் காடு வெட்டிய சோழன் வெளிப்படையாக யாவரும் அறிய வந்து தரிசனம் செய்து கொண்டு போகக் கருதினான். எனவே இராசேந்திர பாண்டியனின் நட்பைப் பெற எண்ணினான். அதற்காகப் பொன்னாபரணம் போன்றவற்றை வரிசையாக அனுப்பி வைத்தான். அதனைப் பெற்றுக்கொண்ட இராசேந்திர பாண்டியன் சோழனுடன் நட்புப் பூண்டான். உடனே இராசேந்திர பாண்டியனுக்கு காடு வெட்டிய சோழன் தன் மகளை மணம் செய்து கொடுக்க விரும்பினான். அதைப் பாண்டியனிடம் கூற, பாண்டியன் உடன்படவே, இருவரும் உறுதி செய்து கொண்டனர்.

இராசேந்திர பாண்டியனுக்குச் சோழன் தன் மகளைக் கொடுக்க உறுதி செய்து கொண்டதை இராசேந்திரனுடைய தம்பியான அரசசிங்கன் என்பவன் அறிந்தான். அந்த அரச சிங்கனுக்கு இராச சிங்கன், இராச சிம்மன் என்னும் வேறு பெயர்களும் உண்டு. அவ்வரச சிங்கன் சிறிதும் பழிக்கு அஞ்சாதவன். தன் தமயனுக்குப் பேசப்பட்ட சோழனுடைய மகளைத் தானே மணம் செய்து கொள்ள விரும்பினான். தன்

தமயனுக்குத் தெரியாமல் தான் மட்டும் காஞ்சி நகரை அடைந்தான். அவன் வருவதை அறிந்த சோழன் கடல்போன்ற தன்னுடைய சேனை சூழ அவனை எதிர்கொண்டு அழைத்துச் சென்று தன் அரண்மனையில் தங்க வைத்தான்.

இராசேந்திர பாண்டியனுக்கு என்று வரையறுத்திருந்த தன் மகளை அரசசிங்கனுக்கு மணம் செய்து கொடுத்தான். பின்னர் காடு வெட்டிய சோழன், பாண்டிய நாட்டின் அரசு தன் மருமகளான அரசசிங்கனுக்கே கிடைக்கச் செய்ய வேண்டும் என்று எண்ணினான். எனவே தன் மருமகனான அரசசிங்கனோடும் எண்ணற்ற சேனைகளோடும் பாண்டிய நாட்டின்மீது படை எடுத்துச் சென்றான். முரசு அறைந்து போர் செய்தியைத் தெரிவித்துவிட்டு மதுரைக்கு இரண்டு யோசனை தூரத்தில் தங்கிப் பாடி வீடு அமைத்திருந்தான்.

காடு வெட்டிய சோழனும், அரசசிங்கனும் படையெடுத்து வந்திருப்பதை ஒற்றர்கள் மூலம் இராசேந்திர பாண்டியன் அறிந்தான். திருக்கோயிலை அடைந்து சோம சுந்தரக் கடவுள் திருமுன்னர் விழுந்து வணங்கி, "எம்பெருமானே! நள்ளிரவில் தனியனாய் வந்து உன்னைப் பணிந்து சென்ற உன் பக்தனாகிய காடு வெட்டிய சோழன், இப்போது எனக்கு விரோதமாக படை எடுத்து வந்துள்ளான். அன்று அவன் செய்த அறச் செயலுக்குத் துணையாகி நின்ற நீர் இன்று அவன் செய்யும் மறச் செயலுக்கும் துணையாவீரோ?" என்று குறையிரந்து வேண்டினான். அப்போது வானில் ஓர் அசரீரி, "பாண்டியனே! நாளை உன் சேனையோடு சென்று பகைவனோடு போரிடுக. வெற்றி உம்மதாகச் செய்வோம்" என்று எழுந்தது. பாண்டியன் மகிழ்வடைந்தான். தன் அரண்மனை அடைந்தான்.

மறுநாள் தன் சேனைகள் சூழப் புறப்பட்டுப் போர்க்களம் அடைந்தான். சோழன் படையும் பாண்டியன் படையும் கலந்து போரிட்டன. உச்சியில் சூரியன் வருமளவும் போர் நடைபெற்றது. கானல் எங்கும் வீசியது. நீர் வற்றியதால்

படைவீரர்கள் தண்ணீர் இன்றித் தவித்தனர். படைவீரர்கள் கள்ளி மரம், கருகிய மரம் போன்றவற்றில் நிழலுக்காக ஒதுங்கி நின்றனர்.

இவ்வாறு வெப்பத்தால் இருதிறத்துப் படைகளும் வருந்தும் சமயத்தில், பாண்டியன் படையின் நடுவில் சோம சுந்தரக் கடவுள் ஒரு தண்ணீர்ப்பந்தல் வைத்தார். ஒரு கெண்டியைக் கையில் ஏந்தி ஒருவருக்கு ஒன்றேயாய், இலட்சம் பேருக்கு இலட்சமாய் உள்ள துவாரத்தினால் தண்ணீர் வார்த்துத் தாகத்தைத் தணிவித்தார். பாண்டியனுடைய படைகள் சிவபெருமான் கொடுத்த தண்ணீரைப் பருகிக் களைப்பு நீங்கினர். மீண்டும் வலிமை பெற்றுச் சோழன் மேல் போருக்குச் சினந்தெழுந்து சென்று போரிட்டனர். தண்ணீர் இன்றிச் சோர்ந்திருந்த சோழன் படைகள் சிதறி ஓடின. பாண்டியன் வெற்றி பெற்றான்.

படை வீரர்கள் காடு வெட்டிய சோழனையும் அரச சிங்கனையும் இராசேந்திர பாண்டியன் முன் கொண்டு வந்து நிறுத்தினார்கள். இறைவனின் அனுமதியைப் பெற்றுப் பாண்டியன், சோழனை அவன் நாட்டிற்குத் திருப்பி அனுப்பி வைத்தான். அரசசிங்கன் அனுபவித்த செல்வச் செருக்கைக் கவர்ந்து கொண்டு அவனை ஒதுக்கி வைத்து விட்டான். எல்லாவுயிர்களும் மகிழும்படி இராசேந்திர பாண்டியன் நல்ல அரசாட்சி செய்து வந்தான்.

36. இரசவாதம் செய்த படலம்

பாண்டிய நாட்டில் திருப்பூவணம் என்னும் சிவதலம் ஒன்று உள்ளது. அங்குள்ள கோயிலில் பணிபுரியும் உருத்திர கணிகையர்களுள்ளே பொன்னனையாள் என்னும் பெண் ஒருத்தி இருந்தாள். அவள் பாடுவதிலும் ஆடுவதிலும் வல்லவள். சிவ புண்ணிய நெறியில் நடக்கும் இயல்பினள்.

அவள் தினந்தோறும் தன் தோழிகளுடன் காலையில் கோயிலுக்குச் சென்று 'சுத்த நிருத்தம்' ஆடுவாள். பின்பு வீட்டிற்கு வந்து சிவனடியார்களை அமுது செய்வித்து எஞ்சியதை உண்பாள். இஃது அவளுடைய நியமமாகும்.

இவ்வாறு நடந்து வரும் நாளில், சிவபெருமான் தமது திருவுருவத்தை வார்ப்பிக்க வேண்டுமென்னும் ஆசையை அவள் மனத்தின்கண் கொடுத்தருளினார். அதனால் அவள் சிவபெருமானின் திருவுருவத்தைக் கருவினால் (மெழுகினால்) செய்வித்தாள். நாள்தோறும் ஆடல் பாடல் முதலியவற்றால் வரும் பொருள் முழுவதையும் அடியார் பூசைக்கே செலவழித்து விட்டாள். இதனால் பொருள் சிறிதும் மிஞ்சவில்லை. இவ்வாறு பொருள் மிஞ்சாமையால் சிவபெருமானின் திருவுருவம் வார்ப்பது எங்ஙனம் என்று கருதி வருத்தமடைந்தாள். அதனால் அவள் சோமசுந்தரக் கடவுளைத் தன் மனத்தில் சிந்தித்திருந்தாள். சிவபெருமான் அவள் நினைவைத் திருவுள்ளத்தில் கொண்டார்.

ஒரு நாள் சோமசுந்தரக் கடவுள் சித்த மூர்த்தியின் திருவுருவம் கொண்டு பொன்னனையாளின் வீட்டினை அடைந்தார். மற்ற அடியார்களுடன் கூடித் திருஅமுது செய்யாமல் கடை வாயிலின் ஒரு பக்கத்தே எழுந்தருளியிருந்தார். சிவனடியார்கள் அனைவரும் அமுது செய்து விட்டுச் சென்று விட்டனர். பின்னர் பொன்னனையாளின் தாதியர் வந்து, "ஐயனே! திருவமுது செய்ய உள்ளே எழுந்தருள வேண்டும்" என்றனர். அதற்குச் சித்தர், "உங்கள் தலைவியை இங்கே அழையுங்கள்" என்றார்.

அத்தாதியர், சென்று பொன்னனையாளை அழைத்து வந்தனர். அவள் சித்த மூர்த்திகளை நோக்கி, "எம்பெருமான் இங்கு எழுந்தருள்வதற்கு என்ன தவம் செய்தேனோ? உள்ளே எழுந்தருள்க. தேவரீர் உள்ளக் கருத்திற்கு ஏற்ற தொண்டினைச் செய்கிறேன்" என்றாள்.

உடனே சித்த மூர்த்தி புன்னகை புரிந்து, "பெண்ணே! நீ மிகவும் உடல் மெலிந்திருக்கின்றாய். அதன் காரணம் யாது? என்று வினவினார். உடனே பொன்னனையாள் சித்த மூர்த்தியின் திருவடிகளை வணங்கி, "எம்பெருமானே! சிவபெருமானின் திருவுருவத்தை ஆக்குவதற்குப் பெரு விருப்பம் கொண்டு மெழுகினால் கருக்கட்டி வைத்துள்ளேன். அதனைப் பொன்னினால் செய்து முடிக்கக் கருதிய எனக்கு, நாள்தோறும் வரும் பொன் முழுவதும் அடியார்களின் பூசைக்கே செலவழிந்து விடுவதால் சிறிதும் எஞ்சுவதில்லை. அதனால் சிவபெருமானின் திருவுருவம் செய்வதற்குப் பொன்னில்லை. எனவே என் உள்ளம் வருந்தி உடல் மெலிந்துள்ளேன்" என்றாள்.

அதனைக் கேட்ட சித்தமூர்த்தி மகிழ்ந்தார். பின்னர், "பெண்ணே! பூசையும் சிறந்தது மகேசுர பூசையே என்று செய்து வருகின்றாய். பொன்னனையாள் என்னும் உன் பெயருக்கேற்றவாறு அழிவற்ற இறைவன் திருவுருவைப் பொன்னாற் செய்யப் பெறுவாயாக. அதற்காக உன் வீட்டில் உள்ள பித்தளை. ஈயப் பாத்திரங்களை இங்குக் கொண்டு வருக" என்று கூறினார். உடனே பொன்னனையாள், "வெள்ளி, செம்பு, இரும்பு, ஈயம், பித்தளை, வெண்கலம் முதலிய உலோகப் பொருள்கள் அனைத்தையும் சித்தமூத்தியின் முன்னர் கொண்டு வந்து வைத்தாள்.

உடனே சித்தமூர்த்தி அப்பொருள்களின் மேல் திருநீற்றினைச் சிதறி, இவை யாவும் பொன்னாக மாற வேண்டும் என்று மனதில் எண்ணி, பொன்னனையாளை நோக்கி, "இவற்றை நீ இன்றிரவு நெருப்பிலிட்டு எடுக்கின், யாவும் பொன்னாகி விடும்'' என்றார். உடனே பொன்னனையாள், "பெருமானே, தாங்கள் இங்கு தங்கி இருந்து இக்காரியத்தை முடிக்க வேண்டும்'' என்று வேண்டினாள். ஆயின் சோமசுந்தரக் கடவுள் அதற்கு உடன் படாமல் மறைந்தருளினார். பொன்னனையாள் இங்குச்

சித்தராய் வந்தவர் சோமசுந்தரக் கடவுளே என்று உணர்ந்து கொண்டாள்.

அன்றிரவு, சித்தமூர்த்தி கட்டளை இட்ட வண்ணமே தீயில் புடமிட்டாள். அவை அனைத்தும் களிம்பு நீங்கப் பொன்னாக மாறின. அப் பொன்னினைக் கொண்டு இறைவனுக்கு ஒரு திருவுரு வார்ப்பித்தாள். பொன் திருவுருவத்தின் பேரழகைக் கண்டு, "அச்சோ! அழகிய பிரானோ இவன், "என்று கூறி கன்னத்தைக் கிள்ளி முத்தமிட்டாள். இன்றும் அவ் விறைவன் "அழகிய பிரானோ" என்று காரணப் பெயர் கொண்டு விளங்குகின்றார்.

37. சோழனை மடுவில் வீட்டிய படலம்

இராசேந்திர பாண்டியனுக்குப்பின் அவன் வழியில் வந்த சுந்தரேச பாத சேகரபாண்டியன் என்னும் பாண்டியன் நாட்டைச் சிறப்புடன் ஆண்டு வந்தான். அவன் மதுரை நாயகருக்குப் பலவிதமான திருப்பணிகளைச் செய்து வந்தான். அப்போது சோழ நாட்டைச் சேர்ந்த 'ஆயிரம் பரிக்கோர் சேவகன்' என்னும் மன்னன் பாண்டிய நாட்டின் மேல்படை எடுத்து வந்தான்.

உடனே பாண்டியன் சோம சுந்தரக் கடவுளின் திருமுன்னர் சென்று, "புனிதனே! உன் திருவருளின் வலிமையால் நான் அரசாண்டு வருகின்றேன் என்பதை எண்ணாது என் குறைவான சேனையை எண்ணிப் பார்த்துச் சோழன் படை எடுத்து வருகின்றான்! என்னைக் காக்க வேண்டும்" என்று விண்ணப்பம் செய்தான். அப்போது

அசரீரி, "பாண்டியனே! நீயே வெற்றி பெறுமாறு நாம் வந்து போர் செய்வோம்" என்று வானத்தில் தோன்றியது. உடனே பாண்டியன் தன் சேனைகளோடு போருக்குப் புறப்பட்டுச் சென்றான்,

அப்போது சோமசுந்தரக் கடவுள், வேட்டுவத் திருவுருவம் தாங்கி, குதிரைமீது ஊர்ந்து பாண்டியனது சேனையின் முன்னணியில் சென்று நின்றருளினார். அதனைக் கண்ட சோழன் சினந்து, "ஆயிரம் குதிரைகட்கு ஒரு வீரனாகிய யான் வந்தேன்" என்று சொல்லிக் கொண்டு போய் எதிர்த்தான். "எண்ணில்லாத குதிரைகட்கு ஒற்றைச் சேவகன் யானே" என்றார் வேட்டுவத் தலைவராக வந்த இறைவர். உடனே இருவரும் போரிட்டனர். சோழன் தோற்றான். குதிரையோடு பயந்து ஓடத் தொடங்கினான். வேட வடிவம் தாங்கிய இறைவர் மறைந்தார்.

பின்னர் சோழன் ஓடுவதை அறிந்து சுந்தரேச பாத சேகர் பாண்டியன் அவனைத் துரத்திச் சென்றான். சோழன் சிறிது திரும்பிப் பார்த்தான். வேடரைக் காணவில்லை. பாண்டியன் துரத்துவதை அறிந்து பயம் நீங்கப் பெற்றுத் திரும்பிப் பாண்டியனைத் துரத்தத் தொடங்கினான். மதுரை வரை துரத்திக் கொண்டு வந்தான். வேகமாக இருவரும் ஓடிவந்ததால் எதிரே மடு ஒன்று இருப்பதைக் கவனிக்க வில்லை. முதலில் பாண்டியனும், பின்னர் சோழனும் அம்மடுவில் வீழ்ந்தனர். இறைவன் அருளால் பாண்டியன் அம்மடுவில் இருந்து உயிரோடு வெளிவந்தான். சோழன் இறந்தான். பின்னர் சுந்தரேசபாத சேகர பாண்டியன் சோழனின் பொருள்கள் யாவற்றையும் கைப்பற்றிக் கொண்டு சோமசுந்தரப் பெருமானின் திருவருளால் நீண்ட நாட்கள் ஆட்சி புரிந்து வந்தான்.

38. உலவாக்கோட்டை அருளிய படலம்

மதுரையில் வேளாளர் குலத்தில் 'அடியார்க்கு நல்லான்' என்னும் பெயர் பெற்ற ஒருவன் இருந்தான். அவனுடைய மனைவி 'தரும சீலை' என்பவள், கற்பிற் சிறந்தவள். அடியார்க்கு நல்லான் உழவுத் தொழில் புரிந்து அதில் கிடைக்கும் பெரும் பொருளில் சிவனடியார்க்கு திருவமுது படைத்து வந்தான். அளவற்ற அடியார்களுக்குத் திருவமுது செய்விக்கும் திருத்தொண்டைத் தொடர்ந்து செய்து வந்ததனால் அவன் செல்வம் குறைந்து வறுமை நிலை அடைந்தான். இருப்பினும் அத்தொண்டை அவன் நிறுத்தாமல் வட்டிக்குப் பொருள் வாங்கி அத்தொண்டைச் செய்து வந்தான். நல்ல விளைச்சலும் இல்லை. சில நாட்களில் அக்கடனும் கிடைக்கப் பெறாத அளவு வறுமை நிலையையும் அடைந்தான்.

சிவனடியார்க்குத் திருவமுது படைத்துப் பின்னர் தாம் உண்ணுவதை நியமமாகப் பூண்டிருந்த அடியார்க்கு நல்லான், தன் மனைவியோடு தானும் பல நாட்கள் பட்டினி கிடக்கத் தொடங்கினான். உடனே பசிக் கொடுமை பொறுக்காத அவ்வேளாளன் இறைவன் திருமுன்னர் தன் மனைவியுடன் சென்று, "இறைவனே! நல்ல விளைச்சல் இல்லை. கடன் கொடுப்பார் ஒருவரும் இல்லை. இனிக் கடன் கொடுப்பாரைக் காட்ட வேண்டும். இல்லையெனில் இப்பொழுதே இறந்து விடுவேன்" என்று குறையிரந்து வேண்டினான். உடனே இறைவனின் திருவாக்கு ஒன்று, "வேளாளனே! நீ அஞ்ச வேண்டாம். உன் வீட்டில் செந்நெல்லாகிய வெள்ளிய அரிசிக் கோட்டை ஒன்று சேர்த்துள்ளோம். அஃது எப்பொழுது எடுத்தாலும் அள்ள அள்ளக் குறையாத தன்மையுடையது. அதனைக் கொண்டு அடியார்களுக்கு அமுதளித்த பின்னர்

பிற தருமங்களைச் செய்க! முடிவில் வீடுபேறு அளிக்கின்றோம்" என்று வானின்று எழுந்தது.

அதனைக் கேட்டு அடியார்க்கு நல்லான் மகிழ்ந்தான். தன் மனைவியுடன் வீடடைந்தான். வீட்டில் இறைவன் அருளால் உண்டாகி இருந்த அரிசிக் கோட்டையைக் கண்டான். நாள்தோறும் தன் மனைவியுடன் அக்கோட்டையைப் பூசை செய்தான். வேண்டிய அரிசியைக் கைக் கொண்டு சிவ தருமங்கள் பலவற்றைச் செய்து வந்தான். அவ்வரிசியைக் கொண்டு வறுமையின்றிக் குபேரன்போல் வாழ்ந்து வந்தான். பன்னெடும் காலம் வாழ்ந்து தம் மனைவியோடும் சுற்றத்தாரோடும் சிவலோகம் அடைந்தான்.

39. மாமனாக வந்து வழக்குரைத்த படலம்

மதுரையில் தனபதி என்னும் பெயர் கொண்ட வணிகன் ஒருவன் வாழ்ந்து வந்தான். அவன் குபேரன்போன்று பெரும் செல்வமுடையவன். அவன் மனைவியின் பெயர் சுசீலை. அவர்கட்கு நெடுங்காலமாய் மக்கட்பேறில்லை. தனபதி தன் தங்கையின் மகனையே (மருமகனையே) தகுதி அமைந்த மகனாக ஏற்றுக் கொண்டு அவனைத் தன் மனைவியிடம் கொடுத்தார். அவள் அக்குழந்தையை மகிழ்ந்து வாங்கி, அச்சிறுவனுக்குப் பல அணிகலன்கள் பூட்டிப் பொலிவோடும் அன்போடும் வளர்த்து வந்தாள்.

தனபதிக்கும் அவனுடைய தங்கைக்கும் அடிக்கடி சண்டை வந்தது. அவளோ கணவனை இழந்த கைம்பெண். ஒருநாள் தனபதியின் தங்கை கோபத்துடன், "உனக்குச் செருக்கு ஏன்? நீ பிள்ளைப்பேறு அற்ற பாவி! என் பிள்ளையால் அன்றோ நீ இம்மை மறுமைப் பயன்களை அடைவாய்" என்றாள். தனபதி அம்மொழிகளைக் கேட்டுப்

பெரிதும் வெட்கமடைந்தான். "மறு பிறப்பிலேனும் மகப்பேற்றிற்குரிய தவத்தினைச் செய்யவேண்டும்" என்று முடிவு செய்து தன் செல்வம் முழுவதையும் தம் மருமகனுக்கே உரிமையாக்கி விட்டுத் தன் மனைவியோடு தவ நெறியிற் சென்றான்.

தனபதி ஊரை விட்டுச் சென்று விட்டதால் அவன் தங்கை தனியளானாள். உடனே தாயத்தார்கள் அவளையும் அவள் மகனையும் துரத்தி விட்டு வல்வழக்குப் பேசிச் செல்வம் அனைத்தையும் கவர்ந்து கொண்டார்கள். தாயும் மகனும் தளர்வடைந்து, "இனி பற்றுக் கோடாய் இருப்பவர் சோமசுந்தரக் கடவுளே ஆவார்" என்று எண்ணி அவர் திருமுன் சென்று வணங்கி நின்றனர். நடந்தவற்றை எல்லாம் இறைவனிடம் அழுது முறையிட்டாள். நிலத்தின் மீது அழுது புரண்டாள். சற்று நேரத்தில் உறங்கிவிட்டாள். அப்போது சோமசுந்தரக் கடவுள் அவள் கனவில் தோன்றி, "பெண்ணே நாளை, தாயத்தார்களைத் தடுத்துத் தரும சபையின்கண் ஏற்றிடுவாயாக. நாம் வந்து இப்பொய் வழக்கினைத் தீர்த்துப் பொருளினை மீட்டுத் தருவோம்" என்றார்.

வணிகமாது விழித்தெழுந்தாள். அதிசயம் அடைந்தாள் தனது மகனோடு வீட்டிற்குச் சென்று உறங்கினாள். மறுநாள் பொழுது விடிந்ததும், இறைவனை வணங்கி, தாயத்தார்களை நோக்கி, "அடுப்பில் நெருப்பிடாதீர்கள். ஓர் அடியும் எடுத்து வைக்காதீர்கள்! அரசன்மீது ஆணை தரும சபைக்கு வந்து பெரியோர்கள் ஆராய்ந்து கூறும் தீர்ப்பினை கேட்டு எங்கள் உரிமைப் பொருளைக் கொடுத்து விட்டுச் செல்லுங்கள்" என்று சொல்லி வழிமறித்தாள்.

அப்போது தாயத்தார்கள் அவளைத் தீய சொற்களால் ஏசி, நிலத்தில் தள்ளி அடித்தனர். உடனே அவள் தன் புதல்வனுடன், "இது முறையோ! இது முறையோ!" என்று கூவிக் கொண்டே தரும சபையை அடைந்தாள். சபையார்க்குத் தன் வழக்கைக் கூறினாள். சபையார்,

தாயத்தார்களை வரவழைத்தனர். அப்போது இறைவர் தவம் மேற்கொண்டு சென்ற 'தனபதி' போல உருவம் தாங்கி அங்கு வந்தார்.

அப்போது தனபதியின் வருகையைக் கண்டு தாயத்தார் மனம் தளர்ந்தனர். பெரு வியப்பு அடைந்தனர். மாமனாக வந்த சிவபெருமான் தங்கையையும் மருமகனையும் தழுவிக் கொண்டு அழுதார். பின்னர் தரும சபையினரை நோக்கி, "அறத்தின் வழிநின்று எம் வழக்கையும் தாயத்தார் வழக்கையும் சீர்தூக்கி நியாயம் வழங்குங்கள்" என்று தெளிவாகக் கூறினார். இதனைக் கேட்டுச் சபையோர்களே நடு நடுங்கிவிட்டனர். அவர்கள் இருதிறந்து வழக்குகளையும் தடை விடைகளால் ஆராய்ந்து, "தாயத்தாரின் வழக்குப் பொய் வழக்கு" என்று தீர்ப்புக் கூறினர்.

தாயத்தார் அதுகேட்டு அச்சமுற்றனர். தம் வழக்கை வேறு வகையிலே கூற முயன்றனர். "இவர் தனபதி செட்டியார் அல்ல" என்றனர். அப்போது இறைவராகிய தனபதி செட்டியார் அனைவரின் குடிப் பெயரும், பட்டப் பெயரும், பெற்றவர்கள், பிள்ளைகள், உடன் பிறந்தார், மனைவியர், சுற்றத்தார், குணங்கள், செய் தொழில்கள் போன்றவற்றைத் தெளிவுபட எடுத்துக் கூறினார். அதைக் கேட்டுத் தரும சபையார் "இவர் தனபதியே" என்று தீர்ப்புக் கூறினர். அதைக் கேட்டுத் தாயத்தார், "நம் வழக்குத் தோற்றது. அரசன் அறிந்தால், தண்டிப்பான்" என்றெண்ணி ஓடி விட்டனர். "தனபதி செட்டியார் சொத்து முழுவதும் அவர் மருமகனுக்கே உரியது" என்று தரும சபையினர் சாசனம் செய்து செட்டியாரின் தங்கையிடம் கொடுத்தனர். அப்போது 'தனபதி' யாவரும் காண மறைந்தருளினார். இது சோமசுந்தரக் கடவுளின் திருவிளையாடல் என்று அனைவரும் உணர்ந்தனர். சுந்தரேச பாத சேகர பாண்டியன், தன் மகன் வரகுண பாண்டியனிடம் நாட்டை ஒப்புவித்து, இறைவன், திருவடி நிழலடைந்தான்.

40. வரகுணனுக்குச்

சிவலோகம் காட்டிய படலம்

வரகுண பாண்டியன் இறைவனை மெய்யன்போடு வழிபட்டு வந்தான். மும்மூர்த்திகளைப் போல உலகை நன் முறையில் பாதுகாத்து வந்தான். ஒரு நாள் வரகுணன் வேட்டையாடச் சென்று சூரியன் மறையும் வரையில் வேட்டையாடினான். வேட்டை முடிந்து திரும்பும்போது அவன் ஏறிவந்த 'கனவட்டம்' என்னும் குதிரை காட்டு வழியில் தூங்கிக் கொண்டிருந்த அந்தணன் ஒருவனை மிதித்து அவனைக் கொன்று விட்டது. அதனை அறியாத பாண்டியன் தன் அரண்மனை அடைந்தான். அவன் சுற்றத்தார் அவ் வந்தணனை அவன் அரண்மனை வாயிலில் கொண்டு வந்து போட்டு விட்டு நிகழ்ந்ததைக் கூறினர்.

அதனைக் கேட்டு வரகுண பாண்டியன் மிகவும் வருந்தினான். நிறைய பொற்குவியலை அவன் சுற்றத்தாருக்குக் கொடுத்து இறந்துபோன அந்தணனைத் தகனம் செய்யச் செய்தான். எனினும் அக் கொலைப் பாவம் அவனைப் பிரமகத்தியாக வந்து பற்றிக் கொண்டது. அப் பிரமகத்தி பாண்டியனைப் பெரிதும் துன்பப் படுத்தியது. அவன் எத்தனையோ பரிகாரம் செய்தும் நீங்கினபாடில்லை. அதைக் கண்ட மறையோர்கள், "அரசே! நீங்கள் விரத நியமத்துடன் நாள்தோறும் சோமசுந்தரக் கடவுளை ஆயிரத்தெட்டு முறை பிரதட்சிணம் செய்யுங்கள். இப் பிரமகத்தி நீங்கும்" என்றனர். பாண்டியனும் அந்தணர்கள் கூறிய வண்ணம் செய்தான்.

அப்போது சிவபெருமான் அருளினாலே ஆகாயத்தில் "பாண்டியனே, நீ பிரதட்சிணம் செய்ததால் நாம் மிக மகிழ்ந்தோம். இனி நீ அஞ்சாதே. காவிரி நாடனாகிய

சோழன் உன்னோடு போர் செய்ய வருவான். நீ அவனோடு போரிடுவாய். சோழன் உனக்குப் புறங்காட்டி ஓடுவான். நீ அவனைத் துரத்திச் சென்று திருவிடை மருதூரை அடைவாய். அங்கு உன் கொடிய பழியை நீக்கி யருள்வோம்!" என்று ஓர் அசரீரி தோன்றியது. வரகுண பாண்டியன் அது கேட்டு மனமகிழ்ந்து சிவபெருமானை வணங்கித் தன் அரண்மனையை அடைந்தான். சில நாள் சென்ற பின் இறைவன் கூறிய வண்ணமே வரகுணனோடு போரிடச் சோழன் ஒருவன் படை எடுத்து வந்தான். பாண்டியன் எதிர்த்துப் போரிட்டான். சோழன் படைகள் தோற்றோடின. பாண்டியன் அவனைத் துரத்திச் சென்றான்.

வரகுணபாண்டியன் சோழனைத் துரத்திச் செல்லும் போது காவிரியை அடை.ந்தான். பூசத்துறையில் சென்று நீராடினான். காவிரியின் தென்புறத்தில் உள்ள திருவிடை மருதூரில் எழுந்தருளிய மகாலிங்கப் பெருமானை வணங்கத் திருக்கோயிலினது கிழ்த்திசை வாயிலைக் கடந்து உள்ளே சென்றான். அப்போது அவனைத் தொடர்ந்து செல்ல இயலாத பாசத் தளையும் கொலைப் பழியும் புறத்தே நின்றுவிட்டன. உள்ளே சென்ற பாண்டியன் மகாலிங்க மூர்த்தியைப் பலவாறு துதித்துப் போற்றி வணங்கினான்.

அப்போது பெருமான் பாண்டியனை நோக்கி, "பாண்டியனே! பிரமகத்தி கீழை வாயிலில் நிற்கின்றது. ஆதலால் நீ அவ்வழியில் போகாதே. மேலை வாயில் வழியாக நம் மதுரைக்குச் செல்வாயாக'' என்று திருவாய் மலர்ந்தருளினார். அதைக் கேட்ட வரகுண பாண்டியன் மகிழ்ந்து இறைவனை வலம் வந்து கீழே விழுந்து வணங்கி மேலை வாயில் வழியாக வெளியில் வந்தான். அப்போது அவன் அங்குச் சில நாள் தங்கி மேலைக் கோபுரத்தைத் தன் பெயரால் கட்டினான். வேறு பல திருப்பணிகளையும் செய்தான். பின்னர் வழியில் உள்ள திருக்கோயில்களைத் தரிசித்துக் கொண்டு மதுரையை அடைந்தான். பின்னர் தன்

பிரமகத்திப் பழியை நீக்கிய சோமசுந்தரக் கடவுளைத் தினம் வழிபட்டு வந்தான்.

ஒரு நாள் வேதம், ஆகமம், புராணம், மிருதிகள் முதலான நூல்கள் அனைத்தும் 'உலகம் அனைத்திலும் மேம்பட்டது சிவலோகம்' என்று சொல்வதை மனத்தில் கொண்டு அச் சிவலோகத்தைக் காண வேண்டும் என்னும் ஆசை கொண்டான். உடனே அதனை இறைவனிடம், "எம்பெருமானே! உன் அடியார்கள் சூழத் தேவரீர் சிவலோகத்தில் எழுந்தருளியிருப்பதைத் தரிசித்து வணங்க அடியேன் ஆசை கொண்டேன்" என்று விண்ணப்பம் செய்தான். உடனே சிவபெருமான் பாண்டியன் அன்பிற்கு இணங்கி, "நாம் இன்றைக்கு அச்சிவலோகத்தை இவ்வுலகத்தில் வருவித்து இவ்வன்பனுக்குக் காட்டுவோம்" என்று திருவுள்ளம் கொண்டருளினார்.

உடனே இறைவனின் திருவுள்ளத்தை அச்சிவலோகம் உணர்ந்தது. உடனே விண்ணினின்று இறங்கியது. சோமசுந்தரக் கடவுள் திருநந்தி தேவரை அழைத்து, "வரகுண பாண்டியன் நமது உலகத்தைக் காண விரும்பினான். ஆதலின் அவனுக்கு அதனைக் காட்டுக" என்று பணித்தருளினார். உடனே பெருமானை வணங்கி வரகுண பாண்டியனை நந்திதேவர் வந்தடைந்தார். அவர் "பாண்டியனே! ஞான சூரியனாகிய சோமசுந்தரக் கடவுள் ஆண்டருளுகின்ற சிவலோகம் இதுவே. இதனைக் காண்பாயாக" என்றார்.

வரகுண பாண்டியன் சிவலோகக் காட்சிகளைக் காணத் தொடங்கினான். சிவபெருமான் எழுந்தருளியுள்ள திருக்காட்சியைக் கண்டு பெருமகிழ்வு கொண்டான். கண்டு மகிழ்ந்த பாண்டியன் பரமானந்தமாகிய திவ்விய அமிழ்தத்தில் ஆழ்ந்தான். பின்பு அன்போடு சோமசுந்தரக் கடவுளுக்குப் பூசை முதலிய செய்து மகிழ்ந்து வாழ்ந்திருந்தான்.

இவற்றையெல்லாம் அகத்திய முனிவர் மற்றைய முனிவர்கட்குக் கூறியருளினார். இதனைக் கேட்ட முனிவர்கள் அகத்தியரை நோக்கி, "சோமசுந்தரக் கடவுள், வரகுணனைப் பிடித்த பிரமகத்திப் பழியை மதுரையில் நீக்காது திருவிடை மருதூரில் நீக்கியருளியது ஏன்? அதனைக் கூறியருள்க" என்று வேண்டினர்.

அதனைக் கேட்ட அகத்திய முனிவர், அம்முனிவர்களை நோக்கி, "முனிவர்களே! நம் சோமசுந்தரக் கடவுள் புண்ணிய மூர்த்தி. ஆகையால் நம் மதுரைப் பதியில் வசிக்கும் அடியார்கள், தம் இஷ்டப்படி வேண்டுமளவு பாதகம் செய்து கெட்டுப் போய்விடாமல் இருக்கவும், அவர்கள் பயந்து நடக்கவும் திருவுளம் கொண்டே வரகுணனுடைய பழியைத் திருவிடை மருதூரில் தீர்த்தருளினார். இங்கு நீக்கி இருப்பின் அவர்கள் அடியார்கள் பல பாதகம் செய்துவிட்டுப் பின்னர் அப்பழியைச் சோமசுந்தரக் கடவுளை வேண்டி நீக்கிக் கொள்ளலாம் என்று கருதிப் பயமின்றித் திரிவார்கள். அதனால்தான் அவ்வாறு செய்தார்" என்றார். அதனைக் கேட்ட அம்முனிவர்கள் 'நன்று' என்று சிரமசைத்துச் சோமசுந்தரக் கடவுளின் திருவருளை நினைந்து வியந்து பேரானந்தக் கடலுள் மூழ்கினார்கள்.

அன்று முதல் இம்மதுரை நகரம் ஒப்பற்றதாய் எல்லாத் தலங்கட்கும் மேம்பட்டதாய் 'பூலோக சிவலோகம்' என்று கூறத்தகும் வகையில் புகழுடன் விளங்கி வருகிறது.

41. விறகு விற்ற படலம்

வரகுண பாண்டியன் ஆட்சிக் காலத்தில் வடநாட்டில் இருந்து 'ஏமநாதன்' என்னும் ஒரு யாழ்ப்பாணன் வந்தான். அவன் பல நாட்டிற்குச் சென்று பல வெற்றி விருதுகளைப் பெற்றவன். அவன் பாண்டிய மன்னனின் அரச சபையை

அடைந்தான். மன்னனை வணங்கினான். அவனைப் புகழ்ந்து பாராட்டிப் பேசினான். யாழ் எடுத்து இனிமையோடு அவையோர் கேட்க வாசித்தான். அவன் இசையைக் கேட்டு மகிழ்ந்த வரகுணன் அவனுக்குப் பல பரிசுகளை வழங்கினான். அவன் தங்குவதற்கு ஒரு பெரிய வீடு ஏற்பாடு செய்தான். ஏமநாதன் மகிழ்வுடன் அவ்வீட்டில் தங்கினான்.

முன்பல அரசர்கள் கொடுத்த பரிசினாலும் பாண்டியன் கொடுத்த பரிசினாலும் ஏமநாதன் மிக்க செருக்கடைந்தான். தனக்கு நிகராக யாழ் வாசிக்க வல்லார் ஒருவரும் இல்லை என்று கருதினான். அதனால் இறுமாப்புக் கொண்டான். அதனைப் பாண்டியன் அறிந்தான். உடனே தன் ஏவலாளரை அனுப்பிப் பாணபத்திரன் என்பவனை அழைத்து வரச் செய்தான். பாணபத்திரன் அரசசபை வந்து மன்னனை வணங்கி நின்றான். அரசன் பாணபத்திரனை நோக்கி, "நீர் இசையில் வல்லவனாகிய ஏமநாதனோடு பாடவல்லையோ?" என்று வினவினான். அதற்குப் பாணபத்திரன் வணங்கி நின்று, "தென்னவர் பெருமானே! உமது திருவுள்ளக் கருத்தின் வலிமையாலும் இறைவனின் திருவருளாலும் ஏமநாதனுடன் பாடி வெற்றி பெறுவேன்" என்றான். உடனே மன்னன், "நாளை வந்து அவனுடன் பாடுக" என்றான். பாணபத்திரன் பாண்டியனை வணங்கி விடைபெற்றுச் சென்றான். இதனை மன்னன் ஏமநாதனுக்கு அறிவித்து விட்டான். ஏமநாதனும் போட்டிக்கு இசைந்தான்.

இந்த நிலையில் ஏமநாதனின் மாணவர்கள் கடைவீதி, தெருக்கள் கூடுமிடம், மாடவீதி போன்ற இடங்களில் சென்று இனிமையுடன் பாடி நின்றனர். இதைக் கேட்ட பாணபத்திரன் வியந்து, "இசை கற்கும் மாணவர்களே இவ்வளவு இனிமையுடன் பாடினால், ஏமநாதன் பாட்டு எத்தனை சிறப்பு வாய்ந்ததோ, நாளை நான் இசைபாடி எவ்வாறு வெற்றி பெறுவேன்?" என்று எண்ணினான். உடனே சோமசுந்தரக் கடவுளை அடைந்தான். "ஐயனே! உன்மை

வடிவானவனே! எனக்கு நினது திருவருளால் துணை புரிய வேண்டும்" என்று வேண்டிக் கொண்டு தன் இல்லத்தை அடைந்தான். வீட்டிற்குச் சென்ற பாணபத்திரன் இறையருள் கூடுமென்று கவலையின்றி இருந்தான்.

இறைவன் பாணபத்திரனது கவலையை நீக்க எண்ணினார். உடனே வயது முதிர்ந்த விறகு விற்பவனைப் போலத், தம் இச்சையாலே தோற்றம் கொண்டார். இடையிலே அழுக்கான கந்தையை அணிந்திருந்தார். வெட்டிய விறகின் சுமையைத் தலைமேல் சுமந்திருந்தார். மெலிந்த தோற்றத்துடன் காணப்பட்டார். இத்தகைய தோற்றத்துடன் மதுரையில் புகுந்தார். விறகை விலை கேட்டு வந்தவர்களுக்கு மிக அதிகவிலை சொன்னார். பல மாடவீதிகளைக் கடந்து ஏமநாதன் வீட்டின் எதிரே சென்றார். நல்ல மாலை நேரம் வந்தது. ஏமநாதனின் வீட்டின் வெளித் திண்ணையில் தன் விறகுச் சுமையை இறக்கி வைத்து இறைவர் சற்று இளைப்பாறினார். பின்னர் இனிய இசையைப் பாடினார்.

அதைக் கேட்ட ஏமநாதன் வெளியே வந்தான். பாடுகின்ற விறகாளைப் பார்த்து, "நீ யாவன்?" என்று வினவினான். உடனே விறகாளாய் வந்த இறைவர் ஏமநாதனைப் பார்த்து, 'நான் யாழ் வல்லோனாகிய பாணபத்திரன் அடிமை அவனிடத்தில் இசை பயிலும் மாணவர்கள் பலர். அவர்களில் நானும் ஒருவனாக இருந்து இசை பயின்று வந்தேன். ஆயின் வயதில் முதிர்ந்தவனாய் இருந்ததால் இசை பயிலத் தகுதியற்றவன் என்று எண்ணித் தள்ளி விட்டார். அதனால் தான் விறகு விற்றுப் பிழைத்து வருகிறேன்" என்றார். அப்போது ஏமநாதன் விறகாளை நோக்கி, "நீ முன்னர் பாடிய அந்தப் பாடலை இசையோடு இன்னொரு தரம் பாடு" என்றான்.

விறகாளாய் வந்த இறைவர், தன் யாழினை இடத் தோளில் சார்த்தி, நாம்பைத் தெறித்துச் சுருதியை எழுப்பி

சாதாரிப் பண்ணினைப் பாடத் தொடங்கினார். இறைவனின் இசையில் தேவர்களும் மயங்கினர். உலகப் பொருள்கள் அனைத்தும் இசையில் மயங்கித் தீட்டிய ஓவியம்போல் அசைவற்று நின்றன. ஏமநாதன் தன்னை மறந்து இசையில் மயங்கி இருந்தான். அந்த நேரத்தில் விறகாளாய் வந்த இறைவர் மறைந்தருளினார்.

அவ்விசையைக் கேட்டு மயங்கிய ஏமநாதன், "இது நான் அறிந்த சாதாரிப்பண் அன்று. இது தேவகானம், பாணபத்திரனால் தள்ளப்பட்டவன் இவ்வாறு இசையுடன் பாடினான் என்றால் பாணபத்திரனுடைய பாட்டின் திறம் எத்தன்மையதோ?" என்று கருதிக் கவலையில் ஆழ்ந்தான்.

"இனி நாம் பாணபத்திரனோடு போட்டியிட்டு வெற்றி கொள்ள முடியாது" என்று ஏமநாதன் கருதித் தன் பொருள்களோடும் மாணவர்களோடும் இரவோடு இரவாக வடதிசை நோக்கி ஓடிவிட்டான். சோமசுந்தரக் கடவுள் அன்றிரவே பாணபத்திரன் கனவில் தோன்றி, "பாணபத்திரனே! இன்று நாம் ஏமநாதனிடம், விறகாளாய்ச் சென்று 'உம் அடிமை என்று கூறி' இசைபாடி வென்றோம்" என்று கூறியருளினார். இதைக் கேட்டுப் பாணபத்திரன் விழித்தெழுந்தான்; மகிழ்ச்சியடைந்தான்.

விடியுமுன்பே பாணபத்திரன் எழுந்து சென்று சோமசுந்தரக் கடவுளின் திருக்கோயிலை அடைந்து வணங்கினான். "இறைவனே! இன்று சிறியேனின் பொருட்டுத் தங்கள் திருமுடி விறகினைச் சுமந்ததோ? என்று சொல்லித் துதித்து வணங்கி வலம்செய்து பாண்டிய மன்னனின் அரண்மனையை அடைந்தான். பாண்டியன் பாணபத்திரன் வருகையைக் கண்டவுடன் "ஏமநாதனை அழைத்து வாருங்கள்" என்று கூறி ஏவலாளர்களை அனுப்பி வைத்தான். ஏவலாளர் சென்று ஏமநாதன் வீட்டில் தேடினார்கள். அங்கு அவனைக் காணவில்லை.

அப்போது அயல் வீட்டில் இருந்த சிலர், "ஏமநாதன் நேற்று வரை இங்கிருந்தான். நேற்று மாலை ஒரு கிழவன் விறகு சுமந்துகொண்டு ஏமநாதனிடம் வந்தான். தன்னைப் 'பாணபத்திரன் அடிமை' என்று கூறிக் கொண்டான். இசை பாடினான். பின்னர் என்ன நடந்ததென்று தெரியவில்லை. அவ்வேமநாதன் நள்ளிரவில் ஓடிவிட்டான்" என்று கூறினர். அதைக் கேட்ட ஏவலாளர் அதனை அப்படியே மன்னனிடம் வந்து கூறினர்.

உடனே மன்னன் பாணபத்திரனை நோக்கி, "ஏமநாதன் ஓடிய வகை என்ன?" என்று கேட்டான். உடனே பாணபத்திரன் தான் இறைவனிடம் குறையிரந்து வேண்டியதையும், இறைவன் விறகாளாய்ச் சென்று இசை பாடியதையும், அவன் பயந்து ஓடிவிட்டதையும், இதைத் தன் கனவில் தோன்றி இறைவர் கூறியதையும் ஒன்று விடாமல் கூறினான். இது சோமசுந்தரக் கடவுளின் திருவிளையாடல் என்பதறிந்த மன்னன் மகிழ்ந்து பாணபத்திரனை யானைமேல் ஏற்றி நகர்வலம் செய்வித்தான். 'இறைவரே உம்பொருட்டு விறகாளாய் வந்தார் எனில் இனி நீரே எம்முடைய தலைவர்' என்று மன்னன் கூறிப் பல வரிசைகளைக் கொடுத்துப் பாணபத்திரனை அவன் வீட்டிற்கு அனுப்பி வைத்தான். பாணபத்திரன் தன் சுற்றத்தார்க்கு அப்பரிசுகளைப் பங்கிட்டுக் கொடுத்து மகிழ்வோடு வாழ்ந்து வந்தான்.

42. திருமுகம் கொடுத்த படலம்

பாணபத்திரன் அரச சபையில் பாடுவதை விட்டு விட்டுச் சோமசுந்தரக் கடவுளின் திருமுன்னர் சென்று மூன்று காலங்களிலும் பாடி வந்தான். இறைவன் திருமுன் பாடுவதேயன்றிப் பிறதொழில் இன்மையால் வறுமைநிலை அடைந்தான். அதனைக் கண்ட இறைவன் பாண்டியன்

கருவூலத்தில் இருந்து செல்வங்களைக் கவர்ந்து வந்து பாணபத்திரன் முன் ஒவ்வொரு நாளும் வைப்பாராயினர். அதனைப் பாணபத்திரன் எடுத்துச் சென்று அப்பொருளைக் கொண்டு வாழ்வு நடத்தி வந்தான்.

இவ்வாறு நாள்தோறும் கொடுத்துவந்த பெருமான் சிலகாலம் சென்றபின் கொடுப்பதை நிறுத்திவிட்டார். அதனால் பாணபத்திரனும் அவன் சுற்றத்தினரும் பசியினால் துன்பமடைந்தனர். அதனை அறிந்த இறைவர் அவன் கனவில் தோன்றி, "அப்பனே! நாம் பாண்டியனது பொன்னறையில் கவர்ந்து வந்து பொருள்களைக் கொடுத்தருளினோம். இனி இதனைப் பாண்டியன் அறிந்தால் தவறாக எண்ணி விடுவான். களவு போனதை அறிந்தால் பொன்னறைக் காவலர்களுக்குத் தண்டனை கிடைக்கும். ஆதலால் சேரமன்னனுக்கு ஓலை தருகின்றோம். அவன் நம்மிடம் பேரன்பு பூண்டவன். நீ அங்குச் சென்று வேண்டிய பொருள் பெறுக" என்று கூறியருளினார். அத்துடன் திருமுகப் பாசுரம் ஒன்றை எழுதிக் கொடுத்து மறைந்தருளினார். துயில் நீங்கி எழுந்த பாணபத்திரன் ஆடிப்பாடி மகிழ்ந்தான்.

தான் பெற்ற பாசுரத்தைப் பட்டாடையில் சுற்றி எடுத்துக் கொண்டு இறைவனை வணங்கி விடைபெற்று மேற்றிசை நோக்கி நடந்து மலை நாட்டை அடைந்தான். திருவிஞ்சைக்களம் என்ற நகரில் ஒரு தண்ணீர்ப் பந்தலில் பாணபத்திரன் தங்கினான். பின்னர் இறைவர் சேர மன்னரான பெருமாள் நாயனாரின் கனவில் தோன்றி, "மன்னனே! நம் அடியவன் பாணபத்திரன் உன்னைக் கண்டு பொருள்பெறும் பொருட்டு நம்முடைய திருமுகம் பெற்றுக்கொண்டு இங்கு வீற்றிருக்கின்றான். அவனுக்கு அரிய பொருள் கொடுத்தனுப்புக" என்று கூறி மறைந்தருளினார்.

இதனைக் கேட்டு சேரமன்னர் விழித்தெழுந்தார். மகிழ்வடைந்தார். இச்செய்தியைத் தம் அமைச்சர்களிடம் கூறினார். பாணபத்திரனைத் தேடிவர நான்கு புறங்களிலும் ஏவலர்களை அனுப்பினார். அவர்கள் சென்று தேடிப் பாணபத்திரன் இருக்குமிடம் அறிந்து அதனை அரசனுக்கு அறிவித்தனர்.

உடனே சேரர்பெருமான் தன் நால்வகைச் சேனையுடன் புறப்பட்டுச் சென்று பாணபத்திரனை வணங்கினார். இறைவனின் திருமுகத்தைப் பாணபத்திரனிடம் இருந்து பெற்று அதனைத் தன் கண்களில் ஒற்றிக்கொண்டு தலைமேல் வைத்துக் கூத்தாடினார். பிறகு பாணபத்திரனை யானையின்மேல் ஏற்றித் தன் அரண்மனைக்கு நகர்வலமாக அழைத்து வந்தார். அரண்மனையில் பாணபத்திரனுக்குப் பலவித உபசாரங்கள் செய்தார். தன் கருவூலத்தைத் திறந்து காட்டி, “எம் பெருமானுடைய தொண்டனே! இப்பொருள் யாவற்றையும் நீ கைக்கொண்டு செல்லுக” என்று கூறினார்.

உடனே பாணபத்திரன் சேரனை வணங்கி, “நீர் தருவதே போதும்” என்று கூறினான். உடனே சேரர் பெருமான் பொருள்களை வாரி வாரி வழங்கினார். பாணபத்திரன் அவற்றை மறுத்துத் தனக்கு வேண்டியவற்றை மட்டும் எடுத்துக் கொண்டான். சேரனை வணங்கித் தன் நாட்டிற்குப் புறப்பட்டான். சேரன் வழியனுப்பி வைத்தான். பாணபத்திரன் சேரர் பெருமான் கொடுத்த பொருள்களைக் கைக்கொண்டு குபேரனைப் போல் மதுரையை அடைந்தான். சோமசுந்தரக் கடவுளை வணங்கினான். தான்கொண்டு வந்த பொருள்களைப் புலவர், அந்தணர், இரவலர் முதலியவர்க்குக் கொடுத்துத் தன் சுற்றத்தாரோடு இனிது வாழ்ந்திருந்தான்.

43. பலகை இட்ட படலம்

சேரர் பெருமானிடம் பொருள் பெற்ற பின்னர் திருக்கோயிலுக்கு இரவு யாமத்திலும் சென்று பாணபத்திரன் இசைபாடி வந்தான். அப்போது ஒருநாள் மேகங்கள் திரண்டு எழுந்து பெரு மழை பொழியத் தொடங்கியது. அப்பெரு மழையிலும் நனைந்து கொண்டு பாணபத்திரன் இறைவரின் திருக்கோயிலை அடைந்தான். எலும்பினை உருக்கும் வண்ணம் யாழினை மீட்டி இசையைப் பாடினான்.

இசையினைக் கேட்ட இறைவர், "பாணபத்திரா? இந்தப் பலகை உனக்கே உரியது. நீ இதன் மேல் நின்று பாடுக" என்று வானிலே அசரீரியாகக் கூறியருளி நவமணி இழைத்த பொற் பலகை ஒன்றைக் கொடுத்தார். உடனே பாணபத்திரன் இறைவர் ஆணையை மறுத்தற்கஞ்சி அதன் மேல் ஏறி நின்று பாடினான். பாடி முடித்துப் பலகையினைக் கையில் எடுத்துக் கொண்டு தன் வீட்டை அடைந்தான்.

பொழுது விடிந்தது. இறைவர் பாணபத்திரன் பாட்டிற்கு அருளிய அருட் கொடையை மன்னன் அறிந்தான். மகிழ்ந்தான். பாணபத்திரனை அழைத்து இறைவர் இட்டருளிய அப்பலகையின் மீது இருக்கச் செய்தான். திருக் கோயிலுக்கும், பாணபத்திரனுக்கும் பல பொருள்களைப் பரிசாகக் கொடுத்தான். அது முதற்கொண்டு நான்கு காலங்களிலும் பாணபத்திரன் திருக்கோயில் சென்று வணங்கிப் பாடி மகிழ்ந்து வாழ்ந்து வந்தான். சில காலம் சென்றபின் வரகுண பாண்டியன் சிவ சாரூப்பியம் பெற்றுச் சிவபுரம் அடைந்தான்.

44. இசைவாது வென்ற படலம்

வரகுண பாண்டியன் சிவகதி அடைந்தபின் அவன் மகன் இராசராச பாண்டியன் நாட்டை ஆண்டு வந்தான்.

அவனுக்குத் தனது மரபில் மனைவியர் பலரும், வேறு காமக்கிழத்தியர் பலரும் இருந்தனர். அந்தக் காமக் கிழத்தியருள் ஒருத்தி அரசனுக்கு உயிர் போன்றவளாய் விளங்கினாள். அவள் இசைபாடுவதில் வல்லவள். அவளுக்கும் பாணபத்திரன் மனைவிக்கும் இசைத் துறையில் பகைமை உண்டாயிற்று. பாண்டியனின் காமக் கிழத்தி, பாணபத்திரனின் மனைவிக்கு எதிராக ஒரு பாண் மகளைப் பாடவிட்டு வெற்றி கொள்ள வேண்டும் என்று கருதினாள். எனவே அதனைப் பாண்டியனுக்குத் தெரிவித்தாள். அந்தக் காமக் கிழத்தியின் மேல் மயக்கம் கொண்டிருந்த பாண்டியன், ஈழ நாட்டில் இருந்து ஒரு பாடினியை வரவழைத்தான்.

பாண்டியன் ஈழத்துப் பாடினியை நோக்கி, "விறலியே! நீ நாளை பாணபத்திரன் மனைவியோடு எதிர்நின்று இசை பாடுக. அவள் உம்மோடு பாடிட மறுத்தாலும், நான் அவள் சார்பில் நின்று உன்னைத் தடுத்தாலும் நீ அவளை விடாது தொடர்ந்து பாட அழைத்து வாதிட்டுப் பாடுக. இன்று உன் இருப்பிடம் சென்று நாளை வருக" என்று கூறி அவளுக்கு வேண்டிய பொருள் கொடுத்து அனுப்பி வைத்தான். பின்பு பாண்டியன் பாணபத்திரன் மனைவியை அழைத்து உள்ளொன்று எண்ணி, புறமொன்றாகப் பேசத் தொடங்கினான். "பாடினியே! இசை வல்லாள் ஒருத்தி ஈழ நாட்டில் இருந்து வந்துள்ளாள். அவள், 'இங்கு என்னோடு இசை பாட வல்லார் எவரேனும் உண்டோ?' என்று சொல்லிக் கொண்டு வந்திருக்கிறாள். நீ அவளுடன் ஒப்பாக நின்று பாடுக" என்றான்.

அதனைக் கேட்ட பாணபத்திரனின் மனைவியாகிய பாடினி, "அரசே! இறைவனின் திருவருளாலும் என் கற்பின் மேன்மையாலும் அவளோடு பாடி வெல்வேன்!" என்றாள். பாண்டியன் அவளையும் "நாளை, வா, போ" என்று கூறி அனுப்பி வைத்தான். மறுநாள் இராசராச பாண்டியன் அவ்விருவரையும் அழைப்பித்து அவையின் கண் இருவரையும்

பாடும்படி கட்டளை இட்டான். உடனே ஈழத்துப் பாடினி, "இசைப் பாடலில் உள்ள குற்றங்கள் எத்தனை? குணங்கள் எத்தனை?" போன்ற கேள்விகளை எழுப்பிப் பாணபத்திரனின் மனைவியைத் திட்டிப் பேசினாள். கற்பில் சிறந்த பாணபத்திரனின் மனைவி, "பூங்குழலாய்! நான் உன்னோடு இசைவாது செய்ய வந்தேனே தவிர, வாயைத் திறந்து சண்டை இட வரவில்லை" என்றாள்.

உடனே பாண்டியன் இருவரின் சண்டையை விலக்கி இறைவன் போல் பேசி அவ்விருவரையும் தடுத்து, "பெண்களே! நீங்கள் வீண் பேச்சை ஒழித்துப் பாடுவீர்களாக. தோற்றவர் வென்றவருக்கு அடிமையாய் விடுவதே சபதம்" என்று கூறி இருவருக்கும் வாதத்தைத் துவக்கி வைத்தான். முதலில் ஈழ நாட்டுப் பாடினி ஏழிசையினைப் பாடினாள். பின்னர் பாணபத்திரன் மனைவியும் ஏழிசையினைப் பாடினாள். அவையோர் இருவரின் இசையைக் கேட்டுப் பாணபத்திரன் மனைவியின் பாடலே சிறந்தது என்று மெச்சிக் கொண்டாடினார்கள். ஆனால் பாண்டியனோ ஈழப் பாடினியின் பாடலைப் பாராட்டினான். உடனே மன்னனின் உள்ளக் கருத்தை அறிந்த அவையினரும் ஈழப் பாடினியே வென்றாள் என்றனர். இவ்வாறு இருவேறு கருத்து வந்து விட்டதால் அவர்களை அன்று இருக்கைக்குப் போவீர்" என்று பாண்டியன் கூறி அனுப்பி வைத்தான்.

பாண்டியன் தன்னைப் புகழ்ந்து பேசியதால் ஈழப் பாடினி பெரிதும் இறுமாப்புடன் தன் இருப்பிடம் வந்தடைந்தாள். பாணபத்திரன் மனைவியோ மனக் கலக்கம் மிகுந்தவளாய்ச் சோமசுந்தரக் கடவுளின் திருவடிகளை அடைந்து விழுந்து வணங்கினாள். கண்ணீர் சிந்தி ஒதுங்கி நின்று, "சுந்தர பாண்டியராய் அரசாண்ட பெருமானே! இராசராச பாண்டியன் நடுவு நிலைமை தவறிப் பேசுகிறான். தேவரீர் திருவருள் புரிந்து என்னுடைய துன்பத்தைப் போக்கியருள வேண்டும்" என்று விண்ணப்பம் செய்தாள். அப்போது ஆகாயத்திினின்று ஓர் அசரீரி "பெண்ணே!

நாளை நீயே வெல்லும்படி அருள் செய்வோம். நீ அஞ்சற்க" என்று கூறிற்று. அதனைக் கேட்ட பாணபத்திரனின் மனைவி மகிழ்வுடன் தன் வீட்டிற்குச் சென்றாள்.

மறுநாள் பாண்டியன் அவ்விருவரையும் அவைக்கு அழைத்துப் போட்டியிட்டுப் பாடும்படி கூறினான். இருவரும் பாடினர். முதல் நாள் சொல்லியது போலவே ஈழத்துப் பாடினியே வென்றாள் என்று பாண்டியன் கூற அது போன்றே அவையினர் கூறினர். உடனே பாணபத்திரன் மனைவி பாண்டியனை நோக்கி, "அரசே! நீர் வார வழக்குப் பேசியதால் அவையிலுள்ளோரும் அப்படியே சொல்லத் துணிந்தனர். ஆதலால் சோமசுந்தரக் கடவுளின் திருமுன் சென்று பாடுகின்றோம். அங்கு வந்து யார் வென்றது என்று கூறுங்கள்" என்றாள். அவை கலைந்தது. விறலியர் இருவரும் தம் தம் வீட்டிற்குச் சென்று தங்கினர்.

மறுநாள் பாண்டியனும், அமைச்சர்களும், இசை வல்லார் பலரும் சோமசுந்தரக் கடவுளின் திருக்கோயிலுட் சென்று கூடினர். விறலியர் இருவரும் அங்கு வந்தனர். அப்போது சோமசுந்தரக் கடவுள் இசை நூலில் வல்ல புலவர் போன்று தோற்றம் கொண்டு அப்புலவர் குழுவின் நடுவில் எழுந்தருளி இருந்தார். அப்போது பாண்டிய நாட்டுப் பாடினி 'ஏத்திசை' பாடினாள். பாணபத்திரன் மனைவியோ "உள்ளாள கிதத்தினை" இலக்கணம் வழுவாமல் பாடினாள். இதனைக் கேட்டுக் கொண்டிருந்த பாண்டியன் மனம் மகிழ்ந்தான். சோமசுந்தரக் கடவுளின் திருவருளால் உள்ளத்தில் கொண்டிருந்த குற்றம் நீங்கப் பெற்றவனானான். உடனே "பாணபத்திரன் மனைவியே வென்றனள்" என்றான். அவையில் உள்ளவர் அனைவரும் அப்படியே கூறினர். உடனே பாணபத்திரன் மனைவியை ஈழப் பாடினியின் கழுத்தில் உட்கார வைத்தனர். அப்போது இசைப் புலவராய் அங்கிருந்த இறைவர் "இது அற்புதம்! இது அற்புதம்!" என்று கூறி மறைந்தருளினார். பாண்டியன் இதனைக் கண்டு இது சோமசுந்தரக் கடவுளின் திருவிளையாடலே என்று தெளிந்து

பயந்து விட்டான். தான் நடுவுநிலை தவறியமைக்காக வருந்தினான். கண்ணீர் பெருக நின்றான்.

பின்னர் ஈழப் பாடினியின் தோளில் இருந்து பாணபத்திரன் மனைவியை இறக்குவித்தான். பாணபத்திரன் மனைவிக்கு ஏராளமான பரிசுகள் கொடுத்தான். ஈழப்பாடினிக்கும் பொருள் கொடுத்து அவளை அனுப்பி வைத்தான். இறைவருடைய திருக் கோயிலுக்குப் பல அணிகளை வழங்கினான். பாணபத்திரன் மனைவி தன் இல்லம் சேர்ந்து மகிழ்வுடன் வாழ்ந்தாள். அரசனும் தன் அரண்மனை அடைந்து சிறப்புடன் அரசாண்டான். சுகுண பாண்டியன் என்னும் மகனைப் பெற்று மகிழ்வோடு வாழ்ந்து வந்தான்.

45. பன்றிக் குட்டிக்கு முலை கொடுத்த படலம்

மதுரை மாநகரத்திற்கு அருகில் வையை ஆற்றின் தெற்கில் "குருவித்துறை" என்னும் பெயர் கொண்ட பெரிய ஊர் உள்ளது. அவ்வூரில் தேவகுருவாகிய ''பிரகஸ்பதி'' சிவபெருமானை நோக்கித் தவம் புரிந்தார். சிவபெருமான் அவருக்குப் பல வரங்களைக் கொடுத்தார். அச் சிவபெருமான் அவ்வூரில் "குருநாதர்" என்ற பெயருடன் எழுந்தருளியுள்ளார். அவ்வூரில் 'சுகலன்' என்னும் பெயரை உடைய ஒரு வேளாளன் வாழ்ந்து வந்தான். அவன் மனைவி சுகலை. அவர்களுக்குப் பன்னிரண்டு பிள்ளைகள் பிறந்தனர். சில நாட்களில் 'சுகலன்' இறந்து விட்டான். அப் பிள்ளைகள் வேடர்களோடு கூடிக் காட்டில் வேட்டையாடி வந்தனர்.

ஒரு நாள் சுகலன் புதல்வர்கள் காட்டில் தவம் செய்து கொண்டிருந்த வியாழ பகவானைக் கண்டனர். கைகொட்டிச்

சிரித்துக் கல்லையும், பரலையும் அவர் மேல் வாரி எறிந்தார்கள். உடனே கோபம் கொண்ட பிரகஸ்பதி, பன்றிக் குட்டிகளாகப் பிறந்து தாய் தந்தையரை இழந்து வருந்துவீர்கள்" என்று சாபம் இட்டார்.

உடனே அப்பிள்ளைகள் பயந்து போய் முனிவரை வணங்கி, "சாபம் நீங்க வழி சொல்ல வேண்டும்" என்று வேண்டினர். தேவகுரு சினம் தணிந்து, "சோமசுந்தரக் கடவுளே உங்களுக்குத் தாயாய் வந்து முலை கொடுத்தருளுவார். அவரே உங்களைப் பாண்டியனுக்கு மந்திரிகளாக்கிப் பின்னர் முக்தியையும் தருவார்'' என்று சாபவிமோசனமும் கூறியருளினார். உடனே அவர்கள் குருவிருந்த துறையின் காட்டில் உள்ள அரசப் பன்றியின், பெட்டை வயிற்றில் போய்க் குட்டிகளாய்ப் பிறந்து இருந்தார்கள்.

அந்நாளில் இராசராச பாண்டியன் வேட்டையாடுவதற்காக யானை மேலேறி அக்காட்டிற்குச் சென்றான். வேட்டையாடுவதில் நல்ல பயிற்சியுடைய ஆட்களைக் கொண்டு அக்காட்டில் உள்ள விலங்குகளை எல்லாம் வேட்டையாடினான். அப்போது ஒரு பன்றி ஓடிவந்து அரசப் பன்றியிடம், "அரசே! இங்குள்ள விலங்குகள் அனைத்தையும் பாண்டியன் கொன்று வருகின்றான்" என்று கூறிற்று. அதைக் கேட்ட அரசப் பன்றி போர் செய்ய எண்ணிப் புறப்பட்டு தன் பெண் பன்றியிடம், "நான் இன்று பாண்டியனை எதிர்த்துப் போர் புரியச் செல்கின்றேன். வெற்றியடைவேனோ? இறப்பேனோ? அறியேன். நீ உன் புதல்வர்களை நன்கு பாதுகாத்துக் கொண்டு இங்கு இருப்பாயாக" என்றது.

அதைக் கேட்ட பெண் பன்றி, "என் நாயகனே! நானும் உன்னுடன் வருகிறேன். வெற்றி பெற்றால் மீள்வோம். தோல்வியடைந்தால் அங்கேயே மடிவோம்" என்று கூறி கணவனுடன் புறப்பட்டுச் சென்றது. பன்றிக் குட்டிகள் தனிமை அடைந்தன. ஆண் பன்றி விரைந்து சென்று

பாண்டியனுடன் போரிட்டு மடிந்தது. அதைக் கண்ட பெண் பன்றி சருச்சான் என்பவனுடன் போர் புரிந்து முடிவில் மடிந்தது. அவ்வாறு பன்றிகள் இறந்து கிடந்த இடம் 'பன்றி மலை' என்று இன்றும் அழைக்கப்படுகின்றது. அம்மலையில் சித்தர் யோகிகள் போன்றோர் முக்தி பெறத் தவம் செய்து வருகின்றனர். ரங்க வித்தியாதரன் என்பவனே புலத்திய முனிவரின் சாபப்படி பன்றி அரசனாய்ப் பிறந்தான். இராசராச பாண்டியனால் கொல்லப் படடுப் பழைய வடிவம் அடைந்தான். இதனால் புண்ணிய உருவத்தை உடைய இயக்களின் உடலாகக் கிடந்த தூய தன்மையால் அம்மலை தவம் செய்வதற்கு ஏற்ற பெருமை மிக்கது.

ஆண் பன்றியும் பெண் பன்றியும் இறந்த பின்னர் பன்றிக் குட்டிகள் பன்னிரண்டும் திகைத்துத் தாய் தந்தையரைத் தேடி ஒடின. பசியால் வாடின. அந்நிலையில் அப் பன்றிக் குட்டிகளின் துன்ப நிலையை நீக்க எண்ணிய சோமசுந்தரக் கடவுள் தாய்ப் பன்றியின் வடிவம் கொண்டு அப் பன்றிக் குட்டிகளின்முன் சென்றருளினார். தாயைக் கண்ட குட்டிகள் பெருமகிழ்வு அடைந்தன, குதித்தன; விரைந்து ஒடின;. மீண்டன; அப்போது தாய்ப் பன்றி தம் குட்டிகளைத் தழுவி மோந்தது. கருணைப் பெருக்கால் சுரந்த முலைப்பாலைக் குட்டிகளுக்கு ஊட்டியது. அக் குட்டிகட்கு வலிமையும், வெற்றியும், ஞானமும், நற்குணங்களும் உண்டாகும் வண்ணம் அருள் புரிந்தது.

பின்னர் இறைவர் அக்குட்டிகளுக்கு முகம் ஒன்றை மட்டும் பன்றி முகமாக வைத்து மற்றைய உறுப்புகளை மனித வடிவாக மாற்றினார். உடனே தாய்ப் பன்றியாகிய சோமசுந்தரக் கடவுள் இவ்வாறு மாற்றியமைத்த பின் மறைந்தருளினார். இவ்வாறு எவ்வுயிர்க்கும் தாயும் தந்தையுமாகிக் காப்பவர் இறைவரேயன்றி வேறு யாவர்? ஒருவரும் இல்லை எனலாம்.

46. பன்றிக் குட்டிகளை மந்திரிகளாக்கிய படலம்

இவ்வாறு மறைந்தருளிய பின் பன்றிக் குமாரர்கள் பன்னிருவரும் பல கலைகளிலும் வல்லவர்களாகிப் பன்றி மலையில் இருந்தார்கள். அத்தகைய நாளில் ஒரு நாள் அங்கயற்கண்ணம்மை இறைவனை நோக்கி, "எம்பெருமானே! அறிவில்லாததாய் விளங்கும் பன்றிக் குட்டிகளுக்கு இரங்கி நீர் தாய்ப் பன்றியாகி முலை கொடுத்து, அவற்றின் அறியாமையைப் போக்கியது ஏன்?" என்று கேட்டார். அதைக் கேட்ட இறைவர், "உலகில் உள்ள சகல உயிர்களும் நமக்கு ஒரு தன்மையனவே. அதனால் அவ்வாறு செய்தோம். இனி அப் பன்றிக் குமாரர்கள் இராசராச பாண்டியனுக்கு மந்திரிகளாக இருந்து பலவித பயன் விளைப்பார்கள்" என்றார். பின்னர் அன்றிரவு சோமசுந்தரக் கடவுள் பாண்டியனின் கனவில் தோன்றி, "அரசனே! பன்றி மலையில் பன்னிரண்டு பன்றி முகமுடைய குமாரர்கள் இருக்கின்றார்கள். அவர்கள் மிக்க அறிவுடையவர்கள். அவர்களை மந்திரிகளாகக் கொள்ளக் கடவை" என்று கூறி மறைந்தருளினார்.

உடனே பாண்டியன் பெருமகிழ்வுடன் விழித்தெழுந்தான். காலையில் தன் மந்திரிகளிடம் இதனைக் கலந்து ஆலோசித்து, மலையில் வசிக்கும் பன்றிமுக வீரர்களை அழைத்து வருமாறு கட்டளை இட்டான். அமைச்சர்கள் பன்றிமலை அடைந்து அப் பன்றிமுக வீரர்களை அழைத்து வந்தனர். பாண்டியன் அவர்களை எதிர்கொண்டு சென்று வரவேற்றான். பல வரிசைகளைக் கொடுத்து மந்திரிகளாக்கினான். பழைய அமைச்சர்களின் பெண்களை அவர்களுக்குத் திருமணம் செய்து கொடுத்தான்.

அப்பன்றி முக வீரர்கள் ஒற்றுமையுடன் வாழ்ந்து பாண்டியன் மகிழ்வடையும்படி அமைச்சர்களாய் இருந்தனர்.

ஈகையும் அறமும் புகழும் பாண்டியனுக்கு உண்டாகும்படி எட்டுத் திக்கும் வெற்றி பெருக வாழ்ந்திருந்தனர். சிலகாலம் சென்ற பின் சிவலோகத்தை அடைந்து சிவகணத் தலைவர்களாய் விளங்கினர். இராசராசபாண்டியனும் தேவலோகம் அடைந்தான்.

47. கரிக்குருவிக்கு உபதேசம் செய்த படலம்

இராசராச பாண்டியனுக்குப் பின் அவன் குமாரன் சுகுணபாண்டியன் சிறப்புற நல்லாட்சி செய்து வந்தான். அந்நாளில் முற்பிறவியில் நல்லறம் புரிந்த ஒருவன் சிறிது பாவமும் செய்தமையால் இப்பிறவியில் கரிக் குருவியாய் வந்து பிறந்தான். காகம் போன்ற பிற பறவைகள் அக்கரிக் குருவிக்குத் துன்பத்தைச் செய்தன. அதனால் அக் கரிக்குருவி காட்டினுள் சென்று ஒரு மரத்தின்மேல் நாணத்தோடு சோர்ந்து அமர்ந்திருந்தது. அப்போது ஒரு சிவபக்தர் அம் மரநிழலில் வந்து இருந்து கொண்டு மதுரையின் பெருமையையும், சிவ பெருமானின் பெருமையையும் எடுத்துக் கூறினார். அதைக் கேட்டுக் கொண்டிருந்த கரிக் குருவிக்கு ஞானம் பிறந்தது.

உடனே அக் கரிக்குருவி மதுரையை நோக்கிப் பறந்தது. பொற்றாமரைத் தீர்த்தத்தில் நீராடியது. சோம் சுந்தரக் கடவுளைப் பூசித்து வணங்கியது. உடனே சோம சுந்தரப் பெருமான் 'மிருத்திஞ்சய' மந்திரத்தை அக்கரிக்குருவிக்கு உபதேசித்தருளினார். உடனே அக்கரிக்குருவி சிற்றறிவு நீங்கப் பெற்று பேரறிவு கொண்டு, "எம் பெருமானே! நான் உய்யும் பொருட்டு இம்மந்திரத்தை அருளினீர். ஆயினும் ஐயனே! எனக்கு ஒரு குறையுள்ளது. கொடிய பறவைகளெல்லாம் அடியேனைத் துன்புறுத்தி வருகின்றன" என்றது.

அதைக் கேட்ட சோம சுந்தரக் கடவுள் "அப்பறவைகளுக்கு எல்லாம் நீ வலியன் ஆகக் கடவாய்" என்று திருவாய் மலர்ந்தருளினார். உடனே கரிக்குருவி, "வலியான் என்பது அடியேன் மரபில் உள்ள பறவைகளுக்கு எல்லாம் விளங்க வேண்டும். தேவரீர் அடியேனுக்கு உபதேசித்த மந்திரத்தை அவைகளும் ஓதியோதி உய்தல் வேண்டும்" என்று வேண்டியது. சோமசுந்தரக் கடவுள், 'அங்ஙனமே ஆகுக" என்று கூறியருளினார். உடனே அக் குருவியும் அதன் இனமும் சிவபெருமான் ஓதியருளிய மந்திரத்தை உச்சரித்து வலியனவாகின. அதனால் வலியான் என்னும் காரணப் பெயரைப் பெற்றுச் சிறப்புப் பெற்றன. சில காலம் சென்ற பின் கரிக் குருவி சிவபெருமான் திருவடி நிழலை அடைந்தது.

48. நாரைக்கு முக்தி கொடுத்த படலம்

வையையாற்றிற்கு அருகில் தாமரை மலர்கள் நிறைந்த தடாகம் ஒன்றிருந்தது. அத் தடாகத்தில் உள்ள மீன்களை உண்டு நாரை ஒன்று வாழ்ந்து வந்தது. சில காலம் மழையில்லாமையால் தடாகம் வற்றியது. மீன்கள் இல்லாமையால் நாரை முனிவர்கள் வாழும் காட்டினை அடைந்தது. அம்முனிவர் கூட்டத்தில் சத்தியன் என்னும் பெயருடைய முனிவர் இருந்தார். அம் முனிவர் தங்கி இருந்த இடத்திலிருந்து சற்றுத் தூரத்தில் ஒரு தடாகம் இருந்தது. அத் தடாகத்தைச் சுற்றி நாற்புறமும் படித்துறை அமைந்திருந்தது. அதன் கரையில் 'சந்தியா மடம்' என்ற மடம் ஒன்று இருந்தது. அத் தடாகத்தைச் சுற்றி மரங்கள் நிறைந்திருந்தன. அத்தடா கத்தினை 'அச்சோதீர்த்தம்' என்பர்.

அத்தடாகத்தின் கரையில் நாரை வந்து தங்கியது. அத் தடாகத்தில் முனிவர்கள் மூழ்கி எழுந்தோறும் மீன்கள் அவர் தம் மேனியிலும் சடையிலும் புரண்டன. அதைக் கண்ட நாரை, "இம் முனிவர்களைத் தீண்ட இம்மீன்கள் என்ன தவம் புரிந்தனவோ! இம் மீன்களை நாம் இரையாகக் கொள்ளக் கூடாது" என்று எண்ணியது. மூழ்கிக் கரையேறிய முனிவர்கள் மதுரையின் பெருமைகளையும், சொக்கலிங்கப் பெருமானின் பெருமைகளையும் நூல்கள் மூலம் ஓதி தெளிந்து வந்தனர். அங்கே தங்கி இருக்கும் நாரை அவற்றைக் கேட்டது. உடனே மதுரைக்கு நாரை சென்றது. பொற்றாமரைத் தீர்த்தத்தில் நீராடிச் சோமசுந்தரக் கடவுளைத் தரிசனம் செய்தது.

இவ்வாறு நாரை பதினைந்து நாட்கள் வரை உணவின்றி இறைவனை நியமமாக வழிபட்டது. பதினாறாம் நாள் மிக்க பசியின் காரணமாக அங்குள்ள மீனைப் பார்த்து 'உண்ண வேண்டும்' என்று ஒரு கணம் எண்ணி மறுகணம் சோமசுந்தரக் கடவுளின் திருவருளால் அவ்வெண்ணம் நீங்கப் பெற்றது. எனவே அப் புண்ணிய தீர்த்தத்தில் உள்ள மீனை உண்ணாது அங்கேயே தங்கி இருந்தது. அப்போது சோமசுந்தரக் கடவுள் தோன்றி, "எமக்கு இனியாய்! உமக்கு என்ன வரம் வேண்டும் சொல்" என்று கேட்டார்.

அதைக் கேட்ட நாரை, "ஐயனே! இப்பிறவியைப் போக்கி, நின் மெய்யன்பர் வாழும் சிவலோகத்தில் சேர்த்துக் கொள்ள வேண்டும். அத்துடன் எம்மரபில் உள்ள மற்றையோர் இப்புனித தீர்த்தத்தில் உள்ள மீனை உண்டால் எக் காலத்தும் நீங்காத பாவம் வந்தெய்தப் படுவர். அதனால், இத்தீர்த்தத்தில் மீன்கள் எக்காலத்தும் இல்லாதொழிதற் பொருட்டு ஒருவரம் அருள வேண்டும்" என்று வேண்டியது. அப்போது அதனைக் கேட்ட இறைவர் அப்படியே வரம் கொடுத்து மறைந்தருளினார்.

பின்னர் நாரை விமானத்தில் ஏறிச் சிவலோகத்தை அடைந்து நந்தி கணங்களுள் ஒன்றாகியது. அன்றுமுதல் பொற்றாமரைத் தீர்த்தத்தில் மீன்களேயன்றி நீரில் வாழும் பிற உயிர்களும் இல்லாமல் போயின. சுகுண பாண்டியன் சிலகாலம் சென்ற பின் சுவர்க்கலோகத்தை அடைந்தான்.

கூடற்காண்டம் முற்றிற்று

திருச்சிற்றம்பலம்

மூன்றாவது

திருவாலவாயான காண்டம்

49. திருவாலவாயான படலம்

சோமசுந்தரக்கடவுள் துதி

பாயுடையார் விடுத்தபழி அழல்வழுதி
　　உடல்குளிப்பப் பதிகம் ஓதும்
சேயுடைஆ ரணந்திளைக்கும் செவியுடையார்
　　அளவிறந்த திசைகள் எட்டும்
தோயுடையார் பொன்இதழித் தொடையுடையார்
　　விடஅரவம் சுற்றும் ஆல
வாயுடையார் புகழ்பாடப் பெறுவே மேல்
　　வேண்டுவது இம்மனித யாக்கை.

சுகுண பாண்டியனின் மரபில் இருபத்து நான்காவது அரசனாகத் தோன்றி அரசாட்சி செய்தவன் "கீர்த்தி பூடண பாண்டியன்" இவன் ஆட்சிக் காலத்தில் ஊழிக் காலம் (பிரளயம்) வந்தது. அப்போது ஏழு கடலும் பொங்கி வந்து

உலகை அழித்தது. உலகில் உள்ள அசையும் அசையாப் பொருள்கள் அனைத்தும் அழிந்தன. ஆனாலும் அங்கயற் கண்ணம்மையின் திருக்கோயிலும் விண்ணிழி விமானமும், பொற்றாமரைத் தீர்த்தமும், இடப மலையும், யானை மலையும், நாக மலையும், பசு மலையும், பன்றி மலையும் அழியாதிருந்தன.

பின்னர் பிரளய நீர் வற்றியது. சிவபெருமான் முன் போலவே உலகத்தைப் படைத்தார். உயிர்களையும் சந்திரன், சூரியன், அக்கினி போன்றவற்றையும், மூவேந்தரையும் படைத்தார். பின்னர் சந்திரன் மரபில் "வங்கிய சேகர பாண்டியன்" என்னும் அரசன் தோன்றினான். அவன் சோமசுந்தரக் கடவுளின் திருக்கோயிலைச் சுற்றி ஒரு சிறு நகரம் உண்டாக்கி அதில் இருந்து கொண்டு அரசாட்சி செய்து வந்தான்.

நாளடைவில் மக்கள் பெருக்கம் அளவு கடந்தது. எனவே பாண்டியன் ஒரு பெரிய நகரம் அமைக்க விரும்பினான். எனவே அவன் சோமசுந்தரக் கடவுளை வணங்கி, "எம் பெருமானே! உன் அருளினால் நான் இந்நாட்டை ஆண்டு வருகின்றேன். இப்போது என்னுடைய குறை ஒன்றைப் போக்கியருள வேண்டும். இவ்வளவு குடிமக்களுக்கும் வசிக்க ஒரு நகரம் அமைக்க வேண்டும். இந்நகரத்திற்கு ஆதியில் வரையறுக்கப்பட்ட எல்லையைக் காண்கிலன். ஆகையால் இன்றைக்கு அதனை நான் அறியுமாறு காட்டியருள்க" என்று வேண்டினான்.

உடனே இறைவர் சித்த மூர்த்தியாகத் தோற்றம் கொண்டு மகாமண்டபத்தின் பக்கத்தில் வந்து நின்றார். தமது திருக்கரத்தில் கங்கணமாகக் கட்டிய பாம்பினைப் பார்த்து, "நீ இப்பாண்டியனுக்கு இந்நகரத்தின் எல்லையை அளந்து காட்டுக" என்று பணித்தார். உடனே அப்பாம்பு "எம்பெருமானே! இந்நகரம் என் பெயரினால் விளங்கும்படி அருள் புரிவாயாக" என்று பிரார்த்தனை செய்தது. சிவபெருமான், "அங்ஙனமே ஆகுக" என்று அருளினார்.

உடனே பாம்பு விரைந்து சென்றது. கிழக்குத் திக்கிலே சென்று வாலை நீட்டியது. நகருக்கு வலமாக நிலத்தில் படிந்து உடலை வளைத்து வாலைத் தன் வாயில் வைத்துப் பாண்டியனுக்குப் பழைய நகரின் எல்லையைக் காட்டியது. பின்னர் திரும்பப் போய்ச் சித்த மூர்த்திகளின் கையில் கங்கணமாக மாறியது. சித்த மூர்த்திகள் தம் திருக்கோயிலின் கண் எழுந்தருளினார். பின்னர் பாம்பு காட்டியபடியே வங்கியசேகரபாண்டியன் 'சக்கர வாளகிரி' என்னும் மதிலைக் கட்டுவித்தான். தெற்கு வாயிலுக்குத் திருப்பரங்குன்றமும், வடக்கு வாயிலுக்கு இடப மலையும் மேற்கு வாயிலுக்குத் திருவேடகமும், கிழக்கு வாயிலுக்குத் திருப்பூவணமும் எல்லையாய் அமைந்தன.

அப்பெரிய மதிலை ஆலவாய் மதில் என்றும், அந்த நகரை 'ஆலவாய்' என்றும் எஞ்ஞான்றும் அழைக்கத் தொடங்கினர். பாண்டியன் நகரை முன்போலவே ஒழுங்கு செய்தான். பலவகைக் குடிகளைக் குடியமர்த்தி அளகாபுரி போல் சிறப்படைய வைத்தான். இறைவனின் திருக் கோயிலுக்குப் பல இரத்தினாபரணங்களையும் கிரீடம், கவசம் போன்றவற்றையும் கொடுத்தான். சிறப்புடன் அந் நாட்டை ஆண்டு வந்தான்.

50. சுந்தரப் பேரம் பெய்த படலம்

அந்நாளில் விக்கிரம சோழன் என்பவன், பாண்டியன் வங்கிய சேகர பாண்டியனுடன் போர் புரிய ஒரு பெரிய சேனையுடன் வந்தான். விக்கிரம சோழனுடைய படைகள் பாண்டிய நாட்டினுள் புகுந்து பலவித இடையூறுகளைச் செய்த வண்ணம் வந்து கொண்டிருந்தன. பாண்டியன் அதனை அறிந்து சோமசுந்தரக் கடவுளின் திருக்கோயிலை அடைந்து, "பெருமானே! அடியேனுடன் போர் புரிய சோழன்

வந்துள்ளான். அவனை வெற்றி கொள்ளத் தேவையான பெரிய படை என்னிடம் இல்லை. என்னைக் காத்தருள வேணடும்" என்று விண்ணப்பம் செய்தான். அப்போது சிவபெருமான் ஆகாயத்தில் அசரீரியாகத் தோன்றி, "பாண்டியனே! நீ முதலில் அவனோடு எதிர்த்துப் போர் புரிக. பின்னர் நாமும் உனக்குத் துணையாக நின்று வெற்றிக் கிட்டச் செய்கிறேன்" எனறார். அம்மொழிகளைக் கேட்ட பாண்டியன் மிக மகிழ்ந்தான்.

உடனே பாண்டியன் தேரில் ஏறிச் சோழனுடைய படைகளை எதிர்த்தான். இரண்டு புறத்துச் சேனைகளும் சிறிது நேரம் போரிட்டன. அத்தருணத்தில் சோழன் படைக்குத் துணையாக வடவேந்தர்களின் படைகள் வந்தன. போர் இன்னும் கடுமையடையவே பாண்டியனின் படைகள் தாக்குப் பிடிக்க முடியாமல் சிதறி ஓடின. வில்லையும் வேலையும் போட்டுவிட்டுப் பாண்டியப் படைகள் ஓடி விட்டன. சோழன் 'வெற்றி பெற்றோம்' என்றெண்ணி வெற்றிச் சங்கை எடுத்து ஊதினான்.

அப்போது சோமசுந்தரக் கடவுள் பாண்டியனின் சேனைக்குத் தலைவராக வந்தார். "சுந்தரேசன்" என்ற திருப்பெயரோடு வேடர் தோற்றத்துடன் வந்தார். தம்முடைய கணைகளை சோழன் மேல் விட்டார். ஒவ்வொரு கணையும் பதினாயிரம் வீரர்களைக் கொன்றது. சோழன் ஐயம் கொண்டு, "இக் கணைகளுக்கு இவ்வளவு வலிமை ஏது?" என்று எண்ணினான். கணையில் சுந்தரேசன் என்ற திருநாமம் வரைந்திருந்தலை அறிந்தான். இது சோமசுந்தரக் கடவுள் பாண்டியனுக்குத் துணையாக வந்து செய்த செயல் என்று உணர்ந்தான். உடனே பயந்து போய்த் தன் படைகளுடன் தன் நாட்டிற்குத் திரும்பினான். அவ்வாறு போரிலிருந்து திரும்பிப் போய் கொண்டிருக்கும் சோழனை வடநாட்டு அரசர்கள் 'நில் நில்' என்று கூறித் தடுத்து நிறுத்தினர். அவனை மீண்டும் போருக்குத் திரும்ப அழைத்து வந்தனர்.

மீண்டும் பாண்டியன் சேனை மேற் சென்று கணை தொடுத்தனர். உடனே வேடவடிவம் கொண்ட இறைவர் கணையை விடுத்து இலட்சக்கணக்கான வீரர்களையும் குதிரைகளையும் கொன்று குவித்தார். இதனால் போர்க்களம் பயங்கரமாகக் காட்சியளித்தது. எங்கும் இரத்த ஆறு ஓடியது. சோழனுக்குத் துணையாக வந்த வடநாட்டு மன்னர் யாவரும் இறைவரின் அம்புகளால் இறந்து பட்டனர். சோழன் தோற்றோடினான். பாண்டியனின் மலர்ந்த முகத்தை நோக்கிய வேடராகிய இறைவர் அருள் நகை புரிந்து மறைந்தருளினார்.

பின்னர் வங்கியசேகரபாண்டியன் வெற்றிச் சங்கை முழங்கினான். வெற்றி மாலை தரித்து நகரடைந்தான். சோமசுந்தரக் கடவுளின் திருக் கோயிலுக்குச் சென்றான். இரத்தினத்தால் வில்லும் சுந்தரப்பேர் எழுதிய அம்பும் செய்து சாத்தி வணங்கினான். நீண்ட நாட்கள் நீதி வழுவாமல் ஆட்சி செய்தான்.

51. சங்கப் பலகை தந்த படலம்

வங்கிய சேகர பாண்டியன் நல்லாட்சி செய்து வரும் காலத்தில் பிரமதேவன் பத்து அசுவமேத யாகத்தினைத் தேவர்கள் மகிழ செய்து முடித்தான். கங்கையில் நீராட வேண்டி பிரமதேவன் தன் மனைவியரான சரசுவதி, சாவித்திரி, காயத்திரி என்ற மூவரோடு செல்லத் தொடங்கினான். அவ்வாறு அவர்கள் சென்று கொண்டிருந்தபோது வழியில் விஞ்சைமாது ஒருத்தி இனிய இசையைப் பொழிந்து கொண்டிருந்தாள். அவ்விசையில் மனம் செலுத்தி சரசுவதி சற்று அங்கே நின்று விட்டாள். பிரமதேவன் தன் மற்ற இரு மனைவியருடன் சென்று கங்கையில் நீராடிக் கரையேறினான். அப்போது அங்கு வந்த சரசுவதி, "என்னையன்றி நீங்கள் மட்டும் நீராடியது என்ன?"

என்று கோபமாகக் கேட்டாள். அதற்கு நான்முகன் "குற்றம் உன்மேல் இருக்க, நீ நம்மைக் கோபிப்பது என்ன ? இத்தீங்கை மனிதப் பிறப்பெடுத்து நீக்கிக் கொள்வாய்" என்றான். இச்சாபத்தை ஏற்ற சரசுவதி பயந்து நடுங்கி, "உமக்கு உயிர்த்துணை ஆன நான் மனிதப் பிறவியடைந்து துன்பம் அடைய வேண்டுமா ?" என்றாள்.

அப்போது நான்முகன் கலைமகளின் துன்பம் போக்க எண்ணி "பெண்ணே! நினது வடிவாகிய முதலெழுத்து ஐம்பத்தொன்றினுள்ளே விளங்கும் ஆகாரம் முதல் ஹாகாரம் இறுதியாகிய நாற்பத்தெட்டு எழுத்துக்களும் நாற்பத்தெட்டு புலவர்களாகி அவதாரம் செய்வார்கள். அவ்வெழுத்துக்கள் அனைத்திலும் ஏறி நின்று இயக்குகின்ற அகரத்திற்குத் தலைமையாகிய சோமசுந்தரக் கடவுள் நாற்பத்தொன்பதாம் புலவராகி அப்புலவர்கள் உள்ளத்தில் நின்று அவர்களுக்கு அறிவைத் தோற்றுவித்து புலமையைக் காத்தருள்வார்" என்று கூறினான். பிரமதேவன் கட்டளைப்படி நாமகள் வடிவமான ஆகாரம் முதலிய நாற்பத்தெட்டு எழுத்துக்களும் மக்களாய்ப் பிறந்தனர். சிவ பூசை செய்யும் தன்மையராயினர். பல நாட்டிற்கும் சென்று புலமையில் வென்று மதுரையை நோக்கி வந்து கொண்டிருந்தனர்.

அப்போது சோமசுந்தரக் கடவுள் தானும் ஒரு புலவராகி அப்புலவர்களின் எதிரே சென்றார். அவர்களை அழைத்துக்கொண்டு அழகு தமிழ் விளங்கும் மதுரையை அடைந்தார். மதுரையை அடைந்தவுடன் மறைந்தருளினார். தம்முடன் இத்துணை தூரம் வந்தவர் சோம சுந்தரக் கடவுளே என்று உள்ளம் தெளிந்து அவரைப் பல பாடல்கள் கொண்டு வணங்கினர். பின்னர் வங்கிய சேகரபாண்டியனைப் போய்க் கண்டனர், 'பாண்டியன் அவர்களைக் கண்டு பல வரிசைகளை நல்கி, சோமசுந்தரக் கடவுளின் திருக்கோயிலுக்கு வடமேற்கு திசையில் ஒரு சங்க மண்டபம் அமைத்து அதில் அவர்களை இருத்தினான். அங்கிருந்த அப்புலவர்கள்

வடநாட்டுப் புலவர்களையும், பாண்டிய நாட்டின் முன்னைப் புலவர்களையும் வாதாடி வென்றனர்.

ஒருநாள் சங்கப் புலவர்கள் சோமசுந்தரக் கடவுளின் திருமுன்னர் சென்று, "எம்பெருமானே! எம்மோடு வாதிட பல புலவர்கள் வந்து கொண்டிருக்கின்றனர். புலமையை உள்ளபடி சீர்தூக்கி அறிய, அளக்கும் கருவியாக ஒரு சங்கப் பலகையைத் தந்தருள வேண்டும்" என்று விண்ணப்பித்தனர். உடனே இறைவர் ஒரு பலகையுடன் புலவர் வடிவம் தாங்கி வந்தார். புலவர்களைப் பார்த்து, "புலவர்களே! இப் பலகை மந்திரத் தன்மையுடையது. அறிவால் முதிர்ந்த நும் போன்றோர்க் கெல்லாம் ஒவ்வொரு முழமாக வளர்ந்து இருக்கை அளிக்க வல்லது. இஃது உங்களுக்கு அளவுகோளாய் இருக்கும்" என்று கூறி அப்பலகையினை அவர்கட்குக் கொடுத்தருளினார்.

சங்கப் புலவர்கள் அப்பலகையை வாங்கிக் கொண்டு திருக்கோயில் வந்து பூசித்தனர். இறைவனை வணங்கி 'நக்கீரன்' முதலில் ஏறினான். பின்னர் கபிலர், பரணர் போன்றோர் ஏறினர். மற்றைப் புலவர்களும் இங்ஙனமே ஏறி ஏறி ஒருசேர வீற்றிருந்தனர். ஒவ்வொருவருக்கும் ஒரு முழமாக வளர்ந்து இடம் கொடுத்தது. அதன் பின்னர் அந் நாற்பத்தெட்டுப் புலவர்களும் எண்ணில்லாத பாடல்களைச் செய்துகொண்டு வாழ்ந்து வந்தனர். அவர்களின் பாடல்கள் காலப் போக்கில் பல்கிப் பெருகியதால் உரைகாண முடியாமல் தலை மயங்கிக் கிடந்தன. அதனால் புலவர்கள் ஒருவருக்கொருவர் தங்களுக்குள்ளே மாறுபாடு கொண்டனர்.

அப்போது 'சோமசுந்தரக் கடவுள் அப்புலவர்களின் முன்னால் ஒரு புலவராக எழுந்தருளினார். "புலவர்களே! உங்களுக்கு மயக்கத்தைத் தரும் பாடல்களைக் கொண்டு வாருங்கள்" என்று அருளினார். அவர்கள் "எந்தையே! இவையே ஆம்" என்று கூறி அவற்றைக் கொண்டு வந்து

திருமுன்னர் வைத்தனர். அப் பாடல்களுக்கு தூய பொருளைக் கூறிய பெருமான் அவற்றை ஆராய்ந்து அப் புலவர்களின் கையில் கொடுத்தார். மனம் மகிழ்ந்து போன புலவர்கள், "தாங்களும் எங்களோடு ஒரு புலவராய் இங்கு விளங்க வேண்டும்" என்று வேண்டி நின்றனர். அதற்கு ஒப்புக் கொண்ட இறைவர் பொன்னாரத்தின் நடுநாயக மணிபோல் அப்புலவர்கட்கு நடுவில் விளங்கினார். இவ்வாறு நாற்பத்தொன்பது புலவர்களும் விளங்கும் நாட்களில் வங்கிய சேகர பாண்டியன் இறைவன் திருவடியிற்கலந்தான். அவன் மகன் வங்கிய சூடாமணி பட்டமேற்றான்.

52. தருமிக்குப் பொற்கிழியளித்த படலம்

வங்கிய சூடாமணிப் பாண்டியன் திருநந்தவனம் ஒன்றை உண்டாக்கினான். அத்துடன் சண்பக நந்தவனம் ஒன்றையும் தனியே உண்டாக்கினான். அச் சண்பக நந்தவனத்தில் இருந்து மலர்களைத் தொடுத்து மாலையாக்கி சோமசுந்தரக் கடவுளுக்குச் சூட்டி, இவர் சண்பக சுந்தரர் என்று கூறித் துதித்து வணங்கினான். அன்று முதல் ஆலவாய் அழகருக்கு 'சண்பக சுந்தரர்' என்ற திருநாமம் விளங்கிற்று. அவ்வாறு அழகு செய்த வங்கிய சூடாமணி பாண்டியனும் 'சண்பகப் பாண்டியன்' என்றழைக்கப்பட்டான்.

இளவேனிற் காலத்தில் ஒரு நாள் சண்பகவனத்திற்குச் சண்பகப் பாண்டியன் தன் தேவியோடு சென்று தங்கி இருந்தான். அப்போது அவனுக்குப் புதியதொரு நறுமணம் தோன்றும்படி தென்றல் மெல்லென வீசிற்று. உடனே பாண்டியன், "இது ஒரு திவ்விய வாசம். காற்றுக்கு இயல்பாக

மணம் இல்லை. சோலையின் மணமும் அன்று, என்று நினைத்துத் தன் தேவியைத் திரும்பிப் பார்த்தான். அது அவளுடைய கூந்தலின் வாசனையால் இருத்தலைக் கண்டான். "இம்மணம் கூந்தலுக்கு இயற்கை மணமா? செயற்கை மணமா?" என்று ஐயமுற்றான்.

பிறகு பாண்டியன் அரண்மனை வந்தடைந்தான். ஏவலர் மூலம் ஒரு பொற்கிழியைச் சங்க மண்டபத்தின் முன்னே கட்டித் தொங்கவிட்டான். "யான் ஐயுற்றக் கருத்தினை அறிந்து யாரேனும் பாடல் செய்வாராயின் அவருக்கே இந்த ஆயிரம் செம்பொன் அடங்கிய முடிப்பு உரியது"! என்று அறிவித்தான். புலவர்கள் அனைவரும் ஒன்றாய் இருந்து ஆராய்ந்தும், தனித்தனியே ஆராய்ந்தும் பாண்டியன் உள்ளத்தில் கருதிய பொருளை அறியமுடியாமல் இளைத்து மனம் வருந்தினர்.

அப்போது ஆதிசைவ மரபில் வந்தவனும், தாய் தந்தையற்ற அனாதையும், பிரமசாரி நிலையுடையவனும் திருமணம் செய்து கொள்ள விருப்பமுடையவனுமாகிய 'தருமி' என்பவன் சோமசுந்தரக் கடவுளின் திருமுன்னர் விழுந்து வணங்கினான். இறைவனை நோக்கிப் "பெருமானே! அடியேன் தாய், தந்தையற்ற அனாதை. திருமணம் செய்துகொள்ள விரும்புகின்றேன். வறியவனாகிய எனக்கு, பாண்டியனுடைய மனக்கருத்தை அறிந்து எளியேனுக்கு 'ஒரு செய்யுள் செய்தருளும்' என்று வேண்டினான். உடனே சோமசுந்தரக் கடவுள் 'கொங்குதேர் வாழ்க்கை' எனத் தொடங்கும் பாடல் ஒன்றைச் சொல்லழகு நிரம்பப் பாடி அதனைத் தருமியின் கையில் கொடுத்தருளினார்.

அத்தருமி அதனை வாங்கிப் பெரிதும் மகிழ்ந்தான். சங்க மண்டபத்தை அடைந்து அங்குள்ள புலவர்கள் கையில் கொடுத்தான். சங்கப் புலவர்கள் அனைவரும் அப்பாடலைப்

படித்து பார்த்து, "நன்று! நன்று! என்று கூறி அதனைப் பாண்டியனிடம் கொடுத்துப் பொருள் விளக்கம் கூறினர்.

பாண்டியன், தன் உள்ளக் கருத்துடன் அப்பாடல் முழுவதும் ஒத்திருந்ததால் பெரிதும் மகிழ்வடைந்தான். "இச் செய்யுள் கொண்டு வந்த அந்தணன் இப்பொழுதே புலவர்களோடு சென்று ஆயிரம் பொன்னையும் கைக் கொள்ளக் கடவன்" என்று கூறினான். தருமி புலவர்களோடு சென்று சங்க மண்டபத்தின் முன்னே தொங்கிய பொற்கிழியை அறுக்கும்போது நக்கிரன் அவனை அடைந்து "அறுக்காதே! நில்" என்று தடுத்தான். தொடர்ந்து "இச் செய்யுளில் குற்றம் உள்ளது" என்று கூறினான். இதைக்கேட்ட தருமி பெரிதும் வாடினான். செய்யுளை எடுத்துக் கொண்டு மீண்டு போய், சோமசுந்தரக் கடவுளின் திருமுன்னர் வைத்தான். "இறைவனே! பிழையான பாடலை என்னிடம் தந்தது ஏன்? வறுமையுடைய நான் பொருளை இழந்தேன் என்று கூறமாட்டேன். நீர் பாடியருளிய செய்யுளுக்கு, சில நாட்களே வாழ்வினையுடைய மனிதப் பிறவியையுடைய புலவன் குற்றம் கூறினான் என்றால் உன்னை இனி மதிக்க வல்லார் யார்? எனவே இக்குற்றம் உனக்கன்றி எனக்கில்லை" என்று கூறி வருந்தி நின்றான்.

அப்போது சோமசுந்தரக் கடவுள் ஒரு புலவர் வடிவம் தாங்கி வெளியே வந்தார். அவர் பல புலவர்கள் தன்னைச் சூழ்ந்துவரப் பெரும் புலவராகச் சங்க மண்டபம் அடைந்தார். சங்க மண்டபத்தில் புலவராக வந்த இறைவர் "எமது கவிக்குக் குற்றம் கூறினவர் யாவர்?" என்றார். உடனே நக்கிரன் சிறிதும் அஞ்சாது, "நானே குற்றம் கூறினேன்" என்றான். அதனைக் கேட்ட புலவர், "யாது குற்றம்?" என்றார். நக்கிரன், "சொற்குற்றமில்லை, பொருட்குற்றம்" என்றான். புலவர், "பொருட் குற்றம் என்ன?" என்று வினவினார். "புனைந்த மலர்களின் சார்பினால் அல்லாமல் கூந்தலுக்கு இயற்கையாக மணம் இல்லை" என்று கூறினான்.

தொடர்ந்து இருவரும் வாதிட்டனர். முடிவில் நக்கீரன், "சக்தியாகிய ஞானப் பூங்கோதையின் கூந்தலுக்கும் அப்படித்தான்" என்று வைராக்கியமாய்ப் பேசினான். உடனே புலவர் நெற்றிக் கண்ணைத் திறந்து காட்டினார். சிறிதும் அஞ்சாத நக்கீரன், "இந்திரன் போல் உடல் முழுவதும் கண்ணாகிச் சுட்டாலும் உம்பாடல் குற்றமுடையதே" என்றான். உடனே நெற்றிக்கண் தீயானது; நக்கீரனைச் சுட்டது. வெப்பம் தாளாத நக்கீரன் பொற்றாமரைப் பொய்கையில் போய் விழுந்து அழுந்தினான். புலவராகவந்த சோமசுந்தரக் கடவுள் திடீரென்று மறைந்தருளினார்.

53. கீரனைக் கரையேற்றிய படலம்

சோமசுந்தரக் கடவுளின் நெற்றிக்கண் தீயால் தாக்குண்ட நக்கீரன், பொற்றாமரைத் தீர்த்தத்தில் போய் அழுந்தினான். கபிலர், பரணர் போன்ற புலவர்களெல்லாம் அதைக்கண்டு நடுங்கினார்கள். "நக்கீரன் இல்லாத இச்சபை அரசன் இல்லாத நாடு போன்றும், நடுநாயக மணி இல்லாத கண்டிகை போன்று ஞானம் இல்லாத கல்வி போன்றும் எண்ணத்தக்கது. ஐயகோ! சோமசுந்தரக் கடவுளுடன் வாது செய்த இப்பிழையோ மிகப் பெரியது. ஆதலால் இதனைத் தீர்ப்பது எப்படி?" என்று சிந்தித்து யாவரும் மனம் கலங்கினர். பின்னர் சோமசுந்தரக் கடவுளின் திருவடிகளில் விழுந்து வணங்கினார்கள். "ஐயனே! செருக்கினால் அறிவிழந்த நக்கீரனின் பிழையைப் பொறுத்தருள்க" என்று குறையிரந்து வேண்டினர்.

உடனே சோமசுந்தரக் கடவுள் மீனாட்சியம்மையுடன் பொற்றாமரைக் குளத்தில் எழுந்தருளினார். பின்னர் அருட்கண்ணால் நோக்க நீரினில் மூழ்கிக்கிடந்த நக்கீரன் அன்பு வடிவமாகி "கைலை பாதி காளத்திபாதி அந்தாதி"

பாடினார். அப்பாடலைச் செவிமடுத்த இறைவர் நக்கீரனது கையைப் பிடித்துக் கரையின்கண் ஏற்றியருளினார். கரையேறிய நக்கிரன் சோமசுந்தரக் கடவுளையும் மீனாட்சி அம்மையாரையும் வணங்கினான். இறைவனைத் துதித்தான். இறைவன்மேல் 'கோபப் பிரசாதம், பெருந்தேவ பாணி, திருவெழு கூற்றிருக்கை' என்னும் பாமாலைகள் பாடித் துதித்தான்.

சோமசுந்தரக் கடவுள் மகிழ்ந்து திருவருள் புரிந்து "நீ முன் போலவே புலவர் கூட்டத்தில் நன்மதிப்புடன் இருக்கக் கடவை" என்று அருளித்து மீனாட்சி அம்மையுடன் மறைந்தருளினார். நக்கிரனும் மற்றைய புலவர்களும் சங்க மண்டபத்தின் முன் தொங்கிய பொற்கிழியை அறுத்துத் தருமி என்னும் அந்த ஆதிசைவ அந்தணனுக்குக் கொடுத்தனர். மற்றும் பாண்டியனைக் கொண்டு மேலும் பல வரிசைகள் கொடுக்கச் செய்தனர்.

சண்பகப் பாண்டியன் நாள்தோறும் சோமசுந்தரக் கடவுளையும் மீனாட்சியம்மையையும் வழிபட்டுப் பல திருப்பணிகள் செய்து 'சிவமே பொருள்' எனத் துணிந்த உள்ளன்பினோடு இனிது வாழ்ந்து நல்லரசாட்சி செய்து வந்தான்.

54. கீரனுக்கு இலக்கணம் உபதேசித்த படலம்

புலவர் கூட்டத்துடன் உறையும் நக்கிரன், இறைவன் அருளினால் அழுக்காறு நீங்கி முக்காலத்தும் சோமசுந்தரக் கடவுளை வழிபட்டு வந்தான். அவ்வாறு வணங்கி வந்தமையால் இறைவன் பெரிதும் மகிழ்வடைந்தார்.

"இவனுக்கு இலக்கணம் இன்னும் சரியாய் விளங்கவில்லை. அதனால் புலமைமிக்க ஒருவரைக் கொண்டு இலக்கணம் போதிக்க வேண்டும். யாரைக் கொண்டு போதிக்கலாம்?" என்று சிந்திக்கலானார். அப்பொழுது உமாதேவியார் இறைவனை வேண்டி, "எம்பெருமானே! தங்களின் நினைவிற்குத் தக்க விடை கூற வல்லார் யார்? இருப்பினும் எனக்குத் தோன்றியவற்றைக் கூறுகின்றேன். வடகிழக்கெல்லை தாழ்ந்திருந்த காலத்தில் அதைச் சமன் செய்ய அகத்திய முனிவனுக்கு தமிழையும் அதன் இலக்கணத்தையும் தாங்கள் அருளிச் செய்து அங்கு செல்லச் செய்து புவியைச் சமன் செய்து சரிப்படுத்தினீர்கள். அகத்திய முனிவன் தன் மனைவியான உலோப முத்திரையுடன் தற்போது பொதிய மலையில் உள்ளான். அவ்வகத்தியனைக் கொண்டு இந் நக்கீரனுக்குத் தமிழ் இலக்கணத்தை உணர்வித்து அருளும்" என்று விண்ணப்பித்தாள்.

உடனே இறைவர் மகிழ்ந்து தம் உள்ளத்தில் அகத்திய முனிவரை நினைத்தருளினார். அகத்திய முனிவர் தம் மனைவியோடு விமானத்தில் புறப்பட்டு வான் வழியே மதுரையை வந்தடைந்தார். இறைவரை வலம் வந்து வணங்கினார். அகத்தியனைக் கண்ட இறைவன், "அருந்தவச் செல்வனே! இந் நக்கீரனுக்குத் தமிழ் இலக்கணம் கற்பிப்பாய்" என்று பணித்தருளினார். உடனே அகத்தியர் இறைவனை வணங்கினார். அங்கு வந்து தம்மை வணங்கி நின்ற நக்கீரனுக்குத் தமிழ் இலக்கணம் முழுவதையும் குற்றமற மனமயக்கம் நீங்க அறிவுறுத்தினார். நக்கீரன் ஐயம் திரிபற உணர்ந்தார். அவர் போதனா சக்தியைக் கண்டு மகிழ்ந்த இறைவர் அகத்தியருக்கு விடை கொடுத்து அவர் இருக்கைக்கு அனுப்பி வைத்தார்.

அகத்தியர் சென்றபின் உமா தேவியார், இறைவரை வணங்கி, "ஐயனே! கீரனுக்குத் தாங்கள் இலக்கணம் கற்பிக்காமல் வேறொருவரை வைத்துக் கற்பிக்க நினைத்தற்குக்

காரணம் என்ன?" என்று வினவினார். இறைவர், "நக்கீரன் நம்மிடத்தே பொறாமை கொண்டதால் அகத்தியரை வைத்துக் கற்பித்தோம். நம்மிடம் பொறாமை இன்றிக் குற்றமற்ற மனத்தவர்க்கே நாம் நூல் கற்பித்தல் தருமம்" என்றார். அதைக் கேட்டு மீனாட்சியம்மை மகிழ்வடைந்தார்.

நக்கீரன் அகத்தியரிடம் நன் முறையில் இலக்கணம் உணர்ந்த காரணத்தால் பின்னர் தாம் முன் செய்த நூல்களில் உள்ள குற்றங்களை எல்லாம் நீக்கி நன்முறையில் திருத்தி அமைத்தான். இறைவனின் பெருங் கருணையை எண்ணிப் பெரிதும் மகிழ்ந்து, "நான் அறியாமையால் தங்கள் பாடலுக்குச் சொல்லிய குற்றத்தை மன்னிக்க வேண்டுகின்றேன்" என்று இறைவனிடம் வேண்டினான். பின்னர் நக்கீரன் அகத்தியரிடம் தான் கற்ற இலக்கணத்தை மற்றைப் புலவர்களுக்கும் போதித்துச் சோமசுந்தரக் கடவுளின் திருவடித் தாமரைகளிலே முதிர்ந்த பக்தியோடு இருந்தனன்.

55. சங்கத்தார் கலகந் தீர்த்த படலம்

அளவற்ற பெருமையுடைய சங்கப்புலவர் நாற்பத்தெண்மரும் வெவ்வேறு செந்தமிழ்ப்பாக்கள் செய்தனர். காலப்போக்கில் ஒவ்வொருவரும் தாம் தாம் செய்த பாடல்களே சிறப்புடையவை என்று எண்ணிப் பெரிதும் செருக்கடைந்தனர். தங்களுக்குள்ளே சண்டையிட்டுக் கொண்டனர். அதனால் தங்கள் சிறுமைகளையெல்லாம் நீக்க வல்ல தங்களின் முதல் புலவரான சோமசுந்தரக் கடவுளை வணங்கி, "எம்பெருமானே! எங்கள் பாடல்களைச் சீர்தூக்கி அவற்றின் பெருமை சிறுமைகளை எடுத்துக்காட்டி எங்கள் ஐயம் தீர்த்தருள வேண்டும்" என்று வேண்டினர்.

அதனைக் கேட்ட இறைவர் ஒரு புலவராய்த் தோன்றியருளி, "புலவர்களே! இந்நகரில் "தனபதி" என்னும் ஒரு வணிகன் இருக்கிறான். அவன் மனைவி குணசாலினி. அவர்களுக்கு முருகக்கடவுளின் அவதாரம் போன்று அழகிய புதல்வன் ஒருவன் உள்ளான். ஆனால் ஊமையன். அவனிடம் சென்று உங்கள் பாடல்களைக் கூறுங்கள். அவன் புத்திக் கிசைந்த பாடல் எதுவோ, அதுவே சிறந்த பாடல்" என்று கூறியருளினார். உடனே புலவர்கள், "எம்பெருமானே ஊமையன் எங்கள் பாடலின் தன்மையைப் பகுத்தறிந்து எவ்வாறு உரைப்பான்?" என்றனர். உடனே சிவபெருமான் "அவ் ஊமையன் நல்ல சொல்லாழத்தையும் பொருளாழத்தையும் காணின் தலையசைப்பான். தோள் புளகித்து மனம்மிக மகிழ்வான். உங்களுக்குள் ஏற்றபட்ட கலகம் நீங்கி விடும்" என்றார்.

பின்பு புலவர்கள் அனைவரும் வணிகக் குலத்தைச் சேர்ந்த ஊமையனான "உருத்திர சருமனை" அடைந்தனர். அவனை அன்புடன் அழைத்து வந்து தம் சங்கத்தில் இருத்தினர். வெண் மலராலும் வெண் சாந்தினாலும் அவனைப் பூசித்து வணங்கினர். அவன் திருமுன் அமர்ந்து தத்தம் பாடல்களை மொழிந்தனர். சங்கப் புலவர்கள் கவிகள் அனைத்தையும் உள்ளத்திற் கொண்டு அவற்றின் இயல்புகளை மெய்ப்பாட்டினாலே மகிழ்ந்தும் இகழ்ந்தும் புலப்படுத்தினான். நக்கீரன், கபிலன், பரணன் என்னும் மூவருடைய பாடல்களைக் கேட்டு உள்ளங்கொண்டு இனிய சுவையினை அருந்தி உடல் பூரித்தான். மெய்ம்மயிர் சிலிர்த்தான்; கண்ணீர் பொழிந்து சிரமசைத்துப் பெரு மகிழ்ச்சியுற்றான்.

ஊமைச் சிறுவன் உணர்வையே தராசாகக் கொண்டு நிறுத்துக் காட்ட, நன்னெறியினை யறிந்த புலவர்கள் யாவரும் தமக்குள் உண்டான கலகத்தை விடுத்து நட்புப் பூண்டனர். பின்னர் நக்கீரன், கபிலன், பரணன் என்ற மூவருடைய பாடல்கள் உலகில் பரவியது. மிகச் சிறந்தோங்கியது. பின்னர்

புலவர்கள் குற்றமற்ற நூல்களை ஆராய்ச்சி செய்து சிறப்புடன் விளங்கினர்.

இவ்வூமையன் 'உருத்திர சருமன்' என்று கூறக் காரணம் இறையனார் களவியல் உரையே. இவன் முருகனின் அவதாரம் என்றும் கொள்வர். அதற்குக் காரணமும் விளக்கமும் வலை வீசிய படலத்தில் காண்க.

56. இடைக்காடன் பிணக்குத் தீர்த்த படலம்

சண்பக மாறப்பாண்டியன் சிவபாதம் அடைந்த பின்னர் அவன் மரபில் பதினாறாம் பாண்டியனாகக் குலேச பாண்டியன் என்பவன் பட்டமேற்றான். அவன் இலக்கிய இலக்கணங்களில் மிக வல்லவன். எல்லா நூற்புலமையும் அறிந்தவன். எனவே முத்தமிழ்ப் புலவர் இருக்கும் சங்கப் பலகை அவனுக்கு ஏற இடம் கொடுத்தது. குலேசபாண்டியன் கல்வியில் மிகச் சிறந்தவன் என்று கேள்வியுற்ற 'இடைக் காட்டுப் புலவன்' அரசனைக்காண விரும்பினான். தமிழ்ப் பிரபந்தம் ஒன்றைப்பாடி எடுத்துக் கொண்டு அப்பாண்டியனைக் கண்டு தான் பாடிய பாடலைப் பாடினான்.

குலேச பாண்டியன் அப்பாடலின் சிறந்த பொருளை உணர்ந்தான். இருப்பினும் பொறாமையினால் சிறிதும் முக மலர்ச்சி காட்டாமல் யாதொன்றும் கூறாமல் வாளா இருந்தான். இதனைக் கண்ட இடைக்காட்டுப் புலவன் பெரிதும் வெட்கப்பட்டு இறைவனின் திருக்கோயிலை அடைந்தான். சோமசுந்தரக் கடவுளின் திருமுன்னர் விழுந்து வணங்கி, "மதுரை நாயகனே! தமிழறியும் பெருமானே!

பாண்டியன் அளவற்ற கல்வி ஞானம் உடையவன் என்று அறிந்து கவி பாடி எடுத்துக் கொண்டு அவளிடம் சென்றேன். அதைக் கேட்டு அவன் சிறிதும் தலையசைக்காமல் அவமதித்தான். அவன் என்னையா அவமதித்தான். இல்லை! சொல்லும் பொருளுமாக உள்ள உம்மையும், உமையம்மையையும் இகழ்ந்தான்" என்று துதித்தான். பின்னர், கோபத்துடன் வடக்கு நோக்கிச் சென்றான்.

இடைக்காடன் சொற்களைக் கேட்ட இறைவர் தம்முடைய இலிங்க வடிவத்தை மறைத்து, தம்முடைய திருக்கோயிலுக்கு நேர் வடக்கே வையையின் தென் புறத்தே திருக்கோயில் ஒன்று உண்டாக்கி அதன் கண் இனிதாக உமாதேவியாரோடு அமர்ந்தருளினார். சங்கப் புலவர்கள் ஒரு சேர எழுந்து சிவபெருமான் போனவழியேபோய் அங்குத் தங்கினர். மறுநாள் விடியற்காலையில் இறைவனைச் சேவிக்க வந்த சிவனடியார்கள் திருக்கோயிலில் சிவலிங்கத் திருவுருவைக் காணாது திகைத்து வருந்தினர். உடனே பாண்டிய மன்னனிடம் சென்று செய்தியைத் தெரிவித்தனர்.

அம்மொழியினைக் கேட்ட பாண்டியன் மனம், அனல் கொண்ட வேல் பாய்ச்சியது போல் துடித்தது. அடியற்ற ஆலமரம் போல் சிங்காதனத்தில் இருந்து தரையில் விழுந்தான். "இறைவனே! எங்குற்றாயோ?" என்று சொல்லி அரற்றினான். அப்போது சிலர் பாண்டியனிடம் ஓடிவந்து, "அரசே! நாங்கள் ஒரு அதிசயம் கண்டோம். வையை யாற்றின் தென்கரையில் சங்கப் புலவர்களோடும் மீனாட்சி அம்மையோடும் சோம சுந்தரக் கடவுள் எழுந்தருளியிருக்கிறார்" என்று கூறினர். அதைக் கேட்டவுடன் பாண்டியன் எழுந்து விரைந்து நடந்து வையையாற்றின் தென் கரையை அடைந்தான். அங்கு இறைவனைக் கண்டு வணங்கித் தடுமாறி, "ஐயனே! இங்கு வந்து எழுந்தருளியிருக்கக் காரணம் யாது? அடியேனுடைய தவறு ஏதேனும் உண்டா? அடியேன், நிகழ்ந்தது அறியேன்" என்று விண்ணப்பம் செய்து வேண்டி நின்றான்.

அப்போது சோம சுந்தரக் கடவுள், "வையை நாடனே! இடைக்காடன் செய்த செய்யுளினை இகழ்ந்தாய். அப்பொழுதே நாம் அவனிடத்தே வைத்த அருளினால் இங்கு வந்தோம்" என்று அசரீரியாய் அருள் செய்தார். அதைக் கேட்ட பாண்டியன், "புண்ணியனே! அடியேன் செய்த பிழையைப் பொறுத்தருள்க" என்று வேண்டினான். உடனே இறைவர் குலேச பாண்டியனுக்கு அருள் சுரந்து அவனை மதுரை அரண்மனைக்கு அனுப்பி வைத்தார். தாம் மீனாட்சி அம்மையாரோடும் சங்கப் புலவர்களோடும் திருக்கோயிலுட் புகுந்தருளினார்.

பின்னர் பாண்டியன் இடைக்காடனைச் சங்கப் புலவர்களோடும் அழைத்துக் கொண்டு போய்த் தன் மாளிகையுள் புகுந்தான். இடைக்காடனுக்குச் சிறப்புச் செய்து அவன் பாடலை முறைப்படி கேட்டு மகிழ்ந்தான். பல பரிசுகளை நிரம்பக் கொடுத்தான். சங்கப் புலவர்களுக்கும் அவ்வாறே வழங்கி, "புலவர்களே! நான் இடைக்காடனுக்குச் செய்த குற்றமெல்லாம் பொறுத்தருள்க" என்று வேண்டினான். புலவர்கள், "அரசே! எங்கள் சினம் தணிந்தது. இறைவன் அருளால் இன்னமும் உமக்கு அளவில்லாத பெரும் புகழும் செல்வமும் உண்டாகக் கடவன" என்று ஆசி மொழி கூறிப் போயினார்கள்.

அக் குலேச பாண்டியன் நீண்ட நாட்கள் அரசு செய்து வந்தான். அவனுக்கு 'அரிமர்த்தனன்' என்பவன் மகனாகப் பிறந்தான். குலேச பாண்டியன் தன் மகனுக்கு முடிசூட்டி விட்டு இறைவன் திருவடி நிழலை அடைந்தான்.

57. வலை வீசின படலம்

மீனாட்சி அம்மையாருக்கு தனியிடத்தில் இருந்து கொண்டு சோமசுந்தரக் கடவுள் அதி ரகசியமாக வேதத்தின்

உட்பொருளை உபதேசித்தருளினார். இறைவர் இனிய திருவருளுடன் கூறும் நால் வேதத்தின் பொருளை எம்பெருமாட்டி யாது காரணத்தாலோ விருப்பின்றிக் கேட்டார். அதைக் கண்ட இறைவர், "பெண்ணே! நீ பாராமுகமாகி வேதப் பொருளை விருப்பின்றிக் கேட்டாய், இக்குற்றத்தினால் இழிஞராகிய பரதவர் குலத்தில் தோன்றக் கடவை" என்றார். உடனே தேவியார் அஞ்சி, "வள்ளலே! நான் தங்களைப் பிரிந்து வாழ வல்லேனோ?" என்று கூறி வணங்கினார். உமையம்மையின் துன்பத்தைக் கண்ட பெருமான் "நீ பரதவர் மன்னனின் மகளாய்த் தோன்றி அங்கு வளர்ந்து வருக. நாம் வந்து திருமணம் செய்து கொள்வோம்" என்ற திருவாய் மலர்ந்தருளி அம்மையைச் செல்ல விடுத்தார்.

இதை அறிந்த விநாயகக் கடவுள் அங்கு வந்து கோபம் கொண்டு வேதநூல்களை எல்லாம் தமது துதிக்கையால் அள்ளிக் கடலில் எறிந்தார். முருகப் பெருமானும் தம் தந்தையார் கரத்தில் இருந்த சிவஞான போத நூலை விரைந்து பிடுங்கிக் கடலில் எறிந்தார். உடனே இறைவர் நந்தி தேவரை நோக்கி, "நாம் இருக்கும் சமயம் அறியாது இவர்களை உள்ளே விடுத்து வாளா இருந்தனை. அதனால் தீங்கு நேர்ந்தது. உன் குற்றத்தின் பொருட்டு நீ சுறாமீன் வடிவம்கொண்டு உழலக் கடவாய்" எனச் சபித்தார். விநாயகக் கடவுளுக்குச் சாபம் கொடுப்பின் அது தன்னையே சாரும் என்பதால் அவருக்குச் சாபம் கொடுக்கவில்லை. முருகக் கடவுளை நோக்கி, "நீ வணிகர் குலத்தில் ஊமைப் பிள்ளையாகக் கடவாய்" என்று பணிந்தருளினார். (இவ்வூமைப் பிள்ளையே மதுரையில் தனபதி மகன் உருத்திர சருமனாகத் தோன்றினான் என்று இறையனார் அகப் பொருள் முதற் சூத்திர உரை கூறும். இக்கூற்று பொருந்துவதாய் இல்லை. இவ்வுருத்திர சருமன் சங்கத்தார் கலகம் தீர்த்தபடலத்தில் புலவர்கள் கலகம் தீர்த்தவன் (படலம் 55). ஆயினும் அக்கதை நடந்தது சண்பகப் பாண்டியன் காலத்தில்,

ஆயின் இறைவர் சாபங் கொடுத்ததாகக் கூறப்படும் இவ் வரலாறு நடந்தது, சண்பக மாறனுக்குப் பின் பதினாறு பாண்டியர்கள் ஆட்சி செய்த பின்னர் தோன்றிய அரி மருத்தன பாண்டியன் காலத்தில். எனவே, முருகப் பெருமானுக்குச் சாபம் கிடைத்தது, அப்புலவர்கள் காலத்திற்கு மிகவும் பின்னால் என்று உணர வேண்டும். எனவே களவியல் உரை பொருத்தமற்றது)

பாண்டியன் நாட்டில் கிழைக் கடலின் பக்கத்தில் பாக்கம் என்னும் ஊர் ஒன்று உள்ளது. அவ்வூர் பரதவ குல அரசனாய்த் திகழ்ந்த ஒருவன் மகப் பேறின்றி நெடுநாட்கள் வருந்தி இருந்தான். ஒரு நாள் அவன் மீன் பிடிக்கச் சென்ற போது ஒரு புன்னைமர நிழலிலே, தம் இச்சையின் வழியே ஒரு மகவாகி அழுது கொண்டிருந்தார், இறைவி. வலைஞர் தலைவன் குழந்தையைக் கண்டான். அவன் பெருமகிழ்ச்சி அடைந்து, "மகப் பேறில்லாத எளியேனுக்குச் சோமசுந்தரக் கடவுள் அருள் சுரந்து தந்தருளிய குழந்தை இது" என்று கருதி அக்குழந்தையை எடுத்துத் தழுவினான். தன் கற்பின் சிறந்த மனைவியின் கையில் கொடுத்தான். அவள் மகிழ்வோடு வாங்கினாள். பரதவர் மகிழ்ந்து குரவைப்பாடலைப் பாடி ஆடினர்.

அம்மாது அக்குழந்தையை வளர்த்தாள். காசுடன் முத்துக்களும் கோர்த்துக் கட்டினாள். சங்கு மணி மாலை அணிவித்தாள். அம்மையார் பரதவர் சிறுமியுடன் விளையாடினார். நாளுக்கு நாள் உடல் வளர்ச்சி பெற்று அம்மையார் வளர்ந்து வந்தார். இறைவர் பணித்தபடியே சுறா மீனாகிய திருநந்தி தேவர் கடலில் திரிந்து வந்தார். விநாயகப் பெருமானும் முருகவேளும் கடலில் எறிந்த சுவடிகளை தலையில் தாங்கித் திரிந்தார். கடலில் சென்ற படகுகளையும் தோணிகளையும், சோங்கினையும் அவை பிளவுபடுமாறு கவிழ்ப்பார். அதனால் மீன் பிடிக்கச் சென்ற பரதவர் பல இடையூறு அடைந்தனர்.

நெய்தல் நிலத் தலைவன் இச்சுறா மீன் புரியும் இடையூற்றினைக் கண்டு, "இஃது எத்தன்மைத்து; நாம் அதனை எவ்வாறு பிடிப்பது?" என்று வலைஞர்களுடன் கலந்து பேசிப் படகில் சென்று அச்சுறாமீனைப் பிடிக்க பெரிய வலையை வீசினான். அச்சுறாமீன் அவ்வலையைத் தன் கொம்பினால் கிழித்து ஓடிவிட்டது. பரதவர் தலைவன் தன் ஆட்களுடன் பெரு முயற்சி செய்தும் அம்மீனைப் பிடிக்க முடியவில்லை. "இனி இதனைப் பிடிப்பவர் யார்?" என்று எண்ணிப் பெரிதும் கவலை கொண்டான். பின்னர், இச்சுறா மீனை இங்கு வந்து பிடிப்பவன் யாரோ அவனே எம் மகளுக்கு மணமகன் ஆவதற்கு உரியவன்" என்று அறிவித்தான்.

சோமசுந்தரக் கடவுள், பரதவர் குலத்தில் தோன்றியுள்ள அம்மையாரை மணம் புரியத் திருவுள்ளம் கொண்டார். எனவே வலைஞரைப் போல உருவம் கொண்டார். பரதவர் தலைவர் முன்வந்து நின்றார். அவரைக் கண்ட பரதவர் தலைவன் "நம்பி! நீ யார்?" என்று வினவினான். உடனே இறைவராகிய வலைஞன், "நான் மதுரை வலைஞர் குலத் தலைவனின் மகன். பெரிய மீன்கள் அனைத்தும் அகப்படுமாறு வலை வீசிப் பிடிப்பதில் வல்லவன்" என்றார். உடனே பரதவர் தலைவன், "ஐயனே! இந்தத் துறையில் ஒரு வலிய சுறாமீன் திரிகின்றது. அதனை நீ குறி வைத்துப் பிடித்தாயாயின் என் மகளை உனக்குத் திருமணம் செய்து தருகின்றேன்" என்று கூறினான். உடனே ஆண் சிங்கம் போன்ற வலைஞராய் வந்த இறைவர் ஒரு படகில் ஏறிக் கடலில் சென்றார். சுறாமீன் அருகில் சென்று நன்றாகக் குறிப்பார்த்துத் தன் உடலைத் திருக நின்று வலையை வீசினார். இறைவன் வீசிய வலையில் சுறாமீன் வலையை நீக்கினார். இறைவன் வீசிய வலையில் சுறாமீன் சிக்கிக் கொண்டது. வீசிய வலையில் சிக்கிய சுறா மீனைக் கடலின் கரையில் கொண்டு வந்து போட்டார்.

இதனைக் கண்டு கடற்கரை தலைவன் மகிழ்ந்தான். வலைஞர் ஆரவாரம் செய்தனர். பெரிதும் மகிழ்ந்து குரவை ஆடினர். தம் மகளை மீனவர் தலைவன், வலைஞராய் வந்த பெருமானுக்குத் திருமணம் செய்து கொடுத்தான். திருமணம் முடிந்தவுடன் வலைஞராகிய சிவபெருமானும் உமையம்மையாரும் விண்ணில் இடபரூபராய் எழுந்தருளினர். கடற்கரையில் சுறாமீனாய்க் கிடந்த நந்தி தேவரும் தம் பழைய வடிவத்தைப் பெற்று இறைவர் திருமுன் வந்து தோன்றினார். அங்குள்ள அனைவரும் இறைவரையும் இறைவியையும் துதித்தனர். சோமசுந்தரக் கடவுள் பரதவர் அரசனை நோக்கி, "அன்பனே! நீ பல நாட்கள் வரை மகப்பேறின்றி வருந்தினது. கண்டிரங்கி நாம் உமாதேவியாரை நினக்கு மகளாக அளித்துப் பின் முறைப்படி வந்து மணந்துக் கொண்டோம்! இனி நீ இவ்வுலகில் குபேரனைப் போல் வாழ்ந்து பின் நம் சிவலோகத்தை அடைவாய்" என்று திருவருள் புரிந்தார். பின்னர் திருநந்தி தேவரோடும், அடியார் கூட்டத்தோடும் உத்திரகோசமங்கை என்னும் தலத்தை அடைந்தருளினார்.

அவ்வுத்தரகோசமங்கையில் எழுந்தருளியிருந்த உமாதேவியார் வணங்கிக் கேட்ப, வேதத்தின் இரகசியப் பொருளை எல்லாம் அம்மையாருக்கு உபதேசித்து அருளினார். அப்போது தம்மிடம் அன்பு கொண்ட அறுபதினாயிரம் சிவனடியார்களுக்கும் சிவயோகிகளுக்கும் வேதப் பொருளை உபதேசித்தருளி வீடுபேற்றை அருளினார். பிறகு அங்கயற் கண்ணம்மையோடும் மதுரையை அடைந்தருளினார்.

58. வாதவூரடிகளுக்கு உபதேசித்த படலம்

வையையாற்றின் கரையில் திருவாதவூர் என்னும் ஒரு திருப்பதி உள்ளது. வளப்பம் மிக்க அவ்வூரில் 'அமாத்தியர்'

மரபினில் அரிய வேத நெறியும் சிவாகமத்துறையும் விளங்க இறைவன் அருளால் ஒருவர் அவதரித்தார். அவருக்கு திரு நாமமாக 'திருவாதவூரார்' என்று இட்டனர். அவர் வேத முறைப்படி சடங்குகள் எல்லாம் நிறையப் பெற்று வளர்ச்சி அடைந்தார். வேதம் முதலிய அறுபத்து நான்கு கலைகளையும் பதினாறு வயதிற்குள் கற்றுணர்ந்தார்.

வாதவூரடிகளின் கல்வித் திறமை முழுதும் அறிந்தவர் போய் சொல்ல அரிமர்த்தன பாண்டியன் அவரைத் தன்பால் வரவழைத்து அவருக்குச் சிறப்பு செய்தான். அமைச்சர் பதவியையும் அளித்தான். சில நாட்களில் தம் திறமையினால் எல்லோரினும் சிறந்துமுதன் மந்திரியானார். அரசன் புகழ் இவரால் மேலோங்கியது. சில நாட்களுக்குப் பின் இம்மை மறுமை இன்பங்களில் வெறுப்புக் கொண்டார். தூய மனம் உடையவராய் வீட்டு நெறியினை ஆராய்வராயினார்.

"ஆணவ மலக் கட்டினைப் போக்கி, உடையானாகிய தன்னையும், உடைமைப் பொருளாகிய என்னையும் அறிவிக்கின்ற ஞானவடிவினனாகிய 'குருநாதன்' வருவது எப்போது என்று எண்ணினார். மெய்ப்பொருள் உணர்ந்த பெரியாரிடம் சென்று ஆராய்ந்தார். சிவபெருமானிடம் கொண்ட பேரன்பு உள்ளே பதிந்து கொள்ள, அமைச்சுரிமையையும் விடாது கைக் கொண்டு அரசு நடத்தி வந்தார்.

அப்படிப்பட்ட நாளில் குதிரைப் பந்தியினைக் காக்கும் காவலர்கள் அரசன் திருமுன் வந்து நின்று வணங்கி, "அரசே! நம்முடைய குதிரைகளில் இறந்தது போக மீதி உள்ளவை நோயுடையனவாகவும், மூப்புடையனவாகவும் உள்ளன. நல்ல குதிரை ஒன்றேனும் இல்லை" என்று கூறினர். அதனைக் கேட்ட பாண்டியன் வாதவூரரை நோக்கி, "நீர் இன்று நமது கருவூலத்தைத் திறந்து பெரும் பொருள் எடுத்துச் சென்று கடல் துறையில் வந்திறங்கும் குதிரைகளில் சிறந்தனவற்றை விலைக்கு வாங்கி வருக" என்றான். உடனே வாதவூரடிகள்

கருவூலத்தைத் திறந்து வேண்டிய பொருளை எடுத்துக் கொண்டு தாழிட்டு இறுக்கி வெளியே வந்து அரசனிடம் விடைபெற்றுக் கொண்டு சென்றார்.

கருவூலத்தில் இருந்து எடுத்த பொருள்களை ஒட்டகத்தின் மேல் ஏற்றுவித்து அனுப்பி வைத்தார். பின்னர் சோமசுந்தரக் கடவுளின் திருக்கோயிலுட் சென்று சித்தி விநாயகரைப் பணிந்தார். பின்னர் சோமசுந்தரக் கடவுளை வணங்கி, "வள்ளலே! அடியேனுக்கு ஒருவரம் அருளல் வேண்டும். இப்பொருள் அனைத்தும் அடியார்களுக்குப் பயன்படவேண்டும்! என்று வேண்டி நின்று துதித்தார். அப்போது அர்ச்சகராகிய ஆதி சைவர் ஒருவர் எதிர் வந்து திருநீறு அளித்தார். இதனை நன்னிமித்தம் என்று கருதி வாங்கி நெற்றியில் தரிசித்து இறைவனிடம் விடைபெற்றுக் கொண்டு மீண்டார்.

வாதவூரடிகள் பொற்சிவிகையின் மேல் ஏறிக் கொண்டு சென்றார். இவ்வாறு திருவாதவூரார் வழிக்கொண்டு செல்லும் முன்னரே சோமசுந்தரக் கடவுள் ஒரு அந்தணர் குலத்துக் குரவராகத் திருமேனி கொண்டு பல மாணவர்களோடு திருப்பெருந்துறையில் வந்து ஒரு குருந்த மரத்தின் அடியில் எழுந்தருளியிருந்தார். வாதவூரடிகள் திருப்பெருந்துறையினை அடைந்தார். அதன் எல்லையை அணுக அணுக மனதில் மகிழ்ச்சி பெருக, கண்களில் ஆனந்தக் கண்ணீர் துளிக்க விரைந்து நடந்தார். தொண்டர் கூட்டத்தின் நடுவில் குருந்த மரத்தின்கீழ் யோகாசனத்தில், 'சிவ ஞானபோதம்' எழுதிய சுவடியினைத் திருக்கரத்தின்கண் தாங்கியிருக்கும் அருள் வடிவான குரவரைக் கண்டார். உடனே அவர் திருமுன் வந்து கைகளைச் சிரமேற் குவித்து உள்ளம் உருகினார். சிவபெருமானுடைய திருவருளாகிய வலையின்கண் அகப்பட்டுக் கொண்டார்.

ஞானாசிரியனாகிய சிவபெருமான் தம் திருவடித் தாமரையைச் சூட்டித் தம் திருக்கரத்தினைச் சிரசின்மேல்

வைத்து சூக்கும பஞ்சாட்சரத்தை உபதேசித்தார். தம் அருள் நோக்கால் வாதவூரரின் மலத்தைக் கெடுத்துத் தன் மயமாக்கிக் கொண்டார். வாதவூரர் பரமகுருவைப் பணிந்து துதித்தார். அப்போது ஞானாசிரியர் வாதவூரடிகளுக்கு 'மாணிக்கவாசகன்' என்னும் திருநாமத்தைக் கொடுத்தருளினார். பின்னர் இறைவன் "இங்கே நீ செய்ய வேண்டிய காரியம் சிறிது உண்டு. ஆதலால் சில காலம் இங்கு இருப்பாயாக" என்று கூறி மறைந்தருளினார். ஞானாசிரியர் மறைந்தது கண்டு வாதவூரடிகள் கீழே விழுந்து புரண்டு அழுதார்.

பின்னர் ஒருவாறு தெளிந்த வாதவூரடிகள் தம்மை எதிர்பார்த்து நின்ற அரசனின் பரிசனங்களிடம் குதிரைக் கூட்டங்கள் ஆடி மாதத்தில் கடற்கரையின்கண் வந்திறங்கும் என்று நீங்கள் முன்னே சென்று பாண்டியர் பெருமானிடம் கூறுங்கள். போய் வாருங்கள்" என்று கூறி அனுப்பி வைத்தார். பரிசனங்கள் பாண்டியனிடம் அவ்வாறே கூற, பாண்டியன் குதிரையின் வரவை ஆவலுடன் எதிர் பார்த்திருந்தான்.

வாதவூரார் குதிரை வாங்குவதற்காகக் கொண்டு வந்த பொருளனைத்தையும், இறைவன் பூசனைக்கும், திருவிழாவுக்கும், திருக்கோயில் திருப்பணிக்கும், அடியார்களுக்கும் செலவிட்டு விட்டு அத்திருப் பெருந்துறையில் தங்கியிருந்தார்.

ஆடிமாதம் வந்தது. பாண்டியன் "இன்னும் குதிரைகள் வரவில்லை. இதற்கு என்ன காரணம்?" என்று ஓலை எழுதி வாதவூரார் திருமுன்னர் அனுப்பினான். பாண்டியனின் திருமுகத்தை வாசித்த வாதவூரர், "இனிச் செய்யும் வழி என்ன?" என்றெண்ணி திருக்கோயிலை அடைந்து, "எனது தலைவனே! நான் இனி எதனைக்கொண்டு பாண்டியனுக்கு குதிரை வாங்கிக் கொடுப்பது?" என்று குறையிரந்து துதித்து வேண்டினார். உடனே சிவபெருமானின் அருளால் அசரீரி ஒன்று வானின்கண், "குதிரைகள் வரும் என்று பாண்டியனுக்கு

ஓலை எழுதி அனுப்புக' என்று எழுந்தது. வாதவூரடிகள் அதனைக் கேட்டு மகிழ்ந்து அவ்வாறே ஓலை எழுதி அனுப்பினார். பாண்டியன் மகிழ்ச்சி அடைந்து குதிரையின் வரவை எதிர்பார்த்திருந்தான்.

அன்று இரவு வாதவூரடிகள் கனவில் இறைவன் தோன்றி, "குதிரைகளை வாங்கிக் கொண்டு வருகிறோம்; இன்று நீ முன்னே செல்க" என்று அருளிச் செய்தார். மாணிக்க வாசகர் துயில்நீங்கி எழுந்து மகிழ்ந்தார். மறுநாள் பாண்டியனின் அரண்மனையை அடைந்தார். பாண்டியனிடம் "அரசே! குதிரைகள் பின்னே வந்துகொண்டிருக்கின்றன, காண்பாய். இதனால் தங்கட்கு 'துரங்கபதி' என்னும் பெயர் கிட்டும்" என்று கூறினார். பாண்டியன் பல பரிசுகளை வாதவூரடிகட்குக் கொடுத்து அவரது மாளிகைக்கு அனுப்பி வைத்தான். அவர் இறைவனை வணங்கி தம் மாளிகையை அடைந்தார்.

அவர் அரண்மனையை அடைந்த போது, அவர் உறவினர்களும் நண்பர்களும் பணியாளர்களும், "நீங்கள் செய்வது ஒன்றும் நன்றாய் இல்லை. குதிரை வராவிடில் அரசனிடம் என்ன சொல்ல வல்லீரோ! உம்முடைய செயலால் எங்கட்கும் பெருந்துன்பம் உண்டாக உள்ளது" என்றனர். உடனே வாதவூரடிகள், "எம்பெருமான் தம் அருட்கோலம் காட்டி என்று என்னை ஆட்கொண்டருளினாரோ அன்றே நாம் சுற்றம் நட்பு அனைத்தையும் துறந்தோம். கோபத்தையும் செருக்கையும் நீக்கி விட்டோம். நமக்கு வாழ்தலும், இறத்தலும் ஒன்றுதான். மன்னவன் தண்டித்தாலும் தண்டிக்கக் கடவன். மகிழவூட்டினும் ஊட்டக் கடவன். நாம் சிவனை மறவோம். பழவினைப் பயன் அனுபவிக்க நேர்ந்தால் அதனைத் தடுக்கவல்லார் யார்?" என்று கூறி அவர்கள் வார்த்தைகளை மறுத்துப் பேசினார். பின்னர் அரண்மனை சென்று தங்கி இருந்தார்.

59. நரி பரியாக்கிய படலம்

வாதவூரடிகளைப் பாண்டியன் அழைத்து, "இன்னும் குதிரைகள் வந்திலபோலும்" என்று வினவினான். அதற்கு வாதவூரடிகள், "மூன்று நாட்களுக்குள் குதிரை வந்து விடும்" என்றார். உடனே பாண்டியன் ஏவலர்கள் மூலம் குதிரைப் பந்திகளைஅமைத்தான். தண்ணீருக்கு ஏற்பாடு செய்தான். நகரை அலங்கரித்தான். மூன்று நாளும் கழிந்தன. குதிரைகள் வந்தபாடில்லை. அதனால் சினம் கொண்ட பாண்டியன் தன்னுடைய தண்டலாளரை அழைத்து, வாதவூரடிகளைச் சுட்டிக் காட்டி, "இக் கள்வனைக் கொண்டு சென்று தண்டித்து நமது பொன் முழுவதையும் வாங்குங்கள். விரைந்து இழுத்துச் செல்லுங்கள்" என்று கட்டளை இட்டான். தண்டலர்கள் வாதவூரடிகளை அழைத்துச் சென்று பலவாறு தண்டித்தனர். இக்கொடுந் தொழிலுக்கு அஞ்சாத அடிகள் இறைவன் திருவடிகளைத் தியானித்துக் கொண்டு துன்பமின்றி இருந்தார்.

மாலை மங்கி இருள் வந்தது. வாதவூரரை தண்டலாளர் விலங்கிட்டுச் சிறையிட்டனர். இறைவனுடைய திருவடியையே தியானித்துக் கொண்டு வாதவூரடிகள் இரவைக் கழித்தார். சூரியன் உதித்தான். வாதவூரடிகள் தன் துன்ப நிலையைக் கூறி இறைவனிடம் முறையிட்டார். இறைவன் உடனே வாதவூரடிகள் துன்பத்தை நீக்கத் திருவுளம் கொண்டார். திருநந்திதேவரை அழைத்து "நீங்கள் அனைவரும் காட்டில் உலாவும் நரிகள் அனைத்தையும் குதிரைகளாக்கி, நீங்கள் குதிரைச் சேவகர்களாகி அவற்றின்மீது ஏறிக்கொண்டு முன்னே செல்லுங்கள். நாமும் குதிரைச் சேவகராக வருகின்றோம்" என்று அருளிச் செய்தார். அவர் ஆணைப்படி சிவகண நாதர் நரிகளை எல்லாம் ஓரிடம் சேர்த்துக் குதிரைகளாகச் செய்து தாம் அக்குதிரைகளை நடத்துகின்ற சேவகராயினர். இறைவரும் அதே போன்று குதிரைச் சேவகராகி வேதமாகிய குதிரையின் மேல் எழுந்தருளி வந்தார்.

மயமாகிய குதிரைகள் மேற்றிசையினை நோக்கி நடந்தன. இறைவர் ஏறிய வேதமாகிய குதிரை இவற்றின் நடுவே சென்றது. குதிரைகளின் செலவால் புழுதிகள் மேலெழுந்து எட்டுத் திசைகளையும் மறைத்தது. அவ்வாறு குதிரை வருவதை அறிந்த சிலர் வாதவூரடிகளிடம் சென்று, "அமைச்சருள் தலைவரே! குதிரைகள் வருகின்றன. இதனை அரசனுக்குச் சொல்வீராக" என்றார்கள். தண்டலர்கள் வாதவூரடிகளை சிறை நீக்கினர்.

உடனே வாதவூரர் பாண்டியனை அடைந்து, "அரசே! குதிரைகள் வருகின்றன" என்றார். உடனே அரிமர்த்தன பாண்டியன் மகிழ்ந்து வாதவூரடிகட்குப் பரிசுகள் நல்கிக் குதிரைகளை எதிர் கொள்வானாய்த் தலைவாயிலின் ஒரு மாடத்தில் வந்து நின்றான். ஆயினும் குதிரைகள் வர, சிறிது காலம் தாழ்ந்தது. உடனே 'இது பொய்' என்று கருதி மன்னன் மீண்டும் வாதவூரடிகளைத் தண்டலாளரைக் கொண்டு தண்டித்தான். அப்போது மிகுந்த ஓசையுடன் குதிரைகள் விரைந்து வந்தன. உடனே பாண்டியன் மகிழ்ந்து வாதவூரடிகளை அழைத்து அவரோடு மகிழ்ந்து அளவளாவி இருந்தான்.

குதிரைகள் வந்து சேர்ந்தன. பாண்டியன் அடிகளை நோக்கி, "இவருள் தலைவர் யாவர்?" என்று வினவினான். அடிகள், "ஐயனே! நானும் அதனை அறியேன்" என்றார். அப்போது குதிரைச் சேவகராய் வந்த இறைவர் பாண்டியன் முன் சென்று, "அரசே! எங்கள் குதிரை ஏற்றத்தினைக் காண்பாயாக" என்று கூறி குதிரையை நான்கு கதிகளிலும் செலுத்திக் காட்டினார். பின்னர் அரசன், "உங்கள் தலைவர் யார்?" என்று கேட்டான். உடனே குதிரை வீரர், இறைவராகிய குதிரை வீரரை சுட்டிக்காட்டி, "இவர்" என்றனர். அவ்ரைக் கண்டவுடன் பாண்டியன் தன்னை அறியாமல் எழுந்து வணங்கி நின்றான்.

பின்னர் குதிரை வீரர் தலைவர் குதிரையின் இலக்கணம் முழுவதையும் கூறினார். தம் குதிரைகளை இறைவரும் கணத்

தலைவரும் அரசன் முன் நடத்திக் காட்டினர். பின்னர் இறைவர், "மன்னர் வாழ்க" என்று வாழ்த்தி, தாம் ஏறி வந்த வேதமாகிய குதிரையைத் தவிர மற்றை பாண்டியனின் சேவகர்கள் அக் குதிரைகளைப் பந்தியில் கொண்டு போய் கட்டினார்கள். குதிரை வீரராக வந்த இறைவருக்குப் பாண்டியன் வெண்பட்டாடை ஒன்றினைப் பரிசாகக் கொடுத்தான். அதைப் பெற்ற இறைவர் தம் திருமுடியில் அதனைச் சுற்றிக் கொண்டார். பாண்டியன் மற்றை குதிரை வீரருக்கும் வெவ்வேறு நிறமுடைய பட்டாடைகளைக் கொடுத்தான். பின்னர் தம் வேதமாகிய குதிரையோடும், கணநாதரோடும் இறைவன் மறைந்தருளினார். அரசன் ஆணையால் வாதவூரடிகள் அழைக்கப்பட்டார். பின் திருவாதவூரடிகளுக்கு அரசன் பல பரிசுகளை நல்கினான். அரசனும் அமைச்சர்களும் மற்றவர்களும் தத்தம் இருப்பிடம் சார்ந்தனர்.

60 பரி நரியாக்கி வையை அழைத்த படலம்

பல இசைக்கருவிகள் முழங்க வாதவூரடிகள் தம் மாளிகை அடைந்தார். சுற்றத்தார்க்கு வேண்டிய பரிசுகள் கொடுத்தார். தன்னுடைய விருப்பத்தை நிறைவேற்றிய இறைவரை தம் மனதார எண்ணித் துதித்தார். சூரியன் மறைந்து சந்திரன் தோன்றிற்று. நடுஇரவில் சிவபெருமானின் திருவருளால் குதிரைகளாக மாற்றப்பட்ட நரிகள் யாவும் தன் முன்னை வடிவத்திற்கே மாறின. உடனே அவைகள், "நாம் குதிரைகளாக மாறிப் பெருத்த துன்பம் அடைந்துவிட்டோம். நம் உடம்பில் சங்கிலித் தழும்பும் சவுக்கடித் தழும்பும் நீங்காமல் இடம் பெற்றுவிட்டது. விடியுமுன் இங்கிருந்து ஓடி-விடுவதே செய்யத்தக்க காரியம்!" என்று தமக்குள் ஒன்றுக் கொன்று பேசிக் கொண்டன.

அவ்வாறே நரிக்கூட்டங்கள் சங்கிலித் தொடக்கை அறுத்துக்கொண்டு, தம்மைக் கயிற்றுடன் கட்டிய முளையைப் பிடுங்கிக் கொண்டு ஊளையிட்ட வண்ணம் ஓடத் தொடங்கின. அரசனின் பழைய குதிரைகளையெல்லாம் தம் பற்களாலே தாவிக் கடித்தன. குருதியைக் குடித்தன. குதிரைப் பந்தி காக்கும் வீரர்கள் உறக்கம் நீங்கி எழுந்து இக்காட்சியினைக் கண்டனர். அப்போது நரிகளெல்லாம் ஊளையிட்டுக் கொண்டு மதிலைத் தாண்டி ஓடின. பல விதமான ஒலிகள் நிறைந்த மதுரையில் நரிகளின் ஊளை ஒலி மிகுந்திருந்தது. நகர மக்களுக்குப் பலவிதமான துன்பத்தை உண்டாக்கிவிட்டு காட்டிற்கு ஓடிவிட்டன.

பொழுது புலர்ந்தது. காவலர்கள் அரசனிடம் சென்று வணங்கி, "அரசே! நள்ளிரவில் குதிரைகள் எல்லாம் நரிகளாக மாறி நகர மக்களுக்குத் துன்பம் செய்துவிட்டு காட்டிற்கு ஓடிப் போயின" என்றார்கள். இதனைக் கேட்டு மன்னன் பெரிதும் சினமடைந்தான். உடனே தன் மற்ற மந்திரிகளை நோக்கி அரசன், "இக்கள்வன் செய்த செயலைக் கண்டீர்களா? நம் பொருள் முழுவதும் கவர்ந்து கொண்டு நரிகளைக் குதிரைகளாக்கி நம்மிடம் வரவிடுத்தான். இம்மாயம் செய்த வாதவூரனை நாம் என்ன செய்வது?" என்று வினவினான். மந்திரிகள் ஒன்றும் தோன்றாமல், செய்ந்நன்றி மறந்த தீயோனாகிய வாதவூரடிகள் பொருட்டு நாம் இனி யாது சொல்லுவோம்?" என்று கூறித் தலை கவிழ்ந்து இருந்தனர். இரவு நடந்ததை ஒன்றும் அறியாத வாதவூரடிகள் மகிழ்வுடன் மன்னன் இருப்பிடம் அடைந்தார். அரசன் வாதவூரடிகளை நோக்கி, "அளவிறந்த பொருள் கொண்டு சென்று நல்ல குதிரைகளைக் கொண்டு வந்து அழகாகக் கொடுத்தாயல்லவா? அதனால் அரச காரியம் முடித்துப் புகழை நிலை நிறுத்த வல்லார் உன்னைப் போல் யாவர் உள்ளார்?" என்றான்.

அதைக்கேட்டு மாணிக்கவாசகர் திடுக்கிட்டார். உடனே, "அக்குதிரைகட்கு என்ன குற்றம்?" என்றார். உடனே அரசன்,

குற்றமொன்றுமில்லை. நள்ளிரவில் அக்குதிரைகள் நரிகளாக மாறிப் பழைய குதிரைகளைத் தின்று விட்டு நகர மக்களையும் துன்பப்படுத்திவிட்டுக் காட்டிற்கு ஓடிவிட்டன" என்றான். பின்னர் தண்டலாளரை நோக்கி, "இவ்வாதவூரனை இழுத்துச் சென்று ஒறுத்து நம் பொருள் முழுவதையும் வாங்குங்கள்" என்றான். அவ்வாறே வாதவூரடிகளை நல்ல உச்சிப் பொழுதிலே வெய்யிலில் நிற்க வைத்துக் கல்லேற்றித் துன்பப்படுத்தினர். வாதவூரடிகள் துன்பம் பொறுக்கலாற்றாது இறைவனைத் துதிக்கலானார்.

வாதவூரடிகட்குத் திருவருள் புரிய எண்ணிய இறைவர் வையை நதியினை நோக்கி, "இவ்வுலக மக்கள் வியப்படையும்படி பெருகி வருவாய்" என்று அருளிச் செய்தார். வையை கடும் பெருக்கெடுத்து உடனே பெருகி வந்தது. வையைநதி பெருக்கெடுத்து வந்தது கண்டு மக்கள் அஞ்சினர். பலர் பலவாறு பேசினர். நகரமெங்கும் இதே பேச்சு. இந்த நேரத்தில் வையை பெருக்கெடுத்து வருவதால் தம் வீட்டில் உள்ள பொருளை வெள்ளத்தில் இருந்து பாதுகாக்கக் கருதி வாதவூரரைத் துன்புறுத்தும் தண்டலாளர் அவ்விடம் விட்டுச் சென்றனர். அவர்கள் சென்றவுடன் வாதவூரடிகள் சோமசுந்தரக் கடவுளின் ஆலயத்திற்குள் சென்று இறைவரை இசைத் தமிழால் துதித்து வணங்கி, சித்திரம் போல் அசைவற்று இருந்தார்.

61. மண் சுமந்த படலம்

மதுரை நகரம் வையையின் வெள்ளப் பெருக்கில் அகப்பட்டு வருதலைக் கண்டு பாண்டியன் தன் அமைச்சர்களை அழைத்து, "நீங்கள் வையை நதிக்கரையினைக் கட்டிப் பெருகி வரும் வெள்ளத்தின் வேகத்தைத் தணித்து வாருங்கள்" என்று பணித்தான். உடனே அமைச்சர்கள் அரசனைத் தொழுது சென்றனர். வெவ்வேறு வகைப்பட்ட

பல குடிகளையும் குறிப்பிட்டுப் பெயர்களை எழுதி எல்லையிட்டு அளந்து கோடு கிழித்து விட்டு நகர் முழுவதும், "அவரவர் பங்கை அடையுங்கள்" என்று பறையறைவித்து அழைத்தனர்.

உடனே அவ்வக் குடிகள் தம் கூலியாளை அனுப்பி தத்தமக்கு அளந்துவிட்ட பங்கை அடைக்க ஏற்பாடு செய்தனர். அவர்கள் மண் வெட்டி, கூடை, பசுந்தழை, வைக்கோல் போன்றவற்றைக் கொண்டு சென்று கரையை அடைக்கத் தொடங்கினர். அப்போது அம் மதுரை மாநகரின் தென் கிழ்த்திசையில் வளைந்த உடலையுடைய நூறு ஆண்டகவை உடைய நரை மூதாட்டி ஒருத்தி இருந்தாள். அவள் 'வந்தி' என்னும் பெயரினள். தாயில்லாதவர்களுக்கு அன்னை போன்றவள். சுவை தரும் பிட்டு விற்று வாழ்க்கை நடத்தி வந்தாள். சோமசுந்தரக் கடவுளிடம் மிகுந்த அன்பினள்.

இத்தகைய வந்தி தனக்கு அளந்து விடப்பட்ட பங்கினை அடைப்பதற்கு கூலியாள் கிடைக்காமல் மிகவும் வருந்தினாள். "இது என்ன? அரசன் தண்டிப்பானாயின் நான் என்ன செய்வேன்" என்று உள்ளம் தடுமாறினாள். மதுரை நாயகனை இறைஞ்சி வேண்டினாள். கண்ணீர் சொரிந்து நின்றாள். உடனே இறைவன் வந்தியின் துன்பம் நீக்கக் கருதி கூலியாள் போல் தோற்றத்துடன் சும்மாட்டின் மேல் கூடையுடனும், தோளின் மேல் மண் வெட்டியுடனும் வந்தார். வந்தியின் தெருவில் வந்து, "கூலி கொடுத்து என் வேலை கொள்வாருண்டோ?" என வேத மொழி போல் கூறிக் கொண்டு வந்தியின் அருகில் வந்தார். உடனே வந்தி அக்கூலியாளை அழைத்து "எனக்கு அளந்து விடப்பட்ட கரையை அடைத்துத் தருகிறாயா?" என்று வினவினாள்.

அதைக் கேட்ட இறைவர், "அடைத்துத் தருகிறேன். எனக்குக் கொடுக்கும் கூலி யாது?" என்றார். உடனே வந்தி "நான் விற்கும் பிட்டையே உனக்குக் கூலியாகத் தருகிறேன்" என்றார். சோமசுந்தரக் கடவுள் அதற்கு உடன்பட்டார். பின்,

"அன்னையே! பெரும் பசியால் நான் தற்போது மிகவும் வருந்துகின்றேன். அதனால் உதிர்ந்த பிட்டையெல்லாம் தருவாயாக. அதனைத் தின்று இளைப்பாறிவிட்டுப் பின்னர் கரையைக் கட்டுகிறேன்" என்றார். உடனே வந்தியும் பிட்டினை எடுத்து, "இதனை உண்பாயாக" என்று அன்போடு கொடுத்தாள். "இது நன்றாய் இருக்கிறது" என்று கூறி இறைவர் அன்புடன் உண்டார். பின்னர் கரையைக் கட்டப் புறப்பட்டுச் சென்றார். வையைக் கரையினை அடைந்து "நான் வந்திக்குக் கூலியாள்" என்று தம்மைக் கணக்கில் எழுதுவித்துக் கொண்டார். கரையினை அடைக்கத் தொடங்கினார்.

மண்ணினை வெட்டுவார். அதனை முடிமேல் வைப்பார். அதிக பாரம் என்று கீழே கொட்டுவார். குறைவாக எடுத்துச் செல்வார். சும்மாடு விழத் தட்டுவார். பின்னர் விரைந்து சென்று கரையில் கொட்டுவார். களைப்பு ஏற்பட ஒரு மர நிழலை அடைவார். இடையில் வந்து மீண்டும் பிட்டை வாங்கி உண்ணுவார். பின்னர், கரையை அடைக்க ஓடுவார். வெள்ளத்தில் மூழ்குவார். நீந்திச் சென்று தூரத்தில் முளைப்பார். மற்றவர் வேலையும் கெடும்படியான காரியங்கள் பல செய்வார். இறைவர் இவ்வாறு பல திருவிளையாடல்களைப் புரிந்த வண்ணமிருந்தார்.

அப்போது அடைபட்ட கரைகளையெல்லாம் சரி பார்த்து வரும் மன்னனின் ஏவலர்கள் வந்தியின் பங்கு மட்டும் அடைபடாதிருப்பதைக் கண்டனர். "வந்திக்குக் கூலி ஆளாய் வந்தவன் யார்?" என்று வினவினர். "ஏடா தம்பி! மற்றைய பங்கெல்லாம் அடைபட்டன. நீ இன்னமும் இந்தப் பங்கினை மட்டும் அடைக்காமல் சும்மா இருக்கின்றனையே! அதற்குக் காரணம் யாது?" என்று கேட்டனர். இறைவர் பேசாமல் இருந்தார். உடனே அரனுக்கு இச் செய்தியினை ஏவலர் கூறினர்.

உடனே பாண்டியன் தன் அமைச்சர்களோடு வையை ஆற்றங்கரையை அடைந்தான். அடைபட்ட கரைகளை எல்லாம் கண்டு மகிழ்ந்தான். வந்தியின் கரை மட்டும் அடைபடாமல் அடுத்த கரையையும் இடித்துக் கொண்டு வெள்ளம் செல்வதைக் கண்டு மிகவும் கோபம் கொண்டான். உடனே "இக் கரையினை அடைப்பவன் எங்குற்றான்?" என்று கேட்டான். அரசனின் ஏவலர், கூலியாளாக வந்த இறைவரை கையைத் தொட்டு இழுத்து வந்து, "இவன் தான்" என்று காட்டி நின்றனர். உடனே பாண்டியன் கையில் பொற்பிரம்பு வாங்கி, இறைவனது முதுகில் வீசி அடித்தான். உடனே சோமசுந்தரக் கடவுள் மண்ணை உடைப்பில் கொட்டிவிட்டு மறைந்தருளினார். கரை அடைந்தது.

அரசன் இறைவனை அடித்த தழும்பு அவன் உடம்பிலும் பட்டது. அவன் மனைவி, பிள்ளைகள், மந்திரிகள், வீரர்கள், குடிமக்கள், உலக உயிர்கள் அனைத்தின் மேலும் பட்டது. தேவர்கள் மேலும் பட்டது. உலக மக்கள் திடுக்கிட்டனர். அப்போது சோமசுந்தரக் கடவுளின் திருவருள் ஆணையாலே வந்தியைச் சிவகணத்தவர் சிவலோகத்திற்கு அழைத்துச் சென்றனர்.

ஒவ்வொருவர் முதுகிலும் அவ்வடி பட்டதால் ஏற்பட்ட துடிப்பினை அறிந்த அரிமருத்தன பாண்டியன் ஐயம் கொண்டான். வந்தவர் இறைவரே என்று உணர்ந்தான். அப்போது அசரீரி மொழியாக, "பாண்டியனே! தூய நெறியில் தேடப்பட்ட உம்பொருள் வாதவூரன் மூலமாக நம் அடியார்கட்குச் செலவாயின. அதனால் நாம் நரிகளையெல்லாம் குதிரைகளாக்கித் தந்தோம். அவை மீண்டும் நரிகளாயின. மீண்டும் வாதவூரனைத் தண்டித்தாய். அதனைப் பொறாமல் வையை பெருகுமாறு செய்தோம். வந்தியின் கூலி ஆளாய் வந்து அவள் கையில் பிட்டு வாங்கி உண்டு உம்மிடம் பிரம்படி பட்டோம். எனவே வாதவூரன்

விருப்பப்படி நடக்கவித்து, நீ நீதியுடன் குறைவுபடாத செல்வத்துடன் வாழ்வாயாக" என்று கூறியருளினார்.

உடனே பாண்டியன் இறைவன் திருக்கோயிலை அடைந்து வாதவூரடிகளை வணங்கினான். "அடியேன் பிழைகளைப் பொறுக்க வேண்டும்" என்று வேண்டினான். உடனே வாதவூரடிகள் "அரசே! எனக்கு மனத்தூய்மை உண்டாகிச் சிவனிடத்திலே அன்பு விளைந்தது. அவர் பொன்னம்பலம் என்னும் தில்லைப்பதியின்கண் வரும்படி கட்டளை இட்டருளினார். ஆதலால் அடியேன் அங்குப் போக உடன்படுவீராக" என்று வேண்டினார். அரசன் உடன்படவே வாதவூரடிகள் அங்கிருந்து புறப்பட்டுச் சென்றார். பின்னர் பாண்டியன் திருக்கோயிலில் இறைவனை விழுந்து வணங்கி நின்று துதித்துப் பின் உயிர்களிடத்தில் அன்பு பெருக ஆட்சி செய்து வந்தான்.

பின்னர், பாண்டியன் 'சகநாதன்' என்னும் புதல்வனைப் பெற்றான். அவனுக்கு முடிசூட்டி விட்டுச் சோமசுந்தரக் கடவுளின் திருவடி நிழலை அடைந்தான். வாதவூரடிகள் தில்லையை அடைந்தார். திருவாசகம் பாடி இன்பக் கூத்தாடி இறைவனை வணங்கினார். தில்லை வாழ் அந்தணர் இறைவன் ஆணையால் "மாணிக்க வாசகா! வருக!" என்றழைக்க வந்து, புத்தர்களையெல்லாம் வெற்றி கொண்டார். ஒரு ஊமைப் பெண்ணைப் பேச வைத்தார். அப் பெண்ணின் தந்தையாகிய சோழமன்னர் மகிழ்ந்து தில்லையம்பலவாணரை மகிழ்ந்து துதித்துச் சென்றார். புத்தர் தண்டிக்கப்பட்டனர். பின்னர் பல நாள் தில்லையில் திருவாசகம் பாடி இனிது வீற்றிருந்து இறைவன் வேண்ட கோவை ஒன்றையும் பாடினார்! பின்னர் அம்பலவாணனின் திருவடி நிழலை அடைந்து சிவானந்த ஒளியுடன் கலந்தார்.

62. பாண்டியன் சுரந்தீர்த்த படலம்

சகநாத பாண்டியனுக்குப் பிறகு பத்தாம்வழித் தோன்றலாகக் கூன் பாண்டியன் நாட்டை ஆண்டு வந்தான். அவன் புலமை மிக்கவன். சேர, சோழரை வென்று நாட்டை ஆண்டு வந்தான். சோழ மன்னனின் மகளான மங்கையற் கரசியை மணந்தான். அவனுக்கு குணங்களில் மேம்பட்ட குலச்சிறையார் என்பவர் மந்திரியாக இருந்தார். மன்னன் சமணர் வலையிற் சிக்கிச் சமணனாகி, வாழ்ந்தான். மன்னனை அடியொற்றிப் பாண்டிய நாட்டு மக்களும் சமணராகி வாழ்ந்தனர். சமண சமயம் எங்கும் நிலவியது. அதனால் மங்கையற்கரசியாரும், குலச்சிறையாரும் மனம் வருந்திச் சிவ பெருமான் திருவடியில் சிந்தை செலுத்தினர். சைவம் தழைக்க வேண்டி இறைவனைத் துதித்தனர்.

அப்போது அந்தணன் ஒருவன் சிதம்பரத்தில் இருந்து சோமசுந்தரக் கடவுளை வழிபட மதுரை வந்தான். அவன் "சோழ நாட்டில் திருஞானசம்பந்தர் என்னும் திருப்பெயர் பூண்ட ஒருவர் உள்ளார். அவர் மறைகளை எல்லாம் அரிய தமிழ்ப் பாடலாகப்பாட அந்நாட்டில் சிவமணம் கமழ்கின்றது" என்றான். அத்துடன், "பல திருத்தலங்களை தரிசித்துக் கொண்டு உங்கள் பாண்டிய நாட்டிற்கும் சோம சுந்தரக் கடவுளைக் கண்டு வணங்க வருவார்" என்றும் கூறினான்.

அதனைக் கேட்ட மங்கையற்கரசியாரும், குலச் சிறையாரும் ஓலையொன்று வரைந்து கொடுத்து அவரைப் பாண்டிய நாட்டிற்கு வரவழைத்தனர். ஞானசம்பந்தர் இறைவனின் திருக்கோயிலுட் புகுந்தார். இறைதனை வணங்கி, "கூற்றுவனை உதைத்த கோவே! அடியேன் சமணர்களோடு வாது செய்யும் வன்மை பெறத் திருவுளம் செய்தி" என்று வேண்டி இறைவன் திருவருளைப் பெற்று வெளியே வந்தார். வாகீச முனிவரின் திருமடத்தில் தங்கி இருந்தார்.

திருஞான சம்பந்தரின் வரவையறிந்து எண்ணாயிரம் சமணரும் மதுரைக்கு வந்தனர். அவர்கள் அபிசார வேள்வி இயற்றி, தீக்கடவுளை அழைத்து, "எமது பகைவரின் இருப்பிடத்தை அமுது செய்து வருவாயாக" என்று பணித்தனர். தீக்கடவுள் பயந்து நின்றார். . எனவே சமணர்கள் தாமே தீயை எடுத்துச் சென்று ஞான சம்பந்தர் தங்கி இருந்த திருமடத்தில் இட்டார்கள். ஞானசம்பந்தர் அத்தீயினைக் கண்டு, "சமணர்கள் பொய்மொழி கொண்டு, பழைய முறைகளைக் கைவிட்ட பாண்டியனைச் சென்று பற்றுக" என்றார் உடனே அத்தீ பாண்டியனை அடைந்து வெப்பு நோயாகப் பற்றியது. பாண்டியன் பெரிதும் துன்புற்றான்.

அதனைக் கண்ட மங்கையற்கரசியாரும், குலச்சிறையாரும் வேந்தனை நோக்கி, "இக் கொடிய சுரநோய் சீகாழிப் பிள்ளையால் தீர்க்கப்படுமே அல்லாது வேறு ஒருவராலும் தீர்க்கப்படாது" என்று கூறினர். அதற்குச் சமணர் சார்பினை விட்டு நீங்காத பாண்டியன், "இப்போது நீங்கள் சொல்லும் சைவத் திருநீறிட்டு என்னைப் பார்ப்பது தகுமோ?" என்றான். அவர்கள் உடனே வணங்கி, "ஐயனே! எப்படியாவது தங்கள் நோய் தீரவேண்டும்" என்றனர். பாண்டியன், "உடனே அவரை இங்கே அழையுங்கள்" என்றான்.

உடனே குலச்சிறையார் சென்று ஞானசம்பந்தரை வணங்கி, "இன்று உங்கள் திருவருளினால் சமணர்கள் அழியவும், பாண்டிய நாடு உய்வு பெறவும் பாண்டியனின் வெப்பு நோயைத் தீர்த்தருள வேண்டும்" என்று கூறி அழைத்து வந்தார். பாண்டியனின் மாளிகையை அடைந்த ஞானசம்பந்தர். பாண்டியன் அருகில் உள்ள ஒரு தவிசில் எழுந்தருளினார். அவர் வருகையால் சிறிது முகமலர்ச்சி பெற்ற பாண்டியன், "பாவியேனுடைய பிணியைத் தீர்த்து அடியேனை அடிமை கொண்டருள்க" என்றான்

அப்போது சமணர்கள் உள்ளம் புழுங்க, "பாண்டியனே! உம்முடைய வலப்புறத்து நோயை இவரும், இடப்புறத்து நோயை நாங்களும் தீர்க்கும்படி கட்டளை இட்டருள்க" என்றனர். அரசன் 'அங்ஙனமே செய்க' என்று உடன்பட்டான். உடனே சமணர்கள் அருக தேவனை நினைத்துக் கையில் உள்ள மயிர்ப்பீலியினால் தடவினர். கமண்டல நீரை எடுத்துத் தெளித்தனர். அவற்றால் அந்நோய் நெய் இட்ட நெருப்புப் போல் முன்னிலும் மிகுந்தது. சமணர்கள் ஒன்றும் செய்யத் தோன்றாது வாளா இருந்தனர்.

காழிப்பிள்ளையார் பாண்டியனின் வெப்பு நோயைத் தணிக்கும் பொருட்டுத் திருநீற்றுப் பையிலுள்ள விபூதியினைக் கையில் எடுத்தார். அதுகண்டு சமணர்கள் "இது மாய நீறு" என்று கூறித் தடுத்தனர். பின்னர் பிள்ளையார் அதனை விடுத்து "கூடற்பெருமானின் திருமடைப் பள்ளியில் உள்ள சாம்பலை அள்ளிக் கொண்டு வாருங்கள்" என்று கூறினார். பாண்டியனின் பணியாளர்கள் அவ்வாறே அள்ளி வந்தனர். உடனே பிள்ளையார் திருநீற்றுத் திருப்பதிகம் ஓதிப் பாண்டியனின் உடம்பின் வலப் புறத்தில் இட்டுத் தடவினார். உடனே கொடிய வெப்பு நோய் நீங்கிக் குளிர்ச்சி அடைந்தது.

உடனே பாண்டியர் கோன் ஞானசம்பந்தரை நோக்கி, "ஐயனே! இவ்வெப்பு நோய் பொறுத்தற்கரியது; அடியேனுடைய இடப்புறத்து நோயையும் நீக்கியருள வேண்டுகிறேன்" என்றான். ஆளுடைய பிள்ளையார் இடப்புறமும் தடவியவுடன் வெப்பு நோயுடன் உடற்கூனும் நீங்கியது. பாண்டியன் சூரியன் போன்று அழகுடன் விளங்கினான். எனவே அன்று முதல் அவன் 'சௌந்தர பாண்டியன்' என்றழைக்கப்பட்டான். பின்னர் சௌந்தர பாண்டியன் ஞானசம்பந்தர் பாதங்களில் விழுந்து வணங்கித் திருவைந்தெழுத்தை உச்சரித்துச் சைவ நெறியைக் கைக் கொண்டான்.

63. சமணரைக் கழுவேற்றிய படலம்

சௌந்தர பாண்டியனுடைய மனைவியான மங்கையற்கரசியாரும். மந்திரியாகிய குலச்சிறையாரும் ஞானசம்பந்தரின் திருவடிகளில் விழுந்து வணங்கி "எங்கள் மன்னனுடைய வெப்பு நோயையும், உடல்வளைவையும், பாசத்தையும் போக்கினீர்கள். இந்நாட்டில் உள்ள சமணநெறியை நீக்கிச் சைவ நெறி தழைக்கச் செய்யவேண்டும்" என்று வேண்டினர். உடனே சம்பந்தர் அவரிருவரோடும் புறப்பட்டுச் சோமசுந்தரப் பெருமான் திருக்கோயிலை அடைந்து, சமணர்களைத் தண்டிக்க திருவுளம் புரிய வேண்டும்" என்று வேண்டினர். உடனே வானில் ஓரசரீரீ தோன்றி, "அன்பர்களே! உங்கள் கருத்து எனக்கு உடன்பாடு. சமணருடன் வாதம் புரியுங்கள். நீங்கள் வென்று அவர்கள் தோல்வியுற்றுக் கழுவில் ஏறி இறந்து படுவர்" என்று கூறியது. பின்னர் அவர்கள் இறைவனைத் துதித்துத் தம் இருப்பிடம் சார்ந்தனர்.

மறுநாள் மூவரும் அரசனிடம் சென்று அவன் உடன்பாடு பெற்றனர். பின்னர் சமணர்களுடன் வாது புரிய காத்திருந்தார். அந்த நேரத்தில் சமணர்களின் மனைவியர் தம் தம் கணவரை, "இது உங்களுக்கு வெற்றி பெறும் காலம் அன்று. நாங்கள் தீ நிமித்தமுள்ள கனவுகளைக் கண்டுள்ளோம். அதனால் வாதம் செய்யச் செல்ல வேண்டாம்" என்று கூறித் தடுத்தனர். ஆயினும் சமணர் தம் மனைவியர் சொல்லைக் கேளாது சென்றனர். அவர்கள் பாண்டியன் அவையை அடைந்து வாதிடத் தொடங்கினர்.

சமணர்கள் பிள்ளையாரை நோக்கி, "சிறுவனே! எங்கள் மந்திரத்தை ஒரு பனையேட்டில் எழுதுகின்றோம். உங்கள் மந்திரத்தை ஒரு பனையேட்டில் எழுது. இரண்டு ஏடுகளையும் தீயிலிடுவோம். வெந்த ஏடு தோல்வியடைந்தது. வேகாத ஏடு

வெற்றி பெற்றது. ஆயின் இதனை நகரின் வெளியில் நின்று வாது செய்வோம்" என்றனர். காழிப் பிள்ளையாரும் அரசனும் அதற்கு இணங்கினர். அனைவரும் நகரின் புறத்தே எய்தினர். முன்னர் பேசிய வண்ணமே எழுதித் தீயிட்டனர். சமணர்கள் ஓலை கரிந்து சாம்பலாகி அழிந்தது. பின்னர் சமணர்கள் மீண்டும் காழிப்பிள்ளையாரை வாதுக்கு அழைத்தனர். புனல் வாதம் செய்ய இருவரும் தத்தம் ஏடுகளில் மந்திரங்களை எழுதி வையை ஆற்றில் விட்டனர். பிள்ளையார் விட்ட ஏடு ஆற்றை எதிர்த்து வந்தது. சமணர்கள் ஏடோ நீரில் அடித்துச் சென்றது. சமணர்கள் உடல் நடுங்கினர். தேவர்கள் பூமழை பொழிந்தனர். அடியார் ஆனந்தக் கடலில் அழுந்தினர்.

சிவபெருமானே எல்லா உயிர்களுக்கும் இன்பத்தையும் வீடு பேற்றையும் அருளும் முழுமுதற் கடவுள் என்று பாண்டியனும் மற்றையோரும் அறிந்தனர். அனைவரும் காழிப்பிள்ளையாரை வணங்கித் துதித்தனர். அப்போது சமணர்கள் பிள்ளையாரை அணுகி, "இன்று நாங்கள் உமக்குத் தோற்றோம். இவ்விடத்தில் எம்மை நீரே வென்றீர்" என்று உடன்பட்டுக் கூறினர். உடனே காழிப்பிள்ளையார் "எம்முடைய சிவபெருமான் உயிர்களுக்கெல்லாம் தாய் போன்றவன். அவனுக்கு அடியாராகி உய்யுங்கள். ஏன் வீணாய் இறக்கின்றீர்?" என்று கூறியருளினார். உடனே சமணர்கள், "ஏ சிறுவனே! எங்கட்கு அடாத வார்த்தை கூறியது என்ன?" என்று கூறித் தாமே கழுஏறத் தொடங்கினர். சிலர் சைவ வேடம் பூண்டனர். கழுவேறி உயிர் இறந்தவர்களின் உடல்களைக் காக்கைகளும், பருந்துகளும், நாய்களும் நரிகளும் தின்றன. ஆற்றினை எதிர்த்துச் சென்ற ஏடு ஒரு காதம் சென்ற பின் மறைந்தது. முதியவராய் வேடம் தாங்கி இறைவர் வந்து அந்த ஏட்டினைப் பிள்ளையாரிடம் தந்தருளினார்.

பாண்டியன், திருவேடகம் என்ற பதியை உண்டாக்கி காழிப்பிள்ளையாருடன் ஒராண்டு தங்கி இருந்தான்.

பாண்டியநாடு முழுவதும் சுற்றிப் பதிகங்களைப் பாடிய காழிப்பிள்ளையார் பின்னர் சோழ நாட்டில் புகுந்தருளினார். உலகம் முழுவதும் சைவநெறி தழைத்தது.

64. வன்னியும் கிணறும் இலிங்கமும் அழைத்த படலம்

கடற்கரையின் அருகில் உள்ள பட்டினம் ஒன்றில் வணிகர் குலத்தைச் சேர்ந்த ஒருவன் வசித்து வந்தான். அவன் மிக்க செல்வமுடையவன். நீண்ட நாள் மகப்பேறின்றி வருந்தி ஒரு பெண் மகவைப் பெற்றான். அவனுக்கு ஒரு மருகன் மதுரையில் இருந்தான். அவன் முன்பே திருமணம் புரிந்து கொண்டவன். ஆயினும், "அவனுக்கே நான் பெற்ற புதல்வியைத் திருமணம் செய்து கொடுப்பேன்" என்று தன் சுற்றத்தார் அனைவரும் அறியச் சொல்லிக் கொண்டிருந்தான். சில நாட்கள் சென்றன. ஊழின் காரணமாக அவ்வணிகன் இறந்தான். அவன் மனைவியும் அவனுடன் இறந்தாள். சுற்றத்தினர் அனைவரும் ஈமக் கடன்களை முடிந்து மதுரையில் இருக்கும் வணிகனின் மருகனுக்கு ஓலை விடுத்துச் செய்தி அறிவித்தனர். அதை அறிந்து மருகன் அழுதான். புரண்டான். தன் உறவினர் சிலருடன் பட்டினத்தை அடைந்தான்.

சில நாட்கள் சென்றபின் அவன், "என் மாமன் மகளை மதுரைக்கு அழைத்துச் சென்று சுற்றத்தினர் முன்னிலையில் அவளை மணந்து கொள்வேன்" என்று கூறி மாமன் தேடிய பொருள்களைக் கைக்கொண்டு மாமன் மகளையும் அழைத்துக் கொண்டு மதுரையை நோக்கிச் செல்லத் தொடங்கினான். திருப்புறம்பயம் என்னும் தலத்தை வணிகனின் மருகன் அடைந்தான். அந்நகரில் அங்கு தங்கிப் போக எண்ணினான். திருக்கோயிலுக்கு அருகில் உள்ள ஒரு கிணற்றில் நீராடினான். வன்னி மரத்தடியில் உணவு சமைத்து

உண்டான். திருக்கோயிலின் அருகே ஒரு படிமீது தலைவைத்து உறங்கினான்.

அப்போது ஒரு கொடிய விஷப்பாம்பு அவனைத் தீண்டியது. வணிகன் மருகன் இறந்தான். அவன் ஏவலர்கள் கதறி அழுதனர். அவனுடன் வந்த மாமன் மகள் செய்வதறியாது திகைத்தாள். சோகமே வடிவமாகி கலங்கி நின்றாள். வாய்விட்டு அழத் தொடங்கினாள். அவள் அழுகையைக் கேட்டு அந்நகரில் உள்ளோர் துயில் நீங்கி எழுந்தனர். அந்நகரின் அழகிய திருமடத்தில் எழுந்தருளி இருந்த திருஞானசம்பந்தர் அவ்வழுகை ஒலியைக் கேட்டார். உடனே திருக்கோயிலின் பக்கம் வந்தடைந்தார். "பெண்ணே! நீ யார்? உனக்கு என்ன நடந்தது" என்று கேட்டார்.

அப்பெண் அவரை வணங்கி, தன் மரபினையும், தாய் தந்தையரையும், அவர் தன்னை இவனுக்கென்று மணம் பேசிப் பின்னர் இறந்தொழிந்ததையும், இவனோடு தான் வந்ததையும், அங்கு நடந்த நிகழ்ச்சியையும் எடுத்துக் கூறினாள். அதனைக் கேட்டறிந்த காழிப்பிள்ளையார் அப்பெண்ணின் துன்பம் நீக்கக் கருதி அவ் வணிகன் அருகே வந்து அவன் உடல் அமிர்தமாகும்படி திருவுள்ளம் கொண்டு அருள் நோக்கம் வைத்தருளினார். உடனே கொடிய நஞ்சு ஓடியது. இறந்த வணிகன் உறங்கியவன் போன்று எழுந்தான். காழிப்பிள்ளையாரைத் துதித்தான். அப்பெண் ஒருபுறமாக ஒதுங்கி நின்றாள்.

உடனே காழிப்பிள்ளையார் "வணிகரே! இவ்விடத்தே இப்பொழுதே இப்பெண்ணைத் திருமணம் முடித்துக் கொண்டு செல்க" என்றார். உடனே வணிகன், "எம் குலத்தவரும், வணிகர்களும், பிற சான்றுகளும் இல்லாமல் நான் எவ்வாறு திருமணம் முடிப்பேன்?" என்று வணங்கிக் கூறினான். உடனே பிள்ளையார், "இப்பெண் உனக்குத் தான்

என்று உன் மாமன் பேசியதைப் பலரும் அறிவர். அத்துடன் இந்த வன்னியும், கிணறும், சிவலிங்கமும் சாட்சிகளாகும். என் சொல்லைத் தட்டாமல் இப்போதே திருமணம் முடித்துக் கொள்ளக் கடவாய்'' என்றார். உடனே வணிகனும் பிள்ளையாரின் எண்ணப்படி அங்கேயே அவளை மணந்து கொண்டு பிள்ளையாரைத் துதித்து விடை பெற்றுக் கொண்டு மதுரையை அடைந்தான். இரு மனைவியருடன் நிறைய செல்வம் பெருக்கிக் குபேரனைப் போல் வாழ்ந்து வந்தான். இரு மனைவியருக்கும் பிள்ளைகள் பிறந்தனர்.

ஒரு நாள் மூத்தாளின் பிள்ளைகள் இளையாளின் பிள்ளைகளை அடித்தனர். தன் பிள்ளைகளை அடித்த மூத்தாளின் பிள்ளைகளை இளையாள் திட்டினாள். அதனை அறிந்த மூத்தாள் இளையாளை வைதாள். "நீ யார்? எந்த மரபினள்? யார் காண அக்னி சாட்சியாக என் கணவனை மணந்தாய்? என் கணவன் மேல் ஆசைப்பட்டு வந்த காமக்கிழத்தி நீ. உனக்கு இறுமாப்பு ஏன்? நீ என் கணவனைத் திருமணம் முடித்தற்குச் சாட்சி உளதாகில் காட்டுக" என்றாள். உடனே கற்பிற் சிறந்த இளையாள், "சிவலிங்கப் பெருமானும் வன்னி மரமும், கிணறும் நான் என் கணவனை மணந்ததற்குச் சான்றாய் உள்ளன" என்றாள்.

அது கேட்டு மாற்றாள் கைகொட்டி நகைத்தாள். "நல்ல சான்று கூறினை, அச்சான்றுகள் இங்கு வருமாயின் அஃது உண்மையே ஆகும்" என்றாள். இதனைக்கேட்டு இளையாள் துன்பத்துள் ஆழ்ந்தாள். பெருமூச்சு விட்டாள். பின்னர், "ஐயனே! மாற்றாள் வாயிலிருந்து வரும் பழி மொழியினின்றும் என்னைக் காத்தருள்க" என்று இறைவனிடம் வேண்டினாள். அவளுடைய வருத்தத்தைக் கண்ட சோமசுந்தரக் கடவுள் அம் மூன்று சான்றுகளையும் திருக்கோயிலின் வடகிழக்குத் திசையில் விரைய வந்து தோன்றச் செய்தார். அதனைக் கண்ட இளையாள் மூத்தாளை அழைத்துச் சென்று, "வன்னிமரம் இது! கிணறு இது! சிவலிங்கம் இது!

இம்மூன்றுமே என் திருமணத்திற்குச் சான்றுகள்" என்று காட்டினாள்.

இதனைக் கண்ட மதுரை மக்கள் அனைவரும் அதிசயம் அடைந்தனர். இளையாளின் கற்பின் திறம் உணர்ந்தனர். மூத்தாள் துன்பக் கடலுள் அழுத்தினாள். அங்குள்ள வணிகர்கள் மூத்தாளை உடனே இகழ்ந்து பேசினர். அவர்களின் கணவன் மூத்தாளை அருவருத்துத் தள்ளிவிட்டான். அப்போது இளையாள் கணவன் பாதங்களில் வீழ்ந்து வணங்கி, "ஐயனே! இவள் மாற்றாள் அன்று தாய் இல்லாத எனக்கு இவளே தாய். இனி இவளும் நானும் ஒற்றுமையுடன் வாழ்வோம்" என்று கூறி மூத்தாளைத் தழுவிக் கொண்டாள். இருவரும் நட்புப் பூண்டனர். பின்னர் அவர்கள் இருவரும் பிள்ளைகளும் ஒற்றுமையுடன் இனிது வாழ்ந்திருந்தனர். வணிகன் அறமும் புகழும் செல்வமும் பெற்று சிறந்து விளங்கினான்.

இவ்வாறு அறுபத்து நான்கு திருவிளையாடல்களையும் முனிவர்கட்கு அகத்தியர் கூறியருளினார். பின்னர் அவர் முனிவர்களை நோக்கி, "எம்பெருமானாகிய இறைவனின் திருவிளையாடல்களைக் கூற வல்லார் யார்? எம் குருவாகிய முருகப்பெருமான் அருளியவாரே அறுபத்து நான்கு திருவிளையாடல்களைக் கூறினோம்" என்று கூறினார். பின்னர் அகத்தியர், முருகக் கடவுளையும் அவர் திருவாய் மலர்ந்தருளிய உபதேச மொழியையும் மனதில் கொண்டு துவாத சாந்தத்திலே திருவாலவாயினை அமைத்துச் சோமசுந்தரக் கடவுளையும், அங்கயற் கண்ணம்மையையும் மனதில் வழிபட்டு, சச்சிதானந்த வடிவினை இடையறாது தியானம் செய்தார்.

65. அருச்சனைச் சிறப்பு

வசிட்டர் முதலிய முனிவர் அனைவரும், அகத்தியரையும் அவர் மனைவியான உலோப முத்திரையையும் அழைத்து ஆசனத்தில் அமர்த்தினர். அருச்சனை புரிந்து வணங்கி, "தவமுனியே! நான்மாடக்கூடலில் எழுந்தருளியுள்ள சிவபெருமானின் திருவிளையாடல்களைக் கேட்டதன் மூலம் காதுகளின் பயனைப் பெற்றோம். கேட்ட வண்ணமே கண்குளிரக் காண வேட்கை மிகுந்து உள்ளோம்" என்று கூறினார்கள்.

அப்போது அகத்திய முனிவர், "முனிவர்களே! நான் எண்ணிய வண்ணமே நீங்களும் உரைத்தீர்கள். சிவபெருமானை அகக் கண்ணால் கண்டு களிக்காதவர் வீடுபேற்றை அடைய முடியாது. நீங்கள் கேட்ட வண்ணமே ஆலவாய் அண்ணலை அருச்சனை புரிந்து தரிசித்து வணங்கி ஆணவத்தைப் போக்குவோம்! வாருங்கள்" என்றார்.

பின்னர் ஒரு நன்னாளில் முனிவர் அனைவரும் கங்கையை அடைந்து நீராடிக் காசிப்பதியில் எழுந்தருளியுள்ள இறைவனைத் துதித்தனர். அகத்தியருடன் தேரில் ஏறி விண் வழியே செல்லத் தொடங்கினர். விண் வழியே செல்லும் போது வழியில் உள்ள புண்ணியத் தலங்களையும் திருப்பதிகளையும், வனங்களையும், நதிகளையும் அகத்தியர் விளக்கிச் சொல்ல முனிவர் அனைவரும் கண்டு கைகூப்பி வணங்கிச் சென்றனர். அவர்கள் விருபாக்கம் முதல் திரு ஆப்பனூர் வரை தரிசித்துச் சென்றனர்.

பின்னர் முனிவர்கள் மதுரை அடைந்து, பொற்றாமரைத் தீர்த்தத்தில் நீராடி சோமசுந்தரக் கடவுளைத் தரிசித்து வணங்கித் துதித்தனர். ஸ்ரீ சொக்கலிங்கப் பெருமான் வெளிப்பட்டு முனிவர்களுக்கு அருளினார். அகத்திய முனிவரை அருகழைத்து அவர் சிரசின் மேல் தம்

திருக்கரத்தினை வைத்து முதுகினைத் தடவி, "நீ எம்மை ஒப்பாய்! ஆதலின் உம்மை ஒப்பார் உலகில் இல்லை" என்று கூறி அருள்பாலித்து இலிங்கத்துள் மறைந்தருளினார். அகத்தியர் வசிட்டர் போன்ற முனிவர்கள் தத்தம் பெயரால் ஒரு சிவலிங்கம் அமைத்து வழிபட்டனர். அருகே ஒரு தபோவனம் அமைத்துத் தினந்தோறும் சோமசுந்தரக் கடவுளையும் அங்கயற்கண்ணம்மையையும் தரிசித்து வணங்கிக் கொண்டிருந்தார்கள்.

திருவாலவாய்க் காண்டம் முற்றிற்று

திருவிளையாடற்புராணம் உரைநடை முற்றும்

ஸ்ரீ சொக்கலிங்கப் பெருமான் திருவடி சரணம்

* * *

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

பரஞ்சோதி முனிவர் அருளிய

திருவிளையாடற் புராணம்

(திருவாலவாய் மான்மியம்)

முதலாவது - மதுரைக் காண்டம்

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

பரஞ்சோதி முனிவர் அருளிய

திருவிளையாடற் புராணம்

(திருவாலவாய் மான்மியம்)

முதலாவது - மதுரைக் காண்டம்

1. காப்பு

விநாயகர் காப்பு

1. சத்தி யாய்ச்சிவ மாகித் தனிப்பர
முத்தி யான முதலைத் துதிசெயச்
சுத்தி யாகிய சொற்பொருள் நல்குவ
சித்தி யானைதன் செய்யபொற் பாதமே.

சொக்கலிங்கமூர்த்தி காப்பு

2. வென்றுளே புலன்க ளைந்தார் மெய்யுணர் உள்ளந் தோறுஞ்
சென்றுளே யமுத மூற்றுந் திருவருள் போற்றி யேற்றுக்
குன்றுளே யிருந்து காட்சி கொடுத்தருள் கோலம் போற்றி
மன்றுளே மாறி யாடு மறைச்சிலம் படிகள் போற்றி.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

பரஞ்சோதி முனிவர் அருளிய

திருவிளையாடற் புராணம்

(திருவாலவாய் மான்மியம்)

முதலாவது - மதுரைக் காண்டம்

1. காப்பு

விநாயகர் காப்பு

1. சக்தியாகவும், சிவமாகவும் ஒப்பற்ற பர முக்திப் பேறாகவும் உள்ள முழு முதற் கடவுளைத் துதி செய்யத் தேவையான சிறந்த சொற்களையும் நல்ல பொருளையும் நமக்கு விநாயகப் பெருமானின் பொற்பாதங்களே நல்குவன!

சொக்கலிங்கமூர்த்தி காப்பு

2. புலன்களை வென்று உண்மையை உணர்ந்தவர் தம் இதயங்களில் போய்த் தங்கி அவர்களின் அறிவினுள்ளே அமுதத்தைச் சொரிகின்ற திருவருள் காக்க! வெள்ளிமலை போன்ற இடபத்தின் மேலமர்ந்து காட்சி தருகின்ற உன் திருக்கோலம் காக்க! வெள்ளியம்பலத்திலே கால்மாறி நடித்து அருள்கின்ற வேதமாகிய சிலம்பினை அணிந்துள்ள திருவடிகள் காக்க!

அங்கயற்கண்ணம்மை காப்பு

3. கரும்புமுரல் கடிமலர்ப்பூங் குழல்போற்றி
யுத்தரியத் தொடித்தோள் போற்றி
கரும்புருவச் சிலைபோற்றி கவுணியர்க்குப்
பால்சுரந்த கலசம் போற்றி
இரும்புமனங் குழைத்தென்னை யெடுத்தாண்ட
வங்கயற்கண் எம்பிராட்டி
அரும்புமிள நகைபோற்றி யாரணநூ புரஞ்சிலம்பு
மடிகள் போற்றி.

நூற்பயன்

4. திங்களணிதிருவால வாயெம் மண்ண றிருவிளையாட்
டிவையன்பு செய்துகேட்போர்
சங்கநிதி பதுமநிதிச் செல்வ மோங்கித்
தகைமை தரு மகப்பெறுவர் பகையை வெல்வர்
மங்கலநன் மணம்பெறுவர் பிணிவந் தெய்தார்
வாழ்நாளு நனிபெறுவர் வானா டெய்திப்
புங்கவராய் அங்குள்ள போக மூழ்கிப்
புண்ணியராய்ச் சிவனடிக்கீழ் நண்ணி வாழ்வார்.

வாழ்த்து

5. மல்குக வேத வேள்வி வழங்குக சுரந்து வானம்
பல்குக வளங்கள் எங்கும் பரவுக வறங்க ளின்ப
நல்குக வுயிர்கட் கெல்லா நான்மறைச் சைவ
மோங்கிப்
புல்குக வுலக மெல்லாம் புரவலன் செங்கோல்
வாழ்க.

அங்கயற்கண்ணம்மை

3. வண்டுகள் ஒலிக்க வாசனை மிக்க மலரை அணிந்துள்ள கூந்தல் காக்க! உத்தரியத்தையும், வளையலையும் அணிந்த திருத்தோள்கள் காக்க! கரிய புருவங்களாகிய விற்கள் காக்க! திருஞானசம்பந்தருக்கு ஞானப்பால் அருளிய கலசம் போன்ற கொங்கைகள் காக்க! இரும்பு மனத்தையுடைய என்னை இளகச் செய்து எடுத்தாண்டருளிய கயல் போன்ற கண்களை உடைய எம்பெருமாட்டியிடம் அரும்புகின்ற புன்முறுவல் காக்க! வேதமாகிய சிலம்புகள் ஒலிக்கின்ற திருவடிகள் காக்க!

நூற்பயன்

4. சந்திரனை அணிந்து திருவாலவாயில் எழுந்தருளியுள்ள எம் இறைவனின் திருவிளையாடல்களில் அன்பு வைத்துக் கேட்போர் சங்கநிதி பதுமநிதிகளைப் போல் செல்வத்தால் உயர்ந்து பண்புடைய நன் மக்களைப் பெறுவர். பகையை வெல்வர். மங்கலமாகிய நல்ல மணங்களைப் பெறுவர். நோய்கள் வராது. நீண்ட ஆயுளைப் பெறுவர். விண்ணுலகம் சென்று தேவராகி அங்குள்ள இன்பத்துள் மூழ்கிச் சிவ புண்ணியம் உடையவராய் அவனோடு இரண்டறக் கலந்து வாழ்வர்.

வாழ்த்து

5. வேதவேள்விகள் நிரம்புக! வானம் நீரினைச் சுரந்து பொழிக! செல்வங்கள் பெருகுக! தருமங்கள் செழிக்க! உயிர்களுக்கெல்லாம் இன்பம் அளிக்கப்படுக! உலகமெங்கும் நான்கு வேதங்களின் நுனிபொருளாகிய சைவ சமயம் நிலை பெறுக! அரசனது செங்கோல் வாழ்க!

கடவுள் வாழ்த்து

பரமசிவம்

6. பூவண்ணம் பூவின் மணம்போலமெய்ப் போத வின்ப
மாவண்ண மெய்கொண் டவன்றன்வலி யாணை தாங்கி
மூவண்ண றன்சந் நிதிமுத்தொழில் செய்ய வாளா
மேவண்ண லன்னான் விளையாட்டின் வினையை வெல்வாம்.

பராசக்தி

7. அண்டங்கள் எல்லாம் அணுவாக வணுக்க ளெல்லாம்
அண்டங்க ளாகப் பெரிதாய்ச்சிறி தாயி னானும்
அண்டங்க ளுள்ளும் புறம்புங்கரி யாயி னானும்
அண்டங்க ளீன்றா டுணையென்ப ரறிந்த நல்லோர்.

சொக்கலிங்கமூர்த்தி

8. பூவி னாயகன் பூமக ணாயகன்
காவி னாயக னாதிக் கடவுளர்க்கு
ஆவி நாயகன் னங்கயற் கண்ணிமா
தேவி நாயகன் சேவடி யேத்துவாம்.

கடவுள் வாழ்த்து

பரமசிவம்

6. பூவின் நிறமும் வாசனையும், அப்பூவை விட்டுப் பிரிதல் இல்லாமல் இருப்பதுபோல் உண்மை, அறிவு, ஆனந்தம் இம்மூன்றும் பிரியாது திருமேனியாகும்படி உள்ளவனும், தன்னுடைய சக்தியின் ஏவலை ஏற்று அயன் அரி அரன் என்னும் மும்மூர்த்திகளும் தனக்கு முன்னே ஆக்கல், அழித்தல், காத்தல் என்ற மூன்று தொழில்களையும் செய்ய, அசைவின்றி நிற்கும் பெருமையுடையவனாகிய அவ்விறைவனின் விளையாடல்களைக் கூறுவதினாலே வினையாகிய பகையை வெல்வோம்.

பராசக்தி

7. எல்லா அண்டங்களும் அணுக்களாகவும் அணுக்களெல்லாம் அண்டங்களாகத் தோன்றும்படி பெரியதும் சிறியதும் ஆனாலும், நுண்பொருளாயினும் அவற்றின் உள்ளேயும், வெளியேயும் சான்றாக உள்ளானும் ஆன இறைவனை, அவ்வண்டங்களைப் பெற்றெடுத்த உமையம்மையாருக்குத் துணை ஆவான் என்று மெய்யறிவு உடைய மேலோர் சொல்வார்கள்.

சொக்கலிங்க மூர்த்தி

8. தாமரை மலரில் உள்ள பிரம தேவனும், செந்தாமரை மலரில் உள்ள திருமகளின் மணவாளனான திருமாலும் கற்பக மரத்தின் தலைவனான இந்திரனும் வணங்குகின்ற உயிர்போன்ற தலைவனும், அங்கயற்கண்ணம்மையின் கணவனான சொக்கநாதப் பெருமாளின் சிவந்த திருவடிகளை வணங்குவோம்.

அங்கயற்கண்ணம்மை

9. பங்கயற்க ணரியபாம் பரனுருவே தனக்குரிய
படிவமாகி
இங்கயற்க ணகனுலக மெண்ணிறந்த சராசரங்கள்
ஈன்றுந் தாழாக்
கொங்கயற்கண் மலர்க்கூந்தற் குமரிபாண்டியன்மகள்
போற் கோலங் கொண்ட
அங்கயற்க ணம்மையிரு பாதப்போ தெப்போது
மகத்துள் வைப்பாம்.

நடேசர்

10. உண்மையறி வானந்த வுருவாகி யெவ்வுயிர்க்கு
முயிராய் நீரின்
தண்மையனல் வெம்மையெனத் தனையகலா
திருந்துசரா சரங்க ளீன்ற
பெண்மையுரு வாகியதன் னாநந்தக் கொடிமகிழ்ச்சி
பெருக யார்க்கும்
அண்மையதா யம்பலத்து ளாடியருள் பேரொளியை
யகத்துள் வைப்பாம்.

சௌந்தரபாண்டியர்

11. சடைமறைத்துக் கதிர்மகுடந் தரித்துநறுங்
கொன்றையந்தார் தணந்துவேப்பந்
தொடைமுடித்து விடநாகக் கலனகற்றி மாணிக்கச்
சுடர்ப்பூ ணேந்தி
விடைநிறுத்திக் கயலெடுத்து வழுதிமரு மகனாகி
மீன நோக்கின்
மடவாலை மணந்துலக முழுதாண்ட சுந்தரனை
வணக்கஞ் செய்வாம்.

அங்கயற்கண்ணம்மை

9. பிரமதேவனாலும் அடைய முடியாத திருவுருவை உடைய சிவபெருமானின் திருவுருவத்தையே தனக்குரிய திருவுருவமாகக் கொண்டு, இங்கும் அங்கும் உள்ள பரந்த உலகங்களையும் நிற்பன இயங்குவனவற்றையும் பெற்றெடுத்தும் சற்றும் சரியாத கொங்கைகளையுடைய கன்னியாகிப் பாண்டிய மன்னனின் மகளைப் போல் தோற்றம் அளிக்கக் கூடிய அங்கயற்கண்ணம்மையினுடைய திருவடித் தாமரைகளை எப்போதும் மனத்துள் வைத்து வணங்குவோம்.

நடேசர் (சபாபதி)

10. உண்மை, அறிவு, ஆனந்தமே தன் திருவுருவமாகக் கொண்டு எல்லா உயிர்க்கும் உயிராகவும், நீரில் குளிர்ச்சியும் நெருப்பின் வெம்மையும் நீங்காதிருப்பது போலத் தம்மை நீங்காதிருக்கின்ற நிற்பனவும் இயங்குவனவுமான பொருள்களைப் பெற்ற பெண் வடிவாகிய சிவகாம வல்லியம்மை மகிழ்ச்சியடைய, அனைவருக்கும் எளிமையாய் காட்சியளிப்பவனும் பொற்சபையில் திருநடனம் செய்து அருள்புரியும் பேரொளி போன்றவனுமான சபாபதியை மனதில் வைத்து வணங்குவோம்.

சௌந்தரபாண்டியர் (சோமசுந்தரர்)

11. சடையை மறைத்து ஒளிபொருந்திய திருமுடியை அணிந்து கொண்டு, மணம்மிக்க கொன்றை மாலையை நீக்கிவிட்டு வேப்பம்பூ மாலையை அணிந்து, நஞ்சுடைய நாகங்களால் ஆன அணியை நீக்கிவிட்டு, மாணிக்கம் போன்ற ஒளியுடைய அணிகலன்களை அணிந்து கொண்டு இடபக் கொடியை நீக்கி மீன்கொடியை உயர்த்தி, மீன் போன்ற கண்களையுடைய தடாதகைப் பிராட்டியை மணந்து கொண்டதனால் பாண்டிய அரசனின் மருமகன் ஆகி உலகம் முழுவதையும் ஆண்டருளிய சோமசுந்தரக் கடவுளை வணங்குவோம்.

தடாதகைப் பிராட்டியார்

12. செழியர்பிரான் திருமகளாய்க் கலைபயின்று
முடிபுனைந்து செங்கோ லோச்சி
முழுதுலகுஞ் சயங்கொண்டு திறைகொண்டுந்திகண
முனைப்போர் சாய்த்துத்
தொழுகணவற் கணிமணமா லிகைசூட்டித்
தன்மகுடஞ் சூட்டிச் செல்வந்
தழைவுறுதன் னரசளித்த பெண்ணரசி யடிக்கமலந்
தலைமேல் வைப்பாம்.

கான் மாறி நடித்தவர்

13. பொருமாறிற் கிளர்தடந்தோள் ஒருமாறன்
மனங்கிடந்த புழுக்க மாற
வருமாறிற் கண்ணருவி மாறாது களிப்படைய
மண்ணும் விண்ணும்
உருமாறிப் பவக்கடல்வீழ்ந் தூசலெனத் தடுமாறி
யுழலு மாக்கள்
கருமாறிக் கதியடையக் கான்மாறி நடித்தவரைக்
கருத்துள் வைப்பாம்.

தக்ஷிணாமூர்த்தி

14. கல்லாலின் புடையமர்ந்து நான்மறையா றங்கமுதற்
கற்ற கேள்வி
வல்லார்க ணால்வருக்கும் வாக்கிறந்த பூரணமாய்
மறைக்கப் பாலாய்
எல்லாமாய் அல்லதுமா யிருந்ததனை யிருந்தபடி
யிருந்து காட்டிச்
சொல்லாமற்சொன் னவரை நினையாமனினைந்
துபவத் தொடக்கை வெல்வாம்.

தடாதகைப் பிராட்டியார்

12. பாண்டிய மன்னனான மலையத்துவசனின் திருமகளாய்த் தோன்றி, எல்லா கலைகளையும் கற்றுத் திருமுடி சூட்டிக் கொண்டு செங்கோல் செலுத்தி உலகம் முழுவதையும் வெற்றி பெற்று, திறைப்பொருளை ஏற்று, நந்திதேவர் முதலான சிவகணங்களை போர் முனையில் சாய்த்து தன் கணவருக்கு அழகிய மணமாலையைச் சூட்டி, செல்வம் நிரம்பிய தன்னரசை அவருக்கே அளித்த பெண்ணரசியாகிய தடாதகைப் பிராட்டியாரின் திருவடித் தாமரைகளை நம் தலையில் சூட்டி வணங்குவோம்.

கால் மாறி நடித்தவர் (வெள்ளியம்பலவாணர்)

13. போரில் சிறந்த தோள்களையுடைய ஒரு பாண்டிய மன்னனின் துன்பம் நீங்கும்படியாகவும், அவன் கண்களில் இருந்து ஆறாகப் பெருகும் கண்ணீர் நிற்கும்படியாகவும் பிறவிக் கடலில் மாறி மாறிப் பிறந்து உழன்று வருந்தும் மக்கள், கருவிற் சென்றடைந்து மீண்டும் பிறவித்துன்பம் உண்டாகாமல் நீங்கும்படியாகவும் அவர்கள் வீடுபேறு அடையும்படியாகவும், கால் மாறி ஆடிய வெள்ளியம் பலவாணரை மனத்துள் வைத்து வணங்குவோம்.

(இதில் கூறப்பட்டுள்ள புராண வரலாற்றினை, இத் திருவிளையாடற் புராணம் 14-ஆம் படலத்தில் கண்டு கொள்க).

தட்சிணாமூர்த்தி

14. கல்லால மரத்தின் கீழமர்ந்து நான்கு மறை ஆறு அங்கம் முதலியவற்றைக் கேள்வி வல்லவர்களாகிய சநகர் முதலிய நான்கு முனிவர்களுக்கும், வாக்கியலைக் கடந்த நிறைவாயும், வேதங்கட்கு அப்பாற் பட்டதாயும், எல்லாமாயும், அல்லது மாயும், உள்ளத்தின் உண்மையை உள்ளபடி காண்பித்துக் குறிப்பால் உணர்த்திய தட்சிணா மூர்த்தியை இடையறாமல் நினைந்து பிறவியை நீக்கிக் கொள்வோம்.

சித்தி விநாயகக் கடவுள்

15. உள்ளமெனுங் கூடத்தில் ஊக்கமெனுந் தறிநிறுவி
யுறுதியாகத்
தள்ளரிய வன்பென்னுந் தொடர்பூட்டி யிடைப்
படுத்தித் தறுகட் பாசக்
கள்ளவினைப் பசுபோதக் கவளமிடக் களித்துண்டு
கருணையென்னும்
வெள்ளமதம் பொழிசித்தி வேழத்தை நினைந்து
வருவினைக ளோட்பாம்.

சுப்பிரமணியக் கடவுள்

16. கறங்குதிரைக் கருங்கடலுங் காரவுணப் பெருங்
கடலுங் கலங்கக் கார்வந்
துறங்குசிகைப் பொருப்புஞ்சூ ருரப்பொருப்பும்
பிளப்பமறை யுணர்ந்தோராற்றும்
அறங்குலவு மகத்தழலு மவுணமட வார்வயிற்றி
னழலும் மூள
மறங்குலவு வேலெடுத்த குமரவேள் சேவடிகள்
வணக்கம் செய்வாம்.

சரசுவதி

17. பழுதகன்ற நால்வகைச் சொன் மலரெடுத்துப்
பத்திபடப் பரப்பித் திக்கு
முழுதகன்று மணந்துசுவை யொழுகியணி பெற
முக்கண் மூர்த்தி தாளிற்
றொழுதகன்ற வன்பெனுநார் தொடுத்தலங்கல்
சூட்டவரிச் சுரும்புந் தேனும்
கொழுதகன்ற வெண்டோட்டு முண்டகத் தாளடி
முடி மேற்கொண்டு வாழ்வாம்.

சித்தி விநாயகக் கடவுள்

15. உள்ளமாகிய கூடத்தில் மனவுறுதியாகிய கட்டுத்தறியை நிறுத்தி, மாறுபாடில்லாத வலிமை மிக்க அன்பாகிய சங்கிலியைப் பூட்டி அதில் அகப்படுத்தி, கொடுமையான ஆணவத்தையும், வஞ்சனையாகிய சிவபோதம் என்ற கவளத்தையும் கொடுக்க அவற்றை உண்டு மகிழ்ந்து கருணை என்னும் மதப்பெருக்கைச் சொரிகின்ற சித்தி விநாயகக் கடவுளாகிய யானையை எண்ணி வணங்கி தொடர்கின்ற வினைகளை நீக்கிக் கொள்வோம்.

சுப்பிரமணியக் கடவுள்

16. ஒலிக்கின்ற அலைகளையுடைய கருங்கடலும் கரிய அசுர சேனையாகிய கடலும் கலங்கவும், மேகங்கள் தங்கும் உச்சியையுடைய கிரவுஞ்சமென்னும் மலையும் சூரபன்மனின் மார்பென்னும் மலையும் பிளக்கும்படியாகவும், வேத விதிகளை நன்குணர்ந்தோர் செய்யக்கூடிய அறத்தோடு கூடிய வேள்வித் தீயும் அசுரப் பெண்களின் வயிற்றின் தீயும் மூண்டு எரியவும் வீரம் மிக்க வேலாயுதத்தைத் திருக்கரத்தில் ஏந்திய முருகப் பெருமானின் சிவந்த திருவடிகளை வணங்குவோம்.

சரசுவதி

17. குற்றமற்ற பெயர் வினை இடை உரி என்ற நால்வகைச் சொற்களாகிய மலர் எடுத்து அவற்றை வரிசையாக அமைத்து, எல்லாத் திசைகளிலும் சென்று சுவையுடன் அழகுபெற அன்பாகிய நாரினால் கட்டிப் பாமாலையாக்கி மூன்று கண்களையுடைய இறைவனின் திருவடிகளில் வணங்கி சூட்டுவதற்கு, வண்டுகள் ஒலித்துக் கொண்டே குடையும்படியான வெண்மையான இதழ்களையுடைய தாமரைப் பூவில் வாசம் செய்கின்ற நாமகளின் அடியைப் பணிந்து வணங்குவோம்.

திருநந்தி தேவர்

18. வந்திறை யடியிற் றாழும் வானவர் மகுட கோடி
பந்தியின் மணிகள் சிந்த வேத்திரப் படையாற்
றாக்கி
அந்தியும் பகலும் தொண்ட ரலகிடுங் குப்பை யாக்கும்
நந்தியெம் பெருமான் பாத நகைமலர் முடிமேல்
வைப்பாம்.

திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார்

19. கடியவிழ் கடுக்கை வேணித் தாதைபோற் கனற்கண்
மீனக்
கொடியனை வேவ நோக்கிக் குறையிரந் தனையான்
கற்பிற்
பிடியன நடையாள் வேண்டப் பின்னுயி ரளித்துக்
காத்த
முடியணி மாடக் காழி முனிவனை வணக்கஞ்
செய்வாம்.

திருநாவுக்கரசு நாயனார்

20. அறப்பெருஞ் செல்வி பாகத் தண்ணலஞ் செழுத்தா
லஞ்சா
மறப்பெருஞ் செய்கை மாறா வஞ்சகர் இட்டநீல
நிறப்பெருங் கடலும் யார்க்கு நீந்துதற் கரிய வேழு
பிறப்பெனுங் கடலு நீத்த பிரானடி வணக்கஞ்
செய்வாம்.

திருநந்தி தேவர்

18. இறைவனின் திருவடிகளில் வணங்குகின்ற தேவர்களின் மகுடங்கள் கோடி. அவைகளின் முடியுறுப்பு வரிசைகளினின்றும் மாணிக்கங்கள் சிதறும்படியாகப் பிரம்பாகிய படையால் தாக்கி, இரவும் பகலும் திருத் தொண்டர்கள் திருவலகிடுவதற்குக் காரணமாய் உள்ள குப்பையைச் செய்கின்ற திருநந்தி தேவரின் மலர் போன்ற திருவடிகளை நம் முடியின் மேல் சூட்டிக் கொள்வோம்.

திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார்

19. நறுமணத்துடன் மலர்ந்த கொன்றை மாலையை அணிந்த சடையுடைய தந்தையாகிய சிவபெருமான், வெப்பு நோயை உடைய மீன் கொடிக் கூன் பாண்டியனை வெதும்பி வருந்தும்படியாகச் செய்து, அப்பாண்டியனின் பெண் யானையைப் போன்ற நடையையுடைய மனைவியாகிய மங்கையற்கரசி தம் குறையைக் கூறி வேண்டிக்கொள்ள, பின்னர் அப் பாண்டியனுக்கு உயிரை நல்கி ஆண்டருளிய, சிகரங்களை உடைய மணி மாடங்கள் நிறைந்த சீர்காழிப் பதியிலே தோன்றிய திருஞானசம்பந்தப் பெருமானை வணக்கம் செய்வோம்.

திருநாவுக்கரசு நாயனார்

20. பேரறங்களை வளர்த்த செல்வியாகிய உமா தேவியை பாகமாகக் கொண்ட பெருமையுடைய இறைவனின் திருவைந்தெழுத்தாகிய புணையினாலே, பழிக்கு அஞ்சாத பெரிய பாவச் செய்கையினின்று நீங்காத வஞ்சகர்கள் கற்றூணோடு பிணித்து இட்ட நீலநிறப் பெரும் கடலையும் யாராலும் கடக்க முடியாத ஏழு பிறப்பென்னும் பெரிய கடலையும் ஒரு சேரக் கடந்தருளிய திருநாவுக்கரசரின் திருவடிகளுக்கு வணக்கம் செய்வோம்.

சுந்தர மூர்த்தி நாயனார்

21. அரவக லல்கு லார்பா லாசைநீத் தவர்க்கே வீடு
தருவமென் றளவில் வேதஞ் சாற்றிய தலைவன் றன்னைப்
பரவைதன் புலவி தீர்ப்பான் கழுதுகண் படுக்கும் பானாள்
இரவினிற் றூது கொண்டோன் இணையடி முடிமேல் வைப்பாம்.

மாணிக்கவாசக சுவாமிகள்

22. எழுதரு மறைக டேறா விறைவனை யெல்லிற் கங்குற்
பொழுதறு காலத் தென்றும் பூசனை விடாது செய்து
தொழுதகை தலைமே லேறத் துளும்புகண் ணீருண் மூழ்கி
அழுதடி யடைந்த வன்பன் அடியவர்க் கடிமை செய்வாம்.

சண்டேசுர நாயனார் முதலிய திருத்தொண்டர்

23. தந்தைதா ளொடும்பிறவித் தாளெறிந்து நிருத்தர்இரு தாளைச் சேர்ந்த
மைந்தர்தாள் வேதநெறி சைவநெறி பத்திநெறி வழாது வாய்மெய்
சிந்தைதா னரனடிக்கே செலுத்தினராய்ச் சிவானுபவச் செல்வ ராகிப்
பந்தமாந் தொடக்கறுத்த திருத்தொண்டர் தாள்பரவிப் பணிதல் செய்வாம்.

கடவுள் வாழ்த்து முற்றிற்று

சுந்தர மூர்த்தி நாயனார்

21. பாம்பின் படம் போன்ற அல்குலையுடைய பெண்களிடத்தே ஆசையை நீக்கியவர்க்கு மட்டுமே பேரின்ப வீட்டை நல்குவோம் என்று, எண்ணற்ற வேதம் கூறியருளிய சிவபெருமானையே பரவை நாச்சியாரின் ஊடலை நீக்கும் பொருட்டு, பேயும் உறங்குகின்ற நள்ளிரவு நேரத்தில் தூதாக அனுப்பிய சுந்தர மூர்த்தி நாயனாரின் திருவடிகளை நம் முடிமேல் வைத்து வணக்கம் செய்வோம்.

மாணிக்கவாசக சுவாமிகள்

22. எழுத முடியாதவனும், மறைகளால் தெளியப் பெறாதவனும் ஆன சிவபெருமானை, பகல் இரவு உள்ளிட்ட அறுவகைக் காலங்களிலும் இடைவிடாது பூசை செய்து கூப்பிய கைகள் தலையின் மீது ஏற நெக்குருகித் ததும்பி வழிகின்ற கண்ணீருள் மூழ்கி அவனின் திருவடி நிழலை அடைந்த அன்பராகிய மாணிக்க வாசகப் பெருமானின் அடியவர்க்குத் தொண்டு செய்வோம்.

சண்டேசுர நாயனார் முதலிய திருத்தொண்டர்

23. தந்தையாரின் அடியோடு, பிறவி வேரையும் நீக்கித் திருநடனம் செய்யும் இறைவனின் திருவடிகளை அடைந்த சண்டேசுர நாயனாரின் திருவடிகளையும், வேத நெறி சைவ நெறி பக்தி நெறி வழுவாது வாக்கு மெய் மனம் ஆகிய மூன்று கரணங்களையும் சிவபெருமானின் திருவடிகளிலே செலுத்தியவர்களையும் சிவாநுபூதிமான்களாகி பிரபஞ் சங்களை அறுத்த திருத் தொண்டர் திருவடிகளையும் துதித்துப் பணிந்து வணங்குவோம்.

பாயிரம்

முதனூல்

24. அண்ணல்பாற் றெளிந்த நந்தி யடிகள்பாற்
சனற்கு மாரன்
உண்ணிறை யன்பி னாய்ந்து வியாதனுக்
குணர்த்த வந்தப்
புண்ணிய முனிவன் சூதற் கோதிய புராண மூவா
றெண்ணிய விவற்றுட் காந்தத் தீசசங் கிதையின்
மாதோ.

நூல் யாத்தற்குக் காரணம்

25. அறைந்திடப் பட்ட தாகு மாலவாய்ப் புகழ்மை யந்தச்
சிறந்திடும் வடநூல் தன்னைத் தென்சொலாற்
செய்தி யென்றிங்
குறைந்திடும் பெரியோர் கூறக் கடைப்பிலத்
துறுதி யிந்தப்
பிறந்திடும் பிறப்பி லெய்தப் பெறுதுமென்
றுள்ளந் தேறோ.

மொழி பெயர்த்த முறை

26. திருநகர் தீர்த்த மூர்த்திச் சிறப்புமூன் றந்த மூர்த்தி
அருள்விளை யாட லெட்டெட் டருச்சனை
வினையொன் றாக
வரன்முறை யறுபத் தெட்டா மற்றவை படல மாக
விரிமுறை விருத்தச் செய்யுள் வகைமையால்
விளம்ப லுற்றேன்.

பாயிரம் முற்றிற்று

பாயிரம்

முதனூல்

24. பெருமை மிக்க சிவபெருமானிடம் கேட்டுத் தெளிந்து கொண்ட நந்தி தேவரிடம் சநற்குமார முனிவன் உள்நிறைந்த அன்போடு கேட்டு அறிந்து கொண்டு அதனை வியாச முனிவனுக்கு உணர்த்தினான். அப்புண்ணிய முனிவன் சூத முனிவனுக்குப் பதினெட்டுப் புராணங்களையும் சொன்னான். அப்பதினெட்டுப் புராணங்களுள் காந்த மகா புராணத்தில் சங்கிர சங்கிதையில் *(இவ்வாறு காணப்படுகிறது.)*

நூல் செய்ததற்குக் காரணம்

25. (மேலே சொன்ன சங்கிர சங்கிதையில்) திருவாலவாய் என்னும் மதுரையின் பெருமை கூறப்பட்டது ஆகும். "வடநூலில் சிறப்புடன் கூறப்பட்ட பெருமைகளை, தமிழ் மொழியில் கூறுவாய்" என்று இம் மதுரையில் உள்ள பெரியோர்கள் பணிக்க, பிறந்திருக்கும் இப்பிறவியிலேயே பிறப்பின் பயனை அடைவோம் என்று உறுதியாகக் கொண்டு *(இந்நூலைச் செய்தேன்).*

மொழி பெயர்த்த முறை

26. தலவிசேடம், தீர்த்த விசேடம், மூர்த்தி விசேடம் என்ற மூன்றும், அருமை மிக்க சோமசுந்தரப் பெருமானின் அருள் விளையாடல்கள் அறுபத்து நான்கும், அர்சித்த செயல் ஒன்றும் ஆக அறுபத்தெட்டாகிய அவைகளை, முறைப்படியே படலங்களை அமைத்து விரித்த முறையில் விருத்தமாகிய செய்யுள் வகையினால் கூறத் தொடங்கினோம்.

பாயிரம் முற்றிற்று

அவையடக்கம்

27. நாயகன் கவிக்குங் குற்ற நாட்டிய கழக மாந்தர்
மேயவத் தலத்தி னோர்க்கென் வெள்ளறி
வுரையிற் குற்றம்
ஆயுமா றரிதன் றேனு நீர்பிரித் தன்ன முண்ணுந்
தூயதீம் பால்போற் கொள்க சுந்தரன் சரிதந்
தன்னை.

28. சுவைக்கொ ழுந்தழனாச் சுவை கண்ட்வூனிமையோர்
சுவைக்க விண்ணமு தாயின துளக்கமில் சான்றோர்
அவைக்க ளம்புகுந் தினியவா யாலவா யுடையார்
செவிக்க ளம்புகுந் தேறுவ சிறியனேன் பனுவல்.

29. பாய வாரியுண் டுவர்கெடுத் துலகெலாம் பருகத்
தூய வாக்கிய காரெனச் சொற்பொருள் தெளிந்தோர்
ஆய கேள்வியர் துகளறுத் தாலவா யுடைய
நாய னார்க்கினி தாக்குப நலமிலேன் புன்சொல்.

30. அல்லை யிதல்லை யிதென மறைகளு ம்அன்மைச்
சொல்லி னாற்றுதித் திளைக்குமிச் சுந்தர னாடற்
கெல்லை யாகுமோ வென்னுரை யென்செய்கோ
விதனைச்
சொல்லு வேனெனு மாசை யென் சொல்வழி கேளா.

அவையடக்கம்

27. சிறந்த அறிவு மிக்க நாயகனான சிவபெருமானின் திருப்பாசுரத்திற்கே குற்றம் கூறி நிறுத்திய சங்கப் புலவர்கள் வாழ்ந்த இம் மதுரை மாநகரில் வசிப்போர்க்கு என் குறைந்த அறிவின் காரணமாக வெளிவந்த சொற்களில் குற்றம் காண முற்படின் அது அவர்கட்கு கடுமையான செயல் அன்று. ஆயினும் அன்னப்பறவையானது நீரை நீக்கித் தூய பாலை அருந்துவதுபோல் சோமசுந்தரக் கடவுளின் பெருமைகளைக் கூறும் இத் திருவிளையாடலை ஏற்றுக் கொள்வார்களாக.

28. கொழுமிய அக்கினியின் பிளவுபட்ட நாவினால் சுவை காணப் பெற்ற ஊன்கள் (வேள்வித் தீ) தேவர்கள் சுவைத்து உண்ணும் இன்னமுது ஆயின. அதுபோல சிறியேனின் செய்யுட்கள், ஐயம் திரிபில்லாத புலவர்களின் அவைக்களம் சென்று பழுது நீக்கப்பட்டு இனிய ஆலவாய் எம்பெருமானின் திருச் செவிகளில் சென்று பொருந்துவனவாகும்.

29. மேகமானது கடலின் நீரை உண்டு அதில் உள்ள உப்பை நீக்கிவிட்டு, உலக மக்கள் உண்ணும்படி தூய்மையாக்கித் தருவது போல, சொல் பொருள்களைக் குற்றமற உணர்ந்த மேலோர், என்னுடைய சிறப்பில்லாத சொற்களில் உள்ள குற்றங்களை நீக்கித் திருவாலவாயை உடைய சிவபெருமானுக்கு இனிமையாக்கித் தருவார்களாக.

30. இதுவல்ல, இதுவல்ல என்று வேதங்களும் எதிர்மறைச் சொற்களால் துதி செய்து மெலிவடைவதற்குக் காரணமாய் உள்ள இச் சோமசுந்தரப் பெருமானின் திருவிளையாடல்களைக் கூறுவதற்கு என்னுடைய எளிய சொற்கள் போதாது. என்றாலும் இத் திருவிளையாடல்களைக் கூற வேண்டும் என்று என் மனத்துள் எழுந்த விருப்பத்தின் காரணமாய் என் தகுதியற்ற நிலையினை என் மனமே எடுத்துக் கூறினாலும் ஏற்க மறுக்கின்றது. என் செய்வேன்?

அவைக்களமும் ஆக்கியோன் பெயரும்

31. அறுகாற்பீ டத்துயர்மால் ஆழிகடைந் தமுதையரங்
கேற்று மாபோல்
அறுகாற்பே டிசைபாடுங் கூடன்மான் மியத்தையருந்
தமிழாற் பாடி
அறுகாற்பீ டுயர்முடி யார் சொக்கேசர் சந்நிதியி
லமரச் சூழும்
அறுகாற்பீ டத்திருந்து பரஞ்சோதி முனிவனரங்
கேற்றி னானே.

அவையடக்கம் முற்றிற்று

பாண்டித் திருநாட்டுப் படலம்

32. கறைநி றுத்திய சுந்தர சுந்தரக் கடவுள்
உறைநி றுத்திய வாளினாற் பகையிரு ளொதுக்கி
மறைநி றுத்திய வழியினால் வழுதியாய்ச் செங்கோன்
முறைநி றுத்திய பாண்டிநாட் டணியது மொழிவாம்.

33. தெய்வ நாயகன் நீறணி மேனிபோற் சென்று
பௌவ மேய்ந்துமை மேனிபோற் பசந்துபல்
லுயிர்க்கும்
எவ்வ மாற்றுவான் சுரந்திடு மின்னரு ளென்னக்
கௌவை நீர்சுரந் தெழுந்தன கனைகுரல் மேகம்.

34. இடித்து வாய்திறந் தொல்லென வெல்லொளி
மழுங்கத்
தடித்து வாள்புடை விதிர்த்துநின் றுஇந்திர சாபம்
பிடித்து நீளம்பு கோடைமேற் பெய்துவெம் பெரும்போர்
முடித்து நாமென வருதல்போன் மொய்த்தன
கொண்மூ.

அவைக்களமும் ஆக்கியோன் பெயரும்

31. பாம்புப் படுக்கையில் படுத்து அரிதுயில் கொள்ளும் திருமால் பாற்கடலைக் கடைந்து அதில் உண்டான அமுதத்தைத் தேவர் கூட்டத்திற்கு அளித்தாற் போல பரஞ்சோதி முனிவன் என்னும் பெயரையுடைய பெரியோன், ஆறு கால்களையுடைய பெண் வண்டுகள் இசைபாடும் சோலைகள் மிகுந்த மதுரை மாநகரின் பெருமையை அருமையான தமிழ் மொழியில் பாடி, அடியார்களால் துதி செய்யப்படும், அறுகம்புல்லுடன் பெருமைமிக்கு விளங்குகின்ற திருமுடியையுடைய சொக்கநாதப் பெருமானின் சந்நிதியில் தேவகணங்கள் சூழ்ந்திருக்க அரங்கேற்றம் செய்தான்.

அவையடக்கம் முற்றிற்று

பாண்டித் திருநாட்டுப் படலம்

32. கழுத்திலே கறையையுடைய சோமசுந்தரக் கடவுளே பாண்டிய அரசனாகி, உறையில் உள்ள ஒளி பொருந்திய வானினால் பகை இருளை நீக்கச் செய்து, வேதங்கள் கூறியுள்ள வழியில் நீதியோடு ஆண்டருளிய பாண்டித் திருநாட்டின் சிறப்பினைக் கூறுவோம்.

33. ஒலிக்கின்ற குரலையுடைய மேகங்கள், தெய்வ நாயகனான சிவபெருமானின் நீறணிந்த வெண்மையான மேனிபோல் கடலில் சென்று ஆழ்ந்து, உமையம்மையின் திருமேனிபோல் பசுமையான நிறத்தைக் கொண்டு எல்லா வகையான உயிர்களுக்கும் பிறவித் துன்பத்தை நீக்கும்படியான திருவருளைச் சுரந்திடுவது போல் நீரைச் சுரந்து மேலெழுந்தன.

34. ஒல்லென்று இடித்து முழங்கி, சூரிய ஒளியும் மங்கும்படி மின்னலாகிய வாட்படையைப் பக்கங்களில் அசைத்து, இந்திரவில்லை ஏந்தி நின்று தன் பகையாகிய கோடை மேல் நீண்ட நீராகிய அம்புகளைச் சொரிந்து, "சிறப்புடைய கொடிய போரினை முடிப்போம்" என்று வருவதைப் போல் மேகங்கள் நெருங்கின.

35. முனித னீள்வரை யுச்சிமேன் முழங்கிவா னிவந்து
தனித நீர்மழை பொழிவன தடஞ்சிலை யிராமன்
கனித னீர்மையா லாலவாய்க் கண்ணுதன் முடிமேற்
புனித நீர்த்திரு மஞ்சனம் ஆட்டுவான் போலும்.

36. சுந்த ரன்றிரு முடிமிசைத் தூயநீ ராட்டும்
இந்தி ரன்றனை யொத்தகா ரெழிலிதென் மலைமேல்
வந்து பெய்வவத் தனிமுதன் மௌலிமேல் வலாரி
சிந்து கின்றகைப் போதெனப் பன்மணி தெறிப்ப.

37. உடுத்த தெண்கடன் மேகலை யுடையபார் மகள்தன்
இடத்து தித்தபல் லுயிர்க்கெலா மிரங்கித்தன் கொங்கைத்
தடத்து நின்றிழி பாலெனத் தடவரை முகடு
தொடுத்து வீழ்வன விழுமெனத் தூங்குவெள் ளருவி.

38. கருநிற மேக மென்னுங் கச்சணி சிகரக் கொங்கை
அருவியாந் தீம்பால் சோர வகன்சுனை யென்னுங் கொப்பூழ்ப்
பொருவில்வே யென்னு மென்றோட் பொதியமாஞ் சைலப் பாவை
பெருகுதண் பொருநை யென்னும் பெண்மகப் பெற்றாள் அன்றே.

35. அகத்திய முனிவனுடைய உயர்ந்த பொதிய மலையின் உச்சியில் முழங்கி, வானில் மேலெழுந்து நீராகிய மழையைப் பொழிதல், பெரிய வில்லை ஏந்திய இராமபிரான் அன்போடு திருவாலவாயில் உள்ள நெற்றிக் கண்ணை உடைய சிவபெருமானின் திருமுடியின் மேல் திருமஞ்சனம் செய்தலை ஒக்கும்.

36. கரியமேகங்கள் பொதிய மலையின்மீதுவந்து மழையைப் பொழிதல், சோமசுந்தரப் பெருமான் மீது தூயநீரால் அபிடேகம் செய்யும் இந்திரனை ஒக்கும். அப்பெருமான் திருமுடிமேல் தேவேந்திரன் கையினால் சொரிகின்ற மலர்களைப் போல அம்மேகங்களினின்றும் பல்வகை மணிகள் சிந்தின.

பொருநையாகிய பெண்

37. தெளிந்த கடலாகிய ஆடையைத் தரித்த பூமாதேவி தன்னிடத்துத் தோன்றிய பல்வகையான உயிர்களிடத் தெல்லாம் அன்பு கொண்டு கொங்கையினின்றும் பாலைச் சொரிவது போல் பொதிய மலையினின்றும் மெல்லிய இனிய ஒலியோடு அருவிகள் கீழே விழும்.

38. கொப்பூழ் போன்ற அகன்ற சுனையையும் மூங்கில் போன்ற மெல்லிய தோளையும் உடைய மலை மடந்தை, கரிய மேகங்கள் என்னும் கச்சினை அணிந்த சிகரமாகிய கொங்கைகளில் இருந்து மதுரம் நிறைந்த பாலானது அருவி போன்று ஒழுக பொருநை (தாமிரபரணி) என்னும் பெண் குழந்தையைப் பெற்றெடுத்தாள்.

39. கல்லெனக் கரைந்து வீழுங் கடும்புனற் குழவி கானத்
தொல்லெனத் தவழ்ந்து தீம்பா லுண்டொரீஇத்
திண்டோண் மள்ளர்
சொல்லெனத் தெழிக்கும் பம்பைத் தீங்குரல்
செவிவாய்த் தேக்கி
மெல்லெனக் காலிற் போகிப் பணைதொறும்
விளையாட்டு எய்தி.

40. அரம்பைமென் குறங்கா மாவி னவிர்தளிர் நிறமாத்
தெங்கின்
குரும்பைவெம் முலையா வஞ்சிக் கொடியிறு
நுசுப்பாக் கூந்தல்
சுரும்பவிழ் குழலாக் கஞ்சஞ் சுடர்மதி முகமாக்
கொண்டு
நிரம்பிநீள் கைதை வேலி நெய்தல்சூழ் காவில் வைகி.

41. பன்மலர் மாலை வேய்ந்து பானுரைப் போர்வை
போர்த்துத்
தென்மலைத் தேய்ந்த சாந்த மான்மதச் சேறு பூசிப்
பொன்மணி யாரந் தாங்கிப் பொருநையாங் கன்னி
முந்நீர்த்
தன்மகிழ் கிழவ னாகந் தழீஇக்கொடு கலந்த தன்றே.

42. வல்லைதா யிருபால் வைகுஞ் சிவாலய மருங்கு
மீண்டு
முல்லையா னைந்துந் தேனுந் திரைக்கையான்
முகந்து வீசி
நல்லமான் மதஞ்சாந் தப்பி நறுவிரை மலர் தூய்
நித்தஞ்
செல்லலாற் பூசைத் தொண்டின் செயல்வினை
மாக்கள் போலும்.

39. கடிய வேகத்துடன் ஒலி எழுப்பியபடி விழுகின்ற அப்பொருநை என்னும் குழந்தையானது அழகாகக் குறிஞ்சி நிலத்தில் தவழ்ந்து, இனிய முல்லைப் பாலை அருந்தி, அங்கிருந்து நீங்கி வலிய தோளையுடைய உழவர்களின் (மருதம்) பம்பை என்னும் இசைக் கருவியின் ஓசையைக் கேட்டு மகிழ்ந்து பண்ணையில் சென்று விளையாடியது.

40. பின்பு வாழை மரங்களைத் தொடையாகவும், மாந்தளிர்களை நிறமாகவும், வஞ்சிக் கொடியை ஒடிகின்ற இடையாகவும், கூந்தற்பனையின் மடலை வண்டுகள் மொய்க்கும் கூந்தலாகவும், தாமரை மலரை ஒளி பொருந்திய முகமாகவும் கொண்டு நிரம்பி நீண்ட தலையாகிய வேலியையுடைய நெய்தல் நிலத்தையடைந்து சோலையில் தங்கியது.

41. பல விதமான மலர் மாலைகளை அணிந்து, பால் போன்ற நுரைப் போர் வையைப் போர்த்திக் கொண்டு பொதிய மலையில் அரைபட்ட சந்தனத்தோடு கலந்த கத்தூரிக் குழம்பைப் பூசி, பொன்மணி ஆரம் பூண்டு பொருநை நதி கடலாகிய தன் கணவன் மார்பைத் தழுவிக் கலந்தது.

பொருநை நதியின் சிறப்பு

42. பொருநை நதி விரைந்து தாவிக் கொண்டு தன் இருகரைகளிலும் உள்ள சிவாலயங்களை அடைந்து, முல்லை நிலத்திலுள்ள பஞ்ச கவ்வியங்களையும், தேனையும் தன் அலையாகிய கரங்களால் மொண்டு வீசியும், நல்ல கஸ்தூரியையும் சந்தனத்தையும் பூசியும், வாசனை மிக்க மலர்களைத் தூவியும் தாவிச் செல்லுதல் சிவபூசை செய்யும் அடியார்களைப் போல் தோற்றமளிக்கும்.

(பஞ்சகவ்வியம் - பால், தயிர், நெய், கோமயம் (பசுவின் சாணம்) கோசலம் (பசுவின் சிறுநீர்) இவை ஐந்தும் விதிப்படி கலந்த பொருள்.

43. அரும்பவி ழணங்க வாளி யலைதர வாகம்
பொன்போர்த்
திரங்கிவா லன்ன மேந்தி யிருகையும் சங்கஞ் சிந்தி
மருங்குசூழ் காஞ்சி தன்னவரம்பிற வொழுகும் மாரி
பரம்பரற் கையம் பெய்யும் பாா்ப்பன மகளிர் போலும்.

44. வரைபடு மணியும் பொன்னும் வைரமுங் குழையும்
பூட்டி
அரைபடு மகிலுஞ் சாந்து மப்பியின் னமுத மூட்டிக்
கரைபடு மருத மென்னும் கன்னியைப் பருவ
நோக்கித்
திரைபடு பொருநை நீத்தஞ் செவிலிபோல் வளர்க்கு
மாதோ.

45. மறைமுதற் கலைக ளெல்லா மணிமிடற் றவனே
யெங்கும்
நிறைபர மென்றும் பூதி சாதனநெறி வீடென்றும்
அறைகுவ தறிந்துந் தேறா ரறிவெனக் கலங்கி யங்கி
முறையின்வீ டுணர்ந்தோர் போலத் தெளிந்தது
மூரி வெள்ளம்.

46. மறைவழி கிளைத்த வெண்ணெண் கலைமகள்
போல் வருநீர் வெள்ளந்
துறைவழி யொழுகும் பல்கால் சோலைதண் பழனஞ்
செய்தேன்
உறைவழி யோடை எங்கு மோடிமன் றுடையார்க்
கன்பர்
நிறைவழி யாத வுள்ளத் தன்புபோ னிரம்பிற் றன்றே.

43. மன்மதபாணமாகிய மொட்டவிழ்ந்த மலர்களை அலைகள் ஒதுக்கித் தள்ள, தேமலாகிய பொன்மணலைப் பெற்று ஓசையிடும் அழகிய அன்னப் பறவைகளைத் தாங்கி, இருகரைகளிலும் சங்குகளை வீசி, பக்கங்களில் உள்ள காஞ்சி மரங்களைத் தள்ளிக் கொண்டு இருகரையும் உடையும்படி செல்லும் பொருநை நதி சிவபெருமானுக்கு ஐயமிடும் தாருகாவனத்து முனிவர்களின் மனைவியரைப் போல் காட்சி அளிக்கும்.

44. பொருநை வெள்ளமானது மருத நிலமாகிய மங்கைக்கு மலையிடத்துள்ள மணி, பொன், வைரம், குழை என்பவற்றைப் பூட்டி, அகிலும் சந்தனமும் பூசி, இனிய அமுதத்தை உண்டாக்கச் செய்து அவள் பருவத்திற்கு ஏற்றவற்றை ஆராய்ந்து வளர்க்கின்ற செவிலித் தாயைப் போல் விளங்கும்.

பொருநை வெள்ளம்

45. நீலகண்டனான சிவபெருமானே எங்கும் நிறைந்த பரம்பொருள் என்றும் திருநீறு முதலிய சாதனங்களே வீடுபேற்றுக்கு வழி என்றும், வேதம் முதலிய கலைகள் கூறுவதை அறிந்து வைத்தும் தெளியாதவரின் அறிவின் கலக்கம் போல் பொருநையின் பெருவெள்ளம் கலங்கியோடும். பின்னர் சைவநெறியால் அறிவு விளக்கம் பெற்ற பெரியோரின் திருவுள்ளத்தின் தெளிவு போல் தெளிவடைந்து ஓடும்.

46. வேதத்தினின்றும் உண்டான அறுபத்து நான்கு கலைகளைப் போல் அப்பொருநை நதியின் வெள்ளம் நீர்த்துறையினின்று கிளைத்துப் பல வாய்க்கால்களாக மருத நிலத்திலுள்ள ஊர்களிலும் சோலைகளிலும் வயல்களிலும், மலர் ஓடைகளிலும் மற்றைய இடங்களிலும் விரைந்து சென்று சிவனடியார்களின் திருவுள்ளத்தின்கண் நிறைந்த அன்பைப் போல் நிரம்பி வழிந்தது-

47. இழிந்த மாந்தர்கைப் பொருள்களும் இகபரத் தாசை
கழிந்த யோகியர் கைப்படிற் றூயவாய்க் களங்கம்
ஒழிந்த வாறுபோ லுவரியுண் டுவர்கெடுத் தெழிலி
பொழிந்த நீரமு தாயின புவிக்கும்வா னவர்க்கும்.

48. ஈறி லாதவள் ஒருத்தியே யைந்தொழி லியற்ற
வேறு வேறுபேர் பெற்றென வேலைநீ ரொன்றே
யாறு கால்குளங் கூவல்குண் டகழ்கிடங் கெனப்பேர்
மாறி யீறில்வான் பயிரெலாம் வளர்ப்பது மாதோ.

49. களமர்கள் பொன்னேர் பூட்டித் தாயர்வாய்க்
கனிந்த பாடற்
குளமகிழ் சிறாரி னேறு மொருத்தலு முவகை தூங்க
வளமலி மருதம் பாடி மனவலி கடந்தோர் வென்ற
அளமரு பொறிபோ லேவ லாற்றவள் வினையின்
மூண்டார்.

50. பலநிற மணிகோத் தென்னப் பன்னிற வேறு பூட்டி
அலமுக விரும்புதேய வாள்வினைக் கருங்கான்
மள்ளர்
நிலமகள் உடலங் கீண்ட சால்வழி நிமிர்ந்த சோரிச்
சலமென நிவந்த செங்கேழ்த் தழன்மணி யிமைக்கு
மன்னோ.

47. கீழ் மக்களிடத்திலுள்ள பொருள்களும், இம்மை மறுமைப் பயன்களில் அவா நீங்கிய சிவயோகியரின் திருக் கரத்தில் பட்டால் குற்றம் நீங்கித் தூய்மை அடைதல் போல், மேகமானது கடல்நீரை உண்டு, அதில் உள்ள உப்பைப் போக்கித் தூய்மையாக்கிப் பொழிந்த மழையானது உலகத்து உயிர்கட்கும் தேவர்கட்கும் அமுதமாயின.

48. அழிவில்லாதவளாகிய சிவசக்தியே படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்ற ஐவகைத் தொழில்களையும் நடத்தற் பொருட்டு வெவ்வேறு பெயர்களைப் பெற்று நின்றாற்போல், கடல் நீர் ஒன்று மட்டுமே, ஆறு, கால்வாய், குளம், கிணறு, அகழி எனப் பலவகைப் பெயர்களைப் பெற்று அளவற்ற பயிர்களை வளர்க்கும்.

49. தாயாரின் வாயிலிருந்து வருகின்ற இனிய பாடலுக்கு மகிழ்வடைகின்ற குழவிபோன்று எருதுகளும் எருமைக் கடாக்களும் மகிழ்ச்சியடைய மருத நிலத்தில் உள்ள உழவர்கள், வளம் மிகுந்த மருதப்பண்ணைப் பாடிக்கொண்டு பொன்னேர் பூட்டி உழுவார்கள். உழவுத் தொழிலினைச் செய்யும் அவர்தம் காட்சியானது, மனவலி கடந்தோரால் வெல்லப்பட்ட ஐம்பொறிகளும் ஒருவழி நின்று அவர் ஏவல் ஏற்றுச் செலாற்றுவதைப் போலிருந்தது.

50. பலவித மணிகளைக் கோத்தது போன்று பல்வேறு நிறங்களைக் கொண்ட எருதுகளைப் பூட்டிக் கலப்பை நுனியில் உள்ள இரும்பாலான கொழு தேயும்படி, உழவுத் தொழில் செய்யும் வலிய கால்களையுடைய உழவர்கள் நிலமகளின் உடலைக் கிழித்த படைச் சாலியின் வழியே, பொங்கிய இரத்த வெள்ளத்தைப் போல, செந்நிறம் உடைய நெருப்புப் போன்ற மணிகள் ஒளி வீசி நிற்கும்.

51. ஊறுசெய் படைவாய் தேய வுழுநரு நீர்கால் யாத்துச்
சேறுசெய் குநருந் தெய்வம் தொழுதுதீஞ் செந்நெல் வீசி
நாறுசெய் குநரும் பேர்த்து நடவுசெய் குநருந் தெவ்வின்
மாறுசெய் களைகட்டோம்பி வளம்படுக் குநரும் ஆனார்.

52. பழிபடு நறவந் தன்னைக் கடைசியர் பருகிச் செவ்வாய்
மொழி தடுமாற வேர்வை முகத்தெழ முறுவல் தோன்ற
விழிசிவந் துழலக் கூந்தன் மென்றுகில் சோர வுள்ளக்
கழிபெருங் களிப்பு நல்கிக் கலந்தவ ரொத்த தன்றே.

53. பட்பகையாகுந் தீஞ்சொற் கடைசியர் பவளச் செவ்வாய்க்
குட்பகை யாம்ப லென்று மொண்ணறுங் குவளை நீலங்
கட்பகை யாகு மென்றுங் கமலநன் முகத்துக் கென்றும்
திட்பகை யாகு மென்றுஞ் செறுதல்போற் களைதல் செய்வார்.

54. கடைசியர் முகமும் காலும் கைகளும்கமல மென்னார்
படைவிழி குவளை யென்னார் பவளவாய் குமுத மென்னார்
அடையவுங் களைந்தார் மள்ளர் பகைஞரா யடுத்த வெல்லை
உடையவ னாணை யாற்றா லொறுப்பவர்க் குறவுண் டாமோ

51. பின்பு கலப்பையின் முகம் தேயும்படி உழுவார்கள். நீரைக் கட்டி சேறாக்குவார்கள். மருத நிலத்தின் தெய்வமான இந்திரனை வணங்கி இனிய செந்நிறமுடைய நெல் முளைகளை விதைப்புச் செய்வார்கள். நாற்றைப் பெயர்த்து எடுத்து நடவு செய்வார்கள். பகைவர்களைப் போன்று பகை செய்கின்ற பயிர்களிடையே தோன்றும் களைகளைக் களைந்து எடுப்பார்கள். பாதுகாத்து அவ்வுழவர்கள் அதனை வளர்ப்பார்கள்.

பயிரின் களைகளை நீக்குதல்

52. பழிக்கப்படுகின்ற கள்ளை உழத்தியர்கள் பருகியதால், அவர்களின் சிவந்த வாயினின்று வருகின்ற மொழி தடுமாறவும், முகத்தில் வேர்வை தோன்றவும் விழி சிவந்து உழலவும், கூந்தலும் மெல்லிய ஆடையும் சரியவும் தோன்றும் அவர் நிலை, உள்ளத்தில் மிகப் பெரிய களிப்பு ஊறப் புணர்ந்த மகளிரின் நிலையை ஒத்திருந்தது.

53. பண்ணுக்குப் பகையாகிய இனிய மொழியை உடைய உழத்தியர் தங்கள் பவளம் போன்ற சிவந்த வாய்க்கு ஆம்பம் மலர்கள் உட்பகை என்று கருதி அவற்றை நீக்கினர். கண்களுக்கு, ஒள்ளிய வாசனையுடைய செங்குவளையும் கருங்குவளையும் பகை என்று கருதி அவற்றை நீக்கினர். நல்ல அழகிய முகத்திற்குத் தாமரை மலர்கள் பகையென்று அவற்றையும் நீக்கினர்.

54. உறவினராயினும் பகைவராய் வந்த போது அரசனின் ஏவல் வழி நின்று தண்டிக்கின்ற தண்டலர்க்கு அவ்வுறவை நினைத்தல் இயலாது போல, உழவர்களும் தங்கள் உழத்தியரின் அவயங்களான முகம், கால், கைகளுக்குத் தாமரையும், வேல் போன்ற கண்களுக்கு நீல மலரும், பவளம் போன்ற வாய்க்கு குமுதமும் உவமை என்று கருதாமல் அவற்றை அடியோடு களைந்து எறிந்தனர்.

55. புரையற வுணர்ந்தோர் நூலின் பொருளினுள்
ளடங்கி யந்நூல்
வரையறை கருத்து மான வளர்கருப் புறம்பு
தோன்றிக்
கரையமை கல்வி சாலாக் கவிஞர்போ லிறுமாந்து
அந்நூல்
உரையென விரிந்து கற்பின் மகளிர்போ லொசிந்த
தன்றே.

56. அன்புறு பத்தி வித்தி யார்வநீர் பாய்ச்சுந் தொண்டர்க்
கின்புரு வான வீச னின்னருள் விளையு மாபோல்
வன்புறு கருங்கான் மள்ளர் வைகலுஞ் செவ்வி
நோக்கி
நன்புல முயன்று காக்க விளைந்தன நறுந்தண் சாலி.

57. அகனில வேறு பாட்டின் இயல்செவ்வி யறிந்து
மள்ளர்
தகவினை முயற்சி செய்யக் காமநூல் சாற்று நான்கு
வகைநலார் பண்புசெல்வி யறிந்துசேர் மைந்தர்க்
கின்பம்
மிகவிளை போகம் போன்று விளைந்தன பைங்கூ
ழெல்லாம்.

58. கொடும்பிறை வடிவிற் செய்த கூனிரும் பங்கை
வாங்கி
முடங்குகால் வரிவண் டார்ப்ப முள்ளரைக் கமல நீலம்
அடங்கவெண் சாலி செந்நெல் வேறுவே றரிந்தீடாக்கி
நெடுங்களத் தம்பொற் குன்ற நிரையெனப்
பெரும்போர் செய்தார்.

நெற்பயிர் வளர்ச்சி

55. நெற் பயிர்கள், பெரியோர் இயற்றிய நூலில் பொதிந்து கிடக்கும் உண்மைப் பொருள் போல், தம்மிடம் வளர்கின்ற கருவை உண்டாக்கியவாறு காட்சியளிக்கும். பிறகு நூற்பொருளின் கருத்துரை போல் சிறிது வெளியே தோன்றும். அதன் பிறகு இலக்கண வரம்பு அமையப் பெற்ற கல்வியானது நிறையப் பெறாத கவிஞர் இறுமாத்தல் போல் தலை நிமிர்ந்து நிற்கும். முடிவில் நூலின் உரை விரிந்தது போல் கதிர்களை விரித்துக் கற்புடை மகளிர் தலை வணங்குதல் போல் தலை வணங்கி நிற்கும்.

56. அன்பு மிகுந்த பக்தியாகிய விதையை விதைத்து, ஆர்வமாகிய நீரினைப் பாய்ச்சுகின்ற அடியார்களுக்கு இன்பமே உருவான சிவபெருமானின் இனிய திருவருளாகிய பயன் விளைதல் போல், வலிய காலினை உடைய உழவர்கள் நாள்தோறும் பருவம் அறிந்து தங்கள் நல்ல விளை நிலங்களைப் பாடுபட்டுக் காக்க நெற்பயிர்கள் நன்கு விளைந்தன.

57. காம நூலில் கூறப்பட்ட நான்கு வகைப் பெண்களின் தன்மைகளையும், பருவத்தையும் அறிந்து அவர்களோடு கலவி செய்யும் ஆடவர்களுக்கு மிக அதிக இன்பம் கிட்டுவது போன்று, அகன்ற நிலங்களின் தன்மைகளையும் பருவத்தையும் தெரிந்து, அவற்றிற்குத் தகுந்தாற் போல் முயற்சி செய்து உழவு செய்யும் உழவர்களுக்கு அதிகப் பயன் கிட்டியது.

58. பிறைச் சந்திரனின் வளைந்த வடிவம் போல் செய்யப்பட்ட அரிவாளைக் கையில் ஏந்தி, வளைந்த கால்களையும் கீற்றுகள் போன்ற இறக்கைகளையும் உடைய வண்டுகள் ஓசை பட்டு ஓட, முள் நாளத்தினையுடைய தாமரை, குவளை போன்றவற்றோடு வெண்ணெல், செந்நெல் இவற்றை வெவ்வேறாக அறுத்து எடுத்தார்கள். பின்னர் அவற்றை கற்றைகளாகக் கட்டி, அழகிய பொன் மலைகளின் வரிசை என்று கருதத்தக்க வகையில் போர்களாகக் குவித்தார்கள்.

59. கற்றறைவை களைந்து தூற்றிக் கூப்பியூர்க் காணித்
தெய்வம்
அற்றவர்க் கற்ற வாறுஈந் தளவைகண் டாறி
லொன்று
கொற்றவர் கடமை கொள்ளப் பண்டியிற் கொடு
போய்த் தென்னா
டுற்றவர் சுற்றந் தெய்வம் விருந்தினர்க்
கூட்டியுண்பார்

60. சாறடு கட்டி யெள்ளுச் சாமைகொள் ளிறுங்கு
தோரை
ஆறிடு மதமால் யானைப் பழுக்குலை யவரை
யேனல்
வேறிபல் பயறோ டின்ன புன்னில விளைவு மற்றும்
ஏறொடு பண்டி யேற்றி யிருநிலங் கிழிய வுய்ப்பார்.

61. துறவின ரீச சேனசத் தொண்டினர் பசிக்கு நல்லூண்
டிறவினைப் பிணிக்குத் தீர்க்கு மருந்துடற் பனிப்புக்
காடை
உறைவிடம் பிறிது நல்கி யவரவ ரொழுகிச் செய்யும்
அறவினை யிடுக்க ணீக்கி யருங்கதி யுய்க்க வல்லார்.

62. நிச்சலு மீச னன்பர் நெறிப்படிற் சிறார்மேல் வைத்த
பொச்சமில் அன்பு மன்னர் புதல்வரைக் கண்டாலன்ன
அச்சமுங் கொண்டு கூசி யடிபணிந் தினிய கூறி
இச்சையா றொழுகி யுள்ளக் குறிப்பறிந் தேவல்
செய்வார்.

59. பின்னர் அடித்து வைக்கோலை நீக்கிப் பதர்போகத் தூற்றி நெல்லைப் பொலிகளாகக் குவிப்பார்கள். கிராம தேவதைகளுக்கும், வறியவர்களுக்கும் முறைப்படி கொடுத்து அளந்து ஆறில் ஒரு பங்கை அரசர்களுக்கு இறைபொருளாகக் கொடுப்பார்கள். மீதியை வண்டியில் ஏற்றிச் சென்று தென்புலத்தார்களுக்கும், உறவினர்களுக்கும் தெய்வங் களுக்கும், விருந்தினர்களுக்கும் அளித்துத் தாங்களும் உண்பார்கள்.

60. பாண்டிய நாட்டில், நெல் மட்டுமின்றிக் கருப்பஞ் சாற்றில் காய்ச்சிய வெல்லம், எள், சாமை, கொள், சோளம், மலை நெல், ஆற்று வெள்ளம் போல் மதநீரைச் சொரிகின்ற யானையின் விலா எலும்பு போன்ற அவரைக் குலை, தினை, பலவகைப் பயிறுகள் முதலிய புன்செய் நில விளை பொருள் களையும் உழவர்கள் எருதுகளிலும் வண்டிகளிலும் ஏற்றி இப்பெரிய நிலம் கிழியும்படி வீட்டிற்குக் கொண்டு செல்வர்.

61. பாண்டிய நாட்டு மக்கள் துறவிகளுக்கும், பெருமானிடம் அன்பு பூண்ட தொண்டர்களுக்கும், பசியைப் போக்க நல்ல உணவு, நோய் நீக்க மருந்து உடம்பின் குளிரைப் போக்க உடை, தங்குமிடம் வேறு தேவையான பொருள்கள் போன்றவற்றை அளித்து, அவரவர் தத்தம் நிலையில் மாறுபடாமல் செய்கின்ற அறத்திற்கு நேரும் இடையூறுகளைப் போக்கி அவர்களை வீட்டு நெறியில் செலுத்துவார்கள்.

62. அரசனிடம் கொண்டுள்ள அன்பின் காரணமாக அவ்வரசனின் மகன் எதிர்ப்படினும், அவன் சிறுவனாக இருந்தாலும், அவனிடத்திலும் அச்சமும் பக்தியும் கொண்டு அடிபணிந்து இனிய கூறி, அவனின் ஏவல்படி நடப்பர். அது போன்றே சிவனடியார் எதிர்ப்படினும், அச்சிவனிடம் கொண்ட அன்பையும் பணிவையும் அவ்வடியார் இடத்திலும் செலுத்தி நிற்பர்.

63. நறைபடு கனிதேன் பெய்த பாலொடு நறுநெய்
வெள்ளம்
நிறைபடு செம்பொன் வண்ணப் புழுக்கலா னிமிர்ந்த
சோறு
குறைவற வுண்டு வேண்டும் பொருள்களும் கொண்மி
னென்ன
மறைமுத லடியார் தம்மை வழிமறித் தருத்துவார்கள்.

64. பின்னெவ னுரைப்ப தந்தப் பெருந்தமிழ் நாடாங்கன்னி
தன்னிடை யூர்க ளென்னு மவயவந் தாங்கச் செய்த
பொன்னியற் கலனே கோயின் மடமறப் புறநீர்ச் சாலை
இன்னமு தருத்து சாலை யெனவுருத் திரிந்த தம்மா.

திணை மயக்கம்

65. இன்ற டம்புனல் வேலிசூழ் இந்நில வரைப்பிற்
குன்ற முல்லைதண் பணைநெய்தல் குலத்தினை
நான்கும்
மன்ற வுள்ளமற் றவைநிற்க மயங்கிய மரபின்
ஒன்றோ டொன்றுபோய் மயங்கிய திணைவகை
யுரைப்பாம்.

66. கொல்லை யானிரை மேய்ப்பவர் கோழிணர்க்
குருந்தின்
ஒல்லை தாயதிற் படர் கறிக் கருந்துண ருகுப்ப
முல்லை சோறெனத் தேன்விராய் முத்திழை சிற்றில்
எல்லை யாயமோ டாடுப வெயின்சிறு மகளிர்.

63. வேதமுதல்வனாகிய சிவபெருமானின் அடியார்கள் எதிர்பட்டால், அதிக நெய் பெய்த பொன்னிறமான பருப்புச் சோறு, உயர்ந்த வேறு வகைச் சோறு, தேன் போன்ற கனி, நல்ல பால் ஆகிய இவற்றைக் குறைவின்றி உண்ண வேண்டுமென்றும், வேண்டிய அளவு பொருள்களைப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்றும், அவர்களை வேண்டி வழிமறித்து, அழைத்துச் சென்று உண்பிப்பார்கள்.

64. அச்சிறப்புப் பொருந்திய பாண்டிய நாடாகிய கன்னிக்குத் தன்னிடம் உள்ள ஊர்களே உறுப்புகளாகும். அவ்வுறுப்புகளில் விளங்கும் அணிகலன்களே திருக்கோயில், திருமடம், அறச்சாலை, தண்ணீர்ப் பந்தல், அன்னசாலை முதலியனவாகும். இதனை இவ்வாறு கூறுவதன்றி வேறு எவ்வாறு கூற முடியும்?

திணை மயக்கம்

65. இனிய அகன்ற நீர்வேலியால் சூழப்பட்ட இப்பாண்டிய நாட்டெல்லையில், குறிஞ்சி, முல்லை, குளிர்ந்த மருதம், நெய்தல் ஆகிய உயர்ந்த நான்கு திணைகளும் உள்ளன. அந்நிலங்கள் ஒன்றோடொன்று நெருங்கியுள்ள முறைமையால், ஒரு திணையினுடைய கருப்பொருள் வேறொரு திணையுடன் கலந்த மாறுபாட்டினைக் கூறுவோம்.

66. முல்லை நிலத்தில் பசுக் கூட்டங்களை மேய்த்து வரும் ஆயர்கள், கொழுவிய பூங்கொத்துகளையுடைய குருந்த மரத்தின்மேல் விரைந்து ஏறி அதில் படர்ந்துள்ள மிளகுக் கொடியில் உள்ள கரியமிளகுக் கொத்துகளை உதிர்ப்பார்கள். குறிஞ்சி நிலத்தைச் சேர்ந்த வேட்டுவச் சிறுமியர் நெய்தல் நிலத்தில் உள்ள முத்துக்களினால் கட்டிய சிறு வீட்டில் முல்லை அரும்புகளே சோறாக, அவற்றோடு தேனைக் கலந்து மகளிர் கூட்டத்துடன் விளையாடுவர்.

67. கன்றோ டுங்களி வண்டுவாய் நக்கவீர்ங் கரும்பு
மென்று பொன்சொரி வேங்கைவா யுறங்குவ மேதி
குன்றி ளந்தினை மேய்ந்துபூங் கொழுநிழன் மருதஞ்
சென்று தங்குவ சேவகம் எனமுறச் செவிமா.

68. எற்று தெண்டிரை யெறிவளை யெயிற்றியர் இழைத்த
சிற்றில் வாய்நுழைந் தழிப்பவச் சிறுமியர் வெகுண்டு
பற்றி லாரெனச் சிதறிய மனவணி பரதர்
முற்றி லாமுலைச் சிறுமியர் முத்தொடும் கோப்ப.

69. முல்லை வண்டுபோய் முல்லையாழ் முளரிவாய்
மருதம்
வல்ல வண்டினைப் பயிற்றிப்பின் பயில்வன மருதங்
கொல்லை யான்மடி யெறிந்திளங் குழவியென்று
இரங்கி
ஒல்லை யூற்றுபால் வெள்ளத்து ளுகள்வன வாளை.

70. கரும்பொற் கோட்டிளம் புன்னைவாய்க்
கள்ளுண்டு காளைச்
சுரும்பு செவ்வழிப் பாண்செயக் கொன்றைபொன்
சொரிவ
அருந்த டங்கடல் வளையெடுத்து ஆழியான்
கையில்
இருந்த சங்கென விறைகொளப் பூவைமே லெறிவ.

67. எருமைகள், தம் கன்றுகளும், களித்த வண்டுகளும் குளிர்ந்த கரும்பினைக் குதட்டியதால் இனிமையான கடைவாயினை நக்கும்படி பொன் போலும் பூக்களை உதிர்க்கின்ற வேங்கைமர நிழலில் தூங்குவன. முறம் போன்ற காதுகளையுடைய யானைகள் குறிஞ்சி நிலத்தில் உள்ள முதிராத தினைக்கதிர்களைத் தின்றுவிட்டுப் பூக்கள் நிறைந்த மருத மரநிழலில் சென்று உறங்கும்.

68. வேடச்சிறுமிகள் கட்டிய சிறு வீட்டின்கண் கடல் அலைகள் வீசிய சங்குகள் புகுந்து அழிக்கும். அச்சிறுமியர் கோபம் கொண்டு கழற்றி வீசிய அக்குமணி அணிகளை, இளமையான தனங்களையுடைய பரதவச் சிறுமிகள் முத்துக்களோடு சேர்த்து கோவை செய்வர். (அக்குமணி- பெண்கள் அணியும் ஒருவித அணி)

69. முல்லை நிலத்தில் உள்ள வண்டுகள், தாமரைப் பூவில் உள்ள மருத நிலத்து வண்டுகளிடம் சென்று, தமக்குரிய முல்லைப் பண்ணை அம்மருத நிலத்து வண்டுகட்குக் கற்பித்துப் பின் அவ்வண்டுகளிடம் இருந்து மருதப் பண்ணை தாம் கற்கும்.

வாளை மீன்கள் முல்லை நிலத்தில் உள்ள பசுவின் மடியில் மோதி, அப்பசு தன் கன்று முட்டியதென்று மனமுருகி விரைந்து சொரிகின்ற பால் வெள்ளத்தில் தாவுவன.

70. கரும்பு போன்ற பொற்கொம்புகளுடைய இளமையான புன்னை மலரின் தேனைப் பருகி ஆண் வண்டுகள் இனிய செவ்வழிப் பண்ணினைப் பாடும். கொன்றை மரங்கள் பொன் போன்ற பூக்களைப் பொழியும். அளவிட முடியாத பெரிய கடலானது தன்னிடத்தில் உள்ள சங்கினை எடுத்துச் சக்கரப் படையையுடைய திருமாலின் கையில் உள்ள பாஞ்ச சந்நியம் என்று கருதும்படி முல்லை நிலத்தில் உள்ள காசாம் பூவின் மீது எறியும்.

71. கழிந்த தெங்கினொண் பழம்பரீஇ முட்பலாக் கனிகீண்
டழிந்த தேனுவர்க் கேணிபாய்ந் தகற்றுவ வுவரை
வழிந்த தேன்மடற் கேதகை மலர்நிழல் குருகென்
றொழிந்த தாமரைப் போதுபுக்கு ஒளிப்பன கெண்டை.

72. ஆறு சூழ்கழிப் புலால்பொறா தசைந்துகூன் கைதை
சோறு கால்வன வாம்பல்வாய் திறப்பன துணிந்து
கூறு வாரெனக் குவளைகண் காட்டிடக் கூடித்
தூறு வாரெனச் சிரித்துஅலர் தூற்றுவ முல்லை.

73. துள்ளு சேல்விழி நுளைச்சியர் சுறவொடு மருந்தக்
கள்ளு மாறவும் கூனலங்காய் தினை யவரை
கொள்ளு மாறவுங் கிழங்குதேன் கொழுஞ்சுவைக்
கன்னல்
எள்ளு மாறவும் அளப்பன விடைக்கிடை முத்தம்.

74. அவமி கும்புலப் பகைகடந் துயிர்க்கெலா மன்பாம்
நவமி குங்குடை நிழற்றிமெய்ச் செய்யகோ னடாத்திச்
சிவமி கும்பர ஞான மெய்த் திருவொடும் பொலிந்து
தவமி ருந்துஅர சாள்வது தண்டமிழ்ப் பொதியம்.

71. குலையினின்று நீங்கிய தென்னையின் காய்களைப் பறித்தலால் முட்களையுடைய பலாப் பழங்கள் கிழிபட்டு அதிலிருந்து தேன் பெருகும். அத்தேன் நெய்தல் நிலத்தில் உள்ள உப்புக்கேணிகளில் பாய்ந்து அந்நீரில் உவர்ப்புத் தன்மையை நீக்கும். மருத நிலத்தில் உள்ள கெண்டை மீன்கள் நெய்தல் நிலத்துத் தேன் சிந்தும் இதழ்களையுடைய தாழம்பூவின் நிழலைக் கொக்கு என்று அஞ்சித் தாமரை மலரில் புகுந்து மறையும்.

72. நெய்தலைச் சேர்ந்த தாழை மலர்கள் ஆறாகச் சூழ்ந்த உப்பங்கழிகளின் புலால் நாற்றத்தைப் பொறுக்க முடியாமல், உடல் நடுங்கி மகரந்தமாகிய சோற்றைக் கக்கும். அப்போது ஆம்பல் மலர்கள் அவற்றை உண்ணுவது போன்று வாயைத் திறந்து அதனை ஏற்கும். அதனைக் கண்ட குவளை மலர்கள் கண்ணால் அறிவிக்க முல்லைச் செடிகள் கூடிப் பிறர் குற்றத்தையே சொல்லிச் சொல்லி நகைக்கின்ற பழி தூற்றுகின்றவரைப் போன்று பழம் பூக்களைத் தூற்றும்.

73. துள்ளுகின்ற கெண்டை மீன்களைப் போன்ற கண்களையுடைய நெய்தல் நிலப் பெண்கள், சுறாமீனோடு உண்ண வேண்டிய கள்ளையும் இனிய கரும்பையும் வாங்க வேண்டியும் புளியங்காய், தினை, கிழங்கு இவைகளையும் வாங்க வேண்டியும், அவரை கொள் எள் இவற்றை வாங்கவும் இப்பொருள்களின் அளவுக்களவு முத்துக்களை அளித்துப் பெறுவர்.

பொதியமலைச் சிறப்பு

74. ஐம்புலனாகிய பகையை வென்று உயிர்கள் அனைத்திற்கும் அருளாகிய புதுமைமிக்க குடையால் நிழலைச் செய்து வாய்மையாகிய செங்கோலைச் செலுத்திச் சிவப்பேறு மிகுவதற்குக் காரணமாகிய சிவஞானமாகிய அழியா செல்வத்துடன் விளங்கித் தவமானது வீற்றிருந்து ஆட்சி புரிவதற்கு இடமாக விளங்குவது இனிய செந்தமிழையுடைய பொதிய மலையாகும்.

75. வான யாறுதேய்ந் துயரிய மலயமே முக்கண்
ஞான நாயக னம்மலை யோர்த்தகார் நால்வாய்
ஆனை யீருரி யம்மழை யகும் பதன் புண்ணீர்
கூனல் வான்சிலை குருதிதோய் கோடுபோன்று அன்றே.

76. சுனைய கன்கரைச் சூழல்வாய்ச் சுரும்புசூழ் கிடப்ப
நனைய விழ்ந்தசெங் காந்தண்மேல் நாகிள வேங்கைச்
சினைய விழ்ந்தவி கிடப்பபொன் றோய்கலத் தெண்ணீர்
அனைய பொன்சுடு நெருப்பொடு கரியிருந் தனைய.

77. குண்டுநீர்ப்படு குவளைவாய்க் கொழுஞ்சினை மரவம்
வண்டு கூப்பிடச் செம்மறூய்ப் புதுமது வார்ப்ப
அண்டர் வாய்ப்பட மறைவழி பொரிசொரிந் துஆனெய்
மொண்டு வாக்கிமுத் தீவினை முடிப்பவ ரனைய.

78. அகிலு மாரமுந் தழன்மடுத் தகழ்ந்தெறிந் தழல்கால்
துகிரு மாரமுந் தொட்டெறிந் தைஐவனம் தூவிப்
புகரின் மால்கரி மருப்பினால் வேலிகள் போக்கி
இகலில் வான்பயிர் ஒம்புவ வெயினர்தஞ் சீறூர்.

75. ஆகாய கங்கையை அளாவி நிற்கும் பொதியமலை முக்கண் நாயகனான சிவபெருமானையும், அம்மலையைச் சூழ்ந்துள்ள மேகம், துதிக்கையுடைய யானையினின்றும் உரித்து இறைவனால் போர்க்கப் பெற்ற தோலையும், மேகத்தின் மழைத்துளிகள் யானையினின்றும் சிந்தும் உதிரத்தையும், அம்மேகத்தில் காணப்படும் இந்திரவில் அந்த யானையின் உதிரம் தோய்ந்த கொம்பினையும் ஒத்திருந்தன.

76. அகன்ற சுனையும், அதன் கரையைச் சுற்றி மொய்த்துக் கிடக்கும் வண்டுகளும், தெளிந்த நீரையுடைய பாத்திரத்தையும், அதனைக் காய்ச்சியதால் உண்டான கரியையும் ஒத்தன. மொட்டவிழ்ந்த செங்காந்தள் மேல் இளமைமிக்க வேங்கை மரத்தின் கிளைகளில் மலர்ந்த வேங்கை மலர்கள் கிடந்தன. இக்காட்சியானது நெருப்பின் மேல் சுட்ட பொன் ஒளிர்விடும் தன்மையை ஒத்தது.

77. ஆழ்ந்த சுனை நீரில் உள்ள செங்குவளை மலரில் வண்டுகள் ஒலிக்க, பழைய பூக்களைத் தூவிப் புதிய தேனைச் சொரியும் செழிப்பான கிளைகளையுடைய குங்கும மரங்களின் காட்சி, தேவர்களின் வாயில் சேரும்படி மந்திர ஒலியுடன் நெற்பொரியைச் சொரிந்து பசு நெய் வார்த்து, முத்தீ வேள்வியை முடிக்கும் முனிவர்களை ஒத்திருக்கும்.

78. குறவர்கள் குறிஞ்சி நிலத்து ஊர்களில் அகில் சந்தனம் போன்ற உயர்ந்த மரங்களைத் தீயினால் கொளுத்துவார்கள். அவற்றின் வேர்களைத் தோண்டி நெருப்பென ஒளிரும் பவளத்தையும் முத்தையும் வெளியில் எடுத்து வீசி எறிவார்கள். மலை நெல்லை விதைத்து யானையின் கொம்புகளால் அவற்றிற்கு வேலிகள் அமைத்துப் பகை இன்றிப் பயிர்களைக் காப்பர்.

79. அண்ட வாணருக்கு இன்னமு தருத்துவோர்
வேள்விக்
குண்ட வாரழற் கொழும்புகை கோலுமக் குன்றிற்
புண்ட வாதவே லிறவுளர் புனத்தெரி மடுப்ப
உண்ட காரகிற் றூமமு மொக்கவே மயங்கும்.

80. கருவி வாள் சொரி மணிகளுங் கழைசொரி மணியும்
அருவி கான்றபன் மணிகளு மகன்றலை நாகத்
திரவி கான்றெசெம் மணிகளும் புனங்கவ ரினமான்
குருவி வீழ்ந்திடக் கொடிச்சியர் கோத்துஎறி
கவண்கல்.

81. மாய வன்வடி வாயது வையமால் உந்திச்
சேய பங்கய மாயது தென்னனா டலர்மேற்
போய மென்பொகுட் டாயது பொதியமப்
பொகுட்டின்
மேய நான்முக னகத்தியன் முத்தமிழ் வேதம்.

82. ஏக மாகிய மேருவும் பொதியமே யிரும்பொன்
ஆகு மேருவைச் சூழ்ந்தசாம் பூநத யாறும்
நாக ராடுதண் பொருநையே நாவலா றுடுத்த
போக பூமியும் பெருநைசூழ் பூமியே போலும்.

79. தேவர்களுக்கு இனிய அவி உணவைக் கொடுக்கின்ற முனிவர்கள் செய்யும் யாக குண்டங்களிலிருந்து எழும் வேள்விப் புகையோடு, புலால் நாற்றம் நீங்காத குறவர்கள் காட்டில் உண்டாக்கிய கரிய அகிலின் தீப்புகை ஒன்று சேர்ந்து கலந்து இருக்கும்.

80. கூட்டமாய் உள்ள மேகங்கள் சொரிகின்ற முத்துக்களும், மூங்கில் சொரிகின்ற முத்துக்களும், அருவிகள் ஒதுக்கிய பலவகை மணிகளும், அகன்ற படத்தினையுடைய நாகம் ஈன்ற சிவந்த மணியும் குறப் பெண்கள் எடுத்துக் கவணில் கோத்துத் தினைப்புனத்தினைத் தின்ன வருகின்ற மான்களும் குருவிகளும் விழும்படி எறிவார்கள்.

81. உலகம் திருமாலின் வடிவம் போன்றது. பாண்டிய நாடு அத்திருமாலின் உந்தித் தாமரை போன்றது. பொதிய மலையே அத்தாமரை மலரில் உள்ள மென்மையான கொட்டை போன்றது. அப் பொதிய மலையில் வாழும் அகத்திய முனிவன் அக்கொட்டையில் இருக்கும் நான்முகன் போன்றவர். அம் முனிவனால் வளர்க்கப்பட்ட முத்தமிழானது அந்நான்முகன் அருளிய வேதம் போன்றது.

82. ஒப்பற்ற மேருமலை பொதிய மலையை ஒக்கும். சிறந்த பொன்மயமான அம்மேருமலையைச் சூழ்ந்து ஓடும் ‘சாம்பூநதம்’ என்னும் நதி அப்பொதிய மலையைச் சூழ்ந்த தேவர்கள் நீராடும் தாமிரபரணி ஆற்றை ஒக்கும். சாம்பூநத ஆற்றால் சூழப்பட்ட போகபூமி தாமிரபரணியால் சூழப் பெற்ற பாண்டிய நாட்டை ஒக்கும்.

83. சிறந்த தண்டமிழ் ஆலவாய் சிவனுல கானாற்
புறந்த யங்கிய நகரெலாம் புரந்தரன் பிரமன்
மறந்த யங்கிய நேமியோ னாதிய வானோர்
அறந்த யங்கிய வுலகுரு வானதே யாகும்.

84. வளைந்த நுண்ணிடை மடந்தையர் வனமுலை மெழுகிக்
களைந்த குங்குமக் கலவையுங் காசறைச் சாந்தும்
அளைந்த தெண்டிரைப் பொருநையோ வந்நதி ஞாங்கர்
விளைந்த செந்நெலுங் கன்னலும் வீசும் அவ் வாசம்.

85. பொதியி லேவிளை கின்றன சந்தனம் பொதியின்
நதியி லேவிளை-கின்றன முத்தமந் நதிசூழ்
பதியி லேவிளை கின்றன தருமமப் பதியோர்
மதியி லேவிளை கின்றன மறைமுதற் பத்தி.

86. கடுக்க வின்பெறு கண்டனுந் தென்றிசை நோக்கி
அடுக்க வந்துவந் தாடுவான் ஆடலி னிளைப்பு
விடுக்க வாரமென் காறிரு முகத்திடை வீசி
மடுக்க வுந்தமிழ் திருச்செவி மாந்தவு மன்றோ.

87. விடையு கைத்தவன் பாணினிக் கிலக்கண மேனாள்
வடமொ ழிக்குரைத் தாங்கியன் மலயமா முனிக்குத்
திடமு றுத்தியம் மொழிக்கெதிர் அக்கிய தென்சொன்
மடம கட்காங் கென்பது வழுதிநா டன்றோ.

பொதுச் சிறப்பு

83. சிறப்புடைய குளிர்ச்சி மிக்க தமிழ் மொழியையுடைய திருவாலவாயானது சிவலோக வடிவாகும். அங்ஙனமே எனில் அதன் புறத்தே சூழ்ந்த நகரங்கள் எல்லாம் இந்திரன், பிரமன், வீரம் விளங்கும் திருமால் முதலிய தேவர்களுடைய தருமம் விளங்கும் நகரங்களின் வடிவமாகும்.

84. மெல்லிய இடையை உடைய பெண்கள் தங்கள் கொங்கைகளில் பூசிய குங்குமக் கலவையும் கத்தூரியும் சந்தனமும் தெளிந்த அலைகளையுடைய பொருநை நதியில் மட்டுமா கமழ்வது? இல்லை. அவ்வாற்றின் பக்கங்களில் விளைந்த செந்நெல் கரும்பு இவைகளில் கூடக் கமழும்.

85. சந்தன மரங்கள் பொதிய மலையில் விளைகின்றன. அப்பொதிய மலையினின்று விழுகின்ற பொருநை நதியில் முத்துக்கள் விளைகின்றன. அந்நதி சூழ்ந்துள்ள நகரங்களில் தருமங்கள் விளைகின்றன. சிவபெருமானின் திருவடிகளில் கொண்ட பக்தி அந்நகர மக்களின் அறிவின்கண் விளைகின்றன.

86. நஞ்சினால் கண்டத்தில் அழகு பெற்ற சிவபெருமான் தென்திசையைக் குறித்து நெருங்க வந்து திருநடம் புரிதல், அத் திருநடனத்தினால் உண்டான மெலிவை நீக்குதற் பொருட்டு, பொதிய மலையிலிருந்து சந்தனச் சோலையில் படிந்து வரும் மெல்லிய தென்றற் காற்றைத் திருமுகத்தில் ஏற்கவும், தமிழின் சுவையைத் திருச்செவியால் நுகரவும் அல்லவா?

87. முன்னொரு காலத்தில் சமஸ்கிருத மொழிக்கு வியாகரண சூத்திரத்தைப் பாணினி முனிவனுக்கு இடப வாகனத்தையுடைய சிவபெருமான் அருளிச் செய்தது போல், பொதிய மலையில் உள்ள பெருமைமிக்க அகத்திய முனிவனுக்குத் தமிழ் இலக்கணத்தை அறிவுறுத்தினார். அவ்வட மொழிக்கு நிகராக விளங்கும் தமிழ் நங்கைக்குப் பாண்டிய நாடு நாடக சாலை என்று உயர்ந்தோரால் புகழ்ந்து கூறப்படும் தன்மையுடையதாகும்.

88. கண்ணு தற்பெருங் கடவுளுங் கழகமோ டமர்ந்து
பண்ணு றத்தெரிந்து ஆய்ந்தவிப் பசுந்தமி ழேனை
மண்ணி டைச்சில விலக்கண வரம்பிலா மொழிபோல்
எண்ணி டைப் படக் கிடந்ததா வெண்ணவும் படுமோ.

89. தொண்டர் நாதனைத் தூதிடை விடுத்ததும் முதலை
உண்ட பாலனை யழைத்தது மெலும்புபெண்
ணுருவாக்
கண்ட தும்மறைக் கதவினைத் திறந்ததுங் கன்னித்
தண்ட மிழ்ச்சொலோ மறுபுலச் சொற்களோ சாற்றீர்.

90. வெம்மை யால்விளை வஃகினும் வேந்தர்கோல்
கோடிச்
செம்மை மாறினும் வறுமைநோய் சிதைப்பினுஞ்
சிவன்பாற்
பொய்ம்மை மாறிய பத்தியும் பொலிவுகுன் றாவாய்த்
தம்மை மாறியும் புரிவது தருமம் அந்நாடு.

91. உலகம் யாவையு மீன்றவ ளும்பரு ளுயர்ந்த
திலக நாயகி பரஞ்சுடர் சேயென மூன்று
தலைவ ரான்முறை செய்தநா டிஃதன்றிச் சலதி
சுலவு பாரினுண் டாகுமோ துறக்கத்தும் அஃதே.

பாண்டித் திருநாட்டுப் படலம் முற்றிற்று

88. நெற்றியில் கண்ணையுடைய சிவபெருமான் சங்கப் புலவர்களுள் தாமும் ஒருவராக எழுந்தருளியிருந்து செப்பமுற ஆராய்ந்து தெளிந்த இச்சிறப்பு மிக்க தமிழானது மற்றைய நிலங்களில் உள்ள இலக்கண வரையறை இல்லாத சில மொழிகளைப் போலச் சாதாரணமானதென்று எண்ணத் தக்கதன்று.

89. அடியார்களுக்குத் தலைவனான சிவபெருமானைத் தூதுவிட்டது தமிழ்! முதலையால் உண்ணப்பட்ட பாலனை வரவழைத்தது தமிழ்! எலும்பை மீண்டும் பெண் வடிவமாக எழுந்திருக்கச் செய்ததும் தமிழ்! வேதத்தினால் அடைபட்ட கதவினைத் திறக்கச் செய்ததும் அழியாத சிறப்புடைய கன்னித் தமிழ் அல்லவா? ஏனைய நிலத்தில் உள்ள வழக்கு மொழிகளன்று!

90. கோடைக் காலத்து வெப்பத்தால் விளைச்சல் குறைந்தாலும், அரசர்களின் செங்கோல் முறை தப்பி செம்மை மாறினாலும், வறுமை நோயானது வருத்தினாலும் சிவபெருமானிடம் பொய்யில்லாத அன்பும் சைவ விளக்கமும் குன்றாத அங்குள்ள மேலோர். தம்மை விற்றாயினும் தருமம் செய்யும்படியான சிறப்பு மிக்கது பாண்டிய நாடாகும்.

91. எல்லா உயிர்களையும் ஈன்றவளும், சக்திகளில் உயர்ந்த திலகம் போன்றவளுமாகிய உமாதேவியும், பரஞ்சோதியாகிய சிவபெருமானும் முருகக் கடவுளும் ஆகிய மூன்று முதல்வர்களும் செங்கோலோச்சிய சிறப்புடையது இப் பாண்டிய நாடே! இதுவன்றிக் கடலால் சூழப்பட்ட இந் நிலவுலகில் இச்சிறப்புடைய வேறு நாடுளதோ? விண்ணுலகத்தில் உளதோ? இல்லை.

பாண்டித் திருநாட்டுப் படலம் முற்றும்

மதுரைத் திருநகரப் படலம்

92. மங்க லம்புனை பாண்டிநா டாகிய மகட்குச்
சங்க லம்புகை தோளிணை தடமுலை யாதி
அங்க மாம்புறந் தழுவிய நகரெலா மனைய
நங்கை மாமுக மாகிய நகர்வளம் பகர்வாம்.

93. கொங்கை யேபரங் குன்றமுங் கொடுங்குன்றுங் கொப்பூழ்
அங்க மேதிருச் சுழியல்அவ் வயிறுகுற் றாலஞ்
செங்கை யேடக மேனியே பூவணந் திரடோள்
பொங்கர் வேய்வனந் திருமுக மதுரையாம் புரமே.

94. வடுவின் மாநில மடந்தைமார் பிடைக்கிடந் திமைக்கப்
படுவில் ஆரமே பாண்டிநா டாரமேற் பக்கத்
திடுவின் மாமணி யதன்புற நகரெலா மிவற்றுள்
நடுவி ணாயக மாமணி மதுரைமா நகரம்.

95. திரும கட்கொரு தாமரைக் கூடமே திருமான்
மரும கட்குவெண் டாமரை மாடமே ஞானந்
தரும கட்கியோ கத்தனிப் பீடமே தரையாம்
பெரும கட்குஅணி திலகமே யானதிப் பேரூர்.

மதுரைத் திருநகரப் படலம்

பாண்டிய நாடாகிய நங்கை

98. பல நலன்களைப் பூண்ட பாண்டிய நாடு என்னும் நங்கைக்கு, அதன் புறத்தே சூழ்ந்துள்ள நகரங்கள் யாவும், வளையல் ஒலிக்கின்ற கைகள், இரண்டு தோள்கள், பெரிய தனங்கள் போன்ற உறுப்புகளாகக் கருதப்படும். அத்தகைய மங்கையின் அழகிய முகமாகக் கருதப்படும் மதுரை நகரின் சிறப்பினைக் கூறத் தொடங்குகின்றோம்.

93. பாண்டிய நாடாகிய மங்கைக்கு, "திருப்பரங்குன்றம், திருக்கொடுங்குன்றம்" என்னும் தலங்கள் கொங்கைகள். "திருச்சுழியல்' என்னும் தலம் கொப்பூழ். 'திருக்குற்றாலம்' அதன் வயிறு, "திருவேடகம்" என்னும் தலமே சிவந்த கைகள். "திருப்பூவணம்" உடல். சோலைகள் சூழ்ந்த "வேணுவனம்" என்னும் தலமே திரண்ட தோள்கள். மதுரை நகரம் அழகிய முகம். இவ்வாறு பாண்டித் திருநாடு காட்சியளித்தது.

மதுரை மாநகரச் சிறப்பு

94. குற்றமற்ற நிலமடந்தையின் மார்பில் விளங்குகின்ற ஒளியுடைய பதக்கமே பாண்டிய நாடாகும். அப்பதக்கத்தைச் சுற்றிப் புறங்களில் பதித்த ஒளியுடைய பெரிய மணிகளே பாண்டிய நாட்டின் புறத்துச் சூழ்ந்த அனைத்து நகரங்கள் ஆகும். இம்மணிகளின் நடுவிடத்து உள்ள ஒளியுடைய தலைமைசான்ற மணியே மதுரையாகிய பெரிய நகரமாகும்.

95. இப்பெரிய நகரமானது நிலமகளாகிய பெருமாட்டிக்கு அணிகின்ற திலகம் போன்று ஆனது. திருமகளுக்கு இதுவே செந்தாமரை வீடாகும். திருமாலின் மருமகளான கலைமகளுக்கு வெண்டாமரை வீடாகும். ஞானத்தின்பால் இருப்பவளாகிய ஒப்பற்ற மலைகளுக்கு 'யோகபீடம்'.

96. திக்கும் வானமும் புதையிரு டின்றுவெண் சோதி
கக்கு மாளிகை நிவப்புறு காட்சியந் நகருள்
மிக்க வாலிதழ்த் தாமரை வெண்மகள் இருக்கை
ஒக்கு மல்லது புகழ்மக ளிருக்கையு மொக்கும்.

புடைநகர்

97. நெற்க ரும்பெனக் கரும்பெலா நெடுங்கமு கென்ன
வர்க்க வான்கமு கொலிகலித் தெங்கென வளர்ந்த
பொற்க வின்குலைத் தெங்குகாய்ப் பந்தரைப்
பொறுத்து
நிற்க நாட்டிய காலென நிவந்ததண் பணையே

98. சிவந்த வாய்க்கருங் கயற்கணாள் வலாரியைச் சீறிக்
கவர்ந்த வான்றருக் குலங்களே கடிமணம் வீசி
உவந்து வேறுபல் பலங்களும் வேண்டினர்க் குஉதவி
நிவந்த காட்சியே போன்றது நிழன்மலர்ச் சோலை.

99. ஒல்லொ லிக்கதிர்ச் சாலிகள் புறந்தழீஇ யோங்க
மெல்லி லைப்பசுங் கொடியினால் வீக்குறு பூகம்
அல்லெ னுங்களத் தண்ணற ணணிவிழாத் தருப்பைப்
புல்லொ டும்பிணிப் புண்டபொற் கொடிமரம் போலும்.

96. திசைகளையும் ஆகாயத்தையும் மறைக்கின்ற இருளை விழுங்கி வெண்மையான ஒளியை உமிழ்கின்ற மாளிகைகளின் தோற்றமானது, அந்நகரின் வெண்ணிறமான இதழ்களையுடைய தாமரையாகிய கலைமகளின் இருப்பிடமாகும். அல்லது புகழ்மாதின் இருப்பிடம் போன்றிருந்தது என்றும் சொல்லலாம்.

நகரின் புறம்

97. குளிர்ச்சி மிக்க மருத நிலங்களில் வளர்ந்துள்ள நெற்பயிர்கள் கரும்புகள் போலவும். கரும்புகள் எல்லாம் நீண்ட பாக்கு மரங்கள் போலவும், உயர்ந்த இனமாகிய பாக்கு மரங்கள் தழைத்துப் பெருத்த தென்னை மரங்கள் போலவும், ஓங்கிய பொன் போலும் அழகிய குலைகளை உடைய தென்னை மரங்கள் மேகங்களைத் தாங்கி நிற்கப் போடப்பட்ட பந்தல்கால்கள் போலவும் கருதும்படி உயர்ந்து வளர்ந்திருக்கின்றன.

98. சிவந்த வாயினையும், கரிய கயல்மீன்கள் போன்ற கண்களையும் உடைய தடாதகைப் பிராட்டியார், இந்திரனை வென்று கொணர்ந்த பஞ்ச தருக்கள் மிக்க வாசனையை வீசி, குறையிரந்து வேண்டியவர்களுக்குப் பல்வேறு பயன்களை மகிழ்ந்து கொடுத்து உயர்ந்து நிற்கும் சிறந்த காட்சியைப் போன்று அங்குள்ள குளிர்ந்த மலர்களை உடைய சோலைகளின் தோற்றமும் உயர்ந்து காணப்பட்டது.

99. ஒல்லென்ற ஒளியையுடைய நெற்கதிர்கள் பாக்கு மரத்துடன் உயர்ந்து நிற்க, அவற்றை வெற்றிலைக் கொடிகள் சுற்றி நின்ற தோற்றம் இருள்போன்ற திருக்கழுத்தினையுடைய பெருமைமிக்க சிவபெருமானுடைய திருவிழாவில் தருப்பைப் புற்களோடு கட்டப்பட்ட பொன்னாலாகிய கொடி மரத்தைப் போன்றிருந்தது.

100. சீத வேரியுண்டு அளிமுரல் கமலமேற் செருந்தி
போத வேரியு மலர்களுஞ் சொரிவன புத்தேள்
வேத வேதியர் செங்கரம் விரித்துவாய் மனுக்கள்
ஒத வேமமு முதகமு முதவுவா ரனைய.

101. விரைசெய் பங்கயச் சேக்கைமேற் பெடையொடும் விரவி
அரச வன்னநன் மணஞ்செய வம்புயப் பொய்கை
திரைவ ளைக்கையா னுண்டுளி செறிந்தபா சடையாம்
மரக தக்கலத் தரளநீ ராஞ்சனம் வளைப்ப.

102. இரும்பின் அன்னதோள் வினைஞரார்த் தெறிந்துவாய் மடுக்குங்
கரும்பு தின்றிடி யேற்றொலி காட்டியின் சாறு
சுரும்பு சூழ்கிடந் தாற்றிடச் சொரிந்துவெஞ் சினத்தீ
அரும்பு கட்களி றொத்தன வாலையெந் திரங்கள்.

103. பள்ள நீர்குடைந் தஞ்சிறைப் பாசிபோர்த்து எழுந்த
வெள்ளை யன்னத்தைக் காரன மெனப்பெடை வீழ்ந்த
உள்ள மீட்டல மரச்சிற குதறியுள் ளன்பு
கொள்ள வாசையிற் றழீஇக்கொடு குடம்பைசென் றணையும்.

100. குளிர்ந்த தேனைப்பருகி வண்டுகள் ஒலிக்கின்ற தாமரை மலரின் மேல், செருந்தி மரங்கள் தேனையும் பூக்களையும் சொரிகின்ற காட்சியானது, தெய்வத் தன்மை பொருந்திய வேதநெறிகளை உணர்ந்த மறையோர், தம் சிவந்த கைகளை விரித்து வாயினால் மந்திரங்களைச் சொல்ல, அவர் கையில் பொருளையும் நீரையும் கொடுப்போரை ஒத்திருந்தது.

101. வாசனை வீசுகின்ற தாமரை மலராகிய ஆசனத்தின் மேல் அரச அன்னம் தன் பெடையுடன் மண மக்கள் போல் வீற்றிருக்கும். அப்போது தாமரைத் தடாகங்களாகிய பெண்கள் கூட்டம், அலைகளாகிய வளையல் கைகளால் தாமரை இலையாகிய மரகதத் தட்டில் வெண்முத்தாகிய நீரைக் கொண்டு ஆலத்தி எடுக்கும் தோற்றம் போல் காட்சியளித்தது.

102. இரும்பினை ஒத்த தோள்களையுடைய மன்னர்கள் கொடுக்கும் கரும்பினைக் கரும்பாலைகள் இடியொலி போன்று நெரித்து, வண்டுகள் மொய்க்கச் சாற்றைப் பிழியும் தோற்றம், பாகர் கொடுக்கும் கரும்புகளை ஒலியோடு முரித்துத் தின்று, வண்டுகள் மொய்க்கச் சாற்றினைச் சிந்தும் யானைகள் போல் விளங்கும்.

103. ஆழமுடைய நீரில் மூழ்கி, அழகிய சிறகுகள் நீர்ப்பாசியால் போர்க்கப்பட்டுக் கரிய தோற்றத்துடன் மேலெழுந்து வெண்மையான அன்னச் சேவல் நிற்கும். அதன் விருப்பத்திற்குரிய அன்னப் பேடானது சேவலைக் காகம் என்று கருதி உள்ளம் மாறுபட்டு வேறுபக்கம் திரும்பிக் கொண்டு நிற்கும். அதனைக் கண்ட அன்னச்சேவல் சிறகுகளை விரித்துப் பாசிகளை வீழ்த்தி, வெண்மையான பழைய தோற்றத்தோடு, அன்பு நிறைய ஆசையோடு அன்னப் பேட்டைத் தழுவிக் கொண்டு கூட்டினுள் போய்ச் சேரும்.

104. இரவி யாழியொன் றுடையதே ரீர்த்தெழும் இமையாப்
புரவி நாநிமிர்த் தயில்வன பொங்கர்வாய்த் தளிர்கள்
கரவி லார்மகத் தெழுபுகை கற்பக நாட்டிற்
பரவி வாட்டுவ பனியெனப் பங்கயப் பொய்கை.

இடைநகர்

105. பிறங்கு மாலவா யகத்துளெம் பிரான்அரு ளால்வந்
தறங்கொ டீர்த்தமா யெழுகட லமர்ந்தவா நோக்கிக்
கறங்கு தெண்டிரைப் பெரும்புறக் கடலும்வந் திவ்வூர்ப்
புறங்கி டந்ததே போன்றது புரிசைசூழ் கிடங்கு.

106. எறியும் வாளையு மடிக்கடி யெழுந்துடல் பரப்பிப்
பறியு மாமையும் வாளொடு கேடகம் பற்றிச்
செறியு நாண்மலர் அகழியுஞ் சேண்டொடு புரிசைப்
பொறியு மேயொன்றி யுடன்றுபோர் புரிவன போலும்.

107. கண்ணி லாதவெங் கூற்றெனக் கராங்கிடந் தலைப்ப
மண்ணி னாரெவ ரேனுமிம் மடுவிடை வீழ்ந்தோர்
தெண்ணி லாமதி மிலைந்தவர்க் கொப்பெனச் சிலரை
எண்ணி னார்இரு ணரகநீத் தேறினு மேறார்.

104. ஒற்றை உருளையையுடைய சூரியனை இழுத்துச் செல்லுகின்ற இமையாத கண்களையுடைய குதிரைகள், சோலைகளின் தளிர்களில் நாக்கை நீட்டித் தின்னும். குற்றமற்ற மறையோரின் வேள்வியினின்று எழுகின்ற புகை, கற்பக மரமுடைய வானுலகில் பரவி, தாமரைத் தடாகத்தைப் பனிபோன்று வாட்டும்.

அகழியின் வர்ணனை

105. மதுரை மாநகரத்தின் எம்பெருமானாகிய சோம சுந்தரக் கடவுளின் திருவருளால் ஏழு கடல்களும் மதுரைப் பதியின் கண்ணே அறவடிவாகிய தீர்த்தமாகி வந்து அமைந்துள்ளதைக் கண்டு, ஒலிக்கின்ற தெள்ளிய அலைகளை உடைய பெரும்புறக் கடலும் மதுரை நகரின் புறத்தே வந்து தங்கியதைப் போல் மதிலைச் சூழ்ந்த அகழி விளங்கியது.

106. அடிக்கடி மேலெழுந்து துள்ளி தண்ணீரை வெட்டுகின்ற வாளை மீன்களும், அங்ஙனமே மேலெழுந்து உறுப்புகளை விரித்துத் தவழுகின்ற ஆமைகளும் அவ்வகழியில் திரிதல், ஆகாயத்தை அளாவிய மதிலின்கண் உள்ள பொறிகளேயன்றி அகழியும், வாள்களையும் கேடயங்களையும் கொண்டு பகைவரோடு போரிடுவதை ஒக்கும்.

107. கண்ணோட்டம் இல்லாத கொடிய கூற்றுவனைப்போன்று முதலைகள் இருந்து வருத்துதலால் மண்ணுலகத்தவர் எவரும் அதில் இறங்க மாட்டார்கள். அப்படியே தவறி இதில் வீழ்ந்துவிடின், நிலவினைச் சடையில் சூடிய சிவபெருமானோடு ஒப்பானவர் என்று மற்றைத் தேவரை எண்ணியவர்கள் இருளாகிய நரகத்தைக் கடந்து ஏறினாலும் ஏறுவர். இவ்வகழியினின்று ஏற மாட்டார்கள்.

108. குமிழ லர்ந்தசெந் தாமரைக் கொடிமுகிழ் கோங்கின்
உமிழ்த ரும்பா ஞானமுண் டுமிழ்ந்தவாய் வேதத்
தமிழ றிந்துவை திகமுடன் சைவமு நிறுத்தும்
அமிழ்த வெண்டிரை வைகையும் ஒருபுறத் தகழாம்.

109. பிள்ளை யும்பெடை யன்னமுஞ் சேவலும் பிரியாக்
கள்ள முண்டகச் செவ்வியாற் கண்டவர் கண்ணும்
உள்ள முந்திரும் பாவகை சிறைப்படுத்து ஓங்கும்
புள்ள லம்புதண் கிடங்கிது புரிசையைப் புகல்வாம்.

110. மாக முந்திய கடிமதின் மதுரைநா யகர்கைந்
நாக மென்பதே தேற்றமந் நகர்மதில் விழுங்கி
மேக நின்றசை கின்றதவ் வெஞ்சினப் பணிதன்
ஆக மொன்றுதோ லூரிபட நெளிவதே யாகும்.

111. புரங்க டந்தபொற் குன்றுகோ புரமெனச் சுருதிச்
சிரங்க டந்தவர் தென்னரா யிருந்தனர் திருந்தார்
உரங்க டந்திட வேண்டினும் உதவிசெய் தவரால்
வரங்க டந்திடப் பெறவெதிர் நிற்பது மானும்.

108. குமிழம் பூக்கள் மலர்ந்துள்ள செந்தாமரையை உடைய கொடியில் முகிழ்ந்த கோங்கு அரும்பினின்றும் பொழிந்த சிவஞானத்தைப் பருகி, ஞானசம்பந்தப் பெருமான் திருவாயால் வெளியிட்டு அருளிய வேதத்தமிழ் அறிந்து, வேத நெறியோடு சைவநெறியும் நிலைபெறச் செய்து அமிழ்தம் போலும் வெள்ளிய அலைகளையுடைய 'வையை' ஆறும் ஒரு புறத்து மதிலின் அகழியாகக் காட்சியளிக்கும்.

109. குஞ்சுகளும், அன்னப்பேடுகளும், அன்னச் சேவலும் தேன் மிக்க தாமரை மலரிலிருந்து நீங்காமல் இருக்கும். அவ்வழகிய காட்சியைக் கண்டவர்கள் கண்ணும் மனமும் அதை விட்டு நீங்காது. பறவைகள் ஒலி செய்து கொண்டிருக்கும் இத் தன்மைகளோடு அகழி காட்சியளிக்கும். இனி மதிலின் பெருமையைக் கூறுவோம்.

மதிலின் சிறப்பு

110. மதுரேசராகிய சோமசுந்தரப் பெருமானின் கையில் அணிந்துள்ள பாம்பு, வானுலகை ஊடறுத்துச் செல்லும், காவலாயுள்ள மதில் என்பது தெளிவு. அம் மாநகரின் மதிலை மறைத்து நின்று தங்கி, தவழ்ந்து செல்லுதல், வெம்மை மிக்க சினத்தினையுடைய பாம்பானது, தன் உடலோடு பொருந்திய தோல் உரிபடும் பொருட்டு நெளிவதை ஒத்திருந்தது.

111. திரிபுரத்தை வெல்வதற்கு வில்லாயிருந்த மேருமலை, "இறைவர் பாண்டிய மன்னராய் இருந்தனர். அவருடைய பகையை வெல்வதற்கு இனிமேலும் நாம் பயன்பட்டால் அவருடைய அருளைப் பெலாம்'' என்றெண்ணி அம்மேருமலையே மதிலின் வாயிலில் கோபுர வடிவாய் வந்து எதிர் நிற்றலை ஒத்திருந்தது.

112. சண்ட பானுவும் திங்களும் தடைபடத் திசையும்
அண்ட கோளமும் பரந்துநீண் டகன்றகோ புரங்கள்
விண்ட வாயிலால் வழங்குவ விடவரா வங்காந்
துண்ட போல்பவு முமிழ்வன போல்பவு முழலா.

113. மகர வேலையென் றியானைபோன் மழையருந் தகழிச்
சிகர மாலைசூ ழ்ம்மதி றிரைக்கரந் துழாவி
அகழ வோங்குநீர் வைகையால் அல்லது வேற்றுப்
பகைவர் சேனையாற் பொரப்படும் பாலதோ வன்றே.

மதிற் பொறிகள்

114. எல்லை தேர்வழித் தடைசெயு மிம்மதிற் புறஞ்சூழ்ந்
தொல்லை மேவலர் வளைந்துழி யுடன்றுபோர் ஆற்றி
வெல்ல மள்ளரும் வேண்டுமோ பொறிகளே வெல்ல
வல்ல வம்மதிற் பொழிசெயு மறஞ்சிறி துரைப்பாம்.

115. மழுக்கள் வீசுவன நஞ்சு பூசுமுனை வாள்கள்
வீசுவன முத்தலைக்
கழுக்கள் வீசுவன குந்த நேமியெரி கால வீசுவன
காலனேர்
எழுக்கள் வீசுவன கப்ப ணங்கள் விடமென்ன
வீசுவன வன்னெடுங்
கொழுக்கள் வீசுவன கற்க வண்கயிறு கோத்து
வீசுவன வார்த்தரோ.

112. வெம்மை மிக்க சூரியனும் சந்திரனும் தடைபடும் படியாய் எட்டுத் திசைகளிலும் உள்ள கோபுரங்கள் அண்ட முகடுவரை உயர்ந்து பரந்து நிற்கும் தன்மையுடையவை. அக் கோபுரங்களின் திறந்த வாயில் வழியாக அச்சூரிய சந்திரர்கள் சஞ்சரிக்கும். அவ்வாறு கோபுர வாயில் வழியாக நுழைந்து வெளிவரும் காட்சியானது இராகு, கேது என்னும் பாம்புகளால் விழுங்கப்பட்டுப் பின் உமிழப்பட்ட காட்சியினை ஒத்திருந்தது.

113. சுறாமீன்கள் நிறைந்த கடல் என்று சொல்லப்படும் அளவிற்குப் பெரியதாகவும், யானைகள் போன்ற தோற்றமுடைய மேகக் கூட்டங்களால் நீர் உண்ணப் படுவதாகவும் உள்ள பெரிய அகழிகளைக் காவலாக உடையவை அம்மதில்கள். அலைகளாகிய கைகளால் துழாவிக் கலக்கும்படி பெரிய நீரினையுடைய வையை நதியால் அம்மதில்கள் தாக்கப்படுகின்ற தன்மையுடையதன்றி வேற்று நாட்டவரின் படையால் தாக்கப்படுகின்ற தன்மை உடையதன்று.

மதிற் பொறிகள்

114. சூரியனின் தேர்வழியைத் தடைப்படுத்தும் அம் மாநகரின் மதில்களின் புறத்தே, பகைவர்கள் சுற்றி வளைத்த காலத்து, சினந்து போர் செய்யும் அவர்களை வெல்வதற்கு தனியாக மன்னர்களும் வேண்டுமோ? வேண்டியதில்லை. அம்மதிலில் உள்ள பொறிகளே வென்றுவிடும் தன்மை உடையவை. அம்மதிற் பொறிகளின் வீரம் சிலவற்றைச் சொல்லுவோம்.

115. அம்மதிற் பொறிகளில் சில, மழுப்படைகளை எறியும் தன்மையுடையன. சில, நஞ்சு பூசிய வாட்பட்டைகளை எறியும். சில, மூன்று தலைகளையுடைய சூலப் படையை எறியும். சில, பொறிகள் தீ சிதறும்படி கைவேல், திகிரி என்னும் படைகளை எறியும் தன்மையுடையவை. எமனுக்கு நிகராக வளைந்த தடிகளைச் சில, வீசி எறியும். விஷம் என்று சொல்லும்படியான இரும்பாலாகிய நெருஞ்சி முள் வடிவுடைய படைகளை சில பொறிகள் எறியும் வலிய நெடிய கொழுப் படைகளை சில எறியும். கவண் கயிற்றில் கற்களைக் கோத்து சில ஆரவாரத்துடன் எறியும் தன்மை உடையவை.

116. நஞ்சு பில்குதுளை வாளெ யிற்றரவு நாநிமிர்த்
தெறியு மலையரா
வெஞ்சி னங்கொண்முழை வாய்தி றந்துபொரு
வாடி விக்கிட விழுங்குமாற்
குஞ்ச ரங்கொடிய முசலம் வீசியெதிர் குறுகு
வார்தலைகள் சிதறுமால்
அஞ்சு வெம்பொறி விசைப்பி னுங்கடுகி யடுபு
லிப்பொறி யமுக்குமால்.

117. எள்ளி யேறுநரை யிவுளி மார்பிற வெறிந்து
குண்டகழி யிடைவிழத்
தள்ளி மீளுமுருள் கல்லி ருப்புமுளை தந்து
வீசியுடல் சிந்துமாற்
கொள்ளி வாயலகை வாய்தி றந்துகனல் கொப்பு
ளிப்பவுடல் குப்புறத்
துள்ளி யாடுவன கைகள் கொட்டுவன தோள்பு
டைப்பசில கூளியே.

118. துவக்கு சங்கிலி யெறிந்தி ழுக்குமரி தொடர்பி
டித்தகை யறுக்கவிட்
டுவக்கு மொன்னலர்க டலைக ளைத்திருகி யுடனெ
ருக்குமா நிலைகளாற்
சுவைக்கொ ழுந்தழல் கொளுத்தி வீசுமெதிர் கல்லு
ருட்டியடும் ஒல்லெனக்
குவைக்க டுங்கன்மழை பெய்யு மட்டமணல் கொட்டு
மேவலர்கள் கிட்டவே.

116. விஷத்தைக் கக்குகின்ற துளைகள் உள்ள கூர்மையான பற்களையுடைய பாம்புப் பொறிகள் நாவை நீட்டிப் பகைவரைக் கொல்லும். கொடிய சினம் கொண்ட மலைப் பாம்பு போன்ற தோற்றமுடைய சில பொறிகள் வாயைத் திறந்து தம் வாய்விக்கும்படி அவர்களை விழுங்கும். கொடிய யானைப் பொறிகள், உலக்கைப் படையை வீசி எதிரே நெருங்குபவர்களின் தலைகளைச் சிதற அடிக்கும். கொல்லும் தன்மையுடைய புலிப்பொறிகள், மற்ற ஐந்து பொறிகளின் வேகத்தைவிட அதிக வேகத்தில் பகைவரை அழிக்கும்.

117. மதிலை எளனமாக நினைத்து அதன் மீது ஏறியவர்களின் மார்புகள் ஒடியும்படி குதிரைப் பொறிகள் உதைத்து ஆழமான அகழியில் விழுமாறு அவர்களை வீழ்த்தும். சில பொறிகள் உருட்சியாகிய கல், இருப்புமுளை அரிகயிறு என்னும் படைகளை வீசிப் பகைவர் உடலை அழிக்கும். கொல்லி வாய்ப்பிசாசுப் பொறிகள் தம் வாயைத் திறந்து தீயைக் கக்கும். சில பேய்ப் பொறிகள் உடல் குப்புறும்படி செய்து குதித்து விளையாடும். கைகளைக் கொட்டும். தோள் தட்டி மகிழும்.

118. சில பொறிகள், பகைவர் நெருங்கும்போது கட்டுகின்ற சங்கிலியை வீசி எறிந்து இழுக்கும். கைகளை அறுப்பதற்காக வெட்டுச் சங்கிலியைவிட்டு மகிழ்வடையும். மரநிலைகளால் பகைவர்களின் தலைகளைத் திருகி உடல்களை நெரிக்கும். பிளவுபட்ட நாக்கையுடைய நெருப்பைக் கொளுத்தி எறியும். பெரிய கற்களை எதிரிகளின் மேல் உருட்டிக் கொல்லும். ஒல்லென்ற ஒலியோடு கடிய கூட்டத்தோடு கல்மழையைப் பொழியும். வறுத்த மணலைக் கொட்டிச் சிலரைக் கொல்லும்.

119. உருக்கி யியமழை பெய்யு மாலய வுருக்கு வட்டுருகு
செம்பினீர்
பெருக்கி வீசும்விடு படையெ லாமெதிர் பிடித்து
விட்டவர் தமைத்தெறச்
செருக்கி வீகநடை கற்ற மாடமொடு சென்று
சென்று துடி முரசொடும்
பெருக்கி மீளுநடை வைய மேனடவி யெய்யும்
வாளிமழை பெய்யுமால்.

120. வெறிகொள் ஐம்பொறியை வெல்லி னும்பொருது
வெல்லுதற்கரிய காலனை
முறிய வெல்லினும் வெலற்க ருங்கொடிய முரண
வாயமர ராணெலாம்
அறிவி னானிறுவு கம்மி யன்செயவு மரிய வாயவனர்
புரியுமிப்
பொறிகள் செய்யும்வினை யின்ன பொன்னணி
புரத்து வீதிக ளுரைத்துமால்.

அகநகர்

121. கழையும் தாமமும் சுண்ணமு மணிநிழற் கலனுங்
குடையுந் தூபமுந் தீபமுங் கும்பமுந் தாங்கித்
தழையுங் காதலர் வரவுபார்த் தன்பகந் ததும்பி
விழையுங் கற்பினா ரொத்தன விழாவறா வீதி.

119. ஈயத்தை உருக்கி மழையைப் போல பகைவர் மேல் பொழியும். உருகிய இரும்பாலாகிய உருக்குடன், செம்பின் நீரையும் மிகுதியாகத் தெளிக்கும். பகைவர் விடுகின்ற படைகளை எல்லாம் தடுத்து நிறுத்தி அதனையே பிடித்து அப்பகைவரையே கொல்லும்படி செருக்குடன் திருப்பி வீசும். பல இடங்களில் சென்று உடுக்கை ஒலியைப் பேரிகையோடும் மிகச் செய்து திரும்பும். நடைத்தேரை மேலே நடக்கச் செய்து அம்பு மழையைப் பொழிந்து போர் புரியும்.

120. ஆசையை மிகுவிக்கக் கூடிய ஐந்து பொறிகளை வெற்றி கொண்டாலும், போர் செய்து வெல்ல முடியாத எமனைப் புறமுதுகிட்டு ஓடும்படி வெற்றி கொண்டாலும், இப்பொறிகளை வெல்லுவது என்பது இயலாத காரியம். தேவர்களின் அரண் முதலிய எல்லாவற்றையும் எண்ணிய வண்ணம் படைத்து முடிக்கும் ஆற்றல் கொண்ட தேவதச்சனும் செய்ய முடியாதனவாய், யவனர்களால் செய்யப் பெற்றனவாய் உள்ள இக்கொடிய வலிமைமிக்க அரண்களில் உள்ள பொறிகள் செய்கின்ற தொழில்கள், மேலே சொன்ன இவைகள் இனி மேல் அழகிய மதுரை நகரத்தின் வீதிகளின் அழகைச் சொல்வோம்.

அகநகர்

121. திருவிழாக்கள் நீங்கப் பெறாத மதுரை மாநகரத்தின் வீதிகள், தம்முடைய அன்புமிக்க தலைவரை எதிர்நோக்கும் கற்புடைய மகளிரை ஒத்திருந்தது. எவ்வாறெனில் கரும்புகளையும், பூமாலைகளையும், வாசனைப் பொடியையும், இரத்தினங்கள் பொறிக்கப்பட்ட அழகிய அணிகலன் களையும், குழையையும், தூபத்தையும், தீபத்தையும், பூரண கும்பத்தையும் தாங்கிய அவ்வீதிகள் மங்கலமாகக் காட்சி அளிப்பதால் கற்புடைய மகளிரின் தோற்றத்தினை ஒத்திருந்தது.

122. ஆலநின்றமா மணிமிடற் றண்ணலா னந்தக்
கோல நின்றசே வடிநிழல் குறுகினார் குணம்போல்
வேலை நின்றெழு மதியெதிர் வெண்ணிலாத்
தெண்ணீர்
கால நின்றன சந்திர காந்தமா ளிகையே.

123. குன்ற நேர்பளிக் குபரிகை நிரைதொறுங் குழுமி
நின்ற பல்சரா சரமுமந் நீழல்வாய் வெள்ளி
மன்ற கம்பொலிந் தாடிய மலரடி நிழல்புக்
கொன்றி யொன்றறக் கலந்தபல் லுயிர்நிலை யனைய.

124. கறிந்த ருந்துபுற் குவைகழீஇக் காற்றொடர் பரியத்
தெறித்த கன்றயன் மரகதச் சித்திரத்து எற்றி
எறித்த பைங்கதிர்க் கொழுந்தையு மெட்டிநா
வளைத்துப்
பறித்து மென்றுவா யசைப்பன பசலையான் கன்று.

125. சிறுகு கண்ணவாய்க் காற்றெறி செவியவாய்ப் பாசம்
இறுகு காலவாய்க் கோட்டுமா னினம்வழங் காறுங்
குறுகு நுண்மருங் கிறுத்தெழு கோட்டுமா
னினம்போம்
மறுகும் வண்டுசூழ்ந் திறைகொள மான்மத நாறும்.

122. நஞ்சுடைய பெருமைமிக்க நீலமணி போலும் கழுத்துடைய இறைவனின், இன்ப வடிவம் நிலைபெற்ற சிவந்த திருவடி நிழலை அடைந்தவர்கள் ஆனந்தக் கண்ணீர் சொரிய நிற்கும் தன்மை போல் சந்திரகாந்தக் கற்களால் ஆகிய மாளிகைகள், கடலில் இருந்து எழுகின்ற சந்திரன் முன்னர் வெள்ளிய ஒளியையுடைய தெளிந்த நீர் ஒழுகும்படி நின்றன.

(சந்திர காந்தக்கல் என்பது சந்திரனைக் கண்டால் நீர் சொரியும் ஒருவகைக் கல்)

123. வெள்ளியம்பலத்திலே ஆடுகின்ற பெருமானின் மலர் போன்ற திருவடி நிழலின் கண் ஒன்றாகக் கலந்த பல உயிர்களின் தன்மையைப் போல், மலை போன்ற பளிங்குக் கற்களால் ஆகிய மேல் வீடுகளின் வரிசைதோறும் பல இயங்கியற் பொருள்களும், நிலையியற் பொருள்களும் அம்மேல் வீடுகளின் நிழலிலே ஒன்றிக் கலந்தன.

124. பசுவின் இளம் கன்றுகள் நறுக்கி உண்ணுகின்ற புற்குவியலை நீக்கிவிட்டு, காலில் கட்டிய கயிறானது அறும்படியாகத் துள்ளிக் குதித்து அங்கிருந்து நீங்கிச் செல்லும். அவ்வாறு துள்ளித் திரிந்த அவைகள், மரகதத்தால் அமைந்த சித்திரங்கள் அமைந்த திண்ணைகளில் வீசுகின்ற பசுமையான ஒளிக்கிற்றைப் புல் என்று மயங்கி நாவை நீட்டி, எட்டிப் பிடுங்கித் தின்று தம் நாவால் அசை போடும்.

(இளம்கன்றுகள் மரகத ஒளிக்கிற்றைப் புல்லென்று மயங்கி அதைத் தின்ன முயன்று ஏமாற்றமடையும்)

125. சிறிய கண்களையும், அசைகின்ற காதுகளையும் சங்கிலியால் கட்டப்பட்ட பெரிய கால்களையும், நீண்ட கொம்புகளையும் உடைய யானைக் கூட்டங்கள் செல்லும் போது அப்பெரிய வீதிகளில் தம் மதநீரைச் சொரியும். அம்மத நீரின் வாசனையால் வண்டுகள் அவற்றை மொய்க்கும். அது போன்றே மிக நுண்ணிய இடையானது முறிய பூரித்து எழுந்த மலைச் சிகரம் போன்ற முலைகளை உடைய மான் போன்ற மகளிர் கூட்டம் செல்லுகின்ற வழிகளில் எல்லாம் வண்டுகள் மொய்க்கும்படி கத்தூரி மணம் கமழும்.

126. மாட மாலையு மேடையு மாளிகை நிரையும்
ஆட ரங்கமு மன்றிவே ளன்னவர் முடியும்
ஏட விழ்ந்ததா ரகலமு மிணைத்தடந் தோளுஞ்
சூடு மாதரார் சீறடிப் பஞ்சுதோய் சுவடு.

127. மருமச் செம்புன லாறிட மாறடு கோட்டுப்
பருமச் செங்கண்மால் யானையின் பனைக்கையு மறைநூல்
அருமைச் செம்பொரு ளாய்ந்தவர்க் கரும்பொருள் ஈவோர்
தருமச் செங்கையு மொழுகுவ தானநீ ராறு.

128. பரிய மாமணி பத்தியிற் பதித்திருட் படலம்
பொரிய வில்லிடக் குயிற்றிய பொன்னர மியமும்
தெரிய மாமுர சொலிகெழு செம்பொனா டரங்கும்
அரிய மின்பயோ தரஞ்சுமந் தாடுவ கொடிகள்.

129. வலம்ப டும்புயத் தாடவர் மார்பமேற் புலவிக்
கலம்ப டர்ந்தபூண் முலையினார் காலெடுத் தோச்சச்
சிலம்ப லம்பிசை மழுங்கமுன் னெழுமவர் தேந்தாரப்
புலம்பு வண்டுநொந் தரற்றிய பொங்குபேர் ஒலியே.

126. பெண்களின் சிறிய பாதங்களில் பூசிய செம்பஞ்சுக் குழம்பின் சுவடுகளை, மாடவரிசைகளிலும், மேடை வரிசைகளிலும், மாளிகை வரிசைகளிலும், நடன சாலை வரிசைகளிலும் காணலாம். அதுமட்டுமின்றி அவர்களின் ஊடல் தீர்க்கப் பணிந்த ஆடவர்களின் தலையிலும் இதழ் விரிந்த மாலைகள் அணிந்த மார்பகங்களிலும், பெரிய இரண்டு தோள்களிலும் அக்குழம்பின் சுவடுகள் காணப்படும்.

127. மார்பினின்று இரத்தம் வெளிப்படும்படியாக பகைவர்களைக் கொன்றழிக்கின்ற தன்மையுடைய கொம்புகளும் கவசம் அணிந்த சிவந்த கண்களும் மயக்கமும் உடைய யானையின் பனை போன்ற துதிக்கையில் எப்பொழுதும் மதநீர் வெள்ளம் ஒழுகிக் கொண்டிருக்கும். அது போன்றே வேத நூலின் அரிய உண்மைப் பொருளை ஆராய்ந்து கொண்டிருக்கும் மேலோருக்கு தருமம் செய்கின்றவர்களின் சிவந்த கைகளில் தானநீர் பெருக்கு எப்போதும் ஒழுகிக் கொண்டிருக்கும்.

138. இருளானது சிதறும்படி ஒளிவிடுகின்ற பெரிய மணிகளை வரிசையாகக் கோத்த பொன்னாலாகிய நிலா முற்றங்களில், மின்னலையுடைய பசிய மேகங்கள் ஆடிக் கொண்டிருக்கும். அதுபோன்றே பெரிய முரசங்கள் ஒலிக்கும் பொன் நடனசாலைகளில் நுண்ணிய இடையுடைய மின்னலைப் போன்ற பெண்கள் ஆடிக் கொண்டிருப்பார்கள்.

129. வெற்றி மிக்க தோள்களையுடைய ஆடவர்களின் மார்பின் மேல், ஊடல் கொண்ட அவர்தம் தலைவியர் தம் கால் கொண்டு கலவிக் காலத்தில் உதைப்பர். அப்போது அவர்தம் மார்பில் அணிந்த மாலைகளில் உள்ள வண்டுகள் வருந்தி ஒலிக்கின்ற ஓசையானது அம்மகளிரின் பாதங்களில் உள்ள சிலம்புகளின் ஓசையை விஞ்சும்படி முன்னே ஒலிக்கும்.

(இரண்டு பாடல்கள் பெண்ணிற்கும் புறநகருக்கும் சிலேடை)

130. தைய லார்மதி முகங்களுந் தடங்களுங் குழைய
மைய ளாவிய விழிகளு மாடமுங் கொடிய
கையு நாண்மலர்ப் பொதும்பருங் கறங்குஇசைவண்ட
நெய்ய வோதியும் வீதியு நீளற னெறிய.

131. மலருந் திங்கடோய் மாடமுஞ் செய்வன மணங்கள்
அலருந் தண்துறை யுங்குடைந் தாடுவ தும்பி
சுலவுஞ் சோலையு மாதருந் தூற்றுவ வலர்கள்
குலவும் பொய்கையு மனைகளுங் குறைபடா வன்னம்.

132. ஊடி னாரெறி கலன்களு மம்மனை யுடன்பந்
தாடி னார்பரி யாரமு மடியினாற் சிற்றில்
சாடி னாரொடு வெகுண்டுகண் டதும்புமுத் திறைப்ப
வாடி னார்பரி நித்தில மாலையும் குப்பை.

130. பெண்களின் மதி போன்ற முகங்களும், தடாகங்களும் குழைகளை உடையன. (முகம் குண்டலத்தையும், தடாகம் தளிர்களையும் உடையன). பெண்களின் மைதீட்டப்பட்ட கண்களும், மேகத்தைத் தொடும் உயர்ந்த மாடங்களும் கொடிகளை உடையன (கண்கள் கொடிய வில்லையும், மாடங்கள் கொடிகளையும் உடையன). மாதர்களின் கைகளும், மலர்களையுடைய சோலைகளும் ஒலிக்கின்ற வண்டுகளை உடையன). எண்ணெய் பூசப்பட்ட மகளிரின் கூந்தலும் வீதிகளும் அறல்களை உடையன (கூந்தல் கருமணல் போல் நீண்டும் வீதிகள் அறநெறிகளைக் கொண்டும் உள்ளன).

131. வானுயர்ந்த திங்கள் தவழும் மாளிகைகளிலும், மலர்களிலும் மணம் நிறைந்திருக்கும். (மாளிகை கல்யாணக் கோலத்தையும், மலர்கள் வாசனையையும் கொண்டிருக்கும்). மலர்களிலும் குளிர்ந்த நீர்த்துறைகளிலும் தும்பிகள் குடைந்து ஆடும். (மலர்களில் வண்டும், நீர்த் துறையில் யானையும் குடைந்து ஆடும்) சூழ்ந்துள்ள சோலைகளும், மகளிர் வாய்களும் அவர்கள் தூற்றும், (சோலைகளில் மலர்களும், மகளிர் வாய்களில் பழிமொழியும் காணப்படும்) தடாகங்களிலும், வீடுகளிலும் அன்னம் நிறைந்திருக்கும் (தடாகத்தில் அன்னப்பறவையும், வீடுகளில் உணவும் நிறைந்திருக்கும்)

வீதிகளின் சிறப்பு

132. தம் கணவரோடு ஊடல் கொண்டு மாறுபட்ட பெண்கள் வெறுத்துக் கழட்டி எறிந்த அணிகளும், அம்மானை பந்து விளையாடும் பெண்கள், வெறுத்து தம்மால் சுமக்க முடியாதென்று கழட்டி எறிந்த அணிகளும், தம்முடைய சிறிய மணல் வீடுகளைக் கால்களால் சிதைத்த இளைஞரோடு வெகுண்ட பெண்கள் தம் கண்களில் நீர் ததும்ப, கழுத்திலிருந்து அறுத்தெறிந்த முத்து மாலைகளும் அந் நகரத்து வீதியில் குப்பைகளாகக் குவிந்திருக்கும்.

133. ஐய வென்னுரை வரம்பின வாகுமோ வடியர்
உய்ய மாமணி வரிவளை விறகுவிற் றுழன்றோன்
பொய்யில் வேதமுஞ் சுமந்திடப் பொறாதகன் றரற்றுஞ்
செய்ய தாண்மலர் சுமந்திடத் தவம்செய்த தெருக்கள்.

134. தோரண நிரைமென் காஞ்சி சூழ்நிலை நெடுந்தே ரல்குற்
பூரண கும்பக் கொங்கைப் பொருவின்மங் கலமா மங்கை
தாரணிந் தாரந் தூக்கிச் சந்தகி றிமிர்ந்து பாலிச்
சீரணி முளைவெண் மூரல் செய்துவீற் றிருக்கு மன்னோ.

135. திங்களைச் சுண்ணம் செய்து சேறுசெய் தூட்டி யன்ன
பொங்குவெண் மாடப் பந்தி புண்ணியம் பூசுந் தொண்டர்
தங்கண்மெய் வேடந் தன்னைத் தரித்தன சாலக் கண்கொண்
டங்கணன் விழவு காண்பா னடைந்தென மிடைந்த வன்றே.

133. அடியார்கள் உய்ய வேண்டுமென்று பெருமை மிக்க மாணிக்கங்களையும், வரிகளையுடைய வளையல்களையும், விறகையும் விற்றுத் திரிந்தவர் சிவபெருமான். அப்பெருமையுடைய இறைவனின் பொய்யில்லாத வேதங்களும் அடையமுடியாத சிவந்த திருவடிகளைச் சுமப்பதற்கு தவம் செய்த தெருக்களின் பெருமைகளைச் சொல்ல எளியேனுடைய எளிமையான சொற்களால் முடியுமா? முடியாது.

(இப்பாடலில் கூறப்பட்ட வரலாறுகள் இத்திருவிளையாடல் புராணத்தில் முறையே 17, 32, 41 ஆகிய படலங்களில் கண்டு கொள்க)

134. மங்கலமாகிய பெண்ணானவள், தோரணவரிசையாகிய மிருதுவான இடையில் அணியும் அணியோடு பெரிய நிலைத் தேராகிய அக்குலையும், நிறைகுடங்களாகிய கொங்கைகளையும் உடையவள். அவள் மலர் மாலைகளை அணிந்து, முத்து மாலைகளைத் தொங்கவிட்டு, சந்தனக் குழம்பையும், அகிற்குழம்பையும் பூசி, சிறப்புடைய வெள்ளிய முளைகளாகிய புன்னகையைக் காட்டி வீற்றிருந்தாள்.

135. சந்திரனைப் பொடிசெய்து சேறாகக் குழைத்துப் பூசினாற் போன்று விளங்கும் வெள்ளிய மாடவரிசைகள் திருநீற்றை அணிந்துள்ள அடியார்களின் உண்மையான வேடத்தினைத் தாங்கியவைகளாய் இருந்தன. அம்மாடவரிசைகள், தம் கண்களால் சோமசுந்தரக் கடவுளின் திருவிழாவைக் காண மிக நெருங்கியுள்ள கூட்டம்போல் நெருங்கி இருந்தன.

136. தேரொலி கலினப் பாய்மான் சிரிப்பொலி புரவி பூண்ட
தாரொலி கருவி யைந்தும் தழங்கொலி முழங்கு
கைம்மான்
பேரொலி யெல்லா மொன்றிப் பெருகொலி யன்றி
யென்றும்
காரொலி செவிம டாது கடிமணி மாடக் கூடல்.

பரத்தையர் வீதி

137. இழிபவ ருயர்ந்தோர் முத்தோ ரிளையவர் கழியர்
நோயாற்
கழிபவர் யாவ ரேனும் கண்வலைப் பட்டு நெஞ்சம்
அழிபவர் பொருள்கொண் டெள்ளுக்
கெண்ணெய்போ லளந்து காட்டிப்
பழிபடு போகம் விற்பா ராவணப் பண்பு சொல்வாம்.

138. மெய்படு மன்பி னார்போல் விரும்பினார்க்
கருத்துந் தங்கள்
பொய்படு மின்பம் யார்க்கும் புலப்படத் தேற்று
வார்போல்
மைபடு கண்ணார் காமன் மறைப்பொருள்
விளங்கத் தீட்டிக்
கைபடச் சுவராய்த் தோன்றச் சித்திரங் காணச்
செய்வார்.

136. விளக்கமான மணிகள் பதிக்கப்பெற்ற மாடங்களுடைய மதுரை மாநகரில் எப்போதும் தேர்கள் ஓடுவதால் அவற்றின் ஒலியானது கேட்டுக் கொண்டிருக்கும். கடிவாளத்துடன் விரைந்து ஓடும் குதிரைகளின் ஒலியும், அவை அணிந்துள்ள கிண்கிணி மாலை ஒலியும், ஐவகைக் கருவிகளின் ஒலியும் பிளிறுகின்ற யானையின் பேரொலியும் ஒன்று கலந்து ஒலிப்பதால் மேகத்தின் இடியொலி செவிகளில் கேட்கப்படுவதில்லை.

பரத்தையர் வீதி

137. இழிகுலத்தோர், உயர் குலத்தோர், மூத்தோர் இளையோர், நீங்காத நோயினால் வருத்தமடைவோர் ஆகியவர்களில் யாவரேனும் தம் கண் வலையில் மாட்டிக் கொண்டால், அவர்களின் மனம் மெலிவடையும்படி அவரைக் கைக்கொள்வர். அத்துடன் அவர் தம் பொருள்களையும் வாங்கிக் கொண்டு, எள்ளுக்கு எண்ணெய் விற்பவர் போல் சரியாக அளந்துகாட்டி பெரியோர்களால் பழிக்கப்படுகின்ற போக இன்பத்தை அவர்கட்கு விற்பர். அத்தகைய புறப் பெண்டிற் உள்ள பரத்தையர் வீதியின் தன்மையைக் கூறுவோம்.

138. மைதீட்டிய கண்களையுடைய விலைமகளிர் உண்மையான அன்புடையவர் போல் நடித்து, தம்மை விரும்பிய ஆடவருக்கு இன்பத்தை ஊட்டுவார்கள். தம்முடைய பொய்யான கலவி வித்தைகளை, அதனை அறியாத ஆடவர்களுக்குக் காட்டி அவர்களைத் தெளிவிப்பார்கள். அவ்வாறு தெளிவிக்க, காம நூலுட் கூறும் காமலீலை வகைகள் விளங்கும்படி அவற்றைச் சித்திரங்களாகத் தீட்டியும் வைத்திருப்பார்கள்.

139. திருவிற்கான் மணிப்பூ ணாகம் பலகையாத்
தெண்முத் தார
அருவிக்கால் வரைமென் கொங்கைச் சூதொட்டி
யாடி வென்றும்
மருவிக்கா முகரைத் தங்கள் வடிக்கண்வேன் மார்பந்
தைப்பக்
கருவிச்சூ தாடி வென்றும் கைப்பொருள் கவர்தல்
செய்வார்.

140. தண்பனி நீரில் தோய்த்த மல்லிகைத் தாம நாற்றி
விண்படு மதியந் தீண்டும் வெண்ணிலா முற்றத்
திட்ட
கண்படை யணைமேற் கொண்டு காமனுங் காமுற்
றெய்தப்
பண்பல பாடி மைந்த ராவியைப் பரிசில் கொள்வார்.

141. குரும்பைவெம் முலையிற் சிந்து சாந்தமுங் குழலிற்
சிந்தும்
அரும்பவிழ் மாலைத் தாது மளிநுகர்ந் தெச்சி லாகிப்
பொரும்பரிக் காலிற் றூளாய்ப் போயர மாதர் மெய்யும்
இருங்குழற் காடுஞ் சூழ்போ யியன்மணம் விழுங்கு
மன்னோ.

142. ஆலவா யுடையா னென்று மங்கயற் கண்ணி
யென்றும்
சோலைவாழ் குயிலி னல்லார் சொல்லியாங்
கொருங்கு சொல்லும்
பாலவாங் கிளிகள் பூவை பன்முறை குரவ னோதும்
நூலவாய்ச் சந்தை கூட்டி நுவன்மறைச் சிறாரை
யொத்த.

139. மாலையணிந்து ஆரம் சூடிய மார்பகங்களை உடைய காமுகர்களைச் சேர்ந்த அம்மகளிர் அம் மார்பையே பலகையாகக் கொண்டு முத்து மாலையாகிய, நீரைச் சொரியும் அருவி போன்ற மெல்லிய கொங்கைகளால் அழுந்தப் புல்லி ஆடி அவரைச் சூதாக வெற்றி கொள்வர். தம் மாவடு போன்ற வேற் கண்களால் அவர்தம் மார்பில் தைக்க, சூதினை ஆடி வென்று அவர் பொருள்களைக் கைக் கொள்வர்.

140. குளிர்ந்த பனிநீரில் நனைந்த மல்லிகை மலர்களைத் தொங்கவிட்டு, விண்ணைத் தொடுமளவு உயர்ந்த நிலாமுற்றத்தில் அமைந்த மஞ்சத்தின் மீது வீற்றிருந்து, மன்மதனும் விரும்பும் பல்வகைப் பண்ணமைந்த இசைப் பாடல்களைப் பாடி ஆடவர்களின் உயிரைப் பரிசாகப் பெற்றுக் கொள்வர்.

141. தென்னங் குரும்பை போன்ற முலைகளில் இருந்து சிந்துகின்ற சந்தனமும், கூந்தலில் இருந்து விழுந்த முகைவிரிந்த மலர்களின் மகரந்தமும் வண்டுகளால் உண்ணப்பட்டு எச்சிலாகும். பின்னர் அவைகள் குதிரைகளின் காலினால் மிதிபட்டுத் துகளாகி மேலெழுந்துபோய்த் தேவமகளிரின் உடலையும் நீண்ட கூந்தலையும் சூழ்ந்து அவற்றின் இயற்கை மணத்தை மறைக்கும்.

142. ஆசிரியர்கள் பலமுறை ஓதுகின்ற வேதத்தினைக் கூட்டம் கூட்டிச் சொல்கின்ற அந்தணச் சிறுவர்களைப் போல் சோலையில் வாழும் குயில் போன்ற மொழியுடைய பரத்தையர், 'திருவால வாயில் வீற்றிருக்கும் பெருமானே' என்றும், 'அங்கயற் கண்ணம்மையே' என்றும் சொல்வது போல் பாலை விரும்புகின்ற கிளிகளும், நாகணவாய்ப் பறவைகளும் சொல்லிக் கொண்டே இருக்கும்.

143. ஔவிய மதர்வேற் கண்ணா ரந்தளிர் விரன டாத்தும்
திவ்விய நரம்புஞ் செவ்வாய்த் தித்திக்கு மெழாலும்
தம்மிற்
கௌவிய நீர வாகிக் காளையர் செவிக்கா லோடி
வெவ்விய காமப் பைங்கூழ் விளைதர வளர்க்கு
மன்றே.

144. கட்புல னாதி யைந்து முவப்புறக் கனிந்த காமம்
விட்புலத் தவரே யன்றி வீடுபெற் றவரும் வீழ்ந்து
பெட்பமுற் றமுதும் கைப்பப் பெரும்குலக் கற்பி
னார்போல்
நட்பிடைப் படுத்தி விற்கு நல்லவ ரிருக்கை யீ தால்.

வேளாளர் வீதி

145. வழுக்கறு வாய்மை மாண்புங் கங்கைதன் மரபின்
வந்த
விழுக்குடிப் பிறப்பு மூவர் ஏவிய வினைகேட் டாற்றும்
ஒழுக்கமு மமைச்சாய் வேந்தர்க் குறுதிசூழ்
வினையுங் குன்றா
இழுக்கறு மேழிச் செல்வர் வளமறு கியம்ப லுற்றாம்.

146. வருவிருந் தெதிர்கொண் டேற்று நயனுரை வழங்கு
மோசை
அருகிருந் தடிசி லூட்டி முகமனன் கறையு மோசை
உரைபெறு தமிழ்பா ராட்டு மோசைகேட் டுவகை
துள்ள
இருநிதி யளிக்கு மோசை யெழுகட லடைக்கு
மோசை.

143. பொறாமையுடைய வேல்போன்ற கண்களை உடைய பரத்தையர், அழகிய தளிர் போன்ற விரல்களால் உண்டாக்குகின்ற யாழ் நரம்பின் ஓசையும், அவர் தம் சிவந்த வாயினின்று வருகின்ற இனிய குரல் ஒலியும் தம்முள் ஒன்று கலந்து இளைஞர்களின் செவியாகிய கால் வழியே உள்ளே சென்று கொடிய காமமாகிய பயிர் விளையும்படி அதனை வளர்க்கும்.

144. கண் முதலிய ஐம்புலன்களும் இன்பம் அடையும்படியாக, பெருமைமிக்க உயர்ந்த குடியில் பிறந்த பெண்களின் கற்பு மேம்பாடுடைய தன்மையைப் போல் நடித்து, தேவர்களே அல்லாமல் பாசம் நீங்கப் பெற்ற சீவன் முக்தர்களும் விரும்பி ஏற்கும்படி தம்முடைய நட்பால் அவர்களை அகப்படுத்தி, அமுதத்தைக்கூட அவர்களை வெறுக்க வைக்கும் மிகுந்த காமத்தை அவர்களுக்கு விற்கின்ற பரத்தையர்களின் இருப்பிடம் இத் தன்மையுடையது.

வேளாளர் வீதி

145. தவறில்லாத வாய்மையின் மாட்சியும், கங்கையின் குலத்தில் தோன்றிய சீரிய குடிப்பிறப்பும், அந்தணர், அரசர், வணிகர் ஆகிய மூவர் ஏவிய வினையைக் கேட்டு முடிக்கின்ற ஒழுக்கமும், அரசருக்கு மந்திரியாய், அவன் ஆராயும் வினையும் குறையாத மேழியால் வரும் செல்வத்தையும் உடைய வேளாளரின் வீதியின் வளப்பங்களை இனிச் சொல்லத் தொடங்குவோம்.

146. வருகின்ற விருந்தினரை எதிர்கொண்டு இன்முகத்தோடு வரவேற்றுப் பக்கத்தில் இருந்து, உபசார மொழிகளைக் கூறி அறுசுவை உணவுகளை உண்பிக்கும் ஒலியும், தமிழ்ப்பாக்களின் சொற்சுவை பொருட்சுவைகளைக் கேட்டு அவர்களைப் பாராட்டும் ஒலியும், புலவர்களுக்குப் பெரும் பொருள் கொடுத்தலினால் உண்டாகும் ஒலியும் ஒன்று கூடிக் கடல் ஒலியை கீழ்ப்படுத்தும்.

147. அருந்தின ரருந்திச் செல்ல வருந்துகின் றாரு மாங்கே
இருந்தினி தருந்தா நிற்க இன்னமு தட்டுப் பின்னும்
விருந்தினர் வரவு நோக்கி வித்தெலாம் வயலில் வீசி
வருந்திவிண் ணோக்கு மோரே ருழவர்போல் வாடி
நிற்பார்.

148. வானமும் திசையும் பொங்கும் புகழ்மையும் வானம்
பேணும்
ஞானமும் பொறையுங் குன்றா நன்றியு மூக்கப் பாடுந்
தானமுங் கொடையு மன்பும் வரிசையுந் தகைசா
ணண்பும்
மானமுந் தவஞ்செய் தீன்ற மகவுபோல் வளர்க்க
வல்லார்.

வணிகர் வீதி

149. புல்லியோர் பண்டங் கொள்வார் வினவின
பொருடம் பக்கல்
இல்லெனி னினமா யுள்ள பொருளுரைத் தெதிர்ம
றுத்தும்
அல்லதப் பொருளுண் டென்னின் விலைசுட்டி
யறுத்து நேர்ந்துஞ்
சொல்லினு மிலாபங் கொள்வார் தொன்மர
பிருக்கை சொல்வாம்.

150. நீல வேதிமேற் பளிங்கினா னிழற்சுவர் நிறீஇமின்
கால வாலிய வைரவாள் கானிரைத் தும்பர்க்
கோல வாணிலாச் சொரிமணி குயிற்றிவெண் மாடம்
மாலை போல்வருத் தியற்றின பீடிகை மறுகு.

147. இடையறாது விருந்தினர் வந்து விருந்துண்டு செல்லவும், உண்ணுபவர் முன் உண்டவர்போன்று மகிழ்வுடன் உண்டு கொண்டிருக்கவும், பின்னர் உணவை சமைத்து வைத்துக் கொண்டு விருந்தினர் வருகையை எதிர்நோக்கியபடி வேளாளர் வாடி நின்ற காட்சியானது வயலில் விதையை விதைத்துவிட்டு மழையை எதிர் நோக்கி யுள்ள ஒரே ஏரினையுடைய உழவனைப் போல் இருந்தது.

148. அவ்வேளாளர் வான உலகத்திலும் எட்டுத் திக்கிலும் புகழை உடையவர்கள், வீட்டுலகை விரும்புகின்ற மெய்யறிவுடையவர்கள் பொறுத்துக் கொள்ளுகின்ற தன்மையும் குறையாத நன்றியும் உடையவர்கள், ஊக்கம் தானம், ஈகை, அன்பு, பெருமை மிக்க மானம் ஆகிய இவைகளைத் தவம் கிடந்து பெற்ற பிள்ளையை வளர்ப்பது போல் வளர்த்துக் கொள்ளுகின்ற இயல்பை உடையவர்கள்.

வணிகர் வீதி

149. வாங்குகின்றவர் வந்து ஒரு பண்டம் உண்டோ என்று கேட்பாராயின் அப்பண்டம் தம்மிடத்து இல்லை யாயின் அதற்கு இனமாய் உள்ள பொருள் தம்மிடத்து உண்டென்று கூறுவர். அவர்கள் கேட்ட பொருள் தம்மிடத்து இருக்குமாயின் விலையை வரையறுத்துக் கூறி அப்பொருளைக் கொடுத்து, பொருளால் மட்டுமன்றிச் சொல்லாலும் லாபம் அடைகின்ற வணிகர்களின் பழமை தொட்டு வருகின்ற வீதியின் பெருமையைக் கூறுவோம்.

150. அவ்வணிகரின் கடை வீதிகளில் உள்ள திண்ணைகள் நீல மணிகளால் விளங்கும். சுவர்களை ஒளி பொருந்திய பளிங்குக் கற்களால் உண்டாக்கி, வெள்ளிய ஒளியுடைய வைரத் தூண்களை வரிசையாக நட்டிருப்பர். அவற்றின் மேற் கூரைகளில் அழகிய வெண்ணிலவின் ஒளியினைச் சிந்துகின்ற சந்திரக் காந்தக் கற்களைப் பதித்து, மலர்மாலையைப் போல் மாடங்களை வரிசையாக அமைத்திருப்பர்.

151. திரைய ளிப்பவுந் திரைபடு தீம்புனல் வேலிக்
கரைய ளிப்பவுங் கரையிலா னிரைபடு கானத்
தரைய ளிப்பவுந் தரைகிழித் தூன்றிவிண் டாங்கும்
வரைய ளிப்பவும் வாங்கிவாய் மடுப்பன மாடம்.

152. கரிய கம்பலக் கிடுகின் மேற் கதிர்விடு பவளத்
தெரியல் பொன்னரி மாலிகை தெண்ணிலாச் சொரியும்
பரிய நித்தில மணிவட மரகதப் பசுந்தார்
விரிய விட்டன விந்திர வின்னிசை யனைய.

153. நாள்க ளுங்குளிர் திங்களு ஞாயிறு மேனைக்
கோள்க ளுங்குளிர் விசும்பொரீஇக் குடிபுகுந் தாங்கு
வாள்கி டந்திராப் பகலொளி மழுக்கலால் வணிகர்
ஆள்க லம்பகர் பீடிகை துறக்கநா டனைய.

154. பன்னி றத்தபல் பெருவிலைப் பட்டெலா மவண
அன்ன பட்டின்மேம் படுவிலைப் பருத்தியு மவண
எந்நி லத்தரும் பொருள்பதி னெழுபுல வணிகர்
மன்னி ருக்கையு மரும்பெறல் வளனெலா மவண.

155. மரக தத்தினா லம்மிகள் வைரவா ளுலக்கை
உரல்கள் வெள்ளியா லடுப்பகில் விறகுலை பனிநீர்
அரிசி முத்தழல் செம்மணி யடுகலன் பிறவும்
எரிபொ னாலிழைத் தாடுப விவர்சிறு மகளிர்.

151. வணிகர் கடல் தரும் பொருள்களையும் (நெய்தல்) இனிய அலைகளையுடைய நீர் சூழ்ந்த மருதநிலம் தரும் பொருள்களையும், முல்லை நிலம் தரும் பொருள்களையும் வானத்தை ஊன்றித் தாங்குகின்ற மலை தரும் பொருள்களையும் (குறிஞ்சி) பண்டக சாலைகளில் கொண்டு வந்து நிறைப்பர்.

152. கருமையான கம்பளம் போர்த்தப்பட்ட சட்டத்தின்மேல், கதிர் ஒளியை விஞ்சும் பவள மாலைகளும், பொன் மாலைகளும், பெரிய நிலவு போன்ற ஒளி சிந்தும் முத்து மாலைகளும், பசுமையான மரகத மாலைகளும் வரிசை வரிசையாகத் தொங்கவிடப்பட்டு இந்திரவில்லைப் போன்று விளங்கின. (கம்பளம் மேகம் போன்றும் மாலைகள் இந்திரவில்லைப் போன்றும் இருந்ததென்க).

153. நாள் மீன்களும், குளிர்ந்த நிலவும், சூரியனும், மற்றைய கோள்களும் வானத்தினின்று நீங்கி வேறோர் இடத்தில் குடிபுகுந்தது போன்று ஒளிவீசிக் கொண்டு நிற்கும். அவ்வொளியால் இரவும் பகலும் அற்ற விண்ணுலகம் போல் அக்கடை வீதிகள் விளங்கும்.

154. தமிழ் நிலம் தவிர பதினேழு தேய வணிகர்களின் உறைவிடமும், பிற செல்வங்களும் அக்கடை வீதிகளில் உள்ளன. அத்துடன் பல நிறத்திறனையுடைய விலையுயர்ந்த பெரிய பட்டாடைகளும், அப்பட்டாடையைவிட விலைமிக்க பருத்தி ஆடைகளும் அங்கு இருந்தன.

155. வணிகச் சிறுமிகள் மரகதங்களால் அம்மிக் குழவிகளும், ஒளிமிக்க வைரங்களால் உலக்கை உரல்களும் வெள்ளியினால் அடுப்பும் அமைத்துக் கொள்வர். அகில் கட்டையை விறகாகவும் பனிநீரை உலை நீராகவும் முத்துக்களை அரிசியாகவும் சிவந்த மாணிக்கத்தை நெருப்பாகவும் கொண்டு, பொன்னால் சமையல் பாத்திரங்களை அமைத்துக் கொண்டு விளையாடுவர்.

156. செயிரிற் றீர்ந்தசெம் பொன்னினால் திண்ணிலைக் கதவம்
வயிரத் தாழுடைத் தவர்கடை வாயிலு மென்றால்
அயிரிற் றீர்ந்தபே ரறிஞரு மனையர்தஞ் செல்வத்
தியலிற் றாமென வரையறுத் திசைப்பதை யெவனோ.

157. எரிக்கு றும்பொறி யனையசெம் மணிசுட ரெறிபொன்
வரிச்சு ரும்புநேர் மரகத முத்துவாள் வைரந்
தெரிப்ப ருந்துகிர் சிந்தின செல்லுநா ளொன்றும்
கரிப்பர் கையகப் படுவன வாயிரத் திரட்டி.

158. பாய தொன்மரப் பறவைபோற் பயன்கொள்வான் பதினெண்
தேய மாந்தருங் கிளந்தசொற் றிரட்சிதான் றூய
மாயை காரிய வொலி யன்றி வான்முதற் கருவின்
ஆய காரிய வோசையே யாய்க்கிடந் தன்றே.

159. ஒழிவில் வேறுபல் பொருளுமே முலோகமும் பிறவும்
வழுவில் வேறுபல் கலைகளு மரபுளி வகுத்துத்
தழுவி வேண்டினர் தாங்கொளத் தக்கவா பகரா
அழிவி லாமறை போன்றன வாவண வீதி.

160. திக்கெலாம் புகழ் மதுரையைச் சிவபுர மாக்கி
முக்க ணாயக னரசுசெய் முறையினுக் கேற்பத்
தக்க தோழனோ டளகைமா நகருறை தயக்கம்
ஒக்கு மந்நகர் வாணிக ருறையுள்சூழ் நிகமம்.

156. வணிகர் வீடுகளின் நிலைக்கதவானது குற்றமற்ற சிவந்த பொன்னாலானது. வயிரத்தால் தாழ்ப்பாள்கள் அமைந்திருக்கும். ஆதலால் அவர்களின் செல்வத்தைக் குற்றமற்ற அறிஞர்களும் இவ்வளவினை உடையது என்று எவ்வாறு மதிப்பிட்டுக் கூறமுடியும்?

157. வணிகர் வீதிகளில் நெருப்பின் பொறியைப் போன்ற சிவந்த மாணிக்கங்களும், ஒளிவீசும் பொற் கிற்றினையுடைய வண்டுகளைப் போன்ற மரகதங்களும் முத்துக்களும், ஒளிமிக்க வைரங்களும், விலை மதிப்பற்ற பவளங்களும் சிதறிக் கிடக்கும். நாள்தோறும் அரித்தெடுப்போர் கையில் இவைகள் வகைக்கு இரண்டாயிரம் வீதம் கிடைக்கும்.

158. பெரிய ஆலமரத்தில் பயன் கொள்ளுதற் பொருட்டுக் கூடிய பறவைகளைப் போல், பயனைக் கொள்ள வந்த பதினெண் மொழிகள் வழங்கும் நிலத்து மக்களும் அவரவர் மொழியில் பேசுவதால் பொருள் புரிந்து கொள்ள முடியாத சப்த மாதிரிகையாக மட்டுமே அவ்வொலி இருக்கும்.

159. வெவ்வேறு வகையான பொருள்களையும் ஏழுவகை உலோகங்களையும் குற்றமற்ற பல வகைப்பட்ட கலைகளையும், பிறவற்றையும் முறையாக வகைப்படுத்தி அதனை விரும்பி வாங்க வந்தவர் ஏற்றுக் கொள்ளும்படி தக்கவாறு விலை சொல்லி விற்கும் கடை வீதிகள் அழிவில்லாத வேதங்களைப் போல் காட்சியளித்தன.

160. எல்லாத் திசைகளிலும் புகழப்படுகின்ற மதுரையைச் சிவபுரமாக ஆக்கி, மூன்று கண்களையுடைய இறைவன் அரசு செய்த முறைமைக்கு ஈடாக, நல்ல நண்பனாகிய குபேரனோடு அளகை நகரையும் நோக்கினால் பொருத்த முறாது. அத்தகைய மதுரை மாநகரத்தின் வணிகர்கள் இல்லங்கள் சூழ்ந்த கடை வீதிகள் சிறப்புற விளங்கியது.

(குபேரனைவிடச் சிவபெருமான் மேம்பாடுடையவர் போன்று, அளகை நகரைவிட மதுரை நகர் மேம்பாடுடையது)

மன்னவர் வீதி

161. ஒற்றை யாழியா னுலகிரு ளொதுக்குமா போலச்
செற்ற நேமியாற் கலி யிரு டின்றுகோ லோச்சி
மற்ற டம்புய வலியினான் காறடு சீற்றக்
கொற்ற மன்னவர் விழுக்குடிக் கோமறு குரைப்பாம்.

162. தரங்க வேலைக டம்மையே தாளுறப் பிணித்துத்
துரங்க மாவெனத் தொகுத்தமந் துறைபல வருவி
இரங்கு மோரறி வுயிர்வரை யாவையும் பெயர்த்து
மரங்கொல் யானைபோற் பிணித்தகூ டம்பல
மன்னோ.

163. மழுக்கள் வச்சிரங் கார்முகம் வாளிமுக் குடுமிக்
கழுக்கள் சக்கர முடம்பிடி கப்பண நாஞ்சில்
எழுக்க ணாந்தகம் பலகைதண் டிவைமுதற்
படையின்
குழுக்க ளோடிகல் விந்தைவாழ் கூடமும் பலவால்.

164. துளைய கல்லைமா லெனக்கொண்டு சுழற்றியுஞ்
செந்தூள்
அளையும் யானைபோற் பாய்ந்துமல் லாற்றியும்
ஆற்றல்
விளைய வாளொடு கேடகம் வீசியும் வென்றி
இளைய ராடமர் பயில்வன வெண்ணிலாக் கூடம்.

165. தேசவிர் நீல மாடஞ் செம்மணிச் சென்னி மாடங்
காசறு கனக மாடஞ் சந்திர காந்த மாடம்
மாசற விளக்கு மின்ன மாடநீண் மாலை கூடற்
பாசிழை மடந்தை பூண்ட பன்மணிக் கோலை யன்ன.

மன்னர் வீதி

161. உலகில் உள்ள புற இருளை, ஒற்றைச் சக்கரம் பூண்ட தேரினையுடைய சூரியன் நீக்குவது போலக் கோபமுடைய தன்னுடைய ஆணைச் சக்கரத்தால், துன்பமாகிய இருளை நீக்கி, செங்கோல் செலுத்தித் தன் தோள் ஆற்றலால் பகைவரைக் கொன்று சீற்றமுடன் வெற்றியை அடையும் வீதியின் பெருமையைச் சொல்வோம்.

162. கடல் அலைகளையே குதிரைகளாக்கிக் கட்டி வைத்திருக்கின்ற குதிரைக் கூடங்களும், மலைகள் அனைத்தையும் தோண்டி வைத்தது போன்ற, ஓரறிவு உயிராகிய மரங்களை முறிக்கின்ற, யானைகளைக் கட்டி வைத்துள்ள யானைக் கூடங்களும் அவ்வரச வீதிகளில் உள்ளன.

163. மழுக்கள், வச்சிரங்கள், வில், அம்பு, முத்தலைச் சூலம், சக்கரக்கை வேல், இரும்பு நெருஞ்சி முள், கலப்பை, வளை தடிகள், வாள், கேடகம், தண்டம் முதலான படைக் கலத்தின் கூட்டத்தோடு வெற்றிக்குரிய கொற்றவை வாழ்கின்ற கூடங்களும் அவ்வீதிகளில் பல உள்ளன.

164. தொளையையுடைய கல்லை ஏந்தித் திருமால் திகிரியைச் சுழற்றினாற் போல் சுழற்றியும் செம்புழுதியில் படிந்த யானைகளைப் போல் செந்நிலத்தில் பாய்ந்து மற்போர் செய்தும், வாள்படையோடு கேடகம் வீசியும், வெற்றிமிக்க அரசிளங்குமரர் போர்த்தொழில் பயிற்சி செய்யும் அளவற்ற கூடங்கள் அவ்வீதியில் உள்ளன.

165. நீல மணியாலாகிய மாளிகையும், செம்மணியால் கட்டப்பட்ட மாளிகையும், குற்றமற்ற பொன்னாலாகிய மாளிகையும், சந்திர காந்தக் கற்களால் அமைக்கப்பட்ட மாளிகையும் வரிசை வரிசையாக அமைந்திருக்கும் தோற்றம் மதுரையாகிய மங்கையின் பலவகை மணிகளைக் கோத்தணிந்த வடங்களை ஒக்கும்.

166. விரையகல் கதும்பி னல்லார் வீங்கிளங் கொங்கை போழ்ந்த
வரை யகன் மார்ப மன்றி வடுப்படார் தமக்கன் பில்லார்
உரையகன் மான வாற்றா லொழுகுவார் பலகை யொள்வாட்
கரையகல் விஞ்சை வீரர் கணம்பயில் காட்சித் தெங்கும்

167. மின்னைவா ளென்ன வீசி விங்குகார் தம்மிற் போர்மூண்
டென்னவான் மருப்பு நீட்டி யெதிரெதிர் புதையக் குத்தி
அன்னவா னென்ன வாய்விட் டதுவெனச் செந்நீர் சோரப்
பொன்னவா மகன்ற மார்பர் பொருகளி றாட்டு வார்கள்.

168. தூண்டுவா ருளமுந் தங்கள் பின்னிடத் துவக்குண் டீர்த்துத்
தாண்டுமா னொற்றை யாழித் தேரினுந் தள்ளித் துள்ளப்
பாண்டில்வாய்ப் பசும்பொன் றேயப் பார்மகண் முதுகுகீண்டு
சேண்டிசை போய்மடங்கச் செல்வத்தேர் நடாத்து வார்கள்.

169. மைந்தர்தந் நெருக்கிற் சிந்து கலவையும் மகளிர் கொங்கைச்
சந்தமுங் கூந்தல் சோர்ந்த தாமமுஞ் சிவிறி வீசு
சிந்துரப் பொடியும் நாறத் தேனொடு மெழுந்து செந்தூள்
அந்தர வயிறு தூர்ப்ப வடுபரி நடாத்துவார்கள்.

166. அங்குள்ள எல்லா இடங்களிலும் அளவற்ற வீரர் கூட்டம் நெருங்கி இருந்தது. அவ்வீரர்களின் மலைபோன்ற மார்பகங்களில், மணம் மிக்க கூந்தலையுடைய பெண்களின் பருத்த இளமையான தனங்கள் பிளந்ததினால் உண்டான வடுக்களேயன்றி வேறு வடுக்கள் காணப்படவில்லை. தம் உயிரிடம் அன்பற்றவர்களாகவும், புகழ்மிக்க மானநெறியில் வாழ்கின்றவர்களுமாகிய அவ்வீரர்கள் கேடகத்தையும் ஒளி பொருந்திய வாளையும் பற்றி வீசுகின்ற வித்தையில் வல்லவர்கள்.

167. சூல் முற்றிய மேகங்கள் தமக்குள் போர் மூண்டுவிட்டதைப் போன்று மின்னலை வாள் போல் வீசிப் போர் செய்வதைப் போன்று யானைகள் தம் தந்தங்களை எதிரே நீட்டி எதிரிகளைப் புதையக் குத்தி, அம்மேகங்களைப் போன்றே வாய்விட்டு முழங்கி, அம்மேகம் சிந்துகின்ற தாரை போன்றே குருதி மழையைச் சொரிந்து போர் செய்ய, திருமகளும் விரும்பும் அகன்ற மார்பினையுடைய வீரர்கள் யானைகட்குப் போர்ப் பயிற்சி செய்விப்பார்கள்.

168. மனோ வேகத்தை விடவும் அதிக வேகமுடனும், ஒருருளையையுடைய சூரியனின் தேரில் கட்டப்பட்டு இழுத்துத் தாவுகின்ற குதிரைகளை விட அதிக வேகமுடனும், பசிய பொன்னால் செய்யப்பட்ட அச்சானது தேயும்படியும், நிலம'_ந்தையின் முதுகு கிழியும்படி வானிலும், திசைகளிலும் போய் மீளும்படியும் அவ்வீரர்கள் சிறந்த தம் தேரினைச் செலுத்துவார்கள்.

169. ஆடவர்களின் நெருக்கத்தால் உதிர்ந்த கலவைச் சாந்தும், பெண்களின் கொங்கைகளில் இருந்து உதிர்ந்த சந்தனமும், அவர்களின் கூந்தலில் இருந்து விழுந்த மகரந்தமும், துருத்தியால் வீசுகின்ற சிந்துரச் சுண்ணமும் ஆகிய இவற்றினால் சிவந்த புழுதியானது, தேனோடு கமழ மேலெழுந்து வானத்தின் நடுவிடத்தை மறைக்கும்படி வெற்றிமிக்க குதிரைகளை அவ்வீரர்கள் செலுத்துவார்கள்.

170. தம்முயிர்க் கிரங்கார் ஆகித் தருக்கொடு மான மீப்பத்
தெம்முனை யெதிர்ந்தா ராற்றுஞ் செருவெனக் குருதிச் செங்கேழ்க்
கொய்ம்மலர்க் குடுமிச் சேவல் கோழிளந் தகர்போர் மூட்டி
வெம்முனை நோக்கி நிற்பார் வேறவற் றூறு நோக்கார்.

171. பெண்முத்த மனைய பேதைச் சிறுமியர் பெருநீர் வைகை
வெண்முத்த மிழைத்த சிற்றில் சிதைபட வெகுண்டு நோக்கிச்
கண்முத்தஞ் சிதறச் சிந்தும் கதிர்முத்த மாலைத் தட்பத்
தெண்முத்தி னகைத்துச் செல்வச் சிறார்கடே ருருட்டு வார்கள்.

172. கொடிமுகி றுழாவு மிஞ்சிக் கோநகர் வடகீழ் ஞாங்கர்
முடிமிசை வேம்பு நாற முருகவி ழாரும் போந்தும்
அடிமிசை நாறத் தென்னர் வழிவழி யரசு செய்யும்
இடிமுர சறங்கா வாயி லெழுநிலை மாடக் கோயில்.

மறையவர் வீதி

173. ஆத்திக ருண்டென் றோது மறமுதற் பொருள்கள் நான்கும்
நாத்திகம் பேசும் வஞ்சர் நாவரி கருவி யாக
ஆத்தனா லுரைத்த வேத வளவுகண் டுள்ளந் தேறித்
தீர்த்தராய் முத்தீ வேட்குஞ் செல்வர்தம் இருக்கை சொல்வாம்.

170. தம்முயிரைப் பற்றிச் சிறிதும் இரங்காதவர்களாய் செருக்கோடு மானமும் இழுக்க, பகைவரின் போர் முனையில் எதிர்த்த வீரர்கள் செய்யும் போரைப் போல், சிவந்த நிறமுடைய கொய்தமலர் போன்ற கொண்டையுடைய சேவல்களையும், கொழுமையும் இளமையும் உடைய ஆட்டுக் கிடாக்களையும் போரில் செலுத்தி அவற்றின் துன்பங்களை நோக்காமல் போர் ஒன்றினையே நோக்கி வீரர்கள் நிற்பர்.

171. முத்தினை ஒத்த பேதைச் சிறுமியர் கட்டிய சிறு வீடுகள், மிகுந்த நீரினையுடைய வையையாற்றின் வெள்ளிய முத்துக்களால் சிதைய, அதனால் அவர்கள் கோபத்துடன் பார்க்க, அவர் தம் கண்கள் முத்துப்போன்ற நீர்த்துளிகளைச் சிந்த, அப்போது அறுந்து சிதறிய அப்பெண்களின் முத்து மாலைகளின் மணிகள், செல்வம்மிக்க அரசிளங் குமரர்கள் செலுத்துகின்ற தேரினைத் தடை செய்யும். அதைக் கண்ட அரசிளங் குமரர்கள் தெள்ளிய முத்துப் போன்ற புன்னகையை உதிர்த்துவிட்டுத் தம் தேரைத் தொடர்ந்து செலுத்துவார்கள்.

172. மேகத்தைத் தொடுகின்ற உயர்ந்த கொடிகளை உடைய மதிலால் சூழப்பட்டது அத் தலைநகரம். அந்நகரின் வடகிழக்குப் பக்கத்தில் முடியின்கண் வேப்பம் பூ மாலையின் நறுமணம் கமழும். அடியின்கண் ஆத்திமாலையும் பனைமாலையும் நறுமணம் வீசும். இவ்வகை மணங்களின் வாசம் கமழும்படி, பாண்டிய மன்னர்கள் வழி வழி செங்கோல் செலுத்தி ஏழுநிலை மாடங்களையும் உடைய அரண்மனை உள்ளதாகும்.

மறையவர் வீதி

173. ஆத்திகர்கள் ‘உண்டு’ என்று கூறும் அறம் முதலிய நான்கு பொருளும், ‘இல்லை’ என்று கூறும் நாத்திகர்களின் நாவினை அறுக்கின்ற வாளாகச் சிவபெருமான் உரைத்து அருளிய வேதங்களின் முடிவும் உணர்ந்து, மனம் தெளிந்து தூய்மை உடையவராய், முத்தீ வேள்வியை முடிக்கும் செல்வர்களாகிய மறையவர்களின் வீதியின் பெருமையைச் சொல்லுவோம்.

174. முஞ்சிநாண் மருங்கின் மின்னப் பொன்செய்த
முளரி வேய்ந்த
குஞ்சிநான் றசையத் தானைச் சொருக்குமுன்
கொய்து தூங்கப்
பஞ்சிநாண் கலைந்தோன் மார்பும் பலாசக்கோல்
கையும் தாங்கி
எஞ்சிநாண் மறைநூல் கற்போர் கிடைகளே யில்ல
மெல்லாம்.

175. தீவினை யந்த ணாளர் சிறாா்பயி றெய்வ வேதம்
நாவுரு வேற்றக் கேட்டுக் கிளிகளோ நவிலும்
வேற்றுப்
பூவையும் பயின்று புத்தே ளுலகுறை புதுமந் தாரக்
காவுறை கிளிகட் கெல்லாங் கசடறப் பயிற்று
மன்னோ.

176. வேதமு மங்க மாறு மிருதியும் புராண நூலின்
பேதமும் தெரிந்தோ ராலும் பிறமதங் களைய வல்ல
வாதமும் மதமேற் கொண்டு மறுத்தலும் நிறுத்த வல்ல
போதமு முடையோ ராலும் பொலிந்தன கழக
மெல்லாம்.

177. உறிபொதி கரகக் கைய ரொளிவிடு செங்கற்
றோய்த்த
அறுவைய ருயிர்க்கூ றஞ்சு நடையின ரவிச்சை
மாள
எறிசுடர் மழுவா ளென்னக் கோவணம் யாந்த
கோலர்
மறைமுடி வன்றித் தேறா மாதவர் மடங்க ளெங்கும்.

174. 'முஞ்சி' எனப்படும் ஒருவகை நாணற்புல்லால் உண்டாக்கப்பட்ட கயிறு இடையிலே ஒளிவிடவும், பொன்னால் செய்யப்பட்ட தாமரை மலரை அணிந்த தலைமுடியானது அசையவும், ஆடையின் சொருகல் முன்னே கொய்சமாகத் தொங்கவும், மார்பில் மான்தோல் முடிந்த முப்புரி நூல் (பூணூல்) விளங்கவும், பலாக் கோலைக் (முள் முருக்கங்கோல்) கையில் கொண்டு, குறைவு இல்லாத நான்கு வேதங்களைக் கற்கின்ற மாணவர்களின் வீடுகளே அவ்வீதி முழுதும் இருந்தது.

175. மறைச் சிறுவர்கள் தெய்வ மறைகள் பயில்வதைக் கேட்டு அவ்வில்லங்களில் உள்ள கிளிகளும் அம்மறைகளைக் கேட்டு கூறிக் கொண்டிருக்கும். அக்கிளிகளிடமிருந்து வேற்றிடங்களில் உள்ள நாகணவாய்ப் பறவைகளும் அம்மறைகளைக் கற்று வானுலகத்தில் பொருந்திய கற்பகச் சோலையின்கண் உள்ள கிளிகளுக்கெல்லாம் குற்றம் நீங்கும்படி அவற்றைக் கற்பிக்கும்.

176. கழகங்கள் அனைத்தும், நான்கு வேதங்களும், ஆறு அங்கங்களும் பதினெண் ஸ்மிருதிகளும், பதினெண் புராணங்களும் ஆகிய இவற்றை அறிந்தவர்களாலும், பிறர் மதம் அழிக்கவல்ல வாதமும், பிறர் கொள்கையை ஒருவாறு மேற்கொண்டு மற்றொருவாறு மறுத்து தமது கொள்கையை நிலைநிறுத்தி சாதிக்கவல்ல உணர்ச்சியை உடையவர்களாலும் சிறப்புப் பெற்று விளங்கின.

177. உறியால் பொதியப்பட்ட கமண்டலத்தைக் கையில் உடையவரும், ஒளிவீசும் சிவந்த காவி ஆடை அணிந்தவரும், எறும்பு முதலிய சிறு உயிர்களுக்குத் துன்பம் உண்டாகிவிடுமோ என்று அஞ்சி மெல்ல நடப்பவரும், அறியாமையைப் போக்கும் ஒளி நிறைந்த மழுவைப்போல் கோவணம் கட்டிய தண்டத்தை உடையவரும், உபநிடதங்களேயன்றி வேறு நூல்களைச் சிந்தியாதவரும் ஆகிய தவ முனிவர்கள் வாழும் மடங்கள் அவ்வீதிகள் எங்கும் உள்ளன.

178. அட்டில்வாய்ப் புகையு மாடத் தகில்படு புகையும் வேள்வி
விட்டெழு புகையும் ஒன்றி விரிசுடர் விழுங்கக் கங்குல்
பட்டது பலருந் தந்தம் பயில்வினை யிழக்க நங்கை
மட்டவிழ் கடுக்கை யான்கண் புதைத்தநாண் மானு மன்னோ.

சைவர் வீதி

179. தெய்வ நீறுமைந் தெழுத்துமே சிதைக்கல னாக
எவ்வ மாசிரு வினையுடம் பெடுத்துழல் பிறவிப்
பௌவ மேழையும் கடந்தரன் பதமலர்க் கரைசேர்
சைவ மாதவர் உறைமடத் தனிமறு குரைப்பாம்.

180. எங்கு மீசனைப் பூசைசெய் திகபர மடைவார்
எங்கு மன்பரைப் பூசைசெய்து எழுபிறப் பறுப்பார்
எங்கு மாகமஞ் செவிமடுத் தெதிர்வினை தடுப்பார்
எங்கு நாயகன் வடிவுணர்ந் திருள்மலங் களைவார்.

178. அடுக்களையினின்று எழுந்த புகையும், மேல் மாடத்தினின்று அகில் கட்டையால் உண்டாகி எழுந்த புகையும், வேள்விக் கூடத்தில் இருந்து விடுபட்டு மேலெழுந்த புகையும் ஒன்றுபட்டு ஒளிமிக்க சூரியனை மறைக்கும். அதனால் இருள் நிறைந்தது போல் தோற்றம் அளிக்கும். அந்த நாள் எல்லோரும் தத்தம்முடைய செய்தொழில்களை இழக்கும்படி, உமையம்மையார் கொன்றைமாலையை உடைய சிவபெருமானின் திருக்கண்களைத் தமது கரத்தால் மூடியபோது இருண்ட நாளை ஒத்திருக்கும்.

சைவர் வீதி

179. தெய்வத் திருவெண்ணீற்றையும், திருவைந் தெழுத்தையும், பாய் மரத்தினையுடைய கப்பலாகக் கொண்டு, துன்பத்தைத் தருகின்ற குற்றமுடைய இருவினைகளால், உடம்பினை எடுத்து வருந்துகின்ற எழுவகைப் பிறப்பாகிய ஏழுகடல்களையும் கடந்து நீங்கி, சிவபெருமானுடைய திருவடியாகிய முத்திக் கரையை அடைகின்ற பெரிய தவத்தினையுடைய சைவப் பெரியோர்கள் தங்கியுள்ள மடங்களையுடைய ஒப்பற்ற வீதியின் பெருமையினைச் சொல்வோம்.

(இறைவன் கண்ணை இறைவி பொத்திய புராண வரலாற்றினை - கந்தபுராணம் ததீசு உத்திரப்படலத்திலும் சிவஞான சித்தியார் போன்ற நூல்களிலும் கண்டு கொள்க.)

180. சிவபெருமானைப் பூசனை செய்து இம்மை மறுமைப் பயன்களைப் பெறுவோர்கள் ஒருபுறம். எப்போதும் சிவனடியார்களைப் பூசித்து எழு பிறவிகளைப் போக்குபவர்கள் ஒருபுறம். எப்புறமும் ஆகம நூலைக் கேட்டு ஆகாமிய (எதிர்வினை) வினையைத் தடுப்போரும், சிவபெருமானின் திருவுருவைச் சிந்தித்து ஆணவத்தைப் போக்குவோரும் நிறைந்து காணப்பட்டனர்.

181. அழிவி லானுரை யாகமம் இலக்கமாய்ந் தவற்றுள்
விழிமி தாகிய விதியினும் விலக்கினு மடியைத்
தழுவு தொண்டர்கண் மைந்தர்கள் சாதகர் பாசம்
கழுவி வீட்ருள் போதகக் காட்சியர் பலரால்.

182. மறைகள் ஆகமம் பொதுச்சிறப் பெனச்சிவன் வகுத்து
முறையி னோதிய விதிவிலக் குரைகளு முடிவில்
அறையும் வீடுமொன் றிரண்டெனும் பிணக்கற
வமைந்த
குறைவி லாச்சிவ யோகியர் குழாங்களும் பலவால்.

திருக்கோயில்

183. குழலும் தும்புரு நாரதர் பாடலும் குனித்துச்
சுழலுங் கொம்பனார் ஆடலு மூவர்வாய்த் துதியும்
விழவின் செல்வமுஞ் சுருதியுந் திசையெலாம்
விழுங்கும்
முழவுங் கண்டுயி லாதது முன்னவன் கோயில்.

184. மடங்கல் இன்றிவிண் பிளந்துமேல் வளர்ந்துவெள்
ளேற்று
விடங்கர் வெள்ளிமன் றிமைத்தெழு வெண்சுடர்
நீட்டம்
முடங்கல் வெண்பிறைக் கண்ணியான் கயிலைமூ
வுலகும்
ஒடுங்கு கின்றநா ளோங்கிய வோக்கமே யொக்கும்.

181. அழிவில்லாத பரம் பொருளாகிய சிவபெருமான் அருளிய ஆகமங்களும் இலட்சம் கிரந்தங்களை ஆராய்ந்து அவற்றில் விழுமியதாக உள்ள விளக்கத்தையும், விதியையும் நன்குணர்ந்தவர்களும், தம் அடியைப் பற்றிய சமயிகள் (தொண்டர்கள்), மைந்தர்கள் சாதகர்கள் ஆகிய இவர்களின் பாசத்தை நீக்கி வீடுபேற்றை அருளுபவர்களுமாகிய சைவ ஞானாசிரியர் பலர் அவ்வீதிகளில் இருந்தனர்.

182. வேதங்களையும், ஆகமங்களையும் பொதுவாகவும் சிறப்பாகவும் சிவபெருமான் ஒருவனே அருளிச் செய்த முறையினால் அவற்றுள் கூறப்பட்ட விதிவிலக்கு மொழிகளும், அவற்றின் இறுதியில் கூறுகின்ற வீடுபேறும் 'ஒன்றென்றும்' 'இரண்டென்றும்; கூறுகின்ற மாறுபாடு இல்லை என்றும் தெரிந்து வைத்துள்ள குறைவில்லாத சிவயோகியர் கூட்டம் பல அங்கு உள்ளன.

திருக்கோயில் முதலியன

183. வேய்ங்குழலின் ஒலியும், தும்புரு நாரதர்களின் இசைப்பாட்டின் ஒலியும், பூங்கொம்பு போன்ற பெண்கள் வளைந்து சுழன்று ஆடுகின்ற ஆடலின் ஒலியும், மூவர் பாடிய தேவாரத் திருமுறை ஓதும் ஒலியும், திருவிழாவின் ஒலியும் நான்மறையின் ஒலியும், திக்குகளின் ஒலியைக் கீழ்ப்படுத்தும் முழவின் ஒலியும் நீங்கப் பெறாமல் இருப்பது சொக்கலிங்கப் பெருமான் எழுந்தருளிய திருக்கோயில் ஆகும்.

184. அங்கு வெண்மையான ஏற்றை ஊர்தியாக உடைய அழகிய பெருமான் திருநடனம் புரியும் வெள்ளியம்பலத்தினின்று மேலே வானத்தைக் கிழித்து வளர்ந்தெழுகின்ற வெள்ளிய ஒளியின் நீட்சி, வளைவான வெண்பிறையாகிய கண்ணியை உடைய சிவபெருமான் வீற்றிருக்கும் கயிலைமலையானது மூவுலகும் ஒடுங்குகின்ற நாளில் வளர்ந்த உச்சியைப் போன்ற தோற்றத்தினை ஒத்திருக்கும்.

185. சுரந்து தேன்றுளித் தலர்களும் சொரிந்துவண் டரற்ற
நிரந்து சுந்தரற் கொருசிறை நின்றபூங் கடம்பு
பரந்து கட்புனல் உகப்பல மலர்கடுய்ப் பழிச்சி
இரந்து நின்றருச் சனைசெயு மிந்திர னிகரும்.

186. உழல்செய் தீவினை புருப்பற வுயிர்க்கெலா மடியின்
நிழல்செய் வார்க்குநீ ணிழல்செயா நின்றபூங் கடம்பின்
குழல்செய் வண்டுகற் பகமதுக் கொணர்ந்துவந் தூட்டித்
தழல்செய் காமமென் பேடையின் ஊடனோய் தணிக்கும்.

187. ஆரு நீர்க்கட லன்றது வெனநிறை யகழ்கார்
ஊரு மாழியன் றதுவென வோங்கெயி லெட்டாய்ச்
சாரு நேமியன் றதுவெனச் சமைந்தகோ புரம்பொன்
மேரு வன்றது வெனச்சுடர் விசும்பிழி விமானம்.

188. வேத வந்தமுந் துளக்கற மெய்ப்பொருள் விளங்கும்
நாத வந்தமுங் கடந்ததோர் நடுநிலைப் பொருளின்
பாத வந்தனைப் பத்தியின் பாலராய்ப் பயில்வோர்
மாத வந்தரு பயனெனத் தழைத்தபல் வளனும்.

185. சோமசுந்தரக் கடவுளுக்கு அருகிலே வண்டுகள் ஒலிக்கத் தேன் துளித்து மலர்களைத் தூவிக் கொண்டு நிற்கும் பூக்களையுடைய கடப்ப மரம் கண்களினின்றும் அருவி போன்ற ஆனந்தக் கண்ணீர் பெருகப் பல மலர்களைத் தூவி வழிபட்டு, வரம் வேண்டி நிற்கும் இந்திரனை ஒக்கும்.

186. வருத்தம் செய்யும் தீவினையாகிய வெப்பம் நீங்க, உயிர் அனைத்திற்கும் திருவடி நிழல் அருளும் சோமசுந்தரப் பெருமானுக்கு நிழலைத் தரும் கடம்பமரம். அம்மரத்திலுள்ள குழலோசையைப் போல் ஒலி செய்யும் ஆண் வண்டானது, கற்பகச் சோலையில் உள்ள மதுவைக் கொண்டு வந்து, வெம்மையான காமத்தையுடைய மென்மையான வண்டிற்கு அதனை ஊட்டி அதன் காமநோயையும் தீர்க்கும்.

187. பெரிய கடல் அதுவன்று இதுதான் என்று சொல்லும்படி அமைந்த அகழியும் மேகம் தவழுகின்ற சக்கர வாளகிரி அதுவன்று இதுதான் என்று கூறும்படி விளங்கும் மதிலும், எட்டாய் விளங்கும் மலைகள் அவை அல்ல இவை தாம் என்று மொழியும் கோபுரங்களும், பொன் மயமான மேருமலை அதுவல்ல இருதான் என்று சொல்லும்படி வானுலகத்தினின்றும் இறங்கிய இந்திர விமானமும் அக்கோயிலை அழகு செய்து விளங்கும்.

188. வேத முடிவையும், மெய்ப் பொருள் விளங்குவதற்கு ஏதுவாகிய நாதத் தத்துவத்தின் முடிவையும், கடந்த நடுநிலைப் பொருளாகிய சிவபெருமானுடைய திருவடிகளை அன்போடு வழிபட்டு ஒழுகுபவருக்கு அச்சிவ புண்ணியம் தரும் பயன் தழைப்பது போன்று பல வளங்களும் அங்குத் தழைத்தன.

189. பொறிகள் ஐந்தினுக் கூட்டுபல் போகமு மிதப்பச்
செறிகொ ணீரவா லுவர்ப்பவத் திருநகர் மாக்கள்
நெறிகொள் செஞ்சடைப் பிறைமுடி நிருமலக்
கொழுந்தின்
வெறிகொ ணான்மல ரடிதழீஇ வீடுபெற் றார்போல்.

190. முன்ன வன்னர சிருக்கையால் அந்நகர் முளரிப்
பொன்னை யீன்றதா லதுபல பொருணிறை செல்வந்
தன்னை யீன்றதா லதுபல தருமமென் றுரைக்கும்
மின்னை யீன்றதஃ தீன்றதால் விழுத்தகு புகழே.

191. எழுக்க டந்ததோ ளுருத்திர வுலகமென் றியாரும்
வழுத்த நின்றவிந் நகர்வயின் உம்பரின் மாண்ட
விழுத்த கும்பல செல்வமும் வியந்துபார்த் துள்ளத்
தழுக்க றாமையா லின்னமு மமரர்கண் ணுறங்கார்.

192. விரைய வீழ்ந்ததார் மீனவர் வாகைவேல் விடுத்துத்
திரையை வென்றது முடிதகர்த் திந்திரன் செருக்குக்
கரைய வென்றதுங் கார்தளை யிட்டதுங் கனக
வரையை வென்றதும் இந்நகர் வலியினா லன்றோ.

189. நெறித்தலைக் கொண்ட சிவந்த சடையில் பிறைச் சந்திரனை அணிந்து பாசங்களை நீக்கிய சிவபெருமானுடைய மிகுந்த வாசனையுடைய அன்றலர்ந்த மலர் போன்ற திருவடிகளைச் சிந்தித்து வீடுபேறு அடைந்தவர் அடையும் இன்பம் போல் அம் மதுரை மாநகரில் வாழும் மக்கள் ஐம்பொறிகளாலும் கொள்ளத்தக்க எல்லாப் பொருள்களும் நிறையப் பெற்று மிக்க இன்பமுறுவர்.

190. யாவருக்கும் முதல்வனாய் உள்ள சோமசுந்தரப் பெருமான் பாண்டியனாகி அரசு செய்து அருள் புரிந்ததினால் அம்மதுரையானது தாமரை மலரில் உள்ள திருமகளைப் பெற்றது. அத்திருமகள் பல பொருள்களும் நிறைந்த செல்வத்தைப் பெற்றாள். அச்செல்வம் பல அறங்கள் என்று சொல்லப்படும் பெண்ணைப் பெற்றது. அப்பெண் சிறந்த புகழைப் பெற்றாள்.

191. தூணை வென்ற தோள்களையுடைய சிவபெருமானின் சிவலோகம் என்று துதிக்கத்தக்க அளவில் அமைந்த தன்மையுடையது, இம்மதுரை மாநகரம். இம் மாநகரில் தமது தேவ உலகத்தில் உள்ள பொருள்களிலும் சிறந்த செல்வங்கள் விளங்குவதால் அவற்றைத் தேவர்கள் கண்டு வியந்து பொறாமை கொண்ட மனத்தினராய் இன்னும் கண் துயிலாதவராய் இருக்கின்றார்.

192. மணம் கமழும் மாலையை அணிந்த மீனக் கொடியையுடைய பாண்டிய மன்னர், வெற்றி மாலையைச் சூடிய வேற்படையை எறிந்து, கடலை வற்றச் செய்து வெற்றி கண்டதும், தேவேந்திரன் முடியைப் பொடியாக்கி செருக்கு அழியும்படி செய்து வெற்றி பெற்றதும், மேகங்களை விலங்கிட்டுச் சிறையிட்டதும், மகா மேருமலையைச் செண்டால் அடித்து வெற்றி கொண்டதும் இம்மதுரை மாநகரின் வலிமையினால் அல்லவா?

(இப்பாடலின் கூறப்பட்ட புராண வரலாறுகள் இத் திருவிளையாடல் புராணத்தில் 13, 14, 15 படலங்களில் கண்டு கொள்க)

193. எங்கு நாவுமா யெங்கணுங் கண்ணுமா யெங்குந்
தங்கு பேரொளி யல்லதித் தனிநகர்ச் செல்வஞ்
செங்க ணாயிர நாவினான் செப்பவும் எதிர்க்கண்
டங்க ணாயிர முடையவ னளக்கவும் படுமோ.

194. புண்ணி யம்புரி பூமிபா ரதில்வரு போகம்
நண்ணி யின்புறு பூமிவா னாடென்ப நாளும்
புண்ணி யம்புரி பூமியு மதில்வரு போகம்
நண்ணி யின்புறு பூமியு மதுரைமா நகரம்.

195. பண்கனிந் தனைய சொல்லார் நரப்பிசைப் பாணி தேவர்
உண்கனி யமுதுங் கைப்பச் செவிதுளை தூண்ட வுண்டும்
பெண்களின் அமுத மன்னார் பெருமித நடன முண்ணக்
கண்களை விடுத்துங் காலங் கழிப்பவ ரளவி லாதார்.

196. கலவிவித் தாக வூடிக் கட்புனல் குளிக்கு நல்லார்
புலவிதீர் செவ்வி நோக்கிப் புனர்முலைப் போகந் துய்த்தும்
நிலைநிலை யாமை நோக்கி நெறிப்படு தரும தானங்
கலைஞர்கைப் பெய்துங் காலங் கழிப்பவ ரெண்ணி லாதார்.

197. சந்தித்து மீனநோக்கி தலைவனை மூன்று போதும்
வந்தித்தும் ஈசன் பூசை மரபுளி முடித்தும் வேதம்
அந்தித்து மறியான் செய்த திருவிளை யாடல் கேட்டுஞ்
சிந்தித்து மன்பர் பூசை செய்துநாள் கழிப்பார் பல்லோர்.

193. மதுரை மாநகரத்தின் செல்வத்தினை, எங்கும் நாக்கும், எங்கும் கண்ணும் உடையவனும் எங்கும் நிறைந்தவனும், பெரிய ஒளிப் பிழம்பாகிய வனுமாகிய இறைவன் ஒருவனாலே அன்றி, இரண்டாயிரம் சிவந்த கண்களையும் ஆயிரம் நாவையும் உடைய ஆதிசேடனால் சொல்லவும், அன்றி, ஆயிரம் கண்களையுடைய இந்திரனால் பார்க்கவும் முடியாது. எனவே அவர்களால் அச்செல்வத்தை அளவிடவும் முடியாது.

194. அறம் செய்வதற்குரிய இடம் பூமி என்றும், அவ்வறத்தால் விளையும் பயனை நுகருமிடம் விண்ணுலகம் என்றும் கூறுவர். ஆனால் எப்பொழுதும் அறம் செய்வதற்கு இடமாய் உள்ளதும் அதனால் வருகின்ற இன்பத்தை அடைவதற்கு இடமாய் உள்ளதும் இம்மதுரை மாநகரமே ஆகும்.

195. மதுரை மாநகரில் பண்கனிந்த இனிய சொல்லை உடைய மகளிரின் யாழிசையோடு கூடிய பாடலைத் தேவர்கள் உண்ணுகின்ற தேவாமிர்தமும் வெறுக்கும்படி செவிகளில் ஏற்று இன்புற்றும், அமுதம் போன்ற மகளிர் செய்யும் மிக உயர்ந்த நடனத்தைக் கண்களால் கண்டு மகிழ்ந்தும் தம்முடைய காலத்தைக் கழிப்பவர் பலர்.

196. கலவிக் காலத்தில் ஊடல் கொண்டு, கண்ணீரில் திளைக்கும் பெண்களின் புலவி நீங்கும் காலத்தை யறிந்து நெருங்கிய கொங்கையின் இன்பத்தை நுகர்ந்தும், இவ்வுலகின் நிலையாமையை எண்ணித் தரும தானங்களைச் சான்றோர்களுக்குச் செய்தும் பலர் காலம் கழிப்பர்.

197. அங்கயற் கண்ணம்மையின் கணவனான சோமசுந்தரப் பெருமானை மூன்று காலங்களிலும் சென்று வணங்கிச் சிவபூசையினை ஆகம முறைப்படி செய்வதிலும் அவ்விறைவன் செய்தருளிய திருவிளையாடல்களைக் கற்றோர் சொல்லக் கேட்டுச் சிந்திப்பதிலும், அடியார்களை அன்போடு பூசை செய்து வழிபடுவதிலும் காலம் கழிப்பர் சிலர்.

198. கற்பவை கற்றுங் கேட்டுங் கேட்டவை கருத்துள் ஊறச்
சொற்பொரு ணினைந்துங் கேட்போர்க் குணர்த்தியுட் டுளக்கந் தீர்த்தும்
எற்பக லிரவு நீங்கு மிடத்துமெய் யறிவா னந்த
அற்புத வெள்ளத் தாழா தாழ்ந்து நாள் கழிப்பார் சில்லோர்.

199. தன்னிகர் உயர்ச்சி யில்லான் காப்பியத் தலைவனாக
முன்னவர் மொழிந்த தேனோர் தமக்கெலா முகம னன்றோ
அன்னது தனதே யாகு மண்ணிலே பாண்டி வேந்தாய்
இந்நகர்க் கரச னாவா னிக்கவிக் கிறைவ னாவான்.

200. என்னென வுரைப்பேன் இந்த விறைமகன் பண்மை யேனை
மன்னவர் வானோர் போல மதித்துரை விரிக்கற் பாற்றோ
அன்னவ னாணை யாற்றா டைப்பதிவ் வகில மென்றான்
முன்னவன் செய்த வாடல் வரவினை முறையிற் சொல்வேன்.

மதுரை திருவரங்கப் படலம் முற்றிற்று

திருக்கைலாய வருணனைப் படலம்

201. வரங்க டந்தரு ளௌமுது வானவர் முனிவோர்
கரங்க டந்தலை முகிழ்த்திடக் கருணைசெய் தவிச்சை
உரங்க டந்துரை யுணர்வெலாங் கடந்தரு மறையின்
சிரங்க டந்தவன் இருப்பது திருக்கயி லாயம்.

198. மெய்ப்பொருள் கூறும் கற்கத் தகுந்த நூல்களை கற்றும், அச்சிறந்த நூற்பொருளைக் கற்றோர் வாய்க் கேட்டும். கேட்டவற்றைக் கருத்தில் பதியுமாறு பலகால் சிந்தித்தும், பொருளைத் தம்மிடம் வந்து கேட்பவருக்கு ஐயம் திரிபு நீங்கக் கற்பித்தும், இரவும் பகலும் அற்ற இடத்தில் சச்சிதானந்த வெள்ளமாகிய சிவானந்த வெள்ளத்தில் படிந்தும் காலம் கழிப்போர் பலர்.

199. தனக்கு ஒப்புயர்வு இல்லாதவனே காப்பியத் தலைவனாவான் என்று முன்னுள்ள பெரியோர் சொன்னது மற்றையோர் உபசாரமாகும். அவ்வொப்புயர்வில்லாத தன்மையைத் தனக்கே கொண்டிருக்கும் இறைவனே பாண்டிய அரசனாகி இம் மதுரையை ஆண்டு இக்காப்பியத்திற்கு தலைவனும் ஆனான்.

(உண்மையில் அவ்வொப்புயர்வற்றவரை மானிட வடிவில் காணுதல் அரிது. எனவே இறைவனே பாண்டிய மன்னனாகவும் காப்பியத் தலைவனாகவும் ஆனார்)

200. இந்த அகில உலகம், அச் சோமசுந்தரப் பெருமானுடைய திருவாணையாலே நடைபெறுகிறதெனில் அப் பாண்டிய மன்னனாகிய இறைவனுடைய தன்மையை எவ்வாறு எடுத்துக் கூறுவேன். மற்ற அரசர்கள் தேவர்களின் தன்மையைப் போலக் கருதி உரைக்கும் தகுதி உடையரோ? அன்று. இனி, பெருமான் செய்த திருவிளையாடல்களை முறையாகக் கூறுவோம்.

திருக்கைலாய வருணனைப் படலம்

திருக்கைலையின் மாண்பு

201. பெரிய தேவர்களும் முனிவர்களும் தங்களுக்கு வரங்களைக் கொடுத்தருள வேண்டுமென்று கைகளைத் தலையில் கூப்பி நின்று வேண்டிட, அவர்களுக்குத் திருவருள் செய்து, இயல்பாகவே வலிய பாசங்களில் இருந்து நீங்கி, வாக்கு மனம் எல்லாவற்றையும் கடந்து அரிய வேதங்களின் முடிவைக் கடந்த இறைவன் வீற்றிருக்கும் பெரும் சிறப்புடையது கைலாயமலை ஆகும்.

202. புரந்தர் ஆதிவா னவர்பதம் போதுறை புத்தேள்
பரந்த வான்பதஞ் சக்கரப் படையுடைப் பகவன்
வரந்த வாதுவார் பதமெலா நிலைகெட வருநாள்
உரந்த வாதுநின் றூழிதோ றோங்குமவ் வோங்கல்.

203. அரம்பை மாதரா ராடலி னரவமும் பாடல்
நரம்பி னோசையு முழவதிர் சும்மையு நால்வாய்
வரம்பில் ஓதையு மருவிவீ ழொலியுமா றாது
நிரம்பி வானமுந் திசைகளு நிமிர்வன மாதோ.

204. வெந்த நீற்றொளி வெண்மையும் விமலனை யகங்கொண்
டந்த மின்றியே யசைவற விருக்கையு மருவி
வந்த கண்களும் கொண்டவ ணிருக்குமா தவர்க்குத்
தந்த தாலரன் கயிலையிந் தனதுசா ரூபம்.

205. ஆங்கு வெண்டுகில் விரித்தெனக் கல்லென வார்த்து
வீங்கு காலரு வித்திரள் வெள்ளமே யன்றி
ஓங்கு நான்மறைக் குடுமியின் உள்ளொளி நோக்கித்
தூங்கு மாதவர் கண்களும் சொரிவன வெள்ளம்.

202. இந்திரன் முதலான தேவர் உலகமும், தாமரை மலரில் உறைகின்ற பிரமதேவனின் அகன்றுயர்ந்த சத்திய லோகமும் சக்கரப் படையையுடைய திருமாலின் மேன்மை கெடாது வாழ்கின்ற பரமபதமும் ஆகிய எல்லாமும் அழிய வருகின்ற ஊழிக்காலம்தோறும் அத்திருக்கைலாய மலையானது வலிமை கெடாது நிலைபெற்று நிற்கும்.

203. தேவமகளிர் கூத்தாடுகின்ற ஒலியும், பாடலின் ஒலியும், யாழின் ஒலியும், மத்தளம் அதிர்கின்ற ஒலியும், யானைகளின் அளவில்லாத ஒலியும், அருவிகள் விழுகின்ற ஒலியும், வானவுலகினும் திசைகளிலும் எப்போதும் நீங்காது கேட்டுக் கொண்டே இருக்கும்.

204. சிவபெருமானேயன்றி அவன் வீற்றிருக்கும் திருக்கைலாய மலையும் வெண்மையான திருநீற்றினைப் போன்ற தோற்றமுடையது. நின்மலனாகிய இறைவனைத் தன்னிடத்தே கொண்டு, அவனைப் போன்றே அழிவும் அசைவும் இல்லாத தன்மையுடையது. அருவி போல் ஆனந்தக் கண்ணீர் சொரிகின்ற பெருமை மிக்க முனிவர்களுக்குத் தன்னுடைய சாரூபப் பதவியை அப்பெருமான் போன்றே கொடுக்கும் தன்மையுடையது.

205. அம்மலையில் இருந்து வெண்மையான ஆடையை விரித்தது போன்ற தோற்றம் கொண்டு, கல்லென ஆரவாரம் செய்து உயர்ந்த கால்களையுடைய அருவியாகிய திரண்ட வெள்ளத்தைச் சொரிதல் செய்யும். அதுபோன்றே உயர்ந்த நான்கு வேதங்களின் முடியினுள் விளங்கும் ஒளிப்பிழம்பை அகத்தினுள் கொண்டு அதிலேயே அழுந்திக் கிடக்கின்ற பெரிய முனிவர்களின் கண்களும் ஆனந்த அருவியாகிய வெள்ளத்தைச் சொரிவனவாம்.

206. கோட்டு மாமலர் நிலமலர் குண்டுநீர் எடுத்துக்
காட்டு மாமலர் கொடிமலர் கொண்டுமுட் கரைந்த
பாட்டு மாமலர் கொண்டுநம் பரஞ்சுட ரடியிற்
சூட்டு மாதவர் தொகுதியுஞ் சூழ்வன வொருபால்.

207. கைய நாகமும் காய்சின வுழுவையுங் கடுவாய்ப்
பைய நாகமுந் தங்கிளை பரவிய முக்கண்
ஐய னாகமெய் யருந்தவர் தமையடைந்து அன்பு
செய்ய நாகமும் வையமும் புகழ்வதச் சிலம்பு.

திருக்கைலாய வருணனைப் படலம் முற்றிற்று

புராண வரலாற்றுப் படலம்

208. அளந்தி டற்கரி தாயவக் குன்றின்மேல்
களங்க றுத்துவிண் காத்தவன் கோயின்முன்
விளம்ப ருஞ்சிவ தீர்த்தத்தின் மிக்கதாய்
வளம்பெ றுஞ்சிவ தீர்த்தத்தின் மாடது.

209. தண்ட ருங்கதிர்ச் சந்திர காந்தத்திற்
பண்ட யங்க நவமணி பத்திசெய்
தண்டர் தச்சன் அனேக தவஞ்செய்து
கண்ட தாயிரக் கான்மண் டபமரோ.

206. பெருமைமிக்க கோட்டுப் பூக்கள், நீலமலர், ஆழமாகிய நீர் உயர்த்திக் காட்டுகின்ற நீர்ப்பூக்கள், கொடிப் பூக்கள் என்ற நான்கு வகைப் பூக்களைக் கொண்டும், உள்ளம் உருகிக் கூறிய பாட்டு மலர்களைக் கொண்டும், நம்முடைய பரஞ்சோதியாகிய சிவபெருமானின் திருவடிகளில் சூட்டுகின்ற பெரிய தவத்தினையுடைய கூட்டங்கள் ஒரு பக்கத்தில் சூழ்ந்து நிற்கும்.

207. துதிக்கையையுடைய யானைகளும், மிக்க சினமுடைய புலிகளும், நஞ்சினைக் கொண்டனவாய் அமைந்த படத்தினையுடைய பாம்புகளும், தங்கள் சுற்றம் வழிபட்ட மூன்று கண்களையுடைய இறைவனாகக் கருதி மெய்யாகிய அரிய தவமுடையவர்களை அடைந்து, அன்போடு பணி செய்து நிற்க. விண்ணுலகத்தாராலும், மண்ணுலகத்தாராலும் புகழப் பெறும் தன்மையுடையது அக் கைலாய மலை.

புராண வரலாற்றுப் படலம்

திருக்கயிலை மலையில் சூதமுனிவர் வீற்றிருத்தல்

208. அளப்பதற்கு அரிய பெருமையினையுடைய திருக்கைலாய மலையில், தேவர்களுக்குத் தலைவனான, திருநீலகண்டனான சிவபெருமான் வீற்றிருந்தருளும் திருக்கோயிலின் முன்னர் மிக்க வளமுடைய சிவ தீர்த்தத்தின் கரையிலே,

209. அதன் பக்கத்திலே ஆயிரம் கால் மண்டபம் ஒன்றுள்ளது. ஒளியுடைய சந்திரகாந்தக் கற்களால் ஒப்பனை செய்யப்பட்டு ஒன்பது மணிகளையும் வரிசையாகப் பதித்துத் தேவதச்சனால் அளவில்லாத தவம் செய்து கட்டப்பட்ட தன்மையுடையது அது,

210. ஆன பான்மையி னால்அந்த மண்டபம்
ஞான நாயக னாண்மலர்த் தாடொழ
வான மீனொடு வந்து பதங் குறித்
தூன மின்மதி வைகுவ தொத்ததே.

211. அன்ன மண்டபந் தன்னு ளருந்தவம்
என்ன வேங்கை யதண்மேல் இருந்தனன்
பன்னு கேள்விப் பதினெண் புராணமும்
சொன்ன மாதவச் சூத முனிவனே.

212. அந்த வேலையி லச்சிவ தீர்த்தத்தில்
வந்து மூழ்கியம் மண்டபத் தேறியே
சந்தி யாகி தவமுடித் தீறிலா
இந்து சேகரன் றாணினைந்து ஏத்தியே.

213. சம்பு பத்தன் சதானந்தன் உத்தமன்
அம்பு யத்த னனைய மகோதரன்
உம்ப ரஞ்சிய வுக்கிர வீரியன்
நம்பு கேள்விப் பிரசண்ட நற்றவன்.

214. ஆதி மாதவர் யாவரும் அன்புமை
பாதி யாய்முற்று மாகும் பராபரச்
சோதி பால்வைத்த சூதனைத் தோத்திரம்
ஒதி யஞ்சலித் தொன்று வினாவினார்.

210. அத்தகைய தன்மையுடையதாய் அம்மண்டபம் இருத்தலால் ஞான நாயகனான இறைவனுடைய மலர் போன்ற திருவடிகளைத் தொழ, குற்றமற்ற நிறைமதியானது வானில் உள்ள நட்சத்திரங்களோடு வந்து ஒன்று சேர்ந்து நெருங்கி இருப்பதைப் போன்றிருந்தது.

(சந்திரகாந்தக்கல் - சந்திரன் ; நவரத்தினம் - நட்சத்திரம்)

211. அம்மண்டபத்தினுள் தவமே உருவெடுத்து இருந்தாற்போல் புலித்தோலாசனத்தின்மேல், மற்றவர்களால் புகழப் படுகின்ற கல்வி கேள்விகளில் சிறந்த, பதினெட்டுப் புராணங்களையும் கூறியருளிய பெருந்தவத்தினையுடைய 'சூத' முனிவன் இருந்தான்.

சம்பு பத்தர் முதலிய முனிவர் வருதல்

212. அந்த நேரத்தில் அச்சிவ தீர்த்தத்தில் நீராடி, அம்மண்டபத்தில் ஏறி, சந்தியாவந்தனம் முதலியவற்றை முடித்து, அழிவில்லாத பரம் பொருளாகிய இறைவனுடைய திருவடிகளைத் துதித்து.

213. சம்புபத்தன், சதானந்தன், உத்தமன், தாமரை மலரில் உள்ள பிரமனைப் போன்ற மகோதரன், தேவர்களும் அஞ்சி நடுங்கிய உக்கிரவீரியன், விரும்புகின்ற கேள்வியையும் நல்ல தவத்தையும் உடையவனான பிரசண்டன்.

214. முதலாக பெரிய தவமுடையவர் அனைவரும் உமையொருபாதியாய், பராபர ஒளிப்பிழம்பாகிய இறைவனிடத்தில் அன்பு பூண்ட சூத முனிவனைத் துதித்துக் கை கூப்பி ஒன்று கேட்பாராயினர்.

215. வேத வாகம புராணமே மிருதியே முதலா
ஓது நூல்களின் றுணிபொரு ளுலகெலாம் பயந்த
பேதை பாகனே பரமெனத் தேர்ந்துணர் பெரிய
போத மாதவ வுனக்கியாம் புகல்வது ஒன்று றுளதால்.

216. மேரு மந்தரங் கைலைபப் பதமுதல் விடைமேல்
ஊரு மந்தர நாடவன் உறைபதி யனந்தம்
ஆரு மந்தமில் போகம்வீ டடைவதென் றவற்றின்
கார ணங்களோ டுரைத்தனை கருத்தினுக் கிசைய.

217. ஐய மாதிமுக் குற்றமும் அகலநீ யருளிச்
செய்ய வுந்தெளிந் திலேங்கள்யாஞ் சிற்றறி
வுடையேம்
மைய னெஞ்சினே மாகையான் மயக்கற வின்னும்
உய்யு மாறருள் செய்தியென் றுரைத்தனர் மன்னோ.

218. தலங்க டம்மின்மிக் குள்ளதாய்த் தகுதிசா றீர்த்தக்
குலங்க டம்மின்மிக் குள்ளதாய்க் குறையிரந்
தோர்க்கு
நலங்க டந்தருண் மூர்த்தியாய் நாதவே தாந்தப்
புலங்க டந்தபேர் ஒளியுறை தலனொன்று புகலாய்.

215. "எல்லா உலகங்களையும் ஈன்ற உமையம்மையை ஒரு பாகத்தில் உடைய சிவபெருமானே முழுமுதற் கடவுள் என்பதை வேதம், ஆகமம், புராணம், ஸ்மிருதி முதலிய நூல்களினுடைய துணி பொருள் என்று தெளிந்துணர்ந்த, பெரிய தவத்தினையும் ஞானத்தையும் உடைய முனிவரே! தேவரீர் முன்னர் அடியேங்களுக்கு சொல்ல வேண்டியது ஒன்றுள்ளது.

216. இடபவாகனத்தில் ஏறி நடத்துகின்ற, சிவலோகத்தை உடைய பெருமானாகிய இறைவன், எழுந்தருளி இருக்கும் திருப்பதிகள் மேருமலை, மந்தரமலை, திருக்கைலாயம், திருப்பருப்பதம் (ஸ்ரீ சைலம்) முதலிய அளவில்லாதவை என்றும், அவை அழிவில்லாத போகத்தையும் வீட்டையும் அடைதற்குரியவை என்றும், அவைகளின் காரணங்களோடு எங்கள் கருத்திற்குப் பொருத்தமாகக் கூறினீர்.

217. மூன்று குற்றங்களும் நீங்கும்படி நீ இவற்றை உரைத்து அருளினாய். இருப்பினும் குறுகிய அறிவினையும், மனமயக்கத்தையும் உடைய நாங்கள் தெளிவு பிறவாதிருக்கிறோம். ஆகவே அம்மயக்கம் தீர இன்னமும் தெளிவாகக் கூறியருள வேண்டும்" என்று பிரசண்டன் முதலானோர் விண்ணப்பித்தனர்.

218. மேலும், "தற்போது பலதலங்களுள் மேம்பட்டுள்ளதும், பல தீர்த்தங்களுள் சிறப்புப் பெற்றுள்ளதும், தங்கள் குறைகளை இறைஞ்சி வேண்டுவோர்க்கு. வேண்டிய நலன்களை அளித்தருளும் மூர்த்தியாகிய இறைவன் எழுந்தருளி இருப்பதும் ஆகிய ஒரு சிறந்த தலத்தைக் கூறி அருள வேண்டும்."

219. என்ற போதெதிர் முகமலர்ந் திருண்மல வலியை
வென்ற சூதனுந் தலங்களின் விசேடமாய்ந் தம்பொற்
குன்ற வார்சிலை யானிடங் கொண்டுறை பதியுள்
ஒன்று கேட்கவீ டளிப்பதாய் உளதுமற் றதுதான்.

220. முற்ற வோதிய புராணமூ வாறினுட் காந்தம்
பெற்ற தாறுசங் கிதையவை யாறுந்தம் பெயராற்
சொற்ற பேர்சனற் குமரமா முனிவரன் சூதன்
கற்றை வார்சடைச் சங்கரன் மால்அயன் கதிரோன்.

221. இன்ன வாறனுட் சங்கர சங்கிதை யென்று
சொன்ன நூலினை யுணர்த்தினான் சங்கரன் துணைவிக்
கன்ன போதவண் மடியினி லிருந்துகேட் டதனை
மின்னு வேல்பணி கொண்டவேள் வெளிப்பட வுணர்ந்தாள்.

222. குன்றே றிந்தவேள் வழிபடு குறுமுனிக் குரைத்தான்
அன்று தொட்டஃ தகத்திய சங்கிதை யாகி
நின்ற தன்னது கேட்பவர்க் கரனடி நீழல்
ஒன்றும் இன்பவீ டளிப்பதா வொருதல னுரைக்கும்.

223. அதிக வப்பதி யாதெனி னாலவாய் கேட்கக்
கதிய ளிப்பதென் றோதிய சூதனைக் கதியின்
மதியை வைத்தவர் அன்னதைப் பகரென வந்த
விதியி னிற்புகல் கின்றனன் வியாதன்மா ணாக்கன்.

மதுரையின் சிறப்பு

219. என்று அவர்கள் கேட்டபோது, முகமலர்ச்சியோடு ஆணவ மலத்தை வென்ற சூத முனிவனும், எல்லாப் பதிகளின் பெருமைகளையும் ஆராய்ந்து பார்த்து, "அழகிய பொன் மலையாகிய நீண்ட வில்லினையுடைய இறைவன் எழுந்தருளி இருக்கின்ற திருப்பதிகளுள் சிறப்பாகச் சொல்ல வேண்டிய பதி ஒன்றுள்ளது. அதனைக் கேட்ட அளவில் வீடு பேற்றை அளிக்கக் கூடிய சிறப்பினை உடையது.

220. முடிவு பெறக்கூறிய பதினெட்டுப் புராணங்களில் கந்த புராணமானது ஆறு சங்கிதைகளைக் கொண்டது. அச்சங்கிதைகள் ஆறையும் தம் பெயரால் கூறியவர்கள், பெருமைமிக்க சனற்குமார முனிவனும், சுத முனிவனும், நீண்ட சடையையுடைய சங்கரனும், திருமாலும், பிரமனும், சூரியனும் ஆவர்.

221. இந்த ஆறுள் சங்கர சங்கிதை என்னும் நூலைச் சிவபெருமான் உமையம்மைக்கு உபதேசித்து அருளினார். அப்போது அவ்வம்மையாரின் திருவடியின் கண், வேற்படையைக் கையில் கொண்டுள்ள முருகவேள் வீற்றிருந்து கேட்டு அதனைச் சிறப்பாக உணர்ந்து கொண்டார்.

222. கிரவுஞ்ச மலையைப் பிளந்த முருகப் பெருமான், தன்னை வழிபாடு செய்கின்ற அகத்திய முனிவருக்கு அதனைக் கூறி அருளினார். அந்நாள் முதல் அச்சங்கர சங்கிதையானது அகத்திய சங்கிதை என்ற பெயரையும் பெற்றது. அச் சங்கிதையில், கேட்ட மாத்திரத்தில் வீடுபேறு அளிக்கத் தக்க ஒரு திருப்பதியின் சிறப்புக் கூறப்பட்டுள்ளது.

223. அப்பதியாதென்று கேட்டால் அது திருவாலவாயாகும். கேட்ட அளவில் அது வீட்டை அளிக்க வல்லது என்று கூறிய சூத முனிவனை, வீட்டுலகில் கருத்தினைச் செலுத்திய முனிவர்கள், "அத்திருப்பதியின் பெயரைக் கூறியருள வேண்டும்" என்று கேட்டனர். தொன்றுதொட்டு வந்த முறையின்படி, வியாத முனியின் மாணவனாகிய சூதமுனிவன் அதனைச் சொல்லத் தொடங்கினான்.

224. புதிய தாமரை மேவிய பழமறைப் புத்தேள்
விதியி னாற்கடு நடைப்பரி மகஞ்செய்வான்
வேண்டிக்
கதியை மாய்ந்தவர்க் குதவுதண் டுறைகெழு காசிப்
பதியின் மைந்தரோடு எய்தினான் பண்டொரு வைகல்.

225. அகத்தியன் வியாத னாரதன் சனகன் ஆதிநான்
முனிவர்கோ தமனூற்
சிகைத்தெளி வுணர்ந்த பராசரன் வாம
தேவன்வான் மீகியே வசிட்டன்
சகத்தியல் கடந்த சுகன்முதன் முனிவர் தம்மொடும்
பத்துவெம் பரிமா
மகத்தொழின் முடித்து மற்றவர்க் குள்ள மகிழ்வுற
வழங்குந வழங்கா.

226. சத்திய வுலகிற் சரோருகக் கிழவன் சார்ந்தபின்
புலப்பகை சாய்த்த
அத்திரு முனிவர் அனைவரும் காசி யடிகளை
யடைந்தனர் பணிந்து
முதல் மண்டபத்தி னறமுத னான்கு மொழிந்தருண்
மூர்த்திசந் நிதியிற்
பத்தியா யிருந்து நாரத முனியைப் பார்த்தொரு
வினாவுரை பகர்வார்.

227. தலமுதன் மூன்றுஞ் சிறந்ததோர் சைவத் தலமுரை
யென்னநா ரதன்றான்
கலைமுழு துணர்ந்த சனற்குமா ரன்பாற் கற்றவன்
வியாதனாம் அவன்பால்
நலமுறக் கேண்மி னெனவவன் கதிர்வே னம்பிபான்
மறைமுத லனைத்தும்
அலைவற வுணர்ந்தோன் குறுமுனி யாகு
மவனிடைக் கேண்மென விடுத்தான்.

224. முன்னொரு காலத்தில் வாடாத தாமரையில் உறைகின்ற, பழைய வேதங்களையுடைய பிரம தேவன், வேதவிதிப்படி, விரைந்த நடையினையுடைய பரிவேள்வி (அசுவ மேதயாகம்) செய்ய விரும்பினான். இறந்தவர்களுக்கு வீட்டுலகைத் தருகின்ற குளிர்ந்த நீர்த்துறைகள் பொருந்திய 'காசி' என்னும் திருப்பதிக்குத் தம் புதல்வர்களோடு சென்றான்.

225. அகத்தியன், வியாதன், நாரதன், சனகன் முதலிய நான்கு முனிவர்களும், கௌதமனும், சிறந்த மறை நூல்களில் கூறுகின்ற பரசிவத்தை உணர்ந்த பராசரனும், வாம தேவனும், வான்மீகியும், வசிட்டனும், உலகியலைக் கடந்த சுகனும் ஆகிய இவர்களோடு பரிவேள்விக்குரிய காரியங்களை முடித்து அம்முனிவர்களுக்கு மகிழ்ச்சி பொங்க வழங்கத் தக்கவைகளை வழங்கி,

226. தாமரை மலரில் உள்ள பிரமதேவன் சத்திய லோகம் அடைந்தான். பின் புலன்களாகிய பகைவர்களைக் கொன்ற அம்முனிவர்கள் அனைவரும் காசிப்பதியில் வீற்றிருக்கும் இறைவனை அடைந்து வணங்கினர். முக்தி தரும் மண்டபத்தில் அறம் முதலிய நான்கு உறுதிப் பொருள்களை சனகாதி முனிவர்களுக்கு உரைத்தருளித் தட்சிணாமூர்த்தி பெருமானின் திருமுன்னே பக்தியுடன் இருந்து நாரத முனிவரைப் பார்த்து ஒரு வினாவைக் கேட்கத் தொடங்கினர்.

227. "மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற இவற்றில் சிறந்ததாகிய ஒரு சிவத்தலம் கூறுவாய்" என்று கேட்டனர். நாரத முனிவர், கலைகள் முழுதும் உணர்ந்த சனற் குமாரனிடத்தில், "இவை முழுதும் உணர்ந்தவர் வியாத முனிவரே இவற்றின் நன்மையினை அவரிடம் கேளுங்கள்" என்று கூறினார். அவ்வியாத முனிவரோ, "ஒளிபொருந்திய வேலாயுதத்தை உடைய முருகப் பெருமானிடம் வேதம் முதலிய பல கலைகளைப் பயின்று அகத்தியரிடம் சென்று கேளுங்கள்" என்று சொல்லி அனுப்பி வைத்தார்.

228. மலயமா தவனை யடைந்துகை தொழுது
வாழ்த்திவா தாவிவில் வலனைக்
கொலைபுரி தரும மூர்த்தியே விந்தக் குன்றடக்
கியதவக் குன்றே
அலைகடல் குடித்த வருட்பெருங் கடலே
யருந்தமிழ்க் கொண்டலே தென்பார்
துலைபெற நிறுத்த களைகணே யென்று சுருதியா
யிரமெனத் துதித்தார்.

229. மூவகைச் சிறப்பு முள்ளதோர் தான மொழிகென
முகமலர்ந் தருள்கூர்ந்
தியாவையும் உணர்ந்தோன் முத்திமண் டபத்தி
னீரிரு தொகையின்வந் திறக்கும்
சேவல்க டமையு மைங்கரன் றனையுஞ் சேவலங்
கொடியுடை வடிவேற்
காவலன் றனையும் வடநிழ லமர்ந்த கண்ணுதற்
பரனையும் பணியா.

230. அங்கயற் கண்ணி தன்னையு மெந்தை யாலவா
யானையும் இதய
பங்கயத் திருத்திச் சமாதியி லிருந்து பரவச
மடைந்துபார்ப் பதிக்குச்
சங்கர னருளிச் செய்தசங் கிதையைத் தாரக
னுடலிரண் டாகச்
செங்கைவேல் விடுத்த சேவக னெனக்குத்
தெருட்டினா னனையசங் கிதையில்.

228. அவர்கள் பெரிய பொதிய மலையை அடைந்து அகத்திய முனிவரைத் தொழுது, "வாதாபி, வில்லவன் என்ற அசுரர்களைக் கொன்று அருளிய அறவடிவம் பூண்டவனே! விந்த மலையை அடக்கிய தவக் குன்றே! பெரிய கடலைப் பருகிய கருணைக் கடலே! அருமையான தமிழைச் சுரக்கும் மேகமே! பூமியின் தென்பாகமானது துலாக் கோல் போலும் சமன் பெறும்படி நிறுத்திய பெருமானே!" என்று கூறி அளவற்ற வேதங்கள் ஒன்று கூடித் துதித்தது போல் துதித்தனர்.

அகத்தியர் முனிவர்களுக்குக் கூறுதல்

229. பின்னர், "தலம், தீர்த்தம், மூர்த்தி ஆகிய மூன்று சிறப்புடைய ஒரு தலம் கூறுக" என்று அம்முனிவர்கள் கேட்டனர். அதனைக் கேட்டவுடன் மகிழ்வோடும், கருணையோடும் யாவற்றையும் உணர்ந்த அவ்வகத்திய முனிவர் முக்தி மண்டபத்தில் வந்து இறக்கும் நான்கு கோழிகளையும் ஐந்து கரங்களையுடைய விநாயகக் கடவுளையும், கோழியையும் வேலாயுதத்தையும் உடைய முருகப் பெருமானையும் கல்லால மரநிழலில் எழுந்தருளிய நெற்றிக் கண்ணுடைய சிவபெருமானையும் வணங்கினார். (இதில் உள்ள நான்கு கோழிகள் வரலாற்றை காசிக் காண்டம் என்ற நூலில் காண்க).

230. "அங்கயற் கண்ணம்மையையும், எம் தந்தையாகிய ஆலவாய் இறைவனையும் இருதய கமலத்தில் வைத்துத் தியானத்தில் ஆழ்ந்திருந்த எனக்கு, உமையம்மைக்குச் சிவபெருமான் அருளிச் செய்த சங்கர சங்கிதையை, தாரகனது உடலானது இரு கூறு ஆகும்படி சிவந்த திருக்கரத்தால் வேலாயுதத்தை விடுத்த முருகப் பெருமான் தெளிவு பெறும்படி அருளிச் செய்தான்.

231. பெறற்கருந் தவஞ்செய் தகந்தெளிந் தரிதிற்
பெறுங்கதி கேட்பவர்க் கெளிதா
யுறப்படுந் தலநீர் வினாயமுச் சிறப்பு முள்ளதெத்
தலத்தினுங் கழிந்த
சிறப்பினாங் கெண்ணெண் டிருவிளை யாடல்
செய்தருள் வடிவெடுத் தென்றும்
மறைப்பொருள் விளங்கு மாலவாய் அதனை
மண்ணின்மேற் சிவனுல கென்னும்.

232. அத்தலத் தனைய மூவகைச் சிறப்பும் அளவிலா
வுயிர்க்கெலாங் கருணை
வைத்தவன் செய்த திருவிளை யாட்டும் வரையுரங்
கிழியவே லெடுத்த
வித்தக னெனக்கு விளம்பிய வாறே விளம்புவ
னுமக்கென வந்த
உத்தம முனிவர் யாவருங் கேட்க வுணர்த்துவான்
கடலெலா முண்டான்

புரான வரலாற்றுப் படலம் முற்றிற்று

முதலாவது

மதுரைக் காண்டம்

தல விசேடப் படலம்

233. நாட்டமொரு மூன்றுடைய நாயகனுக்
கன்புடையீர் நயந்து நீவிர்
கேட்டதலம் ஈண்டுரைத்த திருவால வாயதனுட்
கிளைத்துப் பொன்னந்
தோட்டலர்தா மரைமுளைத்த தொருதடமுஞ்
சுந்தரச்செஞ் சோதி ஞான
ஈட்டமென முளைத்தசிவ லிங்க மொன்று
முளவின்னு மிசைப்பக் கேண்மின்.

231. "பெறுதற்கு அரிய தவம் செய்து, மனம் தெளிந்தவர்க்கும் கிடைத்தற்கரிய வீடு பேற்றைத் தருகின்ற சிறப்புடையது திருவாலவாய் ஆகும். நீங்கள் கேட்ட மூன்று வகைச் சிறப்பும் கொண்டது. மற்ற தலங்களினும் மேம்பாடு உடையது. வேதப் பொருளாகிய இறைவன் அருள்வடிவம் தாங்கி அறுபத்து நான்கு திருவிளையாடல்களைப் புரிந்து அப்பெருமான் எப்பொழுதும் வீற்றிருக்கும் இடமாய் அமைந்தது. அவ்வால வாயை இப்பூலோக 'சிவலோகம்' என்று உலகத்தவர் கூறுவார்கள்.

232. "இத்தகைய சிறப்புடைய திருவால வாயின் தலம் தீர்த்தம் மூர்த்தி என்ற மூவகைச் சிறப்புகளையும், அளவற்ற உயிர்களிடம் கருணை வைத்தவனாகிய சிவபெருமான் செய்தருளிய திருவிளையாடல்களையும், கிரவுஞ்ச மலையின் மார்பு கிழியும்படி வேற் படையை ஏவிய ஞான சொரூபனாகிய முருகப் பெருமான் எனக்குக் கூறிய வண்ணமே உங்களுக்குக் கூறுவேன்" என்று கடல் நீர் முற்றும் உண்ட குறுமுனிவரான அகத்தியர் மற்ற முனிவர்கள் கேட்கும்படி சொல்லத் தொடங்கினார்.

புராண வரலாற்றுப் படலம் முற்றிற்று

முதலாவது

மதுரைக் காண்டம்

தல விசேடப் படலம்

தலத்தின் மேன்மை

233. முக்கண்ணனான சிவபெருமானிடம் அன்புடைய முனிவர்களே! நீங்கள் விரும்பிக் கேட்கும் தலம் இப்போது நான்கூறிய திருவாலவாயாகும். அப்பதியில் பொன்போலும் அழகிய இதழ்களையுடைய தாமரை முளைக்கப் பெற்றதாகிய ஒரு தடாகமும், ஒரு சிவலிங்கமும் உள்ளன. இன்னும் சொல்வேன். அவற்றையும் கேளுங்கள்.

234. திருவால வாய்க்கிணையா மொருதலமும்
தெய்வமணஞ் செய்ய பூத்த
மருவார்பொற் கமலநிகர் தீர்த்தமுமத் தீர்த்தத்தின்
மருங்கின் ஞான
உருவாகி யுறைசோம சுந்தரன்போ லிகபரந்தந்
துலவா வீடு
தழிவானு முப்புவனத் தினுமில்லை யுண்மையிது
சாற்றின் மன்னோ.

235. அவ்வகைய மூன்றின் முதற் றலப்பெருமை
தனைச்சுருக்கி யறையக் கேண்மின்
எவ்வகைய வுலகத்துந் தருமதல மதிகமவற் றீறிலாத
சைவதல மதிகமவற் றறுபத்தெட் டதிகமவை
தமிலீ ரெட்டுத்
தெய்வதல மதிகமவற் றதிகதல நான்கவற்றைச்
செப்பக் கேண்மின்.

236. அன்னமலி வயற்புலியூர் காசிநகர் காளத்தி யால
வாயாம்
இன்னவளம் பதினான்கிற் றிருவால வாயதிக
மெவ்வாறு என்னின்
மின்னவிரம் பலங்காணக் காசிநகர் வதிந்திறக்க
வியன்கா ளத்திப்
பொன்னகரம் பத்தியினால் வழிபாடு செயவளிக்கும்
போகம் வீடு.

237. அறந்தழையுந் திருவால வாய்கேட்ட வுடன்போக
மளிக்கும் ஈண்டு
பிறந்திறவாப் பேரின்பக் கதியளிக்கும் இதுவன்றிப்
பிறழா தெங்கும்
நிறைந்தபர னெத்தலமும் படைப்பானித்
தலத்தைமுத னிருமித் திங்ஙன்
உறைந்தருளி னானன்றி யின்னமுள திதன்பெருமை
யுரைப்பக் கேண்மின்.

234. திருவால வாய்க்கு நிகராக ஒரு பதியும், தெய்வ மணம் பூத்த பொற்றாமரைத் தீர்த்தத்திற்கு நிகராக வேறொரு தீர்த்தமும், அத்தீர்த்தத்தின் அருகில் ஞான வடிவாய் எழுந்தருளி உயிர்களுக்கு இம்மை மறுமைப் பயன்களை அளித்து, அழியாத வீட்டுலகைத் தருகின்ற சோமசுந்தரக் கடவுளுக்கு நிகராக வேறொரு கடவுளும் இம்மூன்று உலகத்திலும் இல்லை. ஆய்ந்து சொல்லுமிடத்தில் இதுவே உண்மை.

235. இத்தன்மையுடைய மூன்றினுள் தலப் பெருமைகளைச் சுருக்கிச் சொல்லக் கேளுங்கள். எத்தன்மை உடைய உலகத்திலும் புண்ணிய தலங்கள் உயர்ந்தன. அப்புண்ணியத் தலங்களுள் அழிவில்லாத சிவத்தலங்கள் உயர்ந்தன. அத் தலங்களுள் அறுபத்தெட்டுச் சிவத் தலங்கள் மிக உயர்ந்தன. அவ்வறுபத்தெட்டினுள் பதினாறு சிவத்தலங்கள் மிக மிக உயர்ந்தன. அப்பதினாறுள் நான்கு தலங்களே மிகவும் மேன்மை வாய்ந்தன. அந்நான்கு பற்றியும் சொல்லக் கேளுங்கள்.

236. அன்னப் பறவைகள் நிறைந்து காணப்படும் வயல்களை உடைய சிதம்பரமும், காசி நகரும், சீகாளத்தியும், திருவாலவாயுமாகும். இப்படிச் சொல்லப்பட்ட வளமை மிக்க நான்கு பதிகளில் திருவாலவாயே மிகச் சிறந்தது. எப்படியெனில் ஒளி விளங்குகின்ற சிதம்பரம் தரிசித்தலாலும், காசி நகரில் தங்கி இறத்தலினாலும், பெருமை மிக்க சீகாளத்தியாகிய பொன்னகரம் பக்தியோடு வழிபாடு செய்வதினாலும் போகத்தையும் வீட்டையும் கொடுக்கும்.

237. அறம் மிக்க திருவாலவாயானது கேட்டவுடனே இன்பத்தைக் கொடுக்கும் தன்மையுடையது. பின்பு தோன்றி அழியாத பேரின்ப வீட்டையும் கொடுக்கும். அதுமட்டுமின்றி எல்லா இடங்களிலும் நிறைந்துள்ள இறைவன் எல்லாத் தலங்களையும் படைக்கும் பொருட்டு இத்திருவாலவாயை முதன் முதலில் படைத்து இவ்விடத்தில் இருந்து அருளினான். இதன் பெருமையை இன்னமும் உரைப்பேன் கேளுங்கள்!

238. திருவால வாயென்று கேட்டவரே யறம்பெறுவர்
செல்வ மோங்குந்
திருவால வாயென்று நினைத்தவரே பொருளடைவர்
தேவ தேவைத்
திருவால வாயிடத்துக் கண்டவரே யின்பநலஞ்
சேர்வ ரென்றுந்
திருவால வாயிடத்து வதிந்தவரே வீட்டுநெறி
சேர்வர் அன்றே.

239. சுரநதிசூழ் காசிமுதற் பதிமறுமைக் கதியளிக்குந்
தூநீர் வைகை
வரநதிசூழ் திருவால வாய்சிவன் முத்திதரும்
வதிவோர்க்கு ஈது
திரனதிகம் பரகதியும் பின்கொடுக்கு மாதலினிச்
சீவன் முத்தி
புரனதிக மென்பதெவ னதற்கதுவே யொப்பாமெப்
புவனத் துள்ளும்.

240. ஆதலினிப் பதிவிட்டுப் பிரபதியிற் போய்நோற்போர்
அங்கை கொண்ட
சீதளவா னமுதேய்ப்பத் தித்திக்கத் தேம்பெய்து
செய்த தீம்பால்
ஒதனத்தைக் கைவிட்டுப் புறங்கையை நக்குவா
ரொப்பா ரிந்த
மாதலத்தின் பெருமைதனை யாவரே யளவிட்டு
வழுத்தற் பாலார்.

241. மற்றைய தலங்க டம்மிற் பரிமகம் வாச பேயம்
அற்றமில் சோடசாக மக்கினிட் டோமம் யார்க்கும்
முற்றரு மிராசு சூய முதன்மக முடித்த பேறுஞ்
செற்றமி றரிச பூர்ண முதலிட்டி செய்த பேறும்.

238. 'திருவாலவாய்' என்று சொல்ல அதனைக் கேட்கும் தன்மையுடையவர்களே அறத்தை அடைவார்கள். செல்வம் மிக்க இத்திருவாலவாயைச் சிந்தித்தவர்களே பொருளைப் பெறுவர். தேவர்களுக்கும் இறைவனாகிய சோமசுந்தரப் பெருமானின் இந்நகரினைப் பார்த்தவர்களே இன்பமான நன்மையை அடைவார்கள். இத்திருவாலவாய் நகரில் வசிப்பவர்களே மேலான வீட்டுலகை அடைவார்கள்.

எளிதில் பயன் அளிக்கும் திருவாலவாய்

239. கங்கை சூழ்ந்த காசி போன்ற பிற நகரங்களும் மறுமையில் வீட்டுலகைக் கொடுக்கும். தூய்மையான நீரினையுடைய வையை ஆற்றையுடைய திருவாலவாயானது வசிப்பவர்களுக்கு ஜீவன் முக்தியைக் கொடுக்கும். இது மிகவும் உறுதி. மறுமையில் வீட்டுலகைக் கொடுக்கும் ஆதலால் இத் திருவாலவாயே எல்லாத் தலங்களிலும் மிக்கது என்பதே உண்மை.

240. ஆதலால் இப்பதியை விட்டு வேறு பதிக்குச் சென்று தவம் செய்வோர், உள்ளங்கையில் பெற்ற, குளிர்ந்த தேவாமிர்தம் போன்ற, குளிர்ந்த தேனைச் சொரிந்து செய்த இனிய பால் சோற்றைத் தவற விட்டு விட்டுப் புறங்கையை நக்குவார்களை ஒப்பார்கள். இப்பெருமை மிக்க பதியின் சிறப்பை அளவிட்டுக் கூறும் தன்மையுடையவர் எவருமிலர்.

241. அசுவமேதம், வாசபேயம், குற்றமற்ற சோடசாகமம், அக்கினிட்டோமம், எவரும் முடிப்பதற்குக் கடினமான இராசசூயம் முதலிய வேள்விகளைப் பிற தலங்களில் முடித்தலால் உண்டான பயன்களும், வருத்தமில்லாத தரிச பூர்ணம் முதலிய பல இட்டிகளைச் செய்தலால்வரும் பயனும் இங்கு வசிப்பவர்களுக்கு உண்டாகும்.

242. எள்ளிழு தன்னங் கன்னி யிவுளிதே ரியானை யில்லம்
வெள்ளியான் பொன்பூ ணாடை விளைவொடு
பழனமுன்னாத்
தள்ளரும் அடிமையாதி தானங்கள் செய்த பேறும்
வள்ளறன் காசியாதிப் பதிகளில் வதிந்த பேறும்.

243. கங்கைகா ளித்தி வாணி காவிரி கண்ண வேணி
துங்கபத் திரைதீம் பாலி தூயதன் பொருநை
முன்னாச்
சங்கையி னதிகண் முற்றும் ஆடிய தவத்தின் பேறும்
மங்கல மதுரை தன்னில் வைகலும் வதிவோர்க்
கெய்தும்.

244. அன்னிய தலங்க டம்மில் ஆற்றிய பிரம கத்தி
பொன்னினைக் களவு செய்தல் கள்ளுண்டல் புனித
வாசான்
பன்னியைப் புணர்த லின்ன பாதக மனைத்து
மென்றுந்
தன்னிக ரால வாயில் வதிபவர் தமைவிட் டேகும்.

245. மற்றைய தலத்தின் சாந்தி ராயண மதியந்தோறும்
உற்றபே றிங்குக் கங்கு லு ண்டியால் அடைபே றாகும்
மற்றைய தலத்தின் மாதப் பட்டினிப் பலத்தின் பேறிங்
குற்றொரு வைக லுண்டி யொழிந்தவர் பெறும்பே
றாகும்.

242. எள்ளும், நெய்யும், சோறும், கன்னியும், குதிரையும், தேரும், யானையும், வீடும், வெள்ளியும், பசுவும், பொன்னும் அணிகலன்களும், ஆடையும், விளைவோடும் கூடிய வயலும், முதலிய தானங்களைச் செய்தலினால் வரும் பயனும், காசி முதலிய சிவதலங்களில் வசித்தலால் வரும் பயனும் இங்கு வசிப்பவர்களுக்கு எய்தும்.

243. கங்கை, யமுனை, சரசுவதி, காவிரி, கிருஷ்ணை, துங்கபத்திரை, இனிமையான பாலி, தூய்மையான குளிர்ந்த தாமிரபரணி முதலாக உள்ள எல்லா நதிகளிலும் நீராடிய தவத்தினால் உண்டான பயனும் இம் மதுரை மாநகரில் வாழ்பவர்களுக்கு எளிதில் உண்டாகும்.

மிகுந்த பயன் தரும்

244. வேறு பதிகளில் புரிந்த கொலை, களவு, கள்ளுண்ணல், புனித குருவின் மனைவியைச் சேருதல் போன்ற எல்லாப் பாவங்களும் நிகரில்லாத இவ்வாலவாயின் கண் வந்து வசிப்பதின் மூலம் நீங்கிவிடும்.

245. மற்றைய தலங்களில் மாதந்தோறும் 'சாந்திராயண விரதம்' நோற்றலால் வரும் பயன், இப்பதியில் இரவில் உண்ணுதலால் அடைகின்ற பயன் ஆகும். ஏனைய தலங்களில் ஒரு மாதப் பட்டினி விரதத்தால் வரும் பயன்,. இத்தலத்தில் ஒரு நாள் பட்டினி விரதம் நோற்றவர் அடையும் பயனாகும்.

(சந்திராயணமாவது, சந்திரன் கலை வளரும்தோறும் ஒவ்வொரு கவளம் உயர்ந்தும், குறையும் தோறும் ஒவ்வொரு கவளம் குறைந்தும், உணவை உட்கொண்டு நோற்கும் விரதமாகும்.)

246. அயனக ரடைந்து நான்கு திங்கணோன் பாற்றும் பேறிவ்
வியனக ரடைந்து நோற்கும் அட்டமி விரத நல்கும்
அயனக ரெய்தி யாறு திங்கணோன் பாற்றும் பேறிவ்
வியனகர்ச் சோம வார விரதமே யளிக்கு மன்றே.

247. ஏனைய தலத்தி லோராண் டுணவொழிந் தியற்று நோன்பால்
ஆனபே றிங்கு நோற்குஞ் சிவனிரா வளிக்கும் இங்கே
ஊனவைம் பொறியும் வென்றோன் முப்பொழு துண்டு வைகித்
தானமர்ந் தாலுங் காலுண் டியற்றுமா தவத்தோ னாகும்.

248. இந்தநான் மாட மோங்கும் ஆலவா யிடத்தியா ரேனும்
அந்தணர் தமக்கோர் முட்டி யருந்தவர் தமக்கோர் பிச்சை
தந்தவர் புறம்பு செய்த சோடச தானந் தம்மால்
வந்தபே றடைவர் பல்வே றுரைப்பதென் மதியான் மிக்கீர்.

249. பல்வகைத் தலங்கள் எல்லாம் வைகிய பயனு மென்றும்
பல்வகைத் தீர்த்த மெல்லா மாடிய பயனு மென்றும்
பல்வகைத் தான மெல்லா நல்கிய பயனு மென்றும்
பல்வகைத் தான பூசை பண்ணிய தவத்தின் பேறும்.

246. வேறு பதிகளில் சென்று நான்கு மாதங்கள் தங்கி இருந்து நோற்கும் விரதத்தின் பயனை இவ்வுயர்ந்த பதியைச் சார்ந்திருந்து புரிகின்ற 'அட்டமி விரதம்' கொடுக்கும். பிற தலங்களில் போய் ஆறு மாதங்கள் விரதம் இயற்றுதலினால் வரும் பயனை இச்சிறந்த பதியிலிருந்து நோற்கின்ற 'சோமவார விரதமே நல்கும்.

247. பிற பதிகளில் ஒரு வருடம் உணவில்லாமல் நோற்கின்ற விரதத்தால் வரும் பயனை இங்கு நோற்கும் சிவராத்திரி விரதம் ஒன்றே நல்கும். இப்பதியில் குற்றமுள்ள ஐம்பொறிகளையும் வென்றவர் மூன்று வேளையும் உண்டு இருந்தாராயினும் காற்றை மட்டுமே உண்டு, நோற்கின்ற பெரிய தவத்தை உடையவரே ஆவார்.

248. அறிவால் உயர்ந்த முனிவர்களே! இந்நான் மாடமாகிய சிறந்த ஆலவாயின்கண் அந்தணர் தமக்கு ஒரு பிடி அரிசியாவது அரிய தவத்தை உடையவர்களுக்கு ஒரு பிடி சோறாவது கொடுத்தவர்கள் யாவராயினும் வேறு இடங்களில் செய்யப்பட்ட பதினாறு வகைத் (சோடச) தானங்களால் வரும் பயனைப் பெறுவர்.

249. பல வகையான பதிகளில் வசித்தலால் வரும் பயனகளும், எப்போதும் பல வகைத் தீர்த்தங்களில் நீராடியதனால் உண்டாகும் பயன்களும் எந்நாளும் பல வகைத் தானங்கள் செய்தலால் உண்டாகும் பயன்களும், பல வகை பூஜை செய்தலால் உண்டாகும் பயன்களும் ஆலவாயின்கண் வாழ்பவர் அடைவர்.

250. பல்வகைத் தவங்கள் எல்லாம் முற்றிய பயனுந் தூய
பல்வகை மந்தி ரத்தி லெய்திய யயனு நூலின்
பல்வகைக் கேள்வி யெல்லா மாய்ந்துணர்
பயனும் யோகம்
பல்வகை ஞான மெல்லாம் பயின்றுணர்ந் தடங்கும்
பேறும்.

251. அனையதொல் பதியி லென்றும் வைகுவோர்
அடைவ ரென்றால்
இனையதொல் பதிக்கு நேர்வே றில்லையிப்
பதியின் மேன்மை
தனையறி பவரா ரீசன் றானன்றி யாத லலே
வினையைவெல் பவரங் கெய்தி வதிவதே வேண்டு
மாதோ.

252. கைத்தலநான் கிரண்டுடைய மலர்க்கடவுண்
மேலொருநாட் கயிலையாதி
எத்தலமு மொருதுலையிட் டித்தலமும்
ஒருதுளையிட் டிரண்டுந் தூக்க
உத்தமமாந் திருவால வாய்மிகவுங் கனத்ததுகண்
டுலகின் மேலா
வைத்ததல மிதுவென்றா லிதன்பெருமை யாவரே
வழுத்தர் பாலார்.

253. அத்திருமா நகரின்பேர் சிவநகரங் கடம்பவனம்
அமர்ந்தோர் சீவன்
முக்திபுரங் கன்னிபுரந் திருவால வாய்மதுரை
முடியா ஞானம்
புத்திதரும் பூவுலகிற் சிவலோகஞ் சமட்டிவிச்சா
புரந்தென் கூடல்
பத்திதரு துவாதசாந் தத்தலமென் றேதுவினாற்
பகர்வர் நல்லோர்.

250. பல வகையான தவங்கள் முழுவதும் செய்து முடித்தலால் உண்டான பயன்களும், பல வகை மந்திரங்கள் ஜெபித்தலால் உண்டான பயன்களும், பல வகை நூற்பொருளைக் கேட்டு அவற்றை ஆய்ந்து உணர்ந்ததினால் உண்டான பயன்களும், பல வகை யோகங்கள் ஞானங்கள் பழகி மெய்ப் பொருளை அறிந்து அடங்கி இருத்தலால் உண்டான பயன்களும் ஆலவாயின்கண் வாழ்பவர் அடைவர்.

251. ஆதலினால் இப்பழமையான பதிக்கு ஒப்பானதாய் வேறொரு பதி வேறெங்கும் இல்லை. இப்பதியின் பெருமைக்குச் சிவபெருமானேயன்றி வேறு ஒருவரும் இல்லை. ஆகையால் வினையை வெல்பவர் அப்பதிக்குச் சென்று வசித்திருக்கவே வேண்டியதாகும்.

252. முன்னொரு காலத்தில் எட்டுக் கரங்களையுடைய பிரமதேவர் திருக்கைலாயம் முதலான எல்லாப் பதிகளையும் ஒரு தராசின் தட்டிலும், திருவாலவாயினை மற்றைய தட்டிலும் வைத்து இரண்டையும் தூக்கிய போது திருவாலவாய் மிகவும் கனத்திருத்தலைக் கண்டு இதுவே மூவுலகங்களில் மிக மேலாகிய தலம் என்று உறுதி கொண்டார் எனின் இதன் சிறப்பை யாரால் வரையறுத்துக் கூற முடியும்.

திருவாலவாயின் வேறு பெயர்கள்

253. தெய்வத் தன்மை பொருந்திய இந்திருத் தலத்தின் பெயர்களை, 'சிவ நகரம்' 'கடம்பவனம்' விரும்பிய 'சீவன் முக்தி புரம்' 'கன்னிபுரம்' 'திருஆலவாய்' 'மதுரை' அழியாத ஞானத்தையும் போகத்தையும் கொடுக்கின்ற 'பூலோக சிவலோகம்' 'சமட்டி விச்சாபுரம்' 'தென் கூடம்' அன்பை அருளுகின்ற 'துவாத சாந்தத் தலம்' என்றெல்லாம் உயர்ந்தோர் ஒவ்வொரு காரணம் பற்றிக் கூறுவர்.

254. என்றுதலச் சிறப்புரைத்த குறுமுனிவ னெதிரறவோர்
இறும்பூ தெய்தி
நன் றுதலப் பெருமையருள் செய்தனைகேட்
டுடலெடுத்த நயப்பா டெல்லாம்
இன்றடைந்தே மினிச்சுவண புண்டரிகச்
சிறப்பதனை யிசைத்தி யென்னக்
குன்றமடக் கியகருணைக் குன்றனையான்
வரன்முறையாற் கூறு கின்றான்.

255. விரதமா தவத்தீர் காணின் வெவ்வினை யெல்லாம்
வீட்டிச்
சரதமாப் போக நல்குந் தபனிய முளரி வந்த
வரவுமக் கனக கஞ்சப் பெருமையும் வளனு நன்கா
உரைசெய்துங் கேண்மி னென்னா முனிவரன்
உரைக்கு மன்னோ.

தலவிசேடப் படலம் முற்றிற்று

தீர்த்த விசேடப் படலம்

256. கண்ணகன் குடுமி மாடக் கடிபொழி லால வாயின்
அண்ணலம் பெருமை யாரே யளப்பவ
ரவிர்தண் முத்த
வெண்ணகை யுமையா ளன்பு விளைமுகச் செவ்வி
போலத்
தண்ணறும் கமலம் பூத்த தடப்பெருந் தகைமை
சொல்வாம்.

257. ஆற்றுனுக் கரசாங் கங்கை காவிரி யாதி யாறும்
வேற்றுரு வாய முந்நீர் வேலையும் பிறவுங் காருந்
தோற்றுமுன் றன்னை யாட்டச் சுந்தர மூர்த்தி
செங்கண்
ஏற்றினன் கண்ட தீர்த்த மாகுமீ தெவ்வா றென்னின்.

254. இவ்வாறு தல விசேடத்தைக் கூறிய அகத்திய முனிவரின் எதிரே மற்ற முனிவர்கள் வியப்புற்றனர். தலச் சிறப்பை நன்கு கூறி அருளினாய். அதனைக் கேட்டு உடலை எடுத்ததனால் அடைய வேண்டிய பயன் முழுவதையும் இன்று அடைந்தோம். இனி பொற்றாமரைத் தீர்த்தத்தின் பெருமையினைக் கூறியருள்க" என்றனர். விந்தமலையை அடக்கிய கருணை வடிவான அகத்திய முனிவர் வரலாற்று முறைப்படி அதனைக் கூறத் தொடங்கினார்.

255. "பெரிய தவத்தினை விரதமாகக் கொண்ட முனிவர்களே! தரிசித்தால் உண்மையாகக் கொடிய வினைகளை எல்லாம் அழித்து இன்பத்தைக் கொடுக்கின்ற பொற்றாமரையானது தோன்றிய வரலாறும், அதன் சிறப்பும், வளமும் ஆகிய இவற்றை நன்றாகக் கூறுவேன்! கேளுங்கள்!" என்று அகத்திய முனிவர் கூறினார்.

தலவிசேடப் படலம் முற்றிற்று

தீர்த்த விசேடப் படலம்

256. பரந்த இடங்களையும், சிகரங்களையும், மாடங்களையும் உடைய, மணம்மிக்க சோலைகளால் சூழப்பட்ட அழகிய திருவாலவாயினுடைய பெருமையை யாரால் கூற முடியும்? வெண்முத்துகள் போன்ற பற்களையுடைய உமையம்மையாரின் அருள் பழுத்த திருமுகத்தின் அழகு போல் குளிர்ந்த நறிய தாமரை மலரப் பெற்ற தீர்த்தத்தின் பெருமையைக் கூறுவோம்.

பழமைமிக்க தீர்த்தம்

257. இத்தாமரைத் தீர்த்தத்தை நதிகட்கு அரசுபோல் விளங்கும் கங்கை, காவிரி முதலிய நதிகளும், கடல்களும், மேகங்களும் தோன்றுவதற்கு முன்னே தமக்குத் திருமஞ்சனம் செய்தற் பொருட்டு சிவந்த கண்ணுடைய இடபத்தை வாகனமாகவுடைய சோமசுந்தரக் கடவுள் தோற்றுவித்தார்.

258. அகளமா யுலக மெல்லாம் ஒடுக்கியந் நெறியே
யார்க்கும்
நிகளமாம் விருத்தி தோன்ற நினைவற நினைந்து
நிற்குந்
துகளிலா வறிவா னந்த சுந்தரச் சோதி மேனாட்
சகளமா முருவங் கொண்டு தானொரு
விளையாட் டாலே.

259. முக்கணன் அரவப் பூண நூலினன் முகிழ்வெண்
டிங்கட்
செக்காஞ் சடையன் சூல கபாலத்தன் செங்க
ணேற்றன்
மைக்கருங் கயலுண் கண்ணி வாமத்தன் முன்னும்
பின்னும்
பக்கமு நந்தி யாதி கணாதிபர் பாவிச் சூழ.

260. சென்றுதன் தேனித் தேசாற் றிசையெலாம்
விளங்கச் செங்கண்
வென்றிகொள் உரக வேந்த னகரமும் விபுதர்
வேந்தன்
பொன்றிகழ் நகரும் வேதன் புரமுமால் புரமு மேலைத்
தன்றிரு நகருஞ் சென்று சஞ்சரித் தாடி மீள்வான்.

261. அன்னபோ தயனுந் தேவர்க் கரசனும் ஆழி
வேந்தும்
முன்னர்வந் திறைஞ்சி யேத்த முனிவரும்
பேறு நல்கித்
தன்னக ரடைந்து நீங்காத் தனிப்பெருங் கணத்தி
னோரை
இன்னருள்சுரந்து நோக்கி யிலிங்கத்திற் புகுது
மெல்லை.

சிவகண நாதர்கள் வேண்டுதல்

258. முன்னொரு காலத்தில், நிட்களமாய், உலகமனைத்தையும் தன்னுள்ளே ஒடுக்கி, அவ்வொடுக்கிய முறையாகவே எவர்க்கும் பாசமாகிய விருத்தி தோன்றுமாறு நினைவற நினைந்து நிற்கின்ற குற்றமில்லாத ஞானானந்த ஒளிவடிவமாகிய சிவபெருமான் ஒரு திருவிளையாட்டைத் திருவுள்ளத்துக் கொண்டு உருவமுடைய உருவத்தோடு.

259. மூன்று கண்களையுடையவனாய், பாம்பாகிய பூணூலை உடையவனாய், அழகிய பிறைச் சந்திரனை அணிந்த செவ்வானம் போன்ற சடையை உடையவனாய், சூலத்தையும் கபாலத்தையும் உடையவனாய், சிவந்த கண்களையுடைய இடபத்தையுடையவனாய், மைபோன்ற கண்களையுடைய உமையம்மையை இடப்பக்கத்தில் உடையவனாய்க் காட்சியளிக்க, நந்தி முதலிய சிவகணத் தலைவர்கள் எல்லாப் பக்கமும் சூழ்ந்து நின்று துதித்தனர்.

260. எல்லாத் திக்குகளிலும் தனது திருமேனியின் ஒளியானது வீச, சிவந்த கண்களையுடைய வெற்றிமிக்க பாம்புகளின் அரசனாகிய அனந்தனது நாகலோகத்திலும், தேவர்கட்குத் தலைவனாகிய இந்திரனது பொன்னுலகத்திலும், அவைகட்கும் மேலாக உள்ள சிவலோகத்திலும் சென்று இறைவன் திருவிளையாடலை நிகழ்த்தி மீளுவார்.

261. அப்போது பிரமதேவனும், தேவேந்திரனும், திகிரிப்படையை உடைய திருமாலும் அவன் முன்னர் வந்து வணங்கித் துதிக்க, அவர்கட்கு விருப்பமான வரங்களைக் கொடுத்துத் தனது திருவாலவாயை அடைந்து பெரிய கணநாதர்களை இனிய அருளோடு நோக்கி இலிங்கத்துள் சென்று மறையும் அச்சமயத்தில்,

262. வேத்திரப் படையோன் ஆதி கணாதிபர் வீழ்ந்து பால
நேத்திர வன்பர்க் கன்ப நிரஞ்சன நிருத்தா னந்த
சாத்திர முடிவுந் தேறாத் தனிமுக லொருவ
வென்னாத்
தோத்திர வகையா லேத்தித் தொழுதொன்று
வினாவல் செய்வார்.

263. ஐயவிவ் விலிங்க மூர்த்திக் காட்டவு மடியே மூழ்கி
உய்யவுங் கங்கை யாதி நதிகளும் உலகத்துள்ளோர்
மை யறு தடாச நீரு மற்றிலை யிருமைப் பேறுஞ்
செய்யவோர் தீர்த்த மிங்குண் டாக்கெனச்
செப்ப லோடும்.

264. அத்தகை யிலிங்க மூர்த்திக் கடுத்ததென் கீழ்சா ராக
முத்தலை வேலை வாங்கி நாட்டினான் முதுபார்
கீண்டு
பைத்தலைப் பாந்தள் வேந்தன் பாதலங் கீண்டு
போயெண்
கைத்தலப் பிரமன் அண்ட கடாகமுங் கீண்ட
தவ்வேல்.

265. அவ்வழிப் புறம்பு சூழ்ந்து கிடந்தபேர் ஆழி யூழிப்
பௌவநீ ரென்ன வோங்கப் பாணியா லமைத்து
வேணித்
தெய்வநன் னீரைத் தூவிக் கலந்துமா தீர்த்த மாக்கிக்
கைவரை கபாலி நந்தி கணத்தினை நோக்கிக்
கூறும்.

262. பாம்புப் படையை உடைய நந்தி முதலான கணத் தலைவர்கள் கீழே விழுந்து, "நெற்றிக் கண்ணை உடைய பெருமானே! அன்பர்களுக்கு அன்பனே! குற்றமற்றவனே! ஆனந்தத் தாண்டவமுடையவனே! சாத்திரங்களாலும் தெளியப்படாத ஒப்பற்ற முதல்வனே!" என்று துதி செய்து வணங்கி ஒன்று கேட்பாராயினர்.

263. "தலைவனே! இச் சிவலிங்கப் பெருமானுக்கு திருமஞ்சனம் செய்யவும், அடியேங்கள் நீராடி உய்யவும், உலகத்தில் கங்கை போன்ற ஆறுகளும், பிறநீர் நிலைகளும் இல்லை. ஆகையால் இம்மை மறுமைப் பயன்களை அடைய இவ்விடம் ஒரு தீர்த்தம் ஆக்கியருள வேண்டும்" என்று விண்ணப்பித்துக் கொண்டனர்.

தீர்த்தம் தோன்றிய வரலாறு

264. உடனே அந்த இலிங்கப் பெருமானுக்கு அடுத்த தென்கிழக்குப் பக்கத்தில் மூன்று தலையுடைய சூலத்தை எடுத்து கீழே ஊன்றினார். அச்சூலம் பழமையான நிலவுலகத்தைக் கிழித்து படம் பொருந்திய தலைகளுடைய பாம்புக்கு அரசனாகிய அனந்தன் இருக்கும் பாதாளத்தைக் கிழித்துச் சென்று எட்டுக் கைகளையுடைய நான்முகனுடைய அண்ட கடாகத்தையும் கிழித்துச் சென்றது.

265. அக்கடாகத்தின் புறத்தே சுற்றிக் கிடந்த பெரும் புறக் கடலானது ஊழிக் காலத்திலே பொங்கி எழும் கடல் நீர் போலப் பெருக்கெடுத்து மேலே எழுந்து வந்தது. சிவபெருமான் தனது திருக்கரத்தால் அதன் பெருக்கை, 'அமைக' என் அமைத்துச் சடா முடியில் உள்ள தெய்வத் தன்மை பொருந்திய கங்கை நீரை தெளித்துக் கலந்து புண்ணிய தீர்த்தமாகச் செய்தார். பின்னர் கையில் கபாலத்தையுடைய அவ்விறைவன் நந்தி தேவரையும் மற்ற கணத் தலைவர்களையும் பார்த்துக் கூறினார்.

266. இன்னமா தீர்த்தந் தன்னை யெனைப்பல தீர்த்தங் கட்கு
முன்னம்யாம் இங்குக் கண்ட முதன்மையா லாதி தீர்த்தம்
என்னலா மினியுண் டாக்குந் தீர்த்தங்க ளெவைக்கு மேலாய்
மன்னலாற் பரம தீர்த்த மெனப்பெயர் வழங்க லாகும்.

267. மருட்கெட மூழ்கி னோர்நன் மங்கலம் பெறலா னாமம்
அருட்சிவ தீர்த்த மாகும் புன்னெறி யகற்றி யுள்ளத்
திருட்கெட ஞானந் தன்னை யீதலான் றிதற்கு நாமம்.

268. குடைந்துதர்ப் பணமுஞ் செய்து தானமுங் கொடுத்தம் மாடே
அடைந்தெழுத் தைந்தும் எண்ணி யுச்சரித் தன்பா லெம்மைத்
தொடர்ந்துவந் திறைஞ்சிச் சூழ்ந்து துதித்தெமை யுவப்பச் செய்தோர்
உடம்பெடுத் ததனா லெந்த வுறுதியுண் டதனைச் சேர்வார்.

269. இந்தநீ ரெம்மை யாட்டி னேழிரண் டுலகின் மிக்க
அந்தமி றீர்த்த மெல்லாம் ஆட்டிய பயன்வந் தெய்தும்
வந்திதின் மூழ்கி யிங்கு வைகுநங் குறியை யுங்கள்
சிந்தையி லார்வம் பொங்கப் பூசனை செய்மி னென்னா.

270. விண்ணவர் தம்மின் மேலாம் வேதிய னாகி நின்ற
பண்ணவன் றானந் நீரிற் படிந்துதன் னனுச்சை யாலே
அண்ணலங் கணத்தி னோரை மூழ்குவித் தனாதி யாய
புண்ணிய விலிங்கந் தன்னுட் புகுந்தினி திருந்தான் மன்னோ.

266. "நாம் பிற தீர்த்தங்களை எல்லாம் உண்டாக்குவதற்கு முன்னே இப்பெருமை பொருந்திய தீர்த்தத்தை உண்டாக்கியதால், இஃது 'ஆதி தீர்த்தம்' எனவும், இனி உண்டாக்கப்படும் தீர்த்தங்களுக்கெல்லாம் மேலாக விளங்குவதால் 'பரம தீர்த்தம்' எனவும் வழங்கலாகும்" என்றார்.

267. "மயக்கம் நீங்க இதில் நீராடியவர்கள், பல நன்மைகளை அடைவதால் இது 'சிவ தீர்த்தம்' எனவும், தீய வழிகளில் செல்வதை நீக்கி, உள்ளத்தில் உள்ள அஞ்ஞானம் என்ற இருளானது நீங்கி ஞான ஒளியை உண்டாக்குவதால் இது 'ஞான தீர்த்தம்' எனவும் தெளிவான முக்தியைக் கொடுத்தலால் 'முக்தி தீர்த்தம்' எனவும் இதற்குப் பெயர்கள் உள்ளன".

268. "இத் தீர்த்தத்தில் நீராடி, தர்ப்பணம் செய்து, தானம் கொடுத்து, அதன் கரையில் இருந்து திருவைந் தெழுத்துகளை மனத்தில் தியானித்து அன்போடு நம்மை அடைந்து வணங்கி வழிபட்டு வலம் செய்து துதித்தவர் மானிடப் பிறவியைப் பெற்றதனாலாகிய பயனைப் பெறுவர்" என்றார்.

269. இந்தத் தீர்த்தத்தினால் எம்மைத் திருமஞ்சனம் செய்வித்தால், பதினான்கு உலகங்களிலும் உள்ள உயர்ந்த அழிவில்லாத தீர்த்தங்கள் எல்லாவற்றிலும் அபிடேகம் செய்வதால் உண்டாகும் பயன் வந்து எய்தும் இதில் நீராடி இங்கு எழுந்தருளி இருக்கும் நமது அருட்குறியாகிய சிவலிங்கத்தை உள்ளத்திலே அன்பு மேலோங்கப் பூசனை செய்யுங்கள்" என்று கூறினார்.

270. தேவர்களுக்கெல்லாம் தலைவனாகிய சிவபெருமான், தான் அத் தீர்த்தத்தில் மூழ்கி. தன் கட்டளையால் பெருமை மிக்க கணத் தலைவர்களை மூழ்கச் செய்து அனாதியாய் உள்ள அறவடிவான இலிங்கத்துள்ளே போய் மறைந்து இனிமையுடன் வீற்றிருந்தார்.

271. அந்தமா நீரா னந்தி யாதியோர் விதியாற் சோம
சுந்தரன் முடிமேல் ஆட்டித் துகளறப் பூசை யாற்றிச்
சிந்தையில் விழைந்த வெல்லா மடைந்தனர் செம்பொற் கஞ்சம்
வந்தவா றிதுவத் தீர்த்த மகிமையு முரைப்பக் கேண்மின்.

272. வளையெறி தரங்க ஞான வாவியை நோக்கிற் பாவத்
தளையறு மூழ்கின் வேண்டுங் காமியம் எல்லாஞ் சாரும்
உளமுற மூழ்கு மெல்லை முழுக்கொன்றற் குலகத் துள்ள
அளவறு தீர்த்த மெல்லா மாடிய பயன்வந் தெய்தும்.

273. மெய்யைமண் ணாதி கொண்டு விதிவழி சுத்தி செய்து
மையறு வருண சூத்த மந்திர நவின்று மூழ்கிற்
றுய்யமா தீர்த்த மெல்லாந் தோய்ந்துநான் மறையு மாய்ந்தோர்
கையிலெப் பொருளும் ஈந்த காசறு பேறு நல்கும்.

274. தெய்வவித் தீர்த்தந் தன்னை நினைவின்றித் தீண்டி னாலும்
அவ்விய வினையு னீந்தி யரும்பெறல் வீடு சேர்வர்
இவ்வுரை மெய்யே யாகும் என்னெனின் மனத்தா றன்றி
வெவ்வழ றீண்டி னாலுஞ் சுடுமன்றி விடுமோ வம்மா.

271. திருநந்தித்தேவர் முதலானோர் அச்சிறந்த தீர்த்தத்தால் ஆகம முறைப்படி சோமசுந்தரப் பெருமான் திருமுடிமேல் அபிடேகம் செய்வித்து குற்றமறப் பூசித்து மனதில் விரும்பியவற்றை எல்லாம் அடைந்தனர். இப் பொற்றாமரைத் தீர்த்தம் தோன்றிய வரலாறு இதுவாகும். அத் தீர்த்தத்தின் பெருமையைச் சொல்லக் கேளுங்கள்.

தீர்த்தத்தின் பெருமை

272. சங்குகளை எடுத்தெறியும் அலைகளையுடைய இந்த ஞான தீர்த்தத்தை தரிசித்தால் பாவங்கள் எல்லாம் நீங்கும். மூழ்கினால் விரும்பிய பொருள்கள் அனைத்தும் வந்து சேரும். உள்ளம் விரும்பி மூழ்குகின்ற ஒவ்வொரு முழுக்கிற்கும் உலகத்தில் உள்ள அளவிறந்த தீர்த்தங்கள் எல்லாவற்றிலும் ஆடிய பயன் எல்லாம் வந்து எய்தப் பெறும்.

273. மண் முதலியவற்றைக் கொண்டு விதிப்படி தூய்மையாக்கிக் குற்றமற்ற வருண சூக்த மந்திரத்தை உச்சரித்து நீராடினால், புண்ணிய தீர்த்தங்கள் எல்லாவற்றிலும் நீராடி நான்மறைகளை ஆய்ந்துணர்ந்த அந்தணர்களுக்கு எல்லாப் பொருளையும் தானம் செய்தலால் வரும் பெரும் பயன் கிடைக்கும்.

274. தெய்வத் தன்மையுடைய இத் தீர்த்தத்தை நினைவு இல்லாமல் தீண்டினாலும், தீவினையினின்றும் கடந்து வீடு பேற்றை அடைவர். இந்த வார்த்தை உண்மையாகும். எப்படியெனில் மனத்தின் நினைப்பில்லாமல் கொடிய தீயினைத் தொட்டாலும் சுடும் அல்லவா? அது போன்றே இது வீடு பேற்றை நல்கும் தன்மையுடையது.

275. ஆருமந் நீரி லென்று மாடினார் சீவன் முத்தி
சேருவ ரந்நீ ராடுஞ் சிறப்புறு பயனுக் கொவ்வா
வாருண மாக்கி னேய மந்திரம் இவைமுன் னான
பேருணர் வளிக்கு நானஞ் செய்தவர் பெறும்பே
றெல்லாம்.

276. அன்னநீர் தனையுமாடி யாலவா யுடைய நாதன்
றன்னையும் பணிவோன் மேலைப் பாகதி தன்னைச்
சாரும்
என்னநன் னூலிற் சொன்ன பவித்திரம் எவைக்கு
மேலாய்ப்
பன்னரும் புனித மான பவித்திர மாகி நிற்கும்.

277. ஆதர விலனா யந்நீ ராடினோன் சுவர்க்கஞ் சேரும்
ஆதர வுளனாய் மூழ்கி வானவ ராதி யானோர்க்
காதர வரிசி யெள்ளுத் தருப்பண மமையச்
செய்தோன்
ஆதர வேள்வி முற்று மாற்றிய பயனைச் சேரும்.

278. ஏனைமா தலங்க டம்மி லிருந்துசெய் விரதம் பூசை
தானமா தரும மோமந் தவஞ்செபந் தியானந் தம்மால்
ஆனமா பயனிற் கோடி யதிகமாம் அடைந்து மூழ்கி
ஞானமா தீர்த்த ஞாங்க ரிருந்தவை நயந்து செய்யின்.

279. பிறந்தநா ளந்நீர் மூழ்கின் மேலைவெம் பிறவிப்
பௌவம்
மறிந்திடு மறிதேள் கும்ப மதிகளின் மூழ்கித்
தென்பால்
உறைந்தவர் பொருட்டுப் பிண்ட முதலினா
லவர்தாம் ஆழ்ந்து
நிறைந்திடு பிறவிப் பௌவ நின்றுமே லெழுவ ரன்றே.

275. நிறைந்த அத் தீர்த்தத்தில் எப்போதும் மூழ்கியவர் சீவன் முக்தியை அடைவர். அத் தீர்த்தத்தில் மூழ்குகின்ற சிறப்புடைய பயனும், வருண ஸ்நானம், ஆக்கினேய ஸ்நானம், மந்திர ஸ்நானம் முதலான பெரிய ஞானங்கள் கொடுக்கின்ற பெரிய பயனைவிட அதிகப் பயனை அடைவார்கள்.

276. அத் தீர்த்தத்தில் நீராடி ஆலவாய் அண்ணலைப் பணிவோார் மறுமையில் வீடு பேற்றை அடைவர். சிறந்த நூல்களில் எடுத்துக் கூறிய புனிதங்கள் அனைத்திற்கும் சிறந்ததாய், சொல்லுதற்கரிய தூய்மையான புனித வடிவம் வாய்ந்ததாய் அத் தீர்த்தம் உள்ளது.

277. சிரத்தை இல்லாமல் அத்தீர்த்தத்தில் நீராடியவர் கூடச் சொர்க்கம் அடைவர். அன்புடன் நீராடியவர், தேவர் முதலானவர்க்கு விருப்பத்துடன் எள்ளையும் அரிசியையும் கொண்டு விதியோடு தருப்பணம் செய்தவரும் விரும்பத்தக்க வேள்விகள் அனைத்தையும் செய்தவரும் அடைகின்ற பயனை அடைவர்.

278. பெருமை மிக்க மற்றைப் பதிகளில் இருந்து விரதம், பூசை, தானம், தருமம், ஓமம், தவம், செபம், தியானம் இவைகளைச் செய்ததினால் ஆகின்ற பெரிய பயனைவிட, இச் சிறந்த ஞான தீர்த்தத்தில் நீராடி அதன் கரையில் இருந்து செய்யின் கோடி மடங்கு பயன் அதிகமாகும்.

279. பிறந்த நாளில் இத் தீர்த்தத்தில் நீராடினால், தொன்றுதொட்டு வருகின்ற கொடிய பிறவிக்கடல் வற்றும். சித்திரை, கார்த்திகை, மாசி மாதங்களில் மூழ்கி, தென் திசையில் இருக்கும் பிதிரர்கள் பொருட்டுப் பிண்டங்களைக் கொடுத்தால் அப்பிதிரர்கள் தாம் அழுந்திய பிறவிக் கடலினின்றும் மேலே எழுவார்கள்.

280. அத்தட மருங்கின் யாவர் தென்புல மடைந்தோர்
தங்கள்
சித்தமா சகற்ற வேண்டிச் செய்கடன் முடிக்கி
னன்னோர்
எத்தனை யெண்ணோர்ந் தாலும் எள்ளுக்கா
யிரமாண் டாக
அத்தனை யாண்டு மட்டு மவரைவிண் ணான
வைப்பார்.

281. மூவகை யுலகில் உள்ள தீர்த்தமு முறையா
லென்றுஞ்
சேவகஞ் செய்யு மிந்தத் தீர்த்தமெந் நாளு மூழ்கி
ஏவாந் நீரா லென்று மீசனைப் பூசை செய்வோர்
ஆவரிப் பிறவி தன்னி லவர்கதிக் கரையைச்
சார்வார்.

282. விடுத்திடல் அரிய நித்த வேள்வி விரதம் வேதந்
தடுத்திட லரிய தானந் தவமிவை தரும்பே
றெல்லாம்
அடுத்ததன் கரையில் வைகி யீசனை யருச்சிப்
போர்க்குக்
கொடுத்திடு புண்ணி யத்திற் கோடியி லொன்றுக்
கொவ்வா.

283. உம்மையிற் பிறவி தோறு நியமநல் லொழுக்கம்
பூண்டு
பொய்மையில் விரதந் தானந் தவஞ்செய்து
புனிதராகிச்
செம்மைநன் னெறியி னின்ற சித்தழிக் கலதித்
தீர்த்தம்
இம்மையில் அடைந்து நித்தமாடுதற் கெய்தா தன்றே.

280. தென்திசைக்குச் சென்றவர் யாரேரா, அவர்களுடைய மனம் முதலியவற்றால் செய்த பாவம் நீக்க வேண்டி, செய்ய வேண்டிய கடமைகளை இத் தீர்த்தத்தின் கரையில் இருந்து முடித்தால், அப்பிதிரர் பொருட்டு எவ்வளவு எள்ளை ஈந்தாலும், எள் ஒன்றுக்கு ஆயிரம் ஆண்டுகளாக சொர்க்க லோகத்தை அவர் ஆளுவார்.

281. மேல் நடு கீழ் என்னும் மூன்று உலகங்களில் உள்ள தீர்த்தங்கள் அனைத்தும் வணங்கி முறைப்படி பணி செய்யப் பெற்ற இப் பொற்றாமரைத் தீர்த்தத்தில் எந் நாளிலும் நீராடி, அந்த நீராலேயே சோமசுந்தரக் கடவுளைப் பூசித்தால் அவர்கள் இப்பிறவியிலேயே வீடு பேற்றை அடைவர்.

282. நீக்குதல் கூடாத நித்திய வேள்வி, பெரிய விரதம், வேதம் ஓதுதல், துடையில்லாத தானம், தவம் ஆகிய இவை தருகின்ற பயன் அனைத்தும், பொற்றாமரை வாவியின் கரையிலிருந்து இறைவனை வழிபடுவோருக்குத் தானம் கொடுக்கின்ற புண்ணியத்தில் கோடியில் ஒன்றுக் கேனும் ஒப்பாகாவாம்.

283. முன்னர் எடுத்த பிறவிகள் ஒவ்வொன்றிலும் நியமமாக நல்லொழுக்கத்தை மேற்கொண்டு, பொய்யில்லாத விரதம், தானம், தவம் செய்து தூயராகி நடுநிலைமையாகிய நல்வழியில் நிலைபெற்ற சித்தமுடைய யாருக்கன்றி இத் தீர்த்தமானது இப்பிறவியில் சென்று தினமும் ஆடுதற்குக் கிட்டாது.

284. மதிகதிரோ னிடத்தொடுங்கு தினந்திங்கட்
பிறப்பரவம் வாயங் காந்து
கதிர்கடமை விழுங்குதினம் விதிபாத மிந்நாளிற்
கருதி மூழ்கித்
துதிகடருப் பணந்தானம் புரிதன்மனு வோதுதலத்
தொகையொன் றற்கொன்
றதிகபல னம்முறைநூ றாயிரநூ றாயிரமோர்
அநந்த மாகும்.

285. பொருவரிய தகர்த்திங்க டுலாத்திங்கள் இவை
யுதிக்கும் போது மூழ்கின்
ஒருபதினா யிரமடங்காஞ் கறவுகவைத் தாளலவ
னுதிப்பின் மூழ்கின்
இருபதினா யிரமடங்கா மிந்திரவி யிடத்தொடுங்கு
மிந்து வாரம்
வருவதறிந் தாடிமனு வோதன்முதற் செயினனந்த
மடங் குண்டாகும்.

286. பிரயாகை தனின்மகர மதிநாண்முப் பதுங்குடைந்து
பெறும்பே றிந்தத்
திரையார்பைந் தடத்தொருநாண் மூழ்குவோன்
பெறும்விரத சீலம் பூண்டு
வரையாமல் ஒருவருடம் படிந்துமையை யமரர்சிகா
மணியாம் வேத
உரையானை வழிபடுமேன் மலடிக்கு நன்மகப்பே
றுண்டா மன்னோ.

287. எண்டிசைய நதிவாவி வடிவான மாதீர்த்தமெல்லா
மிப்பொற்
புண்டரிக தடத்திலொரு கோடியிலோர் கூறுநிகர்
போதா வீது
கண்டதனா லறந்தீண்டப் பெற்றதனா
னற்பொருளங் கையால் அள்ளிக்
கொண்டதனா லின்பநலங் குடைந்ததனாற்
பேரின்பங் கொடுக்கு மன்றோ.

தீர்த்தம் புண்ணிய நாளில் அளிக்கும் பயன்

284. சந்திரன் சூரியனிடம் ஒடுங்குகின்ற அமாவாசையிலும், மாதப் பிறப்பன்றும், இராகு கேதுக்கள் வாயைத் திறந்து சந்திர சூரியர்களை விழுங்குகின்ற கிரகண புண்ணிய காலத்திலும், வியதிபாத யோகத்திலும், இத் தீர்த்தத்தில் பலனை எண்ணி நீராடி, தர்ப்பணம், தானம், மந்திரம் செபித்தல் ஆகியவற்றைச் செய்தால் அந்த நாட்களில் இலட்சம் மடங்கு பயன்கள் அதிகரிக்கும்.

285. ஒப்பில்லாத சித்திரை மாதமும், ஐப்பசி மாதமும் பிறக்கும் போது (விஷு புண்ணிய காலத்தில்) மூழ்கின், பதினாயிரம் மடங்கு பயன் கொடுக்கும். தை ஆடி மாதங்கள் உதிக்கும் போது (அயன புண்ணிய காலங்களில்) இருபதாயிரம் மடங்கு பயன் தரும். சந்திரன் சூரியனிடத்துத் தொடங்குகின்ற (அமாவாசை) திங்கட்கிழமை வருவதை உணர்ந்து நீராடி மந்திரம் செபித்தால் அளவற்ற பயன் உண்டாகும்.

286. திரிவேணி சங்கமத்தில் (பிரயாகையில்) தை மாதம் முப்பது நாளும் மூழ்கி அடையும் பயனை, இச்சிறப்புடைய தீர்த்தத்தில் ஒரு நாள் மூழ்குவோன் அடைவான். விரத ஒழுக்கத்தை மேற்கொண்டு தவறாமல் ஓராண்டு மூழ்கி அங்கயற்கண்ணம்மையையும் சோமசுந்தரக் கடவுளையும் வழிபட்டால் மலடிக்கும் மகப்பேறு கிடைக்கும்.

287. எட்டுத் திக்குகளிலும் உள்ள நதிகளிலும், தடாகங்களிலும், தீர்த்தங்களிலும் ஆடிய பயன் அனைத்தும் இப்பொற்றாமரையில் ஆடிய பயனில் கோடியில் ஒரு பங்கிற்கும் நிகராகாது. இத் தீர்த்தமானது தரிசித்தால் அறத்தையும், தொட்டுப் பெற்றால் நல்ல பொருளையும், கையில் அள்ளிக் கொண்டால் இன்பத்தையும், மூழ்கியதால் பேரின்ப வீட்டையும் கொடுக்கும்.

288. முன்னவ னருளிச் செய்த காரண முறையால் அன்றி
இன்னமிப் புனித வாவிக் கேதுவா லெய்து நாமம்
மின்னவிர் சடையான் சென்னி மேவிய கங்கை நீரிற்
பின்னது கலந்த நீராற் பெறுஞ்சிவ கங்கையென்றும்.

289. அலகிலாத் தீர்த்தந் தம்மு ளதிகவுத் தமமாய்த் தோன்றி
இலகலா லிதனைத் தீர்த்த வுத்தம மென்பர் ஆராய்ந்தோர்
பலவிதழ் விரித்துச் செம்பொற் பங்கய மலர்ந்த நீரால்
உலகவர் யாரும் பொற்றா மரையென வுரைப்ப ரன்றே.

290. தருமமுன் னாகு நான்குந் தருதலாற் றரும தீர்த்தம்
அருமைசால் அருத்த தீர்த்த மரும்பெறற் காம தீர்த்தம்
இருமைசேர் முத்தி தீர்த்த மென்பதா மீனைய தீர்த்தம்
வெருவரு பாவமென்னும் விறகினுக் கெரியா மன்றே.

291. இவ்வருந் தலத்தி னான்ற பெருமையும் எரிகால் செம்பொற்
றெய்வத பதும தீர்த்தப் பெருமையுஞ் செப்பக் கேட்டோர்
எவ்வமில் போகம் வீடு பெறுவரென் றிசைத்தான் முந்நீர்ப்
பௌவமுண் டமரர் வேந்தன் பரிபவ விழுமந் தீர்த்தோன்.

தீர்த்த விசேடப் படலம் முற்றிற்று

வேறு பெயர்கள்

288. இறைவன் அருளிச் செய்த காரண முறைகளால் வந்த பெயர்களே அல்லாமல், இன்னும் வேறு பல காரணங்களினாலும் இத் தீர்த்தத்திற்கு அமைந்த பெயர்கள் பலவாகும். மின் போன்ற சடையையுடைய இறைவனது திருமுடியில் உள்ள கங்கையின் நீரில் அது கலந்தமையால் 'சிவகங்கை' என்ற பெயரைப் பெறும்.

289. அனேக தீர்த்தங்களுள் இத் தீர்த்தம் உத்தமமாகக் காணப்படுவதால் இதனை நூலாய்ந்த அறிஞர்கள், 'உத்தம தீர்த்தம்' என்று பெயர் சொல்வார்கள். பல இதழ்களை விரித்துச் சிவந்த பொற்றாமரை மலர்ந்த தன்மையினால் உலகத்தவர் எவரும் 'பொற்றாமரை' என்று கூறுவர்.

290. தருமம் முதலிய (அறம் பொருள் இன்பம் வீடு என்ற) நான்கையும் நல்குவதால் 'தரும தீர்த்தம்', அருமை மிகுந்த 'அருத்த தீர்த்தம்' பெறுதற்கரிய 'காம தீர்த்தம்' பெருமை பொருந்திய 'முக்தி தீர்த்தம்' என்றெல்லாம் கூறப்படும் சிறப்புடையது. இத்தீர்த்தம், பாவம் என்னும் விறகிற்குத் தீயாக விளங்குவதாகும்.

291. மூன்று நீரையுடைய கடலைக் குடித்து, தோல்வியுற்ற தேவேந்திரனுடைய துன்பத்தை நீக்கியவனாகிய அகத்திய முனிவன், "இந்தத் தலத்தின் பெருமையையும், தெய்வத் தன்மை பொருந்திய சிவந்த பொற்றாமரைப் பொய்கையின் பெருமையையும், ஒருவர் சொல்லக் கேட்டவர்கள் துன்பமில்லாத போகத்தையும், வீட்டையும் அடைவர்" என்று கூறினான்.

மூர்த்தி விசேடப் படலம்

292. ஆலவா யலர்ந்த செம்பொ னம்புயப் பெருந்தீர்த்
தத்தின்
மேலவாம் பெருமை தன்னை விளம்புவா ரெவரே
யங்கண்
நீலமா மிடற்று முக்க ணிராமய னறிவா னந்த
மூலமா விலிங்கமேன்மை முறையினா லறைய
லுற்றாம்.

293. பொன்னெடு மேரு வெள்ளிப் பொருப்புமந்
தரங்கே தாரம்
வன்னெடும் புரிசை சூழ்ந்த வாரண வாசி யாதிப்
பன்னருந் தலங்க டம்மிற் பராபர விலிங்கந்
தோன்றும்
முன்னரிக் கடம்பின் மாடே முளைத்ததிச் சைவ
லிங்கம்.

294. அப்பதி யிலிங்க மெல்லா மருட்குறி யிதனிற் பின்பு
கப்புவிட் டெழுந்த விந்தக் காரணமிரண்டி னாலும்
ஒப்பரி தான ஞான வொளிதிரண் டன்ன விந்தத்
திப்பிய விலிங்க மூல விலிங்க மாய்ச் சிறக்கு
மன்னோ.

295. இந்தமா விலிங்கத் தெண்ணான் கிலக்கண
விச்சை மேனி
அந்தமி லழகன் பாகத் துமையொடு மழகு செய்து
சந்ததம் விளக்கஞ் செய்யுந் தகைமையை நோக்கிச்
சோம
சுந்தர னென்று நாமஞ் சாத்தினார் துறக்க வாணர்.

மூர்த்தி விசேடப் படலம்

292. திருவாலவாயினிடத்தில் மலர்ந்த பொற்றாமரை ஆகிய பெரிய தீர்த்தத்தின், விண்ணுலகத்தினரும் விரும்புகின்ற பெருமையைக் கூறும் திறமை படைத்தவர் யார்? கருமையான கண்டத்தையும், மூன்று கண்களையும் உடைய சோமசுந்தரக் கடவுளாகிய ஞானானந்த வடிவமான பெரிய மூல இலிங்கத்தின் பெருமையை முறைப்படி சொல்லத் தொடங்குவோம்.

மூல லிங்க மூர்த்தி

293. பொன் போன்ற பெரிய மேருமலை, கைலாயம், மந்தரமலை, திருக்கேதாரம், வலிய நெடிய மதில் சூழ்ந்த காசி முதலிய சொல்லுதற்கரிய திருப்பதிகளினிடத்தில் சிவலிங்கம் தோன்றுவதற்கு முன்பே இக்கடம்ப மரத்தின் அடியில் இச்சிவலிங்கம் தோன்றியுள்ளது.

294. அருட் குறியாகிய இச்சிவலிங்கத்தினின்றும், இது தோன்றிய பின், மகாமேரு முதலிய எல்லாத் திருப்பதிகளிடத்தும் உள்ள இலிங்கங்கள் கிளைத்துத் தோன்றின. இந்த இரண்டு காரணங்களாலும் ஒப்பில்லாத ஞானஒளி திரண்டாற் போன்ற இந்த சிறந்த இலிங்கமானது மூலலிங்கம் எனவும் பெயர் பெறும்.

295. இப்பெருமை பொருந்திய இலிங்கத்தில் தமது இச்சை வயத்தாற் கொள்ளப்பட்ட முப்பத்திரண்டு இலக்கணங்களையுடைய ஞான வடிவமாகிய, அழகு பொருந்திய திருமேனியைக் கொண்ட சிவபெருமான், உமாதேவியாரோடு எப்பொழுதும் அருள் பாலிக்கின்ற தன்மையினைக் கண்ட தேவர்கள் "சோம சுந்தரர்' என்று திருநாமமிட்டு அழைத்தனர்.

296 திறப்படு முலக மெங்கும் வியாபியா ய்ச்சிறந்துநிற்கும்
அறப்பெருங் கடவுள் சோமசுந்தர னதனா லன்றே
கறைக்கதிர் வடிவேற் றென்னன் கையிற்பொற்
பிரம்புபட்ட
புறத்தடித் தழும்பு மூன்று புவனமும் பட்டதன்றே.

297. சொற்றவிச் சமட்டி யான சோமசுந் தரனைக் காணப்
பெற்றவர் வியட்டி யான பிறபதி யிலிங்கங் காணல்
உற்றவ ராவ ரென்னென் றுரைக்கின்வே ரூட்டு
நீர்போய்
மற்றைய சினைக ளெல்லாந் தழைவிக்கு
மரத்தின் மாதோ.

298. எத்தலத் தியாவ னெண்ணெண் டிருவிளை யாடல்
செய்தான்
அத்தலத் தவனுக் கொப்பு மதிகமாஞ் சிறப்பும்
பெற்ற
உத்தம னென்று மெந்த வுலகிலு மில்லை யந்த
வித்தக னதிகத் தன்மை யெனைத்தெனின்
விளம்பக் கேண்மின்.

299. பொருப்பினுட் டலைமை யெய்தும் பொன்னெடுங்
குடுமி மேரு
தருக்களிற் றலைமை சாருந் தண்ணறுந் தெய்வ
தாரு
விருப்புறு வேள்வி தம்முண் மேம்படும் புரவி மேதம்
அருட்படு தானந் தம்முள் விழுமிதா மன்ன தானம்.

296. எல்லா உலகங்களிலும் வியாபியாகச் சிறந்த நிலை பெற்ற அடிவடிவான இறைவன் சோமசுந்தரக் கடவுள் ஆவார். அதனாலன்றோ குருதிக் கறையை உடைய ஒலிமிக்க கூர்மையான வேல்படையை உடைய பாண்டிய மன்னன் கையில் உள்ள பொற்பிரம்பினாலே முதுகிற்பட்ட அடித் தழும்பு, மூவுலகங்களிலும் உள்ள சராசரங்களிலும் பட்டது.

(இதில் கூறப்பட்ட புராண வரலாறு இப்புராணத்தில், 61-மண் சுமந்த படலத்தில் காண்க)

297. ஒரு மரத்தின் வேரிலே ஊட்டும் நீர் அதன் கிளை போன்ற பல பகுதிகளும் தழைக்கக் காரணமாகிறது. அது போலச் சமட்டி வடிவாகிய சோம சுந்தரக் கடவுளைத் தரிசிக்கப் பெற்றவர். பிற திருப்பதிகளில் உள்ள வியட்டி வடிவாகிய சிவலிங்க மூர்த்திகளையும் தரிசிக்கப பெற்றவர் ஆவார்.

சோமசுந்தர மூர்த்தியின் உயர்வு

298. திருவாலவாயினில் அறுபத்து நான்கு திருவிளையாடல்களைச் செய்தருளிய மூலலிங்க மூர்த்தியாகிய சோம சுந்தரக் கடவுளுக்கு ஒப்பும் உயர்வும் உடைய கடவுள் எக்காலத்திலும், எவ்வுலகத்திலும் இல்லை. அந்த ஞான வடிவான தன்மை எத்தகையது என்றால் சொல்லக் கேளுங்கள்!

299. மலைகளுள் சிறந்தது நீண்ட சிறகுகளையுடைய பொன்னாலாகிய மேருமலையாகும். குளிர்ந்த கற்பக மரம் மரங்களில் எல்லாம் சிறந்தது. வேள்விகளில் எல்லாம் சிறந்தது பரிவேள்வி (அஸ்வமேத யாகம்) அருளோடு கூடிய தானங்களில் அன்னதானமே சிறந்தது.

300. மனிதரி லுயர்ந்தோ ராதி மறையவர் தேவர் தம்மிற்
பனிதரு திங்கள் வேணிப் பகவனே யுயர்ந்தோன் வேட்டோர்க்
கினிதருள் விரதந் தம்மு ளதிகமா மிந்து வாரம்
புனிதமந் திரங்க டம்முட் போதவைந் தெழுத்து மேலாம்.

301. மின்மைசான் மணியிற் சிந்தா மணிவரம் விழுப்ப நல்குந்
தன்மைசா லறங்க டம்மின் மிகுஞ்சிவ தரும மென்ப
இன்மைசா னெறி நின் றோருக் கேற்குநற் கலங்க டம்மின்
நன்மைசான் றவரே முக்க ணாதனுக் கன்பு பூண்டோர்.

302. தீயவான் சுவை ப்பா லாவிற் றேவரா வதிகம் பல்வே
றாயமா தீர்த்தந் தம்மு ளதிகமாஞ் சுவண கஞ்சம்
மாயமா சறுக்க வெல்லாத் தலத்திலும் வதிந்து மன்னுந்
தூயவா னவரிற் சோம சுந்தரன் சிறந்தோ னாகும்.

303. அந்தமு முதலு மில்லா வகண்டபூ ரணமா யார்க்கும்
பந்தமும் விடு நல்கும் பராபரச் சோதி தானே
வந்தனை புரிவோர்க் கிம்மை மறுமைவீ டளிப்பா னிந்தச்
சுந்தர விலிங்கத் தென்றும் விளங்குவான் சுருதி யேத்த.

304. இத்தகு சயம்பு தன்னை யேனைய சயம்பு வெல்லாம்
நித்தமும் தரிசித் தேகு நிருமல வொளியா மிந்த
உத்தம விலிங்கங் கண்டோ ருரையுணர் வொடுங்க வுள்ளே
சித்தமா சொழியத் தோன்றுஞ் சிவபரஞ் சுடரைக் கண்டோர்.

300. மக்களுள் முதன்மையானவர் மறையோர். தேவர்களில் சிறந்தவர் குளிர்ந்த பிறையணிந்த சிவபெருமானே, விரும்பியவர்களுக்கு அருள் நலத்தைச் செய்கின்ற விரதங்களுள் சோமவார விரதமே சிறந்ததாகும். மந்திரங்களில் ஞானத்திற்குக் காரணமாகிய 'திருவைந் தெழுத்து' மந்திரமே சிறந்ததாகும்.

301. ஒளிமிக்க மணிகளில் சிந்தாமணியே சிறந்தது. உயர்ந்த தன்மையைக் கொடுக்கும் அறங்களில் சிவதருமமே சிறப்புடையது. இல்லறமாகிய சிறந்த நெறியில் நின்றார்க்கு ஏற்புடையது. மூன்று கண்ணையுடைய சிவபெருமானுக்கு அன்பு பூண்டு ஒழுகுதலே ஆகும்.

302. இனிமையான பாலைத் தரும் பசுக்களில் காமதேனு சிறந்தது. பல்வேறு வகையான பெருமைமிக்க தீர்த்தங்களில் பொற்றாமரையே சிறந்தது. பந்தமாகிய குற்றத்தை நீக்குதற் பொருட்டு எல்லாப் பகுதிகளிலும் நிலை பெற்று வீற்றிருக்கும் தூய சிவலிங்க மூர்த்திகளில் சோமசுந்தரக் கடவுளே சிறந்தவராவார்.

303. முடிவும் முதலும் இல்லாமல் அகண்ட நிறைவாகி யாவர்க்கும் பந்தத்தையும் முக்தியையும் கொடுத்தருளும் சிவபெருமான் தன்னை, வணங்குபவர்களுக்கு இம்மை மறுமைப் பயன்களையும் வீடு பேற்றையும் அருளும் பொருட்டு இந்த அழகிய இலிங்கத்தின் கண் மறைகள் எல்லாம் துதிக்க எப்போதும் வீற்றிருப்பார்.

304. இந்தச் சுயம்பு மூர்த்தியை ஏனைய சுயம்பு மூர்த்திகளெல்லாம் நாள்தோறும் வந்து தரிசித்துச் செல்லும். நின்மல ஒளிப் பிழம்பாகிய இந்த உத்தம இலிங்கம் கண்டோர் மனக் குற்றம் ஒழிதலால், வாக்கும் மனமும் ஒடுங்க அகத்தே தோன்றி அருள்கின்ற பரஞ்சோதியாகிய சிவத்தைத் தரிசித்தவராவார்.

305. இத்தனிச் சுடரை நேர்கண் டிறைஞ்சினோர்
பாவ மெல்லாங்
கொத்தழற் பொறிவாய்ப் பட்ட பஞ்சுபோற்
கோப மூள
மெய்த்தவஞ் சிதையு மாபோன் மருந்தினால்
வீயு நோய்போல்
உத்தம குணங்க ளெல்லா முலோபத்தா
லழியு மாபோல்.

306. கலிகடல் இரவி தோன்றக் கருகிரு ளுடையு மாபோல்
ஒலிகெழு பெருங்கா றள்ள வுடைபடு மேகம் போல
வலிகெழு மடங்கல் சீற மாயுமால் யானை போலக்
குலிசவல் லேறு தாக்கப் பொடிபடுங் குன்றம் போல.

307. மருட்சிசெய் காம நோயான் மதிகெடு மாறு போல
அருட்சிவ ஞான நோக்கால் வலிகெடும் அவிச்சை
போலத்
தருக்குறு முவணஞ் சீறத் தழலரா விளியு மாபோற்
செருக்குற வழியுங் கற்ற கல்விபோற் சிதையு
மன்றோ.

308. புலரியிற் சீவன் முத்தி புரேசனைக் காணப் பெற்றால்
அலைகட னான்குட் பட்ட வவனிமா தானஞ் செய்த
பலனுறுங் கதிர்கால் உச்சி வைகலிற் பணியப்
பெற்றாற்
கலைஞர்பா னூற்றுப் பத்துக் கபிலைமா தானப்
பேறோம்.

மூல லிங்கத்தை தரிசித்தவர் பாவம் நீங்குவர்

305. இத்தகைய ஒளிவடிவாகிய இலிங்கத்தை நேரே காணப் பெற்று வணங்கியவர்களுடைய பாவங்கள் அனைத்தும், திரண்ட தீயிடப்பட்ட பஞ்சுபோல் அழியும். அது மட்டுமன்றிக் கோபத்தினால் உண்மைத் தவம் அழியும் தன்மை போலவும், மருந்தினால் நோய் அழிவது போலவும், சிறந்த குணங்கள் அனைத்தும் உலோபத் தன்மையால் அழிவது போலவும் அழியும்.

306. ஒலிக்கின்ற கடலில் சூரியன் தோன்றுதலால் கருமையான இருள் அழிவது போலவும், வலிமை மிக்க கோபம் கொண்ட சிங்கம் தாக்கினால் யானை அழிதல் போலவும், இடியேறு போன்ற வச்சிரப்படை தாக்குதலால் மலைகள் தூளாக்கப்பட்டு அழிதல் போலவும், இச்சிவ லிங்கத்தைக் கண்டவர்களின் பாவங்கள் அழியும்.

307. மயக்கத்தைத் தரும் காம நோயால் அறிவு கெடும் தன்மை போலவும், அருள்மிக்க சிவஞான நோக்கால் அஞ்ஞான இருள்கெட்டு அழிதல் போலவும், செருக்குமிக்க கருடன் கோபத்தால் கொடிய பாம்புகள் அழிதல் போலவும், செருக்கினால் கற்ற கல்வி அழிதல் போலவும், இச்சிவலிங்கத்தைக் கண்டவர்களின் பாவங்கள் அழியும்.

எப்போதும் துதிப்பவர் இறைவனடி சேர்வர்

308. விடியற்காலையில் திருவாலவாயின்கண் எழுந்தருளியுள்ள சோமசுந்தரக் கடவுளைத் தரிசித்தால், அலைகின்ற கடலின் உட்பட்ட வலிய பூமியைத் தானம் கொடுத்தலால் வரும் பெரும்பயன் எய்தும். சூரியன் ஒளியைச் சிந்தும் மாலை நேரத்தில் வணங்கினால், அறிஞர்களுக்கு ஆயிரம் பசுக்களைத் தானம் கொடுத்தால் அடையும் பயன் வந்து எய்தும்.

309. விண்ணிடைப் பரிதிப் புத்தேண் மேலைநீர்
குளிக்கும் எல்லை
அண்ணலை வணங்கிற் கோடி யானினத் தானப்
பேறோம்
பண்ணவர் பரவும் பாதி யிருள்வயிற் பணியப்
பெற்றால்
வண்ணவெம் புரவி மேத மகம்புரி பெரும்பே றெய்தும்

310. இன்னன வதிக மாம்பே றறிந்துபோ யெத்தே வர்க்கும்
முன்னவன் சமட்டி விச்சா புரமுறை முதல்வன்
றன்னைச்
சொன்னவிக் காலந் தோறும் இறைஞ்சியுந்
தொழுதுஞ் சூழ்ந்தும்
பொன்னடிக் கன்ப ராகி வழிபடும் புனித சீலர்.

311. உம்மையில் வினைக ளென்னும் பிணியவிழ்ந்
தொருவித் தூய
செம்மைய ராகி யானாத் திருவொடு செல்வ மோங்க
வெம்மையில் போகமூழ்கி மலவிருள் வீக்க நீந்தி
மைம்மலி கண்டத் தெங்கோன் மலரடி நீழல் வாழ்வார்

வேறு

312. அறவுருவன் ஆலவா யானாமஞ் செவிமடுத்தா
லடைந்த பத்துப்
பிறவிவினை யறுநினைந்தா னூறுபெரும் பவப்பாவப்
பிணிபோங் கூடல்
இறைவனையின் றிறைஞ்சுதுமென் றெழுந்துமனைப்
புறம்போந்தா லீரைஞ்ஞூறு
மறமுறுவெம் பவத்திழைத்த பாதகவல்
வினையனைத்து மாயு மன்னோ.

309. வானில் உள்ள சூரியன் மேலைக் கடலில் மூழ்கும் அந்திப் பொழுதில் சோமசுந்தரக் கடவுளை வணங்கினால், கோடி பசுக்கூட்டங்களை தானம் செய்தவர் அடையும் பயனை அடையலாம். தேவர்கள் வணங்கும் நடு இரவில் வணங்கினால் நல்ல நிறத்தினையுடைய பரிவேள்வி (அஸ்வமேதயாகம்) செய்தலால் வரும் பயன் எய்தும்.

310. இங்ஙனம் நான்கு காலங்களிலும், மிகுந்த பயனை உணர்ந்து சென்று எல்லாத் தேவர்களுக்கும் முன்னவனாகிய, சமிட்டி, விச்சுபுரம் என்னும் மதுரையம்பதியில் எழுந்தருளியுள்ள முதல்வனாகிய சோமசுந்தரப் பெருமானை, நிலத்தில் தாழ்ந்து வணங்கி, கைகூப்பிக் கும்பிட்டு வலம் வந்து அழகிய திருவடிகட்கு அன்புடையவராகி வழிபாடு செய்கின்ற தூய ஒழுக்கத்தையுடையவர் பின்வரும் பயன் எய்துவர்.

311. முற்பிறவிகளில் செய்த வினைகளின் கட்டானது நீங்கப் பெற்ற தூய வாய்மை உடையவராகி நீங்காத அருட் செல்வத்தோடு ஏனைச் செல்வங்களும் பெற்று மிகக் குளிர்ந்த இன்பத்தில் மூழ்கி, ஆணவ இருள் நீங்கப் பெற்று, கருமை மிக்க கண்டத்தையுடைய இறைவனுடைய மலரடி நிழலை அடைந்து வாழ்வார்கள்.

312. தருமத்தின் வடிவான திருவாலவாய்க் கடவுள் பெயரைச் செவியில் கேட்டால் பத்துப் பிறவிகளில் எய்திய வினைகள் கெடும். சிந்தித்தால் நூறு பிறவிகளில் செய்த கொடிய பாவமாகிய நோய் ஒழியும். மதுரையில் எழுந்தருளி இருக்கும் அவ்விறைவனை இன்று வணங்குவோம் என்று நினைத்து வீட்டின் வெளியே வந்தால், ஆயிரம் பிறவிகளில் செய்த கொடிய பாவமாகிய வினைகள் எல்லாம் தாமே அழியும்.

313. புழைக்கைவரை தொலைத்தானை தரிசித்தோர்
ஆயிரமாம் புரவி வேள்வி
தழைத்தபெரும் பயன்பெறுவ ருருத்திரசூத்
தம்மதனாற் றவவா னோர்கள்
தொழற்கரியான் றனைத்துதித்தோர் கணத்துக்கா
யிரராச சூய யாகம்
இழைத்தபெரும் பயன்பெறுவர் சமட்டிவடி
வாகியவவ் விலிங்கந் தன்னை.

314. அங்கையள வாகியநன் னீராட்டிப் பூசித்தோ ரளவி
லேனைத்
துங்கதலத் துறையிலிங்க மூர்த்திகளைச்
சிவாகமநூல் சொன்ன வாற்றான்
மங்கலமா கியமுகம னீரெட்டும் வழுவாது வாசந்
தோய்ந்த
செங்கனக மணிக்கலசப் புனலாட்டி மாபூசை
செய்தோ ராவார்.

315. அவ்வண்ணஞ் சுந்தரனை யைந்தமுத மானுதவு
மைந்து தீந்தேன்
செவ்வண்ணக் கனிசாந்தச் சேறுமுதன் மட்டித்துத்
தேவர் தேறா
மெய்வ்வண்ணங் குளிரவிரைப் புனலாட்டி மாபூசை
விதியாற் செய்தோர்
மைவண்ண வினைநீந்தி யறமுதனாற்
பொருளடைந்து மன்னி வாழ்வார்.

வழிபாட்டால் வரும் பயன்

313. துதிக்கையையுடைய மலைபோன்ற யானையைத் தொலைத்த சோமசுந்தரப் பெருமானைக் காணப் பெற்றவர்கள் தாவுகின்ற பரிவேள்வி (அசுவமேதயாகம்) செய்தவர்கள் எய்துகின்ற புண்ணியத்தை அடைவார்கள். தவம் மிக்க தேவர்களும் தொழுவதற்கு அரியவனை, சமிட்டி வடிவாகிய சிவலிங்க வடிவானவனை, உருத்திர சூத்திர மந்திரத்தால் துதித்து வணங்கியவர்கள் ஆயிரம் ராஜசூய யாகம் செய்தலினால் வரும் பயனை அடைவார்கள்.

314. உள்ளங் கையில் அடங்கும் அளவினையுடைய நல்ல நீரால் திருமஞ்சனம் செய்து பூசித்தவர்கள், மற்றைய பதிகளில் எழுந்தருளியுள்ள சிவலிங்க மூர்த்திகளை, சிவாகமம் கூறிய வழியால் மங்கலமான பதினாறு உபசாரங்களும் தவறாமல் சிவந்த பொன்மணிக் கலசத்தில் நிறைந்த மணமுடைய நீரால் அபிடேகித்து பெரிய பூசை செய்தவர்கள் ஆவார்கள்.

315. ஆகமத்தில் கூறியபடி சோமசுந்தரப் பெருமானை பஞ்சாமிர்தமும், பசுக்களால் அளிக்கப்பட்ட பஞ்ச கவ்வியமும், மதுரமாகிய தேனும், சிவந்த நிறமுடைய பழங்களும், சந்தனக் குழம்பும் ஆகிய இவற்றை அப்பி, தேவர்களும் அறியாத திருமேனி குளிருமாறு, மணமுடைய நீரால் அபிடேகித்துப் பெரிய பூசையை விதிப்படி செய்தவர்கள் கரிய தீவினைக் கடலைக் கடந்து அறம் முதலிய நான்கு பயனையும் பெற்று நிலைபெற்று வாழ்வார்கள்.

316. நல்லவகை முகமனி ரெட்டுள்ளும் வடித்தவிரை
நன்னீர் ஆட்ட
வல்லவர்நூ றாயிரமா மேதமகப் பயன்பெறுவர்
வாச நானம்
எல்லவிர்குங் குமஞ்சாந்த மிவைபலவு மட்டித்தோ
ரெழிலார் தெய்வ
முல்லைநகை யாரோடும் விரைக்கலவை குளித்
தின்ப மூழ்கி வாழ்வார்.

317. நன்மலரோன் றாலவா யான்முடிமேற் சாத்தினா
யைந்து நூறு
பொன்மலர்கொண் டயற்பதியிற் பூசித்த
பயனெய்தும் புனித போகத்
தன்மைதரு சுந்தரர்க்கு தூபமொரு காற்கொடுப்
போர் தமக்குத் தாங்கள்
சொன்மனமெய் யுறச் செய்த குற்றம் ஆயிரம்
பொறுப்பன் சுருதி நாதன்.

318. திருவமுது நிவேதிப்போர் அவிழொன்றற்
குகமொன்றாச் சிவலோ கத்தின்
மருவிநிறை போகமுடன் வைகுவர்தாம் பூலமுக
வாச மீந்தோர்
பொருவரிய கடவுளராண் டொருநூறு கோடிசிவ
புரத்து வாழ்வார்
ஒருபளித விளக்கிடுவோர் வெண்ணிறமுங்
கண்ணுதல முடைய ராவார்.

319. நறுந்திருமஞ் சனமெடுக்கக் குடமாட்ட மணிக்கலச
நல்ல வாசம்
பெறுந்தகைய தூபக்கா றிப்கான் மணியின்ன
பிறவுங் கங்குல்
தெறுங்கதிர்கான் மணிமாட மதுரைநா
யகர்க்கீந்தோர் செய்த பாவம்
வெறுந்துகள்செய் தைம்பொறிக்கும் விருந்தூட்டும்
பெருங்காம வெள்ளத் தாழ்வார்.

316. நல்ல வகையாய் உள்ள பதினாறு உபசாரங்களுள், வடித்த மணமுள்ள நன்னீரால் திருமஞ்சனம் செய்ய வல்லவர்கள் இலட்சம் பரிவேள்வி செய்தலால் வரும் பயனை அடைவார்கள். மணம் வீசும் கத்தூரியும், குங்குமப் பூவும், சந்தனமும் ஆகிய இவற்றைச் சாத்தினோர்கள் அழகு நிறைந்த தெய்வப் பெண்களாகிய முல்லை அரும்பு போலும் பற்களையுடையவர்களோடும், மணம் பொருந்திய கலவையைப் பூசி இன்பக் கடலுள் திளைத்து வாழ்வார்கள்.

317. திருவாலவாயின் திருமுடிமேல் நல்லமலர் ஒன்றைச் சாற்றினால், நூறு பொன்மலர்கள் கொண்டு வேறு பதிகளில் பூசித்தலால் உண்டாகும் பயன் வந்து எய்தும். சிவபோகத் தன்மை தந்தருளும் சோமசுந்தரக் கடவுளுக்கு ஒருமுறை தூபம் கொடுத்தவர்களுக்கு, அவர்களின் மனம், வாக்கு, காயங்கள் பொருந்தச் செய்த ஆயிரம் குற்றங்களை வேதத் தலைவனாகிய சோமசுந்தரக் கடவுள் பொறுத்தருள்வார்.

318. ஆலவாய் பெருமானுக்குத் திருவமுது படைத்தவர்கள் ஒரு பருக்கைக்கு ஒரு யுகமாகச் சிவலோகத்தில் நிறைந்த போகத்துடன் வாழ்வார்கள். தாம்பூலமும் முகவாசமும் கொடுத்தவர்கள். நூறு கோடி தேவ ஆண்டுகள் சிவலோகத்தில் வாழ்வார்கள். கற்பூர விளக்கு இடுபவர்கள் சிவசொரூபம் பெறுவர்.

319. இருளை ஓட்டும் மணிகள் பொருத்தப்பட்ட மாடங்களை உடைய சோமசுந்தரப் பெருமானுக்கு மணம் கலந்த திருமஞ்சனம் எடுத்தற்குக் குடமும், அபிடேகிக்க இரத்தினக் கலசமும், இனிய மணத்தைத் தரும் தூபங்களும், இவை போல்வன பிறவும் கொடுத்தவர்கள், செய்த பாவங்களைப் பொடியாகச் செய்து ஐந்து இந்திரியங்களுக்கும் விருந்துண்பிக்கும் பெரிய இன்ப வெள்ளத்துள் மூழ்குவார்கள்.

320. கயலிசைய கண்ணுமைகோன் திருமுன்னர்ப்
பல்லியமுங் கல்லென் றார்ப்ப
இயலிசைய பாடலினோ டாடலிவை செய்விப்போர்
இறுமாப் பெய்திப்
புயலிசைய வியங்கலிப்ப மூவுலகுந் தொழவரசாய்ப்
பொலங்கொம் பாடுஞ்
செயலிசைய வணங்கனையா ராடரங்கு கண்டின்பச்
செல்வத் தாழ்வார்.

321. ஒருகாலட் டாங்கமுடன் பஞ்சாங்க முடநாத
லொண்செங் கால்வெண்
குருகாலு மலர்த்தடஞ்சூழ் கூடனா யகற்பணிவோர்
கோலொன் றோச்சிப்
பொருகாலின் வருபரித்தேர் மன்னவரா
யாவருந்தம் புடைவந் தெய்தி
இருகாலுந் தலைவருட வெக்காலுந் தமைவணங்க
விருப்பர் அன்றே.

322. இத்தகைய திருவால வாயுடையான் றிருமுன்னர்
இயற்று மோமம்
மெய்த்தவமந் திரந்தான மின்னவணு வளவெனினு
மேரு வாகும்.
உத்தமமா மிவ்விலிங்கப் பெருமையெலாம்
யாவரளந் துரைப்பர் வேத
வித்தகரே சிறிதறிந்த வாறுரைத்தே மினிப்பலகால்
விளம்பு மாறென்.

323. இத்தலத்துக் கொப்பாக வொருதலமும் பொற்கமலம்
என்னு மிந்த
உத்தமமா தீர்த்தத்துக் கொப்பதொரு தீர்த்தமுமெய்
யுணர்வா னந்த
வித்தனைய விலிங்கமிதற் கொப்பாவோ
ரிலிங்கமும்பார் விண்மே லென்னும்
முத்தலத்து மிலையந்த மூர்த்திதிரு நாமங்கண்
மொழியக் கேண்மின்.

320. கடலைப் போன்ற பெரிய கண்களையுடைய அங்கயற் கண்ணம்மையின் தலைவனாகிய சோமசுந்தரப் பெருமானின் சந்நிதானத்தில் பல வாத்தியங்கள் ஒலிக்க, பாடல்களும் ஆடலும் செய்விப்பவர்கள் இறுமாந்து, மேகம் போன்று முழங்க, மூன்று உலகங்களும் விளங்குமாறு அரசராகிப் பொற்கொம்பனைய தேவமகளிர் போன்ற பெண்கள் மேடையில் நடித்தலைக்கண்டு இன்பம் தரும் செல்வக் கடலுள் மூழ்குவார்கள்.

321. சிவந்த கால்களையுடைய அன்னப் பறவைகள் ஒலிக்கும் தாமரை மலர்களுடைய தடாகங்களால் சூழப்பட்ட மதுரை நாயகனை நிலம் தோயப் பணிவோர் ஒப்பற்ற செங்கோலைச் செலுத்தி காற்றைப் போல் விரைந்து ஓடும் குதிரைகள் பூட்டிய தேரையுடைய அரசராகி எல்லா மன்னர்களும் வந்து அடிபணிந்து நிற்க எப்போதும் காட்சியளிப்பர்.

322. இத்தகைய திருவாலவாய்க் கடவுளின் திருமுன்னர் செய்கின்ற ஓமம், மெய்த்தவம், மந்திரம். தானம் இவை போன்ற பிறவும் அணுவளவு சிறியதாய் இருந்தாலும் மகா மேருவைப் போன்று அளவில் பெரியதாம். இத்தகைய உத்தமமான இலிங்க மூர்த்தியின் பெருமைகளை எல்லாம் அளவிட்டுக் கூறுபவர் யார்? வேதங்களில் வல்ல முனிவர்களே! சிறிது அறிந்தபடி கூறினோம். இனிப் பலமுறை கூறத் தேவையில்லை.

323. இத்திருத் தலத்திற்கு ஒப்பாக ஒரு பதியும், பொற்றாமரை என்று சொல்லப்படும் தீர்த்தத்திற்கு ஒப்பாக ஒரு தீர்த்தமும், உண்மை அறிவு இன்பங்களின் மூலம் உள்ள இந்த இலிங்கத்திற்கு ஒப்பாக வேறொரு இலிங்கமும் இம்மூவுலகத்திலும் இல்லை. அச்சோமசுந்தரர் திருநாமங்களைக் கேளுங்கள்.

324. கருப்பூர சுந்தரன்பூங் கடம்பவன சுந்தரனுட்
கரவாத் தொண்டர்
விருப்பூருங் கலியாண சுந்தரனல் லறவடிவாய்
விளங்கு மேற்றுப்
பொருப்பூரும் அபிராம சுந்தரன்றேன் புடைகவிழப்
பொன்னிற் பூத்த
மருப்பூசு சண்பகசுந் தரன்மகுட சுந்தரன்றான்
வாழி மன்னோ.

325. மான்மதசுந் தரன்கொடிய பழியஞ்சு சுந்தரனோர்
மருங்கின் ஞானத்
தேன்மருவி யுறைசோம சுந்தரன்றேன் செவ்வழியாழ்
செய்யப் பூத்த
கான்மருவு தடம்பொழில்சூழ் ஆலவாய்ச்
சுந்தரன்மீன் கணங்கள் சூழப்
பான்மதிசூழ் நான்மாடக் கூடனா யகன்மதுரா
பதிக்கு வேந்தன்

326. சிரநாலோன் பரவரிய சமட்டிவிச்சா புரநாதன்
சீவன் முத்தி
புரநாதன் பூவுலக சிவலோகா திபன்கன்னி
புரேசன் யார்க்கும்
வரநாளுந் தருமூல விலிங்கமென விவைமுதலா
மாடக் கூடல்
அரனாம மின்னமளப் பிலவாகும் உலகுய்ய
வவ்வி லிங்கம்.

327. பாதாள மேழுருவ முளைத்தெழுந்த தவ்விலிங்கப்
படிவந் தன்னுள்
அதார மாகவமர்ந் தறுபத்து நாலுவிளை யாடல்
செய்த
போதானந் தன்பெருமை நங்குரவன் மொழிப்படியே
புகன்றோ மென்றான்
வேதாதி கலைதெரிந்த மலயமுனி கேட்டறவோர்
வினாதல் செய்வார்.

வேறு பெயர்கள்

324. கற்பூர சுந்தரன், பூங்கடம்பவன சுந்தரன், வஞ்சனையற்ற அடியார்களின் அன்புமிக்க கலியாண சுந்தரன், நல்ல தருமவடிவாகி விளங்குகின்ற இடமாகிய மலையை நடத்தி அருளும் அபிராம சுந்தரன், தேன் சொரியும் பொன்மலர் போல் மணம் நிறைந்த சண்முக சுந்தரன், முகுட சுந்தரன் என்று இறைவனின் திருப்பெயர்கள் விளங்கும்.

325. மான்மத சுந்தரன், கொடிய பழி அஞ்சிய சுந்தரன் ஒரு பாகத்தில் உமையம்மை விரும்பி உறையும் சோமசுந்தரன், வண்டுகள் செவ்வழிப் பண்பாட மலர்ந்த மணம் மிக்க பெரிய சோலைகள் சூழ்ந்த ஆலவாய்ச் சுந்தரன், நட்சத்திரங்கள் சூடி வெள்ளிய சந்திரன் வலம் வருகின்ற நான்மாடக் கூடல் நாயகன், மதுராபதி வேந்தன், என்றெல்லாம் மேலும் அப்பெருமானின் திருநாமங்கள் விளங்கும்.

326. நான்கு தலைகளையுடைய பிரமன் வணங்கும் சமட்டிவிச்சாபுர நாதன், சீவன் முக்திபுரநாதன், பூவுலக சிவலோகாதிபன், கன்னி புரேசன், எவர்க்கும் எந்நாளும் வரம் தருகின்ற மூலலிங்கம், இவை முதலாக நான்மாடக் கூடலில் எழுந்தருளி இருக்கும் சிவபெருமானின் திருப் பெயர்கள் இன்னும் அளவற்றன ஆகும். இந்த இலிங்கமானது,

327. பாதாளம் முதலாய் உள்ள ஏழுலகங்களிலும் ஊடுருவ முளைத்து மேலெழுந்தது. அந்த இலிங்கத் திருமேனியுள் எல்லாவற்றிற்கும் ஆதாரமாக அமர்ந்து அறுபத்து நான்கு திருவிளையாடல்களைச் செய்தருளிய ஞானானந்தனான இறைவனது பெருமையை நம் குரவனாகிய முருகக் கடவுள் அருளிச் செய்ததின்படியே கூறினோம்." வேதம் முதலிய கலைகளை உணர்ந்த அகத்திய முனிவன் இவ்வாறு கூறக் கேட்கவும், மற்ற முனிவர்கள் மேலும் சிலவற்றை அவரிடம் கேட்டனர்.

328. அருட்கடலே யிறைவிளையாட் டறுபத்து
நான்கென்றா யவையா னந்தப்
பொருட்கடவுள் எக்காலத் தியாவர்பொருட்
டாடினனெம் போதந் தேறித்
தெருட்படர வரன்முறையாற் செப்புகெனக்
கரங்குவித்தார் தென்பால் வெற்பில்
இருப்பவனும் வினாயபடிக் கிறை நிரம்பத்
தொகுத்துவிரித் தியம்பு கின்றான்.

மூர்த்தி விசேடப் படலம் முற்றிற்று

பதிகப் படலம்

329. வானவர்கோன் பழிதொலைத்த விளையாட்டுங்
கரிசாப மாய்த்த வாறும்
மீனவர்கோன் காடெறிந்து புரங்கண்ட
பெருஞ்சிறப்பு மீனநோக்கி
ஆனதடா தகையழல்வா யவதரித்துப் பாராண்ட
வருளும் ஈசன்
தானவளை மணஞ்செய்து முடிதரித்து மண்காத்த
தகைமைப் பாடும்.

330. புலிமுனியும் பணிமுனியுந் தொழவெள்ளி
மன்றுணடம் புரிந்த வாறும்
வலிகெழுதோட் குண்டகட்டுக் குறட்கன்னக்
குன்றளித்த வகையும் பின்னும்
நலிபசிநோய் கெடவன்னக் குழியசைத்துக்
கொடுத்துநீர் நசைக்கு வைகை
அலைபுனல்கூ யருத்தியதும் பொன்மாலைக்
கெழுகடலும் அழைத்த வாறும்.

328. "கருணைக் கடலே! இறைவனின் திருவிளையாடல்கள் அறுபத்து நான்கு என்று கூறியருளினாய்! ஆனந்தப் பொருளாகிய இறைவன், அவ்விளையாடல்களை எக்காலத்து, யாவர் பொருட்டு ஆடினான்? எங்கள் கலங்கிய அறிவு தூய்மையடைய முறைப்படி அதனைக் கூறி அருளுக!" என்று முனிவர்கள் கேட்டுக் கைகூப்பி வணங்கினார்கள். பொதிய மலையில் இருக்கும் குரு முனியும் அவர்கள் கேட்டபடி தொகுத்தும், விரித்தும் சிறந்த முறையில் சொல்லத் தொடங்கினர்.

பதிகப் படலம்

329. தேவேந்திரனது பழியைத் தீர்த்த விளையாடலும், வெள்ளை யானையின் சாபம் தீர்த்த வரலாறும், பாண்டியனது காட்டை, அழித்துத் திருநகரம் உண்டாக்கிய சிறப்பும், மீன் போன்ற கண்ணையுடைய தடாதகைப் பிராட்டியார் வேள்வித் தீயில் அவதாரம் செய்து பூமியை ஆட்சி செய்த கருணையும், அப்பிராட்டியைத் திருமணம் செய்து கொண்டு முடி சூடி பூமியை ஆண்ட தகுதியும்,

330. வியாக்கிரபாதரும், பதஞ்சலியும் வணங்க வெள்ளியம்பலத்தில் நடம்புரிந்த தன்மையும், வலிமை மிக்க தோளையுடைய குண்டோதரனுக்கு அன்ன மலையை இட்ட வரலாறும், வருத்துகின்ற பசியானது மறைய அக்குண்டோதரனுக்கு அன்னக் குழியை வருவித்து அளித்து வையை நதியைக் கூப்பிட்டு அருந்தச் செய்ததும், காஞ்சன மாலைக்கு ஏழு கடலையும் அழைத்துக் கொடுத்த தன்மையும்,

331. அந்தரர்கோ னாதனத்தில் உறைமலயத் துவசனை
மீண்டழைத்த வாறுஞ்
சுந்தரவுக் கிரகுமர னவதரித்த வாறும்வளை
சுடர்வேல் செண்டு
தந்தையிடத் தவன்பெற்ற வாறுமவ னவ்வடிமேல்
சலதி வீறு
சிந்தவிடுத் ததுமகவான் முடியைவளை
யெறிந்திறைவன் சிதைத்த வாறும்.

332. பொன்னசலந் தனைச்செண்டாற் புடைத்துநிதி
யெடுத்ததுவும் புனிதர்க்கு ஈசன்
பன்னரிய மறைப்பொருளைப் பகர்ந்ததுவு
மாணிக்கம் பகர்ந்த வாறுந்
தொன்னகர்மே னீர்க்கிழவன் வாவிடுத்த
கடல்சுவறத் தொலைத்த வாறும்
அன்னதனித் தொன்மதுரை நான்மாடக் கூடனக
ரான வாறும்.

333. வட்டங்கொள் சடையுடைய சித்தர்விளை
யாடியதோர் வனப்புங் கையிற்
கட்டங்கந் தரித்தபிரான் கல்லானை கரும்பருந்தக்
காட்டு மாறும்
உட்டங்கு வஞ்சனையால் அமணர்விடு வாரணத்தை
யொழித்த வாறும்
இட்டங்கொள் கௌரிமுனம் விருத்தனிளை
யோன்குழவி யான வாறும்.

334. செய்யதாண் மாறிநட மாடியதும் பழியஞ்சு
திறனுந் தாயை
மையலாற் புணர்ந்தமகன் பாதகத்தை மாற்றியது
மதியா தாசான்
தையலா டணைவிரும்பு மாணவனை வாளமரிற்
றடிந்த வாறும்
பையரா வெய்ததுவும் படிற்றமணர் விடுத்தபசுப்
படுத்த வாறும்.

331. தேவேந்திரன் ஆசனத்தில் இருந்த மலயத்துவசனை மீண்டும் பூவுலகிற்கு அழைத்த தன்மையும், அழகிய உக்கிர குமார பாண்டியன் அவதரித்த தன்மையும், அப்பாண்டியன் தந்தையிடத்து வேலும் செண்டும் பெற்றுக் கொண்ட தன்மையும், அப்பாண்டியன் தன் வேற்படையை கடலின் செருக்கு அழியும்படி விட்ட தன்மையும், அவனே திகிரிப் படையை வீசி இந்திரன் முடியை அழித்த தன்மையும்,

332. பொன் மலையாகிய மேருமலையைச் செண்டாலடித்துப் பொருளை எடுத்ததும், முனிவர்களுக்குச் சிவபெருமான் அரிய மறைப் பொருளைப் பகர்ந்ததுவும், மாணிக்கம் விற்ற தன்மையும், பழைய மதுரையின் மேல் வருணன் வரச் செய்த கடலை அழித்த தன்மையும், அவ்வொப்பற்ற மதுரையானது நான்மாடக்கூடல் ஆன தன்மையும்,

333. சுருட்டிக் கட்டிய சடையை உடைய சித்தர் விளையாடிய அழகும், கையில் மழுவேந்திய அச்சித்தர் கல்லானைக்குக் கரும்பு தின்னக் காட்டிய தன்மையும், சமணர்கள் யானையை எய்த தன்மையும், அன்புடைய கௌரியின் முன் விருத்தனும், குமாரனும், பாலனும் ஆகிய தன்மையும்.

334. சிவந்த திருவடி மாறி ஆடியதும், பழியஞ்சிய வகையும், தாயைக் காம மயக்கத்தால் சேர்ந்த மகனுடைய மாபாதகத்தைத் தீர்த்ததும், ஆசிரியரது மனைவியை ஆராயாது விரும்பிய மாணவனை வாட்போரில் வெட்டிய தன்மையும், சமணர்களின் நாகத்தை எய்ததும், மாயப் பசுவை வதைத்த தன்மையும்,

335. அறவேற்றுப் பரியுகைத்து மெய்க்காட்டுக்
கொடுத்தவிளை யாட்டுங் காட்டுச்
சுறவேற்றுக் கொடியரசன் றனக்குலவாக்
கிழிகொடுத்த தொடர்பு நாய்கர்
நறவேற்ற மலர்க்குழலார் மனங்கவர்ந்து
வளைபகர்ந்த நலனு மாறு
மறவேற்கண் மாதரார்க்கு அட்டமா சித்திபெற
வகுத்த வாறும்.

336. சென்னிபொருட் டெயில்வாயி றிறந்தடைத்து
விடைபொறித்த செயலுஞ் சென்னி
மன்னிகலிட் டமர்விளைப்ப மீனவற்கு நீர்ப்பந்தர்
வைத்த வாறும்
பொன்னனையாள் பொருட்டிரத வாதவினை
முடித்ததுவும் புகார்க்கு வேந்தன்
தன்னையகன் குழிவீட்டித் தென்னவற்கு மறவாகை
தந்த வாறும்.

337. மனக்கவலை கெடவுலவாக் கோட்டையடி
யாற்களித்த வகைய மாமன்
எனக்கருணை வடிவாகி வழக்குரைத்துப் பொருள்
வணிகற் கீந்த வாறுஞ்
சினக்கதிர்வேல் வரகுணற்குச் சிவலோகங்
காட்டியதுந் திவவுக் கோலான்
தனக்கடிமை யெனவிறகு திருமுடிமேற் சுமந்துபகை
தணித்த வாறும்.

338. அப்பாணற் கிருநிதியஞ் சேரனிடைத் திருமுகமீந்
தளித்த வாறும்
அப்பாணன் மனைவியிசைப் பகைவெல்ல
வண்ணலவை யடைந்த வாறும்
அப்பாண னாளென்றோன் முலையருத்திப்
பன்றியுயி ரளித்த வாறும்.

335. தரும விடையாகிய புரவியைச் செலுத்தி, மெய்காட்டிட்ட திருவிளையாடலும், மீன் கொடியுடைய பாண்டியனுக்கு உலவாக்கிழி அருளிய தொடர்ச்சியும், வணிகருடைய மகளிரின் மனத்தைக் கவர்ந்து வளையல் விற்ற தன்மையும், ஆறு பெண்களுக்கு அட்டமாசித்தி உபதேசித்தருளிய தன்மையும்,

336. சோழன் பொருட்டு மதில் வாயிலைத் திறந்து திருக்காப்பிட்டு விடை யிலச்சினை வைத்த செய்கையும், சோழன் படை கொண்டு போர் விளைப்பப் பாண்டியற்குத் தண்ணீர்ப் பந்தல் வைத்த தன்மையும், திருப்பூவணத்தில் இருந்த பொன்னனையாளுக்கு இரசவாத வினையை முடித்ததுவும், சோழனை அகன்ற குழியில் விழ வைத்து பாண்டியனுக்கு வெற்றி தேடித் தந்த தன்மையும்,

337. தொண்டரின் மனக்கவலை நீக்குமாறு உலவாக் கோட்டை அளித்தருளிய தன்மையும், மாமன் போல அருள் வடிவு கொண்டு வழக்குக் கூறி வணிகனுக்குப் பொருள் கொடுத்த தன்மையும், வரகுண பாண்டியனுக்குச் சிவலோகம் காட்டியதும், யாழ் வல்ல பாண பத்திரனுக்கு அடிமை என்று கூறி திருமுடியின் கண் விறகைச் சுமந்து பகையை வென்ற தன்மையும்.

338. அப்பாணபத்திரனுக்கு, சேரப் பெருமானிடத்து திருமுகம் கொடுத்து பெரிய பொருளைக் கொடுப்பித்த தன்மையும், அவன் பாடுவதற்கு நள்ளிரவில் பொற்பலகை அருளிய தன்மையும், அப்பாணன் மனைவி இசைக்குப் பகையாய் வந்தவளை வெல்ல இறைவன் பாண்டியன் சபைக்குப் போன தன்மையும், அப்பாணபத்திரன் அடிமை நான் என்று கூறிய சோமசுந்தரக் கடவுள் முலை கொடுத்துப் பன்றிக் குட்டிகளின் உயிரைக் காத்த தன்மையும்,

339. வயவேனக் குருளைகளை மந்திரிகள் ஆக்கியதும்
வலியுண் டாகக்
கயவாய்க்குக் குருமொழிவைத் தருளியது
நாரைக்குக் கருணை நாட்டந்
தயவால்வைத் தருண்முத்தி நல்கியதுங் கூடனகர்
தன்னைச் சித்தர்
புயநாகம் போய்வளைந்து திருவால வாயாக்கிப்
போந்த வாறும்.

340. சுந்தரனென் றெழுதியகூ ரம்பெய்து செம்பியன்
போர் தொலைத்த வாறுஞ்
செந்தமிழோர்க் கியற்பலகை யருளியதுந் தருமிக்குச்
செம்பொன் பாடித்
தந்ததுவு மாறுபடு கீரற்குக் கரையேற்றந் தந்த வாறும்
விந்தமடக் கியமுனியாற் கீரனியற் றமிழ்தெளிய
விடுத்த வாறும்.

341. ஊமனாற் புலவரிக லகற்றியதும் இடைக்காட
னுடன்போய்க் கொன்றைத்
தாமனார் வடவால வாயமர்ந்த பரிசும்வலை சலதி
வீசிப்
பூமனாய் குழலியைவேட் டருளியதும் வாதவூர்ப்
புனிதர்க் கேறத்
தேமனாண் மலரடிகண் முடிசூட்டி யுபதேசஞ்
செய்த வாறும்.

342. நரிகள்பரி யாக்கியதும் பரிகணரி யாக்கியது நாகம்
பூண்டோன்
அரியதிரு மேனியின்மேல் அடிசுமந்து மண்சுமந்த
வருளுந் தென்னன்
எரியடுவெஞ் சுரந்தணித்த வாறுமம ணரைக்கழுவி
லிட்ட வாறுங்
கரியதென வன்னிகிண றிலிங்கங்கூய் வணிகமகட்
காத்த வாறும்.

339. அப்பன்றிக் குட்டிகளை மந்திரிகள் ஆக்கியதும், கரிக்குருவிக்கு ஏனைய பறவைகளைவிட அதிக வலிமை உண்டாகும்படி உபதேசித்து அருளியதும், நாரைக்கு அருட் பார்வையைக் கருணையோடு வைத்தருளி வீடு பேற்றை அளித்ததுவும், சித்தரின் கையில் உள்ள நாகமானது நான்மாடக்கூடல் நகரை வளைத்துத் திருவாலவாய் என்னும் பெயருடைய நகரமாக ஆக்கி வந்த தன்மையும்,

340. சுந்தரன் என்ற பெயர் எழுதப்பட்ட கூரிய அம்பினை விடுத்துச் சோழன் செய்த போரினைஅழித்த தன்மையும், சங்கப் புலவர்க்குச் சங்கப் பலகை அருளியதும், தருமிக்கு பாடிக்கொடுத்துப் பொற்கிழி அளித்த தன்மையும், மாற்றம் கொண்ட நக்கீரனுக்கு கரையேறுதலை அளித்த தன்மையும், அகத்திய முனிவனால் கீரனுக்கு இயற்றமிழ் அறிந்து கொள்ளும்படி ஏவிய தன்மையும்,

341. ஊமையாகிய உருத்திர சன்மரால் சங்கப் புலவர்கள் மாறுபாட்டைப் போக்கியருளியதும், சோமசுந்தரப் பெருமான் இடைக்காடனோடு சென்று வடமதுரையில் தங்கிய தன்மையும், கடலில் வலையை வீசி உமையம்மையை மணந்தருளிய தன்மையும், திருவாதவூரருக்கு வீடுபேற்றை அடையத் திருமலரைச் சூட்டிய தன்மையும்,

342. நரிகளைப் பரிகள் ஆக்கியதும், பரிகளை நரிகள் ஆக்கியதும், சோமசுந்தரப் பெருமான் மேல் பிரம்படிபட மண் சுமந்து அருளியதும், பாண்டியனுடைய கொடிய வெப்பு நோயைத் தணித்தருளிய தன்மையும், சமணர்களைக் கழுவேற்றிய தன்மையும், சான்றாக வன்னி, கிணறு, இலிங்கம் ஆகிய மூன்றையும் அழைத்து வணிகப் பெண்ணைக் காத்தருளிய தன்மையும்,

343. எனத்தொகையால் அறுபத்து நான்கிவற்றை
நிறுத்தமுறை யீறிலாத
வினைத்தொகையா றகன்றிரெக் காலமெவர்
பொருட்டெனநீர் வினாய வாற்றான்
மனத்தளவி லன்புமடை யுடைந்தொழுகத் திருவால
வாயான் றாளை
நினைத்தளவி லானந்தம் பெருகவிரித் துரைப்பலென
நெரியாற் கூறும்.

பதிகப் படலம் முற்றிற்று

1. இந்திரன் பழி தீர்த்த படலம்

344. மின்பயில் குலிசப் புத்தேள் விருத்திரா சுரனைக்
கொன்ற
வன்பழி விடாது பற்றக் கடம்பமா வனத்தில் எய்தி
என்பர வாரம் பூண்ட விறைவனை யருச்சித் தேத்திப்
பின்பது கழிந்து பெற்ற பேற்றினை யெடுத்துச்
சொல்வாம்.

345. முன்னதா முகத்தில் வண்டு மூசுமந் தார நீழற்
பொன்னவிர் சுணங்குண் கொங்கைப் புலோமசை
மணாளன் பொற்பூண்
மின்னவிர்ந் திமைப்பச் சிங்கஞ் சுமந்தமெல்
லணைமேன் மேவி
அன்னமென் னடையா ராடு மாடன்மேல் ஆர்வம்
வைத்தான்.

343. என இவை தொகையால் அறுபத்து நான்குத் திருவிளையாடல்கள் ஆகும். முடிவில்லாத வினைத் தொகுதியின் நெறியினைக் கடந்த முனிவர்களே! எக்காலம், எவர் பொருட்டு? என்று நீர் கேட்டபடியால் இவைகளை இங்கு வைத்த முறைப்படியே விரித்துக் கூறுவேன் என்று மனதில் அளவற்ற அன்புடைய திருவாலவாய் பெருமானை நினைந்த, இன்பமிக்க தன்மையனான அகத்திய முனிவன் கூறுவான்.

பதிகப் படலம் முற்றிற்று.

1. இந்திரன் பழி தீர்த்த படலம்

344. ஒளிமிக்க வச்சிரப் படையை உடைய இந்திரன், விருத்திரன் என்னும் அசுரனைக் கொன்றதால் உண்டாகிய வலிய பழியானது விடாது பற்ற, அது நீங்க வேண்டி பெரிய கடம்பவனத்தில், எலும்பும், பாம்பும் மாலையாக அணிந்த சிவபெருமானைத் துதித்து, பின் அப் பழியானது நீங்கப் பெற்ற பயனை எடுத்துச் சொல்வோம்.

இந்திரன் இழைத்த குற்றம்

345. முன்னர் கிரேதயுகத்தில், வண்டுகள் ஒலிக்கும் மந்தார மரத்தின் நிழலில் அரியணைமேல், பொன்பிதிர்கள் போன்ற தேமலையுடைய தனங்களையுடைய இந்திராணியின் தலைவனாகிய இந்திரன் பொன்னணிகள் மின்ன வீற்றிருந்தான். அன்னம் போன்ற நடையையுடைய பெண்கள் அங்கு ஆடுகின்ற ஆட்டத்தின் மேல் விருப்பம் உடையவனானான்.

346. மூவகை மலரும் பூத்து வண்டுளே முழங்கத் தெய்வப்
பூவலர் கொடிபேர்ந் தன்ன பொன்னனார் கூத்து மன்னார்
நாவலர் அமுத மன்ன பாடலு நாக நாட்டுக்
காவலன் கண்டு கேட்டுக் களிமதுக் கடலி லாழ்ந்தான்.

347. பையரா வணிந்த வேணிப் பகவனே யனைய தங்கள்
ஐயனாம் வியாழப் புத்தேள் ஆயிடை யடைந்தா னாகச்
செய்யதாள் வழிபா டின்றித் தேவர்கோ னிருந்தா னந்தோ
தையலார் மயலிற் பட்டோர் தமக்கொரு மதியுண் டாமோ.

348. ஒல்லெனக் குரவ னேக வும்பர்கோன் றிருவி னாக்கம்
புல்லெனச் சிறிது குன்றப் புரந்தர னறிந்திக் கேடு
நல்லதொல் குரவற் பேணா நவையினால் விளைந்த தென்னா
அல்லலுற் றறிவின் றன்னைத் தேடுவா னாயி னானே.

349. அங்கவ னிருக்கை புக்கான் கண்டில னவித்த பாசப்
புங்கவர் உலகு மேனோர் பதவியும் புவன மூன்றில்
எங்கணுந் துருவிக் காணா னெங்குற்றான் குரவ னென்னுஞ்
சங்கைகொண் மனத்த னாகிச் சதுர்முக னிருக்கை சார்ந்தான்.

346. தெய்வத்தன்மை பொருந்திய தாமரை மலரானது, வண்டுகள் ஒலிக்கும் ஏனைய கோட்டுப்பூ, நிலப்பூ, கொடிப்பூ என்ற மூவகை மலர்களையும் மலர்வித்து கொடிகள் ஆடினாற்போன்று ஆடும் திருமகளைப் போன்ற தேவமகளிரின் ஆட்டத்தையும், அம்மகளிரின் நாவிலிருந்து தோன்றும் அமுதம் போன்ற பாடலையும், இந்திரன் கண்டும் கேட்டும் களிப்பாகிய மதுக்கடலில் மூழ்கி இருந்தான்.

347. அப்போது, படத்தையுடைய பாம்பையுடைய சடையனான சிவபெருமானை ஒத்த, தங்கள் குருவான ‘வியாழ பகவான்’ அங்கு வரவும், அவனுடைய சிவந்த பாதங்களில் வழிபாடு செய்யாமல் தேவேந்திரன் வாளா இருந்தான். ‘ஐயோ! பெண்களின் மயக்கத்தில் வீழ்ந்தவர்களுக்கும் நல்லறிவு உண்டாகுமோ?

நான்முகன் சூழ்ச்சி

348. அதனை உணர்ந்து குருவாகிய வியாழ பகவான் அவ்விடம் விட்டு விரைந்து சென்று விட்டார். உடனே தேவேந்திரனுடைய செல்வம் பொலிவிழந்து சிறிது சிறிதாகக் குறைய ஆரம்பித்தது. இந்திரன் அதனை உணர்ந்து, “தொன்று தொட்ட என் குருவை நான் வழிபாடு செய்யாததனால் இந்தக் கேடு வந்தது’ என்று தெளிந்து துன்புற்றுத் தன் குரவனைத் தேடிச் சென்றான்.

349. அக்குருவின் இருப்பிடம் சென்று அங்குக் காணாதவனாகி, பாசம் நீங்கிய முனிவர்கள் உலகத்திலும், மற்றையோர் இருப்பிடங்களிலும், மூன்று உலகங்களிலும் எங்குத் தேடியும் காணாதவனாய்த் திகைத்தான். “ஆசிரியர் எங்குச் சென்றாரோ?” என்ற பயம் உள்ளத்தில் எழப் பிரம தேவனின் இருப்பிடமாகிய சத்தியலோகம் சென்றடைந்தான்.

350. துருவின னங்குங் காணான் றிசைமுகற் றெழுது தாழ்ந்து
பரவிமுன் பட்ட வெல்லாம் பகர்ந்தனன் பகரக் கேட்டுக்
குரவனை யிகழ்ந்த பாவங் கொழுந்துபட் டருந்துஞ் செவ்வி
வருவது நோக்கிச் சூழ்ந்து மலர்மகன இதனைச் சொன்னான்.

351. அனையதொல் குரவற் காணும் அளவுநீ துவட்டா வின்ற
தனையன்முச் சென்னி யுள்ளான் றானவர் குலத்தில் வந்தும்
வினையினா லறிவான் மேலான் விச்சுவ வுருவ னென்னும்
இனையனைக் குருவாக் கோடி யென்னலு மதற்கு நேர்ந்தான்.

352. அழலவிர்ந் தனைய செங்கேழ் அடுக்கிதழ் முளரி வாழ்க்கைத்
தொழுதகு செம்ம றன்னைத் தொழுதுமீண் டகன்று நீங்கா
விழைதகு காதல் கூர விச்சுவ வுருவன் றன்னை
வழிபடு குருவாக் கொண்டான் மலர்மகன் சூழ்ச்சி தேறான்.

353. கைதவக் குரவன் மாயங் கருதிலன் வேள்வி யொன்று
செய்திட லடிக ளென்னத் தேவர்கட் காக்கங் கூறி
வெய்தழல் வளர்ப்பான் உள்ளம் வேறுபட் டவுணர்க் கெல்லாம்
உய்திற நினைந்து வேட்டான் றனக்குமே லுறுவ தோரான்.

350. அங்குத் தேடியும் காணாது, நான்முகனை விழுந்து வணங்கி, முன்னர் நிகழ்ந்த எல்லாவற்றையும் அவனிடம் கூறினான். அதனைக் கேட்ட பிரமதேவன் ஆசிரியனை மதியாததால் உண்டான பாவமானது கொழுந்துவிட்டு ஓங்கி அவனை விழுங்கும் காலம் வருதலை அறிந்து தேவேந்திரனிடம் சொல்லத் தொடங்கினான்.

351. "அந்தப் பழைய ஆசிரியனைக் காணும் வரையிலும் நீ "துவட்டா" என்பவன் பெற்ற புதல்வனும், மூன்று தலைகளையுடையவனும், அசுரர் குலத்தில் தோன்றியும் தொழிலாலும் அறிவாலும் சிறந்தவனாகிய 'விச்சுவ உருவன்' என்னும் பெயருடையவனைக் குருவாகக் கொள்வாயாக" என்று கூறினான். இந்திரன் அதற்கு உடன்பட்டான்.

352. தீயானது ஒளி்விடுதல் போன்று செந்நிறமான இதழ்களையுடைய தாமரை மலரில் வாழ்தலையுடைய வணங்கத்தக்க பெருமையுடைய பிரமதேவனை மீண்டும் வணங்கினான். அப்பிரமனின் சூழ்ச்சியை அறியாதவனாகிய இந்திரன், மிக்க அன்புடன் விச்சுவ உருவனை வழிபடும் குருவாகக் கொண்டான்.

இந்திரனை பிரமகத்தி தோஷம் பற்றுதல்

353. "தேவர்களுக்கு நன்மை உண்டாகும் பொருட்டு அடிகளே ஒரு வேள்வி செய்ய வேண்டும்" என்று வஞ்சனையையே உடைய குருவினது தன்மையை உணராத இந்திரன் வேண்டினான். "தேவர்களுக்கு நலன் உண்டாகுக" என்று வாயால் மட்டும் கூறி வெம்மையாகிய தீயை வளர்க்கின்றவன், தனக்குப் பின்னால் விளையப் போவதை உணராதவனாய் மனதால் 'அசுரர்களுக்கெல்லாம் ஆக்கம் உண்டாக வேண்டும்' என்ற கருத்தில் ஒரு வேள்வியைச் செய்தான்.

354. வாக்கினான் மனத்தால் வேறாய் மகஞ்செய்வான் செயலை யாக்கை
நோக்கினா னோதி தன்னா னோக்கினான் குலிச வேலாற்
றாக்கினான் றலைகண் மூன்றுந் தனித்தனி பறவை யாகப்
போக்கினான் அலகை வாயிற் புகட்டினான் புலவுச் சோரி.

355. தெற்றெனப் பிரம பாவஞ் சீறிவந் தமரர் வேந்தைப்
பற்றலு மதனைத் தீர்ப்பான் பண்ணவர் மரமேன் மண்மேற்
பொற்றொடி யார்மே னீர்மேல் வேண்டினர் புகுத்த லோடும்
மற்றவ ரிஃதியாந் தீர்க்கும் வண்ணம்யா தென்ன விண்ணோர்.

356. அப்பிடை நுரையாய் மண்ணில் அருவருப் புவரா யம்பொற்
செப்பிளங் கொங்கை யார்பாற் றீண்டுதற் கரிய பூப்பாய்க்
கப்பிணர் மரத்திற் காலும் பயினதாய்க் கழிக வென்றார்
இப்பழி சுமந்த வெங்கட் கென்னல மென்றார் பின்னும்.

வேறு

357. கருவின் மாதர் கருவுயிர்க்கும் அளவு முறையாற் கணவர்தோள்
மருவி வாழ்க மண்ணகழ்ந்த குழியு மதனால் வடுவொழிக
பொருவி னீரு மிறைதோறு மூறிப் பொலிக மாங்குறைபட்
டொருவி னாலுந் தழைகவென வொழியா நலனுமுதவினார்.

354. சொல்லால் வேறாகவும், நினைப்பால் வேறாகவும் வேள்வி செய்யும் விச்சுவ உருவனின் செய்கையினை, உடலில் கண்ணுள்ள இந்திரன் ஞானதிருஷ்டியினாலே அறிந்து தன் வச்சிராயுதப் படையால் மோதி மூன்று தலைகளையும் தனித்தனியே துணித்தான். அத்தலைகள் மூன்றும் காடையும், ஊர்க்குருவியும், சிச்சிலியுமாய்ப் பறந்தன. அதனுடைய ஊனோடு கூடிய குருதியை பேய்களின் வாயில் புகட்டினான்.

பாவத்தைப் பங்கிட்டுக் கொடுத்தல்

355. உடனே விரைந்து பிரமக் கொலைப்பாவம் சீறிவந்து இந்திரனைப் பற்றிக் கொண்டது. அதனை நீக்கும்பொருட்டு அப்பாவத்தை, தேவர்கள், மரம், மண், பெண்டிர், நீர் இவற்றின் மேல் கூறுசெய்து சுமத்தினார்கள். அவர்கள் "இப்பாவம் நீக்கும் வழி யாது?" என்று கேட்டனர்.

356. "நீரிடத்தில் நுரையாகியும், நிலத்தில் உவர்ப்பாகியும், அழகிய பொன் செப்புப் போன்ற இளம் தனங்களை உடைய பெண்களிடத்தில் தீண்டுதற்கரிய பூப்பாகியும், கிளைகளையும் பூங்கொத்துகளையும் உடைய மரங்களிடத்தில் கசிந்தொழுகும் பிசின் ஆகியும் நீங்குக" என்றார். பின்னும் இப்பழி சுமந்த எங்கட்கு என்ன பயன் என்று அந் நால்வரும் வினவினர்.

357. கருப்பமுடைய பெண்கள், கருவுயிர்க்கும் வரையிலும் முறைப்படி தன் கணவர் தோளைச் சேர்ந்து வாழக்கடவர் என்றும், மண் தோண்டிய குழியும், அம்மண்ணினாலேயே நீங்கி நிரம்பும் என்றும், சிறப்புமிக்க தண்ணீர் இறைக்கும் தோறும் நீர் சுரந்து பொலிவடையும் என்றும், மரம் வெட்டப்பட்டு வளம்குன்றினாலும் மீண்டும் தழைக்கும் என்றும் நீங்காத பலனையும் அளித்தார்கள்.

358. மாசிற் கழிந்த மணியேபோல் வந்த பழிதீர்ந்
திந்திரனுந்
தேசிற் றிகழத் துவட்டாத்தன் செல்வன் றன்னைத்
தேவர்பிரான்
வீசிக் குலிசத் துயிருண்ட விழுமங் கேட்டு
வெகுண்டுயிர்த்துக்
கூசிப் பழிகோள் கருதியொரு கொடிய வேள்வி
கடிதமைத்தான்.

359. அந்தக் குண்டத் தெரிசிகைபோல் அழலுங் குஞ்சி
யண்டமுக
டுந்தக் கொடிய தூமம்போ லுயிர்த்துச் செங்கண்
சினச்செந்தீச்
சிந்தப் பிறைவா ளெயிறதுக்கித் திசைவான்
செவிடு படநகைத்து
வந்தக் கொடிய விடம்போல வெழுந்தா
னொருவாண் மறவீரன்.

வேறு

360. ஈங்குவன் விருத்திரன் என்ப வாரழற்
றூங்குவன் கணைவிடு தூர நீண்டுநீண்
டோங்குவ னோங்குதற் கொப்ப வைகலும்
வீங்குவ னறனிலார் வினையி னென்பவே.

361. வீங்குடல் விருத்திரன் றன்னை விண்ணவர்
எங்குற வருதுவட் டாவெ னும்பெயர்த்
தீங்குறு மனத்தினேன் றேவர் கோனுயிர்
வாங்குதி பொருதென வரவிட் டானரோ.

துவட்டாவின் கோபம்

358. இதனால் இந்திரன், குற்றத்திினின்றும், நீங்கிய மாணிக்கம் போலப் பிரமக் கொலைப் பாவம் நீங்கி விளக்க முற்றான். துவட்டாவானவன் தன் புதல்வனாகிய விச்சுவ உருவனைத் தேவேந்திரன் வச்சிரப்படையால் கொன்ற செய்தியைக் கேள்விப்பட்டுக் கோபம் கொண்டு பெருமூச்செறிந்து பழிவாங்க நினைத்து ஒரு கொடிய வேள்வியை விரைந்து செய்தான்.

359. அவ்வேள்விக் குண்டத்தினின்றும், எரிகின்ற தீயின் கொழுந்து போல செந்நிறத்தால் விளங்கும் முடியானது அண்டத்தின் உச்சியைத் தாக்கக் கொடிய புகை போல மூச்செறிந்து, சிவந்த கண்களில் இருந்து கொடிய சினத்தீ சிதற, ஒரு வீரன் தோன்றினான். பிறைபோல் வளைந்த பற்களைக் கடித்து, திக்குகளும் வானமும் செவிடாகும்படி நகைத்தான். ஆலகாலவிடம்போல் தோற்றம் கொண்டிருந்தான். வெற்றியையுடைய வாட்படை ஒன்று அவ்வீரனின் கையில் காணப்பட்டது.

360. இவ்வாறு தோன்றியவன் விருத்திராசூரன்' எனப்பட்டான். வலிய அம்பு விடுகின்ற உயரம் வரை தினம் தினம் அவன் நீண்டு வளர்ந்தான். அவ்வாறு உயருவதற்கு ஏற்ப 'அறவினை இல்லாதவர் பாவம் போல்' பருப்பான்.

361. தேவர்கள் வருந்தும்படி தோன்றிய பருத்த உடலை உடைய விருத்திராசூரனை நோக்கி, "தீமை மிக்க மனத்தையுடைய துவட்டாவானவன், "தேவேந்திரன் உயிரைப் போர் செய்து வாங்கி வா" என்று ஏவினான்.

362. மதித்துணி யெயிற்றினோன் வடவை போற்சினைஇக்
கொதித்தெதிர் குறுகினான் கொண்டல் ஊர்தியும்
எதிர்த்தனன் களிற்றின்மே லிமையத் துச்சிமேல்
உதித்ததோர் கருங்கதிரொக்கு மென்னவே.

363. அறத்தொடு பாவநேர்ந் தென்ன வார்த்திரு
திறத்தரு மூண்டமர் செய்யக் கற்சிறை
குறைத்தவன் றகுவன்மேற் குலிச வேலெடுத்
துறைத்திட வீசினான் உடன்று கள்வனும்.

364. இடித்தனன் கையிலோர் இருப்பு லக்கையைப்
பிடித்தனன் வரையெனப் பெயர்ந்து தீயெனத்
துடித்தனன் சசிமுலைச் சுவடு தோய்புயத்
தடித்தன னிந்திர னவச மாயினான்.

365. அண்டரே றனையவ னவச மாறிப்பின்
கண்டகன் கைதவ நினைந்திக் கள்வனோர்
மண்டமர் ஆற்றுவான் வலியி லோமெனப்
புண்டரி கத்தவ னுலகிற் போயினான்.

366. தாழ்ந்துதான் படுதுயர் விளம்பத் தாமரை
வாழ்ந்தவன் வலாரியோ டணைந்து மாமகள்
வீழ்ந்தமார் பின்னடி வீழ்ந்து செப்பமால்
சூழ்ந்துவா னாடனை நோக்கிச் சொல்லுவான்.

விருத்திராசூரன் போர்

362. பிறைபோன்ற வளைந்த பற்களையுடைய விருத்திரன், 'வடவாமுகாக்கினி' போலக் கோபம் கொண்டு துள்ளி போருக்கு வந்தான். மேக வாகனனாகிய இந்திரனும் பனிமலையின் சிகரத்தில் தோன்றிய ஒரு கரிய ஞாயிறுபோல் வெள்ளை யானையின் மேலேறி எதிர்த்தான்.

363. அறமும் பாவமும் போர் செய்தலைப் போன்று ஆரவாரத்துடன் இருவரும் போரிட்டனர். மலைகளின் சிறகை அறுத்தவனாகிய இந்திரன், அசுரனாகிய விருத்திரன் மேல் வச்சிரப்படையை எடுத்து உறைக்கும்படி வீசினான். விருத்திரன் கோபம் கொண்டான்.

364. கோபம் கொண்ட விருத்திரன் இரும்பு உலக்கையைக் கையில் எடுத்து, மலைபோல் அடிபெயர்ந்து, தீயெனத் துள்ளி, சசியின் முலைத் தடங்களில் தோய்கின்ற இந்திரனின் புயத்தில் அடித்தான். இந்திரன் மூர்ச்சையானான்.

365. பின்னர், சிறிது நேரத்தில் மூர்ச்சை தெளிந்து ஆண்சிங்கம் போன்று இந்திரன் எழுந்தான். விருத்திராசூரனின் வஞ்சனையை உணர்ந்து, 'இப் பகைவனுக்கு நேர் நின்று போர் புரிய யான் வலியிலேன்' என்று எண்ணியவனாய் பிரமதேவனின் சத்தியலோகம் சென்றான்.

திருமால் புதிய படைக்கலம் பெற வழி கூறுதல்

366. பிரமதேவனை இந்திரன் பணிந்து வணங்கினான். தான் விருத்திளரால் பட்ட துன்பங்களை எடுத்துக் கூறினான். அப்பிரமதேவன் இந்திரனை அழைத்துக் கொண்டு, திருமகள் தங்கியுள்ள மார்பையுடைய திருமால் உள்ள வைகுந்தம் சென்று, அத்திருமாலின் திருவடிகளில் விழுந்து வணங்கி, நிகழ்ந்தவற்றை எடுத்துக் கூறினான். திருமால் ஆலோசித்து இந்திரனைப் பார்த்துக் கூறத் தொடங்கினார்.

367. ஆற்றவும் பழையதுன் ணங்கை வச்சிரம்
மாற்றவர் உயிருண வலியின் றாதலால்
வேற்றொரு புதியது வேண்டு மாலினிச்
சாற்றுது மதுபெறுந் தகைமை கேட்டியால்.

368. தொடையகன் மார்பநாந் தூய பாற்கடல்
கடையுநாள் அசுரருஞ் சுரருங் கையில்வெம்
படையொடு மடையன்மின் பழுதென் றப்படை
அடையவுந் ததீசிபா லடைவித் தாமரோ.

369. சேட்படு நாணனி செல்லத் தேவரா
வாட்படை யவுணரா வந்து கேட்டிலர்
ஞாட்படை படையெலா ஞான நோக்கினால்
வேட்படை வென்றவன் விழுங்கி னானரோ.

370. விழுங்கிய படையெலாம் வேற றத்திரண்
டொழுங்கிய தான்முது கந்தண் டொன்றியே
எழுங்கதிர்க் குலிசமாம் அதனை யெய்துமுன்
வழங்குவன் கருணையோர் வடிவு மாயினான்.

வேறு

371. என்று மாதவன் இயம்ப வும்பர்கோன்
ஒன்றும் வானவர் தம்மொ டொல்லெனச்
சென்று மாயையின் செயலை நோன்பினால்
வென்ற மாதவ னிருக்கை மேவினான்.

367. "உனது கையில் உள்ள வச்சிரப்படை மிகவும் பழையது. அது பகைவர்களின் உயிரை உண்ணுவதற்குரிய வலிமையை இழந்துவிட்டது. ஆதலால் ஒரு புதிய படை வேண்டும். இப்போது அதனைப் பெறுவதற்கு வழி காணுவோம். அதனைக் கேட்பாயாக" என்றார்.

368. "மாலையை அணிந்த பரந்த மார்பை உடையவனே! நான் புனிதமான பாற்கடலைக் கடையும் காலத்து, அசுரர்களும், தேவர்களும் கொடிய படைக் கலங்களோடு வராதீர்கள். அவ்வாறு வருவது குற்றமாகும் என்று சொல்லி, அவர்களின் படைகள் அனைத்தையும் 'ததீசி' முனிவரிடம் சேர்ப்பித்தோம்.

369. ஆண்டுகள் பல சென்றன. தேவர்களேனும், அசுரர்களேனும் வந்து ஆயுதங்களைக் கேட்டிலர். மன்மதனுடைய அம்புகளை வென்று ஞானப் பார்வையோடு கூடிய ததீசி முனிவன் போருக்குரிய அப்படைகளை எல்லாம் விழுங்கிவிட்டான்.

370. அவ்வாறு விழுங்கப்பட்ட ஆயுதங்கள் அனைத்தும் ஒன்றாகத் திரண்டு முதுகெலும்பைப் பொருந்தி நின்றன. அதுவே ஒளி பொருந்திய வச்சிரப் படையாகும். நீ அவரை அடைந்து கேட்டால், கேட்பதற்கு முன்னே கருணையே வடிவமாகிய அம்முனிவர் அதனை உனக்குத் தருவார்"

ததீசி முனிவரின் பெருங்கொடை

371. என்று திருமால் கூறத் தேவேந்திரன் திருமாலையும், பிரமனையும் வணங்கி விடை பெற்றுக் கொண்டு தேவர்களோடு விரைந்து சென்று, மாயையின் செயலைத் தவ வலியால் வெற்றி கொண்ட தவத்தினையுடைய ததீசி முனிவர் இருப்பிடத்தை அடைந்து வணங்கினான்.

வேறு

372. அகமலர்ந் தருந்தவன் அமரர்க் கன்புகூர்
முகமலர்ந் தின்னுரை முகமன் கூறிநீர்
மிகமெலிந் தெய்தினீர் விளைந்த தியாதது
தகமொழிந் திடலென வலாரி சாற்றுவான்.

373. அடிகணீர் மறாததொன் றதனை வேண்டியிம்
முடிகொள்வான் அவரொடு முந்தி னேனது
செடிகொள்கா ரிருளுட லவுணர்த் தேய்த்தெமர்
குடியெலாம் புரப்பதோர் கொள்கைத் தாயது.

374. யாதெனி னினையதுன் யாக்கை யுள்ளதென்
றோதலும் யாவையு முணர்ந்த மாதவன்
ஆதவற் கண்டதா மரையி னானனப்
போதலர்ந் தின்னன புகல்வ தாயினான்.

375. நாள்நம தெனநரி நமதெ னப்பிதாத்
தாய்நம தெனநமன் றனதெ னப்பிணி
பேய்நம தெனமன மதிக்கும் பெற்றிபோ
லாய்நம தெனப்படும் யாக்கை யாரதே.

376. விடம்பயி லெயிற்றர வுரியும் வீ நுழை
குடம்பையுந் தானெனுங் கொள்கைத் தேகொலாம்
நடம்பயல் கூத்தரி னடிக்கு மைவர்வாழ்
உடம்பையும் யானென வுரைக்கற் பாலதோ.

372. ததீசி முனிவன் இந்திரன் முதலிய தேவர்களை நோக்கி, அன்புடன் முகமலர்ந்து இனிய சொற்களைக் கூறி, "நீங்கள் மிகவும் வருந்தி வந்தீர்கள் நடந்தது என்ன? அதனைச் சொல்லுங்கள்" என்று கேட்டான். இந்திரன் சொல்லத் தொடங்கினான்.

373. "அடிகளே நீங்கள் தவறாமல் கொடுக்கக் கூடிய பொருள் ஒன்றுள்ளது. அப்பொருளைப்பெற விரும்பித் தேவர்களோடு வந்தேன். அப்பொருள் முடைநாற்றமுடைய இருள் போன்ற தோற்றமுடைய அவுணர்களை அழித்து எம்மவர்களை காத்து உய்விக்க வல்லது" என்றான்.

374. "இத்தன்மையுள்ள பொருள் யாதெனில், அது உமது உடலில் உள்ளது" என்று தொடர்ந்து கூறினான். இவ்வாறு இந்திரன் கூறியவுடன் மூன்று காலங்களில் நிகழும் யாவற்றையும் தன்னுடைய பெரிய தவத்தால் உணருகின்ற தன்மையையுடைய முனிவன் கதிரவனைக் கண்டு தாமரை மலர்வது போல் மிக மகிழ்ச்சி கொண்டு சொல்லத் தொடங்கினான்.

375. "நாய்கள் எம்முடையது எனவும், நரிகள் எம்முடையது எனவும், தந்தையும் தாயும் எம்முடையது எனவும், எமன் எம்முடையது எனவும் நினைத்துக் கொண்டிருத்தல் போல நாமும் நம்முடையது என்று நினைத்துக் கொண்டிருக்கும் இந்த உடல் யாருக்கு உரியது?"

376. பாம்பு தன் தோலையும், பறவை தான் நுழைகின்ற கூட்டையும் தான் என்று கொள்ளும் தன்மை உடையதைப் போல, உயிரானது ஆடுகின்ற கூத்தர்களைப் போல் நடிக்கின்ற ஐம்பொறிகள் வாழுகின்ற உடலையும் நான் என்று கொள்ளுதல் கூடுமோ?

377. நடுத்தயா விலார்தமை நலியத் துன்பநோய்
அடுத்தயா வருந்திரு வடைய யாக்கையைக்
கொடுத்தயா வறம்புகழ் கொள்வ னேயெனின்
எடுத்தயாக் கையின்பயன் இதனின் யாவதே.

வேறு

378. என்றனன் கரண மொன்றி யெழுகருத் தறிவை யீர்ப்ப
நின்றனன் பிரம நாடி நெறிகொடு கபாலங் கீண்டு
சென்றனன் விமான மேறிச் சேர்ந்தனன் உலகை நோன்பால்
வென்றனன் துறக்கம் புக்கு விற்றினி திருந்தா னம்மா.

379. அம்முனி வள்ளல் ஈந்த வடுபடை முதுகந் தண்டைத்
தெம்முனை யடுபோர் சாய்க்குந் திறல்கெழு குலிசஞ் செய்து
கம்மியப் புலவ னாக்கங் கரைந்துகைக் கொடுப்ப வாங்கி
மைம்முகி லூர்தி யேந்தி மின்விடு மழைபோ னின்றான்.

380. மறுத்தவா வஞ்சப் போரால் வஞ்சித்து வென்று போன
கறுத்தவாள் அவுணற் கொல்வான் கடும்பரி நெடுந்தேர் நீழல்
வெறுத்தமால் யானை மள்ளர் வேலைபுக் கெழுந்து குன்றம்
அறுத்தவா னவர்கோ னந்த வவுணர்கோ மகனைச் சூழ்ந்தான்.

377. இந்திரனே! நடுநிலைமையும் கருணையும் இல்லாதவர்கள் வருத்துவதால் துன்பம் அடைந்திருக்கும் உங்கள் அனைவருக்கும் இன்பம் கிடைக்குமாறு என் உடலை அளித்து அறத்தையும் புகழையும் பெறுவேனாயின், நான் எடுத்த உடம்பினால் ஆகும் பயன் இதனைவிட வேறு யாது உளது?"

378. என்று கூறி உலகைத் தவத்தால் வென்ற ததீசி முனிவன், கரணங்கள் ஒன்றுபட்டு எழுகின்ற மெய்யுணர்வானது 'அறிவை ஈர்ப்ப சிவயோக சமாதியில் நின்று சுழுமுனா நாடியின் வழியாகக் கபாலத்தைக் கிழித்துச் சென்று தேவ விமானத்தில் ஏறி சிவலோகத்தையடைந்து இனிது வீற்றிருந்தான்.

இந்திரனின் புதிய படை

379. அந்த முனிவனாகிய வள்ளலால் கொடுக்கப்பட்ட கொலைத் தொழிலையுடைய படைகள் திரண்ட முதுகெலும்பினை, பகைவர் முனைகின்ற போரை பின்னிடச் செய்யும் வலிமைமிக்க வச்சிரப்படையாகச் செய்து 'தேவ தச்சன்' ஆக்கம் கூறி கையில் கொடுக்க, அதனைப் பெற்ற இந்திரன் கையில் தாங்கி, மின்னலை வீசும் மேகம் போல் நின்றான்.

380. குற்றமுடைய வஞ்சகப் போரினால் வெற்றி கொண்ட அவுணனான வாளை ஏந்திய விருத்திராசூரனைக் கொல்லும் பொருட்டு, மலையின் சிறகுகளை அறுத்த தேவேந்திரன், கடிய நடையினையுடைய குதிரைகளும், பெரிய தேவர்களும், மயக்கத்தையுடைய யானைகளும், வீரர்களும் ஆகிய நால்வகைச் சேனைக் கடலின் நடுவில் தோன்றி அந்த அவுணர் தலைவனை வளைத்தான்.

381. வானவர் சேனை மூண்டு வளைத்தலும் வடவைச்
செந்தீ
யானது வரையி னோங்கி யழன்றுருத் தெழுந்தால்
என்னத்
தானவர் கோனு மானந் தலைக்கொள வெழுந்து
பொங்கிச்
சேனையுந் தானு மூண்டு சீறிநின் றடுபோர்
செய்வான்.

382. அடுத்தன ரிடியே றென்ன வார்த்தனர் ஆக்கங் கூறி
எடுத்தனர் கையிற் சாப மெறிந்தனர் சிறுநா ணோசை
தொடுத்தனர் மீளி வாளி தூர்த்தனர் குந்த நேமி
விடுத்தனர் வானோர் சேனை வீரர்மே லவுண வீரர்.

383. கிட்டினர் கடகக் கையாற் கிளர்வரை யனைய
திண்டோள்
கொட்டினர் சாரி மாறிக் குதித்தனர் பலகை நீட்டி
முட்டின ரண்டம் விள்ள முழங்கினர் வடிவாள் ஒச்சி
வெட்டின ரவுணச் சேனை வீரரை வான வீரர்.

384. விழ்ந்தனர் தோளுந் தாளும் விண்டனர் சோரி
வெள்ளத்
தாழ்ந்தனர் போருந் தாரு மகன்றன ரகன்ற மார்பம்
போழ்ந்தனர் சிரங்க ளெங்கும் புரண்டனர்
கூற்றூர் புக்கு
வாழ்ந்தன ரடுபோ ராற்றி வஞ்சகன் சேனை· மள்ளர்.

385. தாளொடு கழலு மற்றார் தலையொடு முடியு மற்றார்
தோளொடு வீர மற்றார் தும்பையொ டமரு மற்றார்
வாளொடு கரமு மற்றார் மார்பொடு கவச மற்றார்
கோளொடும் ஆண்மை யற்றார் குறைபடக்
குறையா மெய்யர்

381. தேவர்களின் படை கோபத்துடன் சூழ்ந்து கொண்டவுடன், அவுணர் தலைவனாகிய விருத்திரனும், வடவாமுகாக்கினியானது மலைபோல் உயர்ந்து கொதித்துச் சினந்து எழுந்தாற் போல எழுந்து கொதித்துச் சேனைகளோடு புறப்பட்டு வந்து கொல்லுதற்குரிய போர் செய்யத் தொடங்கினான்.

382. அசுரர்கள், தேவர்களை எதிர்த்து இடிபோல் ஆரவாரித்துக் கையில் வில்லை எடுத்து வெற்றி கூறி நாண் ஓசை செய்து, வலிமையுடைய அம்புகளைத் தொடுத்து எறிந்தார்கள். கைவேலையும் திகிரியையும் வீசினார்கள்.

383. தேவ வீரர்கள் அசுரர்களை நெருங்கித் தொடி அணிந்த கைகளால் மலையைப் போன்ற வலிய தோள்களைத் தட்டி, இடது சாரி வலது சாரியாக மாறிக் குதித்துக் கேடகத்தை நீட்டி மோதினர். அண்டம் பிளக்க ஆரவாரித்து வாளை வீசி வெட்டினார்கள்.

384. வஞ்சகனாகிய விருத்திரனின் படைவீரர்கள் போர் செய்து தோள்களும் கால்களும் அறுபட்டார்கள். சிலர் குருதி சொரிந்தனர். சிலர் குருதி வெள்ளத்தில் மூழ்கினார்கள். சிலர் மார்பு பிளக்கப்பட்டனர். சிலர் தலைகளை இழந்தனர். சிலர் உலகு அடைந்து அங்கு வாழத் தொடங்கினர்.

385. தேவ வீரர்களின் சிலர் ஆயுதங்களால் வெட்டப்பட்டு, காலோடு வீரக் கண்டையும் அறுபட்டார்கள். சிலர் தோளும் வீரமும் சேர்ந்து அறுபட்டார்கள். சிலர் தும்பை மாலையோடு மார்பும் பிளக்கப்பட்டார்கள். சிலர் ஆண் வலிமையோடு தன்மையும் நீங்கினார்கள்.

386. தொக்கன கழுகு சேனஞ் சொரிகுடர் பிடுங்கி யீர்ப்ப
உக்கன குருதி மாந்தி யொட்டல்வாய் நெட்டைப் பேய்கள்
நக்கன பாடல் செய்ய ஞாட்பினுட் கவந்த மாடப்
புக்கன பிணத்தின் குற்றம் புதைத்தபார் சிதைத்த தண்டம்

387. இவ்வகை மயங்கிப் போர்செய் திறந்தவ ரொழியப் பின்னுங்
கைவ்வகை யடுபோ ராற்றிக் கரையிறந் தார்கண் மாண்டார்
அவ்வகை யறிந்து வானத் தரசனு மவுணர் வேந்துந்
தெய்வதப் படைகள் வீசிச் சீறிநின் றடுபோர் செய்வார்.

388. அனற்படை விடுத்தான் விண்ணோர் ஆண்டகை யதனைக் கள்வன்
புனற்படை விடுத்துச் சீற்றந் தனித்தனன் புனிதன் காற்றின்
முனைப்படை விடுத்தான் வெய்யோன் முழங்குகால் விழுங்கு நாகச்
சினப்படை தொடுத்து வீசி விலக்கினான் றேவ ரஞ்ச.

389. நாகமாப் படைவிட் டார்த்தா னாகர்கோ னுவணச் செல்வன்
வேகமாப் படையை வீசி விளக்கினான் றகுவர் வேந்தன்
மோகமாப் படையைத் தொட்டு முடுக்கினான் முனைவன் அன்ன
தேகமாப் படிறன் ஞானப் படைவிடுத் திருள்போ னின்றான்.

386. போர்க்களத்தில் கழுகுகளும், பருந்துகளும் சூழ்ந்து கொண்டு குடலை இழுத்துப் பிடுங்கித் தின்றன. ஒட்டிய வாயையுடைய சில பேய்கள் குருதியைக் குடித்துப் பாடத் தொடங்கின. அங்குள்ள சில தலைசிறந்த உடல்கள் ஆடத் தொடங்கின. பூமியை மூடிய பிணக்குவியல் மலை போன்று அண்டத்தைச் சிதைவுபடுத்தியது.

387. இவ்வாறு கலந்து போர் செய்து மாண்டவர்கள் தவிர, பின்னும் அளவற்ற வீரர்கள் கைகளால் மற்போர் செய்து இறந்து போனார்கள். இவ்வாறு இறந்ததைக் கண்ட வானத்திற்குரிய தேவேந்திரனும், விருத்திராசூரனும் தெய்வத் தன்மையுடைய படைகளை விடுத்துச் சீறி நின்று போரிடலாயினர்.

388. தேவர்களுக்குத் தலைவனாகிய இந்திரன் தீக் கணையை விடுத்தான். விருத்திரன் நீர்க்கணையை விடுத்து அதன் சீற்றத்தைத் தணித்தான். தூயவனான இந்திரன் கூரிய காற்றுப்படையை விடுத்தான். கொடியவனாகிய விருத்திரன் காற்றினை உண்ணுகின்ற கோபத்தையுடைய பாம்புக் கணையை வில்லிற்பூட்டி, விடுத்துத் தேவர்கள் அஞ்சும்படி அக்கணையைத் தடுத்தான்.

389. தேவர்களுக்குத் தலைவனாகிய இந்திரன் பெரிய பாம்புப் படையை விடுத்துப் பேரொலி செய்தான். விருத்திராசூரனோ பெரிய வேகத்தையுடைய கருடக்கணையை விடுத்து அதனைத் தடுத்தான். இந்திரன் மயக்கம் தரும் மோகப்படையை விடுத்துத் தூண்டினான். பெரிய வஞ்சகனாகிய அசுரன், அம்மயக்கம் நீங்கும்படி ஞானக்கணையை விடுத்து இருளைப் போன்று நின்றான்.

390. மட்டிடுதாரான் விட்ட வானவப் படைக்கு மாறு
விட்டுடன் விலக்கி வேறும் விடுத்திடக் கனன்று
வஞ்சன்
முட்டிடமான வெங்கான் மூட்டிட கோபச் செந்தீச்
சுட்டிடப் பொறாது பொங்கிச் சுராதிபன் இதனைச்
செய்தான்.

391. வீங்கிருள் ஒதுங்க மேக மின்விதிர்த் தென்னக்
கையில்
ஓங்கிருங் குலிச வேலை யொல்லென விதிர்த்த
லோடுந்
தீங்குளம் போன்றிருண்ட திணியுடற் கள்வ னஞ்சி
வாங்கிருங் கடலில் வீழ்ந்தான் மறைந்தமை நாக
மொத்தான்.

392. ஒக்கவிந் திரனும் வீழ்ந்தான் உடல்சின வுருமே
றன்றான்
புக்கிடந் தேடிக் காணான் புண்ணிய முளரி யண்ணல்
பக்கம்வந் தனைய செய்தி பகர்ந்தனன் பதகன்
மாளத்
தக்கதோர் சூழ்ச்சி முன்னிச் சராசர மீன்ற தாதை.

393. விந்தவெற் படக்கி னாற்கீ துரையென விடுப்ப மீண்டு
சந்தவெற் படைந்தான் வானோர் தலைவனை
முகமன் கூறிப்
பந்தவெற் பறுத்தான் வந்த தெவனெனப் பறைகள்
எல்லாஞ்
சிந்தவெற் பறுத்தான் வந்த செயலெலா முறையாற்
செப்பி.

390. தேனைப் பொழியும் மாலையை அணிந்த இந்திரன் விடுத்த தெய்வக் கணைகளுக்கு, வேறுபடைக் கணைகளை விடுத்து உடனே விலக்கி, வேறு கணைகளை விடுப்பதற்கு வஞ்சகன் விருத்திரன் நெருங்கினான். தேவேந்திரன் அதுகண்டு மானமாகிய காற்றானது கோபமாகிய அனலை மூட்ட, அது சுடுகின்ற தன்மையைப் பொறுக்கலாற்றாது, சீற்றம் கொண்டு போர் செய்யத் தொடங்கினான்.

391. மிகுந்த இருளானது மறையும்படி மேகமானது மின்னலை வீசினாற்போல, தன் கையில் தாங்கியுள்ள மிகப்பெரிய வச்சிரப் படையை வீசினான். உடனே தன் தீய உள்ளத்தைப்போல கருமையான தோற்றம் கொண்ட விருத்திராசூரன் அஞ்சி, வளைந்த பெரிய கடலினுள் மைந்நாக மலை மறைந்ததுபோல சென்று மறைந்தான்.

392. அவனோடுகூட இந்திரனும் சினத்துடன் கடலினுள் மூழ்கினான். இடியேற்றைப் போன்ற விருத்திரன் மறைந்திருக்கும் இடத்தைத் தேடிப் பார்த்தான். எங்கும் காணாததால், தாமரை மலரில் உள்ள பிரமதேவனை மீண்டும் வந்தடைந்து அச்செய்தியைக் கூறினான். இயங்குதிணை, நிலைத்திணை போன்ற எல்லாவற்றையும் தந்தருளிய பிரமதேவன் பாதகனாகிய அசுரன் அழியத் தக்கதாகிய உபாயம் ஒன்றை மனத்தில் சிந்தித்தான்.

அகத்தியர் கடல் நீரைக் குடித்து வற்றச் செய்தல்

393. "விந்திய மலையை அடக்கிய அகத்திய முனிவனுக்கு இச்செய்தியைக் கூறுவாய்" என்று சொல்லி இந்திரனை அனுப்பி வைத்தான். இந்திரனும் சந்தன மரங்கள் நிறைந்த பொதிய மலையை அடைந்தான். பாசபந்தமாகிய மலையைத் தொலைத்த அம்முனிவன் இந்திரனை உபசார வார்த்தைக் கூறி வரவேற்றான். பின், "வந்த காரணம் யாது?" என்று வினவினான். மலைகளின் சிறகுகளை எல்லாம் அறுத்த அவ்விந்திரனும் நிகழ்ந்தவை அனைத்தையும் வரிசையாகக் கூறினான்.

394. யாவையு முணர்ந்த வெந்தைக் கியானெடுத் துணர்த்து கின்ற
தாவாதென் னமருக் காற்றா தாழிபுக் கொளித்தான் ஆவி
வீவது மவனால் வந்த விழுமநோ யெல்லா மின்று
போவதுங் கருதி நும்பாற் புகுந்தன மடிகளென்றான்.

395. என்றவன் இடுக்கண் டீர்ப்பா னிகல்புரி புலன்க ளைந்தும்
வென்றவ னெடியோன் றன்னை விடையவன் வடிவ மாக்கி
நின்றவ னறிவா னந்த மெய்ம்மையாய் நிறைந்த வெள்ளி
மன்றவ னூழிச் செந்தீ வடிவினை மனத்துட் கொண்டான்.

396. கைதவன் கரந்து வைகுங் கடலைவெற் படக்குங் கையிற்
பெய்துழுந் தெல்லைத் தாக்கிப் பருகினான் பிறைசேர் சென்னி
ஐயன தருளைப் பெற்றார்க் கதிசய மிதென்கொன் முன்று
வையமுத் தொழிலுஞ் செய்ய வல்லவர் அவரே யன்றோ.

397. அறந்துறந் தீட்டு வார்த்த மரும்பெறற் செல்வம் போல
வறந்தன படுநீர்ப் பௌவம் வடவைகட் புலப்பட் டாங்கு
நிறைந்தசெம் மணியு மத்தீ நீண்டெரி சிகைபோ னீண்டு
சிறந்தெழு பவளக் காடுந் திணியிருள் விழுங்கிற் றம்மா.

394. "யாவற்றையும் உணர்ந்த தந்தையாகிய தங்களுக்கு நான் எடுத்துத் தெரிவிக்கும் செய்தி என்ன இருக்கிறது? விருத்திராசூரன் என்னுடன் போர் புரியலாற்றாது கடலில் புகுந்து ஒளிந்து கொண்டான். அவன் உயிர் நீங்குவதும், அவனால் ஏற்பட்ட துன்பங்கள் அனைத்தும் இன்றே நீங்குவதும் குறித்துத் தங்களிடம் வந்தடைந்தேன்" என்றான்.

395. இவ்வாறு கூறிய இந்திரனின் துன்பம் நீக்கும் பொருட்டு, பகை செய்கின்ற ஐம்புலன்களை வென்றவரும் திருமாலின் வடிவத்தைச் சிவபெருமான் திருவுருவமாகச் செய்து நின்றவருமாகிய அகத்திய முனிவர், உண்மை, அறிவு ஆனந்த வடிவாய் நிறைந்த சிவபெருமானின் ஊழித்தீயை ஒத்த திருவுருவை மனத்தில் தியானித்தார்.

396. வஞ்சனை மிகுந்த விருத்திராசூரன் மறைந்திருந்த கடலை, உளுந்தின் அளவினதாகக் குறுக்கி, அதை விந்திய மலையை அடக்கிய கையால் எடுத்துக் குடித்து விட்டார். பிறைநுதலைப் பொருந்திய சிவபெருமானின் திருவருளைப் பெற்ற அடியார்களுக்கு எதுதான் இயலாது? மூன்று உலகத்தும் முத்தொழிலும் செய்ய வல்லவர்கள் அவ்வடியார்கள் அல்லவா?

397. அறநெறியைக் கைவிட்டுத் தேடுவோரின் செல்வம் போலக் கடலில் உள்ள நீர் முழுவதும் வற்றிப் போயின. கடலில் கிடந்த மிகுந்த செந்நிறம் உடைய மாணிக்கங்கள், வடவைத் தீ கண்களுக்குத் தோன்றினாற் போல ஒளி வீசின. அத்தீ உயர்ந்து எரிகின்ற கொழுந்து போலப் பவளக் காடுகளின் மிக்க இருளை விழுங்கின.

398. பணிகளின் மகுட கோடிப் பரப்பென விளங்கிப்பல்கா
சணிகலப் பேழை பேழ்வாய் திறந்தனைத் தாகி
யொன்பான்
மணிகிடந் திமைக்கு நீரான் மகபதி வேள்விக்
காவாய்த்
திணியுடல் அவுணன்பட்ட செங்கள மனைய தன்றே.

399. வறந்தநீர் தன்னின் மின்னு வாள்விதிர்த் தென்னப்
பன்மீன்
எறிந்தன நெளிந்த நாகம் இமைத்தன வளைய
முத்துஞ்
செறிந்தன கரந்த யாமை சேர்ந்தபல் பண்டஞ் சிந்தி
முறிந்தன வங்கங் கங்க முக்கின சிறுமீ னெல்லாம்.

400. செருவினில் உடைந்து போன செங்கண்வா ளவுண
னங்கோர்
அருவரை முதுகிற் கார்போ லடைந்துவா னாடர்
செய்த
உருகெழு பாவந் தானோ ருருவெடுத் திருந்து
நோற்கும்
பரிசென நோற்றா னின்னும் பரிபவ விளைவு
பாரான்.

401. கைதவ நோன்பு நோற்குங் கள்வனைக் கண்டு
வானோர்
செய்தவ மனையான் யாணர் வச்சிரஞ் சீரிப்
பான்போற்
பொய்தவன் றலையைக் கொய்தான் புணரிவாய்
நிறையச் சோரி
பெய்தது வலாரி தன்னைப் பிடித்தது பிரமச் சாயை.

398. பாதாளத்தில் உள்ள பாம்புகளின் மகுட வரிசையின் பரப்பைப் போல ஒளிவீசிப் பல மணிகள் பதித்த அணிகலன்களை வைத்த பெட்டியின் பெரிய வாயைத் திறந்து வைத்தது போல் ஆகி, ஒன்பதுவகை மணிகளும் ஒளிவிடும் தன்மையால் நீர் வற்றிய கடலின் அடிப்பாகம் இந்திரன் வேள்விப் பசுவாகிய வலிய உடலையுடைய வலாசூரன் இறந்த போர்க்களம் போலக் காட்சி அளித்தது.

399. நீர் வற்றிய இடத்தில் ஒளிபொருந்திய வாட்படையை அசைத்தது போன்று பல மீன்கள் துள்ளின. பாம்புகள் நெளிந்தன. சங்குகளும் முத்துகளும் ஒளிவீசின. ஆமைகள் மறைந்து ஒளிந்தன. பல பொருள்களையுடைய கப்பல்கள் உடைந்தன. பருந்துகள் சிறிய மீன்களை எல்லாம் விழுங்கின.

இந்திரன் விருத்திராசூரனைக் கொல்லுதல்

400. போரில் தோல்வியடைந்த வாளையுடைய அசுரன், அங்கு ஒரு மலையின் உச்சியில் முகில் தாங்குவது போல் போய்த் தங்கி தேவர்களால் செய்யப்பட்ட அஞ்சத்தக்க பாவமானது ஒரு வடிவாய்த் திரண்டு தவம் நோற்கும் தன்மையைப் போல, விருத்திராசூரன் இன்னும் வரும் பலனை எண்ணிப் பார்க்காமல் தவம் செய்தான்.

401. தேவர்களின் தவம் போன்ற இந்திரன், வஞ்சனை மிகுந்த கள்வனாகிய விருத்திரனைக் கண்டு, புதிய குலிசப் படையை பழக்குவான் போல, பொய்யான தவத்தினையுடைய அவ்வசுரனின் தலையை அறுத்தான். வற்றியகடல் நிறையுமாறு அவ்வசுரனின் குருதி நிறைந்தது. இந்திரனைப் பிரமகத்தி தோஷம் வந்து பிடித்துக் கொண்டது.

402. உம்மெனு மார்பைத் தட்டு முருத்தெழு மதிர்க்கும்
போர்க்கு
வம்மெனும் வாய்மடிக்கும் வாளெயி றதுக்கும் வீழுங்
கொம்மென வோடுமீளுங் கொதித்தழுஞ் சிரிக்குஞ்
சீறும்
இம்மெனும் அளவு நீங்கா தென்செய்வா னஞ்சி
னானே.

403. விரைந்தரன் றிசையோர் வாவி வீழ்ந்தொரு
கமல நூலுட்
கரந்தனன் மகவா னிப்பாற் கற்பக நாடு புல்லென்
றிருந்ததா லிருக்கு மெல்லை யிம்பரி னகுட
னென்போன்
அரும்பரி மேத வேள்வி யாற்றினான் ஆற்று மெல்லை.

404. அரசிலா வறுமை நோக்கி யவனைவா னாடர் யாரும்
விரை செய்தார் மகுடஞ் சூட்டி வேந்தனாக்
கொண்டார் வேந்தாய்
வருபவன் சசியை யீண்டுத் தருகென மருங்கு
ளார்ப்போய்த்
திரைசெய்நீ ரமுத னாட்குச் செப்பவக் கற்பின்
மிக்காள்.

405. பொன்னுயிர்த் தனைய காட்சிப் புண்ணிய
குரவன் முன்போய்
மின்னுயிர்த் தனையா ணின்று விளம்புவாள்
இதென்கொல் கெட்டேன்
என்னுயிர்த் துணைவ னாங்கே யிருக்கமற்
றொருவ னென்னைத்
தன்னுயிர்த் துணையாக் கொள்கை தருமமோ வடிக
ளென்றாள்

இந்திரன் பிரமகத்தியால் வருந்துதல்

402. அக்கொலைப் பாவமானது இந்திரனை 'உம்' மென்று அதட்டும். தனது மார்பைத் தட்டும். கோபித்து எழும். பேரொலி செய்யும். போருக்கு வாருங்கள் என்றழைக்கும். ஒள்ளிய பற்களை நறநறவென்னும். குப்புற்று விழும். விரைந்து ஓடும், மீளும். பொங்கி அழும். பெருநகை செய்யும். சீற்றம் கொள்ளும். இவற்றையெல்லாம் கண்ட இந்திரன் என்ன செய்தான்? நடுநடுங்கினான்.

403. ஈசான திசையில் உள்ள ஒரு குளத்தில் விழுந்து ஒரு தாமரைத் தண்டின் நூலுள் மறைந்தான். அதனால் தேவலோகம் பொலிவிழந்தது. இத்தருணத்தில் இந் நிலவுலகில் 'நகுடன்' என்னும் மன்னன் அரிய அசுவமேகயாகம் என்னும் வேள்வியைச் செய்து வந்தான்.

நகுடன் இந்திர பதவி அடைதல்

404. அப்படிச் செய்துவரும் நாளில் தேவர்கள் அனைவரும் தமக்கு மன்னன் இல்லாத குறையை உணர்ந்து அந்நகுடன் என்னும் மன்னனுக்கு முடிசூட்டி அரசனாகக் கொண்டார்கள். இந்திர பதவியை அடைந்த நகுடன், "இந்திராணியை இங்கே அழைத்துக் கொண்டு வாருங்கள்" என்றான். அருகில் இருந்தவர்கள் கடலில் தோன்றிய அமுதம் போன்றவளும் கற்பில் மிக்கவளுமான இந்திராணியிடம் இச் செய்தியைச் சொன்னார்கள்.

405. மின்னலைப் போன்ற வடிவைக் கொண்ட அவள், பொன்போன்ற நிறத்தையுடைய புண்ணியனான குரவன் வியாழபகவான் முன்சென்று வணங்கி, "அடிகளே! என் உயிர்க்கு நாயகன் அங்கு இருக்கவும், வேறொருவன் வந்து என்னைத் தன் உயிர்த்துணையாகக் கொள்ளுதல் அறமோ? இஃது என்ன வியப்பு!" என்றாள்.

406. மாதவர் எழுவர் தாங்க மாமணிச் சிவிகை மீது
போதரி னவனே வானோர் புரந்தர னவனே யுன்றன்
காதல னாகு மென்றான் கைதொழுதற்கு நேர்ந்தம்
மேதகு சிறப்பாலிங்கு வருகென விடுத்தா டூது.

407. மனிதரின் மகவா னாகி வருபவன் சிவிகை தாங்கும்
புனித மாதவரை யெண்ணான் புண்கணோய்
விளைவும் பாரான்
கனிதரு காமந் துய்க்குங் காதலால் விரையச்
செல்வான்
இனிதயி ராணி பாற்கொண் டேகுமின் சர்ப்ப
வென்றான்.

408. சர்ப்பமா கெனமுற் கொம்பு தாங்கிமுன் னடக்குந்
தென்றல்
வெற்பனா முனிவன் சாபம் விளைத்தனன் விளைத்த
லோடும்
பொற்பமா சுணமே யாகிப் போயினா னறிவி லாத
அற்பரா னவர்க்குச் செல்வம் அல்லது பகைவே
றுண்டோ.

409. பின்னர்த்தங் குரவ னான பிரானடி பணிந்து
வானோர்
பொன்னகர் வேந்தன் இன்றிப் புலம்படை கின்ற தைய
என்னுலங் குரவன் போயவ் விலஞ்சியு
ளொளித்தாற் கூவித்
தன்னுரை யறிந்து போந்த சதமகற் கொண்டு
மீண்டாள்.

406. வியாழபகவான் அவளை நோக்கி, "அகத்தியன், அங்கிரசன், கௌதமன், காசிபன், புலத்தியன், மார்க்கண்டன், வசிட்டன் என்னும் முனிவர் எழுவரும் தாங்க மாமணிச் சிவிகையின்மேல் வந்தால் அவனே வானவர்களைக் காக்கின்ற வேந்தனாவான். அவனே உனக்கும் கணவன் ஆவான்" என்றான். அதற்கு உடன்பட்ட இந்திராணி அவனை வணங்கி, "மேன்மையான சிறப்புடன் நகுடன் இங்கு வருக!" என்று தூதர்களை அனுப்பினாள்.

407. மனிதர்களில் இந்திரனாகி வருகின்ற நகுடன் சிவிகையினைச் சுமக்கின்ற புண்ணிய முனிவர்களின் பெருமையை அறியாதவனாயும், தனக்கு விளையும் துன்பத்தைப் பாராதவனாயும், களிந்த காம இன்பத்தை நுகரும் ஆசையால் விரைந்து செல்லும் பொருட்டு "இந்திராணியிடம் விரைந்து எடுத்துச் செல்லுங்கள்" என்று கட்டளை இட்டான்.

408. அப்பொழுது முன்கொம்பைத் தாங்கி நடக்கும், தென்றல் வீசும் பொதிய மலையை உடைய அகத்தியன் "பாம்பாக நீ மாறக் கடவாய்" என்று சாபம் இட்டான். உடனே பொலிவுடைய பாம்பாக நகுடன் மாறினான். அறிவற்ற கீழ்க்குணமுடையவர்களுக்கு அவர்கள் செல்வமே பெரும் பகையாய் முடியும் அல்லவா?

வியாழ பகவான் இந்திரனுக்கு யோசனை கூறுதல்

409. பின்னர் தேவர்கள் தங்கள் குருவாகிய வியாழபகவானின் அடிபணிந்து, "ஐயனே! பொன்னுலகமானது மன்னன் இல்லாமல் பெரிதும் துன்பம் அடைகின்றது" என்று வேண்டிக் கொண்டனர். ஆசிரியன் சென்று அக் குளத்தில் மறைந்திருந்த இந்திரனைக் கூவி அழைத்துக் கொண்டு வந்தான்.

410. கொடும்பழி கோட்பட் டான்றன் குரவனை
வணங்கி யென்னைச்
சுடும்பழி கழிய தெங்ஙன் சொல்லெனத் தொலைவ
தோர்ந்தான்
அடும்பழி மண்மேல் அன்றி யறாதுநீ வேட்டைக்
கென்னப்
படும்பழி யிதனைத் தீர்ப்பான் பார்மிசை வருதி
யென்றான்.

411. ஈசனுக் கிழைத்த குற்றந் தேசிகன் எண்ணித்
தீர்க்குந்
தேசிகற் கிழைத்த குற்றங் குரவனே தீர்ப்ப தன்றிப்
பேசுவ தெவனோ தன்பாற் பிழைத்தகா
ரணத்தால் வந்த
வாசவன் பழியைத் தீர்ப்பான் குரவனே வழியுங் கூற.

412. வாம்பரி யுகைத்துத் தன்னால் வழிபடு குரவன்
வானோர்
தாம்பரி வோடுஞ் சூழத் தராதலத் திழிந்து
செம்பொற்
காம்பரி தோளி பங்கன் கயிலைமால் வரையைத்
தாழ்ந்து
தேம்பரி யலங்கன் மார்பன் றென்றிசை நோக்கிச்
செல்வான்.

வேறு

413. கங்கைமுத லளவிறந்த தீர்த்தமெலாம்
போய்ப்படிந்து காசி காஞ்சி
அங்கனக கேதார முதற்பதிகள் பலபணிந்து
மவுணற் கொன்ற
பொங்குபழி விடாதழுங்கி யராவுண்ண மாசுண்டு
பொலிவு மாழ்குந்
திங்களனை யான்கடம்ப வனத்தெல்லை
யணித்தாகச் செல்லு மேல்வை.

410. கொடிய பாவத்தில் மூழ்கியவனாகிய இந்திரன் தன் ஆசிரியனை வணங்கி, "என்னை வருத்துகின்ற இப்பாவமானது நீங்குகின்ற வழி யாது?" என்று கேட்டான். அதனைக் கேட்ட வியாழபகவான், "இந்திரனே ! இக்கொலைப் பழி பூவுலகத் தல்லாமல் வேறு இடத்தில் நீங்காது" என்று தொடங்கி மேலும் பாவம் நீக்கும் வழியை சொல்லத் தொடங்கினான். "நீ வேட்டையைக் காரணமாகக் கொண்டு பெற்ற இப்பாவத்தை தீர்க்கும் பொருட்டு மண்ணுலகத்தின் கண் வருவாய்" என்றான்.

411. கடவுளுக்குச் செய்த குற்றத்தை ஆசிரியனே ஆராய்ந்து தீர்க்க வல்லவன். ஆனால் ஆசிரியனுக்குச் செய்த குற்றத்தை அவ்வாசிரியனே நீக்குவதல்லால் வேறு ஒருவராலும் நீக்க முடியாது. தன்னிடம் தவறு செய்தமையால் வந்த இந்திரன் பழியைத் தீர்ப்பதற்கு வியாழபகவானாகிய அக்குரவனே வழியையும் சொன்னான்.

இந்திரன் நிலஉலகம் வருதல்

412. தேன் துளிர்க்கும் இனிய மாலையை அணிந்த இந்திரன் குதிரைமீது ஏறிக்கொண்டு, தன்னால் வழிபாடு இயற்றப்பட்ட அவ்வியாழ பகவானும் தேவர்களும் அன்போடு சூழ்ந்துவர, நிலவுலகத்தில் இறங்கினான். பொன்போலும் நிறத்தையுடையவளும், மூங்கிலைப் போன்ற தோள்களையும் உடையவளுமான உமாதேவியை ஒரு பக்கத்தில் வைத்துள்ள சிவபெருமானுடைய கைலை மலையை வணங்கித் தென்திசை நோக்கிச் செல்லத் தொடங்கினான்.

413. கங்கை முதலிய அளவற்ற தீர்த்தங்கள் எல்லாவற்றிலும் நீராடி, காசி, காஞ்சி, கேதாரம் போன்ற பல திருப்பதிகளில் சென்று வணங்கினான். அப்பொழுதும் அசுரனைக் கொன்றதனால் வந்த கொடிய பாவமானது நீங்கவில்லை. பிரம்மகத்தி பாவம் தீராமையால் வருந்தி பாம்பினால் விழுங்கப் பெற்ற திங்களைப்போல் அழகு குன்றிய இந்திரன் கடம்பவனத்து எல்லையின் அருகாமையில் சென்றான்.

414. தொடுத்தபழி வேறாகி விடுத்தகன்ற
திந்திரன்றான் சுமந்த பாரம்
விடுத்தவனொத் தளவிறந்த மகிழ்வெய்தித் தேசிகன்
பால் விளம்பப் பாசங்
கெடுத்தவன்மா தலம்புனித தீர்த்தமுள
விவணமக்குக் கிடைத்தல் வேண்டும்
அடுத்தறிக வெனச்சிலரை விடுத்தவ்வே றாநிலை
நின்று அப்பாற் செல்வான்.

415. அருவிபடிந் தருவியெறி மணியெடுத்துப் பாறை
யிலிட் டருவி நீர்தூய்க்
கருவிரல்கொய் தலர்சூட்டிக் கனியூட்டி வழிபடுவ
கல்லா மந்தி
ஒருதுறையில் யாளிகரி புழைக்கைமுகந் தொன்றற்
கொன் றூட்டி யூட்டிப்
பருகுவன புலிமுலைப்பால் புல்வாய்க்கன்
றருத்தியிடும் பசிநோய் தீர.

416. நெளியராக் குருளைவெயில் வெள்ளிடையிற்
கிடந்துயங்கி நெளியப் புள்ளே
றொளியறாச் சிறைவிரித்து நிழல்பரப்பப்
பறவைநோய் உற்ற தேகொல்
அளியவா யச்சோவென் றோதியயன் மடமந்தி
யருவி யூற்றுந்
துளியநீர் வளைத்தகும்பின் முகந்தெடுத்துக்
கருங்கையினாற் சொரிவ மாதோ.

417. படவரவ மணியீன்று நொச்சிப்பா சிலையன்ன
பைந்தாண் மஞ்ஞை
பெடைதழுவி மணஞ்செய்ய மணவறையில்
விளக்கிடுவ பெருந்தண் கானத்
தடர்சிறைமென் குயிலோமென் றாரப்பமடக்
கிள்ளையெழுத் தைந்தும் ஓசை
தொடர்புபெற வுச்சரிப்பக் குருமொழிகேட்டாங்
குவப்ப தொடிக்கட் பூவை.

414. அவ்வாறு கடம்பவனத்தில் சென்றபோது அவனைப் பற்றிய பழியானது நீங்கியது. தான் சுமந்த பாரத்தை இறக்கியவன் போன்று இந்திரன் மிக்க மகிழ்வடைந்தான். இதனைத் தன் ஆசிரியனிடம் கூறினான். பந்தபாசத்தை அறுத்த அவ்வியாழபகவான் "இங்குச் சிறந்த தலமும் தூய தீர்த்தமும் உள்ளது. அவை நமக்குக் கிட்டுதல் வேண்டும்" என்று சொல்லி அவற்றைத் தேடச் சொல்லி சிலரை அனுப்பினான். பின்னர் அவ்விடம் விட்டு இந்திரன் அகன்றான்.

இந்திரன் கடம்ப வனத்தில் கண்டவை

415. அறிவில்லாத குரங்குகளும் அவ்விடத்தில் அருவியில் நீராடி, அவ்வருவி வீசிய மணியை எடுத்துப் பாறையில் வைத்து, நீரால் குளிப்பாட்டி, தம் கரிய விரல்களால் பறித்த பூக்களைச் சூட்டி கனிகளைப் பறித்து வைத்து வழிபாடு செய்தன. ஒரே நீர்த்துறையில் சிங்கங்களும், யானைகளும் தம் துதிக்கைகளால் நீரை மொண்டு ஒன்று மற்றொன்றிற்கு ஊட்டி மகிழ்ந்தன. புலியின் முலைப்பாலை மானின் கன்று பசியாற அருந்தி மகிழ்ந்தன.

416. வெயில் மிகுந்த வெளியிடங்களில் மிகுந்த துன்பத்துடன் பாம்புகள் நெளிந்தன. அதைக்கண்ட கருடன் ஒளி மாறாத சிறகுகளை விரித்துப் பாம்புக் குட்டிகட்கு நிழலைப் பரப்பின. அதனைக் கண்ட குரங்குகள் அறியாமையால், "ஐயோ! இப் பறவைக்கு நோய் வந்து விட்டதே! வெயிலில் துன்பமடைகிறதே" என்று கருதி அருவிகளில் உள்ள நீரை, சங்காகிய குடத்தில் மொண்டு எடுத்து வந்து சொரிந்தன.

417. நொச்சியின் பிளந்த இலையை ஒத்த கால்களை உடைய மயில்கள் பெண் மயில்களைக் கூடி மணம் செய்துக் கொண்டன. அம் மணவறையில் பாம்புகள் தம் மணிகளை உமிழ்ந்து விளக்காக்கின. அடர்ந்த சிறகுகளையுடைய குயில்கள், பெரிய காட்டின்கண் 'கூ' என்று கூவி நிற்கவும். இளமையுடைய கிளிகள் திரு ஐந்தெழுத்தினையும், தொடர்ச்சியாக உச்சரிக்கவும் வட்டமான கண்களையுடைய நாகணவாய்ப் பறவைகள் தம் குருவின் மொழியைக் கேட்டு மகிழ்வது போலும் மகிழ்வெய்தின.

418. இன்னவிலங் கொடுபுள்ளின் செயற்கரிய
செயனோக்கி யிறும்பூ தெய்திப்
பொன்னகரான் புளகமுடல் புதைப்பநிறை
மகிழ்ச்சியுளம் புதைப்பப் போவான்
அன்னபொழு தொற்றுவர்மீண் டடிவணங்கி
யின்சுவைப்பால் அருந்து வான்முன்
பின்னரிய தேன்சொரிந்தாங் குவகைமேற் பேருவகை
பெருகச் சொல்வார்.

419. எப்புவனத் திலுமென்றுங் கண்டறியா வதிசயமு
மெண்ணுக் கெய்தாத்
திப்பியமு மிக்கடம்ப வனத்தின்று கண்டுவகை
திளைத்தே மங்கண்
வைப்பனைய வொருபுனித வாவிமருங் கொருகடம்ப
வனத்தினீழல்
ஒப்பிலொளி யாய்முளைத்த சிவலிங்க மொன்றுள
தென் றுரைப்பக் கேட்டான்.

420. செவித்துளையி லமுதொழுக்கு முழையரொடும்
வழிக்கொண்டு சென்னிமேற்கை
குவித்துளமெய் மொழிகரணங் குணமூன்று
மொன்றித்தன் கொடிய பாவம்
அவித்துளயர் வொழிக்கமுளைத் தருள்குறிமேல்
அன்பீர்ப்ப வடைவான் கானங்
கவித்துளபூந் தடம்படிந்து கடம்பவனத்
துழைநுழைந்தான் கவலை தீர்வான்.

இந்திரன் சிவக்கொழுந்தைக் காணுதல்

418. இத்தகைய விலங்குகளோடு பறவைகள் செயல்களைக் கண்டு வியப்புற்று மகிழ்வானது உடல் முழுவதும் உண்டாகவும், நிறைந்த களிப்பானது உள்ளத்தை மூடவும் செல்லுகின்ற இந்திரனுக்கு இனிய சுவையையுடைய பாலை அருந்துகின்றவன், முன் கிடைத்தற்கரிய தேனைச் சொரிந்தது போன்று மகிழ்ச்சிக்கு மேல் மகிழ்ச்சியை உண்டாக்குகின்ற தன்மையாகச் சென்ற தூதுவர் திரும்பி வந்து அவனுடைய அடியை வணங்கிச் சொல்லத் தொடங்கினர்.

419. "அரசே! நாங்கள் எவ்வுலகத்திலும், எக்காலத்திலும் கண்டறியாத அதிசயமும் அளவைக்கு எட்டாத தெய்வத் தன்மையும் இக்கடம்ப வனத்தின்கண் இன்று கண்டு மகிழ்ச்சியில் மூழ்கினோம். என்னவெனில் சேமநிதி போன்று ஒரு தீர்த்தக்கரையின் பக்கத்தில், ஒரு கடம்ப மரத்தின் நிழலில் ஒப்பற்ற ஒளிப்பிழம்பாய்த் தோன்றிய சிவலிங்கம் ஒன்றுள்ளது" என்றனர்.

420. அதனைத் தன் செவிக்கு அமுதமெனக் கொண்டு பேரானந்தமடைந்த இந்திரன், ஒற்றர்களோடும் வழிக் கொண்டு கைக்களைத் தலையின்மேல் குவித்து மனமொழி மெய்களும் அந்தக் கரணங்களும் முக்குணங்களும் ஒன்றித் தன் கொடிய கொலைப் பாவமாகிய தீவினையைப் போக்கத் தோன்றியருளிய அருட்குறியாகிய சிவலிங்கத்தின் மீது அன்பானது இழுக்க இந்திரன் சென்றான். காடுகள் சூழ்ந்துள்ள பொற்றாமரைத் தீர்த்தத்தில் நீராடிக் கடம்பவனத்தினுள் புகுந்து தன் துன்பம் நீங்குவானாயினான்.

421. அருவாகி யுருவாகி யருவுருவங் கடந்துண்மை
யறிவா னந்த
உருவாகி யளவிறந்த வுயிராகி யவ்வுயிர்க்கோர்
உணர்வாய்ப் பூவின்
மருவாகிச் சராசரங்க ளகிலமுந்தன் னிடையுதித்து
மடங்க நின்ற
கருவாகி முளைத்தசிவக் கொழுந்தையா
யிரங்கண்ணுங் களிப்பக் கண்டான்.

422. கண்டுவிழுந் தெழுந்துவிழி துளிப்பவெழு
களிப்பென்னுங் கடலில் ஆழ்ந்து
விண்டுமொழி தழுதழுப்ப வுடல்பனிப்ப வன்புருவாய்
விண்ணோர் வேந்தன்
அண்டர்பிரா னருச்சனைக்கு வேண்டுமுப
கரணமெலா மகல்வா னெய்திக்
கொண்டுவரச் சிலரைவிடுத் தவரேகப் பின்னுமொரு
குறைவு தீர்ப்பான்.

423. தங்குடிமைத் தச்சனையோர் விமானமமைத்
திடவிடுத்தத் தடத்தின் பாற்போய்
அங்கணனைக் கடிதருச்சித் திடநறிய மலர்கிடையா
தயர்வா னந்தச்
சங்கெறிதண் டிரைத்தடத்தில் அரனருளாற்
பலபரிதி சலதி யொன்றிற்
பொங்குகதிர் பரப்பிமுளைத் தாலென்னப்
பொற்கமலம் பூப்பக் கண்டான்.

424. அன்புதலை சிறப்பமகிழ்ந் தாடினான் காரணத்தால்
அதற்குநாமம்
என்பதுபொற் றாமரையென் றேழுலகும்
பொலிகவென விசைத்துப் பின்னும்
மின்பதுமத் தடங்குடைந்து பொற்கமலங்
கொய்தெடுத்து மீண்டு நீங்காத்
தன்பிணிநோய் தணியமுளைத் தெழுந்தமுழு
முதன்மருந்தின் றன்பால் வந்து.

421. அருவமாகியும், உருவமாகியும் அருவுருவமாகியும் இவற்றைக் கடந்த சச்சிதானந்த வடிவாகியும், எண்ணற்ற உயிர்களாகியும், அவ்வுயிர்களின் அறிவுக்கோர் அறிவாகியும் நிற்றலின், மலரில் மணம் போலவும், சரமும் அசுரமும் ஆகிய அனைத்தும் தன்னிடம் தோன்றி அடங்க நின்ற மூல காரணமாகியும் தோன்றியருளிய சிவக் கொழுந்தினை தன் ஆயிரம் கண்ணும் களிப்படையும்படி பார்த்து மகிழ்ந்தான்.

422. உடனே தேவேந்திரன் கீழே விழுந்து பணிந்து எழுந்தான். ஆனந்தக் கண்ணீர் துளிக்க மகிழ்ச்சி என்னும் கடலில் மூழ்கி நாத் தழுதழுக்க துதிகள் கூறி உடல் நடுங்க அன்பு வடிவாகி, சோமசுந்தரக் கடவுளின் அருச்சனைக்கு வேண்டிய பொருள்கள் அனைத்தையும் விண்ணுலகத்திற்குச் சென்று கொண்டு வருமாறு சில தேவர்களை விடுத்தான். பின்பும் ஒரு குறையை நீக்கச் சொல்லத் தொடங்கினான்.

423. பிறகு இந்திரன் தம் குடிக்குரிய தேவதச்சனை அழைத்து ஒரு விமானம் அமைக்குமாறு ஏவினான். பிறகு அப் பொற்றாமரைத் தீர்த்தத்தின் அருகே சென்று சிவ பெருமானை விரைந்து வழிபட மலர்களைத் தேடினான். நல்ல மலர்கள் கிடைக்கப் பெறாமல் மனம் சோர்ந்தான். அப்போது சிவபெருமானின் திருவருளினாலே சங்குகளை வீசுகின்ற குளிர்ந்த அத் தீர்த்தத்தில் பல சூரியர்கள் ஒரு கடலில் ஒளிவீசித் தோன்றினாற் போலப் பொற்றாமரை மலர்கள் மலர்ந்திருப்பதைக் கண்டான்.

424. அன்பு மேலோங்க அத் தீர்த்தத்தில் நீராடினான். அக்குளத்தில் பொற்றாமரை மலர்ந்த காரணத்தினால் ‘பொற்றமரைப் பொய்கை’ என்ற பெயர் ஏழு உலகங்களிலும் விளங்கவேண்டுமென்று சொல்லி மீண்டும் அத் தீர்த்தத்தில் நீராடினான். அப் பொற்றாமரை மலரைப் பறித்து எடுத்துத் தன் கொடிய பழியாகிய நோய் கெடுமாறு முழுமுதலாய் எழுந்தருளியுள்ள சிவலிங்கப் பெருமான் சந்நிதியை அடைந்தான்.

425. மொய்த்தபுனக் காடெறிந்து நிலந்திருத்தி
வருமளவின் முளைத்த ஞான
வித்தனைய சிவக்கொழுந்தின் றிருமுடிமேற்
பரிதிகா மெல்லத் தீண்டச்
சிந்தநெகிழ்ந் திந்திரன்றன் வெண்கவிகைத்
திங்கணிழல் செய்வான் உள்ளம்
வைத்தனனப் போதிரவி மண்டலம்போ லிழிந்த
தொரு மணிவி மானம்.

426. கிரியெட்டு மௌமழையைக் கிழித்தெட்டும்
புழைக்கைமதிக் கீற்றுக் கோட்டுக்
கரியெட்டுஞ் சினமடங்க னாலெட்டு மெட்டெட்டுக்
கணமுந்தாங்க
விரியெட்டுத் திசைபரப்ப மயனிருமித் துதவியவவ்
விமானஞ் சாத்தி
அரியெட்டுத் திருவுருவப் பரஞ்சுடரை யருச்சிப்பான்
ஆயி னானே.

427. முந்தவம ருலகடைந்து பூசனைக்கு வேண்டுவன
முழுதுந் தேர்வார்
வந்துதரு வைந்தீ ன்ற பொன்னாடை மின்னுமிழு
மணிப்பூண் வாசச்
சந்தனமந் தாகினிமஞ் சனந்தூபந் திருப்பள்ளித்
தாமந் தீபம்
அந்தமிலா னைந்துநறுங் கனிதீந்தேன் றிருவமுத
மனைத்துந் தந்தார்.

428. தெய்வத்தா மரைமுளைத்த தடம்படிந்து
பவந்தொலைக்குந் திருநீ றாடித்
சைவத்தாழ் வடந்தாங்கி யன்புருவாய் அருளுவந்
தானாய்த் தோன்றும்
பைவைத்தா டரவார்த்த பசுபதியை யவனுரைத்த
பனுவ லாற்றின்
மெய்வைத்தா தரம்பெருக வருச்சனைசெய்
தானந்த வெள்ளத் தாழ்ந்தான்.

425. நெருங்கிய காடுகளை எல்லாம் வெட்டினான். நிலத்தைத் திருத்தினான். ஞானவித்தாகிய சிவக்கொழுந்தின் மேல் சூரியனின் கிரணங்கள் பட்டுக் கொண்டிருந்ததைக் கண்ட, இந்திரன் பெரிதும் வருந்தினான். தன், சந்திரனை யொத்த வெண்கொற்றக் குடையினால் நிழல் செய்ய எண்ணினான். அப்போது சூரிய மண்டலம் போல் தோற்றமளித்த ஒரு மாணிக்க விமானம் இறங்கியது.

426. முகிலைக் கிழித்து மேலோங்கும், தொளையுடைய கைகளையும், சந்திரனது பிளவு போன்ற கொம்பினையும் எட்டு மலைகளோ என்று எண்ணும்படியான எட்டு யானைகளும், முப்பத்திரண்டு சினமுடைய சிங்கங்களும், அறுபத்து நான்கு சிவகணங்களும் தாங்க, விரிந்த எட்டுத் திசைகளிலும் பரவி நிற்க தேவதச்சனால் ஆக்கிக் கொடுக்கப்பட்டது அவ்விமானம். இந்திரனானவன் அவ் விமானத்தைச் சுற்றி எட்டுத் திருவுருவங்களையுடைய பரஞ்சோதியை அருச்சனை செய்தான்.

427. அச்சமயத்தில் வழிபாட்டிற்குரிய பொருள்களைக் கொண்டுவர விண்ணுலகத்திற்குச் சென்றவர்கள், ஐந்தருக்களினாலே தரப்பட்ட பீதாம்பரம், ஒளியை வீசும் மணியாலாகிய அணிகலன்களும், மணம் மிக்க சந்தனம், கங்கை நீராகிய திருமஞ்சனம், நறும்புகை, திருப்பள்ளித் தாமம், திருவிளக்கு, அழிவில்லாத பஞ்ச கவ்வியம், இனிமையான பழங்கள், தேன், திருவமுது ஆகிய இவை அனைத்தையும் கொண்டு வந்தார்கள்.

சோமசுந்தரக் கடவுளைப் போற்றுதல்

428. தெய்வத்தன்மை பொருந்திய பொற்றாமரைத் தடாகத்தில் நீராடி, பிறவியை நீக்கும் திருநீற்றைப் பூசி, சைவ வேடத்திற்குரிய உத்திராக்கத மாலையை அணிந்து அன்பே வடிவாக, அருள் வடிவமாகத் தோன்றுகின்ற படம் எடுத்து ஆடும் பாம்பினைக் கட்டிய பசுபதியாகிய சிவலிங்கப் பெருமானை, அவன் திருவாய் மலர்ந்தருளிய ஆகம வழியால் உண்மையான அன்பானது பெருக பூசை செய்து இன்ப வெள்ளத்தில் மூழ்கினான்.

429. பாரார வட்டாங்க பஞ்சாங்க விதிமுறையாற்
பணிந்துள் வாய்மெய்
நேராகச் சூழ்ந்துடலங் கம்பித்துக் கும்பிட்டு
நிருத்தஞ் செய்து
தாராருந் தொடைமிதப்ப வானந்தக் கண்ணருவி
ததும்ப நின்றன்
பாராமை மீக்கொள்ள வஞ்சலித்துத் துதிக்கின்றான்
அமரர் கோமான்.

வேறு

430. அங்கணா போற்றி வாய்மை யாரணா போற்றி நாக
கங்கணா போற்றி மூல காரணா போற்றி நெற்றிச்
செங்கணா போற்றி யாதி சிவபரஞ் சுடரே போற்றி
எங்கணா யகனே போற்றி யீறிலா முதலே போற்றி.

431. யாவையும் படைப்பாய் போற்றி யாவையுந்
துடைப்பாய் போற்றி
யாவையு மானாய் போற்றி யாவையும் அல்லாய்
போற்றி
யாவையு மறிந்தாய் போற்றி யாவையு மறந்தாய்
போற்றி
யாவையும் புணர்ந்தாய் போற்றி யாவையும்
பிரிந்தாய் போற்றி.

432. இடருறப் பிணித்த விந்தப் பழியினின் றென்னை
யீர்த்துன்
அடியிணைக் கன்ப னாக்கு மருட்கடல் போற்றி
சேற்கண்
மடவரன் மணாள போற்றி கடம்பமா வனத்தாய்
போற்றி
சுடர்விடு விமான மேய சுந்தர விடங்க போற்றி.

429. இந்திரன் அட்டாங்க பஞ்சாங்க விதிமுறையால் நிலம் தோய்ந்து வணங்கி, மனம் மெய் மொழியென்னும் மூன்றும் ஒன்றுபட வலம்வந்து உடல் நடுங்கி, தொழுது கூத்தாடினான். மலர்களால் மறைந்த மாலையானது மிதக்கும்படி கண்களில் இருந்து இன்ப அருவியானது பெருக உருகி நின்று அன்பு மேலோங்க வணங்கித் துதித்துப் போற்றினான்.

430. அழகிய கண்களையுடைய பெருமானே வணக்கம்! அனைத்தையும் அழிப்பவனே வணக்கம்! பாம்பைக் கங்கணமாய் அணிந்தவனே வணக்கம்! மூலகாரணனே வணக்கம்! நெற்றியில் சிவந்த கண்ணுடையவனே வணக்கம்! முதலாய் உள்ள சிவமாகிய பரஞ்சோதியே வணக்கம்! எங்கள் தலைவனே வணக்கம்! முடிவில்லாத முதற்பொருளே வணக்கம்!

431. அனைத்தையும் ஆக்குபவனே வணக்கம்! அனைத்தையும் அழிப்பவனே வணக்கம்! எல்லாமும் ஆனவனே வணக்கம்! அவை முற்றும் அல்லாதவனே வணக்கம்! எல்லாவற்றையும் உணர்ந்தவனே வணக்கம்! அவை முற்றும் அறியாதவனே வணக்கம்! எல்லாவற்றிலும் கலந்துள்ளவனே வணக்கம்! அவை ஒன்றுள்ளும் கலவாதவனே வணக்கம்!

432. துன்பத்தை அடையுமாறு பற்றிய இந்தக் கொலைப் பாவமானது அடியேனை விட்டு நீங்கும்படி செய்து, உன் இரண்டு திருவடிகட்கும் அன்பனாகச் செய்த கருணைக்கடலே வணக்கம்! மீன் போன்ற கண்களையுடைய அங்கயற்கண்ணம்மையின் நாயகனே வணக்கம்! பெரிய கடம்பவனத்தை யுடையவனே வணக்கம்! ஒளிவீசும் விமானத்தில் எழுந்தருளியுள்ள 'சுந்தர விடங்க'னே வணக்கம்!

433. பூசையும் பூசைக்கேற்ற பொருள்களும் பூசை
செய்யும்
நேசனும் பூசை கொண்டு நியதியின் பேறு நல்கும்
ஈசனுமாகிப் பூசை யான்செய்தேன் என்னுமென் போத
வாசனை யதுவுமான மறைமுத லடிகள் போற்றி.

434. என்னநின் றேத்தி னானை யின்னகை சிறிது
தோன்ற
முன்னவ னடியார் எண்ண முடிப்பவ னருட்க
ணோக்கால்
உன்னது வேட்கை யாதிங் குரையென விரையத்
தாழ்ந்து
சென்னிமேற் செங்கை கூப்பித் தேவர்கோ
னிதனை வேண்டும்.

435. ஐயநின் னிருக்கை யெல்லைக் கணியனாம் அளவி
னீங்கா
வெய்யவென் பழியி னோடு மேலை நாளடியேன்
செய்த
மையல்வல் விளையு மாய்ந்துன் மலரடி வழுத்திப்
பூசை
செய்யவு முரிய னானேன் சிறந்தபே றிதன்மேல்
யாதோ.

436. இன்னநின் பாதப் போதே யிவ்வாறே யென்றும் பூசித்
துன்னடி யாருள் யானு மோரடித் தொண்டன் ஆவேன்
அன்னதே யடியேன் வேண்டத் தக்கதென் றடியில்
வீழ்ந்த
மன்னவன் றனக்கு முக்கண் வரதனுங் கருணை
பூத்து

433. பூசையும், பூசைக்கேற்ற பொருள்களும், பூசை செய்யும் அன்பனும், பூசையை ஏற்றுக்கொண்டு முறைப்படி பயனை அருளுகின்ற இறைவனும் ஆகிப் பூசை யான் செய்தேன் என்கின்ற என்னுடைய வாசனையுமான வேத முதலாகிய இறைவனே, வணக்கம்!

இந்திரனின் வேண்டுகோள்

434. இவ்வாறு இந்திரன் போற்றித் துதித்ததும் யாவர்க்கும் முதல்வனும், அடியார்கள் எண்ணியதை எண்ணியவண்ணம் முடிப்பவனுமாகிய சோமசுந்தரக் கடவுள் வெளிப்பட்டுப் புன்னகை புரிந்து அருள் நோக்கோடு, "உன்னுடைய விருப்பம் யாது? இங்குச் சொல்வாய்" என்று சொன்னார். தேவேந்திரன் தலைமேல் கைகளைக் கூப்பித் தாழ்ந்து வணங்கி வேண்டத் தொடங்கினான்.

435. "ஐயனே! உன்னுடைய இருப்பிடத்திற்கு, பக்கத்தில் வந்தவுடனே என் கொடிய கொலைப் பாவமும் முற்பிறவியில் நான் செய்த மயக்கத்தையுடைய வலிய தீவினையும் அழிந்தது. நின் தாமரை மலர் போன்ற திருவடிகளைத் துதித்துப் பூசை செய்யவும் தகுதியுடையவனானேன். இதனைக் காட்டிலும் பெறத்தக்க சிறந்த பேறு யாது உளது?

436. இவ்வாறே இந்த நின் திருவடித் தாமரைகளையே வழிபட்டு உன் தொண்டருள்ளே யானும் ஒரு அடித்தொண்டன் ஆவேன். அதுவே நான் வேண்டுவது" என்று திருவடியில் விழுந்து வணங்கி விண்ணப்பம் செய்தான். முக்கண்ணுடைய வள்ளலாகிய அப்பெருமானும் அவ்விந்திரனுக்கு அருள் சுரந்தான்.

வேறு

437. இருதுவிற் சிறந்த வேனிலு மதியா றிரண்டிச்
சிறந்தவான் றகரும்
பொருவிறா ரகையிற் சிறந்தசித் திரையுந்
திதியினிற் சிறந்தபூ ரணையும்
மருவுசித் திரையிற் சித்திரை தோறும் வந்துவந்
தருச்சியோர் வருடந்
தெரியுநாண் முந்நூற் றறுபது மைந்துஞ் செய்தவர்ச்
சனைப்பயன் எய்தும்.

438. துறக்கநா டணைந்து சுத்தபல் போகந் துய்த்துமேன்
மலபரி பாகம்
பிறக்கநான் முகன்மான் முதற்பெருந் தேவர்
பெரும் பதத் தாசையும் பிறவும்
மறக்கநாம் வீடு வழங்குதும் என்ன வாய்மலர்ந்
தருளிவான் கருணை
சிறக்கநால் வேதச் சிகையெழு மநாதி சிவபரஞ்
சுடர்விடை கொடுத்தான்.

439. மூடினான் புளகப் போர்வையால் யாக்கை முடிமிசை
யஞ்சலிக் கமலஞ்
சூடினான் வீழ்ந்தான் எழுந்துகண் ணருவி
பன்முறை துதிசெய்
தாடினா னைய னடிபிரி வாற்றா தஞ்சினா
னவனரு ளாணை
நாடினான் பிரியாவிடைகொடு துறக்க நண்ணினான்
விண்ணவர் நாதன்.

சிவபெருமான் திருவருள் செய்தல்

437. "பருவங்களுள் உயர்ந்தது வேனிற் பருவம். மாதம் பன்னிரெண்டுள் மிகச் சிறந்தது சித்திரை. நட்சத்திரத்துள் சிறந்தது சித்திரை. திதிகளில் சிறந்தது பௌர்ணமி ஆகிய இவைகள் கூடிய சித்திரை மாதத்தின் சித்திரைப் பௌர்ணமி நாள்தோறும் வந்து பூசை செய்வாயாக. அப்படிச் செய்தால் ஒரு ஆண்டிற்குரிய முன்னூற்றறுபத்தைந்து நாட்களிலும் வந்து பூசை செய்ததற்குரிய பயன் கிடைக்கும்.

438. "இனி நீ சுவர்க்க லோகத்தை யடைந்து, தூய பல இன்பங்களைத் துய்த்து வாழக்கடவை. பின்பு உனக்கு மலபரிபாகம் உண்டாக, திருமால், பிரமன் முதலிய பெரும் தேவர்களின் பதவியில் உள்ள விருப்பமும் மற்றைய விருப்பமும் ஒழிய நாம் வீடுபேற்றை அருளுவோம்" என்று திருவாய் மலர்ந்தருளினார். நான்கு மறைகளின் முடிவில் விளங்கும் அனாதியாகிய சிவபரஞ்சோதியானவர் இந்திரனுக்கு விடை கொடுத்து அனுப்பி விட்டு இலிங்கத்துள் மறைந்தருளினார்.

தேவேந்திரன் மீண்டும் ஆட்சி புரிதல்

439. தேவேந்திரன் உடலெங்கும் புளகம் கொள்ளத் தலையின் மேல் தாமரைக் கைகளைக் குவித்தான். கீழே விழுந்து வணங்கினான். எழுந்து கண்களில் இருந்து ஆனந்தக் கண்ணீர் பெருகி நின்றான். பலமுறை துதி மொழி கூறிக் கூத்தாடினான். சோமசுந்தரக் கடவுளின் திருவடிகளைப் பிரிவதற்கு ஆற்றாமல் அஞ்சினான். அவன் அருளிய ஆணையை நாடி உள்ளம் பிரியா விடை பெற்றுக் கொண்டு பொன்னுலகை அடைந்தான்.

440. வந்தரமங் கையர் கவரி மருங்கு வீச மந்தார
கற்பகப்பூ மாரி தூற்ற,
அந்தரநாட் டவர்முடிகள் அடிகள்சூட வயிராணி
முலைத்த டந்தோய்ந் தகலந் திண்டோள்
விந்தமெனச் செம்மாந்து விம்மு காம
வெள்ளத்து ளுடலழுந்தவுள்ளஞ் சென்று
சுந்தரநா யகன் கருணை வெள்ளற் தாழ்ந்து தொன்
முறையின் முறைசெய்தான் துறக்க நாடன்

இந்திரன் பழிதீர்த்தப் படலம் முற்றிற்று

2. வெள்ளை யானையின் சாபம் தீர்த்த படலம்

441. மட்டவிழுங் கொன்றைச் சடையான் மகவானைத்
தொட்ட பழியின் றொடக்கறுத்த வாறீது
பட்டமத வேழம் பரனைப் பராய் முனிவன்
அட்டகொடுஞ் சாபநீத் தேகியவாறு ஒதுவாம்.

442. கருவா சனைகழிக்குங் காசிநகர் தன்னிற்
றுருவாச வேதமுனி தொல்லா கமத்தின்
பெருவாய்மை யாற்றன் பெயர் விளங்க வீசன்
ஒருவா விலிங்க வொளியுருவங் கண்டான்

440. அங்கு அவனுக்கு தேவ மகளிர் இருபக்கத்திலும் வந்து சாமரை வீசினர். தேவர்கள் மந்தார மலர்களையும் கற்பக மலர்களையும் சொரிந்து அடி வணங்கினர். இந்திராணியின் பெரிய கொங்கைகளில் அழுந்தி, மார்பும் வலிய தோள்களும் விந்தமலையைப் போல் இறுமாந்து பெரிய காமவெள்ளத்துள் மூழ்கினான். மனமானது சோமசுந்தரக் கடவுளைச் சிறிதும் மறவாமல் அருள் வெள்ளத்தில் நீந்தியது. இத்தகைய தன்மைகளோடு தேவ உலகத்தினையுடைய இந்திரன் பழைய முறைப்படியே அரசு புரிந்தான்.

இந்திரன் பழி தீர்த்த படலம் முற்றிற்று

2. வெள்ளை யானையின் சாபம் தீர்த்த படலம்

441. வாசனைமிக்க கொன்றை மலர் மாலையை அணிந்த இறைவன். இந்திரனைப் பிடித்த பாவத்தைத் தீர்த்தது இதுவாகும். இனிமேல் நெற்றிப் பட்டத்தினையும் மதப் பெருக்கையும் உடைய வெள்ளை யானையானது சோம சுந்தரப் பெருமானை வழிபட்டு, துருவாச முனிவனால் இடப்பட்ட கொடிய சாபத்தினை நீக்கிக் கொண்ட வரலாற்றைச் சொல்வோம்.

442. பிறவியை நீக்கக்கூடிய காசி நகரத்திலே வேதங்களை அறிந்த துருவாச முனிவன் பழைய ஆகமத்தின் சிறந்த உண்மையை இறைவனின் நீங்காத ஒளி வடிவாகிய சிவலிங்கத் திருவுருவத்தைத் தன் பெயர் விளங்குமாறு நிறுவினான்.

443. இன்புற் றருச்சனைசெய் தேத்துவான் அவ்வேலை
அன்புக் கெளிய னருளாற் றிருமுடிமேன்
மின்பொற் கடிக்கமலப் போதொன்று வீழ்த்திடலுந்
தன்பொற் கரகமலப் போதலர்த்தித் தாங்கினான்.

444. தாங்கிக்கண் சென்னி தடமார் பணைத்துடலம்
வீங்கித் தலைசிறந்த மெய்யுவகை மேற்கொள்ள
நீங்கிக் கழிந்த கருணை நிதியனையான்
பூங்கற் பகநாட்டிற் போகின்றான் அவ்வேலை.

445. சங்கலறச் செங்களத்துத் தானவரைத்
தேய்த்துவிறற்
கொங்கலர்தார் வேய்ந்தமரர் கோமான்றன் கோநகரிற்
செங்கண் அமரர்பெருஞ் சேனைக் கடல் கலிப்ப
மங்கலப்பல் லாண்டு மறைமுழங்க வந்தணைவான்.

446. எத்திக்குங் கல்லென் றியங்கலிப்ப வேந்திழையார்
தித்தித்து அமுதொழுக்குங் கீதஞ் செவிமடுப்பப்
பத்திக் கவரிநிரை தானைபடுகடலிற்
றத்திப் புரளுந் திரைபோற் றலைபனிப்ப.

முனிவன் தாமரை மலர் பெறுதல்

443. அந்த இலிங்கத்தைத் தினம் அருச்சனை செய்து துதித்து வரத் தொடங்கினான். அப்போது அடியார்களின் அன்புக்கு எளியவனாகிய இறைவன் தனது திருவருளால் தன் திருமுடியில் இருந்து ஒளியையுடைய பொன்னிறமான மணம் பொருந்திய தாமரை மலர் ஒன்றை விழச் செய்தான். உடனே தனது கைத்தாமரையை விரித்து அதனை அம் முனிவன் தாங்கிக் கொண்டான்.

444. அதனை ஏந்திக் கொண்ட அம்முனிவன் தன் கண், தலை, மார்பு போன்ற இடங்களில் ஒற்றி உடல் பூரித்து மிக அதிகமான மகிழ்வு உண்டாக அவ்விடம் விட்டு நீங்கிப் பொலிவுடைய கற்பக மரம் திகழும் தேவருலகத்திற்குச் சென்றான்.

தாமரை மலரை இந்திரனுக்கு அளித்தல்

445. வெற்றிச் சங்கு முழங்க, போர்க்களத்தில் அவுணர்களை ஒழித்து, மணம்மிக்க வெற்றிமாலை சூடி தேவேந்திரன் தனது தலைநகரமாகிய அமராவதியில், தன்னுடைய பெரிய சேனை ஒரு புறம் ஒலி செய்யவும், மங்கலமாகிய வேதம் மறுபக்கம் ஒலி செய்யவும் பவனி வருகின்றான்.

446. எல்லாப் பக்கங்களிலும் 'கல்' லென்ற ஓசையோடு வாத்தியங்கள் முழங்கவும், அணிகள் பூண்ட தேவ மகளிரின் அமுதம் போன்ற இனிமையான இசை மறுபுறம் ஒலிக்கவும், ஆழமான கடலில் தத்திப்புரளும் அலைபோல, சேனையாகிய கடலில் வரிசையாகிய சாமரைக் கூட்டங்கள் அசைந்து புரள அவன் பவனி வந்து கொண்டிருந்தான்.

447. அங்கட் கடலி னெடுங்கூம் பகநிமிர்ந்த
வங்கத் தலையுய்க்கு மீகான் றனைமானத்
திங்கட் குடைநிழற்றத் தீந்தே மதங்கவிழ்க்கும்
வெங்கற் களிற்றின் மிசைப்பவனி போந்தணைந்தான்.

448. அத்தலைவிண் ணாடர் அருகணைந்து வெவ்வேறு
தத்த மனக்கிசைந்த கையுறைக டாங்கொடுத்துக்
கைத்தலங்கள் கூப்பினார் கண்டார் கடவுளரில்
உத்தமனை யர்ச்சித்துப் போந்தமுனி யுத்தமனும்.

449. தீங்கரிய வாசிமொழி செப்பித்தன் செங்கரத்தின்
நீங்கரிய தாமரையை நீட்டினான் மற்றதனைத்
தாங்கரிய செல்வத் தருக்காலோர் கையோச்சி
வாங்கிமத யானையின்மேல் வைத்தான் மதியில்லான்.

450. கீறிக் கிடந்த மதியனைய கிம்புரிகோட்
டூறிக் கடங்கவிழ்க்கு மால்யானை யுச்சியின்மேல்
நாறிக்கிடந்த நறுமலரை வீழ்த்தியுரற்
சீறிக்கிடந்த நெடுந் தாளாற் சிதைத்தன்றே.

451. கண்டான் முனிகாமற் காய்ந்தா னுதற்கண்போல்
விண்டார் அழல்சிதற நோக்கினான் வெங்கோபங்
கொண்டா னமர ரொதுங்கக் கொதித்தாலம்
உண்டா னெனநின் றுருத்தா னுரைக்கிறான்.

447. அழகிய கடலின்கண், நீண்ட பாய்மரம் கப்பலின் தலையிலிருந்து அதனைச் செலுத்தும் மாலுமியைப் போன்று காட்சியளிக்க, சந்திர வட்டக்குடை நிழலைச் செய்ய இந்திரன் இனிய மதத்தினைக் கொட்டுகின்ற வெள்ளை யானையின் மேல் பவனி வந்தான்.

448. அப்போது தேவர்கள் இந்திரன் அருகில் வந்து தங்களுக்கு விருப்பமான கையுறைகளைக் கொடுத்தனர். கைகளைக் குவித்து அவனை வணங்கினார்கள். தேவர்களில் சிறந்தவனாகிய சிவபெருமானை வழிபட்டு வந்த துருவாச முனிவரும் அதனைக் கண்டான்.

449. அம்முனிவன் இந்திரனுக்குத் தன் குற்றமற்ற வாழ்த்து மொழிகளைக் கூறித் தன் கையில் இருந்த தாமரை மலரைக் கொடுத்தான். அம்மலரைத் தனக்குரிய மிகப்பெரிய செல்வச் செருக்கினால் அறிவில்லாமல் இந்திரன் தன் ஒரு கையை நீட்டி வாங்கி மதத்தையுடைய தன் யானையின் மேல் வைத்தான்.

450. வளைந்த கொம்பையும், மதத்தைச் சொரிந்து கொட்டும் மயக்கத்தையுமுடைய அவ்வெள்ளை யானை தன் தலையின் மீது மணம் வீசிக் கொண்டிருந்த தாமரை மலரை கீழே தள்ளித் தன் உரல் போன்ற பெரிய காலால் தேய்த்தது.

துருவாச முனிவன் சாபம் அளித்தல்

451. அதனைத் துருவாச முனிவன் கண்டான். மன்மதனை எரித்த நெற்றிக்கண் போல நெருப்புச் சிதறவிழித்து நோக்கினான். கொடிய சினம் கொண்டான். தேவர்கள் அஞ்சி ஒதுங்கும்படி பொங்கிய நஞ்சினையுண்ட சிவபெருமானைப் போலக் கோபம் கொண்டு சொல்லத் தொடங்கினான்.

452. புள்ளியதோ லாடை புனைந்தரவம் பூணணிந்த
வெள்ளிய செங்கண் விடையான் அடிக்கமலம்
உள்ளிய மெய்யன் புடையா ரருவருத்துத்
தள்ளிய செல்வத் தருக்கினா யென்செய்தாய்.

453. கதிர்த்தார் முடியமரர் கையுறையே நன்கு
மதித்தா யெம்மீசன் மதிமுடிமேற் சாத்தும்
பொதித்தா தவிழ்மலரைப் போற்றாது வாங்கி
மிதித்தானை சிந்தவநன் மேல்வைத்தாய் பேதாய்.

454. வண்டுளருந் தண்டுழாய் மாயோன் இறுமாப்பும்
புண்டரிகப் போதுறையும் புத்தே ளிறுமாப்பும்
அண்டர்தொழ வாழுன் னிறுமாப்பு மாலாலம்
உண்டவனைப் பூசித்த பேறென் றுணர்ந்திலையால்.

455. சேட்டானை வானவநின் சென்னி செழியரிலோர்
வாட்டானை வீரன் வளையாற் சிதறுகநின்
கோட்டான நாற்கோட்டு வெண்ணிறத்த குஞ்சரமும்
காட்டானை யாகவென விட்டான் கடுஞ்சாபம்.

456. சவித்தமுனி பாதந் தலைக்கொண்டு செங்கை
குவித்தமரர் தங்கோன் குறையிரப்பா ரைய
அவித்தபொறி யாயெம் மரகுங்கா றள்ளுஞ்
செவித்தறுகண் வேழமுந் தீங்குடையர் அன்றோ.

452. "புள்ளிகளையுடைய தோலாடையை உடுத்து பாம்புகளை அணிந்த, சிவந்த கண்களையுடைய இடப வாகனத்தையுடைய சிவபெருமானுடைய திருவடித் தாமரைகளை இடைவிடாது நினைக்கின்ற அன்பர்கள், வெறுத்து நீக்கிய செல்வத்தையுடையவனே! என்ன காரியம் செய்தாய்?

453. "அறிவில்லாதவனே! தேவர்களின் கையுறையே பெரியதென மதித்தாய். எம் சிவபெருமானுடைய பிறையுடைய திருமுடிமேல் சாத்தப்பட்ட நிறைந்த மகரந்தத்தோடு மலர்ந்த மலரைப் போற்றாது, ஒரு கரத்தால் வாங்கி, யானையானது மிதித்துச் சிதைக்குமாறு அந்த யானையின் மேல் வைத்தாய்.

454. "வண்டுகள் மொய்க்கும் குளிர்ந்த துழாய் மாலையை அணிந்த திருமாலின் மகிழ்வும் தாமரை மலரில் இருக்கும் பிரம தேவனின் மகிழ்வும், தேவர்கள் தொழ வாழுகின்ற உன் இறுமாப்பும், ஆலகாலம் உண்ட பெருமானை வழிபட்டதால் உண்டான பயன் என்று நீயறியாது போய்விட்டாய்.

455. "பெரிய வெள்ளை யானையையுடைய இந்திரனே! பாண்டியர்களுள் வாளையும் பெரிய சேனையையும் உடைய ஒரு வீரனின் சக்கரத்தால் (திகிரி) சிதறக் கடவது. வலிமையையும், மதத்தையும் நான்கு கொம்புகளையும், வெண்மையான நிறத்தையும் உடைய உன்னுடைய யானையானது காட்டானையாகக் கடவது" என்று கொடிய சாபம் இட்டான்.

சாபத்தை மாற்றியருள வேண்டுதல்

456. அவற்றைக் கேட்ட தேவர்கள் நடுநடுங்கி, துருவாச முனிவருடைய பாதங்களில் விழுந்து, தம் சிவந்த கைகளைக் கூப்பி வணங்கித் தம் தலைவன் பொருட்டு குறையிரந்து வேண்டிக் கொண்டனர். ஐம்பொறிகளையும் வென்ற ஐயனே! எம் அரசனும், காற்றை வீசும் காதையுடைய வெள்ளை யானையும் குற்றம் உடையவர்களே!

457. அத்தகைய நீராற் சபித்தீ ரடிகேண்மற்
றித்தகைய சாப மினிவிடுமின் என்றிரந்து
கைத்தலங்கள் கூப்பிக் கரைந்தார்க் கிரங்கியருள்
வைத்த முனிபிறிது சாபம் வகுக்கின்றான்.

458. சிந்தனை வாக்கிற் கெட்டாச் சிவனருள்
அளித்த சேட
நிந்தனை பரிகா ரத்தா னீங்காது தலைமட் டாக
வந்தது முடிமட் டாக மத்தமா வனமா வாகி
ஐந்திரு பஃதாண் டெல்லை யகன்றபின்
பண்டைத் தாக

459. என்றனன் பிறிது சாபம் இந்திரன் மகுட பங்கம்
ஒன்றிய செய்கை பின்ன ருரைத்துமற் றஃது நிற்க
நின்றவெள் ளானை வான நீத்தறி விழுந்து நீலக்
குன்றென வனத்து வேழக் குழாத்தொடு
குழீ இய தன்றே.

460. மாவொடு மயங்கிச் செங்கண் மறம்பயில் காடு
முல்லைப்
பூவொடு வழங்கு நீத்தப் புறவமுங் குறவர் தங்கள்
தேவொடு பயிலுங் கல்லுந் திரிந்துநூ றியாண்டுஞ்
செல்லக்
காவொடு பயிலுந் தெய்வக் கடம்பமா வனம்புக்
கன்றே.

457. அக்குற்றத்தால் சாபமிட்டீர். அடிகளே! யாங்கள் வேண்டிக் கொண்டமையால் இச்சாபத்தை இப்போதே நீக்கியருள வேண்டும்" என்று குறையிரந்து கைகளைக் குவித்து வேண்டினர். அத்தேவர்களின் பொருட்டு மனம் இரங்கிக் கருணை கூர்ந்த முனிவன் வேறு சாபம் இடுகின்றான்.

458. "மனத்திற்கும் வாக்கிற்கும் எட்டாத பெருமான் தான் தன் திருவருளால் அருளிய பிரசாதத்தை நிந்தித்த குற்றம் பரிகாரத்தால் நீங்காது. தலையளவாக வந்து முடியளவாக மாறும். மதமயக்கத்தையுடைய வெள்ளை யானை காட்டானையாகி நூறாண்டு கழிந்தபின் முன்னியல்பை உடையதாக மாறும்" என்றான்.

459. சாபத்தினால் இந்திரன் மகுடபங்கம் உள்ள செய்தியைப் பின்னர் கூறுவோம். சாபம் பெற்ற வெள்ளை யானையானது தேவ உலகினைவிட்டு நீங்கி அறிவிழந்து 'நீலமலை' போலும் கருமையாகி காட்டானைக் கூட்டத்தோடு கலந்தது.

காட்டானை பழைய வடிவம் பெறுதல்

460. காட்டானையோடு கலந்து சிவந்த கண்களையுடைய மறவர்கள் தங்கிய பாலை நிலத்திலும், வெள்ளம் போன்று முல்லைப் பூக்களோடு செல்லும் காட்டாறுகளை உடைய முல்லை நிலத்திலும், முருகப் பெருமானைத் தெய்வமாகக் கொண்ட குறவர்கள் வாழும் குறிஞ்சி நிலத்திலும் திரிந்து நூறாண்டுகளையும் கழித்தது. பின்னர் சோலைகளால் சூழப் பெற்ற தெய்வத் தன்மையுடைய கடம்ப வனத்தில் புகுந்தது.

461. புக்குரல் வட்டத் திண்காற் பொருவிறே வியலிற்
றீர்ந்த
மைக்கருங் களிறு முக்கண் மாதவன் அருள்வந்
தெய்தத்
தக்கதோ ரமையஞ் சார மரகதந் தழைத்து மின்னு
நக்கபொன் முளரி பூத்த நளிர்கயந் தலைக்
கண் டன்றே.

462. கண்டபோ தறிவு தோன்றக் கயந்தலைக்
குடைந்த போது
பண்டைய வடிவந் தோன்றப் பரஞ்சுடர்
அருட்கண் டோன்றக்
கொண்டதோர் பரமா னந்தக் குறியெதிர்
தோன்றக் கும்பிட்
டண்டர்நா யகனைப் பூசை செய்வதற் கன்பு தோன்ற.

463. தூம்புடைக் கையான் மொண்டு மஞ்சனத் தூநீ
ராட்டித்
தேம்புடை யொழுகப் பள்ளித் தாமமுந் தெரிந்து
சாத்திப்
பாம்புடைத் தாயவேணிப் பரனையர்ச் சிக்கவுள்ளத்
தாம்புடை யறிந்த வெந்தை யானையை
நோக்கிக் கூறும்.

464. வந்தனை யெவனீ வேண்டும் வரமெவன் உரைத்தி
யென்னச்
சிந்தையி லன்பு கூர்ந்த தெய்வத வேழந் தாழ்ந்து
முந்தையில் விளைவும் வந்த முறைமையு
முறையாற் கூறி
எந்தையை யடையப் பெற்றேற் கினியொரு
குறையுண் டாமோ.

461. தெய்வத் தன்மை நீங்கியதால் மை போன்ற நிறத்துடன் திகழும் உரல் போன்ற வட்டமான கால்களை உடைய அந்த யானையானது, மூன்று கண்களையுடைய சிவபெருமானின் திருவருள் பெறும் காலம் வந்து கூடியதால், மரகதம் போலும் இலை தழைத்து மின் போலும் ஒளி விளங்கும் பொற்றாமரைகள் மலர்ந்த தடாகத்தைக் கண்டது.

462. அக்குளத்தைக் கண்டவுடன் முன்னறிவு உண்டாகவும், அக்குளத்தில் நீராடியது. உடனே காட்டானை வடிவம் நீங்கித் தன் பழைய வடிவம் பெற்றது. பரஞ்சோதியின் அருள்பார்வை தோன்றுதலால் பேரானந்தம் கொண்டது. அப்பொழுது சிவபெருமானின் திருவருளினாலே சொக்கலிங்க மூர்த்தி எதிரே தோன்ற அவ்வெள்ளையானை கண்டு வணங்கியது. பிறகு அப்பெருமானைப் பூசிக்க எண்ணியது.

சோமசுந்தரக் கடவுள் திருவருள் புரிதல்

463. தொளையையுடைய தன் துதிக்கையால் பொற்றாமரை நீரை முகர்ந்து வந்து திருமஞ்சனமாகிய தூய நீரால் அச் சிவலிங்கத்தைக் குளிப்பாட்டியது. தேன் ஒழுகும் சிறந்த மலர்களை ஆராய்ந்து திருப்பள்ளித் தாமமாகச் சாத்தியது. பாம்பினை அணிந்த சடையினை உடைய இறைவனை அன்போடு இவ்வாறு வழிபட்டது. வெள்ளை யானையினது அன்பின் பெருக்கை உணர்ந்த எம் தந்தையாகிய சோமசுந்தரப் பெருமான் வெளிப்பட்டு யானையைப் பார்த்துப் பின்வருமாறு அருளிச் செய்தார்.

464. "நீ இங்கு வந்த காரணம் யாது? உனக்கு வேண்டும் வரம் யாது? சொல்வாயாக!" என்று கேட்டார். உள்ளத்தில் அன்பு பொங்க வெள்ளை யானை, தாழ்ந்து வணங்கி முன்னர் நிகழ்ந்ததுவும், தாம் வந்த விதத்தையும் முறையாக எடுத்துக் கூறியது. பின், "எந்தையே! உம்மை அடையப் பெற்ற தமியேனுக்கு இனி ஒரு குறை உண்டாகுமோ?

465. என்பதா மாரம் பூண்ட வெந்தையிக் கரிக ளெட்டோ.
டொன்பதா யடிய னேனு முன்னடி பிரியா துன்றன்
முன்பதா யிவ்வி மான முதுகுறச் சுமப்ப லென்றோர்
அன்பதா யொன்றென் னுள்ளத் தடுத்ததா லஃதே
வேண்டும்.

466. இடையறா வன்பின் வேழ மிங்ஙனங் கூற விண்ணா
டுடையவ னம்பான் மெய்யன் புடையவன்
அவனைத் தாங்கி
அடைவதே நமக்கு வேண்டு மகமகிழ் வென்னாப்
பின்னும்
விடையவள் வரங்க ணல்கி விடைகொடுத்
தருளி னானே.

467. விடைகொடு வணங்கி யேகும்வெள் ளானை
மேற்றிசை யடைந்துதன் பெயராற்
றடமுமற் றதன்பால் ஆனையுங் கணேசன்
றன்னையுங் கண்டருச் சனைசெய்
திடையறா வன்புந் தானுமங் கிருக்கு மெல்லையிச்
செய்திகேட் டருள்கூர்
கடவுளர் பெருமா னுழையரை விளித்தெங்
களிற்றினைக் கொணர்கென விடுத்தான்.

468. வல்லைவந் தழைத்தார் தம்மைமுன் போக்கி
வருவ லென் றெழுந்துகீழ்த் திசையோர்
எல்லைவந் தோரூர் தன்பெய ராற்கண் டிந்திரேச்
சுரனென விறைவன்
றொல்லைவண் பெயரா லொன்றுகண் டரனைத்
தூயபூ சனைசெய்தல் கிருப்பக்
கல்லைவன் சிறகு தடிந்தவன் இன்னுங் களிறுவந்
திலதெனப் பின்னும்.

465. "எலும்பணியைப் பூண்ட எந்தையே! இவ்விமானத்தைத் தாங்குகின்ற இந்த எட்டு யானைகளோடு நானும் ஒருவனாகி உன் திருவடியைப் பிரியாது உமக்கெதிரே இவ்விமானத்தை என் முதுகால் தாங்க விரும்புகின்றேன். ஒப்பற்ற அன்பு ஒன்று உண்டாகி என் நெஞ்சில் பொருந்துதலால் அதுவே எனக்கு வேண்டும்" என்றது.

466. நீங்காத அன்பினையுடைய அவ்வெள்ளை யானை இதனைக் கூறி வேண்ட சோமசுந்தரக் கடவுள் யானையின்மீது கடைக்கண் சாத்தி, "தேவேந்திரன் நம்மிடம் மெய்யன்பு பூண்டவன். ஆதலால் அவனைச் சுமந்து செல்வதே எனக்கு பெருமகிழ்ச்சி உண்டாக்கும் செயலாகும்" என்று கூறிப் பின்னரும் வேண்டிய வரங்கள் பலவற்றை அளித்து விடை கொடுத்தனுப்பினார்.

வெள்ளை யானையின் சிவத் தொண்டு

467. பிறகு வெள்ளை யானை வணங்கி விடை பெற்று கொண்டு சொக்கலிங்கமூர்த்திக்கு மேற்குத் திசையினை அடைந்து அங்கே தன் பெயரினால் ஒரு பொய்கையினையும், (ஐராவதத் தீர்த்தம்) அதன் கரையில் சிவபெருமானையும் மூத்த பிள்ளையாரையும் பிரதிட்டை செய்து இடையறாத அன்போடு பூசித்தது. இச்செய்தியைக் கேள்விப்பட்ட இந்திரன் தன் ஏவலாளரை அழைத்து "எம் வெள்ளை யானையைக் கொண்டு வருக" எனக் கூறி அனுப்பினான்.

468. விரைந்து வந்து அவ்வேவலர்கள் அழைக்க வெள்ளை யானை அவர்களை நோக்கி, "வருவேன், முன்னே போங்கள்" என்று சொல்லி அனுப்பி வைத்தது. பின்னர் கீழ்த்திசை எல்லை வந்து அங்கே, 'ஐராவதபுரம்' என ஓர் ஊரைத் தம் பெயரால் அமைத்து, தம் தலைவனது பழமையான அழகிய பெயரால் 'இந்திரேச்சுரர்' என்ற ஒரு சிவலிங்கத்தைத் தோற்றுவித்தது. அந்த இலிங்கத்தைத் தம் தூய பூசனையால் வழிபட்டது. மலையின் சிகரங்கள் வெட்டிய இந்திரன் இன்னமும் தம் யானை வரவில்லையே என்று எண்ணினான்.

469. மனத்தினுங் கடிய தூதரை விடுப்ப வானடைந்
திறைவனை வணங்கிப்
புனத்தினுங் கடிய கல்லினும் பன்னாட் புன்கணோ
யுறவரு சாபங்
கனத்தினுங் கரிய கண்டனைக் கண்டு களைந்ததுங்
கிளந்துதிக் கயத்தின்
இனத்தினுங் கழிந்த தெய்வத வேழம் இனிதுவீற்
றிருந்தது மாதோ.

470. குடவயி னயிரா வதப்பெருந் தீர்த்தங் குடைந்தயி
ராவத கணேசக்
கடவுளைத் தொழுதை ராவதேச் சுரத்துக்
கடவுளைப் பணிந்தவர் சாபத்
தொடர்பினும் பாவத் தொடர்பினுங் கழிவர் சுராதிபன்
களிறுசென்னெறிபோய்
இடர்கெட வைகை படிந்துதென் கரையில்
இந்திரேச் சுரனடி பணிவோர்.

471. இம்மையி லறமுன் மூன்றால் எய்திய பயனை யெய்தி
அம்மையின் மகவா னீரே ழரும்பத மளவும் வானில்
வெம்மையில் போக மூழ்கி வெறுப்புவந் தடைய
வுள்ளச்
செம்மையில் விளைபே ரின்பச் சிவகதிச் செல்வ
ராவார்.

வெள்ளை யானையின் சாபம் தீர்த்த படலம் முற்றிற்று

முதல் தொகுதி முற்றும்

வெள்ளை யானை சுவர்க்கலோகம் அடைதல்

469. மனத்தைவிட வேகமாகச் செல்லும் தம் ஏவலர்களை மீண்டும் அனுப்பினான். அவர்களுடன் வான் உலகை அடைந்த வெள்ளை யானை இந்திரனை வணங்கியது. பல நாட்கள் காட்டிலும், வலிய மலைகளிலும் தான் அடைந்த துன்பத்தினையும், சோமசுந்தரக் கடவுளைத் தரிசித்துத் தன் சாபத்தையும் போக்கிக் கொண்டதையும் இந்திரனிடம் கூறியது. பின்னர் திக்கு யானைகளிலும் மேலான தெய்வத் தன்மை பொருந்தியதான அவ்வெள்ளை யானை இனிது வீற்றிருந்தது.

ஐராவதேச்சுரர் முதலானவரை வழிபடும் பயன்

470. மேற்குத் திசையில் உள்ள பெருமைமிக்க ஐராவத தீர்த்தத்தில் நீராடி, ஐராவத விநாயகர் கடவுளை வணங்கி ஐராவதேச்சுரரைப் பணிந்தவர்கள், சாபத் தொடர்ச்சியி னின்றும், தீவினைத் தொடர்ச்சியினின்றும் நீங்குவர்' தேவேந்திரனது வெள்ளை யானையானது சென்ற வழியிலே சென்று துன்பம் நீங்க வையை ஆற்றில் நீராடி அதன் தென் கரையில் இருக்கும் இந்திரேச்சுரருடைய திருவடிகளை வணங்குபவர்கள் பின்வரும் பயனைப் பெறுவார்கள்.

471. இப்பிறவியில் அறம் முதலிய மூன்று பொருள்களால் வரும் பயனை இம்மையிலேயே அனுபவிப்பர். மறுமையில் பதினான்கு இந்திரர்கள் காலம் வரையில் வெப்பமற்ற குளிர்ந்த இன்பத்தில் திளைப்பர். பின்னர் அவ்வின்பத்தில் வெறுப்புத் தோன்ற மனத் தூய்மையில் விளைகின்ற பேரின்பமாகிய பரமுக்தியாகிய செல்வத்தை அடைவார்கள்.

வெள்ளை யானையின் சாபம் தீர்த்த படலம் முற்றிற்று

முதல் தொகுதி முற்றும்

பாட்டு முதற் குறிப்பகராதி